மா.கி.கிறிஸ்ரியன்

# புலமும் புறமும்



சிறுகதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

cover painting : Sanjay Ashtaputre

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமும் புறமும்

சிறுகதைகள்

மா.கி. கிறிஸ்ரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pulamum Puramum(Tamil) • Short Stories in Tamil by M.G. Christian
• © M.G. Christian
• First edition: December 2005 • Typeset & Book Design: The Papyrus • Printed at Mani Offset, Chennai 5.

Published by adaiyalam, 1205/1 Karupur Salai, Puthanatham 621 310. Tel: 04332 273444 email: admin@adaiyalam.com, www.adaiyalam.com

Sole Distributors to Europe: M.G. Christian, 31 RUE DES HAUTES BORNES, 94310 ORLY, FRANCE. TEL: +33 1 48523905, email: mg_christian@hotmail.fr

ISBN 81 7720 057 7

Price: Rs. 125

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுள் நிறைந்து
எல்லாமாகிய
தந்தை மாசிலான் கிறகரி
தாயார் கிறகரி லூசியா
அவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

என்னுரை 7

## புலம்

ஐந்தும் ஆறும் 13
சுனாமிப் பரிசு 17
மீள்வு 25
இவளுக்குள் 32
சிறைச்சாலை 40
உத்தியோக உயர்வு 48
இரண்டாவது பிறப்பு 55
ஓர் இரவு 63
தேவதையைக் கண்டேன் 67
புணர்ச்சிதேடி 74
காத்திருப்பு 83
நதியினில் 91
திருப்பம் 96
வேஷங்கள் 102
வரம் 110
மறுதலிப்பு 116
நீலிக்கண்ணீர் 122
உதைபந்தாட்டம் 129

## புறம்

யார் பைத்தியம் 137
கிளித்தட்டு 148
வழியனுப்பி வைத்தவள் 156
போராளியாக 162
ஓர் ஆத்மாவின் அலறல் 168
கடல்மேல் ஆணையாக 176
உயிரோவியம் 182
மாணவன் 188
சத்தியப்பாதை 192
சுருட்டு 199
தொண்டு 206
மணிமேகலை 212
சுனாமி இழப்பும் வாழ்வின் நிலையும் 218

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

எந்த நெருக்கடியில் பிறந்த மண்ணைவிட்டு வெளியேற்றம்? எனக்கு எங்குபோய் அடைக்கலம் கோருவது என்பது பற்றிய சிக்கல் எதுவும் இருக்கவில்லை. கலையும் கலைஞரும் குவிந்த நாடு. நோபல் பரிசுகளை அதிகளவு பெற்ற கலை இலக்கிய விஞ்ஞானத்தின் வீரியதேசம். உலக மொழிகளில் பிரெஞ்சு மொழிக்கே இலக்கியத்திற்கான அதிக நோபல் பரிசுகள் கிடைத்துள்ளதோடு, சுதந்திரம் – சமத்துவம் – சகோதரத்துவம் எனும் புரட்சியின் சுலோகங்களால் நவீன பிரெஞ்சு தேசத்தின் முதன்மையான சின்னம் பிரதிபலிக்கும் இந்த மண்ணில்தான் என் புகலிடத்துச் சீவியம் தற்காலிகமாக இருக்கவேண்டும் என்ற தீர்மானத்தில் திடமாக இருந்துதான் புறப்பட்டேன். மனிதனை அடிமையெனக் கொடுமைப் படுத்தும் நாட்டிலிருந்து மனித உரிமைகளை நன்றாக மதிக்கும் உலகின் முதல் நாடு எனும் நிரந்தரப் பெயர் பெற்ற ஒப்பற்ற நாட்டுக்குள் பிரவேசித்தேன்.

எனக்கு அடைக்கலம் தந்தவன் தவேந்திரன் எனும் இயற்பெயர் கொண்ட தவே. 1982களில் பிரான்சுக்குள் பிரவேசித்த நான் வசித்தது சென் அன்ரனிஸ் எட்டாவது மாடியில். பிரெஞ்சு தேசத்தில் எப்போது மாடிக் கட்டிடங்கள் எழும்பத் தொடங்கியதோ அந்தப் புராணகாலப் பழமையான எட்டு மாடிகள் கொண்ட கட்டிடம். எட்டு மாடிப் படிகளும் பலகையில் அமைந்திருந்தன. இப்படிகளில் ஏறி எட்டாவது மாடிக்குச் செல்வதென்பது உலக சாதனையாகவே நாளெல்லாம் எனக்கிருந்தது. இறங்குவது நம்ம ஊரில் நூறு மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடப் பெற்ற மகிழ்ச்சி. அத்தோடு இந்தத் தனியறையில் ஒரு குட்டி ஊர் தமிழ் இளைஞர் பட்டாளமே குடியிருந்தனர். கலகலப்பான அறை. அதேபோல் மனச் சுத்தமும் கலகலப்பும் நட்பின் நல்குதலும் நிறைந்தவன் தவேயும். என்னுடைய புகலிடத்துச் சீவியத்தில் இந்த அறை வாழ்வை இலகுவில் மறந்துவிட முடியாது. வாசிப்புப் பசியைப் போக்கத் தமிழில் எதுவும் கிடைக்காத கவலையில் யோசிப்பில்தான் எழுத்து யாசிப்புப் பிறந்தது. மனசில் பதிந்தவையே படைப்பிற்கு உந்து சக்தியாகத் திகழ்ந்தன. இந்த அறையில்தான் பிரான்சில் என் முதல் சிறுகதையை எரிமலையின் பிரசுரத்திற்காக எழுதினேன். 1983 மார்கழி மாதம் வெளியானது தலை மகனின் தலைவிதி எனும் சிறுகதை. கணினியும் தட்டச்சு இயந்திரத் திற்கும் தமிழன் தவித்த காலம் கையெழுத்துப் படிவத்தில் இடம் பெற்றது. இதற்கு முன்னம் தொடர் கட்டுரை எழுதிவந்தேன். 1983 ஆடிக் கலவரம் இலங்கையில் கொடூர வன்முறை இனக்கலவரம் கட்டவிழ்த்து விட்ட நேரம். அங்குமட்டுமல்லாது பிரான்சிலும் நடைபெற்றது... சிங்கள இளைஞன் தமிழ் இளைஞனை மெற்றோவுக்குள் தாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டான். காதுவழிச் செய்தி காட்டுத் தீ போல் பரவியது. தொடர்வண்டி, பேருந்து, வாகனங்கள், வீதிகள், காடுகள், வீடுகள் வேலை செய்யும் இடமெங்கும் சிங்களவரைத் தேடித் தேடுதல் வேட்டை நடந்தன. இந்த நேரத்தில் தனிநாடுதான் முடிந்த முடிவென ஆயுதங்களோடு போராடப் புறப்பட்ட பல இயக்கத்தைச் சார்ந்தவர்களும் தங்கள் வீரசூரப் புளுகு களையும் அள்ளித் தாராளமாக வீசிக்கொண்டும் இருந்தனர். இதன் கொந்தளிப்பிலிருந்து பிறந்ததுதான் 'மனிதனும் மிருகமும்' எனும் கட்டுரைத் தொடர். எரிமலையில் தொடராக வந்து கொண்டிருந்தபோது பலரிடமிருந்து பாராட்டும் உற்சாகப்படுத்தலும் அதிகமாகயிருந்தது. ஒரு ஆதங்கமும் என்னிடம் தொங்கிக் கிடந்தன. இந்த அறைக்குள்ளிருந்து இவ்வளவு நெருக்கடிக்குள் எப்படி எழுதுவது? ஆள்மாறி ஆள்மாறி நேரம் குறித்துத் தூங்குகிற அறை. இரவும் பகலும் கலகலப்பான அறைதான். எழுத்துப் பிறப்பதானால் எதுவேண்டும்? அந்த அமைதியும் பொறுதியும் இந்த அறையில் கிடைப்பது அரிதிலும் அரிது. உண்மை தான்; உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை. மேசை, கதிரை என்று எதுவுமே இல்லை. கடையில் வாங்கிப் போடலாம். போட்டால் இருப்பதற்குப்படுப்பதற்கு இடம் தேடிச் செல்லவேண்டும். ஒருவர் உறங்கக்கூடிய கட்டில், ஒரு அலுமாரி, ஒருத்தர் நின்று சமைக்கக்கூடிய இசுக்குட்டிக் குசினி. ஒண்டுக்கு, இரண்டுக்கு வெளியில் எட்டா மாடியில் குடியிருக்கும் நாலு அறைவாழ் மானிடர் அனைவருக்கும் பொதுவான கூடம். குளிச்சு முளுக மாநகர சபை பொதுத் தடாகம். தமிழன் ஆரம்பத்தில் புலத்தில் பட்டப்பாடுகளைச் சொல்ல இவ்வுரை அல்லாததால் என் நிலைக்கு வருகிறேன்.

சூட்கேஸ் மேல் வைத்துத்தான் நான் எழுதுவது. தவே என்னை இரக்கமாகப் பார்ப்பான். நான் சிரிப்பதைக் கண்டதும் மெதுவாகச் செல்வான். நான் கொஞ்ச நேரத்தில் ஆக்களைக் கூட்டிக்கொண்டு இறங்கி விடுவேன். நான் பேப்பரையும், பேனாவையும் சூட்கேசுக்குள் வைத்து மூடி கட்டிலடிக்குள் தள்ளிவிடுவதையும் தவே கவனிப்பான். நான் அவனைப் பார்ப்பேன். சொண்டுக்குள் சிரிப்பு. 'என்ன யோசிக்கிறாய்? அந்தத் தொடர் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கிறேன். நேரத்தோட கொடுக்க வேண்டும்.' பார்வைப் பகிர்வில் புரிந்தவன் நாளைக்கு ஒருதரும் வராமல் பார்க்கிறேன். நீ தனித்திருந்து எழுது. இப்படியே என் எழுத்தில் தீவிரம் கண்டது. வீரகேசரி, தினகரன், தினக்குரல், கணையாழி, ஈழமுரசு, ஈழநாடு, சஞ்சிகை, மலர்கள், இதழ்கள் என்று வெளிவரவும் தொடங்கியது.

புலமும் புறமும் இச்சிறுகதைத் தொகுப்பு இன்று வெளிவருகிறது. புலம்பெயர்ந்த அனுபவங்களோடு, புதிய தேடுதலோடு புறத்து மண் (பிறந்த மண்) கதைகளும் இடம்பெறுகின்ற பதிவின் கனப்பிது. தமிழ்ச் சமூகத்தின் வாழ்க்கைப் புலத்திலும் புறத்திலும் எப்படி என்பதைச் சித்தரிக்கின்ற சிறிய சித்திரங்கள். சாத்திரங்களை அதிகம் நம்பாததால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரங்களை பவுத்திரமாகப் பேசவைக்க முயன்றுள்ளேன். என் இனிய புலம்பெயர்ந்த அவதிவாழ்வின் சகோதரர்களே! என் தாயகத்தின் புண்ணியப் பூக்களே! என் இலக்கியப் படைப்பின் ஆறாவது படைப்பு; சிறுகதைத் தொகுப்பில் இரண்டாவது தொகுப்பு. இத்தொகுப்பில் என் சிறுகதைகள் முழுவதும் அடங்கவில்லை. தேங்கிக் கிடக்கின்றவை மெல்லியதாய்ச் சிரிக்கும் சிரிப்பு. நாங்கள் எப்போது வெளிவருவது என்ற நகைப்பில் தேர்ந்தெடுத்த சிறுகதைகளை மட்டும் இத்தொகுப்பில் இடம்பெற வைத்திருக்கிறேன். இன்னும் அதிகமான கதைகள் பிரசுர மானவையும் – பிரசுரமான பின்பும் அவைகளின் நகைப்பைப் பதிவாக்கும் எண்ணம் உண்டு. புலத்து வாழ்வின் ஒளிவு மறைவுகள் அதிகம். அவற்றின் உண்மைகளைச் சொல்லும் கதைகள் பலவிதமாகப் பிரகாசிக்கக் காண்பீர்கள். இத்தொகுப்பிலுள்ள எல்லாக் கதைகளும் நான் கண்டும் கேட்டும் நிண்டு நிதானித்துக் கொந்தளித்த கலை உள்ளத்துப் படைப்புகளாகும். இச்சிறுகதைகள் மூலமாக புலத்து புறத்துக் காலத்து நடப்பியலையும் என் எண்ணங்களின் ஆழத்தையும் உங்கள்முன் வைத்துள்ளேன்.

மா.கி.கிறிஸ்ரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தும் ஆறும்

எஸ்தாக்கி – இவனொரு ஆப்பிரிக்கன். பிரஞ்சுப் பெண்ணைக் கல்யாணம் கட்டி உறவு அறுத்த பின்னர் எந்தப் பெண்களோடும் தொடர்பற்றிருந்தான். வீட்டில் வாழமுடியாத நிர்ப்பந்தத்தின் நீள்துயரோடும் இரண்டு பைகளோடும் வெளிவந்த நாளிலிருந்து பூஜிசி கிராமத்து றெயில்வே நிலையத்தை விட்டுவரும் வெளிவாசலை அண்டியும், மிகப்பெரும் கடைகள் அடங்கிய 'சென்றல் கொம்மேசல்' பின்புற வாசலிலிருந்து நாற்பது மீற்றர் இடைவெளிக்குள் சடைத்து நிற்கும் பைன்(PIN) மரத்தடியின் கீழ்தான் இவனது சீவியம்.

நாற்றமெடுக்கும் ஆடைகளும், நரை இடைவிட்டு வளர்ந்திருக்கும், ஆட்டுத்தாடியில் படிந்திருக்கும் வைன் மொச்சையும், தேகத்தில் படர்ந்து உருண்ட ஊத்தையின் கெட்ட வெடிலும் முகம் கொடுக்க முடியாதிருக்கும். பொலிஸ்காரர்களும் அவனைப் பிடித்துப் பிடித்து விட்டு இனிமேல் உன்னோடு சோலி வேணாம் என்று ஒரேயடியாகக் கைகழுவி விட்டார்கள். இவன் இருந்தமட்டில் செவிடுமில்லை, குருடுமில்லை, ஊமையுமில்லை, நொண்டியுமில்லை. ஆறடி உயரமுள்ள பெலப்புள்ள மனிதன். பத்து வருடங்களுக்கு மேலாக நானும் கவனித்து வருகிறேன். எப்படி ஒதுங்குகிறான்? எப்படி உறங்குகிறான்? எப்படித் தின்னுகிறான்? மழை நாட்களில் எங்கு கிடந்து வருகிறான்? இச்செயல்கள் அனைத்தும் எனக்குப் புரியாத புதிராகவே பட்டது. இதைவிட இவன் இறந்து போகலாம். இப்படியொரு அவலத்தை அனுபவிப்பதைக் காட்டிலும் மரணம் இதைவிட மேலானது என்றுதான் நான் எண்ணுகிறேன். சில வருடங்களின் பின்னர் இவனுக்கு ஒரு உறவு என்று சொல்லக்கூடிய உற்றநண்பன் கிடைத்திருந்தான். அவனையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு மது உள்ள போனதும் சோகப் பாடல்களை முணுமுணுப்பான். யாராவது தன்னைப் பார்த்தால் வெடுக்கெனப் பாய்ந்து விழாமல், மாறாக மவுத்ஓர்கனை எடுத்து வாயில் வைத்து சாதனை வீரன்போல் விறுவிறுப்பாக ஆடி அசைந்து வாசித்துக் குதூகலிப்பான். பக்கத்தில் கிடக்கும் நம்ம ஊர் நாயுடன் அவனும் மூச்சை வீசி ஒத்திசைப்பான். இவர் பெயர்தான் 'வலன்ரன்'. கறுப்புநிறம் – மூஞ்சியில் மட்டும் வெள்ளையும் பழுப்பும் கலந்திருந்தது. கடவாய் வழி வீணி ஒழுக எஸ்தாக்கியின் கூத்தினை ரசித்துக்கொண்டிருக்கும்.

பலகாலம் அவனது குரலிலும், இசையிலும், உணவிலும் உயிர் வாழும் நன்றியுள்ள பிராணிதான். எஸ்தாக்கி உணவைத் தானாக வாங்கினாலும் யாராவது கொண்டுவந்து கொடுத்தாலும் வலன்ரனுக்கு ஊட்டிவிட்டுத்தான் எஸ்தாக்கி மிகுதியைத்தான் தின்பான். இறைச்சியாக இருந்தால், நாயின் வாயில் வைத்து இழுத்து மிகுதியைத் தன்வாய்க்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணிப்பான். உணவின் ருசி எப்படி என்ற சுவையேனும் சிந்திப் பிருக்காது. பசி–பசிக்கு வயிறு நிறைந்தால் போதும் என்ற போக்கில் ஈக்கள், கொசுக்கள், தூசிகள் எல்லாத்தையும் சேர்த்து மென்று விழுங் கிடுவான். இந்த நேரத்தில் எஸ்தாக்கியைவிட நாய் வலன்ரன் உசத்தி யாகவும் பகுத்தறிவுள்ளவனாகவும் தென்படுவான். எஸ்தாக்கி வைன் மயக்கத்திலும் உண்ட களைப்பிலும் தூங்கிவிட்டான். வலன்ரன் தங்களுக்குப் பிரியமானவர்களைக் கண்டால் அவரது குசி பார்க்க ருசியாக இருக்கும். முன்னங்கால்கள் இரண்டையும் தொப்பென்று அடித்துத் துள்ளிக் குதித்து ஒருக்களித்துப் படுத்திருக்கும்; எஜமான் எஸ்தாக்கியின் நெஞ்சினுள் மூஞ்சியைப் புதைக்கும். உச்சத் தொனியில் குரைக்கும். அதைக் குரைப்பு என்று சொல்வதைவிட இசைக்கும் என்று சொல்வது பெறும். அவனும் பதறியபடி மெய்வியர்க்க தத்தளித்து அங்குமிங்கும் முழிபிதுங்கப் பார்ப்பான்.

ஒரு வயது முதிர்ந்த வெள்ளை மூதாட்டி சிரித்தபடி திரும்பித் திரும்பிப் பார்த்தபடி போய்க்கொண்டிருப்பாள்.

ஒரு பை அவனருகில் இருக்கும். அந்த மூதாட்டிக்கு நன்றி சொல்லி வலன்ரன் குரைக்கும். எஸ்தாக்கியும் தனது பிடரித் தலையைச் சொறிந்து கொண்டு நன்றி என்று உரக்கக் கத்துவான் பதிலுக்கு வலன்ரனும் இசைத்துப் பாடும். மூதாட்டிக்கு அந்த இசை காதுக்கும் மனசுக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும். வலன்ரனின் துள்ளல் கண்டு குலுங்கிக் குலுங்கிச் சிரிப்பாள். எஸ்தாக்கிக்கு ஏன் இந்த வாழ்வு வந்தது? அறிய வேணும் எனும் ஆவல் கொண்டேன். அன்று ஞாயிற்றுக் கிழமை – ஓய்வுநாள். கடந்திருநாள் பூசை. இந்த நேரத்தில் 'ஈப்பினி' – இந்தயிடம் பூஜிசிக்கு அருகில் உள்ளது – சென் டேமியன் தேவாலயத்தின் முன்பாக வுள்ள பஸ் தரிப்பில் அந்தக் கூடார இருப்பிடத்தில் குனிந்தபடி ஆழ்ந்த துயரத்தில் அவையங்கள் எதுவும் அசையாதிருந்தான். பூசைக்கு வந்து கொண்டிருந்த மூதாட்டி தூக்கமுடியாத சாமான்கள் நிறைந்த பெரிய பையை தடுமாற்றத்துடன் எஸ்தாக்கியின் கையில் ஒப்படைத்து விட்டு மூதாட்டி ஆலயத்திற்குள் புகுந்தாள். இந்த மூதாட்டிக்கும் எஸ்தாக்கிக்கும் என்ன உறவு? ஏனிந்தப் பகிர்வு? உண்டு. தலையை நீட்டியும் நாக்கைத் தொங்கப் போட்டும் மூச்சை ஊதித் தள்ளியபடி நிற்கும் நாய்தான் – மூதாட்டி வளர்க்க முடியாது கொடுத்த நாய்தான் வலன்ரன். காதலர் தினம் அன்று மூதாட்டிக்குப் பிறந்த மகனுக்கு வைத்த பெயர். சிலகாலங்களின் பின்னர் நோய்வாய்ப்பட்டு மகன் இறந்துபோக, இந்த நாய்க்கு அவனது பெயரை ஞாபகமாகச் சூட்டினாள். பூசை முடிந்தது.

இரண்டு பையன்கள் எஸ்தாக்கியுடன் மிகவும் நெருக்கமாக நின்று வெகுநேரமாக உரையாடினார்கள். அவனைப் பார்த்தால் அவன் பிள்ளை களைப் பார்க்க வேண்டாம். அவ்வளவுக்கு முகவெட்டு ஒத்திருந்தது. அவர்கள் குழந்தைகளாக இருக்கும்போதுதான் மனைவியுடன் தகராறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டு இராட்சசி பெண்மையின் பெருமை எதுவுமே இல்லாத பூதகிய விட்டு வெளியேறினான். எஸ்தாக்கி பிள்ளைகளையும், மூதாட்டியையும் சந்திக்கத்தான் ஞாயிறு தவறாது தேவாலயத்தின் முன் பஸ் தரிப்பிடத்தில் காத்திருப்பான். பிள்ளைகளையும் மூதாட்டியையும் கண்டதும் அவனை விட நாய் வலன்ரனுக்குத்தான் மகிழ்ச்சி அதிகம். நொடிக்கொரு தடவை துள்ளித் துள்ளிக் குதூகலிக்கும். இண்டைக்கு வழமைக்கு மாறாக வலன்ரனின் செயல்கள் இருப்பதை உணர்ந்தவன் வலன்ரனை இழுத்து கக்கத்துக்குள் இடுக்கி அமர்த்திக் கொண்டான். வலன்ரனும் குரைத்துக் கொண்டே எஸ்தாக்கியின் பிடியிலிருந்து விடுபட்டு ஓடித் துள்ளிக் குதித்த வலன்ரனின் செயலால் எஸ்தாக்கியின் குறுகிய கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. மூதாட்டி கெஞ்சினாள். 'எஸ்தாக்கி இனியாவது குடும்பத்தோடு சேர்ந்திரன்.'

இப்பேச்சு முடியுமுன்னர் வலன்ரன் மூதாட்டியின்மேல் இரு கால்களை உயர்த்திப் பாய்ந்து கை கொடுத்துவிட்டு எங்கோ பார்த்தது. உச்சத் தொனியில் அழுமாப் போல் குரைத்தது.

பூசை முடிந்து கூட்டம் கூட்டமாக நின்று பட்டிமன்றம் நடத்தியவர்கள் எல்லாரும் திரும்பிப் பார்த்தனர். எஸ்தாக்கியின் மாஜி மனைவி விறுவிறுவென்று கொழுத்த அவயங்கள் ஆட முகத்தைத் துப்பட்டியால் மறைத்தபடி போய்க் கொண்டிருந்தாள். வலன்ரன் உடல் பதற திரும்பித் திரும்பிக் குரைத்துப் பற்களைக் காட்டியது. வலன்ரனின் செயல் பலருக்குத் திகிலூட்டியது. குரைப்பது தணியவில்லை. திரும்பத் திணறடித்துப் பாய்ந்தது. எஸ்தாக்கி அவனை அணைத்துக் கொண்டான். உண்மை எத்தனை துக்கத்தைக் கொடுத்தாலும் அவளுடன் சேர்ந்து வாழ்வதென்பது எக்காலமும் ஏற்ற பரிகாரமில்லை. யாருமறியாமலே தன்னுயிர் பிரிவதை விரும்பி வருந்தி வாழும் வாழ்வை ஏற்றவன்.

''நான் செத்தால் எனக்காக அழ யார் இருக்கிறார்கள்?'' என்றவன் வலன்ரனை இழுத்தணைத்தபடி முதுகுத்தண்டின் மேல் சொறிந்து கொண்டு பிள்ளைகளையும் மூதாட்டியையும் பார்த்தான். அவன் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருக்கும் எண்ணங்களின் ஆழத்தில் மிகப் பெரும் கொந்தளிப்பு தெரிந்தது. பிள்ளைகளைப் பார்த்தபடி பைக்குள்ளிருந்து காகிதக்கட்டை எடுத்து மூத்தவன் விரல்களுக்குள் திணித்தான். அதற்குள் அதிக பணம் இருந்தது.

''அம்மா போறா நீங்கள் போங்க.''

மூதாட்டிக்கு எஸ்தாக்கியின் செயல்கள் கனக்கக் கவலையைக் கொடுத்தது. பின்னர் அவளும் 'எஸ்தாக்கி நாளைக்கு உன்னை உன்ர அரண்மனையில் சந்திக்கிறேன்' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள். குளிரும் வழமைக்கு மாறாகக் குறைந்திருந்தது.

பாரிஸ் நகர் போயிருந்த நான் – என்றால் இக்கதையைக் கூறுபவனாகிய நான் – வீட்டுக்குத் திரும்பிவர நடுச்சாமம் ஆகிவிட்டது. கடைசி ரெயிலில் பூஜிசி ரெயில் நிலையத்தில் வந்திறங்கும்போது அதிர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடைந்து விட்டேன்.

எஸ்தாக்கியின் அரண்மனையிலிருந்து வலன்ரனின் குரைப்பு வானிடிந்து உச்சிமீது விழுந்திடும் போலிருந்தது. எஸ்தாக்கி நித்திரையில் அசைவற்றுக் கிடந்தான். நானும் மிகப்படச் சிந்தித்தேன். வசப்படவில்லை எதுவுமே. அவன் வைனை மண்டிவிட்டு மயங்கிக் கிடக்கிறான். இந்த நன்றி உள்ள நாய் இப்படி அவலக்குரல் எடுத்து ஊளையிடுது என்றபடி புறுபுறுத்தபடி நடந்தேன். பின்னால் வந்தவர்களும் இரக்கத்தோடு எஸ்தாக்கி வலன்ரனின் அரண்மனையை எட்டிப்பார்க்கத் துணியவில்லை. பிரதான வீதியைக் கடந்து வீட்டு வாசல் நெருங்கும் வரையும் வலன்ரனின் குரைத்தல் தணியவில்லை. வீட்டுக்குள் உள்ளிட்டதும் அக்குரைத்தல் கேட்கவில்லை.

மனம் கலங்கிப் போனேன். விடிகாலை நேரம். எஸ்தாக்கியின் காலடியில் வலன்ரன் செத்துக் கிடந்தான். மிகமிக விரைவாக இரண்டு பிணங்களும் பொலிஸ்காரர்களால் அப்புறப்படுத்தப்பட்டன.

எத்தனை ஆயிரம் கண்கள் கண்ட காட்சியின் சின்னங்கள். அந்த ஜீவன்கள் வாழ்ந்த மரத்தடியின் கீழ் மலர்கள் போடப்பட்டிருந்தன. அவற்றையெல்லாம் மரத்தடியில் குவித்த மூதாட்டியால் ஆங்காங்கு விடுபட்டுத் தனித்த மலர்கள் குழறியழுவதை உணர்ந்தாள். அதனிடையே இறந்த அந்த இரண்டு ஜீவன்களைப் பற்றிய நல்ல வாசகங்கள் அட்டையில் எழுதப்பட்டிருந்தன.

அவற்றையெல்லாம் வாசித்த மூதாட்டியால் கண்ணீரையும் துக்கத்தையும் கட்டுப்படுத்த முடியவில்லை. நா தளதளக்கக் குழறினாள்.

''எஸ்தாக்கி உன்னோடு வளர்ந்த வலன்ரன் உன்னோடு உடன்கட்டை ஏறிவிட்டான்.''

மூதாட்டியின் உரத்தத் தொனி சுற்றி நின்றவர்களை இமை சொருக – முழிபிதுங்க, அகம்புலம்ப வைத்தது. தினமும் வலன்ரன் என்று கூப்பிட்டு இசைமழை பொழிந்த எஸ்தாக்கியும் மறைந்துவிட்ட துக்கம் தாளாது புலம்பியபடி மூதாட்டி நின்றாள்.

●

உயிர்நிழல்
10.02.2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமிப் பரிசு

இந்த வீடு எனக்கு பிரமிப்பைத் தரவில்லை. சுனாமியால் அழிவுண்ட முல்லைத்தீவில் உள்ள என் தாய்வீடு இந்த வீட்டிலிலும் பலமடங்கு பெரிதானது. இருந்தாலும் இந்த வீதியில் உள்ள வீடுகளில் என்னை வேலைக்கு அமர்த்தியுள்ள செல்வந்தரின் வீடும் வளவும் பெரியது. சுனாமிக்குப் பின்னர் எனது மனமும் சரீரமும் சோர்வடைந்துபோனது. நான் இளைத்துப் போவதும் என்னை அறியாமல் நடந்து கொண்டிருக் கின்றது. என்னைத் தியாகம் ஆக்கக்கூடிய ஜாகத்தில் பெரிசாக நான் ஈடுபடவில்லை... ஊரில் சுனாமியின் தாக்கம் எத்தனை ஆயிரம் குடும்பங் களைப் பாதித்துள்ளன. பாதிக்கப்பட்ட அத்தனை ஆயிரம் உள்ளங்களுக்கும் யார் ஆறுதல் சொல்வார்? என்னை அறியாமல் பலமுறை மறுபடி மறுபடியும் ஏங்குவேன்! ஒதுங்கி நின்று மெளனத்தில் புதைந்து கண்ணீர் சிந்துவேன்... அந்த நிலை கண்டு... என்னை வேலைக்கு அமர்த்திய பிரஞ்சு பிரஜைகளான செல்வந்தர் யாக்கோவும் அவர் மனைவி எலிசாவும் ஆறுதலும் - பாசமும் - பரிவும் காட்டி என்னைக் குளிரப் பண்ணுவார்கள்.

பாரீசில் ரெஸ்ரோரண்டில் வேலைசெய்யும் அவஸ்தையைக் கண்டு மனமிரங்கி தாங்களோடு கூட்டிவந்து வீட்டு வேலைக்கு அமர்த்தினார்கள். அன்று முதல் தங்கள் பிள்ளையைப் போல் வளர்க்கின்றனர் . இப்போது கொஞ்ச நாளாக யாக்கோவின் முகமெல்லாம் வெளுத்துப்போய் குழி விழுந்த கன்னங்களில் கண்களால் வழியும் கண்ணீர் தேங்கிநின்று அக்குண்டுகளும் கண்ணீர் சிந்துகின்றன. உடம்பு நடுக்கமும் அதிவேகம் எடுத்தாடுகின்றது. சுழன்று சுழன்று பார்க்கும் பார்வையிலும் பயத்தின் பதற்றம் தென்படுகின்றது. சுனாமி அடித்தபோதும் அடித்த நாளையும் கணித்துச் சொல்லுவார். 26ம் திகதி. கூட்டினால் 8. அடுத்தநாள் 27 கூட்டினால் 9 துரதிர்சமான நாட்கள். நன்மையை விதைக்காமல் தீயவற்றை விளைவித்து ஆசிய கண்டத்தையே பாதித்துள்ளது. கிரகப் பலன்கள் ஜோதிட விஞ்ஞானக் கலை என்பதில் நம்பிக்கை கொண்டவர் .

பிரஞ்சு பண்பாட்டில் ஊறித் திளைத்த இவர் சாஸ்திர சம்பிரதாயங் களைக் கடைப்பிடித்து வாழ்பவர். அதனை அழுங்குப் பிடியாகப் பிடித்துச் சோர்வடைவதும் இல்லை.

தனக்குச் சாவு நெருங்கி விட்டதுபோல் என்னிடம் சொன்னார்.

என்னிதயம் பிளந்து என்னையறியாமலே அழுதுவிட்டேன். பின்னர் மெளனக் கண்ணீர் வடிக்கும் என்னைக் கண்டு எலிசா பயந்து போனாள். தொலைபேசி வழியாக என்னைத் தேற்றித் திடப்படுத்திப் பாசத்தைப் பொழியும் குடும்பத்தைச் சுனாமிக்கு இரையாகக் கொடுத்த பிற்பாடு எலிசா என்னைத் தான் பெற்ற பிள்ளைபோல் பரிவும் -பாசமும் காட்டி வளர்த்தாள். எலிசாவின் செபமும் கனிவும் தேறுதல் அளிக்கும். அழைப்பின் குரலாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் குரல் தொனிக்கும் . பூரண நிலை அடைந்த புதுப்பொலிவோடு மீண்டும் மீண்டும் எழுவேன் . காரியங்கள் ஆற்றச் சுறுசுறுப்படைவேன். யக்கோ - எலிசாவின் அன்பணைப்பில் செல்லப் பிள்ளையாக வாழ்ந்தேன் .

திடுமென எழுந்த கூப்பிடு குரல் என்னை மிகுந்த சங்கடத்தில் ஆழ்த்தியது.

''சாந்தன் எங்கள் வாழ்வில் காலம் நேரம் நாள் பார்த்து வாழ்ந்ததால் தான் எந்தக் குறையுமில்லாத வாழ்வு வாழ்கிறோம். உனக்கும் சுனாமிப் பரிசு தரும் நாளை நானும் எலிசாவும் யோசித்தோம். அந்த நல்ல நாளுக்காகக் காத்திருக்கிறோம். சாந்தன் நீயும் எம் வழிநடத்தலைப் பின் பற்றி நடந்துகொள். மகனே ஏன் இந்தக் காகம் இப்படிக் கரையுது? நாயும் என்றில்லாதவாறு ஊளையிடுகின்றது - இவை நல்லதுக்கல்ல.''

எதிர்த்துக் கதைக்காமல் மௌனமாகக் கண்ணீர் சிந்தியபடி நின்றேன்...

காகம் கரையுது; நாய் ஊளையிடுது. பகலில் காகம் கரைந்தால் விருந்தாளிகள் வரலாம். இந்த நேரத்தில் ஏன் நாய் ஊளையிடுது?

இவைகளை யக்கோ கூறும்போது .... ஊரில் வாழ்ந்த காலத்தில் அம்மா சொன்னதுகள் ஞாபகக் கற்களாக ஒன்றன்பின் ஒன்றாக வந்து விழுந்து குவிந்தன....

நாயை வெளியில் கூட்டிப் போ சாந்தன்...

நாயின் தலையில் இடிவிழ...

மௌனத்தில் புலம்பினேன். சகுனப் பிழைகள் உந்த வெள்ளை மனிதரிடம் எப்படிச் சாத்தியப்படுகின்றது?

சாந்தன் இன்னும் நாயைக் கூட்டிக்கொண்டு வெளியில் போக வில்லையா?

இப்படி மெல்லிய குரலில் துல்லியமாய் வேதனையின் மோதல் பளிச்சிட்டது. யக்கோவின் முகத்தின் சுருக்கம் என்னை ஆட்கொண்ட துக்கமாய் மனதில் கனத்தன. காகமும் பறந்து பறந்து அந்த அப்பில் மரக்கொப்பில் வந்து நின்று ஓயாது கரைந்தபடி இருந்தது. நான் கோபத்தில் கல்லால் எறிந்து துரத்தியும் காகத்தின் கரைதல் நிற்கவுமில்லை பறந்து போகவுமில்லை... மறுபடியும் மறுபடியும் அந்தக் கொப்பில் நின்று மூர்க்கமாய்க் கரைந்தது. திடீரென்று வளவில் அங்காங்கு பூத்த பூக்களும் அச்சத்தையும் ஆச்சரியத்தையும் பயத்தையும் நிலைக்கப் பண்ணியது. எலிசாவும் ஏங்கிப் போனாள். துக்கத்தில் ஆழ்ந்தாள் இயற்கையின் மாற்றமும் அவர்களது தோற்றத்தில் நடுக்கத்தைக் கொடுத்தது. இருவருக்கும் இடையில் இருந்த இடைவெளி குறைந்து நெருக்கம் சுறுக்காய் ஏற்பட்டது. வழமைக்கு மாறான வார்த்தைப் பிரயோகங்களுடன் மாறிமாறி முத்தமிட்டனர். சத்தமிட்ட சொற்களில் இரக்கம் இழையோடின....

''சாந்தன் இத்தனை வருடமும் பிள்ளைபோல் இருந்து வளர்ந்தாய்.''

தூதின் மொழியான பிரஞ்சில் கேட்கும்போது இரக்கத்தின் மொழியான என்னுயிர்த் தமிழில் புலம்பி அழுதேன். என்மீது கொண்ட பாசத்தால் தம்பதிகள் நெகிழ்வதை நான் உணர்ந்து உருகினேன்.... இவர்களுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றிக் கடன் செய்ய என்னால் முடிந்தது எதுவுமில்லை. இவர்களுக்குப் பணிவிடை செய்யக் கிடைத்த பாக்கியத்தை எண்ணிச் சுனாமியில் மாண்டுபோன என்னைப் பெற்றவர்கள் கவலையை மறந்தே போனேன்.

சாந்தன் சுனாமிக்குப் பிறகு உன் யோசனையும் வேதனையும் எங்கள் இதயத்தைப் பிழியும் உந்தன் நாட்டு மக்களுக்காக நாங்கள் நெகிழ்ந்து போனோம்... நாங்கள் வயதானவர்கள்தான் சாந்தன்! உந்தன் நலனுக்காக அங்கலாய்க்கும் தாய் – தந்தை. நீ எங்கள் வீட்டு வேலைக்காரன் அல்ல! எங்கள் பிள்ளை... சுனாமியால் உன் பெற்றவர் -சுற்றவர்- சகோதரர்களை இழந்து தவிக்கிறாய்...நாங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு அன்பு வைத்தோம் அவ்வளவுக்கு அவ்வளவு அதட்டியும் கோபித்தும் இருக்கின்றோம். சாந்தன் சுனாமிக்குப் பின்பு அதிகம் தளர்ந்து போனாய். இப்படியே பேசியபடி யக்கோவின் காதல் கண்கள் எலிசாவின் மேல் பதிந்தன... எலிசாவின் சுழற்சியான தேடல் கண்களை யக்கோவின் மீது நேர்குத்த நிறுத்தி மனம் உருகினாள். அந்தச் சொற்ப நேரத்திற்குள் தேவதாயாரை நோக்கிப் பலமுறை வேண்டுதல் புரிந்தாள்....

நாயின் ஊளையிடுதல் மேலும் எலிசாவை துக்கக் கனப்பில் ஆழ்த்தியது.

என்னாலும் எந்த விண்ணப்பத்தையும் விரைந்து வைத்து அவர்கள் இருவரையும் தேற்றவும் ஆற்றவும் முடியாது தவித்தேன்.

யக்கோவினதும் எலிசாவினதும் வாழ்வு பிரஞ்சுச் சமூகத்தின் வாழ்வை உயர்த்தும் வாழ்வாகும். பிரஞ்சு மக்களின் இயல்புகளையும் பண்பாட்டின் வெகுமதிகளையும் பாரம்பரியத்தின் பழக்க வழக்கங்களையும் இந்தத் தம்பதிகளின் வாழ்வுநெறி இயம்பி நிற்கின்றது. அயலவரும் ஊரவரும் கூறிப் பெருமைப்படுவதை நானறிவேன். கணவன், தாய், மனைவி, வீடு எனும் பாரம்பரியக் கட்டுக்கோப்பு வாழ்கை முறைமையைக் கடைப் பிடிப்பவர்கள் கணவனைத் தந்தையாக அங்கீகரித்து ஆணாகப் புரிந்து பாசமாக நடப்பதை எலிசாவில் கண்டேன். எந்தனது தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளையும் மிதமிஞ்சி வாழ்வு நெறி பிறழாது வாழ்பவர்கள். யக்கோ செல்வந்தராக இருந்தும் திருக்குறளையும், பகவத்கீதையையும், நோபல் பரிசு பெற்ற தாகூரின் கீதாஞ்சலியையும் பக்கம் பக்கமாக எடுத்துக் கூறுவதைக் கேட்டு வியந்து நிற்பேன்.

யக்கோவின் கை என் முதுகைத் தட்டும்போது எலிசாவின் நடுங்கிய குரல் உத்தரவிட்டது?

''சாந்தன் இந்த நாயின் ஊளையும் வளவுக்குள் காணும் மாற்றமும் என்னைத் தொந்தரவுக்குள்ளாகிவிட்டது. இந்த நாயை முதலில் வெளியில் கொண்டுபோ.''

பதிலுக்கு யக்கோவும் ''எலிசா சொல்வதைக் கேட்டு'' நட என்றார்.

நாயின் ஊளையிடுதலில் சலிப்படைந்த எலிசாவின் துயரின் நிலைகண்டு யக்கோவின் கண்களிலிருந்து கண்ணீர்க் குண்டுகள் நிலத்தில் விழுந்து அதிர்ந்தன.

எலிசா, 'செத்துப் போனால் நலமாய் இருக்கும்' என்று வேண்டினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயின் உச்சநிலை குரைத்தலைத் தாங்கமுடியாது கழுத்தில் மாட்டி யிருந்த பெலிற்றில் சங்கிலியக் கொழுவி பலம்கொண்ட மட்டும் இழுத்து அதட்டி இருத்தினேன் யாக்கோவின் மேல் பாயத் துடித்தது. அலுத்துக் கொண்ட நான் நாயின் செயலையும் சினங்கொண்டு வெறுத்தேன். யக்கோவின் வாய் நடுங்கிப் புலம்பின....

என்னமோ நடக்கப் போகுது!

மனத்துக்கம் பொங்கி எழுந்தது. நினையாத நேரத்தில் நடந்து முடிவது. அதுதான் என்ன?

எலிசாவின் மனப்போராட்டத்தை விவரிக்க முடியவே முடியாது. எலிசா மறுபடிமறுபடி தேவதாயாரை வேண்டுதல் புரியத் தொடங்கினாள். யக்கோவின் முகம் வெளுத்துவிட்டது. எலிசாவின் முகத்தில் ஆச்சிரிய ரேகைகள் கேள்விக் குறியாக நின்று துலங்கின. இதைக் கண்ட எனக்கு நாயின் மீது வெறுப்பும் - ஆத்திரமும் - முரட்டுத்தனமான துணிவும் ஏற்பட்டது.

''நாயே உனக்க என்ன வேணும்?'' உயிர்மூச்செடுத்துக் கத்தினேன்.

மேலும் நாயின் அட்டகாசம் அளவிடற்கரியதாக நின்றாடியது.

''கொஞ்சம் சும்மா இருக்கமாட்டாய்?''

இல்லை.... இல்லை..... திமிறி முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கி நிலத்தில் அடித்து விறாண்டிக் கொண்டது.

நாயே ஏன் இப்படி நடக்கிறாய்?

இந்தவேளை பகலவன் இருண்டு போனான். காகம் கரைவது நின்றுவிட்டது.

''என்ன சாந்தன், இன்றைய காட்சிகள் அர்த்தத்தையும் அர்த்த மற்றதையும் மனத்தாக்கமாய் திணறடிக்கப் பண்ணுது!''

இப்படி எலிசா கேட்ட போது...... யக்கோவின் உடல் நடுக்கத்தைக் கண்ட எனக்கு நாயைக் கொலை செய்துவிடும் கோபம் கெம்பிக்கொண்டு வந்தது.

யக்கோவினதும் எலிசாவினதும் உள்ளங்கள் மிருதுவானது; மென்மை யானது. சின்னத் தவறுகளும் சின்னச் சிந்திப்புகளும் அந்த வெள்ளை உள்ளங்களைப் புண்படுத்திவிடும். இந்த உண்மை வலுவாக எனக்குத் தெரியும். அவர்களது பிள்ளைகள் இருவரும் வீட்டைவிட்டுப் பிரிந்து போனபோதும் அவர்கள் கவலையால் உருகித் துடித்ததைக் கண்டேன். சுனாமிக் கவலையில் நான் மூழ்கித் தவித்தபோதும் என்னை மகிழ்ச்சிப் படுத்த அவர்கள் அசையாடியது, துயரமானதும், அணைப்பானதுமான அன்னையின் தழுவலாகவே இருந்தன....

''சாந்தன் சுனாமியால் உந்தன் மனம் பாதித்துவிட்டது. உன்னை ஆற்றவும், தேற்றவும் முடியாது. எங்களால் உனக்கொரு பரிசு மட்டும் தரத்தான் இப்போது முடியும். அந்த நல்ல நாள் வரவுக்காகக் காத்திருக்கிறோம்.''

எலிசா புன்முறுவல் பூத்தபடி சொன்னதைக் கேட்டு யக்கோவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றிச் சுருக்கங்கள் குவியச் சிரித்தார். என்னை ஆற்றுப்படுத்தும் நல் ஆத்துமாக்களை மானசீகமாகப் பூஜித்து நின்றேன். இந்த நாய்க்கு மனிதர்களைத் துல்லியமாய் பிடிக்கவில்லை. ஏன்தான் இப்படி வெறி கொண்ட வெப்பிசாரத்துடன் நடக்குது? பார்க்கப் பார்க்கத் தலையிடியாகக் கிடக்கு இப்பவே வெடிவைச்சு சாகடிச்சிட வேணும்போல் தென்பட்டது..... உயர்ந்த உள்ளங்கள் பேணிக்காத்த நன்றியுள்ள பிராணி இப்படியாக நடப்பது சந்தேகமாகவும், சங்கடமாகவும், விந்தையாகவும் தென்பட்டது.

''நாயை இன்றிரவு அப்பில் மரத்தடியில் கட்டிவிடு!''

எலிசா உத்தரவிட்டாள். ''இப்படி நடப்பது யக்கோவிற்குத் தெரியாமல் இருக்கட்டும். இந்தப் பிராணி குளிரில் நிற்பதை அவர் ஒருதுளியும் விரும்பமாட்டார் . சாந்தன் நாயின் விந்தையான செயல் என் இதயத்தை வருத்திவிட்டது'' என்றாள்.

நாயும் அன்று முழுநாளும் சாப்பிடவே இல்லை! கொடுத்த உணவு தண்ணீர் அனைத்தையும் வெறுத்து காலால் தட்டிவிட்டது.

சாந்தன் என் வாழ்கைக்காகவே வாழ்ந்தவர் யக்கோ. நன்றியால் எனது உள்ளம் நிரம்பி நிற்கிறது. நான் இன்றுவரை நிலைத்திருப்பதற்கு யக்கோதான் அருள்பாலித்தவர். என் விருப்பத்திற்கு எந்தத் தடங்களும் விதிக்காது எனக்காகச் செபம் பண்ணி வந்தவர். இளவயதில் நான் பேரழகியாக இருந்தேன். யக்கோவும் தந்தைவழி செல்வந்தராகவும் உடல் கட்டான அழகனாகவும் துலங்கியவர். திருமணத்தின் பின்பு என் நினைவு களில், நிகழ்வுகளில், ஆசைகளில், அந்தரங்கத்தில் மிகப் பெரும் பேறாக வாழ்ந்தவர் . இந்த உலக வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த ஒப்பற்ற சொத்து யக்கோதான். எனதுள்ளம் உருகிறது... சாந்தன் தேவசமுகத்தின் சாட்சியாகச் சொல்லுகிறேன்.... யக்கோவைப் பிரிந்து என்னால் வாழமுடியாது.''

இப்படி எலிசா கண்கள் கலங்கி, காதல் பாசத்தால் நெகிழ்ந்தாள். 50 வருடத் தாம்பத்திய உறவின் உயர்ச்சி கண்டு நான் உள்ளம் உடைந்து மௌனத்தில் புதையுண்டு நெக்குருகிப் போனேன். ஆழமாய் வேர் பற்றிய தாம்பத்திய உறவால் கணவனின் சுபாவம் அறிந்தவளாய் மனைவியின் சுபாவம் புரிந்தவராக, வாழ்ந்த காலத்தை என்னால் கிரகித்துக்கொள்ள முடியவில்லை. என் அனுபவமும், வயதும் இடமளிக்கவில்லை. இந்த நேரம் எலிசா பேசினாள்.

''சாந்தன் அந்தப் புத்தகத் தட்டில் இருக்கிற தாஜ்மகால் படம்போட்ட வீடியோ கசட்டை எடுத்து வா மகனே...''

செற்றியிலிருந்து எழுந்து... கசட் இருக்கும் இடைவெளி நேரத்திற்குள் அந்த வீடியோ கசட் பற்றிய செய்தியை உங்களுக்குச் சொல்லி இந்த இடைவெளியை உண்மையாக நிரப்புகிறேன். யாக்கோவும், எலிசாவும் திருமணமாகி இருபது வருடங்கள் கழிந்து இந்தியாவிற்கு சுற்றுலா போயிருந்தார்கள். இந்தியாவின் புரதான பத்துயிர்ப்புகள் எல்லாம் தரிசித்தார்கள். அவர்கள் இருவருக்கும் பிடித்தமான காதல் சின்னத்தையும் தரிசித்தார்கள். அந்த அற்புதமான உலக அதிசயமான தாஜ்மகாலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாக் கோணத்திலும் தங்களை வீடியோவில் பதிவாக்கி உலவும் காதலர்களாக தங்களை தக்கவைத்துக் கொண்டனர். என்னிடம் எலிசா அடிக்கடி சொல்வா... 'தாஜ்மகால் காதல் சின்னமல்ல சாந்தன்! அது உலகின் புனித ஆலயம். இப்படியொரு புனிதக் கோயிலை அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளில் எங்காவது காணமுடியாது' அந்த நினைவை மீட்டியபடியே கேசட்டை எலிசாவிடம் நீட்டினேன். அந்தக் கசட்டின் முதுகில் திருக்குறள் பிரஞ்சில் எழுதப்பட்டிருந்தது. அந்தக்குறளின் இலக்கத்தைத் தமிழில் படித்தேன்...

*கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்*
*எழுதேய் சுரப்பாக்கு அறிந்து -(குறள் --1127)*

என் கண்களுக்குள்ளே காதலர் குடியிருப்பதால் - மை - எழுதும் போது மறைக்கும் என அஞ்சி அதையும் கைவிட்டேன். இதனால்தான் எலிசாவிடத்தில் மேக்கப் பண்ணுவதும் விடுபட்டுப் போனதோ? வெள்ளையர் மத்தியில் இப்படியொரு குலப்பெண் இந்த நூற்றாண்டில் இந்த வெள்ளையர் பண்பாட்டில் பெருமைக்குரியனவாகத் தோன்ற வில்லையா?

நாயின் ஊளையிடுதல் வீட்டுக்குள் எதிரொலித்தன! விண்ணிடிந்து மண்ணில் விழுந்திடும் அந்தரகப் பேரிடியாக ஒலித்தன.

செற்றில் சாய்ந்திருந்தபடி கசட்டை ஓடவிட்டும்... இழுத்துவிட்டும் தாஜ்மகாலையே பார்த்தபடி இருந்தாள். எனக்கும் நித்திரை வரவில்லை. இடையிடையே எழுந்து திரும்பத் திரும்பப் படுத்தும் பார்த்தேன். நித்திரை பிச்சை கேட்டது... வெளியே நாயின் ஊளை உச்ச ஸ்தாதி அடைந்தது.

நான் தூக்கமின்றித் தவிப்பதை உணர்ந்து கொண்டதால் எலிசா என்னை இரக்கமாகக் கூப்பிட்டுத் தன்னருகில் இருக்கும்படி பணித்தாள். எலிசாவின் தேகம் நடுங்கியது. வாய் மூடித்திறக்கும் போது சொற்கள் உடைந்து தொடர்பற்றுவந்து விழுந்தன.

''வாழ்வின் வெற்றிற்கு எத்தனைக்கு எத்தனை திறமைகள் தேவையோ... அத்தனையும் யக்கோவிடம் இருந்தது. எனக்கு எத்தனை ஆனந்தமாக இருந்தது. இன்று என்னையறியாமலே துக்கம் ஆட்கொண்டுவிட்டது. சாந்தன், நாங்கள் உனக்களிக்கும் சுனாமிப் பரிசு எதுவாக இருக்கும் என்று ஊகித்தாய்? அல்லது நாங்கள் இறந்த பிறகு இப்படியொரு தாஜ்மகாலை எங்களுக்கு நீ கட்டுவாயா? அல்லது இந்த வீட்டை எங்கள் நினைவாலய மாகப் பராமரிப்பாயா?''

மௌனமாய் நாயின் ஊளையில் உசிர் உருகித் துடித்தேன். இப்போது சுனாமிப் பரிசு எதுவென்பதை புரிந்துகொண்டேன். நன்றி சொல்ல வார்த்தையின்றி மௌனமாய் நின்றுருகினேன்.

காலன் எங்கே? எந்தவாசல் வழியே நுழைந்தான்?

யாரைக் கொண்டுபோக வந்தான்?

எலிசா செற்றில் இருந்தபடி தன்னையறியாமல் தூங்கிவிட்டாள்.

யக்கோவும் படுக்கை அறைக்கட்டிலில் தூங்குவதை நோட்டம் விட்டபடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னறைக்குள் உள்ளிட்டேன். ஏனோ எனக்குத் தூக்கம் தழுவவில்லை. அந்தப் பொழுது மரண அமைதி குடிகொண்டது போல் காட்சியளித்தன. திரும்பவும் போய் யக்கோவையும், எலிசாவையும் பார்த்து விட்டு கட்டிலில் சாய்ந்தேன். காலனின் கைகள் என்றும் தோல்வியைத் தழுவியதில்லையே! வெற்றியை யாரிடம் பெற்றான்? யார் உயிரைப் பறித்துச் சென்றான்?

நாயின் ஊளை இப்போது கேட்கவில்லை... அப்பில் மரக்கொப்பில் காக்கா கரைவது கேட்டது. விடிகாலைப் பொழுது விரைந்து வந்து கொண்டிருந்தது.

வழமையான நேரத்திற்கு யாருமே துக்கத்திலிருந்து எழும்பவில்லை. வெளியிலிருந்து அமர்ந்தும் அழைப்பு மணிச்சத்தம் கேட்டுத் துடித்துப் பதைத்து ஓடிப்போய் வீட்டு வெளிக்கதவைத் திறந்தேன். அதிர்ந்துபோய் கணநேரம் சிலையாக நின்றேன்.

காலை வணக்கம் சொன்னபடி யக்கோ–எலிசா தம்பதிகளின் பிள்ளைகள் இருவரும் நின்றனர். நான் அவர்களுக்குக் காலை வணக்கம் சொல்லியபடி உள்ள வரும்படி அழைத்தேன்... இச்சத்தத்தில் எலிசா துக்கச் சோர்வோடு எழுந்ததும், இருபிள்ளைகளும் தாயின் கன்னத்தில் மாறி மாறி தங்களது கன்னத்தை ஒத்திக் கொண்டனர்.

பிள்ளைகள் இருவரையும் கண்டதில் எலிசாவிற்கு மகிழ்ச்சியோ, அதிர்ச்சியோ, தாக்கமோ எந்தவிதமான மாற்றமும் முகத்தில் தென்படவில்லை. மாறாகத் துக்கம்தான் முகத்திலும் செயலிலும் குடிகொண்டிருந்தன. பிள்ளைகள் எப்போது வருவார்? எப்போது போவார்? பூச்செண்டு தான் இருக்கவே இருக்கிறதே... அவர்களுக்கு மன்னிப்பையும், அன்பையும் வெளிப்படுத்த! என்ன தலையிடி? ஆரவன் இதைக் கண்டு பிடித்தான்? விரக்தியின் விம்மல் வெடித்தது. பிள்ளைகள் இருவரையும் தான் படுத்த செற்றியில் அமரும்படி வாயால் சொல்லாது... உள்மன வேதனைக் கொந்தளிப்பில் கை உயர்த்தி சைகையால் காட்டிவிட்டு... ''மகனே சாந்தன்! என்னோடு வா...''

எனது வலக்கையைப் பற்றியிழுத்து நடந்தால்... இந்த வேளை சினத்துடன் மகன் யூலியன் புறுபுறுத்தபடி பின்வளவுக்குச் சென்றார். எலிசாவின் கரத்தைப் பற்றிக்கொண்டு யக்கோ படுத்துக்கிடக்கும் கட்டிலை நெருங்கினோம்.

யக்கோ ஏற்கனவே செத்துப் போய்விட்டார்.

யக்கோவின் முகத்தை நோக்கி எலிசாவின் கண்கள் நிலைகுத்தின. என்னால் முடிந்தவரை விம்மி விம்மி அழுவதைத் தவிர வேறு எதையும் செய்யத் தோன்றவில்லை... எலிசா தன் கணவனின் சாவை ஏற்கனவே அறிந்தவளாய் இருந்துள்ளதால் பாசத்திலும் கோபம் தெறித்தது. வெறுப்போடு பின்வளவுக்குப் போனமகன் யூலியன் பேயக் கண்டவனாட்டம் தலைதெறிக்கக் கத்தினான். மகள் யூலியற் பயத்தில் படுக்கை அறைக்குள் ஓடிவந்தாள்.

''அம்மா! நாய் சார்லி செத்துக் கிடக்கம்மா!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலிசா அமைதியாக நின்றுவிட்டு தன் கணவன் உடல்மேல் விழுந்து கண்ணீரை ஆறாய் ஓடவிட்டாள். யக்கோவின் முகத்தோடு முகத்தைத் தேய்த்தபடி முத்தங்கள் இட்டாள்... இறுதி முத்தமிட்ட நிமிர்வோடு சொற்கள் இடையே இடையே தட்டுத் தடுமாறி வந்தாலும் வேகம் நிறைந்த சொற்கள்.

''சாந்தன் உன் தகப்பன் தலைமாட்டில் இரண்டு மெழுகுதிரிகளை எடுத்து வந்து கொழுத்தி விடு. இன்றுமுதல் இந்தவீடு உன்ர வீடு. யக்கோ ஏற்கனவே உயில் எழுதிவைத்துள்ளார். ஆகவேண்டிய காரியங்களை நீயே ஆற்றிவிடு மகனே!'' என்பதை அழுத்தமாகச் சொன்னபடி கணவனின் பாதங்களை இறுகப் பற்றிக்கொண்டாள்.

●

01.07.2005


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்வு

எதற்கெடுத்தாலும் சத்தம்போட்டு அச்சுறுத்தும் தாய் யசோதாவின் நிற்கோலத்தை ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு மகள் யஸ்மினா தன் இரு கண்களையும் இறுக மூடிக்கொண்டாள். பின் மெதுவாகத் தவழ்ந்த குரல் வேகமாகத் தொனித்தன.

''அம்மா நான் படிப்பதா? இல்லை முடிப்பதா?''

யசோதாவின் சர்வாங்கம் அனைத்தும் நடுங்கியது. இரட்டை அர்த்தம் பொதிந்த கேள்வியை விறைப்பாகவும் அழுத்தம் திருத்தமாகவும் கேட்டுவிட்டாள். மூச்சு விடவில்லை. மறுகணம் யஸ்மினாவா இப்படிக் கேட்டாள்? பசுப்போல் சாது புலிபோல் பாய்ந்தாள். கணப்பொழுதில் கேள்விகள் அம்பாய் இதயத்தில் தைத்தன. கணணி யுகம் குதிரை வேகத்தை மிஞ்சி விட்டது. மகளின் இந்தக் கேள்வியில் திமிறிப் புளுகியடிக்கக் கணவன் குணாலன் இல்லை எனும் ஆதங்கம் அவசரத்தில் தென்பட்டாலும் அவரால்தான் புள்ளைகளுக்கு இந்தத் துணிவு வந்ததையும் கிரகித்துக் கொண்டாள்.

''எடி மகளே! இப்படிக் கதைக்க எங்கயடி யாரட்ட இருந்தடி உந்தத் துணிவு வந்தது?''

''அம்மா இப்ப பார்த்தீங்களா நீங்க ஒரே போடலாக எத்தனை கேள்விகள் கேட்டீங்க என்று? இப்படிக் கதைக்க? எங்கயடி? யாரட்ட இருந்தடி? உந்தத் துணிவு வந்தது? கேட்டீங்களா எத்தனை கேள்விகள் விழுந்த தென்று? யசோதாவின் முகத்தில் விழுந்தடியில் மௌனத்தில் நிதானித்து தியானத்தைக் கடவுளிடம் வேண்டுதல் புரிந்தாள்.''

''அம்மா நான் படிப்பதா? இல்லை முடிப்பதா? என்றுதானம்மா கேட்டேன். இந்தக் கேள்விக்கு உங்கள்ர சம்மதம்தானம்மா என்ர மனம் அடையும் குளிர்ச்சியாக துலங்கும்.'' இப்போது அழைப்பு மணியுடன் கதவு தட்டும் சத்தமும் சேர்ந்து கேட்டது. இளையவள் கீதா துள்ளிக் குதித்தோடியவள் கதவண்டை போனதும் இந்த மாதிரித் தட்டுவது யாராக இருக்கும்? சின்னத் தலையாட்டலுடன் கதவைத் திறந்தாள்.

''அக்கா உன்னைத் தேடி கிறிஸ்ரினா வந்திருக்கா'' என்றவள் குரல் அடங்கும் முன்னம் தாயைக் கடந்து சென்றவள் கிறிஸ்ரினா முகமுட்டப் போனதும் கன்னங்களைத் தேய்த்துக் கொண்டனர். கோலுக்குள் கூட்டிச் சென்று செற்றியில் அமரும்படி சொன்னாள். தொலைக்காட்சியப் பார்க்கச் சொன்னாள்... குசினிக்குள்ளிட்டு குளிப்பாணம் கொண்டு வந்து கொடுத்தாள். பேந்து தானும் அவளோடு நெருக்கமாக அமர்ந்தாள்.

இப்போது இருவரின் உரையாடல் உச்ச ஸ்தாதியில் தொனித்தன.

தாயவள் யசோதாவிற்கு அவ்வளவு வயதும் இல்லை நாற்பத்தி இரண்டு நெருங்கியிருக்கும். முகத்தில் புன்முறுவல் பூத்திருக்கும். கடவுள் பக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளவள். செந்தெளிப்பான உள்ளம் மகிழ்வில் கொழு கொழுப்பாக இருப்பாள். இரக்க சுபாவம் மிக்கவள். இதனால் இப்ப கொஞ்ச நாளாய் திடுக்கிடும் பயமும் தொற்றியவளாகிவிட்டாள். பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் தேவைகளை உடனுக்குடன் ஓடி ஓடி சுறுக்கமாகச் செய்து கொடுப்பவள். பிள்ளைகள் அழுதாலும் யோசித்தாலும் கலங்கிப் போயிடுவாள். பார்த்துக் கொண்டு நிற்கமாட்டாள். யஸ்மினா சாமர்த்தியப் பட்டபின்பு கொஞ்ச நாளாக உவளது மாணவர், மாணவிகள் தோழமை பயத்தையும் பதகளிப்பையும் சந்தேகத்தையும் சங்கடத்தையும் கொடுத்தன.

''யஸ்மினா ஏன் எந்தப் பிள்ளை வந்திருக்கு?''

கேள்விக்குப் பதில் இல்லை. செற்றியிலிருந்த இருவரிடையே மௌனம் கனமாகப் புதைந்தன.

''எடி மகளே நான் கேக்கிறன் வாய் திறந்து பதில் சொல்லாமல் இருக்கிறாய்?''

''அம்மா என்னத்தைக் கேக்கிறீங்க? உந்தப் பிள்ளை போகட்டும் அதுக்கப்புறமாப் பதில் சொல்லுறன்.''

யசோதாவின் வாய் மூடுபட்டு மனச்சாட்சியின் சாட்சிக்கு வேலை கொடுத்தாள்...

இக்காலம் பிரான்சில் எப்படியிருக்கும் என்பதற்கும் எதிர்காலம் எப்படிப் போகும் என்பதற்கும் பாரிசின் புறநகரான சார்சல் நகரில் வாழும்...

மகள் ஓர் எச்சரிக்கை தவறிப்போன மகளையும் மகள் பெற்ற புள்ளையும் தினம் தினம் பார்த்துப் படும் தாய் தகப்பனின் கோரணிய வாதைகளைக் கண்டு யசோதாவும் ஆடிப்போனாள். தன் வீட்டில் கணவன் ஒரு கட்சி, அவள் ஒரு கட்சி, யஸ்மினா அப்பா ஒரு கட்சி, சின்னவளுகள் ஆளும் கட்சி, எல்லாத்திற்கும் எதிர்க்கட்சி வாழ்க்கை. எதிர்நீச்சல் அடிப்பதுதான் இன்றைய வாழ்வியல் நெருடல்.

''அம்மா நான் எந்த விடயத்திலும் பிடிவாதம் பிடிக்கவில்லை. எப்பவாவது உங்கட சொல்லை மீறியும் நடக்கவில்லை. நீங்க ஏனம்மா நெடுகவும் சந்தேகக் கண்கொண்டு சுழன்று சுழன்று பார்க்கிறீங்க? கண்டதுக்கெல்லாம் கத்துறீங்கம்மா.''

''இல்லை மகளே! நீ படிக்கிற புள்ளை. உன்ர வாழ்க்கை குறிக்கோள் உள்ளதாக இருக்க வேண்டும் என்பதை எண்ணித்தான் அம்மா இப்படி நடக்கிறேன். உன்ர வாழ்வு நல்லபடியாக அமையவேண்டும் இல்லையே நானும், அப்பாவும் செத்துப் போயிடுவோம். பாடசாலையிலும் தினமும் சந்திக்கிறாய். பேந்துமேன் இந்த வீட்டிலும், அந்தப் புள்ளை வீட்டிலும், கண்டகண்ட இடத்திலும் சந்திப்பை உருவாக்குறாய்?''

கேள்விகளோடு யசோதா சற்றுக் கள்ளமாகச் சிரித்துக் கொண்டு அறைக்குள்ளிட்டாள். தாயின் கேள்விகளைக் கேட்டுக் கொண்டு யஸ்மினா சிரித்துக் கொண்டுதான் மௌனித்திருந்தாள். இந்தவேளை அருகிலிருந்த பிரஞ்சுப் பெண் கிறிஸ்ரினா கனக்க யோசித்தவளாய்க் கேட்டாள்.

''யஸ்மினா உங்க அம்மா அப்பா படிச்சவங்களா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்ரினாவின் இந்தக் கேள்வி யஸ்மினாவுக்குப் பிடிக்கவில்லை. சற்றுக் கோபமும் எரிச்சலோடும் பெருமையாகச் சொன்னாள்.

''ஓம்! கிறிஸ்ரினா நாங்க படிச்ச பைக் BACக்கு மேலாகப் படிச்சவங்க. அப்பாவவிட அம்மா ஊராக்களுக்குக் கொஞ்சம் பயந்தவங்க. என்னால தங்கைச்சிகளால கெட்டபெயர் வந்திடுமென்று இப்பதான் அம்மா இப்படி. முன்னம் நல்லா அலங்காரம் செய்து கலகலப்பாக இருந்தவங்க. நான் சாமர்த்தியப் பட்டபிறகு எவ்வளவோ தோழமையோடு பழகி அன்பு செலுத்திய அம்மாவிற்கு ஊராக்கள்ர ஒருசில புள்ளைகள் இங்க கெட்ட ழிஞ்சு வாழ்வைப் பாழாக்கியது கண்டு மருட்சி கொண்ட மனக் கவலை கவ்வியதால் தான் இப்ப இப்படி மாறிப்போனாங்க. அப்பா எதையும் கண்டிப்பாக்கித் தண்டிக்க மாட்டார். அவருக்கு என்மேல் அளவு கடந்த பிரியமும், நம்பிக்கையும் உண்டு. அம்மாவின் புலன்கள் சற்றுக் கூர்மை யானதும் உணர்ச்சிமிக்கவை என்றும் நான் நினைக்கிறேன். அதனால் மேலும் மேலும் இறுக்கமான அலாதியான பாசத்தில்தான் நான் மிதக்கிறேன்.''

''அது சரி யஸ்மினா சதா இப்படிக் கத்தினாலும், தீராத கோபத்தைக் காட்டினாலும் எதுதான் தீர்க்கப் பட்டுவிடும்? இதை அவங்களும் தீர்க்க மாக யோசிக்கவேண்டும். எங்கட அம்மா நல்லாப் படிச்சவங்க. அப்பா அவ்வளவாகப் படிக்கயில்லை. அவர் சதாக் குடிக்கிறவர். அம்மாவோட நெடுகவும் சண்டை பிடிப்பார். இந்தப் பயத்திலதான் அப்பா வந்தா ரெண்டால் இங்க ஓடிவாரனான்... உன்ர அன்பின் தோழமையோடு கலகலப்பாக இருக்கலாம் என்றுதான். இவற்றையெல்லாம் ஒளிச்சு நின்று கேட்டுத் தெரிந்து தூதின் மொழியான பிரஞ்சில் கேட்டு மனம் உருகி இரக்கத்தின் மொழியான தமிழில் மௌனத்தில் புலம்பினாள். பிள்ளை களைத் தவறாக எடைபோட்ட குற்றயுணர்வு அம்பாய்க் குத்தி கொஞ்சம் கொஞ்சமாக மனமாற்றம் அடைந்து முந்தின நிலமைக்குக் குதூகலம் நிறைந்த மனதோடு திரும்புவதுபோல் தோன்றக் கண்டவள். மேலும் அவர்கள் உரையாடுவதை குற்றவாளியாக மறைந்து நின்று கேட்டாள்.

''கிறிஸ்ரின் படிப்பு என்பது பலத்தின் பக்கபம் அறிவு பெறுவது அஞ்சாமல் வாழ்வதற்கு, வாழ்வின் ஆணிவேராகத் திகழ்வதே அறிவு என்று நம்மைப் படிப்பிக்கிற எலிசபெத் ரீச்சர் அடிக்கடி சொல்வது நினைவிருக்கா? இதனடிப்படையில்தான் அம்மாவிடம் கேட்டேன்... படிக்கவா? இல்லை முடிக்கவா? என்று.''

படிக்கவா என்பது சரி அதென்ன முடிக்கவா? எனும் பல அர்த்தம் பொதிந்த கேள்வி? இப்போது அழைப்பு மணியும் கூப்பிடு குரல்களும் பெலத்துக் கேட்டன. சதா வந்து கொண்டும் போய்க்கொண்டும்தான் இருப்பாங்க. உவங்களுக்கு என்ன புடிச்சிட்டு? உங்களுக்கு அப்படி யென்ன தோழமை வேண்டிக் கிடக்குது?

இப்போது இரண்டு ஆண்களும் பெண்களுமாக சேர்ந்து வந்தனர். வீடு சகல இனப் பிள்ளைகளாலும் நிறைந்து வழியும் நிலவரம்.

கலவரம் அடைந்த யசோதா பழையபடி முருங்க மரம் ஏறிவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றும் ஓய்வுக்கு இடமில்லை. பேசாமல் இருந்து படிப்பவள் உந்தப் புள்ளைகள் வர ஆரம்பித்தால் மிசின் மாதிரி இயங்குவாள், குசினிக்குள் ஓடுவாள்,கொம்பியுற்றில் இயங்குவாள், தொலைக்காட்சியையும் பார்ப்பாள், உற்சாகம் பிறந்து உச்சஸ்தாதியில் உரையாடுவாள்.

யசோதா ஆச்சரியத்தில் அங்காலாய்த்து நிற்கிறாள். சின்னவளுகளும் தங்கள் அறைகளை விட்டுவந்து அவர்களுடன் சேர்ந்து குதூகலித்தனர்.

இப்படியான நேரங்களில் குணாலன் வந்தாரென்றால் குழந்தைகளோடு தானும் குழந்தையாக மாறிவிடுவார். இந்த நேரங்களில் விலத்தி நின்று யசோதா புன்னகைத்தாலும் கோபத்தின் அபிநயம் பலவித முத்திரைகளாகப் பிரகாசிக்கும் அலட்சியத்தால் தாய் விலத்தி நிற்பதைப் பிள்ளைகள் லட்சியம் செய்வார்கள் எனும் கவலையும் யசோதாவைத் தொட்டு நிற்கும். கண்காணிப்புக்கு ஒருவர் இருந்தாக வேணும். மேலும் யஸ்மினா மேல் உள்ள ஆர்வத்தில் கூர்ந்து கவனித்தாள். நொடிக்கொரு தடவை அவளது ஈடுபாட்டையும் சுழன்று சுழன்று நோக்கினாள். பெரிய வீட்டின் விசாலமான கோல்தான் எந்தப் பொருளும் இல்லை என்று சொல்லவும் கேள்வி கேட்கவும் முடியாது. அந்தமட்டில் வேண்டிய எல்லாம் மூவரின் அறைக் குள்ளும் கோலுக்குள்ளும் பிரமித்துப் போகும் அளவுக்கும், ஆசைப்படும் விதமாகவும் வீற்றிருக்கின்றன. தற்கால எந்தப்பொருள் புதிதாக வந்ததும் வாங்கிக் கொடுத்து விடுவார்கள். வாறபிள்ளைகள் இவற்றைக் கண்டதும் தங்களப் பெற்றவர்கள் மீது வெறுப்புக் கொள்வார்கள் தங்களுக்குக் கிடைக்காதவற்றை எல்லாம் இவர்கள் வைத்திருக்கிறார்களே! பொறுப்பற்ற வர்கள் என்று கோபம் கொள்வார்கள். ஏன்தான் பெற்றார்கள்? யஸ்மினா, கீதா, மீரா கொடுத்து வைத்தவர்கள். நாங்கள் கொடுப்பனவு இல்லாதவங்க எனும் வெறுப்புக் கொள்வார்கள்

யசோதாவின் கவனம் ஒருகணம் தாய்நாட்டு வாழ்கையில் மூழ்கி ஓடித் திரும்புகையில் தலையில் விழுந்த பேரிடியில் கதிகலங்கிப் போனாள்.

யஸ்மினா பொடியனோடு நெருக்கமாக இருந்து கொம்பியுற்றர் விளையாடிக் கொண்டிருந்தாள். மற்றவர்கள் பிறைபோல் கூடி நின்றனர். கிறிஸ்ரினா துடுக்குத்தனமாக எல்லோரையும் பார்த்துச் சிரித்துவிட்டு யஸ்மினாவின் தோள்மூட்டை அமர்த்தி பொடியனோடு மேலும் ஒட்ட வைத்தாள். அடுத்தவன் சீறினில் விழுந்த ஆணின் தோற்றத்தைக் காட்டி இவரைத் தெரியுமா? என்று கேட்டுச் சிரித்தார்கள். இந்தக் கேள்வி யசோதாவின் காதுக்குள் ஈயக்குண்டுகள் காச்சி ஊற்றியது போலிருந்தது வாசல் கதவு சாத்திய இடைவெளி ஊடாகப் துளாவித் துளாவிக் கண்ணோட்டம் விட்டாள். கொம்பியுற்றர் சிறினில் விழுந்திருக்கும் சாயல் படத்தைப் பார்த்துவிடத் துடியாத் துடித்தாள். கிறிஸ்ரினா மீண்டும் யஸ்மினாவின் தோள்மூட்டை அமர்த்தியபடி ஏறிய தொனியில் கேட்டாள்.

''யாரிவர் தெரியுமா?''

யஸ்மினா மௌனமாகச் சிரித்தாள். யசோதா கட்டியடித்த கற்றூண் காட்சியில் நெக்குருகித் துடித்தாள். சுற்றி நின்றவர்களின் கைதட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரகோசங்கள் அடங்கியும் யஸ்மினாவின் சிரிப்பின் ஒலி அடங்கவில்லை யசோதாவின் குரல் அம்பாய்ப் பாய்ந்தது...

''யஸ்மினா எழும்பிக் கெதியா வாடியிங்க.''

''என்ன அம்மா?'' பதறியடித்த கீதாவும், மீராவும் அறைக்குள் ஓடினார்கள்.

''அம்மா அப்படித்தான்'' யஸ்மினா வாயைத் திறக்கவில்லை. பதறாமல் நிதானமாகவே உவளின் நடவடிக்கைகள் உந்தப் புள்ளைகள் வந்தால் புதிர் நிறைந்தனவாகவே கிடக்கிறது. விசித்திரமாகவும் புலப்படுகிறது. தாயவள் கூப்பிட்ட குரலை அலட்சியம் செய்தவளாக யஸ்மினா இருந்து விளையாடிக் கொண்டிருந்தாள். இந்தவேளை குணாலன் கதவைத் திறந்துகொண்டு உள்வந்தார் மனைவியின் கண்ணகியின் சினக்கோலம் கண்டு திகைத்துப் போனார். யசோதா கெம்பிய கோபத்தில் சதிரத்தை ஆட்டியபடி புது ரூபமாய் புதுவேகத் தொனியில் குழறினாள்.

''இண்டைக்கே உந்தக் கொம்பியிற்றார் கேம் பேய்கள் ரீவி சகல சனியங்களையும் ஆருக்காவது வித்துத் தொலையிச்சிடுங்க. இல்லாட்டி இப்பவே கொண்டுபோய் ஸ்ரோர் றூமுக்க போட்டு மூடிவிடுங்க என்னால மீள முடியாமல் கிடக்கு''

குணாலன் தயங்கியபடி சிந்தித்துச் சிரித்தார். அந்தப் பக்குவத்தோடு ''பிள்ளைகளே இண்டைக்கு இது போதும்; வீட்ட போயிற்று நாளைக்கு வாங்க'' என்றபடி சுழன்று கொண்ட பார்வையை அருமை மனைவியின் முகத்தில் நிலைகுத்த நிறுத்தினார். இத்தனைக்கும் மனைவிமேல் குற்றம் இருப்பதாகக் குணாலனுக்குப் புலப்படவில்லை. யஸ்மினாவின் எதிர் காலம் நல்லபடியாக அமையவேண்டும். உந்தப் புலத்தில் தமிழ் குடும்பத்தைப் பிள்ளைகள் ஏதோ செய்யப் போய் பெற்றோர்கள் நினையாத பிரகாரம் ஏதோ நடந்துவிடுவதால் வந்த கோபமும் தவிப்பிலிருந்து மீள முடியாத சங்கடமாகத்தான் குணாலனுக்கும் பட்டது. மனைவியின் உள்மனம் படும் சித்திரவதையை நன்கு புரிந்துகொண்டதால் ஆத்திரப் படாமல் தன் பிள்ளைகளை நெருங்கினார். இந்தவேளை சகல பிள்ளை களும் திரும்பிப் பார்த்தும் திரும்பாமலும், கோபத்தோடும், கோபிக்காமலும் வெளியேறிவிட்டனர். தங்கள் பிள்ளைகளோடு சேர்ந்து தானும் குழந்தையாக மாறினார். மகளின் மனமகிழ்ச்சி நெஞ்சத்துள் இருக்கும் உண்மைகளையும் பிடிவாதத்தையும் அறிந்துவிடும் தொடுப்பில் குறியாகக் குதூகலித்து யஸ்மினாவோடும் சேர்ந்து கும்மாளம் இட்டார். தகப்பனின் உந்தத் தோழமையின் கூடலிலும் தாயின் மீது எந்தவித வெறுப்பும் காட்டவில்லை. தாய் தன்னோடு ஒட்டியும், ஒட்டாமலும், அதட்டியும், அரவணைத்தும், விளங்கியும், விளங்காமலும் இருப்பது யஸ்மினாவுக்கு மேலும் மேலும் அலாதிப் பிரியத்தை கொடுத்தன. தன்னை எந்தவிதக் கேள்வியும் கேட்காமல் தங்கைச்சிகளுக்கு விளையாட்டுக் காட்டும் தகப்பனார் கிட்டப் போய் நின்று முகத்தைப் பார்த்தபடி பூவிரியும் இதழ் திறந்து முத்துக்கள் பளிச்செனச் சிந்திடச் சித்தம் சுத்தம் துலங்கி நிறைந்திருக்கக் கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்பா உங்களையும் அம்மாவையும் மீறி நான் ஒருபோதும் எக்காரணம் கொண்டும் நடக்கமாட்டேனப்பா. அம்மா என்னை அதட்டும்போதும் ஆத்திரத்தில் கடுமையான வார்த்தைகளைக் கொட்டும்போதும் என்ர வாழ்விற்குத்தான் என்று அம்மா மீது பாசத்தோடும் பக்தியோடும் தொழுதுதானப்பா நிற்கிறேன். அம்மாவிடம் சிறிதும் கோபம் எனக்கு வாறதில்லையப்பா.''

யசோதாவின் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொலவென விழுந்தன. கன்னங்களில் வெடித்தும் சிதறின. குணாலன் பெருமையோடு மார்பை நிமிர்த்தி நடந்து தன் அருமை மனைவியைப் பார்த்துச் சிரித்தார்... சிரிப்பு சிலர் சிரித்து வாழாத வாழ்வின் வளர்ப்பின் சிரிப்பாகச் சிந்தி சிந்திக்கப் பண்ணியது.

இப்படியே காலங்கள் காத்திருக்காமல் கடந்தன. யஸ்மினாவின் உயர் படிப்பு முடிந்து உயர்ந்த உத்தியோகத்திற்காகக் காத்திருந்தாள். ''அம்மா நான் முடிப்பதா என்று கேட்டேன். கல்யாணம் முடிப்பதாகினும் உங்கள் விருப்பப்படி தான் கல்யாணம் முடிப்பேன் ''மெல்லிய குரலில் நாணம் இழையோடச் சொன்னாள்.

உந்தப் பேரிடிக்குத்தான் விடைதெரியாமல் தூக்கத்திலும் புலம்பினாள். நிதானத்திலும் உதாரணம் தேடிக் கண்டுபிடிக்க முடியாது தவித்தாள். தவப்பேறான மகள் வாயிலிருந்து வந்த வார்த்தையில் சொக்கிப் போனாள். பரிவும் பாசமும் காட்டி அதட்டியும் அச்சறுக்கை பண்ணி தேவாரப் பாடல் களின் கனிவான தேறுதல் அளித்து இன்று பூரண நிலையடைந்த புதுப் பொளிவை யசோதா பெற்றாள் மீண்டும் மீண்டும் காரியங்கள் ஆற்றச் சுறுசுறுப்படைந்தாள். பெற்றவர்கள் இதயங்களைக் குளிர்ச்சியில் ஆழ்த்திய காவியத் தலைவியின் ஓவியக் காட்சியின் மாட்சிக்கும் நாள் பார்த்து விட்டார்கள். மீள முடியாதிருந்த நடவடிக்கைகளிலிருந்து விடுதலை பெற்றுவிட்ட மகிழ்ச்சி சிறகடித்து புலத்து தேசமெங்கும் அகலவிரித்துப் பறந்து கொண்டிருந்தாள். யசோதாவின் இறக்கைகளுக்குள் மேலும் இரண்டு குஞ்சுகள் உள்ளதை குணாலன் சிரித்தபடி சித்திரவதைப்பட்டார். திடிரென ஒரு ஆனந்த கீதம் அலையெழுப்பி வந்தது.

''அம்மா இங்கயோடி வந்து கீதாவைப் பாருங்கம்மா!''

தலைதெறிக்க ஓடியவள் தாய்மையின் பெரும் பாக்கியத்துடன் கீதாவை வாய்விட்டுச் சிரித்து இறுக்கமாக அணைத்துக் கொண்டவள். என்ன ஏதென்று புரியாது நின்ற குணலானை புன்முறுவல் பூத்து மகிழ்ந்திட யஸ்மினா பறைஞ்சாள்.

''அப்பா கீதா பெரியவளாகி விட்டாளப்பா.''

கீதாவைப் பார்த்தார்...மீராவைத் திரும்பிப் பார்த்தார். மனத்தை முழுமையாக யசோதாவிடம் விட்டவர் மனம் கலங்கி விழிகளைத் தாழ்த்தினார். யசோதா மறுபடிமறுபடி செக்கனுக்குள் கீதாவைக் கட்டியணைத்து ஆனந்த மனோலயத்தில் மூழ்கினாள். மனைவியின் மீளமுடியாத நடவடிக்கையின் தொடர்தல் குணாலனின் உள்ளுணர்ச்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடிதுடித்தன. மௌனக் கண்ணீரில் நின்று புலம்பினார். யசோதா எழும்பிக் கணவன் அருகில் வந்து நின்று நெடுமூச்செறிந்தாள் அடுத்த கட்டத் தாயின் கண்காணிப்பில் கவனம் சுறுசுறுப்படைந்தன. யஸ்மினா தகப்பனின் இரு கைகளையும் பற்றிக்கொண்டு தாயைப் பார்த்து பூரித்தாள். மீரா கனீரென்று சிரித்தாள் கீதாவைப் பார்த்து! நால்வரும் மீராவை உற்றுப் பார்த்தனர் ! யசோதாவிடமிருந்து.....

கண்களிலிருந்து கண்ணீர் குமுறத்தான் போகின்றது
சொற்களின் வேகம் கொந்தளிக்கத்தான் போகின்றது
கண்காணிப்புகள் தீவிரமடையத்தான் போகின்றது
கண்டிப்பும் அணைப்பும் தொடரத்தான் போகின்றது
நடவடிக்கைகள் தினமும் நடக்கத்தான் போகின்றது
அரும்பாடு படும்பாடு படரத்தான் போகின்றது

மீண்டும் மீண்டும் தொடர்கதையின் பாத்திரங்கள் யஸ்மினா சாட்சியாக நிற்கிறாள். கீதா பெரியவளாகிவிட்டாள். மீரா வயசுக்கு வரப் போறாள் யசோதாவால் மீளமுடியாது.

●

எரிமலை
10.10.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவளுக்குள்

ஈழமண்ணில் தான் பிறந்த ஊரில் வாழ்ந்த காலத்தை நினைத்துப் பார்ப்பதில் 'சாந்திக்கு' பெரும் ஆனந்தம். சுமாத்தியப்படும்வரை ஊர்க் குழந்தைகளோடு வயல் வெளிகளிலும் வாய்க்கால் வரம்புகளிலும் சுற்றித் திரிந்து சிநேகிதமாய்ப் பழகியவர்களையும் – புழுதியில் செம்மண் புழுதியிலும் பிரண்டெழுந்து வீட்டுக்குள் நுழையும்போது அம்மாவின் முகத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டு பயந்து மசிஞ்ச – மகிழ்ந்த காலங்களையும் சிலநேரங்களில் தாயவளின் முணுமுணுப்பால்... 'என்ன பழக்கமடி? நீ இன்னமும் சின்னப்புள்ளையாடி? வயசுக்கு வரப்போறாயடி...' இப்படியான கண்டிப்பும் அன்பும் புத்திமதிகளும் கேட்டுக்கொண்டு வளர்ந்த நேரங்களையும் இப்போது புலத்தில் புலம்பிப் பார்க்கிறாள்! இவள் வாழ்வை வரிந்து கட்டிக்கொண்டு வாழ வேண்டும் என்பதற்காகவா பிரான்சில் தஞ்சம் அடைந்தாள்? இல்லை.

இந்த நாகரிகத்தின் உச்சதேசம் புரட்சியில் பூத்த சமத்துவம் – சகோதரத்துவம் – சுதந்திரம் தழைத்தோங்கும் மண்ணில் எப்படி வாழ வேண்டும் என்பதன் தமிழ்க் கலாச்சாரத்தின் நிமிர்த்தம் நிர்ப்பந்தத்தின் பரியந்தத்திற்காகவா வாழ்கிறாள்?

இன்னும் இன்னும் இப்படிப் பலவாறு சாந்தியின் அகப்புலம்பல் புதிருக்குப் புதிராகவும் எதிருக்கு எதிராகவும் துலங்கிக் கொண்டிருந்தன.

சாந்தி மிக அழகானவள். மிகவும் ரம்மியமானவள்; அதிகம் சுவாரசயமானவள்; அதிமிகுந்த அடக்கமானவள். இவள் புத்தகங்களைப் படிப்பதில் ஆர்வமிகுந்தவள். அதிகமான மதிப்பெண்களைப் பெற்று பரீட்சையில் சித்தி பெற்றுவிடவேண்டும் என்பதற்காகப் படித்தவள். பிறந்த மண்ணில் பல்கலைக்கழகப் படிப்புவரை நுழைந்தவள்! இன்று இந்தப் பிரான்ஸ் மண் மொழி படிக்கிறாள். கதை, கட்டுரை, நாவல் எனப் பலவற்றைப் படிக்கிறாள். கலை, இலக்கியச் சந்திப்புகள் என்றும் போகிறாள். இந்தப் புதிய தொடர்புகள் அவளை மேலும் மேலும் சிந்திக்க வைத்துச் சந்திக்கப் பண்ணுகின்றன. இன்னும் பல விடயங் களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற ஆவலைத் தூண்டுகின்றன.

புலத்தில் (ஐரோப்பிய, அமெரிக்கா) என்ன நடந்தாலும் தமிழர்களின் நிகழ்வுகளாக இருந்தால் எங்கு நடைபெறுகிறது, எந்த ஒழுங்கில் இடம்பெறுகிறது, நிகழ்ச்சிகள் எந்த வகைப்படுத்தப்பட்டுள்ளது எனும் ஏற்றநிலை சாந்தியிடம் மிளிர்ந்திருக்கும். இப்படி மற்றவர்கள் சிந்திப்பதைக் காட்டிலும் சாந்தி பலவற்றைச் சிந்திக்கும் ஆற்றலும் ஆர்வமும் கொண்டிருப்பவள். மற்றப் பெண்களைப் போல ஆடம்பர உடைகளையும் (அதிக சோடணைமிக்க விலையான), கை, கழுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கும் நகைகளையும் அணிவதைவிட இந்த வாழ்வு மேலானது என்பதில் உற்சாகமும் உணர்வும் உறுதியும் கொண்டிருந்தாள்.

தமிழ்ப் பண்பாடு பற்றி யாராவது வாய் கொடுத்து சாந்தியோடு தப்பித்துக்கொள்வதும் அத்தனை எளிதல்ல.

சாந்தியை இருந்துவிட்டு எங்காவது விழாக்களில் கண்டால் சிலரது கேலி கிண்டல்களும், முணுமுணுப்பாகவும் ஏறிய குரலில் தொனிக்கும். அந்த நேரங்களில் அவளுக்குள் சினமும், சீற்றமும் சிரிப்பும் நாற்ற மெடுத்தவர்களை எண்ணி மாறி மாறி ஏறித் தாழும். அவள் தன்னை இளம்பெண்ணாக திருமணத்திற்கு ஆளாகி நிக்கிற தோற்றமாக எண்ண வில்லை. மாறாக சமூகத்தின் முன்னேற்றப் பாதைக்கு ஏற்ற ஓர் அங்கமாகப் புரிந்து செயல்படத் துணிந்து ஆரம்பமானாள். குறைந்த வயதில் நிறைந்த அறிவைப் பெற்றிருந்தாள். தன்னம்பிக்கையும், துணிச்சலும், பணிவும், பாதையும் தெளிந்து நிமிர்ந்தவள்.

''திருமணத்திற்கு ஆளாகிவிட்டாய். கல்யாண நாளைக் குறிக்கச் சம்மதம் தா மகளே!''

தாய் தந்தையினர் கேட்கும்போதெல்லாம் மறுத்து வருகிறாள். இதன் தாக்கத்தில் பெற்றவர்களின் புருவங்கள் நெற்றிப் பொட்டில் குவித்துச் சலித்துக் கொள்வார்கள். அவர்களின் பிடிவாதத்தால் வேலையும், வேலியும் (தாலி) அவசர அவசரம் எனும் நெருக்குதலுக்கு உள்ளானாள்.

''இது அவளுக்குள் அக்கினிப் பரிட்சைக் கட்டமானது.''

பெற்றவர்களின் கண்காணிப்புப் பலப்படுத்தப்பட்டது. மூத்த தமையனின் அச்சுறுத்தலும் அடக்குதலும் நேசமாகவும், கண்மூடித் தனமாகவும் இருந்தன. பிஞ்சுப் பிரஜைகளின் குறுகிய குதர்க்கப் பார்வை யற்ற சூரியகதிர் பிரதிபலிப்பை எங்கடயவர் குருடர்களாக கீழ்மட்டத்தி லிருந்து பார்ப்பதுபோல் சாந்திக்குத் தென்பட்டது. விருப்பமிருந்தால், வசதியிருந்தால், வாய்ப்பிருந்தால், எல்லாவற்றுக்கும் மேலான தன்னம் பிக்கையிருந்தால்... இதிலும் மேலான மூத்தகுடியின் கலாச்சாரத் திற்கு இடையூறுயில்லாது எதிர்ப்பற்றிருந்தால் சாந்தியின் பிடிவாதம் மேலல்லவோ?

வீட்டுக்குள்ளிருந்து இரு கைகளாலும் தலையை அமர்த்தித் தைரிய மாகச் சிந்திக்கத் தொடங்கினாள். குசினிக்குள்ளிருந்து கூப்பிடும் தாயின் குரலுக்குக் குரல் கொடுக்காமல் அவசரமாக வெளியேற ஆயத்தமானாள். இந்த வேளை தகப்பன் 'சிவநாதன்' அவர்களின் அதட்டல் அச்சுறுத் தலாகத் தொனித்தன. சற்றுநேர மௌனத்தின் பின்னர் அடுத்த கணம் உறுக்கலான உரத்த குரலில் சொன்னார்.

''மகளே! இண்டைக்கு எனக்கு ஒரு முடிவைச் சொல்லிவிட்டுப் போகாவிட்டால் நான் என்ன முடிவு எடுப்பேன் என்பது எனக்கே தெரியாமல் இருக்கும்.''

''என்னப்பா சொல்லுறீங்க? கேக்கிறீங்க? இப்பயெனக்கு வேலைக்கு நேரமாச்சப்பா.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அது இப்ப பெரிய பிரச்சனையாகப்படவில்லை. உன்ர கல்யாண நாள் குறிக்கவேணும்.''

என்றவர் எகிறி நின்றார். தந்தையின் வாக்கையும், வாஞ்சையையும் தட்ட முடியாத தடுமாற்றமும் சோர்வும் சாந்தியை ஆட்கொண்டன. அவள் நெற்றியில் விழுந்து கிடந்த மயிர்க்கற்றையை இடது கையால் ஒதுக்கிக் காதுக்குள் செருகியவாறு:

''அப்பா இப்ப எனக்கு கல்யாணத்திற்கு அவரசமில்லை. இன்னும் கொஞ்சநாள் பொறுத்துச் செய்தால் என்னப்பா?''

இப்படிக் கோர்வையற்ற இழுவையில் வெட்கம் அதிகம் படாதவளாக... மாறாக தன்னுடய முல்லைப் பல்வரிசை முழுவதும் தெரியச் சிரித்தாள். சிரிப்போடும், சிந்தின வார்த்தையோட வெளிவாசல் தாழ்ப்பாளைப் பிடித்தபடி எத்தனித்து நின்றாள். சிவநாதனுக்கு வெப்பிசாரம் தேகத்தை நடுங்கப் பண்ணியது! இருந்தும் படிச்ச மனிசன் தாற்பரியத்தோடு மௌனமானார். சாந்தி படிகள் இறங்கும் சத்தம் பெலத்துக் கேட்டது. சிவநாதன் சிரத்தையுடன் யோசித்தார்.

''இவள் படிச்ச திமிராக நடக்கிறாளா? கல்யாணத்தால் பிரச்சனை தோன்றும் என்பதை ஆராய்கிறாளா? இல்லை... இல்லை... அவளுக்கென்று நினைவுகள், உணர்வுகள், திட்டங்கள், நடப்புகள், முடிவுகள் இருக்கக்கூடாதா?''

சிவநாதன் இப்படியும் மேல்நோக்கில் கிரகித்தார். சலித்துக் கொள்ளவில்லை. மகளின் போக்கு உயிர்த்து அதிர்ந்தன. தன் மனைவி, மகன் எல்லோருக்கும் தானே சாந்தியின் போக்குக்குச் சாக்குச் சொன்னார்.

வேலை முடிந்து வீட்டுக்குள்ளிட்ட சாந்தியின் மன உளைச்சல் அவளை வாட்டிக்கொண்டிருந்தன. தந்தை சிவநாதனிடம் அவள் முறித்துச் சொன்ன பதிலின் பின்னர் வீட்டில் உள்ளவர்கள் எல்லோரதும் வாய்கள் மூடிக்கொண்டன. அவளுக்கு அவர்களது மௌனம் மேலும் பயத்தையும், பதகளிப்பையும் கொடுத்தன. அன்பாதரவு அற்ற அநாதையைப் போலாகிவிட்ட தோரணையைத் தோற்றுவித்தன. இருந்தும் முகம் புதையப் படுக்கையில் கிடந்தவள் நிர்ப்பந்தமாகக் கண்களை மூடிக் கொண்டவள்... தேடிக்கொண்டாள் ஒரு முடிவை.

கல்யாணத்தின் மூலம் என்னுடைய வேலை கணவனை மகிழ்விப்பது தானா? இதுவாகயிருந்தால் இக்கல்யாணம் வேணாம். ''அப்ப எதுவாக இருக்கவேணும்?''

சாந்தியின் நினைவுகள் இவ்வாறு நீண்டு... உருண்டு ஓடியது. பெண்ணாகப் பட்டவளின் அழகையும் உடலையும் அனுபவிக்க விரும்புகிறவன் பெண்ணவளின் உணர்வுகளை உதாசீனப்படுத்த முற்படுகிறான். பெண்ணின் மௌனத்தைச் சோதித்துப் பார்க்கிறான். அவள் சீறினால் உரத்துக் குரல்கொடுத்தால் விட்டுவிலகிடத் துணிகிறான். சாந்தி விட்டுவிலகும் ஆண்மகனைத் தேடிப்போவாளா? விடைக்கு விபரம் தேவைதான். இருக்கட்டும் இந்த விபரீத யோசனையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது ஏன் முன்மொழிவான்?

சாந்திக்குத் திருமணம் முடிந்த நான்கு மாதங்களாகிவிட்டன. தாலி கட்டியவன் அழைப்பேற்று திருமண விழாக்கள், தனிமனித விழாக்கள், கோயில் குளமெனப் போய் வந்தாள். இவையாவும் நிர்ப்பந்தமென நியாயப்படுத்த வேண்டிய அவசரம் அவளுக்குத் தேவைப்படவில்லை. ஒருமுறை பிரான்ஸ் லூவர் மியுஸியத்திற்கு வலுக்கட்டாயமாக இந்திரனைக் கூட்டிக்கொண்டு போனாள். இந்திரன் அக்காட்சியகத்தைப் பார்க்கப் பட்டபாடு நெருப்பில் மிதித்தவனாட்டம் நின்றான். கடைக்கண் பார்வையில் சாந்தி மியூஸியத்தில் உள்ளவற்றைச் சுட்டிக் காட்டி விளங்காதவற்றை விளங்கப்படுத்தினாள். இந்திரன் தலையை நீட்டி நீட்டி ஆட்டி முகத்தைச் சுளிப்பதையும் அவதானித்தாள். மேலும் மேலும் அவன் முகபாவத்தைப் பார்த்துப் பொறுத்துக் கொண்டாள். இன்னும் கொஞ்சத் தூரம் போய் ஆவல்மிகுதியாக நின்றாள் சாந்தி. அவள் காணும் ஓவியம் உலகப் புகழ்பெற்ற 'pyramipdi' ஓவியம். அதன்முன்னம் அசையாது நின்றாள்.

இந்திரன் வேறு புறமாகப் பார்வையைத் திருப்பியபடி தன்போக்கில் நடந்தான்... சாந்தி, சாந்தி கொண்டாள். காலப்போக்கில் இந்திரனை ஒருவழிக்குக் கொண்டுவந்திடலாம் என்று திடமாகவும் தீர்மான மாகவும் இருந்தாள்.

இப்படியே நாட்கள் ஓடியது...

தேவையற்ற ஆடம்பரக் களியாட்டங்களுக்குப் போவதை நிறுத்திக் கொண்டாள். மாறாக கலைவிழாக்கள், இலக்கியச் சந்திப்புகள், இனம், மொழி, பற்றுச் சார்ந்ததும், எதிர்காலம் தேடும் தேடல் சார்ந்தவை களுக்குள் சங்கமிப்பது எனும் சங்கற்பம் பூண்டாள். இந்த முடிவின் புன்முறுவல் கண்களில் பளிச்சிட, மேனி சிலிர்த்திட... காலை எழுந்த நேரம் தொடங்கி நிமிடங்கள் நகர்ந்திட ஆரவாரப்பட்டுக் கொண்டு நின்றாள். இத்தகைய நீந்தலுக்குள்ளும் தான் படித்து முடிக்கவேண்டிய நாவலைப்பற்றிய சிந்திப்புடனும் இறும்பெய்தியவளாய் நின்றாள். இந்தவிதமான அமர்க்களத்திற்குள் தாழ்ப்பாளைத் திருகிக் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்ததும் வராததுமாக இந்திரன் வாசித்த நீட்டோலை சாந்தியின் மூளையில் தட்டி அதிரப்பண்ணியது.

''சாந்தி நாளைக்கு ஒரு சாமாத்தியச் சடங்கு. இரண்டு மணிக்கு அதை முடிச்சுக் கொண்டு திரும்ப இன்னொரு கல்யாணச் சடங்கு. இவற்றுக் கெல்லாம் கட்டாயம் போகவேணும். சாந்தி உமக்கும் சாறி எடுக்கணும். இப்பவே வெளிக்கிட்டால்தான் 'லாச்சப்பல்' கடைத்தெருவில ஏறி யிறங்கி வீட்டு வந்துசேர ஒன்பது மணி தட்டும்.''

இப்படியான வாசிப்பில் திமிறி இந்திரன் மூச்சை விடும்போது சாந்தியின் மூச்சு நின்றுவிடும் போலிருந்தது. அறிவிலும் குணத்திலும் இலக்கிய ஆர்வத்திலும் எவ்வளவு பெருமை கொண்டிருந்தாளோ அத்தனையும் எரிந்து கருகிவிடும் போலாகிவிட்டது. சிந்திப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிந்தாள், புகைந்தாள், ஆத்திரத்தால் சிந்திய வார்த்தையிலும் பெரிதான வேதனை தொனித்தது.

''என்னவும் இந்திரன்? இதுதான் பழக்கமாகிவிடும் போலிருக்கும். பட்டுப் புடவையும், நகை நட்டும்தானா நம்மட செல்வம்? மாற்றுத் திட்டங்களும் நடைமுறைத் தேவைகளும் சாத்தியப்படாதா? என்ன யோசனை உங்களுக்கு?''

இக்கேள்வியில் இந்திரன் பார்வையில் உள்ளூரப் பொருமல் தெறித்தன! ஆச்சரியத்தின் கோணலான நோக்கில் நின்றவனைப் பார்த்தபடி சாந்தி உறைந்த பனியின் வெண்மையான இதயம் படைத்தவள் மௌனத்தில் தேகம் நடுநடுங்க நின்றாள். இந்திரன் தனக்குள்ளாக முணுமுணுப்பதும் அவள் காதுக்குள் நுழைந்தது.

''என்னயிது? அதுவும் வேண்டியவங்கட சடங்கு சமாச்சாரங்களுக்குப் போகயில்லையானால் அவக முகத்தில் காறித் துப்புவீனம். கல்யாணத் திற்குப் போட்ட காசைத் தர வக்கத்தபயல்... இவன்ர முகத்தில் ஆற்றா முழிப்பினம்?''

இப்படியாகக் கடுப்புக்கொண்ட இந்திரன் சமூகத்தைப் பற்றி தனக்குள் பொருமினான்.

சாந்தியின் முகத்தில் பிரகாசம் சமூகத்தைச் சீர்திருத்த வேண்டிய கட்டாயக் கடமையுணர்வோடு மறுமலர்ச்சி மலர்வினை நோக்கிய போராட்டப் பரிமாணத்தோடு நிமிர்ந்தாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை.

இந்திரனோடு போகவேண்டிய இரண்டு சடங்குகளுக்கும் சாந்தி போகவில்லை.

மாறாக அவள் இலக்கிய விழாவுக்கும், புத்தக வெளியீட்டுக்கும் சமூகமளித்திருந்தாள். அதுமட்டுமல்லாது சிறந்ததோர் விமர்சனத்தையும் செய்திருந்தாள். இத்தகைய நிறைவான மகிழ்ச்சியுடன் வீட்டுக்கு வந்தாள். வந்தவளின் புளகாங்கிதத்தைப் பார்த்து நின்ற தகப்பன் சிவநாதன் தலையைக் கவிழ்ந்து உதடுகளைக் கடித்துக் கொண்டார். தாய் துயரத்தைப் பகிர்ந்து கொள்ளும் தோரணையில் கதிரையில் சாய்ந் திருந்தாள். அறைக்குள்ளிருந்து வெளிவந்த தமையன் பேசாமலிருக்கும் தாய், தந்தையரைக் கண்டு தானாகப் பேசியபடி சாந்தியின் கிட்டப் போனார்.

சாந்தியின் மூளை சுழண்டு கொண்டிருந்தன. வீசிய புயல் இந்திரன் விடயம் சம்பந்தப்பட்டதாகத்தான் இருக்கும் என்பதை சாந்தி புரிந்து கொண்டாள். இந்திரன் கட்டிய தாலியை ஒருமுறைக்கு இருமுறை குனிந்து குனிந்து பார்த்தாள். கோபம் கோபமாக வந்தது. முகத்தில் யாரோ ஓங்கி அறைவது போலிருந்தது. அறைவிழ அறைவிழ சிந்திப்புத் தீவிரமடைந்தது.

சாந்திக்குச் சிந்திப்பிலும், சிரிப்பும், அழுகையும்தான் வந்தது. யாரை நொந்து கொள்வது? அவளுக்குள் கேள்விக்கும் பதிலுக்கும் தேடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தேடலிலும் அமைதியான ஆத்திரம். நேசம் வேசம் போட்டு விட்டதே? பாசம் கிட்டப் போனார்.

''கல்யாணம் கட்டினால் அடங்கி, ஒடுங்கி வீட்டிற்குள் இரு. கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன். அவன்ர சொல் கேட்டுத்தான் நடக்கவேணும்.''

இப்படியாகக் கடுப்புக் கொள்வான் என்றுதான் சாந்தியும் மௌனத்தில் ஆழ்ந்து நின்றாள்.

இதற்கெல்லாம் மாறாகத் தாழ்ந்த குரலில் உறுதியும் உத்வேகமும் புலப்படும்படியான வார்த்தையை மூக்குக்குக் கீழிருந்த தடித்த மீசை துடிக்க இரண்டு வரிகளில் இறுக்கமாகச் சொல்லிவிட்டு தமையன் வெளியேறினான்.

''கல்யாணத்திற்குப் பிற்பாடு எதிர்கொள்ளும் பிரச்சனைகளில் சறுக்காது, சலிக்காது, அழாது உறுதியாக நிற்கவேணும்.''

சாந்தி மேலும் துணிவு கொண்டவளாக விறைத்துப்போய் தமையனின் வார்த்தையையும் வலிமையையும் எண்ணிப் பெருமைகொண்டு உசுப்பிவிட்ட உணர்ச்சியில் சிரித்து நின்றாள். ஆரம்பத்தில் அதட்டினான். இடையில் தடைகளை உடை என்றான். இப்போது முடிவும் வாழ்வும் உன்கையில் என்றான். இப்படியே தன்பால் ஈர்க்கப்படுபவர்களை இதமாக நோக்குகிறாள். தன்மீது நேசமாக இருந்த இந்திரன் ஏன் இப்போது நாசமாகிப் போனார்?

தாலி கட்டும்வரை பண்பாடு, மூத்தகுடிப் பெருமை என்று வாய் கிழியக் கத்தியவர் ஏன் இப்படியாக ஆச்சரியப்படும்படி, புண்படும்படி விட்டுவிட்டுப் போனார். இப்போது குற்றத்தை யார் தலைமேல் போடப் போறார்? தமிழ்ப் பெண் செய்யிற காரியமா? கணவன் சொல்மீறி நடக்கலாமா? அவர் கூப்பிட்ட சடங்குகளுக்குப் போகாமல் தன் விருப்பத்திற்கு இலக்கிய விழாவிற்குப் போய்வந்தது தப்பல்லவா? இது எங்குபோய் முடியப் போகுது? இப்படியாகப்பட்டவைகளோடு பலதையும் சிந்திக்கிறாள்.

திருமணமாகிய பின்னர் இந்திரனோடு கதைச்சவை யாவும் தித்திப்பாகத்தான் இருந்தனவா என்பதையும் சிந்திக்கிறாள். இந்திரனால் சிந்திக்க முடியவில்லை. இருந்தும் தட்டித் தவறிடும் தவறுக்காகக் கூடச் சாந்தி முகம் சுளிக்கவில்லை. அவள்மீது எப்படித் தவறைக் கண்டுபிடிப்பான்?

கழுத்தில் தொங்கும் தாலி அவளுக்குப் பாரமாகி விட்டது. இந்திரன் இதை உணராமல் இருப்பானா? உன்னை விட்டுப் பிரிவது என் சாவிலும் இல்லை என்று சாட்சிக்குத் தாலியைக் கட்டிக் கொஞ்சியவனை இப்போது சாந்தி நினைக்கிறாள். அவளுக்கு பயமாகவும், வெட்க மாகவும் கண்விரித்துப் பார்க்க முடியாமல் இருந்தன. சீக்கிரத்தில் தன் இதயத்தைக் கனப்படுத்தி, ரணப்படுத்திப் போட்டானே என்பதைத் தான் வேகமாகச் சிந்தித்தாள். இந்திரன் சாந்தியை அகலிகை என்றா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணினான்? தொட்டுப் பார்த்துவிட்டுப் போய்விட? இப்படிப் பலவாறு சாந்தியின் அகப்புலம்பல் ஆவேசம் கொண்டன.

இப்படியே நாட்கள் பலவாக ஓடியது... பெண்ணைப் பெத்தேன் மண்ணைக் கவ்வுவதற்கா? அல்ல மகள் கண்களில் கண்ணீரைக் காணக் கூடாது. கண்டவர்கள் வாய்க்கு அவலாக இருக்கக் கூடாது. அறமெனப் பட்ட இல்வாழ்க்கையில் இன்பம் சுரக்க வேண்டும். இல்லறத்தின் நல்லற வாழ்வை தான் வாழ்ந்த காரணத்தாலும் பெருமையாலும் சாந்தியின் நல்ல தந்தை சிவநாதன் இந்திரனை இரண்டு மூன்று முறை தேடிப்போய் சந்தித்துவிட்டு வாடிப்போய் வந்தார். சிவநாதன் மகள் சாந்தியுடன் உரையாடிய வார்த்தைகள் கோர்வையற்றிருந்தன. இருந்தும் தந்தை யாரும் சற்று ஆத்திரம் உற்றார்.

''அவளுக்கென்று நினைவுகள், கனவுகள், உணர்வுகள், முடிவுகள் இருக்கக்கூடாது என்றுதான் உவன் இந்திரன் நினைச்சிருக்கிறான்?''

நாம் வாழும் வெள்ளையன் தேசத்தைப் பற்றிய மேல்நோக்கப் பார்வை இன்னமும் இந்திரனிடம் குடிகொள்ளவில்லை. இதன் தாக்கம் சாந்தியைப் பாதித்தன என்பதும் உண்மையே! எதற்கு இந்திரன் மௌனத்தின் யோசிப்பில் இப்படியொரு யாசிப்பை கேவலமாக வீசினான்? தமிழன் கலாச்சாரக் கண்மறைப்பு என்றும் சொல்ல முடியாதிருந்தது. வெறும் நேசத்தைக் காட்டி வேசத்தையும் ஊடலையும் கூட்டி புணர்ச்சிக்கு வந்தவனாக இருப்பானா?

சாந்தி இப்போது என்ன தவறைச் செய்துவிட்டாள்? இத்தாலிய நாட்டைச் சேர்ந்த உலகப் பெரும் அழகியான நடிகை சோபியா லோறன்ஸ் முத்தங்களை விற்று இஸ்ராயேல் நாட்டுக்குப் பணம் சேகரித்துக் கொடுத்தாள். யேர்மனியப் பெண் பிள்ளைகள் முத்தங்களை விற்று தேசத்திற்குப் பணம் திரட்டினார்கள். யப்பானியப் பெண்கள் பலர் தேசப் பாதுகாப்பிற்காக வேசிகளானார்கள்.

இவையாவும் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு நடந்தவைகள்? இன்றைய யுகத்தில் எத்தனை மாற்று வேகம் ஏற்பட்டுள்ளது. ஆண், பெண் ரீதியாக இதுபோல் நடந்தால் மூத்தகுடிக் கலாச்சாரம் சகித்துக் கொள்ளுமா? இந்தமட்டில் சாந்தி இப்போது என்னத்தைப் புடுங்கிப் பண்ணிவிட்டாள்?

அவளை விட்டுப் போனதால் இந்திரனைத் தேடிப் போவாளா?

''இல்லை''

இந்திரன் விலகிப்போனதால் விம்மி விம்மி அழுவாளா?

''இல்லை''

பெண்மைக்குரிய மென்மையில்லை என்று வன்மம் சொல்வார்களா?

''சீ.. தூ! சபைக்குதவாத வாதம்''

தாய், தந்தை, தமையன் கலங்கிப் போனார்கள். கவலையுற்றி ருந்தார்கள். இதன் தாக்கம் சாந்தியை அவளை அறியாமலே பாதித்தன பார்வைகளையும் மௌனத்தையும் நன்கு யோசிக்கிறாள்; உணர்கிறாள்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூரத் துடிக்கிறாள். எதுவானாலும் சிரத்தையோடு சிந்திக்கிறாள். சாந்தி இந்திரனைத் தேடிப் போவாள் என்பது மட்டும் நடக்கக் கூடியதாகக் கூடிவரப்போவதில்லை. ஏமாற்றமும், ஏமாற்றுக்குரிய எத்தனுக்குரிய உயிரற்ற உணர்வும் மேலும் இந்திரனிடம் தொங்கி நிற்பதைச் சாந்தி இம்மியளவும் விரும்பமாட்டாள். தாம்பத்திய வாழ்வின் வாழ்வை இருவரும் பங்குபோடுவது பல்லாண்டு வாழ்க்கைக்குரிய அத்திவாரப் பலத்தைப் பலப்படுத்தும் மேலோங்கிய பெண்மைக்குரியவளாக, கவிதைக்குரியவளாகச் சாந்தி விழிப்புடன் இருந்தாள்.

''என்னுடைய வேலை கணவனை மகிழ்விப்பதுதானா?''

இதை உணராத இந்திரன் 'அகலிகை' ஆகட்டும் என்று நினைந்து போனானோ?

சாந்தியோடு வாழ்ந்த மாதத்தையும், வாழப்போற காலத்தையும் வெகு சீக்கிரத்தில் இந்திரன் வெளிப்படுத்தி விட்டான். இனி வாழ்வது யாருக்காக? தேசத்திற்காகவா? நேசத்தின் குரல்வளையை நெருக்குபவர் களுக்காகவா?

இந்தயுலகில் வேசமான நேசம் சாந்திக்குத் தேவையில்லை. அவளுக்குள் ஆழமான தெளிவு அலையற்று ஆர்ப்பரிக்காமல் கிடக் கின்றது. இனி மறக்கப்பட்டு மறுக்கப்படுபவளாக வாழ அவளுக்குப் பிடிக்கவில்லை. சாந்தியின் முகத்தின் பிரதிபலிப்பு

முகம் சிவக்க ஆரம்பித்தது
முடிவு இறுகப் பற்றிக்கொண்டன
இந்திரனை அகமகிழ்வோடு ஏற்றவள்
விட்டுப்போனபின்பு தேடிப்போக....
''..............................''

●

ஞாயிறு தினக்குரல்
12.06.2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைச்சாலை

ரெஸ்ரோறன் வாசல் கண்ணாடிக் கதவைத் தள்ளி உள்ளிட்டதும் முதலாளி மிசல் என்னைக் கடுமையாக ஏசிவிட்டான். என் சர்வாங்கம் அனைத்தும் நடுங்கியது. குசினியைவிட்டு வெளியில் வந்து எட்டிப் பார்த்த என் நண்பர்கள் இருவரது முகத்திலும் முறுவல் மறைந்து கடுகடுப்புத் தோன்றுவதையும் நான் அவதானித்துக் கொண்டேன். எட்டு வருடகால வேலை அனுபவத்தில் அப்படியொன்றும் பாரதூரமான குற்றத்தை நான் செய்துவிடவில்லை என்பது மனசுக்குத்தான் வெளிச்சம். வேலை நேரத்திலிருந்து அரைமணி நேரம் தாமதமாக வந்ததிற்கான காரணத்தை மிசலிடம் நியாயப்படுத்திய போதும் அவன் ஒத்துக்க மறுப்பதால் பயம், பதட்டம் பற்றிக் கொண்டது.

''மிசு இந்திரன் பலமுறை இத்தவறை நீ செய்துள்ளாய். இன்றைக்கு இத்தவறை மன்னிக்க மாட்டேன்.'' இப்படி, என்முகம் பாராது உறுமிவிட்டு இறுமாப்போடு நெஞ்சு இறுகியபின் கைக்கட்டோடு அங்கும் இங்குமாக உலவிக் கொண்டிருந்தான். நான் மதுபானங்கள் மேல்தட்டில் அடுக்கப்பட்டிருந்த கவுண்டர் மூலையில் ஒதுங்கியபடி அவன் பதிலுக்காகக் கண்கலங்க வெட்கமுற்று ஏறித்தாழும் நெஞ்சுடன் வெறிச்சோடிப்போன பார்வையுடன் தலை சரிந்து நின்றேன்.

திடுமென குசினியிலிருந்து வந்ததும் வராததுமாக சூரியன் பத்ரோன் மிசலிடம் கெஞ்சலாகக் கதைப்பது எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. நன்கு படித்த பட்டதாரி இப்படிக் கையேந்துவதைக் காண, என் இதயம் கவலையால் கனத்தது. எதெற்கெடுத்தாலும் ரொம்பவும் பனிந்துபோற நல்ல ஆத்மா, கெஞ்சுவதை என்னால் பொறுக்க முடியாதிருந்தது. என்ன வாழ்க்கை? அந்த நிலையைச் சிந்திக்க முடியாத கோபம். ரோசம்வேறு மூக்கு நுனியில். காலைப் பத்துமணி தொடங்கி, இரவு இரண்டுமணி வரை சிறைச்சாலைக்குள் அடைபட்ட கைதிகளாக அடங்கி, ஒடுங்கி இயந்திரங்களைவிட மோசமாக இயங்குகின்றோம். எங்கள்மீது தயவு, தாட்சண்யம் நன்றியில்லாது உழைப்பின் களைப்பும் தெரியாது மனிதாபி மானமற்ற மரமண்டையாக இருக்கிறான். இவர்கள் போன்றோரால் தானே தொழிலாளர்களின் செங்கொடிகள் உயரப் பறந்தன. பறந்தும் என்ன? இவன் போன்ற முதலாளிகள் கண்கள் திறந்தனவா? ஏறிய தொணியில் கோபாவேசத்துடன்...

''சூரியன் என்ன நீங்கள்?'' என்று கத்தினேன்.

என்னைப் பார்க்கத் திரும்பியவர் பேசினார் ''சும்மா நில்லும் இந்திரன்.'' என்று அன்போடு அதட்டினார்.

நான் திரும்பவும் முறுகினேன். ''சூரியன் நீங்க உள்ளபோய் உங்க வேலையைப் பாருங்க.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இல்லையும் இந்திரன். இவன் திருகுதாளம் போடப் பார்க்கிறான். உன்னை ஒருகை பார்ப்பதெனக் கங்கணம் கட்டி நிற்கிறான். நீர் பேசாமல் நில்லும். நான் கதைக்கிறேன்.''

''பேசாமல் நின்றால் நம்ம தலையில் ஏறி மிதிப்பினம் சூரியன்.''

எங்கட கதையின் போக்கு புரியாதவன் இருவர் இடைவெளிக்குள்ளும் நின்று திரும்பித் திரும்பி பூனைக் கண்கள் விழுங்கிய பார்வையை வீசிவிட்டு திமிரோடு சீண்டினான்.

''என்ன? என்ன? டேய்! மிசு இப்ப என்ன கதைக்கிறா...?''

நாங்க தமிழில் கதைப்பது விளங்காமல் மிசல் பிரெஞ்சில் உடம்பை ஆட்டிக் கத்தினான். அவனது மனத்தாங்கல் முகத்தில் தேங்கிக் கிடந்தது. நான் திரும்பவும் சிறிதும், பெரிதுமாகச் சிந்தித்துக் காரணங்களை மிசலுக்குக் கூறினேன். அவன் காதில் எடுக்கவே இல்லை. விறும னாட்டம் நடந்து கவுண்டர் மேசையோடு முட்டியிருந்த நாற்காலியை இழுத்து அமர்ந்து கொண்டான். பொறுமையுற்ற சூரியன், ''இந்திரன் இங்க பாரும்! இவன் இண்டைக்கு என்னமோ போக்கிரித் தனமான போக்கில பொங்கிப் போய் இருக்கிறான். சில மாதங்களாக சாப்பிட வாற சனம் குறைஞ்சுட்டும். ஆள்ர முகத்திலும் முந்தின வெளுப்பும், கறுத்துப் போச்சும், உமக்கு தெரிந்ததுதானே? நீரும் அவன்ர குரைச்சலுக்கு எதிர்க் குரைச்சல் குரைத்துப் பிரயோசனமில்லைப் பாரும். அவனட்ட மன்னிப்புக் கேட்டுட்டு குசினிக்க வாரும். பின்னாடிப் பிரச்சனையை வீட்ட போயிருந்து கதைப்போம்'' என்று கூறி முடிக்குமுன்னம், மிசல் கதிரையை பின்னடிக்கத் தள்ளி விட்டெழுந்தவன் சூரியனை உள்ள போகும்படி எச்சரித்தான். அவரும் மறுப்பேதும் சொல்ல முடியாமல் உதடுகளை இறுக மூடிக்கொண்டு நடந்தார். அவர் பின்னால் திமிரோடு மிசலும் குசினிக்குள்ளிட்டான்.

இந்த நேரம் சூரியன் கூறிய வார்த்தை ''இப்போதைக்குச் சாத்தியப் படக்கூடியதே'' என்னும் கிரகிப்போடு தலையை நிமிர்த்தினேன்.

திடீரென குசினிக்குள்ளிருந்து மிசலின் குரல் பிரெஞ்சில் பெலத்து வீசியது. ''இயந்திரங்கள் சரியாக இயங்காவிட்டால் அதன் உறுப்புகளை கழற்றி மாற்றும் பழக்கம் எங்களிடம் இல்லை. அந்த இயங்கா இயந்திரத்தை குப்பையில் எறிந்துவிட்டு புதியதை வாங்கிப்போடும் பழக்கம்தான் எங்கள் வழக்கம். மிசு சூரியன், மிசு சந்திரன். நீங்கள் இருவரும் இதை நன்கு புரிந்துக் கொள்ள வேண்டும்.''

மிசல் இப்படிக் கூறியதை உள்வாங்கி எரிச்சலடைந்த சந்திரன் குரல் கடினமான பதிலடியாகத் தொனித்ததும் என் காதுக்குள் நுழைந்தது. மேலும் தெம்புடன் குஷியானேன். ''இவன் மிசல் குசினிய சிறைச்சாலை ஆக்கியிற்றான்'' என்று நான் முணுமுணுத்தபோது வெளிவந்த மிசலின் பார்வையில் கடும் கண்டனம் தென்பட்டது. இருந்தும் அவனது வார்த்தைகள் வசியம் வழுவிய அதட்டலோடு என் முகத்தில் விழுந்தது.

''மிசு இந்திரன்! இதுதான் கடைசியும் முதலும், ''அத்தோசியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொருமுறை இப்படி நேரம் தவறி நடந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன்! ஓக்கே... உள்ள போய் வேலையைப் பாரு'' பிரஞ்சில் வெடித்த சொற்கள் முடியும்முன் நான் ''மெர்சி'' சொல்விட்டு குசினிக்குள்ளிட்டேன். என்னைக் கண்டதும் சந்திரன் நாய்க்குட்டிபோல் துள்ளிக்குதித்து வெங்காய, உருளைக் கிழங்கு மூட்டைமேல் ஏறிக் குந்தியிருந்து செங்கொடி ஏந்திய பாடலுக்கு ராகம் பிசகாது பாடினான்...

''மேதின ஊர்வலம் போகுதடா போகுதடா
மேதினில் தோழர்கள் தோழமை நீளுதடா
முதலாளி மிசல் கண்முழி பிதுங்குதடா
முண்டினால் தொழிலாளி கையோங்குமடா!''

சந்திரனின் பாடலைக் கேட்டு விளங்காத வில்லங்கத்தோடு சிரிச்சபடி முத்தமிழர் கிட்டவந்தான். ''செப்குசினியர்'' எங்களைப் பார்த்து மேலும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தபடியே மிசலின் கள்ளத்தனத்தை கிசு கிசுத்தான்... குற்றங்களை சோடணை செய்வதில் இவன் போல் எங்கயினத்தில் யாரையும் காண்பது அரிது! உங்கட உழைப்பில் கொழுத்துத் திரிந்தவனுக்கு இப்ப சில மாதங்களாக ''கிளையின்ற்'' குறைஞ்சதும் வேலையாட்களைக் குறைக்கும் குள்ளநரிப் புத்தியப் பாவிக்கிறான். உங்களுக்கு முன்னம் வேலை பார்த்த அல்ஜீரியனும், ஆபிரிக்கனும் இயந்திரமாக உழைத்துக் கொடுத்தவங்கள். சம்பளம் கூட்டித் தரும்படி கேட்டதைச் சாட்டாக வைத்து பலவித தில்லு முல்லுகளைப் போட்டு சோடணை பண்ணி வேலையைவிட்டு நிற்பாட்டியிற்றான்! இப்ப அவன் கத்திக் கூரில் நீங்க நின்று ஆடுறீங்க. எப்ப ஏத்துறானோ! அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம்.''

என்று ஆறுதலான வார்த்தைகளால் அவன் கண்கள் நீதிமானாக நியாயப்படுத்தி நேர்குத்தி நின்றன. இந்தநேரம் கேள்வி கேட்பதுபோல் கிறிஸ்தோப் அருகேபோய் நின்ற சூரியன் கேட்டார்.

''உங்களுக்கும் இந்தக் கெதிதான் வருமா?''

கிறிஸ்தோப் அப்படியே அசைவற்று நின்றான்! மீண்டும் கூறத் தலைப்பட்டான்.

''நான் என்ன அன்னியனா? இந்தமண் பிரஜை. என்னோட சேட்டைவிட முடியுமா?'' திமிறிலும் திகைப்பிருந்தது. சூரியன் ஆழச் சிந்தித்துப் பேசினார்.

''ஏன் இந்தமாதிரி நடத்துறீங்க? ஏன் இந்த ஏற்றத் தாழ்வு? நீங்கள் மனிதர்கள். நாங்கள் மிருகங்களா?'' இப்படிக் கேட்டபோது கிறிஸ்தோப்பரின் மஞ்சல் முகத்தில் ஓடிய பச்சை ரேகைகள் குபு குபுவெனப் பாய்ந்தது. மனிதாபிமானியானவன் அதிகமாகச் சிந்திக்கத் தொடங்கினான்.

பக்கத்தில் நின்ற சூரியன் பீங்கான், கோப்பைகளைத் துடைத்து அடுக்கும் சத்தம் கேட்டது. இசைஞன் சந்திரன் சோகப் பாடலை இசைச்சபடி உருளைக் கிழங்குத் தோலைச் சீவிக்கொண்டிருந்தான். என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கு வேலையில் விரைந்து முனையும் வேளை. குசினிக்குள்ளிட்ட மிசலைக் கண்டதும் புன்முறுவலிக்கப் பயந்து நின்றோம். மிசல் குறிப்பாக என்னைப் பத்திரம் காட்டியவாறு சொன்னான்.

''மிசு இந்திரன்! சலாட் போடுவதைக் கவனமாகப் போடவேண்டும்! இண்டைக்கு வாற கிளியான் நெடுகவும் வரவேணும். என்ன? உம்... உம் அத்தோசியம் இந்திரன், என்ன?''

உறுமியவன் கதவை அடிபடச் சாத்திவிட்டுப் போனான். கிறிஸ்தோப்பர் புலுட்டுச் சிரிப்பை உதிர்த்தபடி ''போட்டுட்டான் மிசு இந்திரன் முதல் குண்டை..'' என்றான் பிரஞ்சில்

''காட்டியிட்டானும் சந்திரன் நரிக் குணத்தை.'' என்றார் சூரியன் தமிழில்

''நம்மள என்ன ஏமாந்த சோனகிரியன் என்றோ நினைச்சுட்டான்? நீர் பயப்படாதே இந்திரன் நடப்பது நடக்கட்டும் பிறகு பார்ப்போம்.'' என்று தைரியப்படுத்தினான் சந்திரன்.

இப்படியே சிறைக்குள் இயந்திரமாய் இயங்கும்போது மூளைக்குள் பலவித யோசனைகள் தட்டித் தட்டி மின்னலடித்தன. என்ன வாழ்க்கை? ஏனிந்த அவலம்?

திருமணப் பந்தத்தில் ஒட்டியவர்கள் நாங்கள் இருவருமே. சந்திரன் இளந்தாரியாகவே இன்னமும் வாழ்கிறான். சூரியனின் மனைவி, பிள்ளைகள் வன்னியில் வாடி வதங்கித் தப்பி கொழும்பு வந்து சேர்ந்துள்ளார்கள். அவர்கள் பிரான்சுக்கு வருவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. என் மனைவி, பிள்ளைகள், அம்மா, அப்பா கொழும்பில்தான் முழிபிதுங்க நடுங்கியபடி அரை உசிரோடு காலம் கடத்துகின்றார்கள். நாட்டில் நாளும் பொழுதும் அனர்த்தங்கள், குண்டுத் தாக்குதல், செல் வெட்டுக்கள், கற்பழிப்புக்கள், அகதியாகியும் அவலமாக கையேந்திப் பிச்சை கேட்கவும் வழியற்று வாடிவதங்கி முகமிழந்து முறுவழிந்து தவிக்கின்றார்கள். புகலிடத்து வாழ்விலும் இருந்த உடம்பும் தெம்பும் இளைச்சுப்போச்சு! சுல்லியாகச் சுழன்று சிறைவாழ்வில் இயந்திரமாகி நிற்கின்றோம். என் மனைவி, பிள்ளைகள் மனக்கண்முன் தோன்றித் தோன்றி மண்டையைத் தட்டித் தட்டி அதைக்கப் பண்ணிக் கொண்டிருந்தனர். ஏழாண்டுகளில் எத்தனைக் கனவுகள்? மனைவியோடு மனம்மகிழ இணையும் ஏக்கத் தவிப்புகள்! பாலியல் ரீதியின விரகதாபமாகப் பல இரவுகள் கடந்துபோனது. பிள்ளைகள், பெற்றவர், சகோதரர்கள் அன்பிற்கு ஏங்கிய மூச்சோடு மரண பயம் வீசியது. இந்த நேரம் என் முதுகை உரிமையோடு தட்டினார் சூரியன். ''என்னவும் இந்திரன் அல்ஜீரியன், ஆப்பிரிக்கனுக்கு நேர்ந்த கதி நமக்கும் நேர்ந்திடும் என்ற கவலை தட்டிற்றோ? எழுந்து வாரும் வெளிய போவோம்.''

வீதிக்கு விரைந்து வந்தோம். பனிமலர்கள் தூவிக் கொண்டிருந்தது. கவலைகளால் உஷ்ணம் ஏறிய உடம்பை குளிர் தொட்டுப்பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சியது. கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். நடுச்சாமம் ஒன்றைகால் மணியாகியிருந்தது. ''கடைசி மெற்றோவைப் பிடிப்பது என்பது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதையாகத்தான் முடியும்'' என்றான் சூரியன். எதற்கும் மெற்றோ வாசல்வரை சென்று பார்ப்போம் என்று சுண்டினான் சந்திரன். மூவரும் பாதாள ரயில் நிலையம் ஏகினோம். எனக்கு மனைவி, பிள்ளைகளோடு போன் பண்ணிக் கதைக்க வேணும் போல் மனது துருதுருத்தது. இதற்கிடையில் எங்கள நிற்கவிட்டுட்டு ஓடிப்போன சூரியன் அல்ஜீரியன் கடைக்குள்ளிட்டதும் திரும்ப வெளிவரும்போது கையில் ஒரு பை தொங்க ஆத்துப் பறந்து ஓடிவந்தார். எங்களுடன் ஒட்டியதும் என்னமோ நியாயம் பிளந்தார். ''டாக்ஸி பிடிச்சுப் போவமோ?'' என்று அமைதியாகச் சொன்னார். எங்களைவிட வயதுக்கு மூத்தவரும் படிச்சவருமான சூரியரின் சொல்லை அதிகம் நாங்கள் தட்டுவதில்லை. டாக்ஸிக்குள் மூவரும் அசதியாகத் தூங்கிக் கொண்டிருந்தோம்.

வாரங்கள் இரண்டு மிசலின் கெடுபிடியோடு கடந்து சென்றது. ஞாயிறுநாள் ஓய்வு முடிந்து திங்கட்கிழமை காலை ஒன்பதரைக்கு சிறைச்சாலைக்குள் அடைபட நானும், சந்திரனும் ஆயத்தமாகி நின்றோம். சூரியன் படுத்தபடுக்கையில் கிடப்பதைக் கண்டு சந்திரனுக்கு கோபம் பத்திக் கொண்டது. என் காதுகளில் சூரியன் அனுங்கும் சத்தம் கேட்டது.

தேநீர் தயார்படுத்திக் கொண்டு நின்ற சந்திரன் என்னுடைய அவசரம் புரிந்தவனாக வீறுகொண்டு கத்தினான். ''சூரியன் ஏன் இன்னமும் எழும்பாமல் இருக்கிறீங்க? வேலைய விட்டுடற நோக்கமா? பிள்ளை குட்டிகள் வாற நேரத்தில எழும்புங்க சூரியன்.''

சூரியனின் அவயங்கள் பெலப்பெடுத்தது. தேநீர்க் குவளையோடு கிட்டப்போன சந்திரன் போர்வையை விலக்கிக் குனிந்து பார்த்தான். ஒருகணம் அதிர்ச்சியில் மூச்சடங்கி நின்றான்! சூரியன் கிடந்த கிடையும், மூக்கு ஓட்டையால் வழிந்த இரத்தச் சொட்டும், கண்கள் முட்டிய கண்ணீரும் ஜன்னி கண்ட காச்சல் சூடும் பேரதிர்ச்சியைத் தந்தது. ஆவேசம் கொண்ட பயத்துடன் தேநீர்க் குவளையை மேசைமீது எறிந்து விட்டு சந்திரன் கைகள் தொலைபேசியோடு தடுமாறித் தவித்துக் கொண்டிருந்தது. நான் கண்ணீர்விட்ட சோகத்துடன் அவரது மூக்கையும், கண்களையும் துடைத்துப் பதறிக் கொண்டிருந்தேன். சிறிதுநேரம் வீடு மயான அமைதியில். இரைந்து கொண்டு வந்த வாகனத்தில் சூரியன் நீட்டி நிமிர்த்தி வளர்த்தப்பட்டுப் போய்க் கொண்டிருந்தார். நாங்கள் இருவரும் டாக்ஸியில் பின்தொடர்ந்து ''பாரிஸ் கார் த நோர்டு'' மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் விசிற்றசுக்காகப் பிரிக்கப்பட்ட இடத்தில் நின்று தவித்தோம். சூரியனின் அறையிலிருந்து வெளிவரும் டாக்டர்ஸ், தாதிகளிடம் கெஞ்சும் பாவணையில் விசாரித்து துன்பப்பட்டோம். புகலிடத்துச் சீவியத்தில் சீரழிந்தது இனமா? பணமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமா? சுமையா? அவலமா? என்பதைச் சிந்திக்க நேரமேது? இப்போது மரணபயம் அழுந்த சந்திரனைப் பார்த்துக் கூறினேன்.

''இந்நாள் என்னவும் சந்திரன்? இரவு முழுவதும் அவதிப்பட்டிருக்கும் நம்மள எழுப்பி ஒரு வார்த்தை பேசாமல் கிடைந்திருக்கே! மனைவி பிள்ளைகள் வாற நேரத்தில் என்னமும் இசக்குப்பிசகா நடந்திடாதா சந்திரன்?'' என்றேன் என்னைத் தைரியப்படுத்த.

''பயப்படாதே இந்திரன்! சூரியனுக்கு ஒன்றுமாகியிடாது. நல்ல மனிசன் நலம்பெற்றுவருவார்'' இப்ப சூரியற்ற பயத்தவிட, பத்தோரன் மிசல் குரங்கனின் பயமல்லவே சதிரத்தைப் போட்டு உலுப்புது'' இந்தநேரம் சூரியற்ற அறைக்குள்ளிருந்து வெளிவந்த டாக்டரிடம் நாக்குத் தெறிக்க ஓடிப்போய்... மேல் மூச்சு அவர் முகத்தில் வீச நின்று விசாரித்தோம். டாக்டரும் தனது மனத் துணிவையும், பேச்சுச் சாதுரியத்தையும் இழக்காது பதில் சொன்னார்.

''பயப்பட வேண்டாம் இன்றொருநாள் கழியும்வரை.''

என்னை இடைமறித்து முந்திக் கொண்டவன் கேட்டான்

''நாங்க அப்ப யோசிக்காமல் வேலைக்குப் போய்வரலாமா டாக்டர்?''

''ஓக்கே. ஓக்கே! அது உங்க இஷ்டம்.'' என்று கூறியது பாதி கூறாமல் விட்டது மீதியோடு நடந்து போய்க்கொண்டிருந்த டாக்டரை இமை வெட்டாது நேர்குத்தப் பார்த்துவிட்டுத் திரும்பிய சந்திரன்.

''இந்த டாக்டர்மார் இப்படித்தான் சொல்லுவாங்க என்னமும் நடந்த பிறகு கையை விரிப்பாங்க'' என்று சந்திரன் சொல்லும்போது கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். பிற்பகல் இரண்டு மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது. இரவு வேலை நேரத்துக்குத்தான் போவது சரிப்பட்டு வரும். மூன்றுபேரும் இல்லாத நிலையில் குசினி என்ன பாடுபட்டிருக்கும்? பத்தோரன் மிசலின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிச்சிருக்கும். முன்கூட்டியே சந்திரன் தொலைபேசியில் தொல்லை நிறைந்த சிலுவைப் பாதையை களிகூர்ந்தருள வேணும் என்று அறிவித்திருந்த தெம்பில் தொங்கியபடி ரெஸ்ரோறன் போய் வேலை முடித்து இரவு நடுச்சாமம் மாடிப் படிகள் ஏறி வீட்டிற்குள்ளிட்டோம். சூரியன் படுத்திருந்த கட்டிலில் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி அசதியிலும் தூக்கம் கண்களைத் தழுவா நெஞ்சத் துடிப்பிலும் இருந்தோம். அந்த நடுநிசியில் சூரியனின், சொந்தங்கள் பந்தங்கள், நண்பர்கள் சகலருக்கும் தொலைபேசி கதறிக்கொண்டிருந்தது. எங்கள் நம்பர் தொலைபேசிக்கு வரும் தொடர்புகள் கட்... கட். தொலைபேசி அறிவிப்பு முடிந்ததும் சந்திரன் சோகமயமான சங்கீத முணுமுணுப்புடன் சிகரட் புகையை ஊதித் தள்ளினான். நேரமும் விடிகாலை ஐந்து மணியாகிவிட்டது. நித்திரையும் இருவர் கண்களிலும் பிச்சைகேட்டது. இந்த அசதிக்கு வெறும் தேத்தண்ணீர் வைத்துக் குடித்தால் தெம்பாக இருக்கும். எழுந்துபோய் தேநீர்ச் சட்டியை உரைஞ்சிக் கழுவினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளை தொலைபேசி மணிச்சத்தத்தில் திடுக்கிட்டெழுந்த சந்திரன் ரிசீவரை எடுத்துக் கன்னத்தோடு பொருத்தினான்.

''ஹலோ''

''வீய்... ம்... ம்...'' முகபாவம் சோகரேகைகளால் சுருங்கிக் கொண்டே வந்ததை நானும் அவதானித்துத் துடிச்சுப்போனேன்.

''வீய் டொக்டர்! துஸ்வித்தாய் வாறோம்.''

ரிசீவரை அடிச்சு வைத்ததும் பதகளிப்போடு ''இந்திரன் கெதியா வா இறங்குவோம். சூரியன் நம்மோட கதைக்க வேணும் என்று துடியாய்த் துடிக்கிறாராம்''

என் மூச்சு ஓட்டைகள் ஒரு செக்கண்ட் அடைபட்டுப் போனது. படிகள் இறங்கும்போது சதிரம் தள்ளாடி விழுந்திடும் நிலை. சந்திரனின் பரிதாபப் பாச்சலும் பதகளிப்பும்! டாக்ஸிக்குள் யார் யாருக்கு ஆறுதல் சொல்வது? டாக்ஸி அவசரச் சிகிச்சைப் பிரிவில் தரித்து நின்றது. மரண வாடைவீச ஓட்டமும் நடையுமாக டாக்டர் அறைக்குள்ளிட்டோம். எங்கள் தவிப்புணர்ந்த டாக்டரின் வாய்ச் சொண்டுகள் மெதுமெதுவாகத் திறந்தது.

''சூரியன் மறைந்து விட்டான்,''

''......''

''இவருக்கிருந்த நோய்கள் சாதாரணமாக எதிர்பார்க்கக் கூடியதைக் காட்டிலும் விரைவாகவே முற்றியது. தன்னைத்தானே அசுவாசப்படுத்தி பிறர் அறியாமலே காலம் கடத்தி வந்துள்ளார். கடின உழைப்பும், இரவுநேர முழிப்பும், அளவுக்கதிகமான யோசனைகளும் காலநிலை மாற்றத்தால் ஒட்டிய ஜன்னிக் காச்சலும் சூரியனை மறைத்துவிட்டது'' என்று டாக்டர்''சேர்ட்டிபிக்கட்'' வழங்கினார்.

இடி, மின்னல் அதிரோடு இரண்டு சோடிக் கண்களும் மழையைப் பொழிந்தன. சந்திரனும், நானும் சிறு பிள்ளைபோல் விம்மி விம்மி அழுது குழறினோம். அந்த நேரம் எங்களைத் தேற்றுவார் யாரும் இல்லை. சொற்ப நேரத்தில் மருத்துவமனை அயலவர்கள், நண்பர்கள் சொந்தங்களால் கட்டுக்கடங்காமல் அல்லோகல்லோலப்பட்டது. அழு குரல்களாலும், ஆங்காங்கு கூட்டம் கூடிப் பேசுபவரின் காரணகாரியங் களாலும் சூரியன் மறைவு ஈடுகட்ட முடியாத இழப்பாகப்பட்டது.

இப்படியே இரண்டு நாட்கள் கழிந்ததும் சூரியனின் இறுதிக் கிரிகை புதன் கிழமை காலை பத்துமணி என்ற அறிவித்தல் துண்டுப் பிரசுரங்கள் பாரிஸ் நகர் எங்கும் பறந்து சோகமயமான காற்றை வீசியது.

மருத்துவமனையில் அயல்பெண்கள், சகோதரர்கள், நண்பர்களின் அழுகுரல்கள், இழுபறிகளுக்கிடையே பிரேதப் பெட்டி மூடப்பட்டது. சந்திரன் என்னைப் பிடிச்சு உலுப்பியபடி உயிர் மூச்சிழுத்து கத்திய கடைசி ஓலம் உலகெங்கும் எதிரொலித்தது; என் நெஞ்சை இரண்டாகப் பிளந்தது. சகோதரப் பெண்ணொருத்தி ராகம் இழுத்து முகாரி பாடினாள். ''தாயின் மடியில் மடிந்திருந்தால் உன் பிணத்தைச் சுற்றி எத்தனையாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழும் ஓசை கேட்டிருப்போம். அண்ணா. அண்ணா கட்டியவள் மஞ்சளையும், குங்குமத்தையும் கொண்டல்லோ போகிறாய். எழுந்து வரமாட்டாயா?''

அழுகுரல்கள் முழங்கவே சிலுவைகள் விதைகள் முளைத்திருந்த இடுகாட்டில் சூரியன் உடல் எரிக்கப்பட்டது. ஒரு பிடி சாம்பலான அஸ்தியை இடுகாட்டுத் தலைவனிடம் சந்திரன் வாங்கினான். நண்பர்கள் சூழ அஸ்தியை செயின் நதியில் கரைத்தான் ''தமிழீழக் கடலோடு கலந்திடு மகனே'' இவ்வார்த்தை சூழ நின்றோர் கண்களில் மாரிமழைப் பொழியப் பண்ணியது. அழுத கண்ணீர் வற்றாது வீடு வந்து சேர்ந்தோம். நான் முதலில் போய் கடிதப் பெட்டியைத் திறந்தேன்! எங்கள் இருவருக்கும் பதிவுத் தபால் வந்திருந்தது. தபால் நிலையம் போய் கடிதங்களை எடுத்துப் பிரித்துப் படித்தோம்! இந்த நாட்டில் மிசல் போன்ற கருங்காலிக் கட்டைகள் இருப்பதை செங்கொடிகள் இருந்துதான் என்ன பண்ணப் போகின்றார்கள்? அந்தச் சிறைச்சாலையில் நாம் திரும்பவும் போய் அடைபட வேணுமா? சூரியன் மறைந்து விட்டானா?

●

கணையாழி
10.02.2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தியோக உயர்வு

இன்று ஐரோப்பிய-அமெரிக்க நாட்டு உணவகங்களில்(RESTAURANT) புதிய அடிமைகளாகி சக்கையாக உறிஞ்சிக் குடிக்கப்பட்டு கிறிஸ்துவுக்குப் பின்னர் இரத்தம் சிந்துபவர்கள் இன்று இலங்கையர்களாகத்தான் இருப்பார்கள்! இடைவேளை நேரம் பாரீஸ் சென்மீசல் பூங்கா வாங்கிலிருந்து மிசல் அடிக்கடி உச்சரிக்கும் இந்த வார்த்தையை நெக்குருகச் சிந்தித்த வனாகக் கண்ணீரில் கரைந்தான். இலங்கையிலிருந்து வந்த அகதிகள் அதிகமாக வாழும் பிரான்சின் தலைநகர் பாரிஸ் சென்மிசல் (ST. MERCAL) முற்பகல் பத்து மணிக்குத் தொடங்கியது வேலை. இரவு பன்னிரண்டு மணிவரைக்கும் பணிபுரிவான். இடையில் கிடைக்கும் சொற்ப நேர ஓய்வை சென்மிசல் பூங்கா-பெரும் வீதி-நடைபாதைக் கடைகள்-கண்ணுக்கு மனசுக்கினிய காட்சிகளைக் கண்டுகளித்துப் போக்குவான்... திரும்பவும் அடிமையாகி வேலை முடிந்து இரவு இரண்டுமணிக்கு மாடிப்படிகள் ஏறிக் களைத்துப் போய்வந்தான். உடம்பு நோவிலிருந்து உஷ்ணம் கோல்கதவுக் கண்ணாடியில் படர்ந்ததை வெறித்து நோக்கினான்! மேலும்... மேலும் ''பிரதீபன்''க்கு கவலைகள் கனத்தன. இண்டைய சம்பவங்கள்தான் நாளையும் நடக்கப் போகுது! நாளைய வேலையும் இண்டையப் போலத்தான் இருக்குமா? இல்லை இன்னும் கூடவாக இருக்குமா? நரம்புகள் சுண்டிச் சுண்டி இழுத்தன. கால்மூட்டு - தோல்மூட்டு முழங்கைச் சில்லுக்குள் சில்லெடுப்பு... சலிப்புணர்வு. சப்புக்கொட்டிய புறு...புறுப்பு. பத்துப்பேர் சேர்ந்து அடிச்சுப்போட்ட தேகமாய் நாசமாய்ப் போகப்போற வாழ்வாய் ... வாழப்போற கனவுகளின் இன்ப நீந்தலுக்குக் கிடைக்கப்போற பிறமோசன் என்பதையும் எண்ணினான். மாதம் முடிவில் யூதமகன் முதலாளியிடம் வாங்கும் சம்பளத்தையும் ஊர்க் காசுக்குக் கூட்டிப் பார்த்து பிரமிப்புடனும் விரக்தியுடனும் சிறிது கோபமும் சிறிது மகிழ்ச்சியுடனும் புன்னகை சிந்துவான். திரும்பவும் ஊருக்குப் போகவேணும் என்ற ஆசையும் அகலாதிருந்தான். ஊரை விட்டுக் கிளம்பிவந்த நோக்கத்தையும் அடிக்கடி நினைவு கூர்வான். ஊரில் உள்ள தாய்-தந்தை இரண்டு அக்காள், ஒரு தங்கை... இந்தியன் ஆமிக்காரன் 1988களில் ஈழத்துக்கு சமாதானம் எனும் மாயப் போர்வையில் பேய்களாக வந்து அடித்த செல்லடியில் கால்களை இழந்த தந்தை... இவர்களது வாழ்க்கை வாழ்வின் வியப்பின் விரிப்பு நினைவில் கனத்து கனவில் சங்கமித்து மேலும் தேகத்தை உலுப்பியது!

தலையில் நயாகரா நீர்வீழ்ச்சியின் பேரிரைச்சலை உண்டுபண்ணியது உந்த யூதமகனின் ரெஸ்ரோறண்டுக்குள் பிரதீபன் தசைகள் கண்டி, எலும்புகள் நொறுங்குண்டு, சக்கையாய் உறிஞ்சி எடுக்கப்படுவது யாருக்குத் தெரியும்? தெரிந்தும் என்னதான் நடந்திடப் போகுது? தினமும் மாடப்புறாக்களைப் போல் விம்முகிறான். இத்துன்பம் பெற்றவர்கள் - உற்றவர்களுக்குத் தெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பில்லை! தெரிந்தாலும் இரக்கப்படுவதைத் தவிர அதிலிருந்து தெறிக்கும் சுயநலச்சுடர் சுழற்சியில் 'உந்த வேலையை விட்டுட்டு கோட், சூட், ரை கட்டிய அரசாங்க உத்தியோகமா பார்த்துக் கிழிச்சிடப் போறாய்? உதுதான் வாழ்க்கைக்குக் கிடைத்த உயர்ந்த உத்தியோகமும் சம்பளமும்' என்பார்கள்! பல்கலைக்கழகப் பட்டப்படிப்பின் நற்சான்றிதழும் உதுதான் என்பார்கள்! ரெஸ்ரோறண் பாதாளத்துக்க நிண்ட நிலுவையில் சேவையர்கள் கொண்டுவந்தெறியும் பீங்கான், கோப்பை, கறண்டிகளை எல்லாம் எவ்வளவு விரைவாகக் கழுவித் துடைத்து அடுக்காக வைத்துவிட்டு பெருமூச்சை ஊதித்தள்ளிய போதிலும் வேலை முடிந்து வெளியேறும் நேரம் வரையும் பாதாள அறைக்குள் கழுவித் துடைக்கும் சாமான்கள் வந்துகொண்டுதான் இருக்கும்! இந்த நிஷ்டூர வாழ்க்கைக்கு மாதம் முடிவில் வாங்கும் ஊதியம் வேலைக்குச் சேரும்போது ஒப்பந்தப் பத்திரத்தில் கையெழுத்திட்ட -800-ஈறோவிலிருந்து உயர்த்தப்படவில்லை. இந்த நான்கு வருடத்தில் மிச்சம் பிடித்துச் சேமித்ததும் எதுவுமே இல்லை. போதுமான தாகத் திருப்தி அளிக்கவுமில்லை. ஊர்ப்பணத்திற்குக் கணக்குப் பார்த்தால் ஊரில் வாழ்ந்த வறுமை வாழ்விற்கு ஏற்பட்டுள்ள மாற்றம் எனலாம். பெற்றவர்களும், சகோதரிகளும் சிந்தும் சிரிப்பும், முகமலர்ச்சியும் பிரகாசம் காட்டும். பிரதீபன் முகத்திலும் அகத்திலும் கடும் சீற்றம்தான் தோன்றும். தன் நிலையை உணர்ந்து வாழ்க்கை நீடிப்புப் பற்றிய நம்பிக்கை இழந்து நெஞ்சு பொருமினான். சேமிப்பு கரைந்து போவதுமான காலத்தையும் நொந்தான். சந்தேகத்தாலும் ஊசலாட்டத்தாலும் அலைக்கழிக்கப்பட்ட வனின் புலம்பல் நாளுக்கு நாள் படுக்கையிலும் புதுவித ஆலாபனையோடு தொனித்தன. ஐந்து வருடங்களுக்கு முன்பிருந்த தாய்-தந்தை-சகோதரர் வாஞ்சை கொஞ்சும் தொலைபேசி உரையாடல்களும், கடிதங்களும் பிரதீபன் அனுப்பும் பணத்திற்கான பாசப் பங்கீடான தோரணையா? அவனால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. தனிமரமான விதியை நொந்தான். கடவாய்க்குள்ளிட்ட சிரிப்போடு எண்ணிப்பார்த்தான். காலத்தின் கட்டாயம் கோலத்தின் வடிவெடுத்துள்ளது யார் செய்த பாவம்!? இத்தனைகால உழைப்பின் வெகுமதிக்கு வேலைப்பளு கூடிக் கொண்டு தான் இருந்தன! இந்தப் போக்கைச் சபித்தான். நண்பர்கள் சூழ்ந்திருக்கும் நேரத்திலும் அன்பான ஆறுதலான உரையாடலின் போதும் இருண்ட வெறுமையான எதிர்காலம்தான் பிரதீபன் முன் தெரிந்தன. விடிந்தால் வேலைக்குப் போகவேணும். இந்த வேலையை விட்டால் மாற்றுவேலை எடுக்க முடியுமா? ஒன்றும் அவனுக்கு மாற்று வழிகாணும் ஈடாகப் புலப்படவில்லை. ஊரில் உள்ள குடும்பத்திற்கு காசு போகப் பிந்தினால் அவன் தொலைந்தான். எத்தனை பேரைப் பராமரிக்கவேண்டிய அடிமை வேலைச் சம்பளம் என்பதை நினைத்து தன் விதியை நொந்தான். தனக்குள் விவாதித்தான். அடிமை ஒருவன் தன்னைவிட மேலானவன் எனும் முடிவுக்கு வந்தான். இதன் முடிவில் ஏற்பட்ட துணிவோடு முதலாளி யூதமகனிடம் போராடப் போனால் கிடைக்கும் வெகுமதியின் தாக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவாகும்? வேலையை இழப்பதே முடிவாகும். குடும்பத்திற்கான நிதி ஒதுக்கீட்டைக் கட்டுக்குள் கொண்டுவர முடியாது திணற வேண்டும். அழுகுரல்கள் நெஞ்சைப் பிளக்கும். கடிதங்களும் தொலைபேசிகளும் கழுத்தை நெரிக்கும். இந்த வயசில் - இருபத்தைந்து வயசில் இப்படியொரு தலைச்சுமையைச் சுமக்கும் தலையெழுத்தை விரித்துப் புன்னகைத்தான். அந்த விரக்திப் புன்னகையை வீசித் தள்ளி விட்டு புதிய தெம்புடன்-புதிய பார்வையுடன் நடக்கத் தொடங்கினான். ரெஸ்ரோறண்ட் வாசல் ஏறிடும்போது யூதமகன் புன்முறுவல் பூத்தபடி நின்றான்.

இனி உனக்குக் குசினிக்குள் வேலை இல்லை என்றான். அடுத்தகணம் ஒருவிதமாகப் பார்த்தான். பிரதீபன் நிலை தடுமாறி தனக்குள்ளே புலம்பினான். தேகம் நடுநடுங்கின. வாசல் படிகள் பிளந்து கீழே மூழ்கிக் கொண்டிருப்பது போன்ற நிலை. திடீரென்று பார் கதவைத் திறந்து கொண்டு அசட்டுச் சிரிப்புடன் பிரதீபன் கிட்டவந்தான். யூதமகன் வலக்கையைத் தூக்கி பிரதீபன் தோள்மூட்டைப் பிடித்து உலுப்பினான். பின் சொற்ப மணித்துளி கடந்ததும் உறுதிவாய்ந்த குரலில் சொன்னான்.

'பிரதீபா! இனி நீர் குசினிக்குள்ள வேலை செய்யவேண்டாம். சேவயராய் மேல நின்று வேலை செய்யும். நீர் செய்த வேலைக்கு உன்நாட்டவன் ஒருவனைப் போட்டிருக்கிறேன். நீர் மறுப்புச் சொல்ல மாட்டாயென நம்புகிறேன்' என்றான் பிரதீபன் திகைப்பிலிருந்து திரும்பி பழமைக்கு வர பல மணித்துளிகள் கடந்தன. இந்தத் திடீர் நடவடிக்கைக்கு என்ன காரணம் என்பதைக் கேட்க பிரதீபனால் முடியவில்லை!. ஏன்? எதற்கு? என்றால் திமிர்பிடித்த யூதமகன் 'விரும்பினால் நில்! இல்லையே வெளியே போ!' என்றால் போச்சுது வாழ்க்கை. இடி விழுந்திடும் தலையில். உள்ள போக விரைந்தபோது குசினியர் தடுத்தான். 'இனி' உமக்குரிய லொக்கர் அங்கே இருக்கிறது என்றான். மதுபான பார்க்கு(BAR) பின்னால் உள்ள சின்ன அறையைக் காட்டினான். பிரதீபன் சிரித்தான். குசினிக்குள் வேலை செய்தவர்கள் தலைநீட்டிப் பார்த்துப் பல்லிளித்தனர். பிரதீபன் தனக்குக் கிடைத்த வேலை உயர்வைக் கருதி அவர்கள் அளித்த வாழ்த்தென வாங்கிக்கொண்டு கதவை இழுத்து சென்றான். உவன் முதலாளி யூதமகனின் மூளையைத் துளாவிக் கண்டுபிடிக்க முடியவில்லை. வேலையை வாங்கு வாங்கென வாங்குவான். தொழிலாளிகள் உழைப்பையும் தேகத்தையும் சக்கையாய் உறிஞ்சி எடுப்பவனின் மூளை எந்தநேரத்தில் எப்படி மாறும் என்பதைக் கண்டுபிடிக்க பிரதீபனால் முடியவில்லை. இந்த வேலை மாற்றமும் சூழ்ச்சியாகத்தான் இருக்கும். என்ன வெள்ளிடி விழுத்தப் போறானோ ஆடை மாற்றும் அறைக்குள் நின்று தன் குடும்பத் தெய்வத்தை இரு கைகூப்பி வேண்டியபடி கண்ணீர் வர அழுதான். தன் தலைமேல் விழுந்துள்ள குடும்பப் பாரத்தை நெஞ்சு பதறப் பொருமினான். மிகவும் கவலைப்பட்டவனாகத் தன்னை நாடிவரும் பிரதீபனைச் சிரித்த முகத்துடன் வணக்கம் சொல்லி வரவேற்றான் செப் பிரஞ்சுக்காரனான 'மிசல்'. பிரதீபனுக்கு ஆறுதலாக சகலத்தையும் விளங்கப்படுத்தியவன் புன்சிரிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்திருந்தான். பின்புறமாகத் திரும்பி முதலாளியை நோட்டமிட்டபடி திரும்பி முகத்துக்கு நேர் மூச்சுப்பட பிரதீபனை இரக்கமாகப் பார்த்தான்.

'பிரதீபா! பத்துரோன் திடீரென உமக்கு இந்த வேலை உயர்வு தந்திருக்கிறான்! உதற்குள் என்ன சூட்சுமம் ஒளிஞ்சு என்ன தகராறு பண்ணப் போறான் என்பது உமக்குத் தெரியுமா? பிரதீபன் மௌனமாக விறைத்துப்போய் நின்றான்! மிசல் திரும்பவும் கதையைத் தொடங்கினான்.

'உந்த வேலை கொஞ்சம் நாணத்தை, நடத்தையை, வார்த்தையை, வரவேற்பைக் குழைந்து நெளிந்து பல்லிளிச்சு பொறுமையைப் பூமியின் தாற்பரியத்தோடு மேற்கொள்ள வேண்டிய வெட்கம் கெட்ட வேலை என்று சொல்லலாம். அப்படியான உந்த வேலையில் பிழை கண்டுபிடிச்சு வெறுப்பு ஏற்படுத்தத்தான் இந்த உத்தியோக உயர்வு. அத்தோட உந்த வேலைக்குச் சம்பளமும் குறைவு! பிரதீபன் மேலும் முழிகள் பிரள தேகம் நடுங்க மௌனத்தில் தலைகுனிந்து நின்றான். மிசல் சிகரட்டை சொண்டிடுக்கில் வைத்து தீக்குச்சை உரசிப் பற்றவைத்து ஒரு மூச்சுப் புகையைத் திரும்பி ஊதித் தள்ளியவன் பேச்சைத் தொடர்ந்தான்.

'உந்த வேலையில் பிழை கண்டுபிடிப்பான். இதனால் உமக்கு மனம் நோகும். வெறுப்புத் தோன்றும். நீயாக வேலை விட்டு நிற்கப்பண்ணத் தான் உவன் திட்டம்! அதுபோக உன்ர வேலைக்கு உன்ர நாட்டானைத்தான் எடுத்திருக்கிறான். ஏன் எதற்கென்று கேட்டியா? இதனால் உங்களுக்கு ஏற்படப் போற நட்டம் தெரியுமா?'

பிரதீபன் மூளைக்கு இப்போதுதான் வையின் கொடுத்து விட்டிருக் கிறான் மிசல். பிரமிப்பில் நின்றவன் முன்னோக்கி நடந்த மிசலின் பின்னால் பலிப்பீடத்திற்குச் செல்லும் மௌனத் தோற்றமாக தேகம் நடுநடுங்கச் சென்றான். மிசலின் கேள்விகளுக்குப் பதில் சொல்லாததைப் பொருட்படுத்த வில்லை பிரதீபன். கவலையின் உஷ்ணத்தால் உருகிக் கொண்டிருந்தான். மிசலோடு குசினிக்குள்ளிட்ட பிரதீபன் தான் செய்த வேலைக்கெடுத்த இளைஞனை வியப்புடன் நோக்கினான். பிரதீபனின் பார்வை கண்டு அவனும் வியப்புற்றான். பேசத் துடித்தனர். இந்தநேரம் யூதமகன் உள்ளே வந்தான். அவனைக் கண்ட திகைப்பில் வெங்காயத்தை உரித்துக் கொண்டவன் கண்களை புறங்கையால் கசக்கினான் அவன் கண்களை கண்ணீர் நிறைத்தன. துளிகள் பல கீழே விழுந்து அதிர்ந்தன. அக்கண்ணீர் வெங்காயத்தால் உருவாகியதல்ல. உண்மையாகவே பிரதீபனைக் கண்ட மாத்திரத்தில் உண்டான ஆனந்தக் கண்ணீர். பிரதீபனுக்கு மயிர்க்கால்கள் புல்லரித்திட அவனுள் ஒரு முணுங்கல் பரிச்சயமான அகக்களிப்பு. யூதமகனும் மிசலும் குசினியைவிட்டு வெளியேறிவிட்டனர். பிரதீபன் ஆவல் மீறிடக் கேட்டான். 'எப்பயடா வசந்தன் இங்க நீ வந்தனீர்?' வசந்தன் அங்குமிங்கும் பார்த்துவிட்டு கொஞ்சப் பயமும் கொஞ்ச மகிழ்ச்சியுடன் குழைஞ்சோடும் வாஞ்சையோடு வார்த்தைகள் தடுமாறச் சொன்னான்.

'பிரான்சுக்குள் வந்து மூன்று வருடங்கள் ஆகுது. வந்ததும் லீயோனில் (LYON) போயிருந்தேன். இப்ப இரண்டுமாதம்தான் பாரீசுக்கு வந்து. வந்ததும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் நரேந்திரன்தான் இங்க கூட்டி வந்து வேலைக்குச் சேர்த்தான். பிரதீபா நீயும் இங்கதானாடா வேலை செய்யுறாய்?'

மௌனமாகத் தலையத் தலைய ஆட்டியவன் பாடசாலை வாழ்வின் பின்பு காணும் வசந்தன் இந்த வேலைக்கு வந்தது மிகப்பெரும் கவலையைக் கொடுத்தது. துன்பங்கள் சங்கிலித் தொடர்போல் தொடர நான் என்ன பாவம் பண்ணினேன் கடவுளுக்குத்தான் வெளிச்சம். சக்கையா உறிஞ்சியெடுத்த வேலைக்கு வந்த வசந்தனும் அடிமையாகிவிட்டான். தெய்வமே உவனையும் என்னையும் காப்பாற்றும் என்று பிரார்த்தனை புரிந்தவன், வயிறு எரியும் நெருப்பு யூதமகனுக்குப் பாடம் புகட்டும் என்றும் முணுமுணுத்தான்.

யூதமகன் செல்லமாகவும் பாதுகாப்புப் பலசாலியாகவும் வளர்க்கும் றோயல் நாய் 'தயான்' பிரதீபனைப் பார்த்து வாலையாட்டிக் குரைத்தது. நன்றிக்கு நானிருக்கிறேன் நீ பயப்படாதே நண்பா. மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்த காலம் மறையவில்லை. அந்த அடிமைவாழ்வு இன்னும் உந்த ரெஸ்ரோறண்டுகள் வழியாகத் தொடர்கிறது நண்பா! நீ பயப்படாமல் போ நண்பா. தயான் மேலும் குரைத்தது. செங்கொடி ஏந்தியதும் மே. மேநாளும் வந்துதான் போகிறது! என்றும் சுதந்திரம் தொழிலாளர்களுக்குக் கிடைக்கவில்லை. நாய் தயான் தன் முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கி பிரதீபன் வயிற்றில் ஊண்டி அன்பொழுகப் பார்த்தது. பிரதீபன் தயானின் முதுகுத் தண்டில் தன் விரல்களால் மெதுவாகத் தடவிக் கொடுத்தான். தன்னுள் பொருமினான். யூதமகனின் அதட்டல் குரல் கேட்டதும் தயான் பார்க் கதவைத் தலையால் தள்ளிக் கொண்டு உள்ளிட்டதும் தலையை நீட்டி பிரதீபனை அன்பொழுகப் பார்த்து முனுங்கியது. பிரதீபன் பயம் போர்த்த யோசிப்புடன் தன் வேலையில் சுறுசுறுப்புடன் ஈடுபட்டான்.

'கவனமாய் வேலையைச் செய்' என்று சினத்துடன் கத்தினான் யூதமகன். வாய்க்குள் நுழைவது மனிதனை மாசுபடுத்துவதில்லை - வாயிலிருந்து வெளிவருவதுதான் மனிதனை மாசுபடுத்துகிறது. இது இறைமகன் வாக்கு. தெய்வமே என் குடும்பத்தையும் - என்னையும் காப்பாற்றும். நான் இந்த பிரான்ஸ் மண்ணில் அடைக்கலம் புகுந்தது நாசமாப் போகவல்ல நாயைவிட மோசமாகக் கத்திக் கடித்துக் குதறப் பார்க்கிறான்.கடவுளே என் நிலவரம் பரிதாபப்படுவதற்கில்லை. மிசல் சிகரட்டைப் பற்றவைத்தபடி பிரதீபனைப் பார்த்த பார்வையில் சொண்டில் இருந்தாடிய சிகரட் நடுங்கி கீழே விழும்போது இரு கையேந்திப் பிடித்தான். பின் நிமிர்ந்து பார்த்தான். இரண்டு சோடிக் கண்களும் பிரமிப்பிலும் சந்தேகத்திலும் சங்கடத்திலும் சிந்திப்பிலும் நிசப்தமாக ஸ்தம்பித்து நின்றன. சொற்ப நேரங்கள் இருவரும் தங்களை வெளிக்காட்டிக்கொள்ள விரும்பவில்லை.

கூட்டம் கூட்டமாக இருவர் ஒருவராக வாடிக்கையாளர்கள் புதியவர்கள் உள்நுழைந்த வண்ணம் இருந்தனர். அவர்களுடைய மேல்கோட்டுகளை வாங்கிக் கொண்டுபோய் உரிய இடத்தில் கொழுவும்படி மிசல் கட்டளை இடுகிறான். பிரதீபன் விரைவாக இக்காரியத்தைச் செய்கின்றான். பரபரப்புத் தணிந்ததும் பிரதீபனுடன் பேசுபவர் செல்வந்தராக இருக்கவேண்டும். 'மிசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் எந்த நாடு?' பிரதீபனுக்கு ஸ்ரீலங்கா எனச் சொல்லப் பிடிக்காததால் இலங்கை - நான் பிறந்த தேசம் யாழ்ப்பாணம்' என்றான்.

'நன்றாகப் பிரஞ்சு கதைப்பாய் போலிருக்கு' என்றவர் புன்முறுவல் பூத்தபடி கதிரைய இழுத்து அமர்ந்து கொண்டார். பிரதீபன் கிட்ட வந்த மிசல் பேசுவதற்கு வாயெடுக்க எத்தனித்த வேளை யூதமகனின் பூனைவிழிப் பார்வையில் திகைப்புற்றான். இருவரிடமும் நிசப்தம்! மினுக்காட் பார்த்தபடி தங்களுக்கு விருப்பமான சாப்பாடுகளுக்கு ஓடர் பண்ணு கின்றனர். யூதமகனின் கவனம் பிரதீபனின் மேல் உன்னிப்பாகப் பாய்கின்றன. அவனது நடமாட்டத்தையும் வாடிக்கையாளருடன் பரிமாறும் வார்த்தைப் பிரயோகங்களையும் முகப்பொலிவையும் செயல் சுறு சுறுப்பையும் கண்காணித்த வண்ணமே இருக்கிறான்! ஒருமுறை தட்டுப்பட்டு கோப்பி சிந்திப் படர்ந்த காட்சி கண்டு உறுமினான், சினந்தான்.

'பார்த்து வரக்கூடாதா' என்றதுடன் புண்படுத்தும் வார்த்தையையும் கக்கினான். நடு மையத்திலிருந்து செல்வந்தர் பரிதாபமாக பிரதீபனைப் பார்த்துவிட்டு தன் சகாக்களோடு உரையாடினார். பிரதீபன் கிடைத்த ஓய்வு நேரத்தை குசினிக்குள்ளிட்டு வசந்தனோடு நல்ல ஊர்ப்புதினப் பொழுதாக்கிட மனத்தைத் திடப்படுத்தினான். இந்த நேரம் நாய் தயான் குரைத்தது யூதமகன் ஓங்கி ஆத்திரம் ஆவேசம் கொள்ள தலை தலையாக அடித்தான். தயான் குரைப்பதையும் மூச்சையும் நிறுத்திக் கொண்டது. ஏன் இப்ப கொஞ்ச நாளாய் ஈவிரக்கமற்றவனாக இருக்கிறான்?

இப்போது யூதமகன் சுருட்டைப் பற்றவைத்து முக்கியிழுக்கிறான் மிசல் சிகரட் புகைய விட்டபடி பிரதீபன் கிட்டவந்தான்.

'பிரதீபா! அந்தாள் சொன்னதையிட்டு வருத்தப்படாதே. இப்போது ஐரோப்பிய-அமெரிக்க நாடுகளில் உள்ள ரெஸ்ரோறண்டுகளில் இரத்தம் சிந்துவதோடு புதிய அடிமைகளாக இயங்குபவர்கள் தமிழர்கள்தான். அவர்களைச் சக்கையாக உறிஞ்சிக் குடிக்கிறானுகள் உந்த முதலாளிகள்! தமிழர்கள் படும்பாடுகளை நானறிவேன். கிறிஸ்துவின் பாடுகளை மிஞ்சிவிட்டது சபிக்கப்பட்ட மக்களாகிவிட்டனர். அடிமைகள் என்பதைப் புதுபித்திருக்கின்றார்கள் ரெஸ்ரோறண்டுகளில்' மிசல் பிரஞ்சுக்காரன்தான் தமிழர்கள் நிலைப்பாடுகளை உன்னிப்பாக கவனித்து வந்துள்ளான். நட்புணர்வோடு உண்மையைத்தான் கூறுகிறான் என்பதறிந்த பிரதீபன் கண்கள் பொழிந்த கண்ணீரில் அவனது நெஞ்சமேட்டு சேட் நனைந்து விட்டன.

தொழிலாளர் ஒற்றுமைக் கோஷம் எட்டு மணித்தியால வேலை ஒழுங்கு யாவும் கரைந்து போய்விட்டது. வெறும் வெற்றுக் கோஷங்களாக ஏட்டில்தான் உண்டு! பாட்டில் இல்லை ஏன் என்று கேட்கவும் நாதியில்லை. சட்டம் உண்டு சாட்டை இல்லை. முதலாளிகளின் சுரண்டல் எங்கும் அழியவில்லை. பலவிதமான கோரவடிவமெடுத்து ஒளிச்சு விளையாடு கின்றது. உண்மையாகவே மூன்று மாதச் சம்பளத்தில் ஒரு மாதம் இருநூறுப் படி அறுநூறு ஈறோ துண்டு. பாதிப்புப் பற்றிய பதைப்பு பிரதீபனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கொண்டது பதிலடி கொடுப்பது பற்றிய ஆவேசச் சிந்தனை எழவில்லை. எழுந்தால் விளைவு கவலைக்கிடமாகிவிடும் என்பதால் கைவிட்டான். வேறு யாருக்கும் சம்பள வெட்டுப்பற்றிய நிலைதனைச் சொல்லவில்லை. இதிலும் மோசமாக வசந்தனுக்குக் கிடைத்திருக்கும். மிசலுக்கு இதுபற்றிய உள்ளார்ந்த விபரம் துலாம்பாரமாகத் தெரிந்திருக்கும் பிரதீபன் சிறிது நேரம் யோசித்துவிட்டுத் தனக்குத்தானே முடிவு பண்ணிக் கொண்டான்.

மதியநேரச் சாப்பாட்டுக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பிரதீபன் மற்றவர்களைக் காட்டிலும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டான். செல்வந்தர் கதிரையை பின்புறமாகத் தள்ளியபடி திரும்பி பிரதீபனைக் கூப்பிட்டார்... அந்தச் செல்வந்தர் அடிக்கடிசாப்பிட வருபவர் கொஞ்ச நாட்களாக பிரதீபனோடு இனம்புரியாத நட்புணர்வோடு உரையாடினார். பரிச்சயம் பாசமேலீடாக இருந்தது யூதமகன் அந்தச் செல்வந்தரையும் பிரதீபனையும் உன்னிப்பாகக் கவனித்து வந்தான். விஷயம் இருக்கு என்று உள்ளூரக் கொதித்தான். செல்வந்தரையும் பிரதீபனையும் நெருங்க வந்த மிசலைக் கண்டதும் செல்வந்தர் கதைப்போக்கிலிருந்து வேறு எதையோ கிசுகிசுத்தார். பிரதீபன் மனம்விட்டுச் சிரித்தான். அவனது முகம் பிரகாச மடைந்தது. மிசல் அவனைத் தட்டிக் கொடுத்தான். 'பயப்படாதே! அவர் கேட்பதற்குச் சம்மதம் சொல். இந்த நரகத்திலிருந்து கிடைத்துவிட்ட மகிழ்ச்சியோடு அவர் கூப்பிடும் இடத்திற்குப் போயிருந்து வேலைசெய் நல்ல சம்பளம் கிடைக்கும்' என்றான். பிரதீபன் யூதமகனைத் திரும்பிப் பார்த்தான். அவன் சொண்டில் இருந்த சுருட்டை உறுட்டி எடுத்து வைத்து எடுத்து கோபாவேசமாக பிரதீபனை அதட்டினான். அவன் மலர்ந்த முகத்துடன் மௌனமாக நின்றான். செல்வந்தரும் சூழயிருந்தவர்களும் பெலத்துச் சிரித்தனர். கட்டுண்டவன் போல் நின்ற பிரதீபனைப் பார்த்து உறுதியைப் பெலப்படுத்தும் தோரணையில் அவனைச் செல்வந்தர் கூப்பிட்டார். தன்னுடைய விசிற்றிங் காட்டில் தன்னைச் சந்திக்கும் நாள் நேரத்தைக் குறிப்பிட்டுக் கொடுத்தார்.

நாய் குரைத்தது. பதுங்கிக்கொண்டும், கழுத்தைச் சாய்த்துக் கொண்டும், நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டும் நின்றது தயான். எல்லையற்ற சீற்றத்தோடு வெளியே போன யூதமகனைக் கண்டதும் தயான் துள்ளிக் குதித்து பிரதீபன் மேல் பாய்ந்தது. இரண்டு கால்களாலும் அவனது நெஞ்சிலிருந்து பாதம் வரை செல்லமாய் தடவிக் குதூகலித்தன. இதுதான் நான் உனக்கு வழங்கும் பிரியாவிடைக் கவிதை என்பதாகும்.

●

ஞாயிறு தினக்குரல்
03.04.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது பிறப்பு

மலைமேல் உள்ளது இந்த மருத்துவமனை. கலையே இந்த மனையின் வடிவமைப்பில்தான் பிறந்தது எனும் நிலை வியப்பினில் பிரகாசிக்கும் அழகுத் தெறிப்பு! விண்ணோடு மேகம் தொட்டு குளிரூட்டும். காலை இளம்பரிதியின் இளம்சூடுபட்டு தெம்பூட்டும். பளிங்குக் கற்கள் மின்னி மின்னி கண்பறிக்கும் மருத்துவமனை. வெள்ளாடைச் சேவையில் தாயை மிஞ்சும் மனிதநேயம் மிளிரும் தாதிகளும் மருத்துவர்களும் சேவையும் சேவைபுரியும் சேவகர்களும் கங்காணிமாரும் மிதமிஞ்சிக் காணப்படும் சேவைக்கும் தேவைக்கும் மருத்துவத்திற்கும் பராமரிப்பிற்கும் இப்படித் தான் இருக்கவேண்டும் என்பதற்கொரு எடுத்துக்காட்டாகத் துலங்குமிந்த மருத்துவமனை(villeneuve st gegres). இங்கு ஆறாம்மாடியில் 155ம் நம்பர் அறையில் கொண்டுவந்து 'கிருஷ்ணகுமாரை' விட்டுவிட்டு மனைவி 'கீதா'வும் மகள் 'ராதா'வும் போய் ஒருவாரத்திற்கு மேலாகிவிட்டது. அவர்கள் திரும்ப வந்து ஒருமுறையும் பார்க்கவில்லை. கீதாவுக்கு அவ்வளவு நம்பிக்கை. கண்காணிப்புக்கும் பராமரிப்புக்கும் கனிவான காருண்யத்தின் புத்தொளி வீசும் மருத்துவமனை என்பதால்.

கீதாவுக்கு வேலைப்பளு. நேரம் கிடைப்பது வனாந்திரத்தில் தண்ணீர் கிடைப்பதற்கு ஒப்பாகும். வீட்டுக்கு வந்த கீதாவுக்கு யோசனை மனம் கசிந்தது. உந்தாளைக் கொண்டுபோய் இப்படியே அம்போ என்று விட்டுட்டு வந்து எத்தனை நாளாச்சு? போய்ப் பார்க்காமல் விட்டது தவறுக்குமேல் தவறெனப் பட்டது. மகள் ராதாவை 'எடிமகளே! நீயாவது ஒருக்கா அப்பாவைப் போய்ப் பார்த்து என்ன ஏதெண்டு கேட்டு வா மகளே'' என்று பலமுறை சொல்லிவிட்டாள். ராதாவின் மனசும் உசும்பவில்லை. கீதாவுக்கு லீவு எடுத்துப் போய்ப் பார்க்கவேண்டிய அவசரம் அவசரப்படுத்தவில்லை. தாம்பத்திய உறவில் சிற்சில நேரங்களில் ஏற்படுகின்ற விரிசல்கள், நெருடல்கள், தப்புத்தாளங்கள் தான் இருந்தாலும் ஒருக்காப் போய்ப் பார்த்து வருவோம் எனும் விருப்பம். மனச்சாட்சிக்குக் குந்தகம் விளைவிக்காமலிருப்பதற்காக.

மருத்துவமனை 155வது அறையில் இரண்டு கட்டில்கள் கிடந்தன. ஒரு கட்டிலில் கிருஷ்ணகுமாரும் இரண்டாவது கட்டிலில் பிரஞ்சுக்காரரான 'அலைக்சாண்டர்' இருவரும்தான்.

இனி என்ன! அளவுச் சாப்பாடுதான்; இலைகுலைதான்; வெந்தும் வேகாத உணவுதான். இந்த 'நீரழிவு நோயை(DIABETES)' பணக்காரற்ற நோய்-பரம்பரை நோய் என்கிறானுகள். சுத்தப்பொய்! உலகத்தில் உள்ள கோடிக்கணக்கான சனத்துக்கு உந்த நோய்.

உதைத்தடுக்க இன்னும் ஏன் உந்த மருத்துவம் தோற்றுப்போனது? விஞ்ஞான சாதனைதான் ஏன் சறுக்கிப் போனது? உப்படியாகச் சிந்தித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணகுமாருக்கு டாக்டர் சொல்லும் ஆறுதல்களும் வெப்பிசாரத்தை உண்டுபண்ணியது. அத்துடன் இங்கு கொண்டுவந்து விட்டுட்டுப்போன மனைவி கீதாவும் மகள் ராதாவும் சேர்ந்து சுருக்கமாகச் சொல்லிவிட்டுப் போன வார்த்தையும் நெற்றிச் சுருக்கேற்றிய சிந்திப்பையும் அடிக்கடி ஞாபகப்படுத்தியது.

''தாறதைச் சாப்பிட்டிட்டு மதுப் போத்தலை மறந்து படுங்கோ'' மயிர்க்கால்கள் புல்லரித்தன. இப்படியே கால்-கைகள் இழுத்து படுக்கையில் கிடந்து அழுந்த நேரிட்டால். தன்னைக் கவனிப்பார் யார்? கவனிப்பவர்களும் முகம் சுழிச்சு, அருவருப்படைந்து வெறுப்புக்குள்ளாகிப் பிணமாகிக் கிடந்திடும் காலமும் கண்றாவிக்கிடமாக வந்திடுமோ எனும் பயச்சுபாவமும் மெல்ல மெல்ல தொத்தி இதயத்தில் ரணமடைந்தது. கிருஷ்ணகுமாருக்கு மனைவி-மக்கள் மீதும் துளியும் நம்பிக்கை இல்லாத தனிமைப்படுத்தலும் வெம்பி நின்றது. நீரழிவு நோயால் தினம் தினம் செத்துப் பிழைச்சு மருந்து மாத்திரையே சாப்பாடாகிவிட்டது. உது என்ன வாழ்க்கை? இனி இருந்து என்னத்தைச் சாதித்திடப் போறேன்? கிருஷ்ணகுமாரின் சிந்தனையோட்டம் விரக்தியின் விளிம்பில் நின்று வேதனை கண்டது.

கீதாவின் கீச்சிடு குரல் கேட்டாலே நாய்போல் குரைச்சேன். இப்ப ஊரோடு போய்ச் சேர்ந்தாலும் தன்னை யார் பொறுப்பெடுத்துக் கொள்வார்? யாருமே முன்வர வேண்டாம். தனிமையில் இருந்தே தாய் மண்ணோடு சங்கமமாகிவிட்டால் போதும். கீதாவுக்கும் நிம்மதி கிடைக்கும். இந்த மருந்து மாத்திரைகள், ஊசி-நேசிகளுக்கும் முற்றுப் புள்ளி வைத்துவிட்டு ஆசுப்பத்திரி வாழ்க்கையும் இல்லாது ஓட்டியிடலாம். கீதாவும் பாவம், அவள்தான் என்ன பாவம் செய்தாள்? திடீரென வாயெடுத்துக் கத்தினார். ''என்னவாழ்க்கை? அன்று நீட்டி முழங்கியவையும், ஏட்டில் எழுதியவையும், பாடிப் பரப்பியவையும், தேடிச் சேர்த்த ஏடுகளும், ஈட்டித் தந்ததுதான் என்ன?'' திரும்பவும் கண்ணீர் விட்டழுதார். மயங்கிப்போன மாதிரி கட்டிலில் விழுந்து நீண்டு படுத்தார். பக்கத்துக் கட்டிலில் படுத்திருந்த அலைக்சாண்டர் திடுக்கிட்டு முழி பிரளப் பார்த்து மௌனித்திருந்தார். அவரைத் தட்டியெழுப்பத் துருதுருத்தன. அவரது உடல் ஆடுவது கண்டதும் அவ்வெண்ணத்தைக் கைவிட்டார்.

கீதாவும் கணவரின் கீர்த்தனைகளைக் கேட்டும் கண்டும் கவலைப் படுவதைத் தவிர வேறு பரிகாரம் தேடும் படலத்தையும் கையாளவில்லை. ஒப்புக்கு ''என்னங்க நீங்க! நாங்க இருக்கிறோமுங்க. உங்களக் கைவிடவா போறோம்?''

இப்படிப் பலமுறை சொல்லிவிட்டாள். கிருஷ்ணகுமாரின் மூளை எந்த நேரத்தில் எப்படி எப்படியெல்லாம் மாறும் என்பதைக் கண்டுபிடிப்பதும் கடினம். அவரது சின்ன மனசுக்குள் கடலளவு கவலைகள் நிரம்பிவிட்டது. 'இனி இந்த நீரழிவு நோய் நீங்கப் போவதுமில்லை. சாக்கட்டையில் தான் எரியும். அதற்குள்ளாக ''நேர்ஸ்'' கிட்டவந்து ஊசி ஏற்றும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரக்கண்ணால் அலைக்சாண்டரைப் பார்த்தார். அவர் சிந்திய சின்னப் புன்முறுவல் கிருஷ்ணகுமார் மனசுக்குள் சில்லெடுப்பு ஊட்டியது. ''சாகப் போற கட்டைக்கு எத்தனை ஊசிமருந்து'' அலைக் சாண்டர் கேலியாய்க் கேட்பது போல்பட்டது. எத்தனை பேர் பிடிச்சுப் பார்த்த கட்டுமஸ்தான தேகம்! எத்தனையாள் ஆசைப்பட்ட அழகும் வீரமும் நிறைந்த திருக்கோலம்! சிலம்பும் யூடோவும் மல்யுத்தமும் கலைகளும் ஆடிய ஆட்டம், தேடிச் சேர்த்த புகழ் இவற்றுக்கெல்லாம் இன்று வந்தாட்டிவிட்டதே 'நீரழிவு நோய்'. மூட்டுமூட்டாய் நோகுது, சதைசதையாய் வாட்டுது, பாதங்கள் கொதிக்குது, தேகமே நடுநடுங்குது. கால்விரல்களை வெட்டி எறிந்திட வேணும் போலிருக்கு. போதுமடா சாமி போதுமடா.''

கிருஷ்ணகுமாரின் வேதனைக்குரல் கேட்டு நேர்ஸ் இதழ்மூடிச் சிரித்தாள். சந்தன நிற மேனியை ஆட்டி கிருஷ்ணகுமாரின் நெற்றியில் கை வைத்தாள். மலர் தழுவல் மெதுமெதுவாக நெற்றியைத் தடவிக் கொடுத்தபடி தேற்றினாள். 'மிசு! வெகுசீக்கிரத்தில் சுகமாகிவிடும்! 'மிஸ்! எங்கே ஆருக்குச் சுகம் வந்தது?' கிருஷ்ணகுமாரின் கேள்வியில் விறைத்துப்போன நேர்ஸ் ஆறுதலாகப் பதில் கொடுத்தாள்.

'மிசு உமக்குச் சுகம் வந்திடும்.' 'உண்மையும் நம்பிக்கையுடனும்தான் சொல்லுகிறீர்களா?' மௌனம். சங்கடத்துக்குள் சங்கடம் ஏற்பட்டதைச் சமாளிக்க நாளைய மருத்துவப் பரிசோதனையைச் சொன்னாள். அதன் பின்பும் கேள்விக்கு அதிக வேலை உள்ளதையும் உணர்ந்தவள்.

'மிசு நாளைக்குப் பத்து மணிக்கு கண்ணுக்கு லேசர் பிடிக்கப் போக வேணும்.' 'கண் பார்வையும் செத்துவிட்டதா?' குலறிக் குலறி அழ வேணும்போல் எம்பியது நெஞ்சம். குமாரின் எண்ணங்கள் விதவிதமான தோற்றம் எடுத்தாடியது.

கிருஷ்ணகுமாரை அன்பாக 'குமார்' என்றுதான் கூப்பிடும் வழக்கம் கீதாவுக்கு. கீதா உள்ளே வரும்போது சிரித்துக்கொண்டே வந்தாள். குமார் இருந்த தோற்றத்தைக் கண்டதும் செங்கடல் முத்தொளிச் சிரிப்பை இதழ் கதவால் அடைத்தாள். அழுது அழுது வீங்கிப்போன கணவனின் முகத்தை கீதாவால் பார்க்க முடியாமல் முழுச்ச முழி கலங்கிப்போனது.

'உந்தப் பெலப்பான மனிசன் ஏன்தான் உப்படியாகிப் போனார்?' அவநம்பிக்கை அதிகமாகிவிட்டது. உந்த நோய்வேற தீராத நோயாகிவிடப் போகுது! முடிந்தவரை பாதிச் சோகமும் பாதிக் கோபமும் கீதாவை ஆட்கொண்டன. ஆறுதலுக்காகச் சொல்லும் வார்த்தைகளும் சேவை களும் அடிபட்டு எடுபடாமல் போகின்றன. திடீரெனப் பேசத்துடித்த அலைக்சாண்டர் பொட்டெனப் போட்டார்.

'சதா சின்னக் குழந்தைகளைப் போல கண்ட கண்ட நேரமெல்லாம் அழுகிறார்' என்றார். கீதாவுக்குத் தூக்கிவாரிப்போட்டது. 'ஏன்?' என்று கேட்க எத்தனித்தவளை வெட்கம் அடைத்துக் கொண்டது. மூளையில் ஒரு பொறி கீதாவை நிதானப்படுத்தியது. குமாரின் பிரச்சினைகள் மனசின் மூலையில் மிகப்பெரும் கவலையாகக் குவிந்தன. மூஞ்சியத் துக்கமாக வைத்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்த ஐம்பது வயசு மனிதனைத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டி, நிலாக் காட்டிச் சோறூட்டித் தூங்க வைப்பதா? என்ன விளையாட்டிது? நோய் நொடி இல்லாத மனிசன் உலகத்தில ஆர்தான் உண்டு? ஏன்தான் உவர் உப்பிடியானார்?''

குமாருடன் கதையேதுமற்ற பார்வைப் பரிபாஷையுடன் கீதா இருந்து பார்த்துவிட்டுப் போய்விட்டாள். அலைக்சாண்டர் பேச்செடுக்க முனையும் போது நேர்ஸ் உள்ளே வந்தாள். இரத்தம் சோதித்தாள்; பிறசர் பார்த்தாள்; மருந்துமாத்திரை உண்டதையும் சாப்பாட்டு விபரத்தையும் கேட்டுவிட்டு சோதனைக் குறிப்பு அட்டவணையைத் தூக்கி அதிக நேரம் பார்த்துவிட்டு, வாய்க்குள் பிரஞ்சில் வந்த வார்த்தைகளை முணு முணுத்தபடி 'இந்தத் தடவை எல்லாமே கூடியிருக்கு...' மிசு! நீங்கள் ஏன்தான் யோசிக்கிறீங்க?' 'மிஸ் ஆயுளுக்கு உபத்திரவமாக இருக்க நான் விரும்பவில்லை'.

'மிசு! என்னதான் கதைக்கிறீங்க?' பட்டென்று நேர்ஸ் கேட்டாள். அலைக்சாண்டர் இரக்கமாகப் பார்த்தார். குமாரிடமிருந்து விரக்திப் புன்னகை. பின்னர் நேர்ஸ் பேசத் தொடங்கினாள்.

'மிசு இந்த நோயை நீங்கள் ஆரம்பத்தில் கவனிக்கத் தவறியிருந்தாலும், இப்போதைக்குப் பரவாயில்லை. நீங்கள் அல்கஹோலும் அதிகம் பாவித் திருக்கிறீர்கள். இந்த நீரழிவு நோய்க்கான ஆரம்பம் அறிகுறிகள் அசாதாரண மான தாகம், அடிக்கடி சிறுநீர் கழிக்கவேணும் என்ற உணர்வு, கண்பார்வை மங்கல், திடீரென இடைக்குறைவு, எந்த நேரமும் எக்காரணமும் இல்லாத சோர்வு இவை எல்லாம் இந்த நோய்க்கான அறிகுறிகள். 'இவற்றை நீங்கள் ஆரம்பத்தில் மிகவும் கவனமாகக் கவனித்திருந்தால் இப்படியேனும் மிசு அவஸ்தைப்பட வேண்டி வந்திருக்கும்?'

தாற்பரியத்தால் குழந்தையைக் கெஞ்சிக் கொஞ்சுவதுபோல் கொஞ்சி ஆறுதல்படுத்தினாள். குமாரின் சின்ன மூளைக்குள் பெரிய அறிவு குவிஞ்சல்லவோ கிடக்கின்றது! அதில் சிலவற்றை சில்லோடையாக ஓடவிட்டார்.

'மிஸ்! இந்த நோய்க்கு என்ன காரணம்? இதற்கான மருந்தையேன் இன்னமும் கண்டுபிடிக்க முடியவில்லை? அப்படிக் கண்டுபிடித்திருந்தால் ''அம்மை'' முதலிய நோய்க்கு மருந்து கண்டுபிடித்ததுபோல் நீரழிவுக்கும் ஒரு முறையில் ஏற்றக்கூடிய மருந்து போடலாமல்லவா?' என்று கேட்டு விட்டு அலைக்சாண்டாரையும் ஓரக்கண்ணால நோக்கினார். நேர்ஸ் மனசக் குழப்பிய கேள்வியில் திமிறிப்போய் நின்றாள். அலைக்சாண்டர் விளக்கத்தை அறியும் ஆவலோடு சுறுக்குடன் கட்டிலை விட்டெழுந்து நின்றார். இருந்தும் விஞ்ஞானம் தோற்றுப் போய்விட்ட மருத்துவயுலகிற்கு விட்டிருக்கும் சவால். நேர்ஸ் தனக்குள்ளாகப் பிரலாபித்துக் கொண்டாள். குமாரின் நோயின் வேதனையிலிருந்து எழுந்த கேள்வியல்ல இது. இருந்தும் பதில் என்ன என்று சொல்வது என்ற தடுமாற்றத்தில் எதையோ சொல்லித் தப்பிக்க முயன்றாள்.

'மிசு நோய் இருப்பதைக் கண்டுபிடித்தது வேண்டுமானால் தள்ளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிருக்கலாம்! ஆனால் நீரழிவு நோய் இனி உங்களைவிட்டுப் போகப் போவதில்லை.' புசுக்கென்று அலைக்சாண்டர் சிரித்தார். பொறுமையின் இராக்கிணிகள்தானே இந்தத் தாதிகள். கோபப்படாமல் 'டாக்டர் வரும்போது கேளுங்கள்!' என்று சொல்லியபடி தன் அழகுத் திருமேனியை திருப்பிக் குலுங்கிக் குலுங்கிச் சிரிச்சபடி திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே சென்றாள். அந்தத் தாதியின் பாசத் தோற்றம் புண்பட்ட நெஞ்சுக்கு இதபதமாக இருந்தது. இது தாதிகளின் கடமை மட்டுமல்ல, காருண்யத்தின் காப்பரனுமாகும். இந்த மகிழ்ச்சி சொற்ப நேரம்தான் நீடித்தது. குமாரின் மனம் சிந்தனையில் மூழ்கிப்போய் மரத்துப்போனது. மருத்துவமனை அறைக்குள் நடைப்பிண மாக இருந்தவருக்கு வாழ்க்கை இருண்டுபோய்விட்டது. கீதாவின்மீதும் இனம்புரியாத வெறுப்புத் தோன்றியது. பேந்தும் பாவியவள்தான் என்ன செய்வாள்? அவளை ஏன் வெறுக்கவேணும்? நான்தான் அவளுக்குப் பல வழிகளிலும் பாவம் செய்தேன். ஏன்தான் திரும்பத் திரும்ப அவளுக்குப் பாரமாக இருக்கவேணும்? நான் எங்கிருந்து வந்தேன்? எதைக் கொண்டு வந்தேன்? இங்கிருந்து நான் எதை எடுத்துக் கொண்டு போவேன்? இங்கிருந்து எங்குதான் போவேன்? இந்த நோய்தான் விட்டுப் போகுமா? நான் சுதந்திரமாகப் போகவேண்டும். இறைவா! பிறகும் என்னைப் பிறப்பித்து வருத்தப்பட வைக்க வேண்டாம். உள்ளக்கிடக்கில் குவிந்தன கவலையின் கற்கள்.

காலை பத்துமணிக்கு குமாரை கண்பரிசோதனைக்கு ஏற்றிச் செல்ல சக்கர நாற்காலியை உருட்டிக்கொண்டு வந்து நிற்பாட்டிய கங்காணி தன்னுடைய முழுப்பற்களும் தெரியச் சிரித்தான். எழும்பிநின்ற குமார் சரிவுப் பார்வையில் அலைக்சாண்டரைப் பார்த்துச் சிரித்தார். அவர் பரிசோதனை நல்லபடி யாக அமையவேண்டுமென வாழ்த்துச் சொன்னார். குமார் தலையத் தலையாட்டியபடி சக்கர நாற்காலியில் அமர்ந்து வலக்கையை உயர்த்தி ஆட்டிக்காட்டிவிட்டு தலையைக் குனிந்தார். வண்டில் சத்தமற்று மிருதுவாக உருண்டுகொண்டது. குமாரின் இருப்பினில் வெறுப்பும் வேதனையும் வெம்பிநின்றன. டாக்டர் மலர்த் தழுவலாகக் கண்ணிமைகளை எழுப்பிப் பார்த்தார். பார்த்துவிட்டு பலவிதமான சோதனைகளை மேற்கொண்டார். பிற்பாடு குறைபாட்டைச் சொல்ல சாதுரியத்தைத் துணைக்கழைத்தார்.

'மிசு! உங்களுக்கும் 'டயாபெடி' வருத்தத்தில் கண்ணும் பாதிக்கப் பட்டுள்ளது. டாக்டர் தாட்சண்யமான பார்வையுடன்தான் நோக்கினார். குமார் சிந்திய கண்ணீரும் ஏக்கப் பெருமூச்சுடன் மேலும் ஒருவித புது நகைப்பு. டாக்டர் தாற்பரியத்துடன் தேற்றினார். குமாரின் வாய் முணுமுணுத்தது.

''டாக்டர் எல்லா ஆட்டமும் முடிந்துவிட்டன.'' கண்ணாடி போட வேணும். வயசுக்கும் அறிவுக்கும் அழகுக்கும் ஒத்தாசை புரியும். சின்னச் சிலு சிலுப்பு வாழ்க்கைக்குக் கிடைத்துள்ள ''பிறமோஷன்''.

குமாரைத் திரும்பவும் 155வது அறையில் கொண்டுவந்து விட்டு விட்டு விடைபெற்றான் கங்காணி. பதிலுக்கு நன்றி சொன்னபடி கட்டிலில் ஏறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்புறமாகச் சாய்ந்தார். நொந்து கொண்டார். நிஜம்சுடும் நேரம். உண்மைகள் உருவேறி சூழ்ந்தடங்கும் காலம். ஒடுங்கிப் போய்விட்டன சகலதும். அன்று சதையேறிய விம்மலில் சகலரையும் விம்மவைத்த சதிரம் இனிப்புறையும் உதிரத்தால் நடுநடுங்குகிறது. இந்த நோய் ஒரு பொல்லாத நோய்தான். எப்படியெல்லாம் ஆட்டிப்படைத்த சதைத் துடிப்பு நீரழிவு நோய்க்குள் அடங்கிவிட்டது. கவலைகள் 'தமிழீழ மக்கள் கண்ட' சுமையாகிவிட்டது. எதைத்தான் நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு! எங்கிருந்து வந்தேன்? இங்கிருந்து எங்குதான் போவேன்? அங்குதான் என் சீவியம் ஓயத் தொடங்கும். மறுபடியும் பிறப்பு உண்டானால் இந்த நோயுடன் பிறவாதிருக்க வேண்டுகிறேன். எல்லாம் தெள்ளத் தெளிவாகிவிட்டது. நினைவில் குதிக்கிறேன்- இன்னும் நாக்குச் சுவை ஊற்றெடுக்கின்றது விடுபடவில்லை. விலகுமா இலகுவில் அந்த அற்புதமான சுவைகள்? அரைச்ச குழம்பும் ஆக்கின கறிச்சோறும் விதவிதமான பொரியல்கள்- சொண்டோடு சொண்டொட்டும் தேத்தண்ணி வகைகள், நெய்ச்சோறு, பால்பாயாசம், பலகாரங்களின் களிப்பு.

இனி உந்தச் சீட்டுக்கள் உனக்குத் தேவையில்லை! மருந்து மாத்திரைச் சீட்டுத்தான் மூன்று நேரமும். பிரம்மன் வித்தைக்குத் தகுந்தது என்கிறார் டாக்டர். மேலும் சந்தர்ப்பச் சாக்குக்காக 'திண்டுகெட்ட குடும்பம்' உயர்ந்த புகழ் சான்றிதழை இழக்கமுடியுமா? இப்போது என்னத்துக்குத்தான் இசைந்து போவேன்? பாதங்கள் கொதிக்கின்றது. முழங்கால் சில்லுக்குள் சில்லெடுப்பு-சுல் சுல்லென்று நரம்புகள் இழுக்கின்றன. தண்ணீர்ப் பைப்பைத் திறந்தால் மூத்திரம் கடுக்கின்றது. குமாருக்குப் பீறிட்டெழுந்தது அழுகை. சாரைப் பாம்பாட்டம் கோபத்தின் சீற்றம். மோதித் தீர்த்துக்க கீதா இல்லை பக்கத்தில். பாவம் அவள்! காதலிக்கும் போதிருந்த வாஞ்சை வற்றிப் போனதா? மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்! புருஷன் தன் மனைவியையும் - மனைவி தன் புருஷ னையும் சிநேகியாமல் போனதற்கு யார் காரணம்? இப்போது தினமெழும் மூச்சு இத்தோடு எழும் இறுதி மூச்சாக வேண்டும். கண்களிலிருந்து கண்ணீர் பொலபொலவென விழுந்து அதிர்கின்றது. அந்த அதிர்ச்சியை உற்றுநோக்கிய அலைக்சாண்டர் லேசான புன்முறுவலுடன் தெளிவாகப் பேசினார்.

'மிசு குமார்! நீங்கள் கண்பரிசோதனைக்குப் போனப்புறம், ஒருசில நிமிடங்கள் நகர்வில் உங்களது நெருங்கிய நண்பர் வந்திருந்தார். வெகுநேரம் காத்திருந்தவர் வேலைக்கு நேரமாகுது என்று சொன்னவரிடம் நான்தான் பேச்சுக்கொடுத்தேன்.'

குமார் ஆச்சரியத்துடன் 'பெயர் சொன்னாரா?'

'யோச்' என்று சொல்லிவிட்டுக் கவலையோடு நின்றவரிடம் விடாப் பிடியாக நான்தான் சிலபலவிபரங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன். அவர் நன்றாகவே எங்கட பிரஞ்சுப் பாஷை கதைத்த விதம் எனக்கு சந்தோஷத்தைத் தந்தது குமார்! அவர் கூறியவைகளைக் கேட்டு நான் அசந்துபோனேன்! குமார் நீங்கள் 'சாதித்திருக்கிறீர்கள்.' உடற்கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தைகளாலும் அறிவுக்கலை இலக்கிய மேன்பாடுகளாலும்- கிப்ஸ னையும் பைரனையும் நேரில் காண்பதுபோல் உங்களைப் பார்ப்பதில் மகிழ்ச்சியாக இருக்கிறது. உங்களது பக்கத்துக் கட்டிலில் படுத்திருந்தது எனக்குப் பெருமையாகயிருக்கிறது. மிசு நானுமொரு படைப்பாளிதான்! 'அலைக்சாண்டர் டூமாஸ்' அவரின் பரம்பரையான். கலை-இலக்கிய-நாடகம் என்றால் எனக்கும் உசிர்! மிசு குமார் நீங்க போய் உந்த நோய்க்குப் பயந்து வருத்தப்படுகிறீங்க! உலகத்தில் பாதிக்கு மேலானவர்கள் உந்த நோயால் அவதிப்படுகின்றார்கள். அதுதான் போகட்டும்! நோயில்லாத மனிசன் யாருண்டு? ஒவ்வொருவனிடமும் ஒருவகை நோய் குடி கொண்டிருக்கு.'

அலைக்சாண்டரின் வார்த்தை வருடலில் குமாரின் இதயம் கனத்து, கண்கள் மாரி பொழிந்தன. இருந்தும் ஒருவித மௌனம். அந்த மௌன கீதத்திற்குள்ளும் தெம்பு மீறிப் பாய்ந்தன.

அலைக்சாண்டர் சொன்ன ''சாதித்திருக்கிறேன்.'' தன்னுயிர் பிறவி அவதாரம் எடுத்தது பெருமிதத்தைக் கொடுத்தது. மீண்டும் அதே புன் முறுவல் மாறாமல் கதையைத் தொடங்கினார். காமகாரப்படாத கவிதைத் தெறிப்பாக வீசியது. கிப்ஸனும் பைரனும் உள்ளிருந்து வாழ்ந்தும் வாழ்த்தாகப்பட்டது.

'குமார் நீங்கள் ஒரு சிறந்த கலைஞன்! மானிடத்தை நேசிக்கும் மகத்தான படைப்பாளி.' இப்படி அவர் சொன்னபோது அலைச்சாண்டர் டூமாஸையே வெளிச்சம் காட்டியது. குமாருக்கு நோய் எங்குபோனது? தேடல் தொடரும்வேளை தாதிகள் இருவர் சகிதம் டாக்டர் உள்ளே வந்தார்கள். மூவரிடமிருந்து வழமையான புன்சிரிப்பு, மலர்தழுவல், சுகம் விசாரிப்பு, சாப்பாடு பற்றிய விபரம், பின்னர் சற்று மௌனச் சிந்திப்புடன் விவகாரம் வீசிய விளக்கக் கேள்வியுடன் சோதனைக் குழாயை குமாரின் நெஞ்சினில் வைத்தார். திடீரென கட்டில் காலடியில் தொங்கும் அட்டவணையைத் தூக்கிப் பார்த்தபடியே 'மிசு சவா?'(cava)

குமார் மெதுவாக ஆமையைப்போல் தலையை நீட்டி ஆட்டிவிட்டு டாக்டரை நேர்குத்தப் பார்த்தார். தன் மனசுக்குள் கிடந்து அரிப்பதை அள்ளிக்கொட்டிவிடும் துருதுருப்பு. தாதிகள் நெஞ்சக் கைக் கட்டோடு கூர்ந்து பார்த்தபடி நின்றனர். அலைச்சாண்டர் பூனைவிழிகள் விழுங்கப் பார்த்தவர் முகம் பிரகாசமடைந்தது. குமார் தாழ்ந்த குரலில் முதல் பந்தி யைத் தொடங்கினார். டாக்டர் ஆழ்ந்த அறிவுக்குறியோடு பின் கைக் கோர்வையுடன் நிமிர்ந்து நின்றார். சற்றுக்கழிந்த நிமிடத்திற்குப் பிறகு ஆழத்தை அளந்தார். ''மற்ற நோயாளிகளைப்போல் இவர் இந்த நோயை அலட்சியம் செய்யவில்லை. இதனால்தான் 'இன்சுலினுக்கு' உற்படாமல் இருக்கிறார். நீரழிவு நோய் குணப்படுத்த முடியாத நோய்தான். இருந்தாலும் இந்த மோசமான நோயுடன் ஆரோக்கியமாக வாழ முடியும். திட்டமிட்ட உணவு முறைகள், முறையான தேகப்பயிற்சி இவற்றை அனுசரித்து வந்தால் நோய் இருந்தும் இல்லாத சுகவாசிபோல் வாழ்வதற்கு வாய்ப்புண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்சுலின் குமாருக்கு அம்சமாகிவிடாத வரையில் கடவுளுக்குத் தோத்திரம் சொல்லவேண்டும்.''

தாதிகள் இருவரும் தங்களுக்குள் பிரலாபித்துக் கொண்டனர். குமார் உரத்து உருகிப் பெருகிய கண்ணீருடன் கத்தினார். ''டாக்டர்! இனிப்புப் பண்டங்களையும், அறுசுவை உணவுகளையும் நாவு சுவைத்தது, சுகம் தரும் சந்தோஷம் வழங்கும் எனும் நம்பிக்கையில்தான். பிற்காலத்தில் எக்கோலத்தை டாக்டர் வைத்திருக்கு? விதி இதுதான்! இந்த நோய்த் தொல்லையிலிருந்து விடுதலை கிடைக்குமா? டாக்டர்! அம்மை வேறு நோய்களுக்கு ஒருமுறையில் ஏற்றக்கூடிய மருந்தைக் கண்டுபிடித்ததுபோல் இந்த நோய்க்கு ஏனுங்க டாக்டர் மருந்து கண்டுபிடிக்கவில்லை? டாக்டர்! மருத்துவ உலகச் சாதனைச் சாத்தியப்பாட்டில் சறுக்கிய வெக்கக்கேடு இதுவாகத்தான் இருக்கும். டாக்டர்! என்னுடைய ஆண்குறியின் எழுச்சியே சந்தேகத்திற்கு இடமாகிப் போச்சுங்க டாக்டர்'' 'இனி இருந்தென்ன பயன்? முடிவென்ன டாக்டர் சொல்லுறீங்க?'

குமார் தேம்பி அழுவதைப் பார்த்தபடி நின்ற தாதிகள் கண்கள் குளமாகியது. வாய்கள் ஆறுதல் வார்த்தைகளைத் தளதளத்துக் கக்கினர். அலைக்சாண்டர் ஆவெனப் பிளந்த வாயை மூடாமல் இமைகள் துடிதுடிக்க துயரத்தில் 'மாப்பசானின்' வடிவத்தில் குந்தியிருந்தார். தேறு தலைத்தேற்ற ஆறுதலைத் தேடினார். டாக்டர் தாங்கள் கையாளும் தந்திரங்களை நிமிடத்துக்குள் உண்மையாகவே கையாண்டார். 'மருத்துவ உலகின் வியத்தகு விந்தையை விளக்கி குமாரின் சிந்தையைக் குளிரப் பண்ணினார். ''மிசு குமார்! இனி நீர் இரண்டாவது பிறப்பெடுத்துவிட்டீர்!

இரண்டாவது பிறப்போடும் வாழ்வோடும் உம்மிடைய குழந்தையைப் போன்ற ஊரில்போய் வாழலாம். இந்த நீரழிவு நோய்க்கு மருத்துவ உலகம் மருந்து கண்டுபிடித்துவிட்டார்கள். விஞ்ஞான உலகின் சாதனைகள் என்றும் சரித்திரத்தில் சரித்திரமாகிக் கொண்டுதான் இருக்கின்றன என்றும் இருக்கும்.'' நிமிர்ந்து துடித்தெழும்பிய கிருஷ்ணகுமார் கட்டிலில் நின்று துள்ளிக் குதூகலித்தார். டாக்டரும் தாதிகளும் புன்முறுவலோடு திரும்பித் திரும்பிப் பார்த்தபடி சென்றனர்.

●

கணையாழி
10-02-2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் இரவு

இந்த நிலவு உலகத்திற்கு அழகும், இன்பமும் அளிக்கும் ''முழுநிலவு'' பகலைக் காட்டிலும் தெளிவாகவும், பூபாளம் பாடும் புனித உதயத்தைக் காட்டிலும் உத்வேகமாகவும், மாலை நேரத்து மயக்கத்தின் மகிமை யிலும் அந்தியின் அற்புதமாகவும் ஆனந்தமாகவும் இருந்தன. கோடைகால இரவுநேர இளம் குளிரும் நிலவின் தேன்சிந்து இனிமையையும் மனிதர்கள் ஒரு புனிதமான கவிதையைப்போல் ரசித்துக் கொண்டிருந் தார்கள்.

என்னால் மட்டும் அந்த நிலவு மண்ணை நோக்கிப் பொழியும் உயிருள்ள கவிதையை ரசிக்க முடியவில்லை. என்னை ஒரு சிறு கார்மேகம் சூழ்ந்து கண்களை இமைக்க முடியாதவாறு ஆழ்ந்த யோசனையின் பிடிக்குள் அமுக்கிக் கொண்டிருந்தன. வீட்டைவிட்டு வெளியில் வந்த நான், கால்போன போக்கில் தெருவெங்கும் அலைந்து களைத்துப் போனேன்.

பிரான்சு தேசத்தில் தேவ அன்னை காட்சி கொடுத்த ''பெர்ணபேத்'' பிறந்த கிராமம் ''நேவியர் கிராமம்.'' இந்நகரின் பெரும் வீதியைக் குறுக்கே வெட்டி நடந்தேன். அந்த ஆலயத்திற்குள் அந்த அன்னை உறங்கும் புனித இடத்தைத் தரிசிக்கும் எண்ணம் சிறிதேனும் என் மனதில் படவில்லை. என் அலைச்சல் எல்லாம் ஆலிங்கனம் தேடும் படலமாகவே இருந்தது. நான் பண்போடு வாழ்ந்த என் ஊர் கிராமத்தைப் பற்றிய, பெற்றவர்கள் பற்றிய, கட்டியவள், குழந்தைகள் பற்றிய எதுவும் எனக்குப் புலப்படவில்லை. பெரும்வீதியை குறுக்கே வெட்டி நடந்தபோது அங்கே ஒரு அழகான நீச்சல் தடாகம். அதன் அருகே நதி ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. அதனருகில் கிடந்த வாங்கில் உட்கார்ந்தபடி ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினேன். என் மனைவி, பிள்ளைகள் நினைவு மனதின் மடியில் குற்றுயிராய்க் கிடந்து தவித்தன. உருக்கொண்ட உணர்ச்சி அடிவயிற்றுத் தணலாக மூண்டு சுவாலை விட்டெரிந்து முன்நின்றன. கடவுள் உலகத்து உயிர்களையெல்லாம் சுதந்திரமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழவே படைத்தான். என் தமிழனை மட்டும் ஏன் நிர்க்கதியாய், அவலமாய் சுமையோடு, சுதந்திரமற்றவனாய் வாழப்படைத்தான்?

மேற்கூறியதைச் சிந்திக்க எனக்குத் தகுதியுண்டா? என்பதையும் நிந்தனையோடு சிறு நினைவில் நிறுத்தினேன்; சிந்தனையின் தீவிரத்தின் தீர்வின் இடைவெளிக்குள் என்னை நினைத்தும் குழம்பினேன். என் உழைப்பு, பணம், நேரம், உருக்குப் போன்ற தேகத்தின் இழைப்பு... இவை யாரோடு உறவாடுவதால் பாழாகிப் போகின்றது? இந்த வெள்ளைத் தேகத்தின் மேல்! ஏன் இந்தளவு கொள்ளை ஆசைகள்? அவளுகளாக வந்து என்னோடு ஒட்டினாளுகளா? மேலும் சோனியா மீது கோபமும் சந்தேகமும் மூண்டது.

நதி ஒன்று பின்புறமாக வளைந்து செல்லும் நீரோடை நீந்தலின் சத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதுவாக என் காதுக்குள் கேட்டது. இரு மருங்கிலும் உள்ள வாங்குகளிலும் வெள்ளை மனிதர்கள் இருந்து உரையாடினார்கள். பூமரங்களில் கீழும், நிலவொளியோடு சேர்ந்து அசையும் பெரும் மரங்களின் கீழும் ஜோடி சேர்ந்திருப்பவர்கள் சல்லாபம் புரியும் காட்சிகளை என் கண்களால் பார்க்க முடிந்ததும் முடியாமலிருந்தது. அவர்கள் கட்டியணைத்து முத்தம் சிந்தும் உச்உச்செனும் ஓசையைக் கேட்கப் பொறுக்க முடியவில்லை. சினத்தின் சீற்றம் முழுநிலவைக் கூட வெறுத்து நின்றது. நிம்மதியான உறக்கத்தை இழந்துவிட்ட இரவாகவே இருந்தது. என் கண் முன் ஆழ்ந்த சிந்தனையில் தென்பட்டதெல்லாம் என்னைப்பற்றிய தீவிரமான உணர்ச்சியோடு என் போன்றவர்களின் வெட்கம் கெட்ட அவலம் பற்றியனவேயாகும். என்னைப் போல் எத்தனை தமிழர்கள் இந்த வெள்ளைக்காரிகளிடம் அகப்பட்டு விசர்க்கோலம் பூண்டு வளமான வாழ்வின் தரமான பண்பாட்டைக் கெடுத்து வாழ்கின்றார்கள்! தமிழனின் உரமான வாழ்வுக்குத் திடமானம் கொண்டு வாழும் புனித வரலாற்று நாளில் தாயக நினைவற்று என் போன்றவர்கள் எத்தனை பேர்?

நான் அந்த வெள்ளைக்காரியின் மீது காதல் வெறியா கொண்டிருந்தேன்? இல்லையே! காம வெறியல்லவா கொண்டிருந்தேன். அதனால் தான் அவள் என்னுடன் பழகும் அன்பின் பாதியை இன்னொருவருக்குப் பகிர்ந்தாள். சீ... சீய் என்ன வாழ்க்கை? எனக்கு ஒன்றுமே புதிதாகப் புலப்படவில்லை.

ஒரு கணம் சிந்திக்காத நேரம். சீற்றம் நிறைந்த முகத்தோற்றம். என் முன்னே ஒரு கிளி! விறைத்துப் போனேன்; நொடிக்குள் உறைந்து கிடந்த உணர்ச்சிகள் கடந்து சென்றுவிட்டது. சற்று நேரத்துக்கு முன் வேகமாக இருந்த கவலைகள், உணர்ச்சிகள் நழுவி விழுந்துவிட்டது. இப்போது ஒரு புத்துணர்ச்சி... காமனின் கைப்பிடி இறுகிக்கொண்டதால்.

அந்த வெள்ளைக் கிளி திரும்பவும் என்னை உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரையும் ஏறயிறங்கப்பார்த்தாள்... அவளின் பார்வையில் நான் திக்கித்தேன்; இரத்தினக் கற்கள் போன்ற கன்னங்கள் துடித்தன... இதழ்கள் திறந்து மூடும்போது என் மனசு இன்ப இரவாகப் போகும் மயக்கத்தில் ஆழ்ந்தது. சுற்றுப்புறமும் பார்த்தேன்; எல்லோரும் தங்கள்- தங்கள் ஜோடி சேர்ந்து சுறுசுறுப்பில் மூழ்கியிருந்தனர். என் இதயத்தின் துடிதுடிப்போடு இப்போது அண்ணாந்து நிலவைப் பார்த்தேன் அதன் வனப்பில் கவி மழையில் நனைந்தேன். பின் என் முன் நின்றவளைப் பார்த்தேன். குறுநகை புரிந்தாள். நான் புன்னகை பூத்தேன். மேலும் அவள் அழகினைப் பருகினேன்; இப்போது அவள் பேசினாள்.

''என்னைத் தெரியுமா ஆனந்தன்?'' என்றவாறு மெல்லியதாய் அணுகினாள் ஒருமுறை நான் திடுக்கிட்டேன். பின் குலுங்கிக் குலுங்கிச் சிரிச்சேன்; ''ஓக்கே! ஓக்கே! நீ புளோறன்ஸ் அல்லோ... நாம் சந்தித்துப் பலகாலமாகிவிட்டதல்லவா? புளோறன்ஸ் உன் அணைப்பு, பார்வை, பேச்சு, உடல்கட்டு, உடையழகு, உபசரிப்பு, இவையெல்லாம் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகத்துக்கு வருகின்றது...''

''நானொருத்தியாக இருந்தாலல்லவா உன் நினைவுக்கு உடன்வர கட்டிய மனைவியைக் குழந்தைகளை விட்டு வேறு ஒருத்தியை இந்த புனிதமான நிலவொளியில் தேடுகின்றாயா? அவளது இரண்டுவரிக் கேள்வியில் முன்பு குற்றுயிராய்க் கிடந்த உணர்ச்சி உயிரற்றுப் போனது. திரும்பவும் கேட்டாள்.

''ஆனந்தன் என்னோடு வாழ்ந்த பிறகு இன்னும் எத்தனை பெண்களை நீ வைத்திருந்தாய்? உன் பண்பாடு என்று தினமும் பிதற்றுவாயே... உன் பாட்டை யார் வெளியில் கொண்டு வருவது? நான் இப்போது உன்னோடு வரத்தயாரானால் எங்காவது ஒரு ஹோட்டலுக்குக் கூட்டிச் செல்வாய் என்பது எனக்குப் புரியும்! தாய் நாட்டில் உள்ள கட்டிய மனைவி, இரண்டு பிள்ளைகள் பற்றிய சிந்தனை சிறிதளவாவது உன்ர பெருத்த மண்டைக்குள் இருக்கா?''

நெஞ்சத் துடிப்பு பெரிதாகக் கேட்க நான் தேம்பித் தேம்பி அழுதேன் . எகிறி நின்றவளுக்குத் தெரியும் நான் வடிப்பது ''நீலிக்கண்ணீர்'' என்பது. அவள் நெற்றியில் சுருக்கங்கள் தோன்றின... நான் முன்பு சொன்ன சொற்களைக் கேட்ட நிலவு முகில்களுக்குள் மறைந்து கொண்டது. என் முகத்தைப் பார்க்கும் வெட்கத்தில் தூய்மையைக் களங்கப்படுத்துவது யார் என்னும் பெரிய கோபத்துடன்.

என் தலை சரிந்தது. புருவத்தை மேலெழுப்பியபடி உருண்ட விழிகளால் அவளைப் பார்த்தேன். என் மீது இரக்க சுபாவம் அவள் முகத்தில் தென்பட்டது. நான் அனுங்கி அனுங்கிக் குரல் கொடுத்தேன். என் குரலை அவள் உற்றுக் கேட்டாள். நதியின் ஓட்டம் சற்று உரத்துக் கேட்டது. இரு மருங்கிலுமிருந்த ஜோடிகள் முத்தங்களும் சந்தம் சேர்த்தது. இந்நேரம் என் நினைவில் கவிதைச் சித்தம் இழையோடின.

''புளோறன்ஸ்! நான் எத்தனையோ விதமான பெண்களைப் பார்த்திருக் கிறேன். பலரோடு உறவாடியிருக்கிறேன். உன்போல் பெண்ணைக் கண்டதில்லை; இன்பத்தின் சொர்க்கத்தைப் பெற்றதில்லை.''

''சீ நாயே! உன் தமிழன் பண்பு நரம்பு செத்துப் போய்விட்டதா?'' குருமணல் போன்ற அவளது கன்னம் ஈச்சங் கனிபோல் சிவந்தது. உதடுகள் துடிதுடிக்கும் சத்தம் என் நெஞ்சினைப் பிழிந்தது. இருந்தும் நான் இரு கரங்களாலும் அவளது கழுத்தை வளைத்திழுத்தேன் அவள் ஒருமுறைக்கு இருமுறை திமிறி விலகினாள். நான் ஒரு கணம் நிதானித்துவிட்டு, அவளிடம் கேட்டேன்.

''புளோறன்ஸ் இன்றைக்கு நீ என்னோடுவருகிறாயா இல்லையா?'' என்று. நான் உன்னோடு என்ன.. பலரோடும் போகத்தான் இந்த இரவில் நிலவின் நீந்தலில் இங்கு வந்தேன்!'' முகத்திலடித்தாப்போல் விழுந்த வார்த்தையில் கிஞ்சிற்றும் வெட்கம் நாணமில்லை. இந்த வார்த்தை களைக் கேட்டுக்கொண்டு. அவளைக் கண் வெட்டாமல் பார்த்தேன். ''அவளுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்?''

நிலவொளியில் அவள் சிரித்து நின்றாள்-நான் முகம் கறுத்து நின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசு எதை எதையெல்லாம் அசைபோட்டது. விரைவான எண்ணம் ஒரு கணம் அவளோடு ஆலிங்கனம் தேடவே முனைந்தது. இந்நேரம் என் வைப்பாட்டிச்சி சோனியா அவ்விடம் வந்து எகிறி நின்றாள்! இப்போது நான் இரண்டு வெள்ளை மாதுகளுக்கிடையில் அகப்பட்டுத் தவித்தேன். இருபக்க அம்பாக என் இதயத்தைக் குத்திக் குதறுவதை குறுகிய கண்ணோடு நோக்கினேன். அந்த நிலவும் ஒருகணம் தரித்து நின்றது. ''மூவரின் முகங்களும் முற்பாவங்களாகக் காட்சி கொடுத்தன.''

இக்காட்சி காணவா நிலவும் ஒளி சிந்துகின்றது? நான் ஒரு தமிழனாய் நின்று இந்தப் பிரஞ்சுப் பெண்கள் வாழ்க்கையோடு விளையாடினேனா? அல்லது அவளுகள் என் வாழ்க்கையோடு விளையாடினார்களா? என்னுள் எழும் இரண்டு கேள்விக்கும் பதில் பகர்வதானால் ''அந்தக் கடவுளுக்குத் தான் வெளிச்சம்''. சோனியா கவலையைப் போக்கவும், தன் மீது கொண்ட சந்தேகத்தை நிவர்த்தவும் திமிரோடு நின்றாள். வாழ்க்கையில் ஏற்படும் தடைகளைப் பிழைகளை அகற்றிடும் நோக்கம் என்னருகில் வர வில்லை. நானும் திமிரோடு இருவருக்கும் நடுவில் நிமிர்ந்து நின்றேன்.

''இடது-வலதுமாக முருகன் மனைவிமார்-வள்ளி, தெய்வானை நிற்பது போல் சின்னச் சிலிர்ப்பு என் மயிர்க்கால்களையும் புல்லரிக்கப் பண்ணியது.

கணநேரத்துத் தர்க்கத்துக்கிடையில் சோனியா தன் முழுப் பலத்தோடும் என்னை கட்டியணைத்து முத்தம் கொடுத்தாள். நானும் அவளை இறுகயணைத்துக்கொண்டேன். இந்நேரம் நாங்கள் கொடுத்த முத்தத்தின் சத்தம் கேட்டுப் பல ஜோடிகள் திரும்பிப் பார்த்தனர்.

இப்போதும் என்னுள் நாணம் தொடவில்லை. அவளுக்கும் நாணம் என்பது என்னதென்று தெரியவில்லை. ''ஓர் இரவு'' வேளையில் என் அந்தரங்கள் அரங்கேறிவிட்டது. இன்னும் என்னை வெட்கம் தொட வில்லை. காமனின் பிடி மேலும் இறுகப்பற்றிக்கொண்டது. புளோறன்ஸ் சிறுநகை புரிந்தபடி தன் குதிக்கால் சப்பாத்து சத்தமிட எக்கிளறிந்த நடையோடு எங்களைப் பலமுறை திரும்பித் திரும்பிப் பார்த்துப் பெரும் கோபச் சிரிப்போடு போய்க்கொண்டிருந்தாள். அவள் சிரிப்பு என் நடப்பின் வெறுப்பாகவே தென்பட்டது. நானும் சோனியாவும் கைகோர்த்தபடி வீடு நோக்கிப் போய்க்கொண்டிருந்தோம்.

''புனித நிலவு மறைந்து விட்டது''
இவனும் தமிழன்தான்
நாளைய விடியலில்
நம்மோடு இவனையும்
நட்போடு சேர்த்தும்
கொள்வோமா... ?

●

ஞாயிறு தினக்குரல்
10-08-1997


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவதையைக் கண்டேன்

மார்கழி மாதத்துக் குளிர் உடம்பெங்கும் ஊசியாய்க் குத்திய வலியை வாய்விட்டுச் சொல்லமுடியாது திணித்திருந்தது. உடலின் உதறலைவிட உள்ளத்தில் பதிந்திருந்த நினைவின் கனப்பின் பதறல் பலமடங்காய் நிலைத்திருந்தன! எந்த நினைப்பு என்பதை எறிதல்-பகர்தல் பண்ணிக்க முடியாத சவப்பிணமாய்த் தனித்திருந்தான். அந்தத் தனித்திருப்பின் சாமத்தின் நினைப்புக்குச் சொந்தக்காரி தாய்நாட்டிலிருந்து பிரஞ்சு நாட்டிற்குள் எப்படி வந்தாள்? கேள்விக்குள் கேள்வி முடங்கிவிடப் பதிலின் அனுமானத்தில் திடமானம் கொள்ள முடியாத சாமத்தில், மேலும் பக்கத்தில் கிடந்த உருவத்தின் உசுப்புதல் பகிர்தலைப் பங்குபோடும்படி கேட்பதாக மௌனபதத்தில் புலம்பிடும் குழப்பத்தில்! மேலும் அவன் பிணம் போல் அரவமற்றுச் சாய்ந்திருந்தான். தனிமையில் இனிமை தேடும் சூன்ய இருளில் வெறுமையான வேதனைதான் அவன் உடம்பெங்கும் உருவெடுத்தன! யார் அவள்?

சணல் முடி மாதுகள் கனவிலும் அண்டமுடியாத அழகுக் கூடல் அவள்! நினைவில் கட்டிலில் உறங்கும் வெள்ளை மாது அருகினில் உறங்க எங்கிருந்து அந்தப் புழுதி மண் தேவதை நட்சத்திரங்கள் இடையே ஜொலித்தாள்? என்னூர் நிலவு எப்படி இங்கு நீந்துகிறது?

சவமாய் இருந்த உடலில் உணர்வால் உயிரூட்டி கனவா-நனவா? இரண்டுக்கும் இடையே தவிக்கும் மனிதமாய் எழுந்து ஜன்னல் கண்ணாடி வழியே கண்களை எறிந்தான். பனிமலர்கள் மேலாய், தனிமலராய், வெண்ணிறத்தை விழுங்கிய கண்ணிலிருந்து நிஜத்தின் நில்லடி நிறுத்தும் மெல்லடியில் தவழ்ந்து சென்றாள். வியப்பில் அவன் முகத்தில் அடி. நிதானத்தில் வாய் புலம்பிட கண் இமையெழுப்பி மீண்டும் அந்தப் புழுதி மகளை பனிமலர்கள் மேல் காண்கிறான்.

அவனையறியாத இருள்மயக்கம் இழையோடி நரம்பெல்லாம் இரத்தம் உறைந்து விறைத்து விதவிதமான சுகமொன்று வியாபித்திருந்தன. கட்டிலில் கிடந்த வெள்ளை உருவம் போர்வைக்குள் ஆழ்ந்த உறக்கத்தில்! அவன் இருவிழிப் பார்வை நோக நோக்குதல் வலியை விலத்தி மொழியைக் கவிதையில் பொழிந்தான்.

அந்தப் புழுதித் தேவதை பனிமலர்களை அள்ளியெடுத்து உருண்டை பிடித்து எறிந்து விளையாடுகிறாள். இத்தருணத்தில் ஏனிந்தக் கோணத்தில் கோலம் போடுகிறாள்? அவனை உசுப்பும் கவிதைக்குள்ளிருந்து நெருப்புத் தகிப்பு. பனிக்குளிரைத் தூக்கி எறிந்துவிட்டு கட்டிலில் கிடக்கும் வெள்ளை மாதை புறந்தள்ளிவிட்டுத் தன்தேகம் பலம் கொண்ட துணிவேறுதலோடு ஜன்னல் கதவைத் திறந்து அலாதியான மௌனப் பரபரப்போடு அவளைத் தேடினான். தெரு விளங்குகள் புழுதிமகளைத் தூக்கிக் கொண்டொளித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிகள் வழி நெடுகே குறித்தான். நேர்க்கோடு தடுமாற உயிர் உருகினான். அவனிடமிருந்து பறித்துப் போனவர்கள் தெருவிளக்குகள்தான் மீண்டும் அந்த நிலவு இந்த வாசத்திற்குள் வந்து வசமாகும். உணர்வு உதறுகின்றது. உறுப்புகள் பதறுகின்றது அவன் பார்வை தெய்வம் தந்துவிட்டுப் பறித்துக் கொண்ட துக்கத்தைச் சுமந்தது. காமாந்த உணர்வைப் புறந்தள்ளி புனிதமான காதல் சொர்க்கத்தின் மிதப்பில் மிதக்கின்றது... விளக்க முடியாத பிரியத்தின் வெளிப்பாட்டைச் சொல்லிவிடத் துடிக்கின்றது. அவள் அந்தப் புழுதிமண் தேவதை எங்கே? யார் அந்தத் தேவதை? சொர்க்கத்தில் சிக்காது தவிக்கும் சொர்க்கத் தீவின் அழகிய சின்னத் தீவின் கடல் தேவதைகள்!

அந்த ஊர்க் கடல் அன்னை மிக மிக அமைதியாக அழகாக இருந்தாள். சில சமயங்களில் பேரலைகளின் மடக்கடிச் சத்தம் அந்த ஊரை விழுங்கி விடும் பேரதிர்ச்சியைத் தோற்றுவிக்கும்! கெடுதல் இருந்ததில்லை. இந்த அலைகடல் தாலாட்டில்தான் அவள் தோன்றினாள். 26 மார்கழி 2004 காலை ஒன்பது மணிக்கு பேரதிர்ச்சியின் பேரிடி உலகோர் தலைகளில் விழுந்தது.

சுனாமி ஆழிப்பேரலை நொடிப் பொழுதில் பொங்கி எழுந்து நெய்தல் நிலத்தையே காவுகொண்டுவிட்டது! அந்தப் பேரலை விழுங்கிய பெண்கள் இந்தப் பனிமலர் தேசங்களில் தேவதைகளாகத் திரிகின்றார்கள்; காதலர்களைத் தேடுகின்றார்கள்; உண்மையைத் தவிர வேறுயில்லை. மௌனடைப்பில் நெஞ்சை அவன் பொத்திக்கொண்டான். அன்பான வளை வாஞ்சையோடு வாரிக்கொண்டவன் குழந்தையைப் போன்ற ஊரவள்-உப்புக் காற்றில்-நீரில் கறுத்த அழகு ஊர் பட்டுமணல் கலரில் காட்சி அளித்த மென்தளிர்மேனியவள்-புனிதவதி-அவள் புனிதத்தை பக்தியோடு பண்ணிசைத்திடும் பவித்திரப் பேழையவள். அந்தப் புண்ணியவதிதான் புனிதவதி! அவள் இந்தச் சுனாமி பேரலைக்குள் அகப்பட்டு இங்கு வந்தாளா? சுனாமிக்குப் பிறபாடு கடல் தேவதைகள் அலைவதாகக் கண்டங்கள் சொல்கின்றன. அந்த உச்சி பிளந்த அடி நினைவிற்குள் அவன் அனலிடைப் புழுவெனத் துடித்தான். முடிவெது வெனப் பின் பாரும்... காதலாலும் கசிந்துருகும் பார்வையாலும் அவள் அவனுக்கு அபரீதப் பெண்ணாக, அதிசயப் பிறப்பாக, தேவதை வார்ப்பாக அவனை ஆட்கொண்ட நெய்தல் மகள். அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்-அந்தப் புனிதவதியின் அன்பை உடைக்க அமெரிக்கனின் அணுக்குண்டாலும் முடியாதென வளர்ந்த காதல்!

அவளைக் காண மணப்பரப்பில் கால்கள் புதைய நடந்து வீதியேறி குச்சொழுங்கைகள் வழியே தனிக்காட்டு ராஜாவைப்போல் மான்மகளின் தரிசனம் காணக் காலை-மாலை நேரம் தப்பாது போவான். அவனிருப்பது அயல் ஊர். அவள் குடும்பம் பற்றிய விசாரிப்பு. தகப்பன்-தமையன்மார் பற்றிய பயபீதி கிஞ்சிற்றும் அவனிடம் இருக்கவில்லை. அவள் இனிய காதல் நெஞ்சே நிறைந்திருந்தன. தஞ்சம் அவள் தரிசனம்: வேலிகளை அலங்கரித்து நின்ற ஊதா-செந்நிறக் கடதாசிப் பூக்கள்கூட அவனுக்கு நறுமணத்தை வீசிநின்றன: பூவரசம் இலைகள் எல்லாம் சுருண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாங்குழல் இசை வழங்கின. சண்டி இலைகள் சாமரம் வீசி நின்றன; செவ்வரத்தம் பூக்கள் தேன் மழை சொரிந்து வண்டை வரவேற்றன. வீட்டு நாய்களும் மோப்பம் பிடித்து காதல் மகளிடம் வாலை ஆட்டி, கால்களை உயர்த்தி காதலன் வரவின் ஆனந்தக் களிப்பினில் துள்ளித்துள்ளி ஓடுங்கள். காற்றிலே மாலைநேரத்து இன்ப கீதம் தவழ்ந்து இருவர் காதுகளுக்குள் ரீங்காரமிடும். இவைகள் அனைத்தும் காதலர் இருவருக்கும்தான் வெளிச்சம்.

இப்பேரானந்தத்தோடு இருவர் வீட்டாரையும் நோக்குங்கால்... புனித வதியின் வீட்டார் சைவமா? வேதமா? எனும் பேதத்தை ஊதியே வாதம் புரிந்தனர். அவன் வேதக்காரன்-அவள் சைவக்காரி. எங்கே இந்த ஆகமவிதி வினையாகி வந்தது? புனிதவதி கண்ணீரைக் கடலாக்கினாள். அவன் புன்னகையைப் பதிருக்குள் புதைத்தான்.. அவன் வீட்டார் எப்படிக் கத்தோலிக்க மதத்தில் பிடியாக இருந்தார்களோ! புனிதவதியின் வீட்டார் சாமிகுடும்பம் என்று ஊரார் பட்டம் சூட்டி அழைக்கும் இந்து மதத்தில் ஊறித் திளைத்திருந்தனர். காதல் முன் இத்தடைகள் கணத்தினில் உருத் தெரியாமல் மறைந்துவிடும்.

நெஞ்சில் பள்ளி கொண்டவள் கோடி முத்தங்களை அள்ளி அள்ளி இனிய புன்னகையால் தந்தவள். அந்தத் தேவதையை நினைத்து ஏங்கியபடி விமானம் ஏறிப் பறப்பதற்கு காதலின் நினைப்பைச் சுமந்த நிதானத்துடன் கொழும்பில் நின்றான். காதல் போராட்டம் கனவுகளற்ற நனவினில் கனநாட்களாக நீடித்தது. காதலாலும் பெற்றோர்களின் கட்டாயத்தாலும் புனிதவதியை ஊரில் விட்டுவிட்டு சிங்கள நாட்டுத் தலைநகர் கொழும்புக்குள் வந்துவிட்டான்.

காதலி நீ பாட்டிசைத்துக்
கனிவோடு கூடும்நாளே
இனிய நன்நாள் அதுவரை
உன்நினைவே பரமபதம்

பேரினவாதப் பேய்கள் தமிழினத்தைக் கொடுமையாக மிதிக்கத் தொடங்கினர். தமிழீழப் போராட்டம் உச்சத்தின் அகோரத்தில் அனர்த்தங்களாலும், அகதி வெளியேற்றங்களாலும் சின்னாபின்னப் பட்டுக்கொண்டிருந்தது. அவன்-அவள் இதயம் பிளந்திடும் இன்னல் படும் காலம்... அவனால் கொழும்பிலிருந்து புனிதவதியுடன் தொடர்புகொள்ள முடியவில்லை. அவனது நிற்கதிக் கோலம் பார்க்கக் கூடிய விதமற்று ரகம்மாறிக் கிடந்தது. பார்வதியைப் பிரிந்த தேவதாஸின் கோலவடிவத்திலும் தோன்றத் தொடங்கினான். எந்த நேரமும் இழப்பின் கொந்தளிப்பின் தாக்கத் தகிப்பில் இருந்தான்; நின்றான்; நடந்தான்; ஓடி ஓடி கொச்சிக்கடை புனித அந்தோனியார் படிகள் ஏறி மெழுகுதிரி கொழுத்திவிட்டு அந்த மெழுகுதிரி அழுவதுபோல் அழுதான். புனிதவதி கனவிலும் நனவிலும் அவனைச் சித்திரவதைப் படுத்திக் கொண்டிருந்தாள். இதயத்தை இழந்த அலறல் அதிவேகப் பாச்சல் பாய்ந்தது. புனிதவதி நல்லவள்; தூய்மையானவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலுக்குக் களங்கம் ஏற்படுத்தக் கூடியவளல்ல. அன்பான காதலை இதயத்தில் ஆழமாகப் பதித்தவள்; உணர்ச்சியின் உந்தலை மௌன சங்கீதத்தில் சங்கமமாக்கிய அற்புதப்பேழை. மூலிகையைத் தேடும் பிணியாளனைப் போல் அவள் அன்பைத் தேடினவனை எந்த மருந்தாலும் குணப்படுத்த முடியாத மனநோயாளியாக மாறிவிட்டான். மேலெழுந்த விமானத்தின் வேகம் எந்தளவோ அதையுமீறிய வேகமாய் அவன் மனஓட்டம். தனித்துப்போன மனஉளைச்சலில் நொடிக்கொரு தடவை வெடிபோல் சீறத் தொடங்கினான். தன்னை விட்டு புனிதவதி பறந்துபோய் விட்டாளா? கூவிய குயில் காவியக் காதலை அறுத்துப் போய்விட்டதா? நடக்கும் போராட்டத்தில் வெடிதாங்கிப் போய்விட்டாளா? தமிழீழத்தை நேசிப்பவள்; அதிகம் யாசிப்பவள் எப்படிப் போவாள்? எப்படிப் பாடுகளைப் பாடுவேன்? இப்படியே வெந்து துடிக்கும் உணர்வில் விமான இருக்கையில் உயிரற்ற பிணமாய் கண்கள் பிதுங்கி இருந்தான்.

புனிதவதியின் பரிச்சயம் போராட்டக் காலத்தில் அகதி முகாம் ஒன்றில் தான் தரிசனம் பெற்றவன். துன்பங்களையும், துயரச் சுமைகளையும், ரணங்களையும் சந்தித்தவேளையில்தான் புனிதவதியைச் சந்திக்க வைத்துக் காதலின் சுவைபடு துன்பயின்ப சுழற்சிக் கிளர்ச்சிகளை அனுபவித்து இன்பயுலகத்தை காட்டிக் காட்டி கிறிஸ்துவின் கற்றூண் காட்சியைக் கொடுத்தது. புனிதவதியின் பார்வைப் பிரியத்தினால் அவன் இன்ப உலகத்தில் பறந்தவன். அவளின் அகத்தின் காதல்முகத்தில் பிரதிபலித் திருந்தது. அந்த அற்புதப் பேரழகின்வதனம் இவன் எண்ணகத்தில் கல்லோவியமாய் பதியப்பட்டுள்ளது. எங்குபோனாலும் அழித்துவிட முடியாது. அவனின்றி அவளில்லை; அவளின்றி அவனில்லை. இன்று வேறின்றி காலத்தச்சனின் காலக் கட்டாயத்தால் வான்பரப்பில் விமானத்தில் பறந்து கொண்டிருக்கிறான். புனிதவதியின் நேசிப்பின் மீதான காதல் வெல்லும் எனும் யோசிப்பில்.

எங்கெங்கு அலைந்து அங்கங்கு எல்லாம் மூத்த குடிமகன் கண்கள் குளமாக, இதயம் ரணமாக, முகமிழந்த தமிழனாய் அவதியுற்று, சமத்துவம்-சகோதரத்தும்-சுதந்திரம் மூன்று உயர் தத்துவங்களை தன்னகத்தே கொண்டு விளங்கும் உயர் புரட்சியில் பூத்து கலைகளின் நிலையில் உன்னதமான உயர்ந்த நாடான பிரான்சில் தஞ்சமடைந்தான்...!

அன்னை நன்நாட்டின் மக்காள்!ஏகுவம்
மன்னு புகழ் நாளிதுவே!
நம்மேல் கொடுங்கோல் செலுத்துவோர்
நாட்டினார் உதிரக் கொடிதனை!

பிரான்சின் தேசியகீதத்தின் சிலஅடிகளை உச்சரித்தபடியே தஞ்சம் கோரினான். அவர்கள் அகதியென்று அடையாளமிட்டு முத்திரை பதித்தனர். உலகில் மூத்தகுடி எனும் பெருமைக்குச் சூட்டிய அழியாத பெயர். காலங்கள் அலைபோல் ஓடின... அடித்துக் கொண்டும் இருந்தன! சூரியன் உதிக்கும் போது நட்சத்திரங்கள் தங்கள் ஒளியை இழந்து விடுவதுபோல் விடிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்ட-விழித்துவிட்ட கனவின் நாளுக்கான உணர்வுகள்-உடலையும் மனதையும் வந்தடையும்போது கனவுகள் தங்கள் பிடியை விலக்கிச் செல்கின்றன. இதன் காரணத்தால் கண்ட கனவுகள் நிலைப்பதில்லை; மறந்து போகின்றன. அவன் கண்ட கனவுகள் பல்லாயிரமாகும். இந்த நிலை பெற்றிருந்ததிற்கு புனிதவதியின் நினைப்பை அவனால் மறக்கமுடியாத நிலைதான். வெள்ளை மனைவியின் நேரடித் தாக்கத்தின் யோசிப்பில் எழும் கனவுகள் காமாந்தக் கனவுகளாக உருவாவதற்கு அவளது செயல்பயம் காரணமாகி விடுகின்றது. அவனுக்குக் காலையில் மறந்துபோற கனவுகளை வெள்ளை மனைவியின் நடை செயல் வாக்குவாதம் மதிப்பின்மை சேர்க்கைப் போக்கு நினைவுக்குக் கொண்டுவரும்! புனிதவதியின் பூமுகத்தை நோக்கியபடி ஏங்கப் பண்ணும் அந்த நேரங்கள் அதிக காலம் அவனை வாட்டி வதைத்தன. இன்றும் அவன் நினைப்பறையிலிருந்து அந்தத் தெய்வமகள் நீங்கவில்லை. அவள் என்னவானாள் என்ற தேடுதல் அவனை நாடுதல் கொண்ட இழப்பின் அலறலாகவும், முடிவுறாக் கொந்தளிப்பாகவும் உள்ளது. இப்படியே இருவரதும் சந்திப்புக்கள் வருடங்களைத் தாண்டி விட்டது.

உணர்வுகளைச் சீண்டிய புனிதவதியின் பூமுகம் அவன் நினைவிலிருந்து நீங்கிவிட்டதா? அவளது கள்ளமற்ற சிரிப்பு கண்களிலிருந்து தெறிக்கும் மின்வெட்டு ஜொலிப்பு மறைந்ததா? கன்ன உச்சியிழுத்த கூந்தல் கட்டின் ஓவியப் பேரழகானவள் எங்கே? நடு உச்சி தெறிக்க இரட்டைச் சடைப் பின்னல் தோளில் தொங்கும் அழகுத் தேவதை எங்கே? முழுகியபின் விரித்த கேசங்களின் நெளிவும் வளைவும் அழகின் அழகே எங்கே? அந்தப் புன்னகைப் பூவரசி நனவிடை இன்பமே! கவிதைக்குள் கவிதையே புதையும்! அவள் ஊர் அந்தக் கடற்கரை ஓரம்தான்; அவள் வீடு அந்த அலைதொடும் இடத்தில்தான்; அவளது மென்பட்டுப் பாதம் புதைய நடை நடப்பது அந்த வெண்மணல் பரப்பில்தான்; புத்தொளிப் புன்னகையின் சலங்கை ஒளிச் சத்தம் ஒலிப்பது அந்த நெய்தல் நிலத்தில்தான். இந்தச் சுனாமி ஆழிப் பேரலை அவள் ஊரையே விழுங்கி ஏப்பமிட்டுவிட்டதே! ஐயகோ! அந்தப் புனிதவதியைத்தான் இந்தச் சுனாமிப் பேரலை அள்ளிக்கொண்டு வந்து இந்தப் பனிமலர் தேசத்தில் தேவதையாக விட்டுள்ளது.

ஐயகோ! அவளது முகவசிகரத்தையும் பூமேனி தழுவும் பருவத்தையும் கண்டேன். அவள்தான் - அந்தத் தேவதைதான் எங்கே? எங்கே என் தேவதை? மூன்றாவது மாடிச் சாளரத்தின் வழி தேம்பிய சத்தத்தையும் நெஞ்சின் பதறலையும் கம்பிளிப் போர்வைக்குள் கிடந்த வெள்ளை மனைவி கள்ளமாகக் கவனித்தாள். அடுத்த கணம் வள்ளென்று குரைத்தாள். சாளரத்தை எப்படி அடிச்சுச் சாத்திய சுறுக்கோடு பயநடுக்கத்தில் கட்டில் தலைமாட்டுச் சட்டத்தில் பிடரியை வைத்துச் சவமாய்ச் சாய்ந்திருந்தான். நித்திரையைக் குழப்பிய வெப்பிசாரம் குறையாது. போர்வையை விலத்திய பார்வையோடு கடிந்துரைத்தாள்,

''ராஜா நித்திரை வராவிட்டால் கோலுக்க போயிருந்து ரீவியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுப்பாரேன்! செக்ஸ் படம் விழும் என்றவள் போர்வையை இழுத்துப் போர்த்தபடி பிரண்டு படுத்தாள். இச்சொல்லடியில் திக்குண்டு கனவுக்குள் விளையாடி புனிதவதி நினைவில் மேலும் வலியத் திணித்தாள். பண்பாட்டுப் பெட்டகம் இருட்டறையில் ஒளிச்சுடர் பாச்சி நின்றாள். அவனைக் கண்டு தலைகவிழ்ந்து போன மகள் சந்திக்கும் நேரங்களில் சிந்திய வார்த்தைகளில் சுடர்விட்ட சந்தோச கானங்கள் சிந்து பைரவியாக ஒலித்துக் கொண்டிருந்தன. கைகளால் தீண்டாது உணர்ச்சிகளைப் புணர்ச்சிக்கு உட்படுத்தாத உளமகிழும் உன்னதமான உத்வேக வார்த்தைகளால் வசப்பட்டு வாழ்வில் வளம்பெறும் வாலிபக் கவிதைக்கு ஊற்றுத் தந்த தெய்வத் திருமகள் மனத்திரையில் ஓடிக் கொண்டிருந்தாள்.

அந்த உத்தம நிலையை இந்தப் பிரஞ்சு தேசத்து பிரியமற்ற பிராணி யிடத்தில் எப்படிப் பெறமுடியும்? இந்த பிரஞ்சுப் பெண்ணை சொந்த மண்ணின் ரோசத்தை விட்டு வரிந்து கட்டிக்கொண்டானா?

இந்தக் கதையையும் சொல்ல வேண்டும்! ஆசைகள் செத்துவிட்டால் ஆட்டமும் அடங்கிவிடும்; ஆசைகள் வெட்கம் அறியாது; ஆசைக்கு அளவேயில்லை. அந்தக் காலம் இளமையின் பருவவிரிப்பின் உச்சக் காலம் இக்காலத்து மனநோய் காமத்தின் உச்சியடிப்பில் நின்றாலும் துணைவேண்டி வேகமாகச் சுழலும் காலம். புனிதவதி எங்கிருக்கிறாள் என்ற அசுமாத்தம்கூட அவனுக்குத் தெரியவில்லை. காலம் கடந்து செல்லச் செல்ல புனிதவதி எங்கிருந்தாலும் வாழ்க! தனிமை அவனை வாட்டியது. இளமை அவனை விட்டுப் போய்க் கொண்டிருந்தது. முடிவை ஒரு சந்திப்பு நிச்சயித்தது. சஞ்சலப்பட்ட ரணத்திற்கு மருந்திட புளோறன்ஸ் அவன் கண்களில் பட்டாள். அவன் வேலை பார்க்கும் சென் மிசல்(st michel) றெஸ்ரோறன்ட் வாசலில்... சில நாளாய் புளோறன்ஸின் சிரிப்பு அவனைத் திக்குமுக்காடப் பண்ணியது. வாலிபன்தான் அவன். கனவில் சஞ்சரித்த நினைவினில் கணப்பொழுதில் புனிதவதியை மறந்துவிட்டான். அவன் மனவானில் புனிதவதி பறக்கிறாள். மறக்கத் துடித்து நினைத்து நினைத்து நொந்து மடிந்து புளோறன்ஸை அடிக்கடி சந்திக்கிறான். ஒருநாள்! இரவுக் கூடலில் இணைகின்றனர். நேரம் கைகூடிய கட்டிலறை ஆலிங்கன நர்த்தனம் சித்தம்போல் சத்தமிட்டு அரங்கேறியது... விடிகாலை விபரம் கேட்டது. அன்றிலிருந்து பதிவற்ற தற்காலிக மனைவி! அவனோடுதான் கூடிவிட்டாள். முட்கள் இப்போது தப்பாகக் குத்துவதாக உணர்கின்றான். காலம் கொஞ்சம் கொஞ்சமாகப் புனிதவதியிடமிருந்து பிடுங்கிவிட்டது. முட்கள் குத்தும் வேதனை புளோறன்ஸின் வடிவில்! அவளது நடவடிக்கைகள் அவன் குரல் வளையை நெருக்கின்றது. சிக்காத சொற்களெல்லாம் புளோறன்ஸின் வார்த்தை முட்களாக தொண்டைக்குள் சிக்கி கோரணிய வாதனை செய்கின்றது! தாய்த் தரணியின் தாற்பரியம் இப்போது அதிகம் நிதானப்படுத்தி புனிதவதியை அதிகம் பூஜிக்கப் பண்ணுகின்றது. அந்த அருந்தமிழ்ச் செல்வி எங்கிருக்கிறாள் என்ற தேடுதல் ஆசை இந்தச் சுனாமி ஆழிப்பேரலை காவுகொண்ட மூன்று லட்சம் மனித உயிர்பலியின் பின்னர் அவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவுடூரத்தின் வியாகுலத்தை விதைத்துள்ளன. தப்பிக்க முடியாத சங்கடத்தில் மாட்டிக் கொண்டவன். புண்ணியவதியான புனிதவதியை அதிகமாக நேசிக்கிறான். நெய்தல் நிலத்தைக் காவுகொண்ட சுனாமி ஆழிப்பேரலையின் கொடூரத்தினாலும் நெக்குருகி அமுங்கிப் போனவன். அந்தப் பேரலை அள்ளிவந்த தேவதையைக் கண்ட அதிர்ச்சிக்குள்ளும் புளோறன்ஸின் பார்வையில் சடலமாய் மாறி விட்டான்! உயிர் பெற்றிருப்பது பனிமலரிடையே தேவதையைக் கண்ட நேரம்...

●

கணையாழி
25-01-2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புணர்ச்சி தேடி

இந்த வாழ்க்கையைப் பற்றிய வாழ்க்கைக் கதைதான் இது! இந்த அகதி வாழ்க்கைக்குத் தகுந்த இடமா? நான் இங்கு புதியவன். எனக்கு முன் பல தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரஞ்சு மண்ணில் வாழ்வதற்கான அடையாள அட்டை தந்திருக்கிறார்கள். உழைத்துப் பிழைப்பதற்கான வேலை தேடி எடுத்து உம்மை நீரே காவாந்து பண்ணிக் கொள்ளவும் தேவைப்படின் பெற்றவர்-உற்றவர் விரும்பியவர்க்கு உதவும் படியான பொதுமைப் பண்பை நீரே வகுத்துக் கொள்ளும் படியாகவும் விரும்பியோ விரும்பாமலோ அமைப்பதற்கு வேலைக்கான அனுமதிப் பத்திரம் உண்டு. இந்த மண்ணில் சிரிப்பதற்கும் சிந்திப்பதற்கும் சந்தர்ப்பங்கள் தவறாது வந்து கொண்டிருக்கின்றன.

பெருவீதியில் நடக்கிறேன். மகிழ்ச்சிக்குரிய காட்சிகள் தென்பட்டும் என்னுள் எழும் சோக கானம் வேகம் எடுக்கிறது. அலாரிப்பில் தேகம் புல்லரிக்கின்றது! மொத்தத்தில் சித்தம் கலங்கிய 'சாந்தன்.' இவன் தன்னையறியாமலே கண்ணீர் சிந்துகிறான். தாயின் தழுவலா? தங்கையின் நெருடலா? தந்தையின் தட்டலா? தமையன் தமக்கையின் குத்தலா எதுவென குறிப்பிட்டுச் சொல்லமுடியாத சம்பவத் தொடர்ச்சிகளின் சிக்கலுக்குள் சிக்கிய சிறைக்கைதியின் சித்திரவதைப் படலம் கண்முன் ஊசலாடுகின்றது. நடையின் வேகம் ஆமையின் வேகம் அடைந்தது. தலைநகர் மானிடர் வேகம் புலிப்பாச்சல் கண்டது. வாகனங்களின் இரைச்சல் காதுச் சவ்வைப் பிய்த்தது! ஒருமுறை வலத்தாலும், இடத் தாலும், பிறத்தாலும் பார்வையைப் பதித்துவிட்டு நேர்குத்தப் பார்த்தேன். இந்தப் பிரஞ்சு தேசத்துத் தலைநகரை என்னமா அலங்கரித்துள்ளார்கள். பல்லின மக்களின் கலைக் கூடம். இத்தேசத்தில் உள்ள ஆற்றலும் அறிவுடனும் அளப்பரிய வளத்துடனும் மகா சக்தியாக இருப்பதைப் பார்க்கப் பிரமிக்க வைத்தது! நான் பிறந்த சின்னஞ்சிறிய தேசம் எப்போது தன்னாதிக்கம் பெற்று பரந்து கிடக்கும் பிரபஞ்சத்தில் தன்னிறைவு கண்டு நிமிரப் போகின்றது? இப்போது சந்தேகமும், சந்தோஷமும் வியப்பின் ஊசலாட்டத்தாலும் அலைக்கழிக்கப் பட்ட நான் வேற்றுவிதமான கிழிசடைச் சமாச்சாரங்களை நோக்காது எதையோ நினைத்துச் சிரித்தேன்.

கவலைக்கு மருந்து சிரிப்புத்தான். சிரிக்கக் கிடைப்பதை இழக்க மாட்டேன். இழந்தால் ஆயுளின் பெரும் மதிப்புக் குறைந்துவிடும். மேலும் சிரித்தேன்; குலுங்கிக் குலுங்கிச் சிரித்தேன். கடவுளின் கருணை என்னும் அருள்பொழிந்த அனுக்கிரகத்தைத் தவறவிடாது சிரித்தேன். பின்னர் சிரிக்கக் கிடைக்கும் வாய்ப்பை எண்ணியவனாக சிரிப்பில் சிக்கவைத்த காட்சிகளையும் நிதானமாகச் சிந்தித்தபடி மேலும் மேலும் பார்வை விழிகள் சுழன்றன. இத்தேசத்தில் மனிதத்துவம் விரும்பி நேசிக்கப்படுகிறது. எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்தை ஒப்புவமைப்படுத்த மொழியைத் தவிர என்ன இருக்கிறது? இத்தேசம் சுதந்திரம்-சமதர்ம-சகோதரத்துவ பூங்காவல்லவா! உலகம் வியந்திடும் புரட்சியில் பூத்த நாடல்லவா! திரும்பவும் கிழிசடைகளுக்குள் பார்வையைப் பதிக்கச் சங்கடப்பட்டவனாக தமிழன் கலாச்சாரப் பரிவர்த்தனை பார்வை திசை திரும்பியது. குடும்பத்தின் அங்கத்தவன்; இருந்தும் நான் இளந்தாரி. சம்சாரியாகும் காலம் கனியும் எனும் கனவு மீதியாக பெரும்வீதி விலகிவிட்டு இப்போது பாதாளத்துக்குள் இறங்கு கிறேன். இது சவக்குழியாகிவிட்டால் ஆத்மா அலையாது தெய்வத்தின் சன்னிதானம் சென்றடைந்து விடுமா? இந்தப் பெண்ணம்பெரிய தேசத்திலும் மனதுக்கு நிம்மதி இல்லையே! என்ன வாழ்க்கை!

கடவுளே! உன்னிடம் கேட்கிறேன்... என்னை ஏன் இந்த மண்ணில் நடமாட விட்டிருக்கிறாய்? யார் காரணம்? உண்டானால் எனக்கு நிம்மதியைத் தந்தருளும். இல்லையே... !

கல்மழை பொழிந்து என்னை இதற்குள் கல்லறை ஆக்கிவிடும்! மூடித்திறந்த கண்ணெதிரே கடவுளைக் காண்கிறேன்.

சிரித்தபடியே மரியாதை செலுத்துகிறார். பின்பு விசாவைக் கேட்கிறார். பொக்கற்றிலிருந்து எடுத்துக் கொடுத்துவிட்டு நான் பேசாமல் நிற்கிறேன். கடவுள் அனுக்கிரகம் அளித்தார். பொலிஸ்காரர்கள் தரித்திரர்கள் அல்ல; நல்லவர்கள். இலங்கையில் இல்லை... பிரான்சில் என்னுடைய நட்சான்றுப் பத்திரம் பரிசளிப்பு.

நான் பிரயாணம் மேற்கொண்டு என்னுடைய இருப்பிடம் வந்தடைந் தேன். நான் குடியிருக்கும் இடம் குடியிருப்பிடமா? டிஸ்க்கோதக்கா? கொட்டலா? களியாட்ட மண்டபமா? இவை எதுவுமே இல்லை! விந்தைக் குரிய விந்தையான மனிதர் இருப்பிடம்... தனித்தவர் வாழ்க்கைக்குச் சிலருக்கு இனிக்கும்! சிலருக்குப் புளிக்கும்-இதிலும் சொற்பருக்கு உறைப்புப்-புளிப்பு-இனிப்புடனான அறுசுவைக்குரிய மகிழ்ச்சிக்குரிய இருப்பிடம் இங்குதான்.

வெளிநாட்டவருக்கு உதவி வழங்கும் அலுவலகத்தால் எனக்கும் 'போயர்'இல் தங்குவதற்கு அருள்பாலித்திருந்தனர். படுப்பதற்குக் கட்டில், போர்ப்பதற்கு கம்பிலிசீற், சமைச்சுச் சாப்பிட, குளிச்சு முழுகத் தேவையான வசதிக்குக் குறையில்லை. ஆனால் இங்கிருப்பவர் எல்லோரும் ஆண் களாகவே இருந்தார்கள். பிரஞ்சுப் பிரஜைகள் எவரும் குடியிருப்பில்லை. ஓய்வுநாட்களில் விலைமாதுகள் உலவுவார்கள். அந்த விலைமாதுகளோடு புணர்ச்சியில் ஈடுபடுவோரின் பல்லிளிப்பும் குழிக்குள் நெடும்தண்டு விடுவோரின் முகவெளிப்பும் திறந்தவாய் குசுகுசு மந்திரப் பல்லிளிப்பும் உருவத்தை அணைத்துப் படுக்கையை விரிப்பதற்கு நடைபோடும். என் நண்பன் ஆனந்தனும் இந்தக் கூடலில் கைதேர்ந்தவன். நான் அவனைக் கேட்டேன் "வருத்தம் வந்தால் உன்கதியென்ன?" ஆனந்தன் அதற்குப் பதில் சொன்னான் "பீரிதி ஏன் இருக்கிறது? அதையும் மீறினால் கடவுள் இருக்கிறார் இருட்சிப்பார்; மனைவி மன்னிப்பாள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்தவிதமான பதிலும் செயலும் ஊரில் உள்ள உவர்கள் மனைவி மாருக்கு நேர்ந்தால் அவர்களை இவர்கள் மன்னித்து கூடி வாழ்வார்களா? இந்த உலகில் மனைவியை விட உயர்ந்த பொருள் ஒன்று உண்டு; அது தாய்! அத்தாய்க்கும் அல்லோ பாவிகள் துரோகம் விளைவிக்கிறானுகள்.

திமிறிய ஆனந்தன் சாரைப் பாம்பாட்டம் சீறியபடி என் நெற்றிமுட்ட வந்து நின்று நவரச பாவம் எடுத்தாடிவிட்டு பின்னர் தள்ளிநின்றான்.

''ஆனந்தனின் கோலவிளையாட்டைக் கண்டு என்னுள் எழுந்த சிந்திப்பின் சிரிப்போடு மௌனமானேன்...

ஆனந்தன் அசையவில்லை, பேசவில்லை. மௌனத்தின் மோனத்தில் தெய்வதரிசனம் தேடினான். இண்டைக்கு வசமா மாட்டுப்பட்டான்; திருந்தியிடுவான். ஆனந்தன் இனி இந்தக் குழிக்குள் விழமாட்டான்!

அங்காங்கு எச்சில் துப்பல், வாந்தி வரும் செயல்கள். சமையல் இடத்திற்குள் நுழைந்தேன். அவரவர் நம்பர் அறைக்குரிய பிளக்கர், சமையல் சாமான்கள், அடுப்புகள், நம்பரைக் கூட்டிப் பார்த்தேன் நாலுதான்! விசாக் காட் நம்பரைக் கூட்டிப் பார்த்தேன் நாலுதான். அகதி அந்தஸ்க் காட்டைப் பார்த்தாலும் நாலுதான். இதனால்தான் இந்த நாய் அலைச்சலா? பிரஞ்சு தேசத்து நம்பர் ஆறு. ஏன் என்ர பிறந்த திகதி நம்பருடன் சேர மறுத்தது? நாலுதான் என்னைக் கொண்டலைக்கழிக்குது! என்ன பாவம்தான் செய்தேன் முற்பிறப்பில்? அடுப்பைப் பற்றவைத்தேன் பற்றி எரியும் நெருப்பாய் நெஞ்சமேடு விம்ம சோகத்தீ சுட்டுப் பிரகாசிக்கின்றது.

என் பக்கத்திலிருந்து ஒருவித வாசனை! அடுப்பில் தாளிச்ச வாசனையு மல்ல; அவிஞ்சு பரவும் அவியல் வாசனையுமல்ல. வித்தியாசமான வாசப்பொருளின் வாசனையே! ஓடு வேசிகளிடமிருந்து வரும் வெடில் வாசனை. மூக்கைப் பொத்தி முகத்தைச் சுழிக்கப் பண்ணியது. ஏன் என்றால் நான் சாமி குடும்பத்தவன். கற்புள்ள பெண்ணிடமிருந்துவரும் பரிமள வாசனையை மிஞ்சியெழும் அற்புத வாசனையை நினைத்துப் பார்த்தேன். என் மூச்சினிடையே நாசியை மூசியிழுத்தேன்! இழுத்தபடியே இடிஞ்சு போய் நின்றேன். இன்னொரு பக்கத்தில் வாய்க்குள் விட்டு நாக்கு நுனியால் துழாவி உமிழ்நீரை உறிஞ்சிக் குடிக்கிறாள்! இவள் இப்படி எத்தனை பேற்ற எச்சிலை உறிஞ்சிக் குடித்திருப்பாள்? ஐயகோ நோய் வந்து தீண்டாதா! என்ன கேடுகெட்ட வாசனை. இந்த விபச்சாரிகளிடமிருந்து என்ன செக்ஸ் இன்பத்தைப் பெறப் போகிறான்? மடையன் இவன் ஆனந்தன்! மனைவி யிடம் பெறும் இன்பத்தைவிட அதுவும் முறையான இன்பச் சுழற்சியைக் காட்டிலும் இந்தக் காசுக்காக வீங்கும் விபச்சாரிகளிடம் எப்படியான புணர்ச்சியைப் பெறுவான்? நோய்வந்து வாட்டும்போது அந்தக் கடவுளுக்குத் தான் வெளிச்சம் சிந்திப்பக் குழப்பிய அல்ஜீரியன் பிரஞ்சில் என்னிடம் கேட்டான்...

''மிசு! உமக்குக் கல்யாணம் ஆச்சா?'' ''இல்லை'' என்று சொன்னேன். அல்ஜீரியன் அட்டகாசமாகச் சிரிச்சான்! அவனோடு சேர்ந்து அந்த விலைமாதுவும் குலுங்கிக் குலுங்கி வெறும் கடுப்பும் வெட்கமும் வரச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்தாள். அவளது விம்மிய மார்பகமும், அரைகுறை ஆடையும், கைகால் அசைப்பும், காமம் மேலிட்ட குத்தீட்டிப் பார்வையும்... அவள் அவனை இழுத்தணைத்திருக்கும் கண்றாவியக் காணக் காணக் கண்களில் நெருப்பு, நெஞ்சினில் உதைப்பு, அடுப்பில் சட்டியில் வேகும் கீரையைக் கிண்டிக் கொண்டு அல்ஜீரியனின் கேள்விக்கு என்ன காரணம் என்பதைக் கிரகித்துக் கொண்டேன். இருந்தும் இவன் பரிகாசமாகக் கேட்டானா? பக்குவமாகக் கேட்டானா? எனும் சற்றுக் கோபத்தோடு ''ஏன் மிசு! இக்கேள்வி கேட்டனீ?'' ''கல்யாணம் ஆகாட்டி இதுகல அனுபவிக்கிறது தானே! ஏன் மிசு உமக்கு மற்றது இல்லையா?''

கடவுளின் நாமத்தை உச்சரித்தபடி கெம்பிய கோபத்தை அடக்கிக் கொண்டேன். இந்த நேரம் இடப்பக்கமாக நிண்ட கோவிந்தன் வழி மொழிந்தான். ''சாந்தன் இண்டைக்கு வந்தவளுகள் எல்லாரும் நல்ல இன்பம் தந்து மகிழ்வித்தாளுகள். சாந்தன் நீதான் கைக்கு வாய்க்கெட்டு வதை எல்லாம் அனுபவிக்காமல் நிற்கிறாய். கோவிந்தன் என்னுடைய நண்பன்தான். இங்குதான் இந்தப் போயரில்தான் நட்பு ஏற்பட்டது. இலக்கியத்தின் மீது காதல் கொண்ட எனக்கு கோவிந்தன் நட்பும் கசந்தது. ஊரில் நான் வசித்தது போல் இந்த ஒப்பின் செக்ஸ் கலாச்சாரத்தோடு ஒன்றித்திட என்னால் முடியாதிருந்தது. இங்கு வாழ்பவர் எல்லோரும் என்மொழிக்காரனும் தங்கள் மனைவிமாருக்கு பச்சத்துரோகம் பண்ணு றானுங்கள். இவங்களைப் பற்றி ஒரு காவியமே தீட்டிவிடலாம்! ஒவ்வொருதருடைய குணாதிசயங்களையும் எண்ணி எண்ணி எழுத்துற்றால் காமரசமே ததும்பி நிற்கும்! திருமணப் பந்தத்தில் ஒட்டும் எண்ணமே விட்டுப் போகும்.

இப்போது நாலாமாடி அறையில் உள்ள அநேகர் சாப்பாட்டு மேசைக்கு வந்துவிட்டார்கள். கதிரைகளில் இருக்கும் சிலரது மடியில் விலைமாதுகள் தங்களது பெருத்த குண்டிகளை வைத்தமர்ந்து காமக்கண் முழிகள் உறுட்டலோடு கொங்கைகள் மறைப்பின்றிக் குலுங்க உணவு உண்ணத் தொடங்கினர். இக்காட்சிகள் எனக்குப் பலமுறைப் பழக்கம்தான். நூற்றியிருபதாவது அறையிலிருந்து நண்பன் ஆனந்தன் மட்டும் இன்னும் வரவில்லை! அவன் நான் முன்னம் சொன்ன சொல்லடியில் நல்ல பிள்ளை ஆகியிருப்பான்-தூங்குகிறான் போலிருக்கு... எதற்கும் 'அன்பே நீயங்கே நான் இங்கே! வாழ்ந்தால் இன்பம் காண்பதும் எங்கே! என்று தினம் பாடுறவனைச் சாப்பாட்டுக்காவது எழுப்புவோம் என்று விரைவாக நடந்தேன்!

இந்த இடத்து மனிதர்களுடன் மிகவும் நலத்துடன் வாழ்ந்து வருகிறேன் என்று எப்படி என் தாய்-தந்தைக்குக் கடிதம் எழுதுவேன்? இவர்களின் சிந்தனை உணர்ச்சிகள் இவ்வளவு கிழிசடையாக உள்ளதே! எந்தன் மொழிக்காரனுமல்லவா இப்படிப் பாழ்பட்டுப் போறானுகள்! என் இருதயத்துக்குள் ஆழ்ந்து கிடக்கும் சிந்தனையில் பெண்களுக்கு இவர்கள் இழைக்கும் இழிசெயல் 'கற்புள்ள தமிழச்சி சீறிவந்தால் விளங்கவில்லைப் போலிருக்கு!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது ஆனந்தனின் அறைக்கதவு முட்டப்போய் நின்றனான். கைதூக்கித் தட்டும் முன் நிதானத்தைக் கூர்மையாக்கி காதைத் திறந்தேன். ஓசை, சிரிப்பு, அனுங்கள், கிறிச் கிறிச் சத்தத்தை மீறிய இன்ப முனுங்கல்! ஆத்திரத்தோடு பெலமாகக் கதவைத் தட்டினேன். அடிச்சுத் திறந்த கதவுத் தாழ்பாளைப் பிடித்தபடி நிர்வாணமாக நின்றாள் வெள்ளைக்கார விலைமாது. பழுப்பேறிய பற்கள் தெரிய புலுட்டுச் சிரிப்போடு எடுத்தெறிந்து சொன்னாள்.

''இன்னும் முடியவில்லை! முடிந்ததும் வருவார். இப்போ அங்கால போய்நில்லும்.'' என் முதுகுத்தண்டு முறிந்தது. என்னுள் ஆனந்தனின் செயல் வெறுப்பையும், கிளர்ச்சியையும் உண்டுபண்ணியது. அதனிலும் ஒருவகை இரக்கம் கீறிட்டது.

'கல்யாணம் முடிச்ச கையோடு பிரான்சுக்கு வந்தவன். அனுபவிச்சது மேலும் சூடேற்றிக் கொண்டிருக்கலாம். இவனுக்கு மட்டும்தானா? ஊரில் உள்ள அந்தப் பெண்ணுக்கும்தானே! தவறாக நடப்பவர்கள் மனைவியரும் வேறொரு ஆடவனுடன் இன்பச் சுழற்சியில் ஈடுபட்டால். அவளை இவன் மன்னித்து ஏற்பானா? இல்லைத் தமிழ் கலாச்சாரம்தான் ஒத்துக்குமா? மனம் கொதித்தது. செக்சுவல் வேண்டுமான மட்டும் அந்தரங்கமாக இருப்பதே நாகரீகம். இந்த மண்ணில் இது சர்வ சாதாரணம்! திறந்தவெளி நிர்வாணம்...

உடலுறவில்கூட புனிதத்தைக் கடைப்பிடிக்க வேண்டுவது எங்கள் ஆகமங்கள். என்குடும்பத்தைச் சாமியார் குடும்பம், சாமியம்மா குடும்பம் என்றுதான் ஊரில் அழைப்பார்கள். அப்படிப்பட்ட ஆகம விதிகளுக்கு அமைந்து அடங்கி வாழ்ந்து வந்தவன். நான் இங்கிருக்கும் ஒவ்வொரு கணமும் நெருப்பில் மிதிகதியாகவே இருந்தது. என் சமூகம் சீரழிந்து போய்விட்டதா? கோபத்தோடு திரும்பி சாப்பாட்டு மேசைக்கு தளர்வில் கால்கள் இடறுபட நடந்தேன். பல்லினத்தவரின் கெக்கலி கொட்டிய சிரிப்பொலியும், நக்கல்பேச்சும், பரிகாசப் பார்வையும் என் இதயத்தைப் பிளந்தது. கண்களில் கண்ணீர் பீறிட்டுப் பாய்ந்தது. இதழ் திறவாத சோகப் புன்னகையோடு,

''நண்பர்களே! நான் கேட்டுக்கொள்வதைக் கொஞ்சம் உங்கள நீங்களே கேட்டுப் பாருங்கள். உங்கள் மனைவி அக்காள் தங்கைமாரைத் திரும்பிப் பாருங்கள்.'' இப்படிக் கூறிவிட்டு சாப்பிட மனமற்று சற்றுக் கழிந்த மணித்துளிகளின் பின் அறையை நாடி நடக்கிறேன்.

ஆனந்தன் தூவாயைத் தோளில் போட்டுக்கொண்டு புறுபுறுத்தபடி குளியல் அறையை நாடி ஓடுகிறான்.

என்னடா என்று வெட்கம் கெட்டவனைக் கேட்டேன். ''இந்த வேசை படுதேவடியாள் நோய்பிடிச்சவள் போலகிடக்கு'' ஓடுறான் ஓலமிட்டபடி ஓடுறான். என் சிந்தனை உணர்ச்சி கற்புள்ள பெண்ணின் சாபமெனக் கொள்கிறது. உவனை என் சிநேகிதன் என்று சொல்வதா? ஊரில் அயல் வீட்டுக்காரன்; பரஸ்பரம் அறிமுகமானவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது மருந்து-சோப்-சம்போ வேண்டுமட்டும் போட்டுத் தேய்தே யெனத் தேய்த்துக் குளித்துவிட்டு பல்லிளிச்சபடி தூவாயால் முகத்தை மறைத்துக்கொண்டு வந்தான்... ஆனந்தன் குளிக்க ஓடும்போது கண்ட யிடத்திலேயே நான் கல்லுருவாய் நின்றேன். என் விழி அவனைப் பார்த்தன. ஆனந்தன் விழி தாழ்த்தி நின்றான். நான் வேதனையோடு குறும்புன்னகை புரிந்தேன். ஆனந்தன் இரகசியமாய் தூவாயைக் கிளப்பிப் பார்த்தபடி நகர்ந்தான். நான் ஆனந்தனைக் கூப்பிட்டேன். நண்பன் எனும் நட்பின் நெருக்கத்தோடு நெக்குருக நின்று... அவன் வெட்கம்கெட்டவன் சொன்னான்.

'இதை ஒண்டும் பெரிசாக்க நினைக்க வேண்டாம். இது இங்க பிரமாத மான தப்பில்லை சாந்தன்! வேறு ஆருக்கும் பறைஞ்சு போடாதேயும்.'

அவன் கன்னத்தில் ஓங்கியறைய வேணும்போல் இரண்டு கைகளும் துருதுருத்தன. மயிர்க்கால்கள் கூச்சமெடுத்தன. இங்கிருக்கும் ஒவ்வொருத் தனுடைய விழிகளின் முனைப்பில் காமவெளிதான் மினு மினுத்தன. ஐந்தாம் மாடி-நாலாம்மாடி-மூன்றாம் மாடி-இரண்டாம் மாடிகளில் வாழும் என்னொத்த இளைஞர்கள் பலர் இந்தப் புணர்ச்சிக்கு விபச்சாரிகளோடு இராப்பொழுதைக் கழிப்பதிலும் பணத்தை விரையமாக்குகின்றார்கள்! இவர்கள் யோசித்துத் திருந்துவார்கள் என்ற நம்பிக்கை விட்டுப் போய் விட்டது. ஆறாவது மாடியில் இருக்கும் வயதானவர் யாழ்ப்பணத்தவர் அடிக்கடி என்னோடு மனம்நொந்து உரையாடுவார். இந்த இடத்தைவிட்டு நம்ம பொடிகளைப் போகப் பண்ணனும் தம்பி. அவங்க கெட்டுப் போனாங்க. உழைக்கிற காசையெல்லாம் உந்த நாறின வேசைகளட்டக் கொடுத்து அழிஞ்சிடப் போறானுகள் தம்பி. 'விந்து விட்டவன் நொந்து கெட்டான்.''

''நீங்க மனசப் போட்டடிச்சிக்காதீங்க'' என்று அவருக்கு ஆறுதல் சொல்லி அனுப்புவேன். எனக்கும் வேலை கிடைத்தால் இந்த நரகத்தை விட்டு ஓடிப் போயிடுவேன். இங்கு வாழும் எல்லோரையும் நேசித்து வாழத்தான் நானும் பிரியமாயிருந்தேன். இவர்களுடைய நடத்தைதான் நாசமாகிவிட்டது! தூய நல்லன்பையும் நாலு பிள்ளைகளையும் மனைவியையும் விட்டுப் பிரிந்திருக்கும் பெரியவரும் பிரஞ்சு அரசாங்கம் வேலையற்றவருக்குக் கொடுக்கும் உதவிப் பணத்தை மிச்சம் பிடிப்பதற்காக முரண்டுபிடித்து இந்த நரகத்திற்குள் வாழ்கின்றார். ஈரோக் காசை ஊர்காசுக் கணக்கில் கூட்டிப் பெருமூச்சுவிடும் பெரியவர் உவங்கள் உந்த வேசைகளுக்கு எறியும் ஈறோக்களையும் மனக் கணக்குப் பண்ணிக் கொதித்தெழுவார். காறித் துப்பிச் சாபம் போடுவார். எக்கேடு கெட்டுப்போனாலும் நமக்கென்ன என்ற வேண்டா வெறுப்பான வார்த்தையை வீசி ஒதுக்கும் சுயநலப் போக்கு அவரிடம் இல்லை. 'வயல்களுக்கு களை அழிவை உண்டாக்குவது போல் இங்குள்ள நம்ம தலைமுறைக்குக் காமஇச்சை அழிவை உண்டாக்கிறது. தம்பி நம்ம தலைமுறை சிதறுண்டது போலவே சீரழிஞ்சும் போகுது தம்பி!'

நான் பெரியவரை இமைவெட்டாது பார்த்து நின்றேன். அவர் திரும்பவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசினார். 'தம்பி சாந்தன்! உவங்களையெல்லாம் உந்தயிடத்தைவிட்டுப் போகப்பண்ணனும். நல்ல வேலைகள் செய்து காசு வாங்கிறானுகள். குடும்பப் பாங்கான இடங்களில் வீடுகள் எடுத்துப் போகணும். ஓராள் - இரண்டாளைத் தவிர எல்லாருமே இந்தப் புணர்ச்சிய விபச்சாரிகளிடம் தேடுறானுகள். எக்கணம் நோய் தொற்றிச் சீரழிஞ்சு போகப் போறானுகள்.'

நெஞ்சில் சுமந்த ஈபிள் ரவர் உயரக் கவலையோடு நடந்துகொண்டார். நான் அவரை நேர்குத்துப் பார்த்து நெஞ்சு பிளந்த வேதனையோடு நின்றேன். பொறுப்பற்றவனுகள் சேட்டைக்கும் வேட்டைக்கும் வெள்ளி- சனி- ஞாயிறு மூன்று நாள் விடுமுறை வந்தது. இந்த வெள்ளி பிரஞ்சு தேசத்து விடுதலைவீரர் நாள். எங்கும் அந்த மண்ணின் மைந்தர்கள் ஞாபகார்த்த நடுக்கல்கள், தூபிகள், சிலைகள் நிறுவப்பட்டிருக்கும். இந்தநாளில் நாட்டுப்பற்றாளர் மலர்களால்-செண்டுகளால் அவ்விடங்களில் அஞ்சலிப் பார்கள். பாரிசிலிருந்து தொடர்வண்டியில் பதினைந்து நிமிடம் பிரயாணம் மேற்கொண்டு, 'சாம்பணிய்(CHAMPIGNY) ஸ்ரேசனில் இறங்கிய பின்னர்... பேருந்தில் பத்துநிமிடப் பிரயாணத்தில் போயருக்கு வந்திறங்கும் பஸ் தரிப்புச் சந்தியில் உள்ளது வீரர்கள் நினைவிடம். இதனடியில் மலர்கள் குவிந்து கிடந்தன. இக்காட்சியக் காணும்நேரம் எம் மாவீரர்களின் கார்த்திகைத் தீபநாள் நெஞ்சில் கொஞ்சும். அந்தத் தேசீயவீரர் முன் குவிஞ்சு கிடந்த பூக்களை-செண்டுகளை இரு விபச்சாரிகள் எடுத்துக்கொண்டு போயரை நாடி நடப்பதைப் பெரியவர் சுந்தரலிங்கத்தார் கண்டுவிட்டார். செந்தமிழ் பேசும் தமிழீழத்தின் போராட்டப் போராளிகளின் நினைவுக் கல்லறையில் கிடக்கும் காணிக்கைமலர்களை எண்ணிக் கலங்கியவர். நாணமில்லாத பெண்களின் கரம்பட்ட மலர்களின் வாசனை செத்தபிண வாசனையாக வீசுவதை அவர் கிரகித்தார் வேதனையோடு சுந்தரலிங்கத்தார். தன்கையில் வைத்திருந்த மலர்க்கொத்தை தமிழீழ தேசத்து மண்மீட்பில் மடிந்த மாவீரர்களை எண்ணியபடி அம்மலர்க்கொத்தை மலர்க்குவியல்மேல் போட்டார்.

போயர் மாடிப்படிகளில் தேனாய்ப் பாயும் மொழியின் ஒலி கலாம் புலாமாகக் கேட்டது. சுந்தரலிங்கத்தார் ஒரு தோளில் தொங்கிய பையோடு ஆறாவது மாடியிலிருந்து இறங்கி நாலாவது மாடிக்கு வந்தார். நான் அவரது கோலத்தைக் கண்டதும் மிகநெருக்கமாகப் போய்நின்றேன். மனைவி பிள்ளைகள் பற்றிய நெக்குருகுதலோ அல்லது இங்குள்ளவர்களின் மனைவிகளைப் பற்றிய கவலையோ? என்னமோ பொதுமையில்தான் இப்படியான கோலம் கொண்டுள்ளார் என்பது என் கிரகிப்பாயிருந்தன.

''சாந்தன்! நான் இங்கு மூன்று வருடங்களாக இருந்திருக்கிறேன். என் வருவாய்க்குத் தகுந்ததெனக் கண்டுதான் நான் யார்மீதும் அதர்மம்- காய்மகாரப்பட்டவனுமல்ல. என் போக்கில் இங்க நம்ம பொடிகள் செய்வது தப்பாகவே பட்டது. பலருக்கு பலமுறை என் ஆதங்கத்தை எடுத்தியம்பினேன். அதற்கு அவர்கள் செவிசாய்த்ததாகவும் சொன்னவை களைச் சீர்தூக்கிப்பார்த்து தக்க பரிகாரம் தேடுபவர்களாகவும் எனக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவில்லை. இப்படியே போனார்களானால் எங்குபோய் முடியப் போகுதோ அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம். சாந்தன், இன்று போகிறேன். இனி வந்தால் கண்டுகொள்.'' வீதியிறங்கி பெருவீதி நடைபாதையால் போய்க்கொண்டிருந்தார்...

என் முதுகை ஒரு கை மெதுவாகத் தட்டியது! தடவலாகவும் தென்பட்டது... வலப்பக்கமாகத் திரும்பி நெற்றி முட்டப் பார்த்தேன். கண்ணிமைகள் பட படத்தன. நெஞ்சு மூச்சு கடல் அலைபோல் எழும்பி நதிபோல் அடங்கியது. மூத்தகுடிப் பெண்போல் கண்ணுக்குள் நின்றாள். வாய்மொழியால் தாய்மொழி அறியலாம். அந்த ஆச்சரியத்தைப் போக்கும் விதத்தில் அவளாகவே வாய்திறந்தாள். அவளொரு இந்தியப் பெண்! எந்தமொழிப் பெண்? ''........'' தவறுகளுக்கு இருக்கிற கெட்டியான வேர்களை நினைத்துப் பார்த்தேன். சட்டென்று ஒரு துணிவு மனசில் ஏற்பட்டது. அந்தத் துணிவைத் திரும்பத் திரும்ப மறுபரிசீலனை செய்தேன். பக்கபலமாக நின்றது என் மன வைராக்கியம். வேதங்கள் பேசும் சமுதாயம் எதைத்தான் தடுக்கின்றது? இடக்கு மடக்காகத் துடக்குப் பட்டிடும் என்றா? நான் அந்தப் பெண்ணைப் பார்த்துச் சிரித்தேன். அவளும் கனிவாகச் சிரித்தாள். நெருங்க முற்பட்டாள். எனக்குக் கடும் எரிச்சல் ஏற்பட்டது. அவள் அதையும் பொருட்படுத்தாமல் என் கரங்களைப் பற்றியிழுத்து 'அறைக்குப் போவோம்' என்று அனுங்கினாள். கடும் கோபம் பீறிட்டது. அவள் சிரித்தாள். என்னுள் தளர்ச்சியும் தாற்பரியமும் ஏற்பட்டது. என்னைவிட வயதில் முதிர்ந்தவளாக இந்தக் குங்குமப் பொட்டுக்காரி இருந்தாள். அவளது இந்த வழி தவறலுக்குக் காரணம் கேட்கும் குறி முகத்தில் பிரகாசமடைந்தது. இந்த நிலைப்பாட்டை ஆனந்தனும் கோவிந்தனும் ஒளிச்சு நின்று பார்ப்பதையும் நான் அவதானித்தேன். கடைக்கண் பார்வையில் உள்வாங்கியபடி இந்தக் காரியத்தின் சூத்திரதாரிகள் இவர்களாகத்தான் இருக்கும்.

அப்பெண்ணிடம், 'இண்டைக்கு வேண்டாம் நாளைக்கு இல்லை! பேந்தொரு நாளைக்குப் பார்ப்போம்... நீ இந்த இடத்தைவிட்டுப் போய்விடு! இந்தக் கேடுகெட்ட தொழில் உனக்கு வேண்டாம்' என்று சொன்னேன். அவள் திமிறியடிச்சு வேகமாக ஓடிப் படிகள் இறங்கி மூன்றாம் மாடிக்குப் போனாள்.

ஒரு பயங்கரமான தோல்வியைச் சந்தித்துவிட்ட அசட்டுக் கோபமும் பிடிவாதமும் மிதமிஞ்சி நின்றதால் வேறு அறைக்குள் நுழைந்து விட்டாள். இருந்தும் அப்பெண் என் கண்களுக்குள் நின்றாள். உரித்தான நாணம் குறையாத பெண்ணாக இருந்தாள். இத்தொழிலுக்குப் புதியவளாகவும் எனக்குப் பட்டது. மனசில் மிகப்பெரும் கவலை கனத்தது. எனது மரக்கறிச் சாப்பாடும் ஆகமவிதிகளும் மேலும் உருப்பெற்றது. துணிவோடு அறைக் குள்ளிட்டதும் கண்ணில்பட்ட பையைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டேன். மூலையில் எழுதிவைத்த காகிதங்களையும் எடுத்துக் கொண்டேன். நீண்ட கொலிடோவர் வழியாக நடந்து கீழிறங்கும் படிவாசலில் நிண்டு வெறித்துப் பார்த்தேன்! இன்று எனக்கும் இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயரில் இருந்து விடுதலை கிடைத்துவிட்டது. இறைவா இவர்களை இரட்சித்துக் கொள்ளும். இங்கிருந்து எப்போது போக மனசுப்படும்? திட்டத்தைத் தீட்டிக்கொண்டிருந்த திட்டத்துக்கு நடைமுறைப்படுத்திவிட்ட பெண்ணை அடிக்கடி நினைக்கத் தோன்றியது... இங்கிருந்தால் நானும் விபச்சாரனாகிவிடுவேன். எப்படி இந்தப் போயருக்குள் அடியெடுத்து வைத்தேனோ... அந்த நிமிசம்வரை புணர்ச்சி தேடாதவனாக விந்துவை எந்தக் குழிக்குள்ளும் விடாதவனாக எழுதிவைத்த கவிதைகளை விரித்துப் பார்த்தபடி படிகள் இறங்கி விசாலமான வாசல் வழியாக நீண்ட பெரும் வீதியின் நடுவே கணநேரம் நின்றேன். நடைபாதையில் சற்றுநேரம் நடந்தேன். பின்னர் ஸ்தம்பித்து நின்றேன்! திரும்பி ஆறுமாடிப் போயர் கட்டிடத்தை வெகுநேரமாகப் பார்த்து நின்றேன்... என்னோடு பேசிய பொட்டுக்காரி - அந்த அழகானவள் வேகமாக நடந்துவருவது தெரிந்தது. என் முன்னோக்கிய நடையை வேகப்படுத்தினேன் திரும்பிப் பார்க்காமல்.

●

25.12.2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருப்பு

சோமசுந்தரத்திற்கு பிரான்ஸ் புகலிடத்துத் தமிழரின் சின்ன உலகத்தில் உள்ள நட்பையும்-மரியாதையையும் எண்ணி ஏங்கி நெஞ்சு நிறையப் பெருமிதம் கொண்டவர்கள். இந்த வருடம் சோமண்ணனின் நடை - உடை - மனமாற்றம் கண்டு பலருக்கு வியப்புடன் கலந்த கவலையை வீசி நின்றன. அவரது மனது கனதியாகச் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தது. பிரான்சுக்குள் வந்து பத்து ஆண்டுகளும் ஓயாமல் ஒருவகைத் துக்கக் கனப்பு மனசைச் சதாஅழுத்திக் கொண்டிருப்பதை அவதானிக்க கூடியதாகவும் எறும்பு போல் எந்த நேரமும் சுறுசுறுப்பாக இயங்கிய மனிசன் இப்போது "வியாதிக்காரர் போல் ஆகிவிட்டார்!" வெளியில் அலைந்து திரிவதும் தன்பாட்டிற்குத் தனித்திருந்து வாய்க்குள் முணு முணுப்பதுமாகவே இருக்கின்றார்! ஒரே வார்த்தையில் சொல்வதானால் 'இப்போது அவர் நடைப்பிணமாகவே ஆகிவிட்டார்!'

அவரைவிட வயதுக்கு மூத்தவர்களுக்கும் இளையவர்களுக்கும் விசித்திர மான விபரீத யோசனையைக் கொடுத்தது. அவரது மூளைக் குழப்பத்தைத் துழாவிக் கண்டுபிடித்துத்தக்க பரிகாரம் பண்ணவும் சீர்தூக்கிப் பார்த்து உகந்த உதவி புரியவும் நேர்த்தியுள்ள சிந்தனையுள்ள இளைஞர்கள் கருசனையுடன் இருந்தனர்.

ஊரைவிட்டு பாரீஸ் வந்த கால முதல் பலருக்கு ஏணியாகவே தாங்கி நின்றவர். வாழ்க்கையின் பிடிப்பை, கண்டிப்பை, கடமையை, பண்பை, பக்குவத்தை, நேர்நெறிகளை வாழ்வின் வாழ்வாக வாழ வழிசமைத்தவர். வாழ்வு இன்று கோணலாகப் போனதை எண்ணி எண்ணி இரத்த உறவுகள் பலர் உருகினார்கள். சிலர் உள்ளூரப் பொருமினார்கள்.

"பெஞ்சாதி பிள்ளைகளின் வரவின் தாமதமோ? பிள்ளைப் பாசத்தின் பதகளிப்போ? மனைவியுடனான விரக தாபமோ? நரம்புக் கோளாறோ? மூளைப் பிசகுக் காரணமோ? என்று விமர்சனம் சூட்டினர். இன்னும் சிலர் மறைவாகக் காதுக்குக் காது குசுகுசுப்பதும் அவருடன் நெருக்கமானவர்கள் காதுக்குக் கசப்பாகவே தென்பட்டது.

அன்று சனிக்கிழமை. காலை எழுந்ததும் ஒருவாரத்திற்கு மேலாகக் கழட்டாமல் கசங்கி ஊத்தை படிந்து பார்க்க அருவருப்பாகக் கிடந்த ஆடையுடன்... பலமான வருத்தத்துடன் வெளியில் புறப்பட எத்தனித்தவர் கதவுத் தாழ்ப்பாளைப் பிடித்தார். இந்தநேரம் அறைக்குள்ளிருந்து அன்பான அதட்டல் குரல் அக்கறையோடு தொனித்தன.

"என்னண்ணை! வெளிய போறீங்களா? ராத்திரி முழுக்கத் தூக்க மில்லப் போலிருக்கு?"

"தூக்கம் வரயில்லைக் கருணா!"

"போட்டிருக்கிற ஊத்தை உடுப்பையாவது மாத்திக்கொண்டு போங் களேன்." பதில் சொல்லவில்லை! கதவை இழுத்துத் திறந்தவர் படிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கும் சத்தம் பெலத்துக் கேட்டது.

சோமண்ணன்! இன்னும் நாற்பத்தைந்து வயதைத் தாண்டவில்லை அவருக்கு இரண்டு பிள்ளைகள்தான்... ஆசைக்கு மூத்தவள் பெண்ணாகவும் பெயரடிச்சுச் சொல்ல இளையவன் ஆணாகவும் பெற்று ஆனந்தமடைந் தவர். வாழ்வின் அகராதியில் அர்த்தம் பொதிந்து எழும். சூரிய ஒளிபோல் துலங்கும் எண்ணக் குவியல்களோடு சீரோடும் சிறப்போடு நேர்த்தியான நெறிமுறைப் பிடிப்போடும் நேர்வழி நடந்தவர். போனவருடம்தான் மூத்தவள் 'பூப்பு' அடைந்துவிட்டாள் என்ற செய்தி கடிதம் மூலம் அறிந்து, ஆனந்தக் களிப்பில் அண்ட வெளியெங்கும் பறந்து ஆரவாரம் பண்ணி அமைதியடைந்தவர்.

இந்தவருடம் உடலும் உள்ளமும் தளர்ந்து, கண்முழிகள் பிரண்டு, நெற்றியில் ஓடும் நரம்பில் இரத்தம் கண்டிப்போனதால் மேல் எழும்பிய நடுநெற்றியும் பளபளப்பற்று மேடுபள்ளமாய்க் கிடந்தது. பசி எடுப்பதுகூட இல்லாது... ருசியறியும் நாக்கும் செத்துப் போய்விட்டது. வெளியில் சென்றுவந்தால் எங்கெங்கு போய்வந்தார் என்பதை மறந்து குழம்பிப் போய்விடுவார். உணர்ச்சிகளை அடக்கித் தன்னிலை மறந்து தடுமாறினார்.

தனியாக வீதியில் போகின்றவர்களையும், ஆண்-பெண்ணாக ஜோடி சேர்ந்து போகின்றவர்களையும் குறிப்பாகத் தமிழர்களைப் பார்த்து விழிகள் பிதுங்க, றப்பர் பந்து கிழிஞ்ச சிரிப்பைச் சிந்தியபடி குலுங்கிக் குலுங்கிச் சிரிப்பார். பாரீஸ் நகர நெருக்கமான வாகனப் போக்குவரத்து இரைச்சல் களும் மிதமிஞ்சிய வெப்பிசாரத்தைக் கொடுத்தது. இவற்றை எல்லாம் 'கருணாகரன்' மிகவும் உன்னிப்பாக அவதானித்திருந்தான். சோடணை பண்ணிச் சாட முடியாத துன்பத்திலும் தினமும் மிதந்திருந்த நல்ல ஆத்மா அகதிவாழ்வின் அவலத்தின் நிர்ப்பந்த அவஸ்தைக்குள்ளான பலருக்குத் துணைக்கரம் நீட்டியவர் என்பதால்...

பிறந்தகத்திலிருந்து விமானத்தில் பறந்து வந்த நாள்முதலாய் கருணாகரன் எனும் கருணா அவரோடு இருக்கின்றான். இதுவரை காலமும் அவரோடு இருக்கவேண்டிய கட்டாயக் கடமை கருணாவுக்கு யாருடைய வற்புறுத் தலாகவும் இருக்கவில்லை. கருணாவின் சந்தோசத்திற்கு சோமண்ணனால் எப்போதும் இடைஞ்சல் வந்ததில்லை. அவரோடு இருப்பதை பெரும் பாக்கியமாகவே கருணா கருதிவந்தான். சென்ற வருடங்களில் சோமண்ண னின் நல்லெண்ணம், பழகிய மகிழ்வான நிகழ்வுகள் கருணாவுக்குப் பெரிசாகவே பட்டது. கருசனையோடு அவரது ஒவ்வொரு செயல் அசைவையும் அவதானித்து வந்தான். இப்போது சோமண்ணன் வியாதிக்காரர் போலாகிவிட்டது கருணாவுக்குத் தாளமுடியாத துன்பத்தைக் கொடுத்தது.

இப்போது சோமண்ணன் அறைக்குள் கட்டிலில் சாய்ந்திருந்த கருணா வைப் பார்த்து நக்கலாகச் சிரித்தார்... அவரது சிரிப்பு கருணாவுக்கு வெப்பிசாரத்தைக் கொடுப்பதற்குப் பதிலாக பரிதாபத்தைக் கொடுத்தன. இந்தநேரம் பார்த்து சோமண்ணன் வார்த்தைகள் உடையப் பேசினார்...

'கருணா! நீ கருணையுள்ளவன்தான். சே... சே... சரியா? தப்பா? நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசியது தப்பா கருணா? என்னடாப்பா கருணா சொல்லன்?''

இப்படியாகக் கைதட்டிச் சொல்லியபடி குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார். கருணா கருணைக்கண் கொண்டு நோக்கியபடி மௌனித்திருந்தான்.

யாரடிச்சு நீ அழுதாய் என்று கேட்கமுடியுமா? பல்கலைக் கழகம் வரை நுழைந்து பட்டதாரியாக வெளிவந்த புத்தி ஜீவியை அடித்து ஆராரோ பாடித் தூங்கவைக்கமுடியுமா? கருணாவால் அவரைப் பார்த்துச் சிரிக்கவும் அழவும்தான் முடிந்தது மௌனத்தின் மரணத்தாலும் நீள்துயர்தான் நீண்டது கருணாவுக்கு!

சோமண்ணன் திரும்பவும் வெளியில் போக எத்தனிப்பதைப் புரிந்து கொண்ட கருணா அவரோடு தானும் கூடவே பின்தொடர்ந்து செல்வதற்கு ஆடைகளைச் சீக்கிரத்தில் மாற்றிக் கொண்டதும்... புறப்பட்டான்.

பாரீஸ் நகர வீதியில் நடந்துவந்தால் குறிப்பாக 'லாச்சப்பல்' வீதியில் அவருக்கு இருக்கும் மரியாதை அலாதியானது.

'அண்ணன் எப்படிச் சுகமாக இருக்கிறீர்களா?' என்றவாறு 'அண்ணன்' என்ற சொல்லை அழுத்தமாகச் சொல்லி அன்போடு நலம் விசாரிப்பார்கள். இன்னும் சிலர் சம்சாரிகள்...

'அண்ணை பெஞ்சாதி புள்ளைகள் வந்திட்டினமா? எப்பதான் வருகினம்?' என்று இழுக்கும் இந்தக் கேள்வியில்தான் சோமண்ணன் உடல் உதறும். உள்ளம் உடைந்து கவலையின் ரேகைகள் உலகப் படமாக உருவெடுக்கும்! கண் இமைகள் துடிக்க நெற்றியில் சுருக்கங்கள் தோன்றும்! அந்தச் சுருக்கில் விழிகள் பிரண்டு வெருட்சி கொண்டபடி சர்வாங்கம் அனைத்தும் நடுங்கும். இந்த மனச்சஞ்சலம் நிறைந்த கேள்வியின் வேள்விக் காத்திருப்பில்தான்... அவரது சித்தம் கலங்கிப்போனது. யாரோடும் எப்போதும் சல்லாபிக்கச் சங்கதி கிடைத்தாலும் இந்த நிலைத் தடுமாற்றத் தால் வாய்திறந்து பேசமாட்டார். பாரீஸ் நகரவாழ் தமிழர்கள் எல்லாரும் ஓர் அதிசய மனிதனைப் பார்ப்பது போலவே பார்க்கத் தொடங்கிவிட்டனர். அவரது சிரிப்பில் - சிந்தனையில் - சிறப்பில் - நடப்பில் - கண்ட மாற்றம் சங்கடம் நிறைந்த திண்டாட்டமாகவே திண்டாடிக் கொண்டிருந்தன...

சோமண்ணன் பின்னால் வந்த கருணா வீதியில் வரும் நண்பர்களுக்குக் கைகொடுத்து, வணக்கம் சொல்லியபடியும் நலம் விசாரித்துக் கொண்டும் வந்தவர் விரைவாக வந்து சோமண்ணனுடன் ஒட்டிக் கொண்டார். சோமண்ணன் பின் கைக்கட்டோடு நெஞ்சு நிமிர்ந்த நடையுடன் நடந்தபடி பார்க்கும் பார்வையின் பக்கமே தன் கவனத்தையும் கணப்பொழுதும் பிசகாமல் நோக்கினான். கோடைகால வெள்ளையரின் கோலத்தையும், கவலைகளற்ற பறவைகளாகப் பாடிப் பறந்து செல்லும் சுதந்திரத்தையும்...

'எங்களைப் போன்ற வாழ்க்கை உங்களால் வாழ்ந்து காட்டமுடியுமா?' என்று கேட்பது போலவும் உலகில் உயர்ந்த தத்துவ முத்துக்களான சுதந்திரம்-சமத்துவம்-சகோதரத்துவ இப்பெரிய கோட்பாட்டின் வாழ்வு நெறியோடு உங்களால் நிமிரமுடியுமா? என்ற எண்ணற்ற ஏற்ற இறக்கங் களோடும் தாயகப் பற்றின்பால் கொண்ட பாசத்தாலும் பற்றாலும் தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினம் நெஞ்சை நெருஞ்சி 'முள்' குத்திக் குதறும். இன்னும் இதைவிட மேலானவற்றை அவர் நிலையில் நின்று அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். இத்தகைய தடுமாற்ற நிலையில் நின்ற சோமண்ணன் முன்சென்று திரும்பிய கருணா, பின் திரும்பிப் பார்த்துவிட்டு தணிந்த குரலில் அக்கறையுடன் பேசினான்...

'அண்ணே! நம்ம தமிழ் கடைக்குள்ள போயிருந்து தேத்தண்ணி பலகாரம் ஏதும் சாப்பிட்டுக் குடித்துக் கொண்டு கதைப்போமுங் கண்ணை?'

மௌனமாகத் தலையாட்டியவர் பின் திரும்பி நடந்தார். அவரது நடை புரிந்த கருணா திரும்பவும் கதைக்கத் தொடங்கினார்.

'அண்ணை வாயைத் திறந்து என்னத்தையாவது கதையுங்கோவேன்? கலகலப்பாகக் கருத்துள்ள கதைகளைக் கதைப்பீங்க... இப்பயேனுங்க கதைக்கப் பஞ்சிப்படுகிறீங்க? புன்சிரிப்புக்கூடவே பொசுங்கிப் போச்சு! சிரியுங்கண்ணை! சிரிப்பில்தான் நிறைவு இருக்கண்ணை. மகிழ்ச்சியாக இருக்கச் சிரியுங்கண்ணை. முந்திய ஆளாக வாங்கண்ணை.''

இப்படியொரு இதபத சொல்லடியை மூச்சுவிடாமல் பேசி முடித்த கருணாவை சாய்வுப் பார்வையில் பார்த்தபடி. இழுப்புச் சிரிப்பை நளினமாக நகர்த்தினார் சோமண்ணன். இந்தவேளையில் இருவரும் ஒருவர் ஒருவர் முகத்தைப் பார்த்துக் கொண்டனர். சோமண்ணனின் செயல்வடிவம் சற்று வெட்கத்தைக் கொடுத்தாலும் பெரிது பண்ணவில்லை. கருணா படிச்சவர், பண்பானவர் என்பதால் மேலும் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே மிகவும் நெருக்கமாக நின்றான். சோமண்ணன் வாய்திறந்தால் வரும் மொழிகள் தமிழிலும்சரி - ஆங்கிலத்திலும்சரி - பிரஞ்சிலும்சரி அகராதியின் ஆழம் நிறைந்த 'பொய்யா மொழியாகவே' தொனிக்கும். அத்தகைய அறிவார்ந்த ஜீவனின் மௌனத்தைக் கலைத்தது ஒரு பெண்ணின் கீச்சிட்ட குரல்... நளினி கார் யன்னல் வழியாக சோமண்ணன் போகும் போக்கைப் பார்த்தாள்! அவரது போக்கு அவளுக்கு நிறைய மாறுதலைக் கொடுத்த பிரமிப்பை உண்டுபண்ணியது. அதனால் அவள் உணர்வு பாசமேலிடவே எழும்பித் தாழ்ந்தன. . இந்த வேகத்தோடு உரத்த குரல் எடுத்துக் கூப்பிட்டாள் . .

'சோமண்ணை... சோமண்ணை' அவர் திரும்பவில்லை! நளினி திரும்பவும் ஏறியதொனியில் கூப்பிட்டாள்... 'சோமண்ணை, நான் நளினி கூப்பிடுறேன்!' என்றாள். திரும்பவில்லை. தரித்து நின்ற கார்க்கதவைத் திறந்ததும் தன் இரண்டு குழந்தைகளையும் இருகைக் கொறயிழுவையாக இழுத்தபடி விரைந்து மூச்சுவாங்க வந்து சோமண்ணன் முகம்முட்ட நின்றாள். அவளது மூச்சு அவரது முகத்தில் படர்ந்தது. நளினியின் கைகளை உதறிப் பறிச்ச குழந்தைகள் இருவரும் நடைபாதையில் துள்ளிக் குதித்துக் குதூகளித்தனர். நளினியின் கையில் கழுத்தில் கிடந்த பவுன் நகைகளையும் கட்டுக்கயிறு மொத்தத்தில் கிடந்த தாலியையும் நறுக்கெனப் பார்த்துவிட்டு சோகமும் தாபமும் மேலிடவே சித்தப்பிரமை பிடித்தவர் போன்ற சாயலின் இழுவைச் சிரிப்போடு பார்த்தார். நளிளியின் மௌனத்தில் புதைந்த புகையை வெளிக்காட்டவே அழுகுரலில் அணுங்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சோமண்ணை எங்களைத் தெரியவில்லையாங்க உங்களுக்கு?' இக்கேள்வியோடு திரும்பியவள் காரை வீதியோரமாக நிறுத்திவிட்டு விரைந்துவரும் கணவனைக் கூப்பிட்டுக் காட்டிவிட்டு,

அவரை எனக்குக் கல்யாணம் பேசிக் கட்டிவைச்சதே நீங்கள் தானண்ணை! உங்களால்தானே இந்த வாழ்வு எனக்குக் கிடைத்தது.' என்றவள் இரு பிள்ளைகளையும் காட்டி கைகளை ஏந்தியபடி...

'ஏனுங்கண்ணை உப்படியாகியிற்றீங்க? எங்களையே உங்களுக்குத் தெரியாமல் போச்சுதே. ஆண்டவா! இதுயென்ன சோதனை?' நளினியின் இரங்குதொனி லாச்சப்பல்(RUE LOUIS BLANC) றூலூயி புளோன்ஸ் வீதியால் போன தமிழர்கள் மூளையில் தட்டி இமைகள் எழுப்பிய பார்வைகளோடு ஸ்தம்பிக்கப் பண்ணியது. அங்குமிங்குமாக முணுமுணுத்தபடி மிரண்ட சோமண்ணன் வாய்திறந்து பேசத் துடிப்பதை அருகில் நின்றவர்கள் கிரகித்துக் கொண்டனர். சோமண்ணன் புன்சிரிப்பை இழந்த நிலையில் குரல் தாழ்ந்து மேலெழுந்தது.

'அதிர்சம் கெட்டவன் நான்! பிரான்சுக்குள் என் மனைவி பிள்ளைகள் வருவதற்கான ஒழுங்குகள் செய்து இரண்டு வருடங்களுக்கு மேலாச்சு! ஏன்தான் இன்னமும் வரக்காணோம்? அவர்கள் உயிருடன் இருக் கின்றார்களா? உனக்குத் தெரியுதா? உமக்குத் தெரியுமா? வன்னியில் என்ன நடக்கின்றாவது தெரியுமா? அங்கு ஆகாரம்-தண்ணீர் இல்லாமல் மக்கள்படும் பாட்டின் துன்பம் தெரியுமா? அவர்கள் உயிருடன் இருக் கின்றார்களா? நாட்டில் நடக்கும் சூனிய நிலைமையாவது புரிகின்றதா? எதிர்கால வாழ்க்கையாவது யாராவது வரிந்துகட்டி யோசிக்கின்றீர்களா?' இந்த வாசகங்களுடன் சோமண்ணன் குரல் உச்சத்தொனியில் ஒலித்தது. சுற்றி நின்றவர்கள் பார்வைகள் பனிந்தன.

''நீளும்நெடுந்துயரில் - சுமையில் - அவலத்தில் - எங்கே தமிழன் போகிறான் என்பதையாவது சிந்திக்கின்றோமா? சண்டை மூண்டநாள் முதல் திண்டாடும் தமிழனைப் பந்தாடும் இருபக்க இடிகளையும் நொடிகளையும் சிந்திப்பீங்களா? எந்தக் கழகம் வெல்லும் என்பது சங்கடம் நிறைந்த சமாச்சாரமாகவே புலப்படும்! நான் மாவீரர்களை வணங்குகிறேன்... அதிலும் மேலாக... என் மண் மக்களை என் மண்மக்களை''

இப்படியே கத்திக்கொண்டவர் மயங்கிப் போனார். தாங்கிப்பிடித்த கருணா பதறிப் போனான். அவன் கண்ணீர் பெருகி ஆறாய் ஓடின... நெஞ்சை நாராய்க் கிழித்தன... அழுகுரலோடு அங்குமிங்கும் பரிதவித்த நளினி கணவன் கையிலிருந்த கைத்தொலைபேசியைப் பறித்தவள்... இலக்கங்களை அமர்த்தினாள். அழுத்திய இலக்கங்களுடன் உரையாடல் முடியுமுன்னம்... இரைஞ்சுகொண்டு வந்து தரித்து நின்றன... அம்புலம்ஸ் -பொம்பியர்ஸ்'' சுற்றிநின்ற மனிதரெல்லாம் குதிக்கால் எத்தலோடு எக்கி எக்கி விழுந்தனர்.

சோமண்ணன் 'காடட் நோட்' மருத்துவமனையில் மூன்றாவது மாடிக் கட்டிடத்தில் 244ம் நம்பர் அறையில் கட்டலில் மல்லாக்காய்ப் படுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தார். அவரது மூக்கு இரண்டு ஓட்டைகளிலும் குழாய்கள் ஒட்டப் பட்டிருந்தன. அவரது கட்டிலைச் சுற்றித் தமிழர்கள் நின்றிருந்தனர்... சிலர் பார்த்துவிட்டு நகர்கின்றனர். இன்னும் சிலர் தர்க்கம் புரிந்தபடி தங்களது அங்கலாய்ப்புகளை வெளிப்படுத்தி வேசம் போடுகின்றனர். இத்தகைய நடிப்புச் சுதேசிகள் புகலிடமண்ணில் அதிகம் தென்படுகின்றார்கள். சோமண்ணனின் சோகம் இறுக்கிய மௌனம் கலையவேயில்லை! இப்படியே நாட்கள் கடந்து செல்கின்றன... நலம் காணவந்தவர்களும் நலம் விசாரித்துக் கவலையோடு காரியத்தோடும் உரையாடிச் செல்கின்றனர்.

அன்று வெள்ளிக்கிழமை. கருணா டாக்டருடன் பதறிப் பதறிப் பிரஞ்சு மொழியில் தான் கொண்டுவந்த செய்தியைச் சொல்லி நல்லமுடிவு பெற்றிடத் துடி துடித்து நிற்கிறான்.

''யார் நீ?'' என்று கேட்டார் டாக்டர்.

''நான்தான் 244ம் நம்பர் அறையில் கிடக்கும் நோயாளி சோம சுந்தரத்தின் றூமேற் தம்பி என்று வைத்துக் கொள்ளுங்களேன்''

''இப்ப யாருடன் பேசவேண்டும்?''

''பெரிய டாக்டருடன்''

''நான்தான் பெரிய டாக்டர்!'' என்றதும் கருணா பெருமூச்சை ஊதித்தள்ளிவிட்டு...

''அப்பாடா உங்களுடன்தான்'' என்றவன் தன் இதயக் கனப்போடு கொண்டுவந்த செய்தியை டாக்டரிடம் பதறியது சிதறாமல் விபரமாக விளக்கினான்.

''டாக்டர்! 244ம் நம்பர் அறையில் கிடக்கும் சோமசுந்தரத்தின் மனைவி-பிள்ளைகள் ஊரிலிருந்து இந்த மாதம் முப்பதாம் திகதி இங்கு வாராங்கள். டாக்டர் இந்தச் சந்தோஷச் செய்தியை அவரிடம் தெரிவிக் கலாமா?'' என்றவன் ஏக்கத்தோடு டாக்டரின் வாயிலிருந்து வரும் வார்த்தைக்காகத் தவித்து நின்றான். டாக்டர் தன் அனுபவத்தை அதிக நேரம் செலவழிக்காது செக்கனுக்குள் பதில் சொன்னார்.

''நல்ல செய்திதான்; சோமசுந்தரத்தின் மனத்தளர்வினைப் போக்கக் கூடியதாக இருந்தாலும் இருக்கலாம். அல்லது ஏக்கப் போக்கில் மேலும் தளர்வில் தடுமாற்றம் அதிகரிக்கலாம்! இப்போதைக்குச் சொல்ல வேண்டாம்!... அவரது குடும்பம் இங்குவந்து சேர்ந்ததும் முன்னாடி சொல்லிவிட்டு பின்னாடி அவர்களைக் கூட்டிவந்து காட்டலாம்.''

டாக்டரின் அனுபவ அறிவை ஏற்றவனாகக் கருணா இமையெழுப்பிய படி மௌனமாகத் தலையாட்டினான். இந்த நேரம் உதவி டாக்டர்களும் பக்கத்தில் வந்து நின்றனர்.

''டாக்டர் 244ம் நம்பர் அறை நோயாளியை மலைப்பிரதேசமான மருத்துவமனைக்கு மாற்றவேணும் என்று குறிப்பில் எழுதி வைத்திருக் கின்றீர்கள்!'' என்று ஞாபகம் மூட்டினார் உதவி டாக்டர். இவ்வார்த்தையைக் கேட்ட கருணாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது! நாக்குத் தளர வார்த்தைகள் உடைந்து விழுந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''டாக்டர்! தயவு செய்து இப்போதைக்கு வேண்டாம்... டாக்டர் அவர் குடும்பம் வந்தப்புறம் பார்த்துச் செய்வது நல்லதல்லவோ?''

கருணாவின் தயவான வார்த்தையில் நியாயம் இருப்பதை புன்சிரிப்போடு ஏற்றுக்கொண்ட டாக்டரின் தலையசைப்பு பதைப்பை அகற்றி மகிழ்ச்சியைக் கொடுத்தன... அதன் பின்னர் இரண்டு டாக்டர்களும் தாதியும் கூடவே சோமண்ணன் அறைக்குள் போய்க்கொண்டிருந்தனர். அவர்கள் பின்னாலேயே கருணாவும் உள் நுழைந்தான். கட்டிலில் நிமிர்ந்திருந்த சோமண்ணன் கருணாவைப் பார்த்துச் சிரித்தார்! சிரிப்பு மறையும் முன் தாழ்ந்த குரலில் பேசினார்...

''கருணா!நீ கருணையுள்ளவன்தான்ரா... சே... சே... நான் பேசியது சரியா தப்பா? நான் பேசியது சரியா தப்பா?'' இப்போ அவர் சிரிக்கவில்லை! புன்சிரிப்போடு மௌனித்திருந்தார். டாக்டர்கள் கருணாவைத் திரும்பித் திரும்பிப் பார்த்துவிட்டுக் கேள்வி கேட்க எத்தனித்து நின்றனர். பதிலுக்கு கருணா புன்முறுவல் பூத்திட 'தேறியுள்ளார்' என்றான். பெரிய டாக்டர் சோமண்ணன் நாடியைப் பிடித்து அமைதியாக அவரது நினைவாற்றல் அறியும் ஆராய்ச்சியில் பலவித சம்பவங்களை நினைவுக்குக் கொண்டு வந்தார். இவ்வேளையிலும் சோமண்ணன் வாய்திறந்து எதுவுமே பேசவில்லை. தலையை மேலும் கீழுமாக ஆட்டினார். அவருக்கு யோசிப்பின் காரணமாக காச்சலும் பிதற்றலும் இருப்பதைக் கூறி இரவு மருந்து கொடுப்பது பற்றிப் பேசிக்கொண்டு வெளியேறினர். கருணா கட்டிலில் ஏறி இருந்து கொண்டான். கொண்டு வந்த செய்தி தொண்டைக்குள் கிடந்து தொந்தரவு பண்ணியது. இப்போது வாய்க்குள் வந்து நாவெழ முடியாது தத்திங்கினத்தம் போடப்பண்ணியது. தடுமாற்றத்துடன் வெளியில் போக எழுந்தபோது... கருணாவின் கைகளைப் பிடித்திழுத்தார். அவனுக்குப் பயம் கலந்த அதிர்ச்சி தோன்றியது! சோமண்ணன் குழந்தையைப்போல் சிரித்தார். அவரது புதிய முகத்தை புன்முறுவலோடு நோக்கினான். முந்தைய பாவச் சுருதி பிசகாத சந்தம் எழும் வார்த்தையைச் சிந்தினார்.. .

''கருணா நீ கருணையுள்ளவன்தான். என் புள்ளைகள்-பெஞ்சாதி பற்றிய செய்தி ஏதும் கிடைத்ததா? நீ தப்பாய்ச் சொல்லமாட்டாய். சே... சே... நான் கேட்பது சரியா தப்பா?'' என்ற வார்த்தைகள் முடியும் முன் குழந்தையைப் போல் விம்மிவிம்மி அழத் தொடங்கிவிட்டார். கண்கள் பொழிந்தமாரி மழையைக் கண்கொண்டு பார்க்க முடியாதவன் இதயம் இரண்டாகப் பிளந்தது. உண்மை தெரிந்துதான் மனிசன் இப்படிக் கேட்டாரா? எனும் குற்றயுணர்வு உள்ளூர உதறக் கருணா வெளியேறினான்.

சொல்லத் துடிக்கும் செய்தியோடு நாட்கள் வாரங்களாகக் கடந்தன. நாளை திங்கட்கிழமை காலை சோமண்ணன் மனைவி-பிள்ளைகள் வந்துவிடுவார்கள். அந்த வரவை எதிர்பார்த்த நாளும் வந்தது. பிரான்ஸ் ''சாள்ஸ் தி கோல்'' பன்னாட்டு விமான நிலையம். சோமண்ணனின் மனைவி-பிள்ளைகளைச் சுமந்து வந்த விமானம் இறங்கும் தளமும்-குடிநுழைவுச் சீட்டுப் பகுதியும் அறிவிக்கப்பட்டது. கருணாவுக்கு இமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுப்பிய பிரமிப்புடனான மகிழ்ச்சிப் பிரவாகத்தில் குதிக்கால் குத்திய உணர்ச்சியில் அங்கும்-இங்குமாக ஆடித்திரிந்தான். குடிநுழைவுச் சீட்டுப் பகுதியில் வந்தவர்களைக் கண்டதும் கைகளை உயர்த்தி ஆட்டி ஆரவாரம் செய்தான். சோமண்ணனின் வளர்ந்த இரண்டு பிள்ளைகளும் ஓடிவந்து கருணாவைக் கட்டிப்பிடித்துக் கன்னத்தில் முத்தமிட்டனர். தாயவள் 'ஜோதி' கைகூப்பியபடி சோகம் இழையோடிய முகத்துடன் கண்ணீர் முட்ட நின்றாள். சின்னச் சின்னத் துளிகள் மினு மினுத்து நிலத்தில் விழுந்து அதிர்ந்தன. கருணாவால் எந்தவிதமான ஆறுதல் வார்த்தைகள் பகர மனசுக்குள் மசியவில்லை. அவர்களை உடன் மருத்துவமனைக்கு அழைத்துப் போவதையே அக்கறையெனக் கொண்டான். அவசர அவசரமாக விமான நிலையத்தை விட்டுப் புறப்பட்டுக் கார் மருத்துவமனை வந்து தரித்து நின்றதும் ஜோதியையும்-பிள்ளைகளையும் சற்று நிமிடம் தாமதப்படுத்தி வரும்படி கூறியது பாதி... கூறாதது மிகுதியாக அவசர அகமகிழ்வோடு முதலில் டாக்டரிடமும் தாதியிடமும் ஓடினான். அவனது துடிப்பை ஊகித்து அறிந்துகொண்ட டாக்டர் அமைதியான குரலில் சொன்னார்...

''இப்பவே அவரை நீங்கள் வீட்டுக்கு அழைத்துப் போலாம்'' என்றவர் வார்த்தை முடியுமுன்னம் கருணா மின்னல் வேகத்தில் சோமண்ணன் அறைக்குள் புகுந்தான். சோமண்ணன் தூங்கிக் கொண்டிருந்தார்! பிள்ளைகள் இருவரும் வலதும்-இடதுமாகக் கட்டிலில் ஏறியிருந்தனர். ஜோதி கால்மாட்டில் நின்று கைகூப்பியபடி கண்ணீரை மழையெனப் பொழிந்தவள் சர்வாங்கம் அனைத்தும் நடுநடுங்கின. பிள்ளைகள் தகப்பனின் இருபக்கத் தோள்மூட்டைப் பிடித்து அப்பா... அப்பா என்று அனுங்கினார்கள். நடுகட்டிலாய் நாடியில் கைவைத்து நின்ற கருணா ''அண்ணை... சோமண்ணை கண்ணைத் திறந்து பாருங்கண்ணை!யார் வந்திருக்கினம் என்று பாருங்கண்ணை.'' ஒரு கணம் அமைதி! மறுகணம் கண்கள் மெதுமெதுவாகத் திறந்தன! பார்த்துக் கலங்கி நின்ற விழிகள் அகல விரிந்தன... காத்திருப்பின் கனப்பில் குதூகலித்தனர் சோமண்ணன் கட்டிலை விட்டெழுந்து மனைவி பிள்ளைகளை அணைத்தபடி அறையைவிட்டுப் போக நகர்ந்தார். இவ்வேளை!

''கருணா நீ கருசனையும்-கருணையும் நிறைந்த உள்ளமடா; அப்பனே உயர்ந்த உள்ளடா'' என்றவர் குரல் எழுப்பிப் பாராட்டியபடி உடம்பை ஆட்டிச் சிரித்தார். பின்னர் திரும்பித் திரும்பிப் பார்த்தவர் தன்னைக் கவனித்த தாதியைப் நேர்குத்த நோக்கினார் தாதியும் அவரைப் பரிதாபமாகவே நோக்கி நின்றாள்.

●

ஈழவரின் இருபத்தேழு சிறுகதைகள், திருகோணமலை
இலக்கிய ஒன்றியம் 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நதியினில்

நாற்புறமும் நதியால் சூழ்ந்து அதன் குளிர்ச்சியின் கதகதப்பில் எழுந்துள்ள அழகான 'புஜிசிக்'(Boussy) கிராமம். இக்கிராமத்தை இரண்டாக வை போல்(Y) பிரித்துச் செல்கின்றது நதி. வீதி ஒழுங்கிற்காக நதியின் குறுக்கே போடப்பட்டுள்ளது 'மரப்பலகைப் பாலம்'. இப்பாலத்தால் வாகனப் போக்குவரத்து, மனித நடமாட்டமும் அதிகம் குறைவு. இப்பாலத்தின் கறுத்த இரும்புக்கிறாதியைப் பிடித்தபடி நதியைத் தலைகுனிந்து பார்த்தால் அங்கு ஓர் ஆத்மாவின் ''தூண்டில்'' போராட்டம் காலை தொடங்கி மாலைவரை மௌனமாக நடைபெறுவதைக் காணலாம். இன்று பருவநிலை நன்றாகிவிட்டது. இப்போது நான் எங்கே போவது? கிழவனைப் பற்றிய யோசனைதான். மனிதர்களின் சுக - துக்கங்களைப் பற்றிய கவலைதான். 'என்ன' இந்தக் கிழவனுக்கு வந்தது?

செயின் நதியின் ஓரத்தில் கால்கள் இரண்டையும் நதியில் பட்டும் படாததுமாகத் தொங்கவிட்டபடி... எப்பவோ அடித்த புயல்காற்றில் சரிந்து காய்ந்து கிடந்த மரக்கட்டை மீது உட்கார்ந்திருந்தார். இருந்து தூண்டில் போட்டுக்கொண்டிருந்தார். காலை பத்துமணி ஆகிவிட்டது. பொழுது அடர்ந்து உயர்ந்த மரங்களின் மேலாக ரோஸ் நிறத்தில் ஒளி சிந்தியவண்ணம் இருந்தது. இருந்தும் மணித்தேரோன் இன்னும் மேல் எழவில்லை.

அறுபத்தைந்து வயது மதிக்கத்தக்க கிழவன் தன் தொழிலில் கொண்ட ஈடுபாட்டை உற்சாகத்துடன் நடத்திக்கொண்டே இருந்தார். வயதானால் என்ன வந்திட்டு, உடல் சருகானால் உள்ளமும் உலர்ந்தா போய்விடும்? தூண்டில் மிதப்பின்மேல் விழுந்த கண்கள் விலகவில்லை. இப்படியே வாரத்தில் ஞாயிறு ஓய்வுநாள் தவிர்த்த ஆறுநாட்களும் சதாகண்டு என் மனசுக்குள்ளான கேள்வியும்-பதிலும் நானாகிப் போயிருந்தேன்.

ஓர்நாள்! பாலத்துக் கட்டால் கடந்துபோக முடியாதவாறு என் மனசுக்குள் ஒரு உருண்டை உருண்டு மூளையில் மின்னலடித்திடத் தரித்து நின்று பாலத்து இரும்புக் கிறாதியை இருகைகள் ஊண்டிப்பிடித்த வண்ணம், கிழவனையே குனிந்த தலை நிமிராமல் பார்த்தேன். அவரது இருப்பு இவ்வுலகத்துக் கவலைகளை எல்லாம் ஒருங்கே குவித்து வைத்ததுபோல் தோற்றம் கண்டு மனதைக் குடைந்தெடுத்தது. இப்படியே ஒருமணி நேரம் கடந்து போய்விட்டது. பாலத்துக் கட்டின் மேலாக என்னைக் கடந்து போகின்றவர்களின் நீலக்கண் பார்வையின் பாச்சல் என்னுள் ஒருவகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்கயுணர்வையும் உண்டுபண்ணியது. அடுத்து நடப்பதைப் பார்க்கும் அவசரமும், அவசியமும் சுண்டிச் சறுக்குப் பண்ணியது. மனிதர்கள் அக்கிழவனைப்போல் நானும் வேலையற்ற ஜீவியம் பண்ணுகிறவனாக்கும் என எண்ணும் தோரணையும் மனசுக்குச் சங்கடத்தைத் தந்தது. கிழவன் ஒருமுறைக்கு இருமுறை தூண்டிலின் நீண்ட தடியை உயர்த்தித் தூண்டிலில் இரை இருக்கிறதா என்பதைப் பார்த்ததும் 'உண்டு'. தலையை ஆட்டி ஆமோதித்ததும் திரும்பவும் உயர்த்தி உண்ணி எறிகின்றார். பின் மரக்குத்திமீது கைகளை ஊண்டி ஆடி எழும்புவதற்கு எத்தனிக்கின்றார், அதற்கிடையில் தூண்டில் தடியைப் பவுத்திரமாக மரக்குத்திமேல் படுக்க வைக்கின்றார். இரை விழுங்கிய மீனின் இழுப்பில் தடி நதியோடு போகா வண்ணம் வலக்காலால் கெட்டியாக அமர்த்திப் பிடித்தபடி நடுங்கினார்...

இப்போது வெய்யிலின் ஒளி மிகவும் பிரகாசமடைந்தது. நதியோரக் காட்சி மிகவும் எழிலைப் பொளிந்தன. நான் நதியின் எதிர்ப்புறமாக வந்து நின்று நோக்குகின்றேன். இப்போது அவரின் முழுப்பார்வையும் என்னில் பதிந்தது. அதிகம் வெளிறியபடி ஆழ்ந்த கவலைகள் கவ்விக்கொண்ட முகத்தில், நீலக்கண்கள் தினமும் முட்டிய கண்ணீரில் 'ரசம்போல்' ததும்பிக் குழம்பிக்கிடந்தன. 'உம்'மென்ற வாயில் 'இம்'மென்ற வார்த்தைகூட வரவற்று அறுபத்தைந்து வயதிலும் எண்பது வயதைத் தாண்டிய மூன்றாந்தடி ஊண்டித் தள்ளாடும் தோற்றத்தில் காணப்பட்டார்.

கணநேரம் இருவருக்கும் இடையில் மௌனம் ஆட்சிபுரிந்தது. நதியில் சலசலப்பு பின்னணி இசை ஊட்டியது.

இப்போது தூண்டில் தடியின் துடிதுடிப்பைக் கண்டதும், அங்கங்கள் கிடுகிடுக்க, பொக்குவாய்ச் சிரிப்பைச் சிந்தி எதிரொலிக்க 'நொடிக்குள்' குனிந்து தடியை எடுத்ததும் மேல்நோக்கிச் சுண்டிச் சுண்டிப் பார்த்தார். இரை கவ்விய மீன் பிடிபடவில்லை. தலைநிமிர்த்தி என்னை ஒரு முறைக்கு இருமுறை பார்த்து நாணம் கவ்விய நடுக்கத்துடன் மறுபடியும் தூண்டிலை உண்ணி எறிந்துவிட்டு, மரக்கட்டையில் தொப்பென்று குந்தியதும் தலையைப் பணிந்து கொண்டார்.

விண்மேகம் கூடியபோது மண்ணகம் சற்று இருண்டது. மழை வரப் போகுது. கிழவன் இப்படியே இருந்திடப் போறாரா? நினைப்பு நிர்ப் பந்திக்கப்பட்டபோது, கிழவனின் வெள்ளை, நீலம், சிவப்புக் கலர்போட்ட குடை விரிக்கப்பட்டது. பின்னர் பெட்டியிலிருந்து எடுத்த 'மிலான்' பழத்தை வெட்டி இசையெழுப்பி உண்டார். மழைத் தூறல்கள் இயற்கையின் மேனியை நனைத்தன. நான் நின்ற இடத்தைவிட்டு ஓடிய ஓட்டத்தின் களைப் புடன் குடிமனை புகுந்தேன். மழை பெரும் மழையானது. வீட்டினுள் புகுந்த பின்பும்-கிழவனைப் பற்றிய நினைப்பில் கனத்தது இதயம்.

அன்றிலிருந்து அவரது வாழ்க்கையின் நிலவரத்தை அறியும் ஆவல் கொண்டேன்... அடிக்கடி அவர் அருகே அமர்ந்திருந்தேன். ஓர்நாள் அவர் அருகேயிருந்தபோது முதல்தரமான 'வையின்' நெடி வாயிலிருந்து குப்பென்று அடித்தது. நான் சுமுகமாக முகத்தைத் திருப்பிச் சிரித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டேன். கிழவன் மேலும் முழுவதுமாக முகத்தைத் திருப்பினார். உடைந்த சொற்களால் சுருக்கமாகவும், இறுக்கமாகவும் சில வார்த்தைகள் பொளிந்தார். என் எண்ணங்கள் ஏறுநடை போட்டது. அவர் தானொரு 'இன்ஜினியர்' E.T.P. பட்டதாரி என்பதை மிகவும் அழுத்தமாகச் சொன்னார்.

நான் மேலும் நிலமைகளை உள்ளது உள்ளபடி தெளிவாக அறிந்திட ஆவல் மிகுதியாகி எனக்குள் நானே அந்தரங்கத்தை விவாதிக்கத் தொடங்கினேன். இன்ஜினியரின் சொந்த விஷயங்களை தொட்டுச் செல்லும் வாய்ப்பை நழுவவிடாது கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். ஏனிந்தக் கோலம், ஏனிந்தத் தனிமை, ஏனிந்த நேரப்போக்கு, ஏனிந்தத் தவிப்பு, ஏனிந்தத் தூண்டல் மீது காதல், ஏனிந்த முணுமுணுப்பு, விடை கிடைக்கும்... கிடைத்தவரை நீங்களும் கேளுங்கள்.

''என் தாய், தந்தை என்னை 'டாக்டர்' ஆக்கிப் பார்க்கவே ஆசைப் பட்டனர். என் கல்வியின் ஈடுபாடு இன்ஜினியராக E.T.P.பட்டதாரியாகும் பேறடைந்தது. இந்தப் பிரான்ஸ் மண்ணில் எத்தனை அணைக்கட்டுக் களைக் கட்டுவித்தேன், படம் வரைந்து எத்தனைப் பாலங்களைப் போடவைத்தேன். இத்தொழிலால் எத்தனை ஆயிரம் பிராங்குகளைப் பெற்றேன்! இருந்தும் நிம்மதி இழந்தேன். அத்தொழிலின் ஈர்ப்பு சக்திதான் என்காலம் வயோதிபம் கண்டதும் இந்த நதிக்கரையே தஞ்சம் என்றாகி விட்டது. தூண்டிலும் அதன் உபகரணங்களும் உற்ற நண்பனாகி விட்டது. என் மனைவி இறந்தப்புறம் நான்பட்ட வாதைகளை... இன்றும் நினைத்து நினைத்து என் நெஞ்சம் குமுறுகின்றது. கண்கள் வடிக்க வடிக்கக் கண்ணீர் ஊற்றெடுத்துச் சீறுகின்றது. காலவெள்ளம் எத்தனைக் காதலர்களின் வாழ்வோடு விளையாடியது? என் மனைவி 'எலிசா' அந்த எழிலரசி பளிங்குச் சிலை அவளது பருவப் பார்வையில், பாசப் பிணைப்பில் மகிழ்ந்தேன். மகிழ்வோடு இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள். பெற்ற பிள்ளைகள் மீதும், என்மீதும் பாசத்தையும், நேசத்தையும் கொட்டி நான்கு வருடங்கள்தான் உயிருடன் உலவினாள்; அதன் பின் மறைந்தாள். மறைந்து முப்பது வருடங்களுக்கு மேலாகி விட்டன. அந்த உயிரோவியம் மறைந்த பின்பு E.T.P. பட்டத்தோடு கிடைத்த பணத்தைச் சுருட்டவே பிள்ளைகள் என்னோடு வாழ்வதாக நடித்தார்கள். அவர்களால் பல வழிகளிலும் துன்பமே மிஞ்சியது.

''இந்த உலகில் எத்தனை மோசமான முகங்கள் உண்டு. அந்த வடிவில் என்பிள்ளைகள் இரண்டு. இவர்களை வைத்துக் கொண்டு நான் உயிர்வாழ முடியுமா? இக்கேள்வியில் என் விலா எலும்பு முறிந்து முகம்குப்புற விழுந்துவிட்ட பரிதாபத் தவிப்பில் நின்றேன். இன்ஜினியர் மேலும் இரக்கத்தோடு இழையோடவிட்டார் நொந்து உடைந்த வார்த்தைகளை. என் மனைவியோடு வாழ்ந்த மாளிகையைத் துறந்துவிடும் நிலை என் இறப்பில்தான் என்பதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன்.

இதையறிந்த பிள்ளைகள்-பிள்ளைகளல்ல என் நிழலாகத் தொடர்ந்த பேய்கள் - தாங்கள் விரும்பிய வாழ்விற்காக வெளியேறினார்கள். எப்பவாவது 'பண்டிகைக் காலங்களில்' ஒரு பூக்கொத்துடன் காசு கறக்கும் சுறாக்களாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிட்டுப் போவார்கள். நானோ என் மனைவியை இழந்தபின்பு ஆறுதலும், தேறுதலும், பரிமாறுதலும் கிடைக்காத பாவியாகிவிட்டேன். இன்றுவரையும் ஒரு பெண்ணையும் விரும்பவில்லை... விரும்பிடும் விரகதாபமும் விரையவில்லை. வாழ்வில் நொடிப்பொழுதுகூட என்னைப் பிரிந்து அவளும், அவளைப் பிரிந்து நானும் பிரியமுடியவில்லை. கஞ்சத்தனமும், சலிப்பூட்டும் தன்மையும் கிஞ்சிற்றும் என் எலிசாவிடம் காணவில்லை. என்ன விதியோ? இறைவன் சதியோ! என் மனைவியின் காலடிச் சத்தம் அடங்கிவிட்டது. இல்லை! என் நெஞ்சத்தின் மேடையில் நின்று தினமும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. இந்தப் புதிரான, ஆடம்பரமான மண்ணில் புதிரான மனிதனாகவே வாழ்கிறேன்.''

இந்த நேரம் உலாக் கிழம்பிய வயதானவர்கள் பாலத்துக் கட்டில் நின்று பார்ப்பதை அவதானித்தார். பின்னர் நீர்மல்கிய கண்களை உள்ளங் கையால் துடைத்துவிட்டு, தலையை ஆட்டி அவர்களைப் பார்த்து மாலை வணக்கம் சொன்னார். பதிலுக்கு அவர்களும் வணக்கம் 'லும்மியர்' என்றார்கள். தினப்பழக்கம் என்பதை நான் ஊகித்துக் கொண்டேன்.

''என் மனைவியோடு வாழ்ந்த வீட்டைவிட்டு இன்றும் விலக வில்லை. அவள் நடமாடிய இடங்களிலும், பாவித்த பொருட்களிலும் அவளையே காண்கின்றேன். நிம்மதியை இந்தத் தூண்டிலும், வைனும் அளித்தன. நான் பெற்ற E.T.P. பட்டமும் இந்த நதியோடுதான்.'' என்று பணிந்து சொன்ன போது இன்ஜினியரின் கண்களிலிருந்து கண்ணீர் பொலபொலவென விழுந்தன. புதிரான மனிதனிடம் மேலும் எதையாவது கேட்டுவிட வேணும் எனும் ஆவல் துடிப்பு. நொடிப்பொழுதிலும் இயந்திர அடி அடித்தது. இப்படி இந்த வெள்ளை மனிதனின் வாழ்வு 'வாழ்வின் உன்னத நிலையைக் கொண்ட தால்.' பின்னர் தன்ர E.T.P. பட்டத்தை முணுமுணுத்தபடி தூண்டிலில் மாட்டிய மீனைக் கழட்டி எடுப்பதில் தன் வல்லமையைக் காட்டினார். இந்தநேரம் உயர்ந்த தேவதாரி, சேன் மரங்களிலிருந்து கறுத்த குருவிகள் கீச்சிட்டுப் பறந்தன. பிறகு நெடுநேரம் நிசப்தத்தில் நதியின் ஓட்டம் அழுவதுபோல் ஒலித்தது. வீடு வந்த என்னுள் ஒரு சிலுவைப்பாடு நடந்துகொண்டிருந்தது.

அடுத்த நாள்... புலரும் பொழுது ராகம் இசைப்பது என் மெய்யுள்ளத்தை உருக்கியது. வழமையான இடத்தில் இன்ஜினியர் இல்லை தூண்டில் தடிமட்டும் நீண்டு துடித்துக்கொண்டு கிடந்தது. நெடுநாளாக வீற்றிருந்த சிம்மாசனம் வெறுமனமே சோபிழந்து கிடந்தது.

நதியோரம் இவ்வளவு மனிதர்கள் ஏன் நிற்கின்றார்கள்? ஏன் சத்தம் போட்டுப் பேசுகின்றார்கள்? யார் பிள்ளைகளைக் குறை கூறுகின்றார்கள்? இவர்களது பிதற்றலுக்குப் பின்னணி என்ன...? நடையை விரைவு படுத்தினேன். இரண்டு கைகளையும் வீசி வீசி விர்ரென நடந்தேன். நதியின் நடுவாகக் கிடந்த பாறையை மொய்த்துப் பார்த்து நின்ற சனத்தைப் பிளந்து உள்ளிட்டேன். எக்கி எக்கிப் பார்த்துவிட்டு மௌனமாக நின்றேன். நதியின் குறுக்கே கிடந்த பாறை யில் தடைபட்டு ஆடி அடங்கிய E.T.P. பட்டதாரியின் உடலைப் பொலித்தின் பைக்குள் திணித்துக் கட்டித் தூக்கிப் போட்டார்கள் பொம்பியர்ஸ் வாகனத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில். நான் பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உம்முடைய இராச்சியம் வருக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல் பூலோகத்திலும் செய்யப்படுவதாக, இறந்த இந்த ஆத்மா சாந்தி அடைவதாக; என்று இரு கைகூப்பி வேண்டிக் கொண்டேன். ●

INGNIEUR. E.T.P.

சிறப்பு மலர்(1999)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பம்

கோடைகாலம் என்பதால் அதிகாலை நேரக் குளிரும் உடம்புக்குக் கதகதப்பாக இருந்தது. ஐந்து மணிக்குப் பிறகும் இழுத்துப் போர்த்துக் கொண்டு கிடக்கிற சோம்பேறித்தனத்தை விட்டுப் பல மாதங்களாகி விட்டன. நேரத்தோடு எழும்பும்போது நித்திரைத் தூக்கத்தின் பிடிதளராத, கடுகடுப்பிருக்கத்தான் செய்யும். இனி என்ன செய்வது? ஊரைவிட்டு வெளிநாடென்று வந்திட்டோம் உழைக்க வேண்டும். உழைக்க வேண்டுமானால் வேலை ஒன்று தேடி எடுக்கவேணும், என்று அலைஞ்சு பட்ட பாடுகள்... ''கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகள் என்று பொய் சொல்லமாட்டேன்''.

இன்றும் வழமைபோல் படிகள் இறங்கும்போது ''நல்லூர் கந்தா, கல்லுடைக்கின்ற வேலையாவது கிடைச்சிட வழிசெய்யப்பனே!''

வீதியிறங்கி பாதாள ரயிலேறி, பாரீஸ் நகரத்து நடு மையமான திறந்த பெரும் தெருக்களில் நடந்தேன். அழகில் கதிகலங்கும் காட்சிகள், தென்படும் இடமெல்லாம் உடல் சிலிர்க்கும் சிங்காரக் கோலங்கள், உலகதிசய ஈவ்ல் கோபுரம் தெரிந்தாலும், பதினான்குக்கு மேல்பட்ட வீதிகள் பிரியும் சந்திகளின் நடுவே காட்சியளிக்கும் 'போர் நினைவுச் சின்னம்' பிரமிக்கும் அதிசயமான வளைவு தெரிந்தாலும், என்னுள் நான் கண்ட அதிசயம்! ஆதவன் வரவைப் போன்று பிரெஞ்சு மக்கள் ஆடைகளைக் குறைத்து அவர்களது அழகு மேனிகள் பளபளக்க நடந்தும், துள்ளியும், திரியும் மகிழ்ச்சியின் சுழர்ச்சியும் அழகின் அதிசயம்தான். பெரும் வீதியின் ஓரமாய் நடந்தேன். ஒதுக்காயிருந்த சிறு வீதி ஒன்றின் வளைவுகளால் கால்போன திக்கில் வேகமாக நடக்க ஆரம்பித்தேன். வீதிகளில் விரைந்து இரைந்து செல்லும் வாகனங்களின் இரைச்சல் என் காதுகளைக் காயப்படுத்தி நிதானப்படுத்துவதாகவும் இல்லை. படை நடை என்று சொல்வார்கள். கனக்கக் கவலைகளோடு எடுத்து வைத்த அடிகளால் காலடி நோவும், சப்பாத்து வெட்டும் உசிரை வாங்கிக் கொண்டன. பேய்த்தனமான சிந்தனைகள் நரம்புகளை முறுக்கேற்றின. வாழ்க்கைப் பிடிப்பற்று போராடி நின்றன. அனுபவத்தை முன்னாடி சிந்தித்து பின்னாடி சீர்தூக்கிப் பார்த்து வாழும் வழிமுறையை வலுவாகச் சிந்திக்கத் தெரியாதவனாகவல்லவோ நான் போய்க் கொண்டிருந்தேன்.

நடையைச் சற்றுத் தளர்த்தி நின்று திரும்பித் திரும்பி நாற்புறமும் பார்த்தேன். பரந்தவெளிகொண்ட வீதிகள். சிறந்தயிடம், கட்டிடங்களின் வனப்பும் பிரமிக்க வைத்தன. ஓ... ஓ... நான் நிற்கும் இடம் பிரெஞ்சுப் புரட்சிக்கு அடிகோலிய பதினாறாவது லூயி மன்னனை சிரத் சேதம் செய்தயிடம் ''கொங்கோட்'' (Place de la Concorde) தலைநகரின் 'சிரசு'; சற்றுத் தள்ளிப் போனால் பாராளுமன்றம்; பெரும்வளைவைச் சுற்றினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு வங்கிகள், தூதர்களின் அலுவலகம்... ஆவேசம் கொண்ட அதிர்ச்சியோடு கண்வெறித்து நோக்கத் திரும்பினேன். உரிமையாக முதுகைத் தட்டியவன் ஊரில் திரிந்த நண்பன்தான் என்பதறிந்து சற்று மௌனத்துடன் இளநகை வீசினேன். பின் கைக்கட்டோடு அவன் கேள்விகளுக்கு விடையளித்தேன். கொஞ்சநேர அளவளாவலில் என் நிலைமை அறிந்து உதவிடும் நண்பன் அவனில்லை என்பதையும் உய்த்தறிந்து கொண்டேன். அவன் விடைபெற்று வேறுவழியே போகின்றான். நான் திரும்பவும் விரக்தி முட்டி... திறந்த பெருவெளி வீதியின் குறுக்கே நடக்கிறேன்! வாகனங்கள் என்னைக்கண்டு பெலத்துக் கத்தின. மனிதர்கள் 'மடைப்பயல் மகனே' என்று பரிகசித்தனர். 'மண்டை சுகமில்லாதவன், இசக்குப் பிசகாக என்னவும் நடந்திடப்போகுது' என்று தூற்றினர். கடவுள் இருக்கிறானோ இல்லையோ... என் தாய், தந்தை, உயிருக்குயிரான தங்கை இருக்கின்றனர். இந்நேரம் 'புனிதாவின்' நினைப்பு... இரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்டன. எத்தனைபேர் இங்கு எனக்கு ஆறுதல் கூறுகின்றார்கள். ஆனால் அவற்றில் ஒன்றுகூட என் நினைப்பில் 'கல்வெட்டாகப்' பதியவில்லை. எத்தனையாண்டுகள் கழிந்தாலும் என் தங்கையின் சிரிப்பு, இணைப்பு, தேவை. எந்நேரத்திலும் உடல்சோர்வு பாராது உதவிய சேவை. தூக்கத்தில் சோம்பேறித்தனமாகக் கட்டிலில் பிரண்டு பிரண்டு கிடக்கும்போது விலாவில் செல்லமாக ஒரு குத்துவிட்டு எழுப்பித்தரும் கோப்பியின் சுவையும், அறிவுறுத்தலும்... ''இப்படியே சோம்பேறித்தனம் பிடிச்சு தென்றால் போற நாட்டிலும் இந்தநோய் தொற்றி உன் வாழ்க்கையைக் கெடுத்திடப் போகுதண்ணை''. என்று கெஞ்சிவிட்டு, அன்பு அதட்டலோடு ''கெதியா எழும்படா'' என்பாள். அந்த நிகழ்வு பதிந்த இன்பகரமான நினைவு நின்றாட, பெரியதோர் பூங்காவிற்குள் புகுந்தேன். ''எங்கட ஊர் ஒன்றின் சுற்றளவு கிட்ட நிற்க முடியாது'' அந்தளவு பெரிய பூங்கா; 'கொங்கோட் பூங்கா'. ரோஸ் பூக்கள் புடைசூழ நடுவே கிடந்த வாங்கில் குந்தியிருந்தேன். தலையை மெல்ல ஆட்டி ஆட்டம் கண்ட வாழ்க்கையின் வெறுப்புண் வேதனை தாங்க முடியாது. விம்மியெழும் நெஞ்சின் ஸ்தம்பிதமற்ற போக்கால் முட்டிவந்த கண்ணீரோடு குலறிக் குலறி அழவெட்கமுற்று, அணுங்கி அணுங்கி அழுதேன். என்னைக் கனவேகமாகக் காடு சேரக் கொண்டுபோவதுபோல் துடிதுடிப்பு ஆட்கொண்டன. ஊரிலிருந்து விமானம் ஏறும்போது இருந்த உட்சாகம், பிரான்ஸ் வந்ததும் செயின் நதிபோல் உருக்கொண்டு, பின் நம்ம ஊர் வாய்க்கால் தண்ணீர்போல் தேங்கிவிட்டன. எத்தனை தொல்லைகள், என்னை நிம்மதியிழக்கச் செய்கின்றன! ஒழுங்கான விசா கிடைக்காத கவலை, 'அகதி அந்தஸ்துக் காட் (Carte Refugie)', கிடைக்காத கவலை, தாய் தந்தை, தங்கை பற்றிய கவலை, ஊர்க் கவலை, இங்கு சாப்பாடு நானாவித செலவுகள் பற்றிய கவலை இப்படிப் பல வரவிலக்கணமாகத் தொடர்கின்றன. முக்கியமாக வேலை கொடுப்பனவற்றவனாக என் வாழ்க்கைப் பயணம் பயமாகவே இருந்தன. ''கடவுளை நான் நம்பவில்லை! என் தாய், தந்தை ஏழை எளியோருக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் குளங்களுக்கு செய்த உதவிப் பயனின் பலனை இங்கு நான் பெற்றிடுவதின் மூலம் வாழ்ந்து வாழும் நிம்மதியைத் தேடுகிறேன்''.

என் மூளை கலங்கிப் போயிருந்தது. அழுத கண்ணீரால் கண்கள் சிவந்து முகம் வீங்கிக் காட்சியளித்தன. இருண்டு கொண்டு வந்தது. ''மருண்டுவிடும் நம்ம ஊர் ஒளியிழந்த பூமியா இது?'' பகலைவிட இரவு பகலானது. இனி என்ன செய்யப் போகிறேன்? ருசி அறியும் நாக்குக்கூட எச்சிலற்று வறண்டு போயிருந்தது. பசியறியும் வயிறும் ஒட்டிக் கட்டியற்றுக் கிடந்தன எப்படியாவது இருப்பிடம் போய் ஆகவேண்டும். வாங்கை விட்டெழுந்தேன். திரும்பவும் நிழலாடினர் அம்மா, அப்பா, தங்கைச்சி, அயலவர்கள் எல்லோரும். படும் அவலமும், அழுகையும், சுமைசுமந்த வாழ்க்கையும்... வெகுநேரம்மிருந்த பூங்காவைவிட்டு வெளியே வரும்போது தயக்கமாக இருந்தது. தயக்கத்தைத் தக்கவைக்க முடியாத பசி மயக்கம் இயக்கம் கொள்ள முடியவில்லை.

முன்னாடி மூன்று பொலிஸ்காரர்கள்! விறைத்தாடியது நாடி. பார்வையின் தடுமாற்றத்தால் பின்னிப் பின்னிக் கொன்னதட்டி விழுந் தாடியது வார்த்தைகள். விசாவை எடுத்துக் கொடுத்தேன். வாங்கிவிட்டுத் தங்களோடு கூட்டிப் போனார்கள். 'வானம் பொளிந்தது என் கண்கள் நிறுத்திய மழையை'. அடிவயிற்றின் எரிமலைக் குமுறலை மழையால் தணிக்க முடியவில்லை.

நடந்து கொண்டிருந்தேன். நேரம் இரவு ஒன்பதாகிவிட்டது. இன்னும் கொஞ்சம் அழுதேன். பின் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு நடந்தேன். பொலிஸ்காரன் பின்னோக்கி என்னை முட்ட வந்தான். .. ! கிட்ட வந்தவன் என்ர விசாவைத் தந்து விட்டுப் போகும்படி சொன்னான் - இப்போது. ''என்னைப் பெத்தவர்கள் கொடுத்ததுக்குக் குறையில்லை என்றமைதி கொண்டேன்''.

ஐந்து மாடிப் படிகள் ஏறி அறைக்கதவைத் திறந்து உள்ளபோனேன். எங்கும் அமைதி. வழமையான சினிமாப் படத்தை ரீவியில் காணவில்லை. ரெப்றெக்கோட் பெலத்துக் கத்தும் 'கொன்னைத் தமிழ் புதுப்பாடல்'களின் சத்தம் கேட்கவில்லை. ஒருவித கும்மிருட்டின் அமைதி எல்லாரும் சொல்வதுபோல் 'மாயான அமைதி'. கண்கள் துழாவித் துழாவி நோக்கின. 'என்ன ஆக்கினய்யா... இருக்கிற மூன்று பேற்ற வாயும் திறக்கினமில்லை! நாறின மீனாய் நசிஞ்சு இருக்கிறாங்கள். 'இதயன்' வாய் சும்மாயிருக்காதே அவனொரு ''இசைஞன்''. தினமும் பாடிக்கொண்டே இருப்பான். இன்டைக்கேன் 'உம்' மென்று இடிஞ்சு போயிருக்கிறான்? மேலும் பலர் வந்து வந்து மௌனமாக அமர்ந்து கொள்கின்றனர். செய்தியறியாது - செய்வதறியாது நிற்கும் எந்நிலையைப் புரிந்தவன் ஒருத்தன்கூட வாயத் திறக்கிறானில்லை. கொதிப்பேறிப் போயிருந்தேன். இனி சற்றுநேரமும் பொறுப்பதற்கில்லை. நறுக்காக இரண்டு வார்த்தைகள் சொன்னால்தான் ரோசமுள்ளவன் சுறுக்கா முகத்திலடிப்பான். கணநேரம் மௌனம் நிலவியது. தேகத்தை உலுப்பி வாயைத் திறக்கும் முன்னம் தொலைபேசி மணிச் சத்தம் காதைக் கடிச்சது. இடிஞ்சு போயிருந்த இதயன் உசும்பினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிசிவரை எடுத்துக் கன்னத்தில் ஒத்தினான். பசிக் களைப்பு தலையச் சுற்றிச் சுழட்டியது. கிண்ணத்திலிருந்த கறி - சோற்றை எட்டி நடையோடு திறந்து திறந்து பார்த்தேன்! அவற்றின் வெறுமை தலையை உடைத்துவிடும் போலிருந்தன. எங்குபோய் உட்காந்திருப்பது என்ற பிரச்சனையாகவும் கிடந்தது. தொலைபேசிச் சத்தம் என் நெஞ்சில் இடியோடு தாளம் போட்டது.

''ஹலோ ... ஹலோ...''

''.................''

நான்தான் இதயன் கதைக்கிறேன்

''.................''

''ஓமண்ணை நிக்கிறான்!''

''.................''

அவனுக்கு இன்னமும் விஷயத்தைச் சொல்லவில்லை! இப்பவே வெறிபுடிச்சவன் போல நிற்கிறான். நாங்கள் என்ன பக்குவத்தோடு சொன்னாலும் அவன்ர குணம் உங்களுக்கும் தெரியும்தானே? முன்பின் யோசனையில்லாத மோட்டுத்தனமான முடிவுக்குப் போயிடுவான் என்ற பயத்தில்தான் எல்லாரும் குந்தியிருக்கிறோம். நீங்க கெதியா வந்தீங்கன்னா நல்லமண்ணை''

கதவு தட்டும் சத்தம். ஓடிப்போய் நான்தான் கதவைத் திறந்துவிட்டேன். இன்னும் இருவர் உள்ளிட்டதும். என்னை முழிச்சிப் பார்த்துவிட்டு ஒதுங்கிக் கைக்கட்டோடு சுவரோடு சாய்ந்து நின்றனர்.

''என்னடா இண்டைக்கென்று நல்லூரான் எல்லாரும். ரூமுக்கு வந்து குவியிறாங்க. என்ன நடக்க போகுது?'' என்ற பெலமான யோசனை எனக்கு. என்ன இவங்க? என்று ஒரு தரத்துக்குப் பத்துத் தடவை சுற்றிச் சுற்றிப் பார்த்தேன். பின்பு எனக்குள்ளாகச் சிரிச்சேன்.

''இங்கின சுத்துமாத்துக்கென்று வெளிக்கிட்ட . . .. பழைய மாணவர் சங்கம் ஏதும் இவங்களும் தொடங்கக் கிடங்கப் போறாங்களா!'' பொறுமையிழந்த நான் சீறிப் பாஞ்சேன்.

இதற்குள் எங்களுக்குப் பெரியவரான 'காசியண்ணர்' ஆலாப் பறந்து வந்தவராய். அதேவேளை ஆவேசத்துடன் அந்தரப்படாதவராய் நிதானமாக என்னைப் பார்த்து நின்றார்.

காசியண்ணன் கொஞ்சம் படிச்சவர். அதேவேளை நல்லது-கெட்டது புரிந்து அதற்கேற்ற ஒழுங்குகளை ஓரவஞ்சனையற்று, குஷாலான நேரத்திலும், கவலைகளால் தடுமாறும் நேரத்திலும் எப்படிப் பக்குவமாக நடந்து கொள்ளவேண்டும் என்பதில் ஒருவிதமான சாமர்த்தியசாலிதான். ஆனால்..

இனி இவர் கையாளப்போவது என்ன?

''ஆனந்தனுக்காக ஒரு பெருமூச்சை ஊதினார். காசியண்ணையின் விழிகளை வாங்கிய நான் வழியறியாதவனாக இமைகள் எழுப்பி முழிச்சேன். திடீரெனப் பதட்டப்பட்டவர்களாக இதயனும், சுந்தரனும் கதிரையை விட்டெழும்பி நின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்திருந்த ஜன்னல் வழியாக இரவு நேரக் குளிர் காற்று வந்து கொண்டிருந்தன. சின்ன அறைக்குள் அடைபட்டிருக்கும் பத்துப் பேரின் மூச்சின் வெட்கையைத் தணித்தன. பல சோடிக்கண்கள் காசியண்ணனையும், என்னையும் மாறி மாறிப் பார்த்துப் பனிந்துகொண்டன. என்னுடைய கண்கள் சிவந்து முகமும் சோர்ந்து சூம்பின கத்தரிக் காய்போல் இருந்தன. இந்நேரம் காசியண்ணன் வாய் திறந்தார்.

''தம்பி ஆனந்தன் இப்படி இந்தக் கதிரையில் இரு தம்பி''

''உம்... உம்... சீ... சீ... நான் மாட்டேன். நீங்க - அவங்களெல்லாம் நிக்கிறீங்க''. ''அது பரவாயில்லை. நான் இதில் இருக்கிறேன் நீயும் அதில இரு தம்பீ''. தலையை மெல்லாட்டியபடி உட்கார்ந்தேன்.

''ஆனந்தன் ஊரில் உங்கட அம்மா, அப்பாவும் இந்தப் பிரான்சில நீயும் - நாங்களும் கும்பிட்ட தெய்வங்களெல்லாம் நம்ம இனத்தைப் பொறுத்த மட்டில் துணைக்கு வரவில்லை என்பது வேதனைக்குரிய விடயம்தான். இப்ப நான் உன்னைக் கும்பிடுறேன். நான் சொல்வதை அமைதியுடன் கேள் பிற்பாடு ஆகவேண்டியதைக் கவனிப்போம்''.

சிந்தனைகள் பலவாறு உருண்டாலும் நிந்தனைக்குரிய செயல்! என்ன நடந்தது? என்ற வாக்கினை எங்கனம் கக்கினம் இல்லை என்று ஏங்கியிருந்தேன். காசியண்ணன் கண்கள் கலங்கி அணுங்கிய குரல் தணிந்து வந்து விழுந்த ஒருகணம் விம்மலும் மேலிட்டது.

''தம்பி உனக்கு மட்டும் நடப்பதல்ல நம்மட இனத்துக்கே இதுதான் விதி சதிசெய்வது என்று சொல்லி நியாயப்படுத்தவும் இதுவல்ல நேரம்'' சட்டென்று ஆவேசமாகத் தொனித்த குரல் பட்டென்று போட்டன தொலைபேசிச் செய்தியின் அவலத்தை...

''தம்பி ஆனந்தன்! உன்ர தங்கைச்சி புனிதாவை ஆமிக்காரன் கற்பழிச்சுப் போட்டு கழுத்தை நெரித்துக் கொன்று சடலமாக கந்தர் மடத்தடிச் சந்தியில் கிடந்தெடுத்து அடக்கமும் முடிந்து விட்டன. என்று உன்ர மாமா கொழும்பிலிருந்து ரெலிபோனில் சொன்னார். உன்னைக் கேட்டார். நான்தான் அவனில்லை என்று சொன்னேன். வந்ததும் சொல்லச் சொன்னார். இப்பதானே நீயே வந்திருக்கிறாய். அதனால்தான் இதயனிடம் சொன்னேன். அயல் ஆக்களுக்கு ரெலிபோன் எடுத்துச் சொல்லும்.'' விம்பி விம்பி விழுந்த குரலால் வெடித்திடும் என் இதயம் மூர்க்கத் தனமாக முரட்டு ஆவேசத்துடன் துடிச்சு எழுந்தேன். இருந்த கதிரையும் பின்புறமாக விழுந்து குலறின. உணர்ச்சி வேகத்தால் தேகம் கிடுகிடுவென நடுங்கின. என்ன செய்வதென்று வாய் புலம்பின. ஐயோ கடிதத்தில் எழுதியிருந்தாளே! என் கையில் இப்போது வளையல்கள் இல்லை ''மலர வேண்டிய மலர்ச்சிக்கான வடிவம்தான் ஏந்தியுள்ளேன். 'பாடப் புத்தகத்தைக் கையில் ஏந்தும் நேரம்போக பகுதி நேரத்தில் இன்னுமொன்றையும் பழகி வருகிறேன்'' என்றவள் இன்று என்னைவிட்டுப் போய் விட்டாளா? வீட்டைவிட்டு - ஊரைவிட்டு வெளிக்கிடும்போது மலர்ந்த முகத்தின் முறுவலோடு கள்ளமற்ற தேன்சிந்தும் இனிதான குரலில் சொன்னாள். ''எங்கிருந்தாலும் இங்குவந்து வாழ்வதையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிதான வாழ்வெனக்கொள். அதுதான் பிறப்புக்கும் இறப்புக்கும் பெருமை'' யென்ற என் மண்மகளா, அன்புத் தங்கை புனிதாவா மறைந்து விட்டாள்?

இல்லை... இல்லை...
கற்பழிக்கப்பட்டாள்...
சாகடிக்கப்பட்டாள்.
இனி?

தனித்துவிட்ட அம்மா, அப்பா நெஞ்சில் மேலும் ஒரு பூகம்பம்! விரக்தி, விரயம், கவலை, நிம்மதியற்ற நிர்க்கதி. இதற்கிடையே தீர்க்கமான முடிவு ஊர்போய்ச் சேர்வதென்பதும், புனிதாவின் சாவோடு சங்கமமாகிவிட்ட கனத்த மனசில் தனியாக ஒலித்தன. விடிந்ததும் முதல் அலுவல் இதுதான்... இறுகிய பிடிதளராது நின்றேன்.

இதயன் எழும்பி எல்லோருக்கும் தேத்தண்ணீர் பரிமாறினான். என் நாவில் எச்சில் இல்லாதது கண்ணீர் உப்புக் கரித்திடும் போதுதான் சிலிர்த்தன. ''இவன் தேத்தண்ணி குடிப்பானா?'' குடிக்க மாட்டான். பிடிவாதம் பிடிச்சவன் குணமறிந்து எனக்குத் தேத்தண்ணீர் இதயன் தரவில்லை. குனிந்தேன். கண்ணீர் பொலபொலவென உதிர்ந்தன. நிமிர்ந்தேன். அதனைக் குடித்தேன். காசியண்ணன் எழுந்து கைகளால் கண்ணீரை வழிச்செறிந்தார். தலைமயிரை மெல்ல வருடினார். அந்நேரம் அவர் அழுத கண்ணீர் என் தலைமேல் விழுந்து அதிர்ந்தன. முடிந்தன. இரவும் விடிந்தது - பகலும்.

காலை எழுந்ததும் நானும் காசியண்ணனும் அலுவல்களைப் பார்ப்பதற்காகப் படிகள் இறங்கினோம். அவருக்கு விருப்பமில்லைத் தான். என்ர பிடிவாதம் அவரால் மறுப்புச் சொல்ல முடியவில்லை. படியைவிட்டு இறங்கியவர் கடிதப் பெட்டியைத் திறந்தார். என் பெயருக்கொரு கடிதம்...

''தம்பி ஆனந்தா உடைச்சுப் பார்க்கட்டாடா?'' மௌனமாகத் தலையாட்டினேன்.

சிரிக்க முடியாத சிரிப்பை வலுக்கட்டாயப்படுத்தியவர் ''டேய் தம்பி உனக்குக் காட் அக்ஸப்ட் பண்ணியிருக்காங்கடா'' குலுங்கி குலுங்கி ஆடியபடி காசியண்ணன் படிகள் ஏறினார்.

நானும் அவர் பின்னே படிகள் ஏறிக் கொண்டிருந்தேன்.

●

ஞாயிறு தினக்குரல்
26-10-1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேஷங்கள்

எந்தப் பேரிடி மழையுக்கையும் அமுக்கிக் கிழிச்சுக்கொண்டு கேக்கக்கூடிய சிம்மக்குரல். குறைவெறி நிறைவெறியிலும், வெறிமுறிந்த பின்பும் நெருப்புத் தனல்போல் மின்னிக்கொண்டிருக்கும் கண்கள், நீண்ட முகத்துக்குத் தோதான கூர்மூக்கு, சற்றுக் கோணவாயாக இருந்தாலும் இழுப்பில் கொன்னதட்டாது நேர் பேச்சில் மூடியெழும் தடிச்ச சொண்டுகள், ஈச்சங்கனி போன்றதென்று சொல்வதற்கில்லாத பொது நிறம், ஓரளவு படிச்ச தெம்பில் அடிக்கடி ஆங்கில வார்த்தைப் பிரயோகம், ஐந்தடி - ஆறங்குலம் கொண்ட உயரம், உடல் அமைப்பு உருண்டை கள்ளுமுட்டி அளவில்லாது தேங்காய் அளவு வண்டி, கூர்மூக்கு நுனியில் வியர்வைக் கசியும், எடுத்ததற்கெல்லாம் கசந்துபோய் நாக்கை அடிக்கடி சப்புக் கொட்டுவார். தன்னைச் சுற்றியிருப்பவர்கள் தன்சொல்லுக்குத் தலை யாட்டினால் 'தர்மராசாவுக்கு குஷி உஷ்ணம் ஏறினால் உதவாக்கரைப் பேச்சு, ஊரில் போட்ட லோங்கிசும், சேட்டுப் போட்டாலும் வாழும் நாகரீக காலநிலைக்கேற்ற உடையில் அடிக்கடி மாற்றம். மனைவி, மூன்று புள்ளைகள். இவர்களுடன் பிரான்சில் அகதி என்று சொல்ல வெட்கப்பட்ட சீவியம். சதா பணத்தின் மீதும், வட்டிக்காசு மேலும், வங்கிக் கணக்குடனும் தான் பொழுதுபோக்கு. ரெஸ்ரோறனில் வேலை செய்தாலும் சண்டைக்காரப் பார்வை. ஊர் நிலமைகள், சொந்தம், பந்தம், அறவே உறவறுத்த நிலை. சாடிக்கேற்ற மூடிபோல் தாலிகட்டிய பத்தினியாள். இவளிடம் செயற்கைச் செயல்களே அதிகம் ஊடுருவல். முகத்தில் முறுவலற்ற சிடுசிடுப்பு - அகப்புலம்பலின் வெளிப்பு. இத்தகைய குடும்ப சபையினர் திருவாளர் தர்மராசா.

மனைவி தங்கம்மா; இவர்களுக்குப் பிறந்த மூத்த குலக்கொழுந்து தங்கராஜா; இளையவன் தங்கராணி, கடைக்குட்டியல்லாத ரஞ்சினி. மேலும் புள்ளைபெற ஆசை. பிரஞ்சு அரசாங்கத்தின் புள்ளை வளர்ப்புக்கான காசு வறுகும் நோக்கமதாய். நாளாந்தத் தேவைகளில்கூடப் பிசினித் தனம். இத்தகைய குடும்பத் தலைவன் தர்மராசா வேலைக் களைப்பில் வீட்டுக்குள்...

''எடியே தங்கம்! எங்க இருக்கிறீர்? இஞ்ச வந்து என்ர முதுகு, கழுத்தைப் புடிச்சமத்தும். வேலை சரியான கழுவல் வேலை நோ நோவென நோகுதப்பா'' இப்படிக் கூப்பிட்டபடி வலியச் சிரிச்சார். வாஞ்சையற்ற இவரது செயலில் செயற்கை மிஞ்சும், நிஜயம் கெஞ்சும்.

''ஆம்பிளயாளாப் புறந்தா உழைக்கத்தானுங்க வேணும்''.

பொய் மலர்ச்சி தோன்ற ''அப்ப பொம்பிள்ளையாப் புறந்தா உழைக்கக் கூடாதென்று சட்டம் கிட்டம் வைச்சிருக்கிராங்களா?''

இளைப்பை பெரிசாவிட்ட கோபத்தில், ''இப்ப என்னவாம்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம்மாவின் குரலில் குழைவும், பலாச்சுளை இனிப்பும் இழை யோடியது. தர்மராசாவின் செவ்வானக் கண்களின் முழிபிரண்டு குறைவெறிக் குணத்தில் கோவம் கெம்பி எழுந்தது.

''உவன்தான் உந்த மூத்தவன் இருக்கிறானா? எனக்குக் கோவம் கோவமா வருகுது.'' தங்கம்மா ஆச்சரியத்துடன் மௌனமானாள்.

வினாவுக்குப் பதில் வராத எரிச்சலோடு உறுமினார். ''உவன் தறுதலை சனிவிழுவான். ஊரில பக்கத்துவீட்டு அப்பக்காரி புள்ளைகள்மேல் 'செல்' விழுந்தப்போ உவனும் அங்கினதானே நிண்டவன். அதுக்க மாட்டுப்பட்டுப் போயிருந்தாலாவது இண்டைக்கு நிம்மதியாகயிருந்திருக்கும். இல்லாட்டி 'டாணா' 'பாணா' பங்கருக்க இருக்கவிட்டுட்டு நாம வந்திருக்கவேணும். நான் இஞ்ச 'வைண்' குடுத்த பம்பரமாகச் சுழண்டு இரவுபகல் பாராம உழைக்கிறேன். உந்தத் தடிப்பயல் உணராமல் இருக்கிறானே? நம்மள ஓட்டாண்டி ஆக்கிடுவான் போலத்தான் கிடக்கு. இஞ்ச எவ்வளவு படிக்கிறதுக்கு வசதியும் வாய்ப்பும் இருக்குதடி! படிப்பையும் துச்சமாக மதிச்சுப் பாழடிச்சிட்டான். என்ன! தங்கம் உன்ர மூச்சைக் காணோம்?'' என்றவர் எரிச்சல் உணர்ச்சியின் சுள்ளீட்டில் காறித் துப்பினார்.

தங்கம்மா சாரப்பாம்பாகச் சீறினாள். ''என்ன ஏதெண்டு பறையாமல் அவன ஒரேயடியாகக் கறைச்சுக் கொட்டுறீங்க?'' இடையே நயாக்கரா நீர்வீழ்ச்சியின் இரைச்சல்.

''கொட்டுறதா? கொலையே செய்திடுவன். நம்மட கையெழுத்தப் போட்டல்லோடி பழகுகிறான் உன்ர செல்லம் ஓமோம். உன்னையே உரிச்சபடி அச்சுவாத்த மவன்''.

''என்ன ஏதெண்டு சொல்லிப் போட்டுத் திட்டுங்களேன்''

''உன்ரமவன் பண்ணியிருக்கிற காரியத்தைப் பார்த்தியாடி? அங்க உழாத மாடு இங்க உழும்மென்று கொண்டுவந்து ரோட்டில் விட்டிருக்கிறாய். புள்ளையா வளர்த்து வைச்சிருக்கிறா? தங்கம் உது புள்ளையில்லடி நம்மள நாசமாக்க வந்த தொல்லையடி''.

இதுவரை எல்லாத்தையும் உம்மென்று மூஞ்சியைப் பிடித்தபடி பேசாமல் கேட்டும், பார்த்துக்கொண்டும் நின்றவள் சதிரத்தை ஆட்டிக் கத்தினாள்.

தர்மராசா குறைவெறி முறிஞ்ச பார்வையோடு ஹோல் செற்றிய விட்டெழும்பி கடவாய்க்குள்ளிட்ட சிரிப்புடன் மேலும் பத்தினியாளைப் புதிய பார்வையில் பார்த்தார். ஆனால் துலாம்பாரமாக விளங்கும் அவளுக்கு பாசமற்ற பசப்பும் பார்வையெண்டு. இதையும் மிஞ்சிடும் பாவம் தங்கம்மாவிடம். பரிசுத்தமான பெண்களின் நகைப்பில் கலைமகளும், திருமகளும் சேர்ந்து வாசம் செய்வர் என்றார் பாரதி. இத்தாய் பாரதி யுகத்துப் பெண்ணாகவா நின்று சிரிக்கிறாள்? சிடுசிடு என்று சீறினாள்.

''அவன் என்ன தலைபோற குத்தத்தைச் செய்திட்டான் என்று குதிக்கிறீங்க? விஷயத்தைப் பறைஞ்சிட்டு உங்க அனற்குழம்பைத் தாராளமாகக் கக்குங்க. குழந்தையல்ல நம்ம மூத்த செல்வக் குஞ்சுங்க''.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம்மாவின் கண்ணிமைகள் எழும்பித் தடைப்பட்டு நிற்க, வேகமும் ஆசையும் இரசம் போல் ததும்பி ஓடியது. பின்னர் இமையடிக்கப் பார்த்த பார்வையில் பதில் கேட்டாள்...

''என்னடி செக் புத்தகத்திலிருந்து இடையிடையே செக் காணாமல் போச்சு. காட்டெருமையன் உந்தக் களவாடியன்ர கைவரிசையாகத்தான் இருக்கும். எனக்குக் கோவம் வந்தாத் தெரியும்தானே. வங்கியிலபோய்ச் சொல்லிப் போலிஸில் படிச்சுக் குடுத்திடுவன் உவன் உப்பிடியே போனா! இல்லாட்டி ஊருக்கு அனுப்பிவிடுவோமடி. அங்கபோய் பசி பட்டினிகிடந்து அடிபட்டுச் சாகட்டும். தங்கம், காசு வந்தா இரண்டு கால்தான் என்பார்கள். போகும்போது நூறு கால் என்றல்லோடி சொல்லுவாங்க. அதை உவன் உண்மையாக்கிடுவான்ரி! தங்கம். வடிகட்டின கஞ்சனான உன்ர அப்பா வட்டையே காசும், காணியும் என்ன தில்லுமுள்ளுப் பண்ணி துளை துளைச்சு வாங்கிச் சேர்த்தனான். அந்தக் காசும், காணியும் ஊரில கிடக்கத்தானே இந்த அழகாபுரியான பிரான்சுக்கு உங்களைக் கூட்டிவந்தனான். வந்தப்புறம் நாம ஊராக்களப்பற்றிக் கவலைப்பட்டதில்லை. நமக்கேன் இந்த வம்பும், தொல்லையும், தொடுசலும். நாம சந்தோசமாகச் சீவிக்கணும். அதுக்குக் காசுதான் கடவுளடி. உதை இந்தப் பொடியன் சனிவிழுவானட்டச் சொல்லிவை. பின்னடிக்கு நீதான் வருத்தப்படப் போறாய்''.

கன்னங்கள் துடி துடிக்கச் சொன்ன வார்த்தைகளைச் செவிமடுத்து நின்ற தங்கம்மா நசுங்கினாள்.

''நம்ம மகன்தானுங்க. காசிருந்தா செலவழிக்கத்தான் வேணும்.''

''ஊதாரி நாளைக்குப் பிச்சைக்காரன். கஞ்சன் எண்டைக்கும் பிச்சைக் காரன்''.

''நம்மட்ட இருக்கிற காசு ஆருக்கு? நம்ம புள்ளைகளுக்குத் தானுங்க. நமக்குக் கர்த்தர் அள்ளித் தருகிறார். ஊரில் சும்மா கிடக்காமல் இந்தப் பொடியங்கள் அந்தப் பெரியசிங்களப் படையோட அடிபட்டுச் சாகிறாங்க. நமக்கென்ன வந்திட்டு? நாம இங்க 'நசினால்டி' தானுங்க. அந்த ஊருக்குப் போகவா போறோம்?''

கொஞ்சநேரம் இருவரும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தனர்.

''ஊரென்டதும் ஞாபகம் வந்திட்டு. உங்கட தங்கைச்சி கடிதம் போட்டிருக்கா. என்ர மனசு துருதுருத்துக் கொண்டிருந்ததால உடைச்சுப் பார்த்திட்டேன். தந்து வைச்சவள் மாதிரி காசு அனுப்பட்டுமாம். மருமவளை இஞ்சனுப்பி வைக்கிராவாம். மகனுக்குப் பார்த்துக் கட்டி வைக்கட்டுமாம்'' என்றவள் பெரும் குரலில் ஒலித்த வாசிப்பு நக்கல் சிரிப்போடு சிலுப்பி ஓய்ந்ததும் ஓரக்கண் பார்வையில் சின்னக் கோவத்துடன் நின்றாள்.

தர்மராசா ஆத்திர நரம்பு துடிக்க, அறைக்குள்ளபோய் இரண்டு - மூன்று கிளாஸ் விஸ்கியை அன்னாந்து ஊத்தியதும்; நாடி நரம்பெங்கும் விர் விர்ரென்டோடிய வீராப்புடன் சப்புக்கொட்டிய கோணவாய் இழுவையோடு விசர் நாய்போல் குரைந்தார்.

''ஏனாக்கும் தங்கம், இதுகளெல்லாம் இங்கின வருகினம்? நாம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோசமாகக் கலாம் புலாமென்று சீவிக்கிறது புடிக்கயில்லையா? போனவருஷம் ஐநூறு பிராங் அனுப்பினதுதானே! அதுபோதும் ஒண்டும் அனுப்பவேணாம். கடிதத்தைக் கிழிச்சுக் குப்பையில் எறியபடி''.

''ஏசு கிறிஸ்துவான உங்கட மனசில உள்ளதும் என்ர மனசில கசிஞ்சதும் தோதுதானுங்க. நீங்க இப்படிச் சொல்லுவீங்களெண்டு எனக்குத் தெரியுமுங்க''.

இருவரிடத்திலும் செயற்கை கூடமாட உதவியது.

''தங்கம் பாவத்துக்கிரங்கிக் காசையனுப்பி வில்லங்கத்தையேன் விலைக்கு வாங்குவான்? உவன் உந்தத் தடிப்பயலுக்கு இங்க நம்ம அயல் பொடிச்சியப் பார்த்து வைச்சிருக்கிறேன். சொந்தங்களில இல்லுப்போல பாசம், பச்சத்தாபம் வைச்சிருந்தா அதையும் கிள்ளி எறிஞ்சிடு. நாம நம்மபாட்டில் சீவிப்போம். ரெஸ்ரோறன் குசினி வெக்கையுக்க நிண்டு நிண்டு ஒவ்வொரு முடியாக் கொட்டுண்டு கொட்டுண்டு பார் தலைய வழுக்கையாப் போச்சு. அவ புள்ளைக்கு புகலிடம் கொடுக்க நான் என்ன பன்னிரண்டு நாட்டு ஐரோப்பிய யூனியனா வைச்சிருக்கிறேன்? எழும்பிப் போய் சாப்பாட்டைப் போடும். இரண்டு கிளாஸ் குடிச்சிட்டுக்கு கையக் கழுவிக்கொண்டு வாரேன்''.

தங்கம்மாவின் உருண்டை முகம் பூசணிக்காய் போல் வெளிச்சும் - தக்காளிப் பழம்போல் சிவந்தது. தர்மராசா சாப்பிட்டதும் கொஞ்ச நேரத்தில் அறைக்கட்டிலில் ஆனையப்போல் சரிஞ்சார். படுத்தாரெண்டால் சவம் மாதிரித்தான். கும்பகர்ணன் கூடத் திரும்பி ஒருமுறையாவது படுப்பான். உந்தாள உலக்கையால இடிச்சாலும் எழும்பார். குறட்டையும் நம்மயூர் பொக்குவண்டில் சத்தம் தோத்திடும். மனிசன் காலம்புற வேலை நேரத்திற்கு சேவல் கூவுறதுபோல் கூவிக்கொண்டு எழும்பியிடுவார்.

புருஷன் புளுகில் இழிச்சபடி நின்ற தாயின் கிட்ட வந்து நின்றான் தங்க ராஜா. கொதிக்கிற எண்ணையில் போட்ட கடுகு வெடிக்கும் கோபத்தோடு.

''அம்மா எல்லாத்தையும் ஒண்டுவிடாமல் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். தங்கைச்சியட அறையிலிருந்து. நீங்கள் செய்யிறது இல்லுப் போலையும் நல்லாயில்லை. உலகத்தில் எங்கயினம் போல் அவதியும் கொடுமையும், அலைச்சலும் பட்டவங்க ஆரு இருக்கிறாங்க? மாமியின் குடும்பத்திற்கு உதவவேணும். உங்கட்ட நெடுக நிண்டு நாண்டுகொண்டு நிக்க ஏலாது. செக் கிழிச்சு சாவித்திரி வாறதுக்குக் காசு அனுப்பியிற்றேன். அடுத்த கிழமை பிரான்சுக்க வந்திடுவாள்''.

''என்ன காரியமடா பண்ணியிருக்க? எங்கள ஏமாத்தலாமாடா? அப்பாவோட மட்டும் இப்படி ஏடா கூடமாக கதைக்காதே மகனே. உனக்கு அப்பா பொட்டை பார்த்திருக்கிறார். செலவுமில்லை. கொஞ்சம் சீதனமும் வாங்கலாம். அம்மாவட சொல் கேள். சும்மா தேவையில்லாமல் பினாத்தாதடா''.

''பணம் வந்திட்டா உங்கள உங்களுக்கே தெரியாது. உங்களப் பார்க்க என்ர கண்ணே கூசுதம்மா''.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தாயின் உள்ளத்து உணர்ச்சியும், உருக்கமும், அணைப்பும்தான் உயர்ந்தது உலகத்தில் என்பார்கள்.''

''மற்றவங்க எப்படியோ நாம அப்படியில்லை. நமக்குச் சாதி சனமும் வேணாம்; குலகோத்திரமும் வேணாம். நம்மட சைவத்தை விட்டு, வேதத்திற்கு வந்திட்டோம். வேதத்தில் பார்த்துத்தான் உங்கட கல்யாணங்கள் நடக்கவேணும். வருங்காலச் சீவியத்தையும் கவனிக்க வேணும். ஊழ்வினை என்று கிடந்து மாரடிச்சு அழுந்தக் கூடாது நம்ம குடும்பம். அப்பா அதுக்காகத்தான் இப்பிடிப் பிசினியாய் இருக்கிறார்''.

''அம்மா! அப்பாவக் காட்டிலும் நீங்கதான் மோசம்''.

''டேய் ராஸ்கள் பொத்தடா வாய்! அகல்விளக்குக்கு எண்ணெய் வாங்க வழியற்றிருந்த நாங்களாடா? சண்டாளா! நாங்க காசுக்கு மேல படுத்துக் கிடந்தனாங்களடா'' ஆவேசமான கோபத்தில் சொல்லத்தகாத சொற்களைச் சொல்லியழுதபடி சிரித்து நின்றாள்.

''வேட்டிக்கு ஏத்த சேலைதான் தோதா வாச்சிருக்கிறீகள். உங்களோட கதைச்சா உந்தநோய் எனக்கும் தொத்தும்.'' என்றவன் இமை மூடித் திறப்பதற்குமுன் வெளிக்கதவைத் திறந்து வெளியேறினான்.

தங்கம்மா தடுமாறாமல் திமிறுடன் திட்டினாள். ''உவன்ர போக்கு எப்பனும் தொந்தரவாக வந்து முடிஞ்சிடுமோ?'' உடம்பில் வந்த தெம்பப் பாரேன்! நல்லாத்தான் இருந்தவன், நடந்து காட்டுறது பிழையாக் கிடக்கு. உண்ணான அந்த மனிசன்ற வாக்குப் பளிச்சிடுமோ? லூர்த்து மாதாவே, கையேந்திக் கேக்கிறேன் உவன்ற மனசைக் கோணலாப் போகப் பண்ணாதம்மா. நேர்த்திக்குச் சேர்த்த காசை உண்டியலில கொண்டு வந்து போடுறனம்மா இப்படியான வேண்டுதலோடு இளைப்பை விட்ட போது... அறைக்குள்ளிருந்து வந்த தங்கராணி இரக்கமும் இறுக்கமுமான தொனியில் தாயின் நேசமற்ற நரம்பு சுள்ளெண்டு சுண்டக் கொடுத்தாள்.

''அம்மா புனர்வாழ்வு நிதி சேகரிப்பு உண்டியலுக்க போடப் பொசிப் பில்லை உங்களுக்குக் கல்லாயிருக்கிற மாதாவட உண்டியலுக்க கொண்டு போய் கொட்டுங்க.'' இப்படிப் பேசிவிட்டுத் தாயைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் அறைக்குள்ளபோய் கட்டிலில் இருந்து கொண்டாள். பெற்றவர்களின் வழி எவ்வளவு நிஷ்டைக்குரியதெனத் தெரிந்து நொந்து கொண்டாள்.

கதவைத் திறந்து கொண்டு திரும்ப வேகமாக வந்த தங்கராஜா சோகமும், நேசமும் உள்ளத்தைத் தொட்டு நெகிழக் கேட்டான்.

''அம்மா ஊரில இருக்கிறப்போ மாமியட கையாள சமைச்ச சாப்பாடு சாப்பிட்டனான். அந்த அருமாந்த ருசி இன்னமும் என்ர நாக்கூற்றை விட்டுப் போகயில்லையம்மா''

''ஏடேய் அறுவானே ஏன்றா உனக்கு இப்பிடித் தெறிச்சுப்போன புத்தி குறுக்கால வந்து விழுந்தது?''

''நான் புத்தி மாறயில்லை. நீங்கதான் மாறாட்டம் புடிச்சிருக்கிறீங்க. இல்லுப்போலையும் ஊர்ச் சனத்தில நேசமற்று இருக்கிறீங்களோ? பக்கத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு ஏழைக் குடும்பத்தின்மேல் விழுந்த குண்டு எங்கட வீட்டுக்குமேல விழுந்திருந்தா, கடவுளே! கொடுப்பவனாக இருந்திருக்கும் இப்பயிந்தப் பிரான்சில வந்திருந்து இப்படியொரு சில்லெடுப்புப்பட்டுக்கொண்டிருக்கத் தேவையில்லை'' என்றவன் மேலும் கோபமும், அனுதாபமும் மிதமிஞ்சிக் கொஞ்ச நின்றான்.

''உவன்ர வாயைப் பாரேன்? என்னமாக் கதைக்கிறான் என்று? இது எங்கபோய் முடியப் போகுதோ? மாதாவே, கர்த்தரே உவன் ஆடுற சன்னதத்தைக் கண்திறந்து பாருங்கோவேன்''.

''சிவ, சிவ, கந்தா நல்லூரானே என்று காட்டுக் கத்தல் கத்தினீங்க. இந்தக் கடவுள் என்ன பாவம் செய்தாரோ இப்ப மாதாவே, கர்த்தரே என்று பிரலாபித்து மாயுறீங்க. இந்தப் பாவத்தால் எப்படிப் பட்டழுந்தப் போறீங்களோ. சீ... சீய் என்ன பிறப்போ? பிறவிப்பயனோ?''

இப்படியே நாட்கள் உருண்டன...

தர்மராசாவிடமும், தங்கம்மாவிடமும் மனப்பாங்கான எண்ணங்கள் சிறிதளவேனும் தென்படவில்லை. வாறகிழமை சாவித்திரி பிரான்சுக்குள் வந்திடும் செய்தியறிந்து தர்மராசாவின் கர்ஜனை காதுச் சவ்வுகள் வெடித்துச் சிதறிடும் கத்தலதிர்வு.

''உவள் ஆற்ற காசில வாறாள்? உவன் களவாடி நம்மட்ட எடுத்த செக் மாத்தியனுப்பின காசில்தானே? அங்கின கிடந்து பொட்டைச்சிகள் தூக்கிற துவக்கைத் தூக்கிகொண்டுபோய் சண்டையில சாகாமல், என்ர சீவன வாங்கவா வாறாள்? தங்கம் சொன்னேன் கேட்டியா? தலையில குண்டைத் தூக்கிப் போடுவான் என்று. சவச் சரீரம் நடுங்குது. நான் அந்த வேதக்காரரோட கல்யாணப் பேச்சு முடிச்சிட்டேன். எக்கணம் சாவித்திரிய இந்தவீட்டில் கொண்டுவந்து வைச்சிருக்க ஏலாது. எங்கயாவது அந்திரிச்சுப் போய்ச் சேரட்டும். தங்கம் உனக்கு மருமவள் சாவித்திரியில்லை. 'எமில்டா'தான் மனசில வைச்சுக்கோ. உல்லையே தாலி அறுந்திடுவாய் எக்கணம்''.

தர்மராசாவின் காட்டுக்கத்தலில் கதிகலங்கிப் போன தங்கம்மாவின் நரிமூளை 'தமிழனைத் திண்டு விழுங்கிய சிங்களப் பெரும்நரி, ''ஜே. ஆரின்'' மூளையை வென்றிட நின்றாலும் இந்தக் குடும்பத்தின் கறள் படிந்த சமூகப்பார்வை 'குறள்' படித்த படிப்பில்லாது. பிரான்சு மண்ணின் சகோதரத்துவம் புரியாது. கேவலமான சீர்கெட்ட புத்தியில் அச்சுப் புள்ளையார் வார்ப்பாக நிக்கினம் 'இவர்கள் போல் பலர்'.

தங்கைச்சி மோளுக்குக் கல்யாணம் கட்டிக்கொடுக்காமல் இந்தப் பிரான்சில் மதமாறி, குலமாறி இன்னொரு தொத்தின மதமான கிறிஸ்தவப் பெண்ணுக்குப் பேரம் பேசும் தாய், தந்தையை உந்தி உணர்ந்து தங்கராஜா கண்களால் வழிந்த கண்ணீர், தேங்கிநிற்க முடியாது பள்ளத்திற்க இறங்கும் சாரைப் பாம்பு மாதிரி மூக்கு விரிவில் தட்டுப்பட்டு கன்னங்கள் வழியே வடிஞ்சு கடவாய்க்குள்ளிட்டது கண்ணீர். உப்புக் கரிப்பின் சிலிர்ப்புக் கூட தங்கராஜா முகத்தில் ஆடவில்லை.

வெளியில் சந்தித்த நண்பன் மூலம் சாவித்திரி செத்துப்போன செய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டு துயர வெள்ளத்தில் தத்தளித்தான். அச்சாவின் நோவினையோடு சாவித்திரிக்கு நேர்ந்த கதியை பணப் பேய்களான தாய், தந்தைக்கு நெஞ்சுபதறக் கூறினான். ஊர்ச் சனத்தின்ர வாழ்க்கை கோரக் கொடும் புயலாய் வீசிய அனர்த்தங்களின் ஆக்கினையில் வாழ்ந்து மெலிந்தவள், கொழும்பில் வந்துநின்று சிங்களப் பொலிசாரின் கெடுபிடிகளுக்குப் பயந்து நாளும் பொழுதும் உயிரைக் கையில் பிடிச்சபடி நின்று கோரணிய வாதைகளை அனுபவித்தவள். கொழும்பிலிருந்து வெளிக்கிட்டு மொஸ்கோ வந்திறங்கி. 'போடர்' கடக்க ஓட்டமும் நடையுமாக நடந்து இளைச்சுப்போனாள். அந்தப் பாதையில் சூரியனும் இல்லை, வெய்யிலும் இல்லை. ஊசியாக் குத்தும் கடும் குளிரிலும் கண்மூடாது போடர் கடந்து வந்திடத் துடித்தவள், பல தடவை முகம் குப்புற விழுந்தாள், பாவம் நா வறண்டு சதிரம் நொந்துபோய் மயங்கி விழுந்திட்டாள். அவளோடு கூடவந்த பொடியங்கள் செய்வதறியாது பதகளித்துப்போய் தங்கட பைகளிலிருந்து எடுத்த 'சாறங்களை' சேர்த்து முடிச்சு பெரிசாக்கிவிட்டு, காட்டுக்குள்ளபோய் நம்மயூர் உலக்கை அளவு பொல்லைக் கொண்டு ஆள்மாறி ஆளாக... ஆடு, மாடுகளைக் காவுற மாதிரி... பயத்தில் பெருநடையாய் நடந்தாங்கள். எவ்வளவு தூரத்திற்கு என்று காவுறது? பாவம் அவங்களும் இனியென்ன பயமில்லைப் போலிருந்தது. கர்மம் கழிஞ்சிட்டு என்ற சாக்கில் இளைப்பைவிட்டபடி ஒருவன் குனிஞ்சு சாவித்திரியத் தட்டி எழுப்பினான். அந்த அபலையின் உடம்பில் உசிர் இருக்கவில்லை. செத்துப் போனாள். கதறியழத் தாயுமில்லை.

அனாதரவாகப் போனாள் சாவித்திரி. அவள் பிணத்திற்காவது செய்ய வேண்டிய கருமங்களைச் செய்யவும் கொடுப்பனவற்றும் போச்சு. திடீரென எங்கோ கேட்ட வாகனச் சத்தத்திற்குப் பயந்து சுற்றி நிண்டவங்களில் ஒருவன் அந்த ஏழையின் கழுத்தில் கிடந்த மெல்லிய சங்கிலியையும், கையில் கிடந்த ஒருசோடிக் காப்பு, ஒரு மோதிரம் இவற்றைக் கழட்டிக்கொண்டு மஞ்சள், சிவப்புக் கோடு போட்ட சாறத்தால சவத்தை மூடிவிட்டு, நெஞ்சு பிளந்த வேதனையோடு ஓடிவந்திட்டாங்கள். தாங்கள் சாகும்வரையும் தங்களை உசுப்பிய சாவித்திரியின் சாவை மறக்க முடியாது தங்கராஜா என்றான்.

பார்த்தீர்களா பாசமும், பச்சாத்தாபமும், நேசமும் எங்கேயிருக் கென்டு? நீங்களோ சாவித்திரி போய்விட்ட துக்கத்தை இக்கணமே மறந்திடுவீங்கள். கண்ணீரும் நீலிக்கண்ணீராகத்தான் இருக்கும். இந்தாங்க அவள்ர தேகத்தில் கிடந்த ''ஏழைப்பவுன்'' இதையும் நீங்களே வைச்சிருந்து சாகயுக்க கட்டிப் பிடித்துக்கொண்டு போய்சேருங்கள். அந்தத் தெய்வமகள் துரதிர்ஷ்ட மானவள், போய்விட்டாள். சவத்தைக் கண்ணால காணும் பாக்கியமும் எனக்குக் கிடைக்கவில்லை. சாவித்திரியின் கனவுகள், உணர்வுகள், நினைவுகள், தாயகத்தின் மீட்பின் சுரங்கள், அனைத்தும் அவளது ஆத்மா சாந்தியடைவில்தான். உங்களோடு இருந்தால் என் சீவியமும் காவியமாகாது. 'வருகிறேன்' என்று தங்கராஜா ஆத்திர நரம்பு துடிக்க எழுந்தான். எட்டி நடந்தான். முன்கதவைத் திறந்து அடிச்சு வீடதிரச் சாத்திவிட்டு வெளியேறினான்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுநேரத்திற்குப் பின்னரும் கால்கடுக்க நிண்ட இரு புள்ளைகளும் சன்னல் வழியாக ஆகாயத்தை உத்துப் பார்த்தபடி நின்றனர். ஒருமுறை இருவரும் ஓரக்கண்ணால் - தர்மராசா என்னும் பேருக்குப் பொருத்தமற்ற தந்தையையும், தங்கம்மா எனும் பேருக்குக் களங்கமான தாயையும் பார்த்தனர். அவர்கள் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டிருந்தனர். அவ்வளவும் 'வேஷம்'.

வெறுப்பும், கடுகடுப்பும் மூர்க்கமாக முட்ட வானத்தை அண்ணாந்து பார்த்தபடியே நின்றனர். ஆகாயத்தில் ஒரு விமானம் பறந்து போனது. கடைசிக்குட்டி அல்லாத ரஞ்சினி தமக்கையைத் தட்டிக் கேட்டாள். ''அக்கா அண்ணா இந்தப் பிளேயினில்தான் போறாரா?''

''ஓமாக்கும்! சும்மா நில்லடி'' என்றவள் கண்ணைக் கசக்கியபடி முன்வாசல் கதவு திறக்கும் சத்தம் கேட்டுத் திரும்பி வந்து நேர்குத்தப் பார்த்தாள்! தங்கராஜா வாசல் கதவைத் தள்ளிக்கொண்டு வந்து நின்றான்.

●

ஈழமுரசு சிறுகதைப்போட்டியில் பரிசு பெற்றது. 10-10-2000
ஈழவர் இருபத்தியெட்டு சிறுகதைகள் தொகுப்பில் இடம்பெற்றது, 2001.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம்

டாக்டரின் வாயிலிருந்து என்ன பதில் வருமென்று ஏங்கிப்போய், டாக்டரின் மேசைமுன்னால் இருந்தவன் இருப்புக்கொள்ளமுடியாது எழுந்து, அங்கும் இங்குமாக நடைபயின்றபடி, தன் அங்கலாய்ப்பைச் சற்றும் வெளிக்காட்டாமல் தவிப்பேறியவனாகத் திரிந்தான் நிறுத்தன்.

டாக்டரும் பணம் கொடுத்தாலும் பதில் பகர்வதுபோல அவனுக்குத் தோன்றவில்லை! அவரின் பிடிவாதத்திற்கு என்ன காரணம் என்பதைக் கேட்டுவிடும் துடிப்போடு அவர் முகத்தோடு முட்ட நின்றவன்! முகத்தில் அடித்தாற்போல் கேள்வியைத் தொடுத்தான்: ''டாக்டர் என் மனைவி கற்பச் சோதனையில் கருக்கொண்ட வரம் உண்டா?''

பதில் சொல்லாது மௌனமாக நேரடிப்பார்வையோடு நின்றார்! மௌனத்திலும் மரணிக்காத உண்மையொன்று மறைஞ்சு இருப்பதை உணர்ந்து கொண்டவன், ''என்ன டாக்டர் ஒன்றுமே பேசாமல் நிற்கிறீங்க?''

தலைய மெல்ல ஆட்டியபடி உறுதியான தொனியில் நிறுத்தன் தோள் மீது தன் வலக்கையைப் போட்டதும் பின்பு முதுகில் ஒரு சிறுதட்டோடு ''நான் உன்னோடு ஒன்றாகப் படிச்சவன் என்றாலும், உன்ர மனிசிமேல முழுப்பழிபோட என்ர தொழில் இடம்தரத் துணியாது நிறுத்தன்''.

''என்ன டாக்டர் நான்தான் 'மலடன்' என்று குத்தலாகக் குதர்க்கத்தோடு சொல்லுறீங்க?

''ஆத்திரப்படாதே ஆண்மையின் இலட்சணத்தை மலடன் என்ற ஆதாரத்தைக் கொண்டு கணிப்பதல்ல.''

''அப்ப என்னதான் சொல்லப்போறீங்க? உண்மையைக் கக்குங்க டாக்டர்.''

நிறுத்தனின் இரங்கலான வார்த்தையின் உள் உணர்வின் உபத்திரவத்தைப் புரிந்து கொண்டவராய் ஆறுதலான அடைமொழி வார்த்தையை உச்சரித்தார்.

''காலப்போக்கில் எல்லாம் சரியாகிவிடும். உறுதியைத் தளரவிடாமல் நம்பிக்கையோடு மனிசிய அன்பாகக் கூட்டிப்போ நிறுத்தன்.''

டாக்டரின் நல்லுரையில் நசிஞ்சு நெக்குருக நின்றவன் நிர்மலாவின் குரல் கேட்டதும். நீண்ட பெருமூச்சை ஊதித்தள்ளிவிட்டு... வலுக்கட்டாயமாக வரவழைத்துக்கொண்ட இதழ்விரியா இழுப்போடு அவளின் புன்னகைக்காகக் காத்து நின்றான்.

''என்னங்க, டாக்டரிடம் எல்லாத்தையும் விபரமாகக் கேட்டீங்களா?''

''ஓம் நிர்மலா டாக்டர் ஒன்றும் விடாமல் விபரமாகச் சொல்லியிற்றார். நமக்குத் தெரிஞ்சவர்தானே!'' ஓர வஞ்சனைக்கு ஒப்புதல் கேட்பதுபோல் டாக்டரைப் பார்த்து நக்கல் சிரிப்பைத் தொலைத்துவிட்டு, கழுத்தைத் தொங்கப் போட்டபடி அவளது கனத்த சத்தத்தின் தாக்கத்தோடு கிட்டப்போய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டிநின்றான்.

இன்பமும் துன்பமும் இடைவிடாது தொடர்வதால்தான் இல்லறத்தை நல்லறப் பக்திப்படுத்தினார்கள். இரு உள்ளங்களின் ஒன்றுகூடலால் ஒருமித்த அன்பின் வெளிப்பாட்டால் ஏற்படும் தாம்பத்திய உறவு உயர்வானது. பலரிடம் ஒருத்தருக்கொருத்தர் மறைவான காரியங்களை மனசின் ஆழத்தில் அமுக்கிப் பகிர்ந்துகொள்ளாததால் ஏற்படும் விபரீதத்திற்கும், உறவின் விரிசலுக்கும், வீண்பழிகளுக்கும் உள்ளான குடும்பங்கள் நம் மத்தியில் பல உண்டு. இந்த வகையாகப் பலதையும் சிந்தித்து முடிவெடுக்கும் பக்குவம் நிறுத்தனின் நிதான புத்திக்கும் உண்டு. தங்களது இல்லற வாழ்வும் இன்பமுற அமையவேண்டும். விஞ்ஞானத்தில் வீராப்புப் பேசும் மேலைநாட்டில் தன்ர மலட்டு மர்மத்துக்கும் மாற்று வைத்தியம் பார்க்கலாம் என்ற நம்பிக்கை தளராத உள் இருப்போடும் தாயக மண்ணின் நினைவுகளோடும் பிரான்ஸ் மண்ணில் வந்திறங்கினார்கள்.

நண்பர்கள் உதவியோடு ஒரு வீட்டையும் வாடகைக்கு எடுத்துத் தனிக்குடித்தனம் அமைத்துக் கொண்டார்கள். சிலநாள் மகிழ்ச்சியில் பலநாள் துன்பங்கள் தெரியாமல் போய்விடுவதில்லையா? எப்படியெல்லாம் இருந்தபோதிலும் நிறுத்தன் மறைத்து வைத்திருக்கும் ரகசியச் செய்தி நிர்மலாவின் மனசை நாளும் பொழுதும் அரிப்பான் குஞ்சுகளைப் போல் அரித்துக்கொண்டே இருந்தது. பிரான்சுக்கு வந்து இவ்வளவு மாதங்களாச்சு! கொழும்பில டாக்டர் சொன்னது நல்லதோ கெட்டதோ இன்னும் ஏன் கக்காமல் இருக்கிறான்? அவனின் நீண்ட மௌனம் அவளின் நிலையிலும் நினைப்பிலும் ஒரு வக்கிரமான பதைப்பைப் பலப்படுத்தியது. நாளாக நாளாக அவனின் நடத்தைதான் மாறி வருகிறது. அவளது சூன்யமான பிரச்சனைக்குத் தீர்வு தோன்றுவதாகத் தெரியவில்லை.

அவரவர் மனசு அவரவர்க்குச் சாட்சி. அவளும் புள்ளை வரம் வேண்டி வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டி பிரார்த்தனை, நேர்த்திக் கடனெனக் கோயில் குளங்கள் என்று தொடர்ந்தாள். ''பதினொரு மணியைத் தாண்டி நடுச்சாமவேளை ''ஸ்ரேலிங்காட்'' அப்பாற்மெண்டில் தமிழருடைய இருப்பிடங்களில் மட்டும் விளக்கொளிகள் அணையாமல் கிடந்தன. ஏழு மணியானால் விளக்கணைத்து நிம்மதியாக நித்திரைக்கப் போகும் பிரஞ்சுப் பிரஜைகள் இதனால்தான் தமிழர்களோடு பிரச்சனைக்கு உள்ளாகின்றனர் போலிருக்கு.

கதவு தட்டும் சத்தம் கேட்டு தூங்காத கண்களில் நீங்காத நினைவைத் தொலைத்துவிட்டுச் சோம்பலை முறித்தபடியே கதவைத் திறந்தாள்...!

வாந்தியெடுக்கும் நாற்றம் முகத்தைச் சுழித்தபடியே பொறுத்துக் கொண்டாள். அன்புப் பிடிப்போடு கட்டுண்டு கிடந்தவள் சில மணித்துளிகள் இதயத்தை இரும்பாக்கிக் கொண்டாள்.

''நிறுத்தன் நான் நீட்டிப் பேசுறன் என்டு நினைக்காதேயுங்க. உங்கட போக்கு என்னால புரிஞ்சுக்க முடியாமலிருக்கு. ஏன்தான் இப்படி மாறிப்போயிற்றீங்க? மனசத் திறந்து சொல்லுங்களேன்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசையற்று வந்து விழுந்த வார்த்தைகளைக் கேட்டதும் நிறுத்தன் விம்மி விம்மி அழத்தொடங்கினான். சின்னக் குழந்தையைப் போலழும் அவனைப் பார்த்ததும் பெண்மனம் பனிபோல் உருகிற்று. திருமணமாகி ஏழு வருடங்களில் அவன் அழுது அவள் பார்த்ததில்லை. கண்ணீரைக் கண்டதும் அவள் மனசும் கனத்துப்போனது. எப்படியெல்லாம் குடித்தபோதும் நிதானம் தப்பாது வருவார். எந்தநிலையிலும் தன் உற்ற நண்பர்களைக்கூட வீட்டிற்குள் கூட்டிவந்ததும் கிடையாது. அப்படியிருந்தும் தன் கவலைகளை ஏன் தன்னிடம் மறைத்துக் கொண்டிருக்கிறான்? ஊள்ளூர புழுங்கிக் கொண்டவள் அவனை அணைத்தபடியே,

''வாங்க வந்து சாப்பிடுங்க.''

''என்ன நிர்மலா, என்மீது கோபமா?''

''கோபிச்சு என்ன வரப்போகுது? முதலில் வந்து சாப்பிடுங்க.'' அன்பான உபசரிப்பின் பின்பாவது அவன் வாயிலிருந்து வார்த்தைகள் வந்துவிழும் என்றால் அதுவும் காற்றோடு போன தூசியாகப் போச்சு.

சாப்பாட்டை ஊட்டியவாறும் குழைஞ்சு பார்த்தாள். அவன் மௌனம் அவள் இதயத்தைச் சுக்கு நூறாக்கிக் கொண்டிருந்தது.

''என்னங்க உங்கட கவலைய, யோசனைகள இனியாவது என்னட்டை யும் சொல்லுங்களேன்?''

முக்கிவிழுங்கியபடி... ''நிர்மலா என்ர வேலை அலுப்புக்காகக் குடிக் கிறேன் நீயேன் யோசிக்கிறா? எல்லாரும் கவலைய மறக்கக் குடிக்கிறாங்க என்பாங்க. இது அதில ஒருபடி உயர்ந்திட்டு.''

''என்ன நிர்மலா, நாளையில இருந்தும் நீயும் வேலைக்குப் போறீயா?''

தலைய மெல்ல ஆட்டிவிட்டு மௌனமானாள்.

அவளின் யோசனைக்குக் கொஞ்சம்கூடச் சம்பந்தமில்லாத கேள்வியும் - பதிலும்தான் வருகின்றது. இருந்தும் அவனது அக்கறையான அவசரத்துக்குத் தனக்கும் பங்குண்டு என்பதாலும் சம்மதம் தெரிவித்தாள். வீட்டிற்குள்ளே சிறைக் கைதியைப் போல் கிடந்து சித்திரவதைப்படுவதைவிட ஆத்ம திருப்திக்காக வேலையோடு வெளியில் போய் வருவது மனசுக்கு ஒரு ஆறுதலாகக்கூட இருக்கும். தனது பழைய பாலியத் தோழிகளையும் மீண்டும் சந்தித்துக் கதைத்தாலும் பொழுதுபோகும் என்ற பட்டியலோடு அன்றைய இரவு தனிமையாகவே இருந்தது

வேலையும் வேதனையுமான காலச் சக்கரத்தில் சுழன்று கொண்டிருந் தவளின் மனசும் மகிழ்ச்சியற்ற மனசாகவே மாறிமாறி ஓலமிடத் தொடங்கியது! சோதனையான நேரத்தில் தட்டிச் சறுக்கி விழுந்தால் நொறுங்கிவிடும் வேதனையைச் சுமந்தவள் தன் மனச் சந்தோசத்திற்காக தோழி ஒருத்தியின் வீட்டிற்குத் தினம் தினம் போய்வரத் தொடங்கினாள். மனிதமனங்கள் மாற்றுத் திட்டங்களை வலுவில் பெற்றுவிடத் துடிக் கின்றன. அன்புக்கும்-பண்புக்கும் அர்த்தம் புரியாத பாதகர்களால் பாழும் மனங்களால் மண்வாசனை மனமெல்லாம் தூசிதட்டும் துன்பக்கேணியில் வீழ்ந்து துடிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மலாவின் நிர்மூலமான மனசும் நிர்க்கதியாகி விடப்பட்ட விபரீத முடிவோடு அவளது கண்களை விரித்தபடி தோழி சீலாவைப் பார்த்தாள். அவள் பார்வையில் பாய்ந்த தாற்பரியம் தத்துரூபமாகவே சீலா மனசுக்குப்பட்டது.

''ஏன்ரி நிர்மலா, உனக்கு என்னதான் புடிச்சிட்டு?''

''ஏன்ரி சீலா இப்படிக் கேக்கிறாய்?''

''உன்னப் பார்த்தா பத்துப் புள்ளையப் பெத்துட்டு ஆக்கினப்படுகிற ஆள்மாதிரிக் கிடக்கு.''

''உனக்கு அப்படித்தான்ரி இருக்கும். தனக்கு வந்தால்தான் தெரியும் தலையிடியும் வயித்துக்குத்தும்.''

''உன்ர புருஷன்தான் நல்லா உழைக்கிறான்; உனக்கென்னடி குறைச்சல்?''

''எடியே இப்ப கதையவிடு. எனக்கு நீயொரு உதவி செய்வீயா?''

''என்னடி வேணும்? கேளடி இயன்றதைச் செய்யுறேன்.''

''என்ன ஒருக்கா டாக்டரிடம் கூட்டிப் போறீயா?''

''ஏன்ரி உடம்புக்கு என்ன?''

''கூட்டிப்போவேன், அதுக்கப்புறம் சொல்லுறேன்.''

''நாளைக்கு வா போவோம். நான் இண்டைக்கே கதைச்சு வைக்கிறேன்.''

பலவருடங்களாக பிரான்ஸிலிருந்து வருவதால் பாஷையில் பாஸாகி யிருந்தாள் சீலா. புள்ளை வரம் யாரால் இத்தனை வருடங்கள் கழிந்தும் கிடைக்காமல் இருந்தது என்ற சங்கடப்பட்ட சமாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து கரும்புள்ளி குத்திவிடுகிறேன் பார் என்ற பிடிவாதத்துடன் பிதுங்கிநின்றாள் நிர்மலா.

விடிந்ததும் நிறுத்தனிடம் எந்தவித வார்த்தையும் கதைக்காமல் டாக்டரிடம் சென்றாள். அவளது மனமகிழ நேரிடைப் பதிலும் கிடைத்தது. தனக்குப் புள்ளைபெறும் பாக்கியம் உண்டு என்பதைத் தெரிந்து கொண்டாள்.

நிறுத்தன் தன்ர குறைய மறைச்சதுபோல பழிக்குப்பழி! நானும் என்ர நிலையை மறைத்துவிடுகிறேன் பார் என்ற இறுமாப்போடு காலத்தைக் கடத்தினாள்.

காலத்தின் மாற்றமும் இடமும் அவளது மனசின் வேகமும் சீலாவின் அண்ணனின் தொடர்போடு சங்கமிக்க சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்தது. ஆசை வெட்கமறியாது என்பார்கள். அவசர ஆசைகள் அதாள பாதாளத்துக்குள்ள தள்ளிவிடும் என்பதைத் திராசில் நிறுத்துப் பார்க்காத ஆசையா?

''என்ன நிர்மலா, என்னோடு கதைப்பது உன்ர புருஷனுக்குத் தெரிஞ்சா என்ன நடக்கும்?''

''தெரிஞ்சு என்ன நடக்கும்?'' தன்னை மறந்த நிர்க்கதியற்ற நினைவோடு விழுந்த தெளிவற்ற வார்த்தையைக் கேட்ட அவன் தன் அறிவுக்கு எட்டியவரை ஆழமுடன் அலசி ஆராய்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மலாவின் துணிவுக்கும், துயரத்திற்கும், வீரியமான பதிலுக்கும் என்ன காரணம் என்பதை அறியும் ஆவலோடு அவள் கரங்களைக் பற்றிப் பிடித்தபடி ''நிர்மலா, முதலில் இக்கதிரையில் உட்காரு.''

அவள் உட்கார்ந்தபடியே தலைய நிமிர்த்தினாள்.

''வேலைக்குக்கூடப் போகாமல் இந்த மத்தியான நேரத்தில் வந்திருக்கிறாய்?''

அவள் திரும்பத் தலையக் குனிஞ்சாள்.

''நான் தனிய இருப்பது தெரிந்து வந்ததை என்ர தங்கச்சி கண்டால் கத்தப்போறாள்.''

அவனது உள்ளத்துடிப்பிலும் முகத்திலும் படர்ந்த காமவுணர்ச்சி ரேகையின் தொடரில் நாக்குத் தளர்ந்து கொண்டது... கரங்களைப்பற்றிய உணர்ச்சியில் அவளது புது அத்தியாயம் புரட்டப்பட்டுக் கொண்டிருந்தன.

மனச் சிம்மாசனத்தில் நிறுத்தனின் முகமும் முழு நினைப்பும் சிதைந்து சின்னாபின்னமாகிப்போனது. நாலு பக்கச் சுவர் வாழ்க்கையோடு நாட்கள் மாதங்களாகியது.

சீலாவின் அண்ணனும் தனக்குத் தாய்-தகப்பன் பார்த்தனுப்பிய பொட்டையோடு கனடா போய்ச் சேர்ந்தான்.

''அறிந்து அறிந்து செய்கிற பாவத்தை அழுது அழுது தொலைக்க வேண்டும்.'' விடியக்காலைநேரம் வேலைக்குக் போக எழும்பினான் நிறுத்தன். வாந்தி எடுக்கும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுப் போனான். குளியலறைக்குள் உள்ளிட்டபடி இரக்கத்தோடு,

''என்ன நிர்மலா இந்த மாதிரி வாந்தி எடுக்கிறாய்?''

''என்னப்பத்தி உனக்கு இப்பத்தான் அக்கறையோ?''

அவள் பதிலைக் கேட்டபடியே முகத்தில தண்ணீரைப் போட்டுவிட்டு துவாலையால் முகத்தை ஒத்தியபடி நின்றவனை எரிஞ்ச பார்வையால் எரிச்சுவிட்டுக் குனிஞ்சு கொண்டாள்.

· ஒட்டி ஒடுங்கிப்போனவன் இதய சிம்மாசனத்தில் இருத்தியவளை நினைச்சு விம்மிவரும் அழுகையை அடக்கியபடி புழுவாகத் துடித்தான். நடப்பதுதான் நடக்கும். துவாலையைத் தூக்கி எறிஞ்சுவிட்டு வேலைக்குப் புறப்பட்டுப் போனான்.

வாயைப் பொத்தினாலும் வயித்தப் பொத்த முடியுமா?

பேத்தைபோல நிர்மலாவின் வயிறு நாளுக்கு நாள் வீங்கிக் கொண்டி ருந்தது. அடித்துப்போட்ட பாம்பாட்டம் சுருண்டு சுருண்டு மதுப் போத்தலை உருட்டுவதிலேயே தன் கவலையைத் தாங்கிக் கொண்டி ருந்தான். ''ஊராரின் பார்வைக்கும் கேள்விக்கும் தானொரு மலடன் என்பதைக் காட்டிக்கொள்ள அவன் மனசும் லேசுப்படவில்லை! இரும்பாகிவிட்ட இதயக் கதவுக்குள் பூட்டப்பட்டிருந்த பூமுகத்தைக் கிள்ளி எறிந்துவிட்டான். நண்பர்கள் நளினத்தில் நாடி நரம்பெல்லாம் முறுக்குண்டு மூச்சே நின்றுவிடும் சிலுவைப்பாடுகளை அனுபவித்தான்.

''என்னடா உனக்கு ஆண்குழந்தைதான் பிறக்கும்'' என்றான் ஒருவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இல்லையடா நான் கட்டுறேன் பந்தயம், உன்ர மனிசியப்போல பெண்குழந்தைதான் பிறக்கும்'' என்றான் இன்னொருவன்.

இப்படியான வார்த்தைகள் நையாண்டிகள் அவனது செவிப்பறை களில் பேரிடிபோல் விழுந்து இதயத்தைச் சுக்கு நூறாகப் பிளந்தன.

நிர்மலாவின் இதயமும் இளகித்தவித்தது. கண்களில் நிரம்பிவழிந்த கண்ணீர் அவரது சொக்கை மேட்டில் தரித்து விழும்போதெல்லாம் இந்த நிலையிலும் தன்னுடைய அவமானத்தை வெளிக்காட்டாது தன்னோடு இருந்து தன்னைத் தினம் கவனித்துவரும் கணவனை அவன் நேசத்தை நொந்து வெந்தாள்.

ஊராரின் வசைமொழிக்கு வழிவிடாது வாடி வதங்கிச் 'சூம்பிப்போன கத்தரிக்காயாக' உருக்குலைந்த உள்ளத்தை நினைத்து விம்பி விம்மி அழுது நாட்களை அவளும் காட்டிக்கொள்ளவில்லை. தாலி கட்டிய ஏழு வருடங் களும் நிஜமான கணவனாக, தன்னுடைய சுக–துக்கங்களில் பங்கெடுத்துக் கொண்ட கணவனாக இருந்த நாட்களை எண்ணிப் புழுவாகத் துடித்தாள். புள்ளை பிறந்ததும் நிறுத்தனின் நிலையையும் மனசையும், அவனது அன்பான முகத்தையும் எந்தமுகம் கொண்டு பார்க்கப் போறேன்?

யாருக்கும் ஏற்படாத சிலுவையின் கோரணிய வாதைகளைச் சுமந்து நொந்தாள். பேறுகால நேரத்தோடு வயிற்றைப் பிடிச்சுக் குளறத் தொடங்கினாள். தனது தோழியான சீலாவிற்கு உயிர் மூச்சோடு எழும்பி ரெலிபோன் எடுத்தாள். பதில் கிடைத்ததும் ரெலிபோனைக் கீழே வைத்துவிட்டு அடிவயிற்றப் பிடிச்சு குளறினாள்.

சீலாவின் உதவியோடு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போன அன்று சாயந்தரமே அவளுக்குப் பெண் குழந்தை பிறந்துவிட்டது. அம்மா என்று அழைத்திட அரும்பிய மழலையின் சிரிப்பில் மகிழ்ந்தாள்.

பரபரப்போடு ஓடிவந்த சீலாவின் செய்திகேட்டு விண்ணிடித்து வீழ்ந்திடக் குளறித் துடித்தாள்.

''நிறுத்தனின் முடிவால் நிர்க்கதியாகிப் போய்விட்டேனா?''

இக்குழந்தைக்கு அப்பன் யார்? ''அவள் பெற்ற வரம்...?''

தான் பெற்ற குழந்தையின் காலும் கையின் அசைவை மங்கிய பார்வையோடு பார்த்தபடிச் சாய்ந்தாள்.

●

பாரிஸ் ஈழநாடு
17.04.1993


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுதலிப்பு

என்னைப் பெற்றவளின் கட்டிமையும், செல்வமும் என்னை மேலும் மேலும் சங்கடத்துக்குள்ளாக்கி விட்டது. இந்த மண்ணில் மரணத்தைத் தேர்ந் தெடுத்துக் கொள்ளும் விதத்தில், உரத்தில், உருவத்தில், கனத்தில் ஏதோவொரு அர்த்தம் இருப்பதாகவே நான் நினைத்துக் கொண்டேன். அதன் விபரத்தைச் சொல்லவும் முடியும்; வெல்லவும் முடியும். முடியாது எனும் போது உண்மைகள் புதைக்கப்படும். ஏனோ சொல்லத் துடிக்கிறேன். முடியாமலே முடிகிறது. 'பூனையைக் கண்டாலே பயம் ஏற்படும் அளவுக்கு பயந்த சுபாவம் போர்த்தப்பட்டவனாகவே சிலகாலம் வாழ்ந்தேன்.' சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளிய வெளிக்கிடும் போதெல்லாம் ''எடேய் மகனே! பெலனாக ஓடாதடா. றோடுகள் பள்ளம் புட்டியாகக் கிடக்குது. அங்கின விழுந்து காலை - கையை உடைத்திடப் போறாயப்பனே. என்ர செல்வமே தொலைவுக்கும் போயிடாதே. பெடி, பெட்டைகள் காணாமல் போறாங்க. வாசகசாலை வரையும் போயிற்றுத் திரும்பிச் சுறுக் காக வந்திடு மகனே! நீ வரும்வரைக்கும் என்ர உசிரக் கையில பிடிச்சுக் கொண்டுதான் இருக்க வேண்டி கிடக்குது.''

அம்மாவின் குரல் இப்பவும் என் காதுக்குள் ரீங்காரமிட்டவண்ணமே இருக்கின்றது. நிரந்தரமாகவும், நிர்ப்பந்தமாகவும் தொடர்ந்திருந்தன. பக்கத்து வீட்டு மாமியும் அம்மாவின் பாட்டுக்கு பிற்பாட்டு ஒத்து ஊதுவது போலவே பாடுவாள்.

'சாகிறவரைக்கும் ஆம்பிளைகளைப் பெத்தாலே அபயக் குரல்தான்'. காலை எழுந்து நித்திரைக்குப் போகும் வரைக்கும் இந்த ஓலம் தணிவ தில்லை. திடீரெனக் காணாமல்போன மூத்த மகனின் இறந்த சடலத்தைக் கூடப் பார்க்காத கனத்த கவலை! இருப்பவர்களையும் காவாந்து பண்ணும் சிறைப்பாடலாகவே தோற்றமளித்ததாக நானும் உணர்ந்து கொண்டேன். இதன் உள்ளிருப்பே அம்மாவின் சோடணையற்ற தோரணையுமாகும்.

''மகனே எனக்கு உன் வாழ்வுதான் உசிராக ஊசலாடுது. கூடப் பிறந்தவர்கள் மூன்று பேரும் கட்டினவளுகளுடைய வீட்டிலேயே போய் கிடக்கிறாங்கள். இங்கால எட்டியும் பார்க்கிறாங்களில்லையடா. சீமான் சேர்த்து வைச்ச காணி. காசுக்குக் குறைவில்லை. அதனால்தான் உன்னையும் என்ர மடியில பொத்திப் பொத்தி வளர்க்கிறேன். மகனே அள்ளிக் கொடுக்க என்ர நெஞ்சு தாங்காதடா. உன்ர கல்யாணத்தைக் காணத்தான் என்ர உசிரு ஊசலாடுது'' என்று அழும்போதெல்லாம் என்மனம் பதறும், பயம் தோன்றும். திரும்பவும் அம்மா கதையை வளர்க்கப் போகிறாள்...!

இந்த நேரம் மின்னல் வீச்சில் வேட்டுகள் தீரும் சத்தம் கேட்கும். உள்ளூர உருகினேன். விழிகளில் கண்ணீர்த் துளிகள் விழாது சலசலத்து நிற்கும். அம்மா ஊதிய புல்லாங்குழலின் பழைய ராகங்களுக்கு புதிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகமெட்டுக்கள் இசைக்கப்படுகின்றது. அம்மாவின் பக்குவப்பட்ட பயபீதிகள் பலவகைத் திருப்பங்களின் நிறுத்தல்குறி. ஆச்சரியமாகவே தோன்றியது.

மாலைநேரம் சைக்கிளை உருட்டிக் கொண்டு பதுங்கிப் பதுங்கி வெளிப் படலையைத் திறந்துக் கொண்டு தார் ரோட்டுக்கு வந்தேன். மகிழ்ச்சியோடு சற்று நிமிர்ந்தேன். பின்புறமாகக் கூப்பிடு குரலில் சோர்ந்துபோய் நின்றேன். ஆமியின் செல்லடியில் இடதுகாலை இழந்து அம்மாவின் தமையன், கமக்கட்டுக்குள் முட்டுக் கொடுத்த தடிகளுடன் தாண்டித் தாண்டி வந்து என் முகம் முட்ட நின்றார்.

''தம்பி வெளியப் போறீங்க போலக் கிடக்கு''

நான் தலையை மெல்ல ஆட்டினேன்.

அவன் வலப்பக்க ஊண்டுத்தடியை நெஞ்சுக்கு நேர் எழுப்பி எழுப்பி மூன்று முறை நிலத்தில் குத்தின கோபத்தோடு வாய் நிறைந்த வெற்றிலை யையும் குதப்பி வலப்பக்கக் கடவாய்க்குள் திணித்ததும், இரத்தத்துளிகள் பறக்க கரகரத்த குரல் எழுப்பிக் கத்தினார்.

''டேய் மடையா நேற்றைக்குக் காலையில போன மாரிமுத்தரின் பொடிகள் இன்னும் வாசல்வந்து ஏறயில்லை. அவன்ர வீட்டில ஒப்பாரி ஓலமா ஒலிக்குது. நீர் கொம்பனாட்டம் லோங்கிசும், சேட்டும் மாச்சாகப் போட்டுக் கொண்டு எந்தத் திருவிழாவுக்கு வெளிக்கிட்டனீர். போடா போய் உள்ள கிட.'' தினமும் நிரந்தரமாகிப் போன நிர்ப்பந்தமாகிவிட்டது. இத்தொல்லையிலிருந்து, இல்லை இக்கட்டாயத்திலிருந்து, அதுவும் இல்லை பயந்த வாழ்விலிருந்து - இரும்புச் சிறையிலிருந்து கிழித்து வெளிவர வேண்டிய கட்டாயமான ஒத்திகை எனக்குத் தேவைப்பட்டது. படித்த படிப்பைப் பயன்படுத்தக்கூடிய காலமும் கனிந்து வரவில்லை. வாழ்க்கைச் சக்கரத்தைச் சுழற்றிக் கொண்டிருப்பவர்களால் பயம், திகைப்பு, சலிப்பு, வெறுப்பு, கடுப்பு. எங்கும் ஒரு சூனிய இருளைத் தோற்றுவித்துள்ளன. இதிலிருந்து நான் வெளிவர வேண்டும்...

யாழ் பெரியகோவில் பூசையின்போது கண் எறிந்தவளைக்கூடப் பார்க்க காதலிக்க இடையூறாக இருந்தன. நானும் ஒரு பயந்தாங் கொள்ளியாகி விட்டேன். என்னைத் தேற்ற என்னிடமிருக்கும் புத்தகங் களின் பக்கங்களில் ஒருவரியேனும் ஆறுதல் வார்த்தைகள் இல்லை. பேனா எடுத்தவர்களின் எழுத்தில்கூட தேறுதல் தரவில்லை. அம்மாவும் அடிக்கடி இரவில் எந்த நேரம் என்றில்லாது அரிக்கேன் விளக்குடன் வேலிப்படலைவரை போய் வீதியை அங்குமிங்குமாக நோட்ட மிடுவதும், எங்காவது வேட்டுச் சத்தம் கேட்டால் முற்றத்தின் நடுவே செழித்து நிற்கும் வேப்பமரத்தின் கீழ்நின்று அந்தரிப்பதும், தனக்குள்ளாக முணுமுணுத்தபடி சதா என்னுடைய படுக்கையின் பக்கத்திலிருந்து செபம் சொல்லிக் கொண்டிருப்பதைக் காணும் போதெல்லாம் என்ர உசிரு கசிந்துருகும். அம்மாவின் மீதமிருக்கும் உசிர் கெட்டியான பிடிப்பு என் வாழ்வின் வசந்தத்தைத் தரிசிக்கும் நிஜதரிசனமாக நிர்ப்பந்தப்பட்டிருப்பதால் நானும் ஊரைவிட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்பட்டுவிடும் துர்பாக்கிய நிலைக்குள்ளானேன். படு விரைவாகவே காரியம் நடந்தது.

ஒருமுறை கோயிலடிப்பக்கம் போயிட்டு வரலாம் எனும் அங்கலாய்ப்பு, அடுத்தகணம் தவிடு பொடியானது. அவள் வீசிய கணையால் நெஞ்சத்தைத் துளைத்த நிலாமுகம் கண்முன்னே திரைப்படம்போல் ஓடிக்கொண்டிருந்தன. வாய்விட்டுப் புலம்பும் பயித்தியக்காரப் பாவனையைத் தோற்றுவித்தன. இந்தநேரம் பெரியகோயில் திருந்தாதிமணி கிடாங்... கிடாங் என்று அடித்து ஓய்ந்தன. ஊரை விட்டுப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். எல்லாவற்றையும் மறந்து விட்டேன்.

மறக்க நினைத்தாலும் மறக்க முடியாத அம்மாவின் திருமுகத்தை திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டேன். அவளது கண்வழியோடிய கண்ணீருக்குள்ள சக்தி என் நெஞ்சத்தைப் பிய்த்தெடுத்தன. தாயழுத கண்ணீர் வற்றுமுன் ஆகாயவீதியில் பறந்துகொண்டிருந்தேன் தனித்து விடப்பட்டவனாக. தன்னுணர்ச்சியில் தவித்துக் கொண்டிருந்தேன். முடுக்கி விடப்பட்ட தொல்லைகள் யாவும் நாளைய வரலாற்றின் பதிவுகள்தான். நான் இப்போது தேசம் தாண்டுகிறேன்.

பிரான்சில் . . புகலிடத்துச் சீவியத்தின் புதுமைகளை, புரட்டுகள், உருட்டல்கள், உருவமாற்றங்கள் எல்லாமே எம்மவர்களிடமிருந்து கற்றுக் கொண்டேன். கற்றுக் கொண்ட பாடங்களிலிருந்து, பூனையைக் கண்டும் அஞ்சும் பழக்கமும் தூரப் போய்விட்டது. இப்போது கொடிய மிருக வேட்டையாடும் துணிவு வந்துவிட்டது. அவன், இவன், அவள் என்று பலரது பழக்கங்களும் என்னுள் புகுந்துவிட்டன. தொழில் அனுபவம், மொழித்தேர்ச்சி விளாவரையாக விளங்கிவிட்டன. உடனுக்குடன் மறுமொழி சொல்லவும், தேவைப்படும் நேரம் மறுதலிக்கவும் பக்குவம் பெற்று விட்டேன்.

கோடைவெப்பம் தாங்கமுடியாது விரைந்து கொண்டிருந்தேன். 'போர்த்லாச் சப்பல்' பெரும் வீதியில் கண்டுகொண்ட காட்சிகள் நினைவில் நின்றனவாக எனக்குத் தெரியவில்லை. 'ஸ்டாலிங்கிராட்' தாண்டி மெத்ரோ அடியின் கீழாக ஓடிக்கொண்டிருக்கும் செயின்நதி அணைக்கட்டருகே போடப்பட்டிருந்த வாங்கில் கால்நீட்டி அமர்ந்திருந்தேன். கற்பனையில் கண்டவைகளை, நேரில் பார்த்துக்கொண்டிருந்தேன். அந்தியின் தென்றல் தழுவ மாப்பசானின் சிறுகதைத் தொகுதியைப் படித்து லயித்திருந்தேன். என்னை ஒருவர் தோளில் உரிமையோடு தட்டுவதுணர்ந்து திரும்பினேன். கடவாய்க்குள்ளிட்ட சிரிப்பைக் கண்டதும் அவர் நமக்கு வேண்டியவர்தான் என்பதைப் புரிந்து கொண்டேன்.

''தங்கச்சியை எடுப்பதற்கான ஒழுங்குகளைச் செய்திருக்கிறேன். உம்மட அம்மாவின் சம்மதத்தோடுதான் இவ்வித ஒழுங்குள் துரிதகதியில் செய்யப்பட்டுள்ளது'' என்று சொல்லிவிட்டு மேலும் பேச முயலும் போது, நான் குறுக்கிட்டு ''இப்ப நான் அம்மா வாறதைத்தான் எதிர் பார்த்திருக்கிறேன். அவர்கள் வந்த பிற்பாடு மிச்சத்தைப் பார்ப்போம்'' என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கதையை முடிப்பதாக இல்லை. ''அம்மாவின் சம்மதத்தோடு தான் உம்மோடு உரிமையோடு கதைக்கிறேன். என்னுடைய தங்கச்சியை முடிக்க உனக்குச் சம்மதம்தானே?'' அவரது குரலில் கொஞ்சம் இறுக்கம் தொனித்தது. எனது குரல் சற்று தாழ்ந்து தவழ்ந்தது.

''இப்ப நான் கொஞ்சம் தனிமையில் இனிமையாயிருக்கிறேன்.''

''இதைவிட, இருவருமாக இருந்தால் மலரும் மணமுமாக இருக்கலாமே?''

''மனமிருக்க வேணுமேன்?'' சற்று ஏறிய தொனியில் நான் சொன்னபோது அவரது முகம் வாடிப்போனது. பின் அடைச்ச குரலில் முணுமுணுத்தார். ஓசை எழவில்லை. காதலித்தவளைக் கைவிடப் போறியா? போலிக்கு வேலிபோடப் போற போக்கிரியே'' என என்னை ஏசுவதுபோல் எண்ணிக் கொண்டேன்.

''யோசித்துப் பதில் சொல்'' என்றவர் இருந்த இடத்தை விட்டு பலமீட்டர் தூரம் போய்விட்டார் . . .!

வெறித்துப் பார்த்தபடி எனக்குள் ஒரு சிலுவைப் பாதையைத் தொடர்ந்தேன். ''காதலித்தால் கல்யாணம் கட்ட வேணும் என்பது சட்டமா? சம்பிரதாயமா? விளங்குகிறது. விபரம் பின்னாடி கிடைக்கும். திரும்பவும் மாப்பசானின் 'செத்துப்போனவள்' சிறுகதையின் கடைசி வாக்கியம் நெருஞ்சி முள்ளாக இதயத்தில் குத்தியது.

திரும்பவும் படித்தேன். ''சற்றுமுன் காதலித்தாள். காதலிக்கப்பட்டாள், இறந்தாள்'' என்று அவளுடைய பலிங்குச் சிலுவையில் எழுதப் பட்டிருந்த வாசகங்கள் இப்போது வேறாய்த் தெரிந்தன.

''தன்னுடைய காதலனை ஏமாற்றி, ஒருநாள் மழையில் வேறொருவனைத் தேடிப்போனாள். மழையில் நனைந்ததால் காய்ச்சல் வந்து இறந்தாள்'' இவ்வாக்கியங்களை வாசித்தபோது ''பெண்களை...!'' எனது மறுதலிப்புகள் தொடர்வது என்னுள்ளத்தில் ஒருவித மாற்றத்தைக் கொடுத்து துன்புற வைத்தன.

ஊரிலிருந்து அம்மாவும் வந்திருந்தாள். தலைநகர் பாரிஸில் ஈபிள் கோபுரம், வளைவுகள், பூங்காக்கள், நூதனசாலைகள் என்றெல்லாம் சுற்றிக் காட்டிவிட்டேன். லூர்து மாதாவிடமும், சார்ட் மாதாவிடமும் நேர்த்திக்கடன் செலுத்திவிட்டு வந்திருந்தோம். அம்மாவின் மனசில் ஒருவகைத் தாக்கம் தக்கித்து நிற்பதையும் ஊகித்துக் கொண்டேன்.

குண்டைத் தூக்கிபோடும் சந்தர்ப்பத்தை சறுக்கிப்போய்விடாது இறுக்கமாய்ப் பிடித்துக் கொண்டாள். மெல்ல ஓடிய ஏறுநடை எண்ணத் துடன் முகத்தில் பிரகாசமான புன்சிரிப்பின் ஒளித் தெறிப்புடன் என்னை அன்பாக அழைத்தாள். கல்யாணச் சமாசாரத்தையும், மருமகளின் வரவையும் குழைவாக இழையோடவிட்டாள். என்ர கள்ள மனத்தின் மறுதலிப்பு சுள்ளென்று சுண்டி நீண்டு உடைஞ்சிடும் வார்த்தைகளாக விழுந்தன. நான் ஊரில் வாழ்ந்தபோது அம்மாவின் வார்த்தைக்கு எதிர்வாதம் புரிந்ததில்லை. செல்லமாக வளர்த்தாலும் கண்டிப்புகள், தண்டிப்புகள், கட்டுப்பாடுகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதட்டல்களாலும் அடங்கி நடந்து பழக்கப்பட்டவன். எதிர்த்துக் குரல் கொடுக்க சஞ்சலப்பட்டேன். பூனையைக் கண்டும் பயப்படும் நிலை மாற்றிய தேசத்தில் நிற்கிறேன். துணிவு கொண்டதால் பேசலானேன்.

''என்னங்கம்மா பேசாமலிருங்கோ. இப்பயென்னத்திற்கு கல்யாணம்? இன்னும் கொஞ்சகாலம் உங்கட அன்பின் அணைப்பில், ஆறுதலில் தேறி வாழ்ந்தப்புறம் பார்த்துக் கொள்ளலாமுங்கம்மா'' சொல்லி முடிக்கு முன்னர், அம்மா மெல்ல எனது வலக்கையைப் பிடித்திழுத்து அணைத்த படி தலைமயிர்களை விரல்களால் வருடியபடி நடு உச்சியில் விரல்களைப் பொத்தி குண்டொன்று போட்டாள். பின் இமைகள் எழுப்பி அகலப் பார்வையில் அன்பொழுகப் பார்த்தாள். நான் அழுதுவிடும் தோரணையில் தாயின் கண்களுக்குள் என் உருவத்தை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டேன்.

மனத்தின் கனத்தின் மறுதலிப்பு மறுபக்கத்தில் தெளிவாகத் தெரிந்தன. அம்மாவின் ஊகிப்பு உருவத்தைக் காட்டிவிடும் பயவுணர்வையும், குற்றவுணர்வையும் சேர்த்து கடப்பாரையால் உச்சி பிளந்திடும் வேதனை யைத் தந்தன.

''அம்மா நான் ஒருத்தியை வச்சிருந்தேன். அந்த அல்ஜீரியப் பெண்ணுக்கும் எனக்கும் பிறந்த மகள் என் சாயலில் பிறந்திருக்கிறாள் எனும் உண்மையை எப்படி மறுதலிப்பேன்? அந்த அல்ஜீரியப் பெண் ஏற்கனவே திருமண மானவள். என்னோடு பிள்ளைவரம் வேண்டி வந்தவள். துணையாக என்னை ஏற்றுக்கொள் என இப்போது சதா அடம் பிடிக்கிறாள். என்னை விடாது துரத்துகிறாள் எனும் உண்மையை எப்படி மறுதலிப்பேன்?''

அம்மா தீர்க்கமான பார்வையோடு திரும்பவும் என்னைப் பார்ப்பதை நான் ஓரக்கண்ணால் கள்ளமாகப் பார்த்தேன். இப்போது மௌனத்தின் மோனத்திலிருந்து புன்சிரிப்பை சிந்தினாள். அவ்வீச்சின் தழுவலுடன் தார்ப்பரியத்தின் கனப்பும், கருணையுமுள்ள வளர்ப்பின் பெறுமதியை உணர்த்தியது. என்னைத் திக்குமுக்காடப் பண்ணியது. தலைமுறையின் வரைமுறை வாழ்வுக்கு நான் செய்தபாவம் பெரும் சாவான பாவமாகவே தெளிவாக்கப்பட்டன.

என் இனிய வசந்தத்தையே மூச்சாகக் கொண்டிருக்கும் அம்மாவின் கண்ணீரையும், நீண்ட துயரத்தையும் நிரூபணமாகவே ஊகித்தேன். முகத்தில் ஓடும் ரேகைகள் வீங்கி வெடித்துவிடும் போலிருந்தன. இந்த நேரம் என்னை வாஞ்சையுடன் நெஞ்சுமுட்ட இழுத்து அணைத்தபோது, இமையோரத்தில் முட்டி நின்ற நீர்த்துளிகள் என் கைகளில் விழுந்தன. நெஞ்சு விம்மித் தாழ்ந்தன. ''பாவத்தின் சம்பளம் நரகம், மோட்சத்தின் திறவுகோல் மரணம், மரணத்தின் திறவுகோல் மறுதலிப்பு.'' கண்ணீர் நெஞ்சைச் சுட்டது.

அம்மாவின் குரலில் இரக்கம் வியாகுலம் நிறைந்ததாகவே தொனித்தன. ''என்ர செல்வமே! நீயாக விரும்பிய பிள்ளைதான்ரா- அவள இப்ப உனக்குப் பிடிக்கலையா? வயசு வேற ஏறிக்கொண்டு போகுது. உனக்காக எத்தனை காலம் அவள் காத்திருப்பாள்?'' இக்கேள்விக்கும் பதில் சொல்லாவிட்டால், அம்மாவின் நெஞ்சில் மூண்டிருக்கும் அணல் கொழுந்து விட்டெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே புண்ணாகிப் போன நெஞ்சம் ஊரில் மிருகங்களின் மேய்தலால் மாளாத்துயரம் கொண்ட உள்ளம்.

''அம்மா, நான் திருமணத்திற்குச் சம்மதம்'' என்று சொன்னபோது அவளின் மனம் மெழுகுதிரி போல பிரகாசமடைந்தது. நான் இருண்ட சூனியத்துக்குள் மருண்டுபோய்த் தவித்தேன். இந்த நேரம் கடப்பாரையால் ஓங்கி அடித்ததுபோல் சத்தம் ஊர்ச் செல்லடியை மிஞ்சிட ஒலித்தது. கதவைத் திறக்க பயந்து குறுகினேன். அம்மா எழுந்து கதவைத் திறந்துவிட எத்தனித்தபோது முன்னடித்து நானே கதவைத் திறந்தேன்.

''கேடுவரும் முன்னே, மதி கெட்டுவரும் பின்னே'' என் காதலியின் அண்ணன்தான். செயின் நதியோரம் என்னோடு உரையாடிய உருவம்தான். விறுமனாட்டம் அந்த அல்ஜீரியப் பெண்ணோடும், எனக்குப் பிறந்த மகளோடும் வந்து நின்று நியாயம் பேசிக்கொண்டு நின்றான். என்தாய் மயக்கம் போட்டு விழுந்து விட்டாள். மீண்டும், மீண்டும் நான் மறுதலித்தேன். அவளை ஏற்கவும் சம்மதிக்கவில்லை. அவள் மகளோடு திரும்பிப் போய்விட்டாள்.

''விரும்பியும், விரும்பாமலும் உன்போன்ற அயோக்கியனுக்கு என் தங்கையைக் கொடுப்பதை விடவும், பாழும் கிணற்றில் பிடிச்சுத் தள்ளலாம்'' என்று இறுதி மூச்சோடு கத்தி விட்டு அவனும் போய் விட்டான்.

என் தாயின் அருகில் குந்தியிருந்து ''அம்மா அம்மா'' என்று தட்டி எழுப்பினேன். எழும்பவில்லை என்தாய். என் மறுதலிப்பு மரணத்திற்குக் காரணம் கற்பித்து விட்டதாக உணர்ந்தேன். சகல பொறிகளும் பேரமைதி கொண்டன. ''அம்மா! அம்மா!'' மீண்டும் மீண்டும் எழுப்புகிறேன். . .

●

கணையாழி

ஈழநாடு, பாரிஸ்
பூவரசு, ஜெர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீலிக்கண்ணீர்

பிரான்சின் தலைநகரான பாரிஸ் 'சென்தூரவான்' மருத்துவமனை மிகவும் பிரசித்திபெற்றது. மருத்துவமனை அருகில் உள்ள கத்தோலிக்க தேவா லயத்தின் மணி இன்னும் மனிதர்களின் மறதிக்கு அச்சுறுத்துவது போல் மணிக்கொரு தடவை ஒலித்துக்கொண்டிருக்கும். அன்று வெள்ளிக் கிழமை காலையிலிருந்து தமிழர்களின் முற்றுகை விரக்தி, வெறுப்பு, எரிச்சல், நியாயப்படுத்தல், மிகைப்படுத்தல் போன்ற விமர்சனங்களால் பரபரப் பானது. மருத்துவமனையில் வெள்ளை மனிதர்களின் கண்களும் அகல விரிந்து விடுப்பறியும் விரைவோடு பல தமிழர்களை அண்டினர். இத்தனைக்கும் மருத்துவமனையின் ஒதுக்குப் புறம்பான சிறிதும் - பெரிதுமற்ற ஓர் அறையில் 'பரமேஸ்வரனின்' உயிரற்ற உடல் கட்டிலில் வளர்த்தப்பட்டிருந்தது. மூக்கு இரு ஓட்டைகளும் பஞ்சினால் அடைக்கப் பட்டிருந்தது. தலைமாட்டில் இரண்டு மொழுகுதிரிகள் வெண்கல ஸ்ராண்டில் ஒளிபரப்பி உருகிக்கொண்டிருந்தன. பரமேஸ்வரனின் உடலுக்கு அஞ்சலி செலுத்த வந்தவர்களின் மனநிலையும் மொழுகு திரியின் நிலையில்தான் இருந்தது. 'மரணமும் ஜனனமும்' சங்கமிக்கும் இடத்தில் சனங்களின் மௌன பாஷைகள் முணுமுணுத்தன. ''நல்ல மனிதன்; பொதுவாழ்வில் தனது மிகுதி நேரத்தைச் செலவிட்ட மனிதன்; யார் குற்றத்தையும் வெறுப்பையும், சம்பாதிக்காத நியாயமுள்ள சாதுவான். இந்தக் கடவுளுக்கும் கண்ணில்லையா? இப்படியொரு நல்ல மனிதனுக்கு இப்படியொரு திடீர் மரணத்தைக் கொடுப்பதற்கு?''

அஞ்சலி செலுத்த வந்தவர்களின் வாய்கள் இப்படிப் பலவாக முணு முணுத்தன. காரணமில்லாத ஆறுதல் வார்த்தைகளைக் கேட்கவும், பார்க்கவும், பரமேஸ்வரனின் தம்பி நகுலேஸ்வரன், தங்கை பரமேஸ் வரியின் ஏக்கத்தின் தாக்கம் விடுபடவில்லை. ''இருவரும் பிரான்சுக்கு வந்த நாள் முதல் பரமேஸ்வரனின் அன்பில் எம்பிக் குதித்து எட்டாத கிளைகளுக்குத் தாவிய ஆனந்தத்தில் மிதந்தவர்கள். இன்று வெறிகொண்ட ஆத்திரத்துடன் வருவோர்-போவாரை விறைத்து நோக்கியபடியே அசைவற்று நின்றனர். காலையிலிருந்து பார்வையாளர் நேரம் முடிந்து பிரேத அறைக்கதவு பூட்டும் வரை இம்மியும் அசையமாட்டார்கள் என்பது பலருக்குப் புரிந்த விடய மாகவே புலப்பட்டது.

அவர்கள் செயல் ஆங்காரத்தின் விஷ்வரூபம் என்று யாரும் நினைக்க வில்லை! கவலைமிகுந்த கோப வெறியால் இருவர் இதயச் சுவர்களும் விம்முவதையும் உணர்ந்துகொண்டனர். அப்போது மணி பிற்பகல் நாலு மணியிருக்கும்.

நகுலேஸ்வரன் சலம் கழித்து விட்டு வருவதாக தங்கை பரமேஸ் வரியின் காதுக்குள் ஓதிவிட்டு நகர்ந்து நடையைத் துரிதப்படுத்தியதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலப்பக்கமாகத் திரும்ப... இந்நேரம் ஹோலிடோவர் வழிய ாக 'துஷ்யந்தி' யும் தமையன் 'தெய்வேந்திரனும்' விரைந்து வந்துகொண்டிருந்தனர். அவர்களை நேர்குத்த நோக்கிய பரமேஸ்வரியின் நரம்பு முறுக்கேறியது; நாத்தழும்பியது, இரத்தம் 'நயாக்கரா' நீர்வீழ்ச்சிபோல் குமுறியது. உயிர் மூச்சிழுத்துக் குலறினாள். இவ்வேளை எங்கஊர் ஆலமரம் புயலில் அசைந்தது போலிருந்தது.

''அண்ணா ஓடிவாங்க . . அண்ணா கெதிய ஓடிவாங்க''.

மருத்துவமனை ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றது! மறுகணம் பார்வை யாளரின் பரபரப்பு மிஞ்சியது. நாக்குத் தெறிக்க ஓடிவந்த நகுலேஸ்வரன், தங்கை பரமேஸ்வரியின் பக்கத்தில் ஒட்டினான். பிரேத அறை வாசலை மறித்தபடி உடைபடாத 'பேர்லின்' சுவர்போல் நின்றனர். துஷ்யந்தி அவர்கள் இருவரையும் தள்ளி உட்செல்ல முற்பட்டாள். பரமேஸ்வரியின், நகுலேஸ்வரனின் நெஞ்சுரங்களும், கரங்களும் வலுவுள்ளதாகவே வக்கிரத் தோடு மிளிர்ந்தது. துஷ்யந்தியை இருவரும்அவளது இருகரப் பிடி இழுவை யோடு திமிரத் திமிர கொறயிழுவையாக இழுத்து வெளியில் கொண்டுபோய் விட்டனர். துஷ்யந்திக்கு ஏற்பட்ட கடிமையைக் கண்ணுற்ற தெய்வேந்திரன் பேச்சற்று பெரும் மூச்சை ஊதித் தள்ளிவிட்டுத் தலைகுனிந்து நின்றான்.

''எங்களை அக்கறை கலந்த அளவில்லா அன்பைப் பொழிந்து வளர்த்த தெய்வத்தின் சாவுக்குக் காரணமாக இருந்தவள்... இவள் கண்கள் எங்கள் உயிரைப் பார்ப்பதே பாவம்''.

இருவரும் சேர்ந்தாப்போல் புலம்பினர். பார்வையாளர்கள் சிலர் இரக்கப்பட்டனர். காதலித்துத் தாலி கட்டிய மனைவியல்லவா? அந்த அபாக்கியவதி ஒருமுறை பார்த்துவிட்டுப் போனால்தான் என்ன?''

இவ்வார்த்தையைக் கேட்ட பரமேஸ்வரிக்குப் 'புண்ணில புழுப்பத் தினாப்போலிருந்தது' துடித்துக் குலறினாள் ''பொத்துங்க வாயை! அவளது 'நீலிக்கண்ணீர்' எங்களுக்குத் தெரியும். அவள் இந்த இடத்தில் துஞ்சி மடிஞ்சு துவண்டு துடிதுடித்தாலும் எங்கள் தெய்வத்தின் உயிர் போகக் காரணமாக இருந்த சண்டாளியைப் பார்க்கவே விடமாட்டோம். வந்துட்டா சிலுப்பிக் கொண்டு''. .

கண்களில் வடிந்த கண்ணீரை பிறங்கையால் இழுத்துத் துடைத்து விட்டு திமிறி நின்றாள் பரமேஸ்வரி. எல்லோர் வாயும் 'உம்மென்று' இருந்தது, நேரம் வந்தது. அதிகாரிகள் நெருக்குதல் வெளியேறும்படியான நிர்ப்பந்தத்துக்கு உள்ளானது.

''சற்றுப் பொறுங்களேன்''

''துஷ்யந்திக்கு நேர்ந்த இக்கதிக்கு காரணம் என்னதென்று அறிய வேண்டாமா?'' பரமேஸ்வரன் துஷ்யந்தியை பிரான்சில் திருமணம் முடித்து ஆறுவருடங்களைத் தாண்டிவிட்டது. பரமேஸ்வரனின் உழைப்பில் 'மகராசி' சதை பிதுங்கத் தின்று கொழுத்திருந்தாள். காலையும் - மாலையும் சீவி முடித்த தலை, வைரம் பதித்த தோடும், இரு கரங்களிலும் எந்நாளும் கலட்டாத 'றேடிய வளையல்', கழுத்தில் விழாக்களுக்கும், நிகழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும், வெளியில் சுற்றுதலுக்கும் வெளிக்கிடும் போது சின்னிவிரல் மொத்தத்தில் கழுத்தில் தொங்கும் தாலியும், சங்கிலிகளும். உடம்பு காய்ந்த இலை வெளுப்பு. மகராசன் மகராசியை மகாராணிபோலத்தான் வைத்திருந்தான். இத்தகையவளுக்கு ஏணிந்தக் கோலம் இப்படிப் பலருடைய நாவுகள் பிரளத் தொடங்கியது.

கடும் சூடு தணியாத வெய்யிலின் அகோரம், கோடைகாலத்தின் இரவின் பிடிக்குள் சிக்காதிருந்தது. பத்துமணியைத் தாண்டினாலும் ஆதவன் ஆனந்தம் அகலாது. செடிகளும், கொடிகளும், மரங்களும் நதிகளும் ஆனந்தக் குதுகலத்தில் சிலிர்த்திருப்பினம். வெள்ளை மனிதர் களும் மிதம்மிஞ்சிய மகிழ்வில் ஆடைக்குறைப்பில் ஆலிங்கனத்தில் மிதந்து திரிவர். இக்கால இடைவெளிக்குள்தான் தனது தம்பி நகுலேஸ் வரனையும், தங்கை பரமேஸ்வரியையும் ஈழத்திலிருந்து பிரான்சுக்குள் எடுத்திருந்தார். 'இச்செயலும் பாசமிகு தாயன்பு போல் மிளிர்ந்தது'. பரமேஸ்வரனின் தம்பி தங்கை வந்த நாள் முதல் மனைவி துஷ்யந்தியின் நடையும், செயலும், பாவமும் நாளுக்கு நாள் மாறத் தொடங்கியது! குரலிலும் நெழிவு, சுழிவு சினிமாவின் தோரணையாகவே காட்சி கொடுத்தது. சின்ன விடயங் களுக்கும் கண்ணீர் சொரிவதும், அரற்றுவதும் மிதமிஞ்சியது. இந்நிலைக்குக் காரணகாரியம் கண்டு தெளிய பரமேஸ்வரனால் முழுமையாக முடியா திருந்தது. துஷ்யந்திக்கு எள்ளளவும் இதுகால வரையும் குறைவைக்க வில்லை. எவ்வளவு பிரியத்துடன் காமம் மீறாத அன்புடன் ஒட்டிக் கொண்டிருந்தவள் ஏன் இப்படியானாள்? முந்தின சிரிப்பு, தலை இழுப்பு, உடை வனப்பு, வரவேற்பு, சாப்பிட்டது பற்றி உபசரிப்பு எதுவுமே விடுபட்டுப்போனது.

துஷ்யந்தியின் இயல்புக்குத் தன் தம்பி தங்கையின் செயல் சமமாய் அமையவில்லையோ என்றும் பலமுறை யோசித்தான். கேலியாகவும் எண்ணினான். குருட்டுத்தனமாக போக்கில் வார்த்தைகளை வெளிப் படுத்தாமல் இருக்கிறாள். தினமும் இப்படி அழுவதை இதற்குமுன் என்றும்தான் காணவில்லை என்பதால் விரக்தியில் மனமும் மகிழ்வற்று சங்கடப்பட்டுக் கொண்டிருந்தது... இருந்தும் தன் மனநிலையைத் தடுமாறவிடாது ஒரு நிலைப்படுத்திக் கொண்டான். வேலை முடிந்து வந்து படியேறினான் பரமேஸ்வரன். கதவு திறக்கப்பட்டது.

''இப்போது எதற்கு அழுகிறாய் துஷ்யந்தி?''

வியப்பிலும் வேலைப்பளுவின் களைப்பிலும் இளநகையோடு கவிதையொன்றைப் பாடினான். இதைக் கேட்டாவது அவள் முகம் சிரிப்பில் வெளுக்கட்டும் என்ற ஆவலோடு...

ஏனழுதாய் என் ஆருயிரே
ஏளனம் செய்தார் யார் உயிரே
புன்னகை புரியாயோ என் உயிரே
உன்நினைவே தினம் என் வாழ்வுயிரே!

இந்தக் கவியடியும் அவள் மடநெஞ்சைத் தொடவில்லை. மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சிணுங்கிச் சிணுங்கி அழுதாள். என்னோவெல்லாம் அரற்றினாள். பரமேஸ்வரனால் துஷ்யந்தி ஆடும் அமசடக்கான சந்தத்தை பெரிதாகச் சிந்திக்காமல் இருக்கவும் முடியவில்லை. துஷ்யந்தியின் நடிப்பு நகுலேஸ்வரன், பரமேஸ்வரிக்கு நன்கு விளங்கியது. அவர்களும் தங்களுக்குள் ஓர் தீர்மானத்துக்கும் வந்துவிட்டனர். வேறு வீடு பார்த்துப் போய்விடுவது என்பதே. தாய்போல் அணைக்கவேண்டிய துஷ்யந்தியின் துர்பிரயோகம் பல நாள் நகுவேஸ்வரன் பரமேஸ்வரியைத் துன்பக் கடலில் ஆழ்த்தியது. இருந்தும் இத்துன்பத்தை பரமேஸ்வரனுக்கு எடுத்தியம்பினதில்லை.

கடைக்குப் போய் சாமான்கள் வாங்கிவந்தால் கணக்குக் கேட்பதும், கடினத் தொனியில் எரிஞ்சு விழுவதும், வெளியேபோய் சற்றுப் பிந்திவந்தால் ஏறிய எரிச்சலில் சினந்து பாசாங்கு காட்டுவதும், கடிஞ்சு நாய்போல் குரைப்பதுமாகவே நிற்பாள். அவர்களது முகத்தில் கடுகடுப்பு சிறிதும் தோன்றுவதில்லை. பரமேஸ்வரனின் பாசத்தின் இணைப்பையே நினைத்துக் கொள்வர். சில நாட்களாக நேரம்கெட்ட நேரங்களில் பரமேஸ்வரன், துஷ்யந்தியின் படுக்கை அறைக்குள்ளிருந்து ஒருவித பூகம்பம் புகைஞ்சு கொண்டிருந்தது. குடும்பப் பிரச்சனை நாலு சுவர்களைவிட்டு வெளியில் தெரிவது பண்புக்கு இழுக்கு. அதிலும் ஒட்டுக் கேட்பது கேடுகெட்ட இழிந்தவர் செயல். நகுலேஸ்வரனும், பரமேஸ்வரியும் ஒரு அறையில் பக்கத்துப் பக்கத்துக் கட்டிலில்தான் படுத்திருந்தார்கள். கட்டிலில் கிடந்தபடியே பேசினார்கள்.

''அண்ணை நாம பெரியண்ணையை விட்டு மாறினா என்னண்ணை?''

''ஏன் தங்கைச்சி இப்படிப் பேசுறாய்? பாவம் நம்மண்ணை.''

''இல்லையண்ணை நம்ம பெரியண்ணை கஷ்ரமின்றி இருக்கட்டுமே என்றுதான் நான் சொன்னேன்.''

''நாம வெளியேறினால்தான் அதிகம் கவலைப்படுவார் தங்கைச்சி''.

அன்றிரவு அவர்களது தூக்கம் கெட்டது. பொழுது விடிந்தும் வெய்யிலின் வேகம் யன்னல் வழியாகப் பரவி சூடேற்றிக் கொண்டிருந்தது. துஷ்யந்தி படுக்கையை விட்டெழும்பவில்லை. அன்று வெள்ளிக்கிழமை பரமேஸ்வரி மரக்கறிச் சமையலில் ஒண்டிப் போயிருந்தாள். இந்நேரம் தொலைபேசி மணிச் சத்தம் கேட்டது ஓடிப்போய் எடுத்துத் தன் கன்னத்தோடு ஒட்டினாள்.

''சரியண்ணை நாங்கள் வந்து நிற்கிறோம்...''

சனி ஞாயிறு ஓய்வுநாள். வேலை முடிந்து பிற்பகல் நேரம் பரமேஸ்வரன், பரமேஸ்வரி, நகுலேஸ்வரன் கடைத்தெருவுக்குப் போய் சாமான்களுடன் காரில் வந்து இறங்கினார்... யன்னல் கண்ணாடி வழியாக பார்த்து நின்ற துஷ்யந்தியின் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது. படிகள் ஏறிவரும் சப்பாத்துச் சத்தம் சதைகளைப் புடைத்தெடுத்து கடுக்கின. தணல்மிதி கதியாக நின்றாள்...

மூவரின் கைகளிலும் பைகள் கனதியாகவே தொங்கியது. இதில் துஷ்யந்திக்குப் பிடித்தமாக பொருட்களே அதிகம். கதைவைத்திறந்தாள் துஷ்யந்தி... கண்களிலிருந்து வடித்த கண்ணீர் கன்னங்களில் கிடந்து துள்ளிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவேச வெறியுடன் கேட்டாள் ஒரு கேள்வி.

''வழமையாக நான் இல்லாமல் கடைக்குப் போகமாட்டீர்கள்! இந்த நாய்களோடு ஏன்தான் போனீங்க?''

பரமேஸ்வரன் கைகளில் தொங்கிய பைகள் எப்படி கீழ விழுந்ததோ அதே வேகத்தின் மேலாய் துஷ்யந்தியின் மூக்கிலும் வாயிலும் படாரென்றது சுவரோடு மோதி முன்னடிக்க வந்தான். அவளது சொண்டிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. இருகைகளாலும் வாயைப் பொத்தியழுதாள். பரமேஸ்வரன் ஆத்திரம் பொங்கிட அவையம் நடுங்கிடத் திரும்பவும் கையை உயர்த்தினான். இந்நேரம் பரமேஸ்வரி ''அண்ணா... அண்ணா'' என்று உரத்துக் கத்தினாள். தங்கள் வாழ்நாளில் பரமேஸ்வரனிடம் இருந்து இப்படியொரு ஆத்திரத்தைக் கண்டதில்லை.

''எடியே துஷ்யந்தி, என்னடி உனக்குப் பிடிச்சிட்டு? வார்த்தைய அளந்து கொட்டடி. இன்னுமொரு முறை இவ்வார்த்தை உன் வாயிலிருந்து வருமானால் நான்தான்ரி உனக்கு யெமன். ஒன்று உன்னைக் கொல்லுவேன், அல்லது நான் மடிவேன்''.

துஷ்யந்தி கைகளை உயர்த்தி திமிறியபடி ஓடி அறைக்குள்ளிட்டாள். அவள் பின் ஓடிய பரமேஸ்வரி பல நிமிடங்கள் துஷ்யந்தியைப் பார்த்தபடி அறைவாசலோடு ஏங்கிக் கலங்கி நின்றாள். 'சாது மிரண்டால் காடு கொள்ளாது.' 'பொறுமையிழந்தால் துரும்பின் வலிமைக்கு நிகரேது.' வீட்டில் மாயான அமைதி. தூய்மையான அன்போடு தலையணையில் முகம் புதைத்தழும் துஷ்யந்தியைப் பார்த்துவிட்டுத் திரும்பிய பரமேஸ்வரி ஒரு கேள்வியைக் கேட்டாள்.

''அண்ணை அண்ணி நாங்கள் வந்த நாள்முதலாய் அழுத கண்ணீருக்கு என்னண்ணை காரணம்?'' என்று கேட்டுவிட்டு அவனது சொண்டுகள் எழும்புவதைக் கவனித்தாள். நகுலேஸ்வரன் செய்வதறியாது நசிஞ்சு நின்றான். தங்கையின் துடுக்குத்தனமான கேள்விக்குப் பதில் பகர்வதற்காகத் தன் குரலை அறைக்குள் கிடப்பவள் காதில் நுழையும் படியாக உயர்த்திப் பேசினான்.

''அம்மா இலக்கியத்தில் தேறியிருக்கிறாய். இதுவா உனக்குப் புரியவில்லை? கற்புக்கரசி கண்ணகிக்கு வந்த துன்பமும் 'நீலி'க்கு வந்த துன்பமும் ஒத்தநிலையதே. நீலியின் கணவன் 'சங்கமன்' குற்றமற்ற வணிகன். ஒற்றனெனப் பொய்யாகக் குற்றஞ்சாட்டப்பட்டு மன்னனால் கொலையுண்டான். அவன் மனைவி நீலியோ கண்ணகிபோல் மன்னன்முன் சென்று நீதிகேட்டு நியாயப்படுத்தாமல் ஊர் முழுவதும் அரற்றி அழுதாள்.

அரசர் முறையோ பரதன் முறையோ
ஊரீர் முறையோ சேரியீர் முறையோவென

(கட்டுரைக்காதை-162) மன்றிலும் மறுகினும் சென்றானாள் பூசலிட்டாள். தெருவெங்கும் அழுது புலம்பித் திரிந்து பதினான்கு நாள் கழிந்து பின்னர் மலை உச்சியிலிருந்து விழுந்து இறக்கிறாள். நீலி ஊர்முழுவதும் அழுது அரற்றித் திரிந்தாலும், ஊர்மக்களும் அவள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனின் குற்றமற்ற தன்மையை அறியாமற் போயினர். சங்கமன் மனைவி நீலி வீணே அழுது மாய்கிறாள் என்பதாக எண்ணினர். அதுதான் கிராமங் களிலும் பட்டினங்களிலும் இன்று நம்ம வீட்டிலும் எக்காரணமின்றி அடம்பிடிக்கும் பெண்ணை நீலி என்றும் மனதில் கரவை வைத்துப் பொய்யாகக் கண்ணீர் வடிப்பவரை 'நீலிக்கண்ணீர்' விடுகிறாள் என்றும் கூறுவார்கள். பரமேஸ்வரன் கொஞ்சம் ஏறிய குரலிலே சொல்லி முடித்தான். கதைகேட்ட துள்ளலோடு எழுந்த பரமேஸ்வரி ''அண்ணா சாப்பாடு போட்டுத்தாரேன் சாப்பிடுங்க'' என்றாள் ''போட்டு வாயேன் நாம மூவரும் ஒன்றாகச் சாப்பிடுவோம்''

பரமேஸ்வரனின் குரல் துஷ்யந்தியின் நெஞ்சை இரண்டாகப் பிளந்தது. ஒருக்காலும் தான் பரிமாறாமல் சாப்பிட்டது கிடையாது. அவளுக்கு இருமுனைப் போராட்டமாகவே தென்பட்டது. அல்லது இனிமேல் தொடரப்போகும் போராட்டமா என்ற யோசனையற்ற திமிர் கொண்டாள்.

பரமேஸ்வரி சாப்பாட்டை ஒரு கிண்ணத்தில் போட்டு வந்து பரமேஸ்வரனிடம் நீட்டினாள். வாங்கியதும் விரல்களை விரித்து அள்ளிக் குழைச்சு ஒவ்வொரு உருண்டைகளாகப் பிடித்து தங்கைக்கும், தம்பிக்கும் ஊட்டினான். தமையனின் செயல் தாயினும் மேல் நின்ற உணர்வில் பரமேஸ்வரியின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கன்னங்களில் நின்றன. நகுலேஸ்வரன் பாசவுணர்வால் விம்மிய விம்மலோடு முக்கிய சோறு உள்ளானந்தமாய் சென்றது.

''அண்ணை, நீங்களும் சாப்பிடுங்கண்ணை'' இருவரும் சேர்ந்தாப் போல் பேசினர். பரமேஸ்வரன் ஒரு உருண்டையை உருட்டி வாயில் வைத்திடக் கையை எழும்பும் போதினில் துஷ்யந்தியின் நடை படை நடுக்கத்தைக் கொடுத்தது. கையில் உயர்த்தி வைத்திருந்த உருண்டை கிண்ணத்தில் விழுந்தது. .

சட்டென்று மூவர் வாயும் மூடியது. கையில் வைத்திருந்த பையும், கன்னத்தில் வழிந்த கண்ணீரும் என்னத்தைச் சொல்வது... மௌனம் பின் நடுங்கிய குரலில் துஷ்யந்தி பேசினாள்.

''உங்களோடு நான் இங்கு வாழத்தான் வேணும் என்றால் இவர்கள் வெளியேறவேண்டும். இவர்கள் வந்த நாளிலிருந்து என் நிலைமை தனிமையானது, வறுமையானது. நான் திரும்பவும் இவ்வண்டை வர வேண்டுமானால்... நான் இப்போது என் அண்ணனிடம் போறேன்''

பதிலுக்குக் காத்திராமல் கண்ணீரின் வெளுப்போடு படிகள் இறங்கினாள் துஷ்யந்தி. நகுலேஸ்வரன் அண்ணி... அண்ணி நில்லுங் கண்ணி'' என்று பின்னால் ஓடிக் களைத்துவிட்டு யன்னல் கண்ணாடி வழியே நோக்கி நின்றான். பரமேஸ்வரி தமையனை அசைவற்ற நிலையில் பயந்து நடுங்கி உயிர் உருகிக் கொண்டிருந்தாள்.

''அண்ணா அண்ணா'' என்று நொடிக்கொரு தடவை புலம்பித் துடித்தாள். சில நிமிடங்களில் திமிறிய பரமேஸ்வரன்...

''கோடுபோட்டு வாழ்ந்ததும் யாரடி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேடுகெட்டிடப் போவதும் ஏனடி?
இல்லத்தரசி என்பதும் தமிழ்மரபடி!
இல்மகராசி எடுத்தடி ஆங்காரமடி!

செற்றியில் பட்டெனக் குண்டி குத்த விழுந்ததும் சாய்ந்தான். விதி வசத்தால் பரமேஸ்வரன் மூச்சையாகி விட்டதாக எண்ணிய தவிப்போடு அந்தரப்பட்ட அக்கம் பக்கத்தில் உள்ள கதவுகளைத் தட்டி பரமேஸ்வரன் உடலை மருத்துவமனைக்குக் கொண்டு வந்தார்கள்.

●

ஈழமுரசு
20-11-1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்டம்

வாரத்தில் ஒருநாள் ஓய்வு. அந்த நாளும் ஞாயிற்றுக்கிழமையாகவே இருப்பதால் அலுவலக அலுவல்களுக்கும் அடுக்காத நாள். ஊருக்குக் கடிதம் எழுதுவது என்றாலும் மனதில் சங்கடங்கள்தான் குவிந்து பரவுகின்றது. உடுத்தி ஊத்தையாப்போன உடைகளையாவது 'வோசிங் மிசினில்' போட்டு 'இஸ்திரி' பிடிச்சு மடிச்சு அடுக்கி வைக்கலாம் என்றாலும் நேரம் போதாது. நித்திரைய விட்டெழும்பின கையோட 'கிறவுன்சுக்குப்' போகத்தான் நேரமும் சரியாக இருக்கு.

ஊரிலயிருந்தாலாவது அம்மா, அக்கா, தங்கைச்சி உறவென அவனது தேவைகளை அறிந்து உதவுவாங்கள். அகதியாய் வந்தொதுங்கிய இயந்திர மயமான வாழ்க்கைத் தேசத்தில் பிரஞ்சு வீதிகள் எங்கிலும் அலைந்து தேடிய தேடலில் கிடைத்த வேலையின் மனக்காட்சிகளும் தினம் தினம் வந்து போவதாலும் அவன் தன்னைத்தானே தேற்றிக்கொண்டு, கிடைக்கிற ஓய்வுநாளையும், ஒரு உதைபந்தாட்ட வீரனுக்குரிய கம்பீரத்துடன் பயன்படுத்திக் கொண்டான்.

நேரமும் பிந்நேரம் மூன்றுமணி ஆகிவிட்டது. அவனது படபடப்பு வேகமானது. சாப்பிட்ட பாதி, சாப்பிடாத பாதியென விறுவிறென அறையவிட்டு நகர்ந்து அப்பா ட்மன் ஐந்து மாடிப் படிகள் இறங்கி வீதிக்கு வந்தான். 'ராகவன்' உருண்ட விழிகள் மேலும் பிதுங்கியது. வாற ஞாயிற்றுக் கிழமை ஏழுபேர் கொண்ட நொக்கவுட் போட்டி என்பதாலும் இந்த வருடம் 'பூவரசுமரம் விளையாட்டுக் கழகம்' ராகவனை விளையாட்டுத் தலைவனாக நியமித்திருப்பதாலும், வீதியில் நடந்து வரும்போது தலைவனான தானே பிந்திப்போனால் சக விளையாட்டு வீரர்கள் தவறாக நினைப்பதுடன், மனத்தாங்கலைத் தக்கவைத்துக் கொள்வார்கள் என்ற மன உரசலின் ஆச்சரியத் தயக்கம்தான் ராகவனுக்கு ஏற்பட்டது.

பஸ் வந்து தரித்ததும் மனதில் ஓடிய சஞ்சலம் நீங்கி சிறிது உற்சாகம் பெற்றவனாய் இறங்கி விர்விரென நடந்து விளையாட்டுத் திடலுக்குள்ள வந்துகொண்டிருந்தான். பூவரசுமரம் விளையாட்டுக் கழகத்தைச் சார்ந்த வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். ஒருவர் உதைத்த பந்து சற்று மேலேழுந்து ராகவன் எதிராக வந்து விழுந்தது. அப்பந்தைத் துரத்தி வந்த ரமேஸ் நிமிர்ந்து நோக்கியபடி உரத்துக் கத்தினான்.

''டேய்! இங்க பாருங்கடா நம்ம கப்ரின் வாற நேரத்தை.''

இன்னும் ஒருவன் தாழ்ந்த குரலில் நக்கல் சிரிப்போடு

''அவன்தான் பெரிய விளையாட்டுக்காரன் ஆச்சடா. அந்தத் தலைக்கனம் தான்.'' மற்றவன் கோல் போஸ்ரோடு சாய்ந்தபடியே நின்று களைப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலீட்டோடு தயவாகச் சொன்னான்.

''சும்மா இருங்கடா! அவனுக்கு என்ன பிரச்சனை என்று தெரியாமல் கண்டபடி பேசுறீங்க''. எல்லோர் கிட்டவும் வந்த ராகவன் பொதுவாக வணக்கத்தைச் சொல்லிவிட்டு சற்று எட்டப் போயிருந்து தன் விளையாட்டுப் பயிற்சிக்கான ஆடைகளை மாற்றிக் கொண்டு, பூட்ஸ் காலோடு கம்பீரமாக எழுந்து, குனிந்து, நிமிர்ந்து, ஆடி, ஓடிய பிற்பாடு பந்தின் உதைக்குத் தயாராகும் போது தன்னைத் தாக்கிய கேள்விகளுக்குப் பதில் சொல்வது போல் எல்லோரையும் பார்த்துக் குலுங்கிச் சிரிச்சுவிட்டு சொன்னான்.

''டேய் நீங்க அடிக்கிற வாய்ச் செருக்குகளுக்குத் தலையடி தெரியும் ஞாயிற்றுக்கிழமை'' என்று சொன்னவன் ஓடி ஒரு உதை பந்துக்கு. முகம் கறுத்து நின்றவங்களுக்கு விழுந்த உதையாகப் பட்டது.

பயிற்சி முடிந்து கூட்டம் கூட்டமாக நகர்ந்து கொண்டிருந்தார்கள். கிழக்கு முகமாகத் திரும்பிப் போய்க்கொண்டிருந்த ரமேசும், சுரேசும் கொஞ்சத் தூரம் எட்டப் போய்க்கொண்டிருப்பதைக் கவனித்த ராகவன் பிற்பாடு அவர்களோடு சேர்ந்து போவதற்காக நடையைத் துரிதப்படுத்தினான்.

ராகவன் வருவதற்குள்ளாக தங்களுக்குள் இருவரும் கதைத்துக் கொண்டார்கள்.

''டேய் ரமேஸ் ராகவனைப் பார் அவனிடத்தில் அகந்தை இல்லை, சுயநலமில்லை, விளையாட்டு வீரனுக்குத் தேவையான முயற்சியுடன் கலந்த திறமையிருக்கு; அடக்கமும், ஒழுக்கமும் நிதானமாக இருக்கு'' மூச்சு விடாமல் சொல்லி முடித்ததும்.

''சுரேஸ் நீ சொல்லுறதும் சரிதான்! அப்பயேன்ரா நம்ம ரீம் பொடியங்க கிறவுன்சுக்க ஆத்திரப்படுறாங்க?''

இந்நேரம் ராகவன் இருவர் இடையே புகுந்ததும், சுரேஸ்கேட்ட கேள்வி காதில் நுழைந்தவுடன் பதில் பட்டென்று விழுந்தது.

''தோல்விய ஒத்துக்கிற பக்குவம் இல்லாததால்''

''சும்மா போடா; அவன் 'லெப்றி' பிழையாக் குடுத்தாலும் ஒத்துக்கச் சொல்லுறீயாடா?'' கோபமாகக் கேட்டான் ரமேஸ்

''மற்ற ரீம் பிளேஸ் பவுல் அடிச்சாலும் சும்மா நிக்கச் சொல்லுறீயாடா?'' என்று சீறினான் சுரேஸ். ராகவன் அமைதியாகப் பேசினான்

''மைதானத்திற்குள் இறங்கியிற்றா வீரர்கள் யாவரும் மத்தியஸ்தரின் தீர்ப்புக்குத் தலைவணங்கியே ஆகவேண்டும்''

''சனத்தட கத்தல்களப் பொறுக்க முடியாமலும் பிரச்சனைக் குள்ளாகிறவங்களும் உண்டுதான்ரா ராகவன்?''

''நல்ல விளையாட்டு வீரன் சனத்தட கத்தலக் காதில எடுத்துக்க மாட்டான்'' அதட்டிக் கூறியபடி ராகவன் ரமேஸ், சுரேஸ் இருவரையும் மாறிமாறிப் பார்த்துவிட்டுச் சின்னச் சிரிப்போடு நடையைத் தரித்துக் கேட்டான்.

''இந்த விளையாட்டுக்களை ஏன் நடத்துகிறோம் என்று தெரியுமா?''

''தெரியாது சொல் கேட்போம்'' என்றான் ரமேஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னத்துக்குத்தான் என்று சொல்லன்ரா கேட்போம்.'' என்றான் சுரேஸ். இருவரையும் பார்த்துவிட்டு ராகவன் பிரசங்கத்தைத் தொடங்கினான்.

''விளையாட்டுப் போட்டிகள் மூலம் நாடுகளிடையே சமரசம், சமாதானம், புரிந்துணர்வு, சிநேகபூர்வம் தோன்றவும், நம் தமிழ் சமூகத்திடையே உள்ள சாதி, சமயப் பூசல்கள் அகலவும், அமைதி அடக்கம், ஒழுக்கவும், பொறாமையற்ற மனத்தூய்மையான மனப்பக்குவம் தோன்றவும்தான் இவ்விளையாட்டுகள் நாடெங்கும், ஊரெங்கும், பள்ளிகள் எங்கும் வியாபித்தன. இதனைப் புரிந்து கொள்ளாதவர்கள் மைதானத்திற்குள் இறங்கி விளையாடத் தகுதியற்றவர்கள். ராகவன் மூச்சை விடும்போது அவன் வாசித்த வசனங்களைக் கேட்ட ரமேஸ், சுரேசின் மனதில் படிந்திருந்த புகைமூட்டம் களைந்து புதிய மனத் தெளிவு பெற்றனர்.

பஸ் ஏறும்போது புரிந்துணர்வோடு பிரயாணம் மேற்கொண்ட மகிழ்வு தென்பட்டன. ராகவனைப் பார்த்த இருவரும் அவன் தகுதியையும் யோசித்துக் கொண்டனர்.

எந்நாளும் ராகவன் மைதானத்தில் விளையாடுகின்றபோது தன் உடல் உபாதைகள் குறித்து எவரிடமும் எப்போதும் குறைபட்டுக் கொள்ளும் பழக்கம் இருந்ததில்லை. விளையாட்டில் ஏற்படும் வெற்றி தோல்விகளைச் சர்வசாதாரணமான போக்கிலேயே எடுத்துக்கொள்ளும் நிதான புத்தியும், வெற்றி கொண்டாலும், தோல்வி கண்டாலும் பார்வையாளர், எதிரணியினரின் பாராட்டுக்களை நாணம் கலந்த ஒரு புன்னகையோடு ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தோடு, நட்புணர்வாகப் பழகும் பண்பாளன். முந்தைய ஆட்டங்களைப் பார்த்தவர்கள் ராகவனைப் பற்றி நல்ல விமர்சனங்களை வழங்கியிருந்தாலும் அவன் விளையாடுகின்ற கழகத்தைப் பற்றித் 'தெருவால் அவதூறாகக் கத்திக் கொண்டு போனவர்களையும்' பாரிஸ் நகர் கடைத் தெருக்களில் கூட்டம் போட்டு விபரமற்ற கீழ்த்தரமான விதண்டவாதங்களை அள்ளி வீசுவதையும் ராகவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. தன்னை மறந்து அதிகமாகச் சிந்திக்கும் நேரங்களில் இந்த விளையாட்டை விட்டுவிட்டு தன் பாட்டில் இந்த ஓய்வுநாளை வேலைக் களைப்புத் தீர்க்கும் தனிமையான இனிமையான நாளாகக் கழித்திட வேண்டும் என்றும் எண்ணுவதுண்டு. கும்பலின் சலசலப்பு இல்லாத இடங்களுக்குப் போய் பிரான்சில் உள்ள பிரசித்தி பெற்ற இடங்களைப் பார்த்து பாடசாலைப் படிப்பில் பெற்ற அறிவை நேரில் தரிசித்திடவேணும் என்ற அறிவார்ந்த தூண்டல் தினம் எழுவதுமுண்டு. இந்தநிலையில் ரீவியில் போகும் நிகழ்ச்சியில் ஒரு உதைபந்தாட்ட வீரனுக்கு இருக்கும் புகழையும், மதிப்பையும், ரசிகர்களையும் பார்க்கும் போது தானும் அந்த நிலைக்கு உயர்ந்திட வேணும் என்ற உணர்ச்சி வேகமும் முன் நிற்கும்.

ஞாயிற்றுகிழமை விளையாட்டுப் போட்டிக்கான ஒழுங்குகள் மிகுந்த தடபுடலாக நடந்துகொண்டிருந்தன. பாசிசில் வெளியாகும் பத்திரிகைகளும் முன்னுரிமை கொடுத்து விளம்பரப்படுத்தியிருந்தனர். பிரபல்யமான வர்த்தக ஸ்தாபனத்தாரின் ஆதரவில் ஏழுபேர் கொண்ட நொக்கவுட் போட்டி 'சான்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுத் திடலில் ஞாயிற்றுக் கிழமை காலை ஒன்பது மணியென்று. அன்று காலை ஒன்பது மணிக்கெல்லாம் பாரிசிலிருந்தும், வெளியிலிருந்தும் தாங்கள் சார்ந்த கழகங்களுக்கு உற்சாகம் கொடுக்க வந்திருந்தார்கள். அன்று 'சான்' மைதானம் தமிழர்களின் தலைகளாகவே தென்பட்டன. ஏழுபேர் கொண்ட நொக்கவுட் போட்டி 'சேம்பியன்ஷிப்' பந்தயங்களும் அங்காங்கு இடம்பெற்றன. பூவரசுமரம் விளையாட்டுக் கழகத்திற்கும் வேப்பமரம் விளையாட்டுக் கழகத்திற்கும்தான் இறுதியாட்டம் வருமென பொறாமை மிகுந்த கோபமும் கேலியும் கலந்த குரல்கள் காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தன.

நேரம் ஒன்பதரை ஆகும்போது விளையாட்டுப் பொறுப்பாளர்கள் எதிர் எதிராக விளையாடுகின்ற கழகங்களின் பெயர்களையும் நேரங்களையும் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துக் கொண்டனர். உக்கிரத்தில் சலிக்காத சூரியன் தன்னொளியில் தனிஆணவம் கொண்டிருந்தான். பார்வை யாளருக்கும், விளையாட்டு வீரர்களுக்கும் வெய்யிலின் வெக்காரம் மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்திருந்தன. அன்றைய உதை பந்தாட்டப் போட்டிக்கு என்றுமில்லாதவாறு சனமும் குழுமியிருந்தனர்.

ராகவன் முகத்தில் தெளிந்த களிப்பு. இந்தப் பெரிய உதைபந்தாட்ட மைதானத்தில் மண்வாடை வீசுகின்றது. 'ஒவ்வொருதர் மனதில் வழியும் உவகைக்கும் உபத்திரவம் இல்லாது காக்கவேண்டும் கடவுளே!' என்ற மன்றாட்டுக் கலந்த களிப்புத்தான். ராகவன் முகத்தில் படர்ந்திருந்த மகிழ்ச்சியாகும். உதைபந்தாட்ட வீரனுக்குரிய கம்பீரமும், ஒழுக்கமும், அடக்கமும், மைதானத்திற்குள் எதிரணியினரையும் சிநேகபூர்வமாக எதிர்கொள்ளும் மனப்பக்குவமும் நிறைந்தவனாகவே அன்றும் காணப்பட்டான் ராகவன்.

உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமானது பலர் அங்காங்கு மரத் தடிகளிலும், அடுக்காய் இறங்கும் படிக்கட்டுகளிலும், புல் தரைகளிலும் அமர்ந்தும், நின்றும் ஊர் நடப்புச் சர்ச்சைகளிலும் ஈடுபட்டிருந்தார்கள்.

பதினாலு கழகங்கள் பங்குபற்றிய போட்டிகளின் ஒரு சுற்றில் இறுதி யாட்டப் போட்டிக்கு பூவரசு மரம் விளையாட்டுக் கழகம் தெரிவாகி யிருந்தனர். அடுத்த சுற்றில் தங்களோடு மோதும் கழகம் யார்? என்பது என்ற ராகவனின் ஆர்வம்போல் சக வீரர்களுக்கும் இருந்தன.

'லெவுன் ஸ்ரார்' விளையாட்டுக் கழகம் எதிர் வேப்பமரம் விளையாட்டுக் கழகம் இடையே அரையிறுதியாட்டம் நடந்து கொண்டிருந்தன. அந்த ஆட்டத்தை உன்னிப்பாகப் பார்த்து நின்றான் ராகவன். அப்போட்டியில் எந்தக் கழகம் வெற்றி பெறுகிறதோ அந்தக் கழகத்துடன் தான் இறுதியாட்டம் நடைபெறும்... அதற்கான முடிவும் சொற்ப நேரத்தில் தெளிவானது.

லெவுன் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் இரண்டு கோல்கள் வித்தி யாசத்தில் தோல்வியைத் தழுவிட வேப்பமரம் விளையாட்டுக் கழகம் இறுதியாட்டத்திற்குத் தெரிவானது.

''வேப்பமரம் என்றதும் பூவரசு மரத்தினருக்கு முகத்தில் ஆச்சரியம் கலந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவேச ரேகைகள் படரத் தொடங்கின. ராகவன் பலதையும் முன்கூட்டியே சிந்தித்தவனாய் ஒரு தலைவனுக்குரிய அடக்கத்துடனும், பணிவுடனும் தன் அணியினரை அழைத்துப் போய் ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தான்.

''தோல்வியையும் வெற்றியென ஒத்துக்கொள்ளும் மனப்பக்குவத் துடன், தோற்றால் ரசிகர்கள் நம்மைக் கேலி செய்வார்கள் என்பதையும் பொறுமையோடு சகித்துக்கொண்டு திறமையை முழுமையாக வெளிப் படுத்தி, கோபங்களைத் தவிர்த்து உட்பூசல்களை உதறித்தள்ளி, விளையாட்டு வீரனுக்குரிய மனப்பக்குவத்தோடு மைதானத்திற்குள் இறங்குங்கள்.''

ராகவன் சொல்லி முடிக்கும் முன்னம் இடைமறித்தொருவன்,

''ராகவா உன்ர கோல் சூட்டிங்கிலதான் எங்கட வெற்றியே நிற்குது''

இன்னுமொருவன் ,

''எல்லாரும் திறமையைக் காட்டினாத்தான் நமக்கு வெற்றி''

விளையாட்டு சூடு பிடித்துக்கொண்டிருந்தது. சனத்தட கத்தலும் உச்சநிலையை எட்டிவிட்டது. அதற்கு மேலும் கூக்குரல்கள் எழுப்பத் தான் ஆவல் கொண்டு நின்றார்கள். இடைவேளைக்கு முன்னதாக இரு கழகங் களும் ஒன்று-ஒன்று கோல்கள் போட்டு சமனாக இருந்தபோது இடை வேளைக்குப் பின்னர் விளையாட்டுத் தொடங்கியது. எல்லோருடைய கவனமும் அப்பொழுது கடிகாரத்தின் பக்கமே அடிக்கடி திரும்பின. எதிரணியில் விளையாடிய ஒருவர் ராகவனின் ஓட்டத்தையும், உத்தியையும் கவனித்தவன், ராகவன் பந்தெடுத்தோடும்போது தடக்குப் போட்டு விழத்திவிட்டான். முழங்கால் முட்டியில் சிறு காயம் ஏற்பட்டது. காயத்தால் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. நேரமும் எட்டு மணியைத் தாண்டி மஞ்சள் வெய்யில் காயத் தொடங்கின.

'இந்த 'மேட்சை' எப்படியும் வென்றே தீர வேண்டும். இதை விடக் கூடாது!' என்று தனக்குள் தானே கூறிக்கொண்ட ரமேஸ் கொடுத்த பந்தை ராகவன் லாவகமாக ஏந்தி விட்டுத் துள்ளியதும் 'துப்பாக்கிக் குண்டு' பாய்ந்தது போலிருந்த ராகவனின் உதையின் வேகம் கோல் கீப்பர் திணறடித்தான். இரண்டாவது கோலையும் மிகச் சிறப்பாக விளையாடி அடித்ததைப் பார்த்துநின்ற சனமெல்லாம் கூக்குரலிட்டு, கைதட்டி, ஆரவாரம் செய்தனர்.

'தாகத்தால் நாவறண்டு போனவர்களுக்கு. ஒரு மடக்குத் தண்ணீர் கொடுத்ததைப் போலிருந்தது.' அடுத்த பந்தை சுரேஸ் 'பாஸ்' பண்ணியபோது பொறுக்க முடியாத கோபத்தில் நின்ற வேப்பமரம் வீரன் தன்னை ராகவன் வெட்டி எடுத்துப் போறான் திரும்பவும் கோல் போட்டுயிடுவான், என்று மூக்கு நுனியில் நின்ற கோபத்தோடு பின்னால் ஓடி ஓங்கி ஒரு உதை வேணுமென்றே அந்தப் பவுல் அடித்தான். தாங்கமுடியாத ராகவன்... ''அம்மா... அம்மா'' என்று குழறியபடி தரையில் விழுந்து துடிதுடித்தான். மைதானத்தைச் சுற்றி நின்ற சனமெல்லாம் ஒரு கனம் ஸ்தம்பித்து நின்றனர். சிலர் மைதானத்துக்குள் இறங்கினர் ராகவன் முழங்கால் எலும்பு முறிஞ்சு புறப்பட்டுத் தெரிந்தது.

அவனது துடிப்பைப் பார்த்த சக வீரர்கள் பொறுமை இழந்து நின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசிகர்கள் யூடோ, கராட்டி எனப் படிமானம் போட்டனர். மைதானமே அல்லோகல்லோலப்பட்டது.

தாங்க முடியாத வேதனையிலும் நிதானமிழக்காத ராகவன் பெலனாக் கத்திக் குழறினான்.

''வேண்டாம்... வேண்டாம் இந்தச் சண்டை '' ஒரு விளையாட்டு வீரனுக்குரிய நேர்மையான மனப்பான்மையோடு.

''எனக்கடிச்சவன் திருந்துவதற்கொரு சந்தர்ப்பம் கொடுங்க! வேண்டாம்... வேண்டாம் இந்தச்சண்டை'' இந்நேரம் பொலீஸ், பொம்பியர்ஸ், அம்புலன்ஸ் என வந்து தரித்தன...

ஒரு சிறந்த உதைபந்தாட்ட வீரன் இனிமேல் மைதானத்துக்குள் இறங்கி விளையாடுவானா? என்ற ஏக்கத்தோடு இரக்கமாகச் சூழ்ந்து நின்றார்கள் மக்கள். உபாதையோடு கிடந்த உதைபந்தாட்ட வீரனை அம்புலன்சில் தூக்கி ஏற்றினார்கள்.

நேர்மையான மக்களின் திட்டு வான் முட்ட எழுந்தன!

●

ஈழநாடு
14-06-1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் பைத்தியம்

விடியற்காலை நேரம். மாசிப்பனி மூசிப்பெய்த மந்தகாரம் மறையாது பகலவன் ஒளியில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருந்தான். ஏழுமணி யானால் சோமர்செட் கார் நேரம் தப்பாது நிற்பாட்டுற இடத்தில் வந்து நின்றுவிடும். இன்றும் வழமைபோல் காரை நிற்பாட்டியதும் அவுக்கென்று கதவைத் திறந்த அதிகாரி திகைத்துப்போய், ''என்னடா இது?'' யாழ்ப்பாணம் சுங்க இலாகா காரியாலயத்தின் பின்பக்க வளவில் நீண்ட நெடுங்காலமாக பேரம்பேசி நிற்கும் அரசமரத்தடியின் கீழ் சைக்கிள் நிற்பாட்டப் போடப் பட்ட பழையகாலத் தகரக்கூரை மூலையிலிருந்து என்றுமே கேட்டறியாத அனுங்கல். காற்றின் காதலோடு மேலெழுந்து முந்திக்கொண்டிருந்தன. ''எத்தனை நாட்கள் நான் இந்த நேரத்தில் வந்திருக்கிறேன். ஒருக்காலும் இல்லாத புதினமாக இருக்குது!'' என்று திடுக்கிட்ட நிலையிலிருந்து விடுபட்ட அதிகாரி கழுத்து ரையை வலக்கையால் அங்குமிங்குமாக ஆட்டி நேர்ப்படுத்திக் கொண்டபடி கடத்தல்காரல் ஒருவனைப் பிடித்துவிட்ட வெற்றித் திலகம்போன்ற வீரப்பிரதாபத்துடன் அரசமரத்தடியை மோப்பம் பிடித்த நாய்போல் சுற்றிவந்தார். மூலையில் கண்ட காட்சியின் தாக்கத்தால் பிதுங்கிய கண்கள் பிசகற்று, கமராவில் விழுந்த புகைப்படம் போலாகி இருந்தார் அதிகாரி. கையும், காலும் மெய்யோடு ஒட்டியபடி பெட்டியில் அடைத்த பாம்பாட்டம் பட்டுச் சேலைத் தலைப்பால் போர்த்தபடி சுருண்டு கிடப்பது 'பெண்தான்' என்பதை ஊகித்தறிந்து கொண்டார். கணநேர அதிர்வின் பின்பு ஒரு உலுப்போடு,

''இந்தப் பொம்பிள இங்க ஏன் வந்தாள்?''

மனசுக்குள் துருவிக்கொண்டிருந்த கேள்விக்குப் பதில் கிடைக்க மனசையுருட்டியபோது கிடைத்த பதில் கேள்வியைத் துணிச்சலோடு தொடுத்தார் அதிகாரி.

''யார் நீ? அடிபெண்ணே யார் நீ?''

கரகரத்தக் குரலின் குத்தலால் பதறித் துடித்து எழும்பியவள் ''யாரடா நீ? யாரடா நீ? எந்தக் களவாஞ்சியடா நீ?'' என்றாள்.

வெற்றித்திலகம் வெருண்டவனாட்டம் பகிடியாகக் கேட்டார், ''தாயே! உனக்கென்ன பையித்தியமா? இதில வந்து படுக்கிறாய்?''

''யாருக்கடா பையித்தியம்? உனக்குத்தான் பையித்தியம். என்ன விட்டுட்டு இன்னொருத்தியோட போன ஓடுகாலி நீதான் பையித்தியம்.. நீதான் பையித்தியம்.''

அதிகாரி மனசு பனிக்கட்டியாய் உருகியது. ''இது கல்யாண சமாச்சாரம் போலிருக்குது.'' படாரென ஒரு கும்பிடு போட்டார். ''நான் வருகிறேன்'' என்று வாய்மட்டும் புலம்பிச்சு... மனசு அந்த இடத்தைவிட்டுப் போகாமல் வேலிபோட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பெண்ணே உன்ர நன்மைக்காகச் சொல்லுறேன் இது அரசாங்கக் காணி. கதவு திறந்திருக்கென்று இதுல நெடுகப் படுக்க ஏலாது''.

''போடா போ! நானும் அரசாங்கச் சொத்துத்தான். எனக்கும் இதில பங்கிருக்கு உனக்குத் தெரியாதாக்கும்'' நக்கல் சிரிப்பொன்றை நறுக்கெனத் தொலைத்துவிட்டுக் குழைந்து நின்றாள்.

''நான் உன்னோட வம்பளக்க வரயில்ல. எந்த ஊர் என்றாவது சொல்.''

''உனக்கேன் என்ர ஊரைப்பற்றி?''

''என்ன பேர் என்றாவது சொல்லித் தொலையேன்.''

''சொல்லமாட்டேன். சொல்லமாட்டேன்.''

''அம்மா தாயே ஊர்பேரைச் சொன்னாத்தானே பொலீசட்டச் சொல்லி யாவது உன்ன அங்கு கொண்டு போய் விட்டுடச் சொல்லுவேன்.''

''உனக்கேன் இந்த அலுவலெல்லாம்?''

''நானும் மனுசன்தானே? சும்மா ஒரு உதவிக்கா...'' அதிகாரி கடவாயிலிருந்து வீணி ஒழுகியது.

அவள் திமிரோடு ''சும்மா கேட்பீங்க. பின்னால சுமக்கிறேன் என்பீங்க. கொஞ்ச நாள்போக இன்னொரு 'தோற' முப்பத்திரண்டு பல்லையும் காட்டினாப்போதும் அவளையும் வைச்சுக்கிறேன் என்று ஓடியிடுவீங்க. இப்படித்தானே உங்க குணங்கள்.'' அவளுடைய பதிலிலும் கேள்வியிலும் வேதனையின் சாயல் சரமாரியாகக் கிடந்தது. இவளை யாரோ ஏமாற்றித் தொந்தரவு பண்ணியிருக்கிறான். அந்தக் கோலம்தான் இந்தக் கண்றாவி போலிருக்கு. வடிவாகவும் இருக்கிறாள் வயசும் அவ்வளவாக இருக்காது. பையித்தியமென்றா என்ன வந்திட்டு, மூக்கு முழியோடு லட்சணமாகவேற இருக்கும்போது?

அதிகாரியின் இளகிய மனசு அவளை உரிஞ்சு விட்டுப் பார்க்கக் கனவு கண்டுகொண்டது. முகத்தால எண்ணெய் கசிந்து ஒழுகிக்கொண்டிருந்தது. பல்லு முப்பத்திரண்டும் சொண்டுகள் சொருகிக் கொண்டதால் பளிச்செனத் தெரிய சொக்கிப்போய் நின்றார்.

சுங்கக் காரியாலய முதல்வர் காரைவிட்டு இறங்கியதும் உதவி அதிகாரி இடிஞ்சுபோய் நிற்கும் கோலத்தையும், அவர் முன்னால் பெண் ஒருத்தி சாறித் தலைப்பைப் பற்களால் சப்பிச் சப்பி இளிச்சுக்கொண்டு நிற்பதைக் கண்டு கொண்டவர் முகத்தில் எள்ளு வெடித்தது. உறுமிய உறுமல் காரியாலயக் கட்டிடமெங்கும் எதிரொலித்தது.

''என்ன இங்கு நடக்குது?''

குரல் எதிரொலியோடு முந்திக்கொண்டவள் தன்ர பாட்டுக்குப் பாடம் சொன்னாள். ''ஐயா! நான் என்ர பாட்டுக்கு இந்த மூலையில் படுத்துக் கிடந்தேன் இந்த ஆள் என்கிட்ட வந்து ஏதெல்லாம் சொல்லுறான் ஐயா.''

காமுகக் கனவிலிருந்து விடுபட்ட அதிகாரி ''வணக்கம் சார்! அப்படி ஒன்றுமில்லை. இந்தப் பொம்பிள யாரென்று எனக்குத் தெரியாது. பைத்தியம் போல தெரியுது. இங்கின படுக்கக்கூடாது என்று துரத்தத்தான் வந்து நிற்கிறேன்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வந்ததும் வடிவா இருக்கென்று வாயால ஒழுகிற்றோ?''

''அப்படியில்ல சார்.''

''அது கிடக்கட்டும் முதலில் நீங்க உள்ள போங்க'' கையை நீட்டித் திரும்பியபடியே, ''ஏய் பெண்ணு, நீ இந்த இடத்தைவிட்டு எங்காவது போயிடு. இல்லாட்டி பொலிஸில் புடிச்சுக் கொடுத்திடுவேன். போ... போ இங்கிருந்து.''

அவளும் தலையாட்டிவிட்டு, ''பொலிஸாம் பொலிசு! அந்தநாய்கள் வந்து என்னை என்ன பண்ணப்போறாங்க?'' வாசலைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தவளை உள் வாசலில் நின்று அணில் ஏறிவிட்ட குரங்குபோல் தவிப்போடு பார்த்துக்கொண்டு நின்றார் உதவி அதிகாரி.

நாட்கள் எப்படியோ நகர்ந்துகொண்டிருந்தன. இவள் பைத்தியம் ''நாகம்மா'' மட்டும் இரவு நேரங்களில் விழித்த விழி செருகச் செருக மூலையில் தூக்கி எறியப்பட்டவள்போல குந்திக்கொண்டே இருப்பாள்.

கிட்டங்கித்தெரு, ஓடைகளுக்கையும், கோட்டடி பின் பக்க வராந்தாக் களிலும், யாரும் இல்லாத நேரம் பார்த்து சுங்க இலாகா அரசமரத்தடி வளவுக்குள்ளும் இவளது ஆத்மா உறங்கிக்கொள்ளும். இவள் சுங்க இலாகா அரசமரத்தடியில் படுக்கவே அதிகம் விரும்புவதும் அரசாங்கக் காணியென்பதால் காமவெறியில் நாய்போல திரியிற கவாலியின்ர தொந்தரவு இல்லாம படுக்கலாம் என்ற பயப்பாடுதான்.

கனநாட்கள் கழிந்துபோனதால் கட்டியிருந்த பட்டுச்சேலையும் கந்தலாய்ப் போச்சு. நொந்து போனவளின் பரிதாபக் கோலத்தைப் பார்த்த பச்சாதாபத்தால் பறங்கித் தெரு, பறங்கி மனிசி கொடுத்த சீத்தச் சரமும், நீலநிற பப்பிலின் ரவிக்கையும், இரவு நேரக் காமப் பேய்களிடமிருந்து தன்னைத்தானே காபந்து பண்ணிக்கொள்ள ஒரு கறல் புடிச்ச கொடுவாக் கத்தியும், சோறு வாங்கிச் சாப்பிட நெளிஞ்ச அலுமினியக் கிண்ணியும், தட்டும், கோப்பையும் பழங்காலத்து கம்பளிப் போர்வையும், மியூசியத்தில் வைக்கப்படவேண்டிய வேடிக்கையான பொருட்கள். இவை அனைத் தையும் பூட்டிப் பாதுகாக்க ஒரு சாக்குப்பை இவைதான் இவளது தாய்வீட்டுச் சீதனச் சொத்து.

சிலநேரங்களில் விலைமதிக்க முடியாது இச்சொத்துக்களையும் களவு கொடுத்துவிட்டு அந்தரிப்பாள். பாவப்பட்ட ஜென்மத்தின் கோபமும் தவிப்பும் கண்கொண்டு பார்க்க முடியாத கோரணியமாகக் காட்சி கொடுக்கும். றோட்டெங்கும் அங்கும் இங்குமாக ஓடி ஓடி அவளது உள்ளக்கிடக்கை வெளிப்படுத்துவாள். வாயில் வந்த தூசண வார்த்தைகளால் ஏசுவாள். இந்நேரங்களில் இவளது கோபத்தைத் தென்றல் தாலாட்டுவது போல் பதமாக இதமாகத் தணிப்பாள் பறங்கித் தெரு பறங்கிமனிசி. இந்த இளகிய இதயம் தன்னிடம் உள்ளதைக் கொடுத்து ஆறுதல் சொல்லி அனுப்பும் போதுதான் அவளிடமிருந்து வேதனைப் புன்னகையும் புகைந்து செல்லும்.

இதைவிட மோசமான நாட்கள் மாதம் ஒருமுறை வரும்போது இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவனின் கோலத்தைப் பார்க்கமுடியாது? வீதியோர மனிசற்ற நாவில் 'இவள் என்றும் தேறமாட்டாள்' என்று முடிவுகட்டிவிடுவார்கள். அந்த நாள் முழுநிலவு நாளாகும். அவளது மேனியில் ஆடைகளும் அரைகுறை யாகிவிடும். அந்த நாள் இவளுக்கு விலக்கப்பட்ட விபரீத நாளாகும்.

உச்சச் சூரியன் உசிர வாங்கிக் கொண்டிருக்குது. கோட்டடி விராந்தைய விட்டு எழும்பி மாநகர சபை வழியாக அலுப்பாந்திச் சந்தியால திரும்பி நடந்தாள். மயங்கிய கண்களோடு, தலையும் சுற்றிக்கொள்ள நடந்தவளின் காதில் சிணுங்.. கிணுங் சத்தம் கேட்டதும் மெதுவாகத் தலையைச் சரிந்துப் பார்த்தாள். பித்தம்தலைக்கேறி சுக்குநூறாய் வெடித்திடும்போல் சுருட்டியது. அடிவயிற்றிலிருந்து எழுந்த நெருப்பு வெட்கையின் வேதனை யோடு காறித் துப்பினாள்.

''டேய்! பொறுக்கி. குடிகேடா - கோட்டு சூட்டுப் போட்டுத் திரியிறியா? சையிக்கிளில வேற சொகுசா சவாரி வாறயா?''

மெதுவா வந்த சைக்கிள் எத்தனை மைல் வேகம் உதைக்க முடிந்ததோ அந்தளவு வேகம் பாய்ந்தது. தலைதெறித்த பயத்திலும் மானத்த வாங்கிடப் போறாள். இவளா பைத்தியம் அந்தக் கச இருட்டிலயும் குறிப்பு வைச் சிருக்கிறாளே. இந்தளவு பயம் அவன் வாழ்நாளில் கண்டிருக்கமாட்டான். இனிமேல் இப்படியான இழிவுகெட்ட சமாச்சாரத்தில் பிரசன்னமாகவும் மாட்டான்.

நாகம்மா கதறிய கதறலில் கதிகலங்கிப் பக்கத்தில் லொறியில் வந்த ஓடுகளைச் சுமந்து வந்த பொம்பிள ''என்ன நாகம்மா ஏன் இந்தக் கத்துக் கத்துறாய்?''

''இதில சையிக்கிளில சிவத்தச் சேட்டோட போனானே அந்த அறுவானத் தெரியுமா உனக்கு?''

''யார் . . . இங்கின ஒருத்ரையும் காணயில்லையே.''

''அந்தக் காமப்பேய் பறந்திட்டு''

''சரி என்ன நடந்தது என்றாவது சொல்லேன்?''

''எளியவன் பொம்பிளப் பொறுக்கி, நேற்று இரவு கோட்டடி விராந்தை யில என்ர பாட்டில படுத்துக்கிடந்தேன். என்ன நேரமோ தெரியாது. குறுக்காலபோனவன் என்கிட்டவந்து தன்னோட இணங்கி வரும்படி தொந்தரவுபடுத்தினான். நான் மசிஞ்சு கொடுக்கயில்லை. இங்க பார், தாயே பார்! அந்த நாய் எப்படி விராண்டிப் பங்கப்படுத்தியிருக்கிறான். என்ன பாடுபடுத்தியிருக்கிறான்'' என்று முகத்தையும், கைகளையும் தூக்கிக் காட்டியபடி சொன்னாள். கண்களிலிருந்து பீறிட்ட பெரும் மழை இவ்வை யத்தையே அழித்துவிடும்போலிருந்தது.

கடும்புயல் வீசி அடங்கிய உணர்வோடு நின்றவளைப் பார்த்து ''நாகம்மா இப்படி எத்தனைப் படுபாவிகள் இந்த ஊரில உசிரோடு உசத்தியாக உசுப்பிக்கொண்டு திரியுதுகள்.''

''திரிஞ்சா எனக்கென்ன? என்னட்டத்தானே இந்தச் சேட்ட வாய்க்காது.''

''அதுதான் உன்னையே அந்த நாய்கள் மொய்க்கிறாங்க.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வரட்டும் இனி. வைச்சிருக்கிற கொடுவாக் கத்தியால கொளுவி இழுத்துவிடுகிறேன் பாரில்ல.''

''அப்படிச் செய் நாகம்மா; அப்பத்தான் திருந்துவாங்க.''

''சரி நீபோ. ஓட்டச் சுமந்துகொண்டு என்ர கவலையையும் சுமக்கிறே? நீ போ நான் போறேன்.''

ஓடு சுமந்தவள் நிலைகுத்தின பார்வையோடு ஒரு கை ஓட்டிலும், ஒருகை நாடியிலுமாக நாகம்மாவின் தைரியத்தை யோசித்தாள், ''இவளுக்கா பையித்தியம்?''

வாழவேண்டிய பருவத்தில் வாழ்க்கையைப் பறிகொடுத்து விரக்தியால் காய்ந்து சருகாகப் போன பெண்கள் மத்தியில் இவளும் ஒருத்தி. ஒரு பக்கம் ஆசை, ஒரு பக்கம் பயம். ஒரு பக்கம் வைராக்கியம், ஒரு பக்கம் எதிர்க்க முடியாத இயலாமை - இப்படி எத்தனைவிதமாக மனக் குமுறல் களுக்கு மத்தியில் இவள் போன்ற பெண்களின் வாழ்க்கைப் பாதை பயணமற்றுப் படுகுழிக்குள் தள்ளப்பட்டுள்ளது.

நெஞ்சு ஏக்கப் பெருமூச்சுக்களால் விம்மித்தாழ்ந்து எழ, சுங்க இலாக்கா சந்தியால் திரும்பி வழமையான வீட்டுவாசல் முன் வந்து நின்றாள். இவளிடமுள்ள பிடிவாதகுணம் - பிச்சையென்று வாய்திறந்து கேட்க மாட்டாள். சாப்பாடு வேணுமா நாகம்மா?என்றால் மட்டும் கிண்ணிய நீட்டுவாள். சோற்றை வாங்கிக்கிட்டு வாய்திறந்து பேசாமல் இரண்டு சொண்டையும் மூடியபடி ஒரு இழுப்பு மட்டும் இழுத்து விட்டுப் போயிடு வாள். இண்டைக்கு அந்தச் சேட்டைக்கு ஆள்ர மனசு மசியவில்லை?

''என்னம்மா நானும் தினமும் வாறேன். சோற்றத் தாரீங்க. ஒன்றுமே என்னட்ட நீங்க கேக்கிறீங்க இல்லையம்மா?''

வீட்டுவாசல் நிலையோடு சாய்ந்தபடியே இரு கைகளையும் கட்டிக் கொண்டு இலட்சணமான புன்னகையோடு தனக்கே உரித்தான இதழ் விரித்த பாலைச் சிரிப்போடு நின்றவள் ''என்ன நாகம்மா இன்றைக்கென்று உன்ர வாய் திறந்திட்டு?''

''ஒன்றுமில்லையம்மா என்ர மனச அரித்துக் கொண்டிருக்கிற கவலை களை யாரிடமாவது அள்ளிக் கொட்டிவிடவேணும் போலிருக்கு.''

''சரி என்னட்டக் கொட்டேன் உன்ர குழப்படிகளை.''

சின்னச்சிரிப்போடு ''என்ர குழப்படியில்லையம்மா
என்னைவிட்டகலாத குழப்பம்.''

''நாகம்மா, முதலில் இந்தப்படியில் இரு.''

நான் இங்கேய நிற்கிறேன். நீங்க இருங்கம்மா''.

அத்தாய் வீட்டுவாசல் விறாந்தையிலிருந்த ஈசிச் சேரை இழுத்து அமர்ந்துகொண்டாள். தன்னை ஒருமுறை கிரகித்துக்கொண்ட நாகம்மா தன் சோகக் கதையைச் சொல்லத்தொடங்கினாள். ''அம்மா நானும் இந்தச் சனங்களப்போல நன்றாகத்தான் இருந்தேன். என்ர அப்பன் அம்மா என்ன நல்லா வளக்கிறளவு சொத்துப் பத்து வைத்திருந்ததுகள். நான் வளர்ந்து வாறது அந்தச் சாமிக்கு புடிக்கலப்போல. என்னப் பெத்ததுகள் ஒன்றன் பின் ஒன்றாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரலோகம் போய்ச் சேர்ந்திட்டுதுகள்.'' இந்நேரம் அவளது இதய விம்மல் அத்தாயின் காதுகளில் கேட்டது. எச்சிலை உமிழ்ந்தபோது அவளுக்கு அவ்வேளைதான் தெரிந்தது தன் வாயினுள் அந்த உமிழ்நீரும் இல்லை என்று. இரக்கமுள்ள அத்தாய் தன் பிள்ளைகளில் ஒருத்தியைக் கூப்பிட்டுத் தண்ணீர் கொண்டுவரச் சொன்னாள். தண்ணீரைக் குடித்தவள் கண்ணீரைக் காணவில்லையே என்பதை உணர்ந்தவளாய். ''அம்மா'' என்று குழந்தை யைப்போல அழத்தொடங்கினாள். விம்மல் மேலிட அதன்பிறகு ''அம்மா வோட ஆச்சிதான் நேசத்தைக்கொட்டி இந்த மட்டும் வளர்த்தது. தன்ர ஆயுள் போவதற்குமுன் எங்கேயோ கிடந்த அறுவானுக்குக் கல்யாணத்தையும் கட்டிவைச்சுது. அந்தக் கிழவி இருக்கும் வரைக்கும் என்ர சொத்தப் புடுங்கிற நரிக்குணத்தோடு நல்லாத்தான் இருந்தான். நானும் அவன் சொல்லிறபடி யெல்லாம் ஆடினேன். என்ன மாயாஜாலம் பண்ணினானோ அவன் விரும்பியபடி சொத்த தன்ர பெயருக்கு எழுதித்தரும்படி ஒருநாள் வந்து நாண்டு கொண்டு நின்றான்.''

இந்நேரம் இடைமறித்த அந்தத் தாய் கேட்டாள், ''ஏன் நாகம்மா என்ன ஏதுக்கென்று நீ ஒன்றும் வாய்திறந்து கேக்கயில்லையா?''

''கேட்ட நானம்மா.''

''அப்ப உன்ர புருஷன் என்னதான் சொன்னான்?''

''உறுதிய ஈடுவைத்து காசு வாங்கிப் பெரிய தொழிலாச் செய்யப்போறேன்'' என்று கெஞ்சிக் கொண்டு நின்றான்.

''உன்ர ஆச்சி அயலவங்கட்ட ஒன்றுமே கேக்கலியா?''

''இல்லையம்மா, நம்மட புருஷன்தானே நமக்கெங்க பிழவிடப் போறான் என்ற பயபக்திதானே?''

இந்தச் சமயத்தில் உள்ளிருந்து ஒருகுரல், ''அம்மா தேத்தண்ணி குடிக்க வாங்க.''

அங்கிருந்தபடியே ''எனக்கு வேணாம். நீங்க குடியுங்கோ எனக்கு நாகம்மா சூடான பானம் தந்து கொண்டிருக்கின்றாள்'' என்று குரல் கொடுத்துவிட்டு நாகம்மாவின் எரிமலையான விழிகளைப் பார்க்கச் சகிக்காமல் சற்று எழுந்து நிமிர்ந்தவள் ''என்ன நாகம்மா இன்னும் மிச்சமிருக்கா?''

''அம்மா என்ர சோகக் கதையின் கடைசியையும் சொல்லிவிட்டால் என் மனசு லேசாகிவிடும் என்று நினைக்கிறேன்.''

''சரி நாகம்மா உன்ர குடும்பக்கதையைத் தொடங்கு.''

''கையெழுத்துப் போட்டுக்கொடுத்து கொஞ்ச நாளால என்ர ஆச்சியும் எனக்குப் 'புள்ளபுறக்காது' என்று டாக்குத்தரம்மா சொன்ன துக்கத்தப் பொறுக்கமாட்டாமலே யோசிச்சு... யோசிச்சு அந்தக் கிழவியும் உசிர விட்டுட்டு. என்ர புருஷனுக்கும் புழுகாப்போச்சு. என்ர பிராணனை வாங்கத் தொடங்கிவிட்டான். ஒரு நாளா, இரண்டு நாளா? ஒரு வருஷமா, இரண்டு வருஷமா? அவனோட வாழ்ந்த நாள்முதல் நரகவேதனை அனுபவிச்சேன் அம்மா.''

இந்நேரம் அவர்கள் முன் தபால்காரன் வந்து நின்று சைபிக்கிள் பெல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தான். உசும்பவில்லை அவர்கள். ''தந்தி வந்திருக்கு உங்களுக்கு'' என்றும் கூப்பிட்டுப் பார்த்தான். அவர்கள் அசையாது சோகக்கதையில் சோபிழந்து நின்றார்கள்.

திரும்பவும் பெலனாகப் பெல்லை அடிச்சான்.

திடுமெனத்திரும்பிய பார்வையில் ''என்ன தந்தியா?'' என்று கேட்டபடி அவன் கிட்டப் போனாள் தாய். கையெழுத்துப் போட்டுத் தந்தியை வாங்கிவிட்டு நாகம்மாவைத் திரும்பிப் பார்த்தாள். நாகம்மா சோற்றுக் கிண்ணியப் பார்த்தபடித் தன் வழமையான பாடலைப் பாடத்தொடங்கினாள் ''பசி பொறுத்தாலும் பாட்டுப் பொறுக்குமா? பொன்னான வாழ்வு மண்ணாகிப் போனால் துயரம் இதுதானா? இந்த உலகம் இதுதானா?'' பெலமாகப் பாடி அசைந்து ஆடியவள் றோட்டாலப் போற மனிசற்ற பார்வையைச் கூர்ந்து கவனித்தாள். திரும்பவும் தான் கையில் வைத்திருந்த சோற்றை அள்ளித் தின்றபடித் தன் மாளிகை வந்து சேர்ந்தாள்.

கதிரவன் கண் தூங்க அவளது அரண்மனை அரசமரத்திற்குள் மறைந்து கொண்டிருந்தான். முதல் சோ படம் முடிஞ்சு ரசிகர்கள் வரும் நேரும். அரசமரத்தடியின் கீழ் நேர்முகக் கற்பழிப்புக் காட்சி மிகவும் கொடூரமாக அரங்கேறிக் கொண்டிருந்தது!.

''ஐயோ . . ஐயோ என்னைக் காப்பாற்றுங்கோடா! தொலைஞ்சு போவானே, என்னை விடடா. . ''

''எடியே உனக்குக் காசு தாரன்ரி. நல்ல சேலை வேண்டித் தாரன்ரி''

''இன்டைக்கு என்னோட படன்ரி.''

''சண்டாளப் பாவி, எனக்கேன்ரா ஒன்ர காசெல்லாம்? உன்ர மனிசிய யாரோட விட்டுட்டடா என்னட்ட வந்தனீ?''

அவளுடைய கதறல் ஊரே அதிரும்படியாக முழங்கிற்று. படம் முடிந்து வந்த சனங்களின் காதுகளையும் துழாவிக் கொண்டது. சனங்களின் காலடிச் சத்தம் 'ஆசாமியின்' காதுக்குள் ரீங்காரமிட்டது. வெறி அடங்கி மனப்பயம் பலமாகத் தொட்டுக்கொண்டது. திமிறிப் பாய்ந்து ஓடத் தொடங்கினான். அவளும் தன் பலம்கொண்ட பிடியால் அவனது தேகத்தை இறுகப் பிடித்து இழுபட்டுக் கொண்டு கத்திக் குளறினாள்.

நாலா பக்கத்தாலும் சனம் மொய்த்துப் பிடித்தது. பலரது கைகள் கூட்டத்தோடு கூட்டமாக அடி-பிடி படிமானங்கள் யூடோ, கராட்டி என அவன் தேகத்தைப் பதம் பார்த்தன. உயிரறுந்த வெட்கத்தோடு அறுத்துவிட்ட ஆமையட தலையாட்டம் அவன் தலை தொங்கிக் கிடந்தது. கூட்டத்தில் நின்றவருள் ஒருவன் அவன்ர நாடியப் பிடிச்சு உசத்தினான்! சுற்றி நின்றவர்களின் மூச்சு உறிஞ்சிய சத்தம் அடைபட்ட வாய்க்கால் தண்ணி உடைபட்டு ஓடியதுபோல் இருந்தது.

''டேய் நீயா?'' என்றான் ஒருவன்.

''நம்ம வாழைப்பழ ஆறுமுகம்!'' என்று பெயர் சொன்னான் இரண்டாமவன்.

''ஏன்ரா! உன்னட கிளிக்குஞ்சு மனிசி எங்கேடா?'' என்று கேள்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டான் மூன்றாமவன்.

''அட பொறுக்கி, காசுயுள்ளனிதானே? வேறு எங்காவது போறது தானே?'' என்று நியாயம் பிளந்தான் நான்காமவன்.

சனம் வாழைப்பழ ஆறுமுகத்தின் மேல் வைத்திருந்த மதிப்பு, மரியாதை, அன்பு எல்லாம் காமவெறியில் ஒரு நொடிக்குள் களங்கப்பட்டுவிட்டது.

முகம்கொள்ள முடியாது ஏச்சும் பேச்சும் இதயத்தைக் கனக்க வைத்ததும் ஒருவகையான பயத்தைரியம் ஆறுமுகத்துக்கு வந்தது. திமிர் கொண்டடிச்சுத் தன்னை விடுவித்துக்கொண்டான். தலைகுனிந்தபடியே நாக்குத் தெறித்த ஓட்டம் எடுத்தான். மனசின் அடி நாளைய செய்தித்தாள்களின் தலைப்புச் செய்தியாவதை எண்ணி நெக்குருகியபடி ஊரைவிட்டே போய்க் கொண்டிருந்தான்.

நாகம்மா தன்னுடைய மனச ஆற்ற கலிர்... கலிர் என்று வாய்கிழியச் சிரித்தாள். அச்சிரிப்பின் எதிர்த்தாக்கம் 'மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல மாதரறிவைக் கெடுத்தார்' பாரதியின் கானம் பெண்வர்க்கத்தின் பெருமை யினைப் பேரிடிபோல முழங்கிற்று.

தேகத்தின் அலுப்பு வேதனையை வேண்டிக் கொண்டது தொலை வானின் தொல்லையால், பயத்தால் 'மாசக் கழிவும்' வந்தது. அவள் உடுத்தியிருந்த சரமெல்லாம் ஊறியிருந்த காட்சி 'பற்றி' சீலையாட்டம் காட்சியளித்தன. பசியும் களைப்பும் கண்ணை மறைத்துக் கொள்ள வழமையான வீட்டுவாசல் முன்வந்து நின்றாள்.

''அம்மா'' என்று கூப்பிட்டபடியே கதவைத் தட்டினாள்.

கதவைத் திறந்ததும் நாகம்மாவின் கோலம் மனசுக்கு சங்கடத்தைக் கொடுத்தது.

''இது என்ன கோலம் உனக்கு வெட்கமில்லையா?''

''என்னட்ட என்ன இருக்கம்மா வெட்கத்திற்கும் துக்கத்திற்கும்?''

''முதலில் அந்த ஓடையால உள்ள வா சாறி தாறேன் மாத்து. மிச்சத்த பிறகு கதைப்போம்.''

உள்ளே போனவள் வாயில்சாறி உடுத்தியதும் தன் சரத்த ஒரு பொலித்தின் பைக்குள் திணித்தபடி வெளிவந்து திரும்பவும் வாசல் முன்பாக இரு கைகளையும் நெஞ்சை மறைக்க நின்றுகொண்டாள். ''என்ன நாகம்மா உன்ர அரண்மனைப் பக்கம் சனத்தட சத்தம் கலாம் புலாம் என்று இருந்தது நேற்றிரவு முழுவதும்?'' கேள்வியில் இரக்கம் மேலிட்டிருந்தது.

நெஞ்சிலிருந்த கைகள் இரண்டும் மேலெழுந்து ஓசையெழுப்பச் சிரித்தபடி ''அந்த முஸ்பாத்திய ஏன்கேக்கிறீங்கம்மா? வழமையான சேட்டைதான்.''

''யாரோட நாகம்மா?''

''வேறு யாரோட? நம்மோடதான்''

''அடப்பாவமே அந்தப்படுபாவி யார் நாகம்மா?''

''வேறு யாருமில்ல. நம்மட சின்னக் கடைக்குள்ள வாழைப்பழம் விற்கும் ஆறுமுகம்தான்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பார்த்தா நல்ல மனிசனாச்சே?''

''நல்ல மனிசன்தான் வசமா மாட்டிக்கிட்டார். ஆசாமி படம் முடிஞ்சு வந்த சனத்தட்ட குடு... குடுவென்று குடுத்துக் கலைச்சிட்டாங்க.'' மேலும் குலுங்கிச் சிரித்தாள். அச்சிரிப்பில் பெரிய வேதனை வெந்து கொண்டிருந்தது.

''நாகம்மா நீயேன் அங்கெல்லாம் கிடந்து அவலப்படுகிறாய்?''

சற்று நேர மௌனத்தின் பின்பு... ''என்ர வீட்டில் வந்து இருக்கிறீயா?''

முழிகள் பிதுங்க ''அம்மா... தாயே உங்களுக்கேன் இந்தக் கடவுள் குணம்? நான் பைத்தியம் பைத்தியமாகவே இங்கின... அங்கின கிடந்து செத்துப் போயிடுறேன் தாயே.''

இதயத்தில் விழுந்த கீறலைக் காட்டிக்காமல் அந்தத் தாய் ''அது சரி நாகம்மா உன்ர மிச்சக் கதையைச் சொல்ல இல்லையா?''

''என்னம்மா? எரியிற நெருப்பில எண்ணெய்யை ஊத்துறீங்களா?''

இடைமறித்தவள் ''உன்ர துன்பத்திற்கு எண்ணெய் ஊற்றவில்லை... நீ விரும்பினால் சொல்லு?''

நளினத்திலும் நசிந்த சோகச் சிரிப்போடு ''உங்கட்டச் சொல்லாமல் வேறு யாரட்டயம்மா என்சோகச் சுமைய இறக்கப்போறேன்?''

''பிறகென்ன? அந்த ஓடுகாலி பெரியாஸ்பத்திரியில் வேலைசெய்த நேர்ஸ் அந்தத் தொறயோட தொடர்பு வைச்சிட்டான். என்ர வீட்டிலயே கூட்டிவந்து குடியும் குடித்தனமும நடத்தத் தொடங்கிட்டான்.'' இந்த நேரம் முட்டிநின்ற கண்ணீர்க் குண்டுகள் அவள் நெஞ்சின்மேட்டில் விழுந்து அழுதன. மூக்கால வழிஞ்ச சளியை விரல்களைக் கூட்டி இழுத்தெறிந்து விட்டுத் திரும்பவும் கதையைத் தொடர்ந்தாள். ''அயல வரட்ட நாகம்மாவுக்கு புத்தி சுவாதீனம் என்று பெரும் பொய்யைப் போட்டு வைச்சான். அது என்ர வாழ்க்கையில் மெய்யாகவே போயிற்று. வீட்டில் இருக்க நரகத்தில் இருப்பதுபோல் இருந்தது. என்ர மனச்சாட்சியைக் கொன்ற பாவிய விட்டு வெளிய வந்தேன். அன்று தொடங்கி வீதியே வீடாப்போச்சு.''

இரங்கு தொனியில் ''உன்ர ஊர் எங்க நாகம்மா?''

''சுழிபுரம் சுண்டல் மச்சான் என்றால் சின்னக் குழந்தைக்கும் தெரியும்.''

''ஏன் இந்தப் பெயர் வந்தது?''

''என்ர அப்பன் வைச்சிருந்த தேத்தண்ணிக் கடையால வந்தது. அதில சுண்டல் விற்றாராம். அது நல்ல ருசியாம் என்று என்ர ஆச்சி சொல்லித்தான் எனக்கும் தெரியும்.''

''நாகம்மா உனக்கு இதெல்லாம் ஞாபகமாக இருக்குத்தானே! ஏன் உன்ர ஊரோட போய்ச் சேர்ந்து வாழக்கூடாது?''

''அம்மா எனக்கு அந்த ஊரும் புடிக்கல. அந்தக் குடிகேடன் உசிரோடு இருக்கும் வரைக்கும் அங்கு போகவும் விருப்பமில்ல. பைத்தியமாகவே வெளிவந்த நான் பைத்தியமாகவே செத்துப் போயிடுறேன். கண்ட கண்ட நேரமெல்லாம் சாவைப்பற்றிய நினைப்புவரும். அதனை நினைச்சுச் சிரிப்பேன். என்னடா பைத்தியம் பகுத்தறிவோடு பக்குவமாகக் கதையளக் கிறாள் என்று யோசிக்கிறீகளா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இல்லை நாகம்மா உன்ர கதையைக் கேட்பது, உன்னப் பார்ப்பதும், உனக்கு உதவுவதும் இன்றோடு முடிஞ்சுது...''

''ஏனம்மா? நான் ஏதாவது தப்புப் பண்ணியிற்றேனா?''

''இல்லை நாகம்மா நேற்று வந்த தந்தி உனக்குத் தெரியும்தானே? நாங்கள் எல்லாரும் லண்டனுக்குப் போறத்திற்காக நாளைக்கு கொழும்புக்குப் போறோம்.'' என்றவாறு வராந்தாவிலிருந்த கதிரைமேல் கிடந்த பையை எடுத்து நீட்டியபடி ''இந்தா நாகம்மா இதில உடுப்புகளும் போர்வையும் வைச்சிருக்கிறேன்'' என்றாள் அந்தத் தாய்.

தலைமேல் விழுந்த ஷெல் தாக்குதலால் வாய் திறக்க முடியவில்லை! வாழ்க்கையில் விழுந்த வேதனைத் திரையால் இடைவெளி நிரப்பப் பட்டு விட்டது. துடித்துப்போய் நின்றவள் குழந்தையாட்டம் ''அப்போ நீங்க சீமைக்குப் போறீங்களா? இந்த வானத்தால பறக்குமே அந்த ஏரோப்பிளேனில் போறீங்களா?''

துக்கம் தாங்காமல் ''ஆமாம்... அதில்தான். அதுசரி இனிச் சாப்பாட்டுக்கு என்ன செய்வாய்?''

இக்கேள்வியில் மௌனமான அவளது குறுகிய கவலை மிகுந்த பார்வை அத்தாயின் மனசுக்கு என்னமோ போலயிருந்தது. கண்ணீர் விடவும் வெட்கமாகப் பட்டது. திரும்பிய அவளது கண்கள் அந்த ஆத்மாவின் பாவசங்கீர்த்தனத்தைக் கேட்டுக் கொண்டே நின்றது.

அவள் சிரித்தபடியே ''அம்மா நீங்கள் இடைஞ்சல் இல்லாம போய்ச் சேருங்கோ. என்ர வாழ்க்கை இன்றோ நாளையோ தெருவோடு போயிடும். நாலுபேர் தூக்கிச் செல்லவும் வழியற்று நாய் தின்னும் இப்பிணத்தைப் பற்றி ஏன் கவலைப்படுறீங்கள். அம்மா நீங்க போயிற்று வாங்க... நான் போறன்!''

வாசலோடு நின்ற தாயின் இரக்கத்தின் தாற்பரியம் மனசுக்குப் பாரமாக இருந்தது. விம்மியெழும் அழுகையையும் அடக்கிக்கொண்டவள் ''அடுத்த பிறப்பிலாவது இவள் அனைத்துச் செல்வங்களோடும் ஆனந்த மாக வாழட்டும்'' என்று மனசார நினைத்துக் கொண்டாள்.

நாள் போகப் போக அவள் உடம்பு உருமாறிக் கொண்டுவந்தது. வீதியால் போறவாற மனிசரயெல்லாம் கூர்ந்து... கூர்ந்து வெறுப்பாகப் பார்த்தாள். அவள் கால்களும் புரையோடிப்போன புண்களின் வேதனையால் வலுவற்றுப் போனது. அடிவயிற்றிலிருந்து வாய்வரை தினம் தினம் ஏதோ ஒரு கனம் வந்துவந்து அடைப்பதுபோல இருந்தது. பசியெடுக்கும் போதெல்லாம் எச்சிலைக் கூட்டி விழுங்கி விழுங்கி நாள் தப்பாது சாப்பாடு போட்டுவந்த அந்தப் புண்ணியவதி வாழ்ந்த வீட்டைத் தினம் தினம் வெறிச்சோடிய கண்களால் நோக்கியபடி நொந்து கொள்வாள். வாழ்க்கையில் அழுவதற்காகவும், அலைவதற்காகவும் வாழ்ந்து வாடி வதங்கிய அவலமாக ஆத்மா ஒடிஞ்சுபோய்த் தன்னுடைய அரசமரத்தடி அரண்மனைக்குள்ளே ஒதுங்கிக் கொண்டாள்.

மஞ்சள் வெய்யில் நேரம் அவள் காதுகளை பயங்கர இடிமுழக்கங்கள் இருப்புக் கொள்ள முடியாதவாறு அவலப்படுத்தின. இருப்புக்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாமல் எழுந்து துவண்ட கால்களுடன் அடிவயிற்றை இறுகப் பிடித்தவண்ணன் வீதிக்கு வந்தாள். வீட்டிற்குள்ளிருந்த சனமெல்லாம் வீதியில் விழுந்து விழுந்து தலைதெறிக்க ஓடிக்கொண்டிருந்தார்கள். சனத்தோடு சனமாக ஓடிக் கொண்டிருந்த பறங்கிமனிசி நாகம்மா மேல் இரக்கப்பட்டவளாய் ''நாகம்மா நீயேன் இதில் நிற்குறாய்?''

''அந்தக் கட்டையில வேகுற ஆமிக்காரன் ஷெல் அடிக்கிறான். எங்காவது ஓடிப் பதுங்கடி.''

அவள் சிரித்தாள். ''நான் ஏன் ஓடவேண்டும்? என்ன வாழ்வுக்காக ஓட வேண்டும்?''

இப்போது யார் பைத்தியம்? தைரியமாக வாழ்ந்த உங்களாலேயே ஓடிமறைஞ்சு வாழமுடியவில்லை. என்னால் முடியுமா? ஷெல் ஒவ்வொன்றும் விழ... விழ... கொல்லென்று சிரித்தாள் சிரித்துக் கொண்டே நின்றாள்... அந்தச் சிரிப்பொலி அடங்கிவிட்டதா?

●

தினகரன்
01.11.1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளித்தட்டு

சோழகக் காற்றின் வேகம் வெட்கையான புழுக்கத்தோடு கைகோர்த்து நின்றது.

ஊர்வீட்டு வளவுகளில் தென்னைகளும், வேம்புகளும், வேலிப் பூவரசுகளும் சோர்வை முறிக்கின்றன. எதிரிப்படை வான்கழுகுகளின் எச்சங்களின் கந்தக நெடிப்பின் புகையினுள் போர்த்தப்பட்ட வளங்கள் புல்பூண்டுகள் இரண்டு ஒன்றாகத் தலைக்காட்டுகின்றன. வீதிக்கு வருவோர் நெஞ்சை நிமிர்த்தி நாரிய அமர்த்தி ஜீவ களையற்றவர்கள் சிறிசாகப் புன்னகை சிந்திடப் பேசுகின்றார்கள். அவர்கள் தலைகளோ சூப்பி எறிஞ்சு ஆடி மாதத்து வெய்யிலில் காய்ந்த பனங்கொட்டைத் தும்பாய் வரண்டு கிடந்தன தலைமயிர்கள். பசிக் களைப்பும், பயமும், பதற்றமும் நிறைந்த சனங்கள் கனதியாகத் தலைகாட்டி வீதிகளெங்கும் நடந்து மறைந்து செல்கின்றனர். தொடரான ஷெல் சத்தங்களும், விமானக் குண்டு வீச்சுக்களும் அடங்கியிருந்த சமாதானப் பேச்சுவார்த்தை நேரம்.

இளம்வட்டங்கள் தங்களுடைய விளையாட்டுகளுக்குத் தூது கொண்டு செல்ல உடைந்துகிடந்த வீடுகள்-பதுங்கு குழிகளிலிருந்து சின்னக் குருவிகள் சிறகடித்துப் பறக்கின்றன. பெரிய பறவைகள் குஞ்சுகளுக்கும் தங்கள் தேவைகளுக்கும் இரைதேடி ஒட்டி ஒடுங்கிப்போன அடி வயித்தைப் பிடித்து நகர்கின்றனர். இளவட்டங்கள் அமைதியில் விழித்த விழிப்பு தங்களுடைய வீர விளையாட்டுக்கு ஏற்பட்ட களிப்பான பெருமூச்சு காற்றோடு கலந்திட நிற்கின்றனர்.

ஊரில் விசாலமான ஒழுங்கை, பலகாலம் பாய்ந்து சுதந்திரமாக கிளித்தட்டு விளையாடிய ஒழுங்கை. நீண்டு அகன்ற அந்த ஒழுங்கை மணல்பரப்பில் பாதத்தால் இழுத்தமைய மூன்று தட்டுக்கோடுகள் கீறி முடிந்ததும்.

வேலிப் பூவரசோடு சாய்ந்தான் பாலன். சிறிதுநேரம் தட்டுக் கோடுகளை வெறிச்சோடிப் பார்த்தான்.

''இண்டைக்கு இத்தன பேராவது வருவாங்களாடா தாசன்?'' என்றான்.

அவனும் பதிலுக்கு ''வந்தாங்களென்றால் விளையாட்டுத்தான்.''

எழும்பிய ஏக்கத்தோடு பாலன் யாரையோ எதிர்பார்த்தவனாய்த் தன் பார்வையைத் திருப்பினான்! தாசன் அவனைப் பார்த்துச் சிரிச்சான்.

மனம் ஒன்றையும் கண்கள் ஒன்றையும் தேடி அலைக்கழித்த மனமாக இருந்த பாலனைத் தட்டினான் தாசன்.

திடுக்கிட்டவன் ''என்னடா பாலன், எல்லாரும் வந்திட்டாங்களா?''

''அது கிடக்கட்டும், நீயென்ன தண்ணிப்பைப்பையே கண் வெட்டாமல் பார்த்தபடி இருக்கிறாய்?''

வெட்கத்தோடு ''உனக்குத் தெரியாமக் கேக்கிறாய்?''

தேன்கூட்டு ஈக்கள் போல் ஒவ்வொருதரும் வந்து அவன் பக்கத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குந்திக்கொண்டார்கள். பாலன் வந்து குந்துபவர்களைப் பார்த்துப் பல்லிளிச்சு விட்டுப் பார்வையை பைப்படி நோக்கித் திருப்பினான்.

''என்னடா மச்சான்! இன்டைக்கு இவ்வளவு பேர்தானா?'' சலிப்புடன் கேட்டான் யோசப். பாலன் மௌனித்திருந்தான்.

அவனது தோள்மூட்டைப் பிடிச்சு உலுப்பியபடி ''நீதான்ரா தாச்சி. உன்ர பக்கத்து ஆட்களாவது வருவார்களா?'' என்றான் தாசன்.

''உன்ர பொன்னான வாயைத் திறவன்ரா பாலன்'' என்றான் பெரியவன். திரும்பவும் அவன் தோள்மூட்டை உலுப்பிவிட்டு பயத்தோடு நகர்ந்தான் பெரியவன்.

ஆத்திரத்தோடு எழுந்த பாலன். ''உங்கட ஆட்களையே இன்னும் காணயில்ல. ஏன்ரா என்ர பக்கத்து ஆட்களப் பத்திக் கேக்கிறா?''

பாலனின் பதகழிப்பு யாற்றையோ தரிசனத்தின் பாவமாகயிருந்தது. ''ஏன்ரா, எங்கடபக்கம் சைலாதானே இன்னமும் வரவேணும் யோசப்.''

''அந்தா அவளும் ஓடி வாறாள்'' என்றான் தாசன்.

இளம்சிட்டாய்ச் சிறகடித்துப் பறந்துவரும் பச்சைக் கிளியை இமை வெட்டாது பார்த்தவண்ணம் நின்றான் பாலன்.

''டேய் மச்சான் நாங்கள்தான் தட்டுக்குள் இறங்கிற பக்கம். நீங்கள் தட்டுக் காக்கிற பக்கம்'' என்றான் பாலன்.

''இது என்ன முறை?'' என்றான் பாலன்.

''இந்தா, காசு சுண்டு யாருக்கு அம்மா விழுகுதோ அவங்க இறங்கட்டும்'' என்றான் யோசப்.

''முறைய ஏன் மாத்திறீங்க. இங்க கொண்டா காசை நான் சுண்டுறேன்.''

காசு, பொதுவானவர் ஒருவரால் சுண்டப்பட்டது.

பாலன் அம்மா கேட்டான். அவன்பக்கமே அம்மா விழுந்தது. திரும்பி அங்குமிங்கும் பாத்தவன் ''என்னடா தாசன் ஆட்கள் கூடியிருக்கு?''

விழிகள் மேலெழும்பப் பார்த்துவிட்டு ''கூடினால் என்ன? தட்டைக் கூட்டினால் போச்சு'' என்றான் தாசன்.

நடு வெளியில் கிடந்த நாய்களத் துரத்த கல்லெறிகள் விழுந்தன. சுருண்டு கிடந்த நாய்கள் குரைக்க இசக்கமற்று அடித்தொண்டையால் அலறின. கல்லெறியத் தாங்கமுடியாது ஒட்டிய வயிற்றைச் சுமந்து, எலும்புகள் புறப்பட ஓட இசக்கமற்றதுகள் வேலியோரமாய்ச் சுருண்டு விழுந்தன.

மேலும் பாதத்தால் அமைக்கப்பட்டிருந்த அதன் அகலப் பக்கத்திலிருந்து மற்றோர் அகலப் பக்கத்திற்கும் நட்ட நடுவில் நெடுக்காகவும் ஒரு தவணைக் கோடுகள் இழுக்கப்பட்டன. அதன் பாத்திகள் நாற்கோணமாய் அமையுமாறு அந்தந்தத் தவணைக் கோட்டிலிருந்து குறுக்காகத் தட்டுக்கோடுகள் இழுக்கப்பட்டன. மேலும் அணியினர் எண்ணிக்கைக்கு ஏற்பத் தட்டுகள் பாதத்தால் இழுத்தமைத்தனர்.

புழுதி கிளம்புகிறது. ஒழுங்க வெளியில் நின்றவர்கள் முகத்தில் புளுகும் பழுதில்லாப் புன்னகையும் வீசிநிற்கின்றன. தேகம் எங்கும் ஒட்டிக்கொள்கின்றன. சந்தனமாக அவர்கள் அதைத் தழுவிக்கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி இன்னும் என்ர மனசவிட்டு அகலவில்லை.

விளையாட்டுத் தொடங்கியது தட்டுப்புகுதல் பக்கத்தின் தாச்சியாக நின்றான் பாலன். கிளி விளையாட்டில் படுசூரன். மூலை குத்திப் பாய்வதில் பாலனை வெல்ல யாருமே இல்லை. எதிரணியைத் தோற்கடிப்பதிலும், அவன்ர பக்கவெற்றிக்கு வீரனாவன். அவனது சாதுரியத்தில் எதிரணியினர் மிகவும் சங்கடமும் படுவார்கள்.

தட்டுக்குள் இறங்குபவரை மேற் செல்லவிடாது தட்டுத்தடுத்தல் பக்க அணியினருடன் விளையாடினாள் சைலா.

பாலனும் சைலாவும் பள்ளிக்கூடக் காதலர்கள் என்றுதான் சொல்ல லாம். அவர்கள் இளமையான நினைவுகள் மேலும் தொடர்கின்றன.

கிளித்தட்டில் மூன்றாவது தட்டுமறித்தல் கோட்டில் நின்றாள் சைலா.

''டேய் பாலன், உன்ர விளையாட்டைக் காட்டடா'' என்றான் மரியான்.

''கிளி இறங்கினால்தான் நமக்கு மரியாதை'' என்றான் ஜெயந்தன்.

''இந்தப் பொட்டச்சிகள் கூடின பக்கத்தில் தோத்திட்டா நமக்கு மரியாதையில்ல!'' என்றான் பாலன்.

''ஓமடா ஓம். நீங்க கவனமாக வெருட்டிப் பாயுங்கடா'' என்றான் யோசப்.

''ஜெயந்தா, நீ என்னோட வரப்பார்.''

''டேய் மச்சான் தாச்சி வாரான்ரா நடுக்கோட்டால.''

ஜெயந்தனின் கையைப்பிடிச்சு இழுத்து தன்ர நெஞ்சோடு சேர்த்துக் கொண்டான் பாலன். இரண்டாவது தட்டுக்குள்ள நின்ற பாலன் மூன்றாவது தட்டுக்குள்ள ஏறிவிட்டான். அவனைத் தடுத்து நின்றாள் சைலா.

சிறு இடைவெளி நேர்ந்தாலும் அவன் தப்பியிடுவான் என்ற பய வைராக்கியம் அவள்ர மனசத் தொட்டது. ''இப்பப்பார் அவனைத் தொட்டு தோற்கடிக்கிறேன்.'' என்ற வீராப்போடு அங்குமிங்கும் அசைந்து நின்றாள் சைலா.

பாலன் இருபுற நெடுவரம்புக் கோட்டிற்கப்பால் கால் வைக்காமல் நடுவரம்புக்கோட்டால் ஓடிவரும் தாச்சியின் பாச்சலைக் கவனித்து நின்றவன் சைலாவின் கண்களுக்குள் தன்னைப் பார்த்தான். இருவர் மூச்சும் முகத்தில் பட்டு காதல் சுகராகம் பாடியது. மனங்கள் இரண்டும் மயக்கும் மாலைத் தென்றலின் தெள்ளு தமிழின் இனிய இன்ப பாவத்தில் துள்ளும் உள்ளமாய் உணர்த்தி நின்றன. விழிகள் பாடிய கதைகள் காற்றில் கலந்தன சொற்ப நேரத்தில்.

''டேய் பாலன், நான் கிளி இறங்கியிற்றேன்... கிளி இறங்கியிற்றேன்'' என்றபடி கைதட்டிக் கரகோசம் செய்தான் ஜெயந்தன்.

பாலன் சைலாவைப் பார்த்தான். அவள் இதழ் திறந்து இனிதான புன்னகை சிந்தினாள்.

''இதுகளப் பார்க்கிறப்போ எவ்வளவு சந்தோசமாகயிருக்கு. எங்கட அயலட்டப் பொடி, பொட்டைகள், சிறுசுகள்கூட நின்று ஆசையோடு பார்க்குதுகள். இந்தப் பேச்சுவார்த்தை இப்படியே நீடிச்சு நல்லபடியா முடிஞ்சுது என்றால் அந்த சந்தோசத்தில் சனமெல்லாம் மறுபுறப்பெடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்வடைவார்கள். இல்ல, இந்த விடிவிற்கும் வெள்ளிடி விழுந்தவன் அந்த அழிவான் எப்ப தலையிடியக் கொடுக்கப் போறானோ தெரிய யில்ல. பேச்சுவார்த்தையென்று எங்கட பொடியங்களும் அமைதியாகப் போச்சாங்க. இந்த வெளியில நாங்க ஆடாத ஆட்டமா? கிளித்தட்டு, கிறிலுப்பு, விளையாட்டு என்று விளையாடிக் களைச்சுப்போன நாட்கள் இப்ப நினைச்சாலும் வெட்கமாக இருக்குது'' புறுபுறுத்தபடி அங்கு மிங்கும் தொட்டுத் தொட்டு கிளித்தட்டுப் பின்பக்கமாக வந்து வேலி யோடுகிடந்த தென்னங்குத்தியில் குந்திக் கொண்டாள் செல்லக்குட்டி ஆச்சி.

''டேய் பாலன் நான் கிளி இறங்கியிற்றேன்.''

வென்றவர்கள் திரும்பத் திரும்பத் தட்டுப் புகுதல் முறை இரவும் கும்மிக்கொண்டு வந்தது. ஆங்காங்கு வீட்டு விளக்குகளும் கண் சிமிட்டு கின்றன. விளையாடி வென்றவர்கள் தோற்றவர்கள் பலவித குற்றம் குறைகளை விவாதம் புரிந்தபடி கலைந்து செல்கின்றார்கள்.

இரவின் பிடியில் சிக்கிக்கிடந்த ஆதவன் தன் வல்லமை அனைத்தையும் எதிர்த்து எழுந்து வருகின்றான். பாலனும் ஜெயந்தனைப் பார்த்தபடி வாசக சாலை வாங்கில் இருந்தான்.

அவன் வரவுகண்டதும் எழுந்து நடந்து சந்தி திரும்பிக் கல்லூரி போவதற்கான றோட்டின் நேர் எதிராக நின்றான். பாலனை முட்ட வந்தவன் முகம் கப்பிய கவலையோடு காணப்பட்டான்.

''என்னடா ஜெயந்தன் ஒரு மாதிரியா இருக்கிறாய்?''

''உனக்கு விசயம் தெரியாதாடா? அரசாங்கத்துக்கும் நம்ம பொடியங் களுக்கும் இடையில நடந்த பேச்சுவார்த்தை முறிஞ்சுட்டாமடா.''

''அப்ப திரும்ப இந்த அழிவான் குண்ட, ஷெல்ல அடிக்கப் போறான் என்று சொல்லு.''

''அப்படித்தான் கிடக்கு.''

''பின்நேரம் நம்ம விளையாட்டு?''

''நாம நம்ம பாட்டில விளையாடுவோம் - நடக்கிறது நடக்கட்டும்.'' அலட்சியமாகவே அவர்கள் போக்கு கல்லூரிய நாடிப்போய்க் கொண்டி ருந்தது.

மாலைப் பொழுது, அவர்கள் எண்ணப்படி கிளித்தட்டு விளையாட்டு விளையாடி முடிந்தது. கிளி விளையாட்டின் பின்ன கிடந்த நாய்களும் பதுங்கிவிட்டன.

பாலன் மட்டும் சைலாவின் வீட்டுப் படிக்கட்டில் குந்தியிருந்தான்.

அவள் வெட்கத்தோடு 'குரும்ப முலைகள்' கதவுநிலையில் குத்த ஒட்டிநின்றாள். இதயத் துடிப்புகள் இறங்கிக்கொண்டன. திடுமென எங்கோ கேட்ட எறிகணை அதிர்வு கேட்டு நெஞ்சுகள் விம்மி மேலும் கீழும் எழுந்தது.

''ஏன்ரா தம்பி பாலன், நிலமே அதிரும் இந்தச் சத்தம் எங்கேயடா விழுந்து கேக்குது?''

பாலன் செல்லக்குட்டி ஆச்சியக் கண்ட அதிர்ச்சியில் பேசாமல் நின்றான்.

''அழிவான் அடிக்கத் தொடங்கியிற்றான் போலக் கிடக்கு.'' அடக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சக் குமுறலை அடக்கமுடியாது. பெருமூச்சை இரு கைகளையும் உயர்த்திவிட்டுக் கொண்டாள்.

''ஆச்சி, மண்டைத்தீவுக் கேம்பாகத்தான் இருக்க வேணும். பள்ளிக் கூடப்பக்கம் இல்லாட்டி கடற்கரைப் பக்கம்தான் விழுந்திருக்கும். நீ ஏன் இன்னும் உள்ளபோய்த் தொலையாமல் நிற்கிறாய்?''

பாலனின் கேள்வியில் விரகதாபம் மேலோங்கி நின்றது. ''டேய்! தொலைவானே, என்ன எங்கயடா போகச் சொல்லுறாய்?''

''எங்காவது போய்ப் பதுங்கிறதுதானே.''

''நீங்க என்ன கிருசகேட்டுக்கடா இதில நிற்கிறீங்க?''

இருவரும் சற்றுத் தயங்கியபடி விலத்தி நின்றனர்.

''உவளுகள் வீடுகளில் இல்லையா? இஞ்ச பார்த்த பாஸ உங்கட தாய்மாரட்ட அள்ளிவைக்கிறேன் இல்லையா என்று பாருங்க.''

தனக்குள்ளாகப் பேசியபடி ஆடி ஆடி அசைந்து போய்க்கொண்டிருந்தாள். அவளால் ஓடவும் முடியாது. வாழவும் பிடிக்காதிருந்தது.

பாலனும் சைலாவும் சிரித்தபடி ஊரில என்ன நடந்தாலும் தமக்கென்ன என்று நெருங்கினார்கள். கிட்டப்போனவன் மெல்லத் தலையைச் சாய்த்துப் பார்த்தான். ஒருவரும் இல்லை.

''சைலா'' என்றவன் ''ஒருத்தரையும் காணயில்ல சைலா.''

''அதுக்கென்ன இப்ப?''

''ஒன்றுமில்ல கதைக்காம நிற்கிறாய்?'' இழுத்த இழுவையில் இரண்டு சொண்டும், கண்களும் நடுவே சொருகிக் கொண்டன.

சைலா மௌனத்தோடு தன் விரல் நகங்களைக் கடித்துத் துப்பியபடி தன் நடுக்கத்தைத் தக்கவைத்தாள்.

''என்ன சைலா நாளைக்குக் கிளி விளையாட வருவாய்தானே?'' பதிலுக்குப் பதுங்கினான் பாலன்.

''இம்... இம் பார்ப்போம் நாளைக்கு'' சின்ன இழுப்பு இருந்தது.

''அப்புறம் நான் போகட்டா?''

திரும்பி நாலு புறமும் பார்த்துவிட்டு, ''சைலா நான் போகட்டா?''

இந்த நேரம் ஒரு குரல் உரமாக ஒலித்தது.

''டேய் பாலன், இன்னும் வீட்டுக்குப் போகயில்லையாடா? உன்ர அம்மா ஊரெல்லாம் ஒப்பாரி வைச்சுக் கொண்டு திரியிறாள். டேய் மடையா! நீ இங்க நின்று யாரோட கதையளக்கிறாய்?''

குரல் கேட்ட பாலன் திகைப்போடு திரும்பிப் பார்த்தான்.

பொன்னர் கேணி ஒழுங்கையால் திரும்பி வந்து கொண்டிருந்தார்.

தகப்பனைக் கண்டவள் நாக்குத் தெறிக்க ஓடி ஒளிஞ்சு கொண்டாள்.

பாலன்ர உடல் வியர்த்து ஆழமான அச்சத் தைரியம் அவன் முகத்தில் தோன்றின.

தைரியசாலி போல் ''உங்கட மகனட்ட புத்தகம் வாங்கிப்போக வந்தேன்.''

''புத்தகம் வாங்கிற நேரமாடா?''

''அவனக் கூப்பிட்டுப் பார்த்தேன் இன்னும் காணயில்லை.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெழிவும் சுழிவும் பார்க்கப் பாவமாக இருந்தது.

''புத்தகம் வாங்கிற நேரமாடா? பள்ளிக்கூடத்தடியில் விழுந்த ஷெல்லில நாலு ஐந்து உடல்கள் சிதறிப்போச்சாம். சனமெல்லாம் பதுங்கு குழிதேடி உசிரக் கையில புடிச்சுக் கொண்டு பயந்தொதுங்குதுகள். நாளைக்குப் புத்தகம் வாங்கலாம் இப்ப சுறுக்கா போச் சேரடா வீட்ட.'' பொன்னர் மூச்சுவிடாத அதட்டல் பேச்சைப் பேசிவிட்டு வீட்டிற்குள் சென்றார்.

பாலனின் உடலும் மனசும் படார்... படார் என அடித்தன. இதயத்தின் துடிப்பு காதுக்குள் கேட்டது. தனியாக நின்றதாக மனிசன் நினைச்சிட்டார். நல்லகாலம் எங்கட சேட்டைய மனிசன் கவனிக்க இல்ல. கவனிச்சிருந்தா சும்மா விட்டிருக்குமா?

சில நிமிடம் திகைப்புக்குள்ளாக நிலைத்தன அந்தக் காட்சி. நெற்றி யில் உருண்ட வியர்வையை வலக்கையால் துடைச்சுவிட்டுப் போய்க் கொண்டிருந்தான்.

சோழகக் காற்று சோர்வின்றி வீசிக்கொண்டிருந்தது. நேற்றுக் கீறிய கிளித்தட்டுக் கோடுகள் புழுதியில் புதைஞ்சு கிடந்தன. திரும்பவும் பாதத்தால் கோடுகள் அமைக்கப்பட்டன. நேற்றிரவு நடந்த நினைப்பு திகைப்புப் படலம் எல்லோர் முகத்திலும் திரைப்படம்போல் காட்சி கொடுத்தன. கழுகுகளின் கண்மூடித்தனமான செல்லடியில் துண்டு துண்டாப் பறந்த மனித உடல்களின் கோரக்காட்சி நினைப்பறைக்குள் கிடந்து பயம் காட்டியது.

மண்டைத் தீவுக் கேம்பை இல்லாமல் செய்தால் என்ன? இந்த அழிவான்தானே ஊர்ச்சனத்திற்குக் கரைச்சலைக் கொடுக்கிறான்? எங்கட வீரர்களும் கண்டுக்காமல் இருக்கிறார்களா? தொலையப்போயினம் பார்! கிளித்தட்டு வீரர்கள் தங்களுக்குள் ஒழுங்க வெளியில் ஒரு வட்டமேசை மாநாட்டை நடத்திமுடித்தனர்.

''என்னடா இவன் பாலன் இன்னும் காணயில்லை?'' என்றான் ஜெயந்தன்.

''அவன் வராமல் ஒரு விளையாட்டா?'' என்றான் யோசப்.

யோசப் பேசிமுடிக்கயில்ல. ஒழுங்கைள முடியும் திருப்பத்தால் திரும்பி வந்துகொண்டிருந்தான் பாலன். அவனது ஆசையும், ஆவேசமும், தவிப்பும், வரப் பிந்தின காரணமும் உடம்பின் வியர்வையில் தெரிந்தன.

இத்தகைய தவிப்புக்குள்ளும் விழிகள் வழி காணாது தவித்தன. எச்சிலை முக்கி விழுங்கியபடி,

''சைலா வரவில்லையாடா ஜெயந்தா?''

''டேய் நாங்கள் இவ்வளவு பேர் மலைபோல நிற்கிறோம். அதுக்குள்ள இவனுக்குத் தேவை சைலாவாம்'' என்று நக்கலாக இழுத்தான் தாசன்.

''அவள் வராட்டி என்ன நாங்கள் விளையாட்டத் தொடங்குவோம்'' என்றான் மரியான்.

பாலனின் தலை பொம்மையாட்டம் போட்டது. மௌனித்திருந்தவனை மேலும் குழப்பினார்கள். ''என்ரா பாலன் காசைச் சுண்டுறோம்... காசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுண்டுறோம்.'' நகைச்சுவையோடு சொற்களை வீசி நின்றான் ஜெயந்தன். மேலும் தூக்கிவாரிப்போட்டது பாலனுக்கு.

சூசை, பெரியவன், சின்னவன், யோசப், அழகு, ராணி, பவளம், தாசன், ஜெயந்தன் எல்லோரும் இரைஞ்சுகொண்டு நின்றனர். பாலன் நெஞ்சு எதையோ சேகரித்துக்கொண்டிருந்தன.

''ஏன்ரா அறுவான்களே! உங்களுக்குப் பயமென்றது இல்லையா? கொள்ளையில போவான்ர குண்டும், ஷெல்லும் விழாது என்ற திமிர் தானே? ஒரு நாளைக்கு விளையாடாட்டி குடியா மூழ்கிப் போயிடும்?''

பொக்குவாய்த் திட்டு வெற்றிலை சப்பிக் குதப்பிய கடவாய் வழி வழியும் இரத்தத்தை இடது கையைப் பிரட்டி இழுத்து உடுத்தியிருந்த மஞ்சள் நிற நூல் சீலையில் சிவத்தப் பொட்டுட்ட செல்லக்குட்டி ஆச்சி வழமையான தென்னங்குத்தியில் குந்திக்கொண்டாள்.

சைலாவைக் காணாத கவலை உள்ளுக்குள் குமைஞ்சு கொண்டிருந்தது பாலனுக்கு. கிளித்தட்டு மறிக்கும் தந்திரம், வேகம், ஓடும் அழகு அன்றைய விளையாட்டைப் பல கண்கள் ரசித்தன. சைலா மட்டும் தன்ர விளையாட்டைப் பார்க்காத ஏக்கம் தவிப்பாகப் படர்ந்திருந்தது பாலனுக்கு.

''டேய் கிறுக்கங்களே! பொழுது பட்டுட்டடா; விளையாடினது போதும். வீடு வாசலுக்கும் போச்சேருங்கடா நேரகாலத்தோடு.''

செல்லக்குட்டி ஆச்சியின் குரலோடு அதிர்வின் சத்தமும் வந்து விழுந்தது. அங்காங்கு சிதறி நின்ற உயிர்களை உலுப்பியது அதிர்வின் ஆட்டம்.

நாக்குத்தெறிக்க ஓடிவந்த பொன்னர் ''டேய் மண்டைத் தீவுக் கேம்பில இருந்து ஷெல்லடிக்கிறான்ரா.''

எல்லோரும் கால் தரையில் படாமல் ஓடினார்கள். ஒரு ஈ, காக்காவும் கண்ணுக்குப் படவில்லை. பேய்கள் பறப்பது கண்ணுக்குத் தெரிந்த குட்டைநாய்களும் வானத்தை அண்ணாந்து பார்த்துக் குரைத்தபடி ஒதுங்கின.

இரண்டு சின்னக்குழந்தைகள் முகம் குப்புற விழுந்தழுவதைக் கண்டான் பாலன். பயபீதியோடு அதுகளைத் தூக்கி நிமிர்த்திவிட்டதும், குண்டியில் தட்டி 'இஞ்சாலப்பக்கம் ஓடுங்கடா' என்றவன் நிமிர்ந்தான் பின்பக்கமாக அனுங்கும் குரல்கேட்டு வியப்போடு திரும்பினான்.

செல்லக்குட்டி ஆச்சி அசைஞ்சு எழும்பி நிற்க இசக்கமற்றுத் துடித்துக் கொண்டு சரிஞ்சு நிற்பதைக் கண்டான். தாவிப்பாய்ந்தவன் ஆச்சியின் நாரிப்பிடியோடு வலது கையைத் தோளில் போட்டுத் தூக்கி நிமிர்த்தி நாலு... ஐந்து அடிகள் முன்வைத்தான்.

''என்ர ராசா என்ர வயித்தில புறந்ததுகள் ஏன் நாயென்றுகூடக் கேக்குதுகளில்ல. அவள் புஸ்பத்தட வயித்தில புறந்த பாலா என்னச் சுமந்த தங்கமே.''

ஷெல் கூவியது. அதிர்வில் வெளி கதறியது. ஆச்சிய நழுவவிட்டு நகர்ந்தான் பாலன்.

வெண்மணல் பரப்பு செந்நிறமானது ஊரெல்லாம் ஒலித்த குரல் அடங்கியது. ஆச்சியின் உடல் துண்டு துண்டாய்க் கிளித்தட்டுகள் எங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறிக்கிடந்தன.

பூவரசு மரத்தடியில் பாலன் குற்றுயிராய்க் கிடந்து துடித்தான். இரவின் நிசப்தத்தில் நீண்டது அவலக்குரல்கள். அடுத்த அதிர்குண்டுத் தீர்க்கும்முன் பாலனைத் தூக்கிக்கொண்டு ஓடி மறைத்தார்கள் பதுங்கு குழிக்குள்ள. புழுதியும் புரண்டழுதது. கிளித்தட்டுக்கோடுகளும் கோவெனப் புலம்பின பூவரசும் இந்தப் பூமியப் பார்த்து இரங்கி எதிர்காலம் தேடிக் கண்ணீர் சொரிந்தது.

நாட்கள் பல உருண்டன... பாலனின் இரண்டு கால்களும் முழுங்கால் மூட்டோடு வெட்டப்பட்டிருந்தன! இடுப்புக்குள் முட்டுக் கொடுத்த தடியுடன் தாவித்தாவி வருகிறான்... !

கிளித்தட்டு விளையாடும் இடத்தைப் பலநாட்களாக வெறித்துப் பார்த்து வெந்து துடித்தாள் சைலா.

நாளும் பொழுதும் அழுது வீங்கிப்போன முகத்தோடு பாலனின் கோலத்தைப் பார்த்து விம்மலை அடக்கமுடியாது புழுவாத் துடித்தாள். மூளைகுத்திப் பாயும் கால்கள்! கூர்ந்துபார்த்தவள் இமையோரம் முட்டிநின்ற கண்ணீர் துளித்துளியாக விழுந்து கிளிக்கோட்டை அழித்தன.

''என்ன சைலா இந்த அனர்த்தங்கள் நம்ம ஊரில சகசமாகப்போயிற்று? இனியென்ன கிளித்தட்டு விளையாட முடியாது... வாழ்க்கையும்...'' வேதனையின் விளிம்பில் நின்றவன் இதழ்கள் புன்னகை சிந்தின. அவனது வேதனையைப் பங்குபோடுவதற்காக.

''பாலன், உன்னட்ட ஒரு கேள்வி கேக்கிறேன் பதில் சொல்வாயா?'' விழிகள் அகலவிரிக்க முடியாது மூடியபடி கேட்டாள் சைலா.

என்னத்தக் கேக்கப் போறாள்? என்ன மறந்துவிடு. நீ நொண்டியாப் போயிற்றா உன்னோடு நான் வாழ முடியுமா? என்றுதானே அவள் கேக்கப் போறாள் என்று தன் மனசுக்குள் நினைத்துக் கொண்டான் பாலன்.

''தைரியமாக, தாராளமாகக் கேள் சைலா நான் உனக்கு நல்ல முடிவு சொல்லுகிறேன்.'' காதலின் மோகத்தைக் கண்களிலும் காட்டவில்லை. அவள் கேட்கத் தொடங்கினாள்.

''ஒரு பக்கம் ஏழு குழி இருபக்கத்திலும் பதினாலு குழிகள் மரத்தாலானது மகத்தான வீடு மங்கையர் மகிழ்ந்தாடும் வீடு மற்றவரும் கலந்தாடுவர் அது என்ன?''

சட்டென்று பதில் விழுந்தது. ''பல்லாங்குழி.''

''இப்ப என்ன கிளித்தட்டுத்தானே விளையாட முடியாது? வாயேன் பதுங்குக்குழிக்குள்ளிருந்து பல்லாங்குழி விளையாடுவோம்.''

இருவரும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்கள். ஊரெங்கும் எதிரொலித்தது. யக்கோவின் கோயில் மணியும் கிடாங்... கிடாங்கென ஒலித்தது. இவர்கள் காதல் வாழ வேண்டுமென வேண்டிக் கொண்டேன். ●

ஈழமுரசு
10-05-1998.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழியனுப்பி வைத்தவள்

எங்கள் தேசத்தின் உச்ச சூரியன் உசிரவாங்கும் அகோரத்தில் ஆத்திரப்படாத காலைப்பொழுது, பொக்குவாய்க் கிழங்கள், நடுத்தர வயதினர் சிலரின் அழைப்போடு வீதியோரத்து அப்பக்கடையச் சுற்றி வட்டமேசை மாநாடு ஒன்று நடந்துகொண்டிருந்தது. மேடைப் பேச்சுகளும், கலந்துரையாடல்களும் கன கச்சிதம் எடுத்துக் களைகட்டத் தொடங்கியது.

அதன் தொனியில் பழமொழிகளும், புறஞ்சொற்களும் பலவிதமான வண்ண ஜாலங்களுடன் பறந்து இருபதாம் நூற்றாண்டையும் கடந்து சென்று போய்க் கொண்டிருக்கிறோம். .

''அடியே!'' பக்கத்தில் இருந்தவளைச் சுரண்டி ''திரும்படி இங்கால.''

''ஏன்ரி, உன்ர பக்கத்து வீட்டுக்காரியட புருஷன் இன்னும் வாசல் வந்து ஏறயில்லையாமே?''

மற்றவள் ''அப்படி என்னதான் நடந்திட்டு?''

''அதயேன் கேக்கிறீயள், அவள்ர புருஷன் மாதம் தப்பாது ஒருநாள் தன்ர வைப்பாட்டிக்கிட்ட போய் வருவான். இந்தத் தடவ மன்னாருக்குப் போனவன் திரும்பிவரயில்ல.''

''அதனால்தான் இங்கால முகம் காட்டாமல் இருக்கிறாளா?''

''நீ சொல்லுறது சரிதான். அந்த வெள்ளிடிதான் போலக்கிடக்கு. அவள்ர தலைக்கறுப்பக்கூடக் காணக் கிடைக்கயில்ல.''

''இதனால்தான் நம்மட மாநாட்டையும் பகிஸ்கரித்துக் கொண்டு உள்ள தொப்பென்று இருந்திட்டாள். இது உனக்கு இவ்வளவு நேரமும் தெரியாமலா போச்சு?''

கிலுகிலுப்போடு துடிச்சவள், ''வெல்லனயில இந்தச் சமாச்சாரம் தெரியாமல் போச்சே!''

எதிர்ப்புறமாக இருந்த பொக்குவாய்க் கிழம், ''அவள்ர குணம்தான் உங்களுக்குத் தெரியுமே.''

''தெரிஞ்சு என்ன? அவள்ர புத்தி எங்க போச்சு?''

''அவனப் போகவிடாமல் தடுக்கலாம்தானே?''

''வாழைப்பழம் தின்ன வருத்தமாயிருக்குமாடி?''

''அவள் தடுத்து அந்தக் குடிகாரன் கேக்கவா போறான்?''

''அப்படியென்னடி இத்தன புள்ளைகளைப் பெத்த பிறகும் அந்த அறுவானுக்கு இந்த மாதிரியான சின்னத்தனப் புத்தி?''

''கடவுளும் இவனப்போல உள்ள கசடுகளப் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறான்.''

''ஓமண நம்ம ஊர்ப்பொம்புளகள் இந்தமாதிரியான ஆட்களுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்துவாற மரியாதைதான்.'' ''இல்லையண கேள்வி கேக்கத் துணியாதது என்று சொல்லண.''

சுற்றி இருந்தவர்களுடைய கதைகளைக் கேட்டுக் கொண்டு ஒரு கரண்டி மாவை இரும்புச் சட்டிக்குள் ஊற்றித் துழவியபடியே ''எடியே, போதுமடி உங்கட அலட்டல்கள்! அவள்ர நிலை உங்களுக்கு வரும் போதுதான் ஓடி முழிப்பீங்க. ஆந்தை முழியாட்டம். ஓட்டுத் திண்ணை நித்திரைக்குக் கேடு. இதனால்தான் வெளிய படுத்தவன் உள்ளே போய் படுத்திட்டான். பஞ்சில நெருப்புப் புடிச்சிட்டு. அவனும் என்ன செய்வது? படுத்தவளையும் வைச்சுப் பாதுகாக்க வேணாமா? இதுகளயும் பார்த்துக்கொண்டு மேஞ்ச ஊரில உள்ளதையும் அவள்ர கவட்டையும் காண அங்கும் இங்குமாகத் திரியுறான். அவள்ர புருஷன்ர முடிவு என்னமோ ஏதோ! முடிவு தெரியும் முன்னமே நீங்க ஏனடி உங்கட மனசப்போட்டு உசுப்பிறீங்க?'' அப்பக்காரியின் நிஜம் சற்றுநேர மௌன ராகத்தை முணுமுணுக்க வைத்தது.

திடீரென, ''நம்மோட எவ்வளவு முஸ்பாத்தியா வந்திருந்து கதைக் கிறவள் துடையிற் புண்ண நடையில் காட்டாமல் இருக்கிறாள். அவள்ர வாயில ஏன்ரி மண்ணை அள்ளிக் கொட்டுறீங்க?''

''வாழ்வதும் கெடுவதும் வாயாலேதான். அக்கம் பக்கம் பார்த்துக் கதையுங்க.''

பொக்குவாய் ஒன்று ''எடியே, நீ அப்பம் சுடுறீயோ இல்லையோ பழமொழிகள் பொலிவதில் மட்டும் படு சுட்டியடி.''

நாட்டுத் தீர்மானத்தின் சிக்கலான வாதம், கதைச்சுப் புதைச்சு, சிதைச்சுக் கொண்டவள் சம்பந்தப்பட்டவள் பின்புறமாக நிமிர்ந்த நெஞ்சோடு சிங்கத்தின் சினம் சீறிக் குரைத்துக் கடித்துவிடும் கோபாவேசமாக நின்றாள்.

மாநாட்டுக் குழு கும்பத்தோடு திரும்பியது. படரவிட்ட பார்வையின் பாவத்தின் வெட்கம் வெடிச்சு நாணி நின்றன. குழுவினர் பார்வைகள் அவளையே மொய்த்துக் கொண்டிருந்தன.

அந்நேரம் அவள், ''என்ன எல்லாவற்ற வாயிலயும் வீணி ஒழுகுது? நான் என்ன உங்கள விழுங்க வந்த பூதமா?''

அப்பக்காரி அப்பத்த சட்டகப்பையால் கிளப்பியபடியே, ''இதுகளுக் கெல்லாம் ஊர் வம்பளந்து பழக்கமாப்போச்சு. நீ இல்லாத நேரம்பார்த்து நம்ம அமிர்தலிங்கம், ஆலாள் பேசுறமாதிரி விளாசிப் போட்டாளுகள். இப்ப நீயே முன்னால வந்ததும் வாயடைச்சுப்போய் இருக்கிறாளுகள்.'' ஒரு அகப்ப மாவைக் கிள்ளி இரும்புச் சட்டிக்குள் ஊத்த அந்தச் சில்லிப்பின் சிலிர்ப்பு அவளுகள் உடம்புகளைப் புல்லரிக்க வைத்தது.

அவள் அத்தகைய மௌனத் திரையின் இடையிலும் தன் துன்பத்தை யெல்லாம் வெளிக்காட்டாமல், ''என்ன உங்கட தீர்மானம் நிறைவேறியிற்றா? தும்மலில் போனாலும் தூற்றலில் போகக்கூடாது என்பார்கள். உங்கட தூற்றல் முடிஞ்சிட்டா? இன்னும் மிச்சம் மீதி இருக்கா?''

கூட்டத்தில் இருந்த அனுபவசாலி பொக்குவாய் ஒன்று, ''ஏன்ரி உன்ர புருஷன் வந்திட்டானா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தன்னைத்தானே கிரகித்தபடி ''ஏனணே இப்படிக் கேக்கிறாய்?'' என்றாள்.

பக்கத்தில இருந்தவளைச் சுட்டிக்காட்டி, ''இப்பதான் உவள் சொன்னாள் - உன்ர புருஷன ஆமிக்காரன் சுட்டுப்போட்டானாமே, மன்னாரில்; உண்மையாடி?''

கோபத்தின் கொந்தளிப்போடு, ''உவளுக்கு யாராம் சொன்னது? ஆமிக்காரன் தந்தியா அடிச்சவன்? அல்லது உவளைக் கூப்பிட்டு படுக்க வைச்சு சொல்லி அனுப்பிவிட்டானா? என்னட்டச் சொல்லாம ஊரெல்லாம் தம்பட்டம் அடியென்று?''

அவளின் உணர்ச்சியான உறுமல் திரும்பவும் மாநாட்டுப் பிரதிநிதிகளை வாயடைக்கப் பண்ணியது.

அவள் சிரித்தாள். சின்ன இதயத்தில் சிதறிய சிந்தனை வேதனையால் மீண்டும் மீண்டும் சிரித்தாள். நெஞ்சக்களத்தில் நினைவுக்கல் பாரமாக யிருந்தும்கூட குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்.

உலகின் போக்குகள் மாறி நவயுகம் உருவெடுத்து ஓடிக் கொண்டிருக்கும். பெரும் நதிகளின் மத்தியிலே நம்ம ஊர்வீதிகளிலும், வாய்க்கால்களிலும் தேங்கிநின்று நாற்றமெடுக்கும் நீராக மானிடம் வாழ்வதை நினைத்துக் சிரித்தாள். சட்டியில் கிளப்பி எடுத்த அப்பத்தைச் சுளகில் வைத்துவிட்டு, ஒரு முறை அடுக்காக இருந்த அப்பங்களை மனப்பாடம் பண்ணிக்கொண்டு. ''இந்தாடியம்மா இதில பத்து அப்பம் இருக்கு. இதக் கொண்டு போ. பத்தாட்டி உன்ர புள்ளகளில் ஒன்ற அனுப்பிவிடு; உடனே சுட்டுக் கொடுத்து விடுகிறேன்.''

சுளக நீட்டினாள் அப்பக்காரி. தன் இருகைகளையும் நீட்டி வாங்கியதும் நாரியில் சுளகின் குடப்பாகம் குத்திக்கொண்டது. வலக்கையில் வைத்திருந்த காசை நீட்டியபடி ''இந்தாண காசு''

அப்பக்காரி காச வாங்கிக் கொண்டதும். ''உன்ர நல்ல மனசுக்குப் புதுமை மாதா புளவிடப் போறதில்ல. நீ சந்தோஷமாகப் போடி.''

அவளும் சிரிச்சபடி சுற்றியிருந்தவர்களைப் பார்த்து நக்கல் சிரிப்பைத் தொலைத்துவிட்டு நகர்ந்தாள்.

பொறுமை இழந்த கிழவி ஒன்று, ''அவள்ர சிலுப்பப்பாரு சிலுப்ப. அவயட தார்ப்பரியத்திற்காக நாங்கள் கதைச்சா எங்களயேன் என்னமோ நினைச்சுட்டுப் போறாள். என்னடி நீங்களும் ஒன்றும் கதைக்காம குத்துக் கல்லாட்டம் இருக்கிறீங்க?''

''ஓமெண,. நீ சும்மா இரன். என்ன நடக்குதென்றுதான் பார்ப்போம்.''

எரிநெருப்பு அப்பக்காரி ''என்னடி பெரிசா நடக்கப் போகுது? உங்கட நையாண்டிக்கும் ஒரு அளவேயில்லையா?''

துள்ளி ஓடும் மானாட்டம் பசியின் பதைப்போடு அவள்கிட்ட வந்து கொண்டிருந்தான் அவளது கடைசிக் குட்டி. ''அம்மா... அம்மா நம்மட அப்பா வந்திட்டார்.''

இன்னுமொரு புள்ள ஓடிவந்து. ''வந்ததில இருந்தம்மா எங்கோட முகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தும் கதைக்கிறாரில்ல?''

பெரியவள் ''நீ கெதியா வாம்மா.''

''சரி சரி நீங்க முன்ன நடவுங்க''

ஒரு எட்டி நடையோடு லேசாகத் திரும்பி அப்பக்கடையைப் பார்த்து விட்டு, அவளுக்கே உரித்தான உலுப்பலோடு ஒரு சரிஞ்ச வெட்டோடு முகத்தைத் திருப்பி நிமிர்ந்து நடந்தாள். வீட்டு வளவுக்குள்ள வந்ததும் புள்ளகள் அப்பச் சுளக மொச்சுப்புடிச்சனர். சுளகிலிருந்த அடுக்கை ஆளுக்கொன்றாக எடுத்து அப்புறப்படுத்திக் கொண்டனர். புள்ளகளின் பசியாறும் தாய்மையின் உணர்வில் இன்பம் காணும் உணர்வுக்கு இந்த வேளை இடமில்லை. தன் புருஷன்ர புன்னகைக்கு நேர்ந்த புதிருக்கு என்ன வெள்ளிடி விழுந்தது என்ற காரணத்தோடு புருஷன்கிட்ட நெருங்கினாள். அவளையும் அவள் தோற்றத்தையும் தலை நிமிர்த்திப் பார்த்துவிட்டு திரும்பவும் முகத்தைத் தொங்கப் போட்டான்.

''என்னதான் உனக்குப் புடிச்சிட்டு?''

''புடிக்கவேண்டியதுதான் புடிச்சிட்டு,''

''அதுதான் என்னென்று கேக்கிறேன்?''

எச்சில விழுங்கிவிட்டு ''என்னென்று சொல்லுவேன்? மன்னாரில இருந்த அவளும் புள்ளயும்... ''

''அதுகளுக்கு இப்ப என்னவாம்?'' கேள்வியின் வேகம் அவனுக்கு எரிச்சலைக் கிளப்பித் துருதுருவென துடிக்கச் செய்தது.

''எடியே, நீ அவங்களப்பற்றி அக்கறையோடு கேக்கிறீயா? இல்லாட்டி வேண்டா வெறுப்பாகக் கேக்கிறீயா?''

''நான் மனச் சுத்தத்தோடு மனிசியா நின்றுதான் கேக்கிறேன். உனக்குக் கரவு வச்சுக் கதைக்காட்டி பத்தியப்படாதே. நீ என்னவிட்டுட்டு அவளோடு படுக்கப் போறபோது கூட நான் உனக்கு ஏதாவது இடைஞ்சலா இருந்தேனா? புளைக்கப் போன இடத்தில் கணப் பொழுது பலவீனமான உணர்ச்சிக்கு அடிமையாகியிற்றா. அவளும் என்ன செய்வது வேறு கல்யாணம்பண்ணாமல் உன்ர காசையும் வரவையும் பார்த்துப் பார்த்து அந்தக் குழந்தையையும் வளர்த்து வருகிறாள். இப்ப என்னதான் வந்துட்டு அதுகளுக்கு?''

அவளுடைய ஒவ்வொரு சொல்லிலும் அவனது இதயத்து உணர்வுகள் உருவமற்று சிதைந்து கொண்டிருந்தது. அவளின் தவிப்பிற்காக அவன் அனுதாபப்படவில்லை என்ற சூனியம் யாருக்குத் தெரியப்போகுது? முறைப்படி சுற்றம் சூழ நடந்த திருமணப் பந்தம் பாதக சாதகத்தைச் சரிப்படுத்தி நியாயப்படுத்துவதாகவும் தோன்றவில்லை. அறுபது நாள் ஆசையோடு ஆறு குழந்தைகளுக்குத் தந்தையான தார்மீக தர்மமும் அவன் மனதில் முளைவிட்டதா என்பதும் 'கேள்வியின் கணையாகத்தான் நின்று தத்தளித்தது. அவன் பேசத் தொடங்கினான்.

''மன்னாரில் தாயும்-புள்ளயும் இருந்த வீட்டை விட்டுப்போய் கனநாட்களாச்சாம். அந்த இடியோடு இன்னும் கொஞ்சம் தள்ளிப்போய் விசாரித்தால் பொடியங்களுக்கும் ஆமிக்கும் நடந்த சண்டையின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல்லாடி முகமிலிருந்து அடிச்ச ஷெல் விழுந்து செத்திட்டாளாம்...! புள்ளைய யாரோ மாமன்காரன் வைச்சு வளக்கிறாராம். அவனுடைய எழும்பின சொண்டு மூடும் முன்னம், ''பாவிமனுசா உன்ர இதயத்தில் இரக்கமில்லையா? அந்தக் குழந்தையையாவது தேடிக் கண்டுபிடிச்சுக் கூட்டுவராமல் வெறுங்கைய ஆட்டிக்கொண்டு முகத்தத் தொங்கபோட்டுக் கொண்டு திரும்பிற்றாயா?

ஆறுபுள்ளகளையும் அடுக்கடுக்காகப் பெத்துத் தாய்மையின் பூரணத் துவத்தைச் சுமந்த வயிறு சுள் என்று சுண்டியது. வல்லென்று வெடிச்சு விழுந்தாள். ''நிற்காதே நாளைக்குப் புறப்பட்டுப் போய் அந்தப் புள்ளயத் தெடிக்கண்டு புடிச்சுக்கொண்டுவா. இந்த ஆறோட ஏழாச்சு. நம்ம புள்ளபோல வளர்ப்போம்.''

குறுநகை அரும்பி அவள்முகம் முழுநிலவாய் நீந்தியது. அவள் வாயில் வந்ததல்ல இந்த வார்த்தை? மனதில் ஆழத்தில் புதைந்து புகைஞ்சு எழுந்த பச்சாத்தாபத்தின் தார்ப்பரியத்தில் எழுந்தது. அந்தப் புள்ளயும் வளர்த்திட வேணும் என்ற கடமையுணர்வோடு எகிறி நின்றாள்.

இவள் பாக்கியத்தை மனைவியாக அடைய நான் பாக்கியம் செய்தேன். அவன் நினைத்தானோ? பொம்மையாட்டம் தலைய மெல்ல மெல்ல ஆட்டியபடி தலை கவிழ்ந்துகொண்டு நின்றான்.

''சரி பாக்கியம், உன்ர இஸ்டப்படி நாளைக்கு காலம்புற முதல் பஸ்சுக்குப் போயிடுறேன்.'' அவள் சற்று மௌனமாகத் தலையாட்டிச் சிரிச்சாள்.

''இப்ப எங்க பஸ்களும் சரியான ரைமுக்கு ஓடுது! வெள்ளணயில போனால்தான் சீற்றிப்பி பஸ்ஸத் தவறவிட்டாலும் மினி பஸ்சிலாவது நேரத்தோட போச்சேர்ந்திடலாம்.''

எப்பொழுது இப்பொழுது போய் புதிய விடியல் புலரும்? புறப்படக் காத்திருந்தவன் கண் தூங்கவில்லை? கல் மனசில் கண்ட கண்ட எண்ணங்கள் எல்லாம் உருண்டுகொண்டிருந்தன. நிமிடத்திற்கு ஒரு தரம் எழும்பி எழும்பி தலைமாட்டிற்குப் பின்னால் மேசை மேலிருந்து எலாம் மணிக்கூட்டை நெருப்புக் குச்சயின் மெல்லிய ஒளியில் பார்த்துப் பார்த்துச் சினந்துகொண்டான்.

சீ... இந்த வேகத்தில் மணியும் ஓடுதில்ல! சாமமென்று பாராமல் ஓடிவிடலாம்போல தூண்டித் துள்ளிக்கொண்டு ஓலமிட்டது மனசும்.

பக்கத்தில் படுத்திருந்த பாக்கியம் சட்டென்று முழிச்சுக்கொண்டாள்.

''என்ன இன்னும் நித்திரையாப் போகயில்லையா? மனசப்போட்டு அலட்டிக்காம படு. நான் சரியான ரைமுக்கு உன்ன எழுப்பி விடுறேன்.'' புலம்பியபடி மல்லாக்கச் சாய்ந்தாள்.

பாதிக்கண்ண மூடியவன் சற்றுநேரத்தில் அயர்ந்து போயிட்டான். எல்லாம் மணிக்கூடு தன் கடமையை நிறைவு செய்தது; இருவரும் சேர்ந்தே எழும்பினார்கள். அவன் தன்ர ஆயத்தங்களைச் செய்துகொண்டான்.

அவளும் தன்னுடைய வழமையான கடமைகளை முடித்தாள். தேத்தண்ணி வைத்துக் கொடுத்துவிட்டு அலுமாரியத் திறந்து அடுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டியில இருந்த காசில பாதிய அவன் கையில் திணிச்சாள். அவன் உயிர் ஒருதரம் கசிஞ்சது.

''நல்லபடியாகப் போயிற்று புள்ளையோட திரும்பி வா.'' வாய் நிறைஞ்ச புன்னகையோடு வழியனுப்பி வைத்தாள்.

போனவன் போன நாட்களை எண்ணத் தொடங்கினாள் பாக்கியம். நகர்ந்து சென்ற நாட்கள் வாரங்களாகி... மாதங்களையும் கடந்து சென்றன. ஆறு புள்ளகளையும் அடிக்கடி பார்த்துப் பார்த்து வெந்து நொந்தாள்.

புள்ளகளை வளக்கவேண்டிய கட்டாயக் கடமை உணர்ந்து வெதும்பினாள். வாய்விட்டுச் சொல்லமுடியாத வேதனையைச் சுமந்து நின்றாள்.

அப்பக் கடையிலிருந்து ஒரு பொக்குவாயக் கிழவி ஓடிவருவதை வளவுக்குள் நின்ற பாக்கியம் கண்டு, ''என்ன இந்த மனிசி இந்த நடுக்கத்தோடு ஆடிவருகுது.''

''எடியே பாக்கியம் உன்ர புருஷன் மன்னாரில அந்த வைப்பாட்டியோடு குடும்பமாக இருக்கிறானாமடி. என்ர பேரன் மன்னாரில இருந்து இண்டைக்கு வந்து சொன்னானடி.''

அவள் பேயறைஞ்சுபோய் நின்றாள். மங்கையராய்ப் பிறந்திட நல்ல மாதவம் செய்திடல் வேண்டும். மன்னவரை வழியனுப்பி வைப்பதில் வாழ்க்கை வாழவேண்டும். பழைய நினைவுகள் புதிய மலர்களாக அவள் மீது தூவப்படுகின்றது. பெண்மையின் இலக்கண வரம்பு நெஞ்சக் களத்தில் தணல் மூண்ட சுடர் பரப்புகின்றது. மலருக்கு மலர்தாவும் பண்பற்ற பைத்தியக்காரர்கள் கிளிபோல் மனைவியிருக்கு குரங்கைப் போன்ற ஒருத்தியைத் தாவும் பலவீனமானவர்கள் தானே.

ஆறு புள்ளகளையும் அணைத்துக் கொண்டவள் கண்ணீரைத் துடைத்தபடி நின்ற புள்ளைகளின் புன்னகைக்காக வாழ்வதே வாழ்க்கை. இந்தப் பூமியில் இது சபதமில்லை - சாதனை. அதுவே அவளது குறியானது.

●

பாரிஸ் ஈழநாடு
25-12-1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளியாக

மூன்று நாட்களாகக் கிழவி பேரனைத் தேடி தெருவெங்கும் அலைந்து திரிந்துவிட்டாள். பேரனைப் பற்றிய செய்தி சொந்த ஊரில் உள்ளவர்கள் யாரிடமிருந்தும் வந்தபாடாய்த் தெரியவில்லை. கிழவியின் உடல் வலிமை குன்றியதுபோல் பேச்சிலும், பார்வையிலும் பொலிவும், தெளிவும் குன்ற வில்லை. கால்கள் மட்டும் கனத்தன. பாடசாலை போய்வந்த பேரனைக் காணாத கனதியான கவலைகளால் முகம் வெளுப்பேறியிருந்தது.

பொழுதும் போய்க் கொண்டிருந்தது. இரவில் கையில் சிக்கிய மாலைப்பொழுதில் மங்கிய ஒளி ஜன்னல் கம்பிகள் ஊடாகப் பதுங்கிக் கொண்டிருந்தன. இந்நேரம் கிழவியின் மனசில் உரசிக் கொண்டிருந்த பேரனைப்பற்றிய உள்ளீட்டின் துடிப்போடு எழுந்து பேரனின் படிப் பறையுள் புகுந்து கொண்டாள். அவனது மேசையில் கிடந்த காகிதங்கள், புத்தகங் களைத் துழாவிக் கொண்டிருந்தாள். பள்ளிக்கூடப் புத்தகங்களைத் தவிர வேறு என்னதான் தேடுகின்றாள்? பேரன் தனக்கு ஏதாவது எழுதி வைத்துவிட்டுப் போயிருப்பான் என்ற ஏக்கத் தவிப்பாகவும் கிழவியின் செயல் தென்பட்டது. தவிப்பின் வேகத்தில் கரங்களில் இரண்டு புத்தகங்கள் அகப்பட்டன. தூக்க இயலாத துக்கத்திலும் வலுக்கட்டாயமாகத் தன் இருகரங்களிலும் கரத்திற்கொன்றாகத் தூக்கிக் கொண்டாள். புத்தகத்தின் பெயர்களை வாசிப் பதற்குள் ஜன்னல் வழியாகத் தெறித்த மெல்லிய ஒளிக்கும் பிடிப்பில்லாது இரவின் அனுமதியின்றி இருட்டிக் கொண்டது.

நீண்ட நேரமாக நான்காவது இரவும் பேரனின் வரவுக்குக் காத்திருக்கக் கிழவி உறுதிபூண்டாள். மேசைமீது இருந்த அரிக்கன் லாம்பைத் தேடி நான்கடி எடுத்து வைத்தாள். மின்சாரம் இல்லாத சமாச்சாரமே ஊரில் பெரும் புரட்சியாகிவிட்டது. எந்த நேரமும் இடுப்புச்சீலை மடிப்பில் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் நெருப்புப்பெட்டியைத் திறந்து குச்சொன்றை எடுத்து நின்று... நிதானமாகப் பொட்டியில் உரசிப் பற்றிக் கொண்டதும் லாம்பின் திரியை மெல்ல எழுப்பிப் பற்றவைத்துக் கொண்டாள். பிரகாசித்த ஒளியைப் பார்த்த கிழவிக்கு பேரன் தற்பாதுகாப் பிற்காகத் தேசத்தின் பொருளாதாரப் பிரச்சனையில் உள்ள மண்ணெண்ணையும், நெருப்புப் பொட்டியையும் தான் கிழவிக்குப் பேரன் கொடுத்த சொத்தாகும். விரக்தி கலந்த சொற்ப சந்தோஷம் லாம்பின் ஒளியில் பிரகாசித்தது. தன் காலத்து மண்ணெண்ணை விளக்கொளியில் வாழ்ந்த வாழ்வில் ஓர் அர்த்தமும், அகமகிழ்வும் இருந்தன. கிழவியின் புள்ளைகள் காலத்தில் தமிழ் ஈழப் பகுதிக்கு வந்த மின்சாரத்தின் பாச்சல் போலவே எங்கட சனத்தட உயிர்களையும், கற்பையும், பொருளா தாரத்தையும் கண் மூடித்தனமான மனித மிருகங்கள் பாஞ்சு... பாஞ்சு குதறித் திண்டார்கள். குறுகிய கண்களோடு வாயின் புலம்பலும், மனசும் பெலமாக அடித்துக் கொண்டன. பிற்பாடு உணர்வுகளும், உண்மைகளும் உறங்காது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கட புள்ளைகள் உரிமைக்காகப் போராடத் தொடங்கியதும் கிழவி நடைபயின்ற காலத்துக்குக் கும்மிருட்டுத் தேசம் போலாக்கி விட்டார்கள். தேச நேசப் பற்றற்றவர்கள்? தனக்குள்ளாகவே பேசிக் கொண்டாலும் நிதானம் தப்பாத செயல்கள் கிழவியிடமிருந்து தப்புவதில்லை. முதல் வேலையாகத் தனது பொக்கிஷமான நெருப்புப் பெட்டியைப் பத்திரப்படுத்திக் கொண்டாள். ஒரு நாளைக்கு இரண்டு குச்சிகளுக்கு மேல் பற்றவைப்ப தில்லை. ஒன்று சமையலுக்கு, மற்றொன்று இரவின் ஒளிக்கு. இருண்ட தேசத்தின் வரண்ட நிலமை காரணமாகவே. அடுத்து பேரனின் மேசையில் தேடியெடுத்த புத்தகங்கள் இரண்டையும் குறுகிய பார்வைக்குத் தெரிந்த வரை உயர்த்தி புடிச்சு லாம்பின் ஒளியில் படித்துக் கொண்டாள்.

ஒன்று ரூஸோவின் 'சமூக ஒப்பந்தம்.'' மற்றொன்று டால்ஸ்டாயின் 'போரும் சமாதானமும். புரட்சிகரமான கருத்துக்களின் தொகுப்பான இரண்டும் ஆயிரம் பக்கங்களுக்கு மேற்பட்டன. கிழவிக்கு அதிர்ச்சியுடன் கலந்த அகமகிழ்வு தோன்றியது. இந்த மாதிரியான புத்தகங்களையும் பேரன் படிக்கிறான்! பிரமிப்பின் இடையிலும் இருண்ட மனங்களையும் நொந்து கொண்டாள். இலங்கைத் தீவில் இப்படியான புத்தகங்கள் வைத்திருப்பவர் சிறைவாசம், தண்டனை என்று இந்தப் பாழாப்போன அராஜகக் கும்பல் தடைவிதித்த காலா காலத்தையும் நினைத்து வெட்கப்பட்டாள்.

எங்க அயல்தேசத் தமிழன் எழுதிய 'மீண்டும் இலங்கை எரிகிறது' என்ற நாடக நூலுக்குப் பாடை தூக்கிய பயந்தாங்கொள்ளிகள், மொக்குகள், இந்தப் புத்தகங்களைப் படிக்கயில்லப் போலிருக்கு! என்ர பேரன் கெட்டிக்காரன்.

இருண்ட இந்த ஊரில இந்த மாதிரியான புத்தகங்களை எங்குதான் தேடிப்பிடிச்சான்? சந்தேகத்திலும் பேரன்மேல் இருந்த பிடியான நம்பிக்கை தளரவில்லை.

கலாச்சாரப் படுகொலையாக எங்கட அறிவுக்கு அறிவூட்டிய பொது நூல்நிலையத்தையே நெருப்பிலிட்ட மிருகங்கள். பகுத்தறிவற்ற இராணுவம் நடமாடும் இந்தத் தேசத்தில் பேரனுக்கு இப்படியான புத்தகங்கள் கிடைத்தது கிழவிக்குப் பெரும்பயமாகவும் இருந்தது.

பயத்துடன் கலந்த பசிக் களைப்பும் கிழவிய சாய்வு நாற்காலியோடு சாய்ந்திட வைத்தன. கண்களின் செருகல் இரவின் பிடியின் இறுக்கலில் இரங்கிநின்றன. மனசு மௌனமாகும் நேரம் காதுகளைத் துளைத்தது கனகம்மாவின் கீச்சிட்ட குரல்!

வாசல்படி ஏறிவரும்போதே, ''நான்தான் பொன்னு ஆச்சி பக்கத்து வீட்டுக் கனகம்'' என்றாள். ''எணேய் திரும்பவும் பேரன் மூன்று நாளாகக் காணமாமே?''

அவளது இழுப்பு கிழவிக்குப் புடிப்பில்லாது இருந்தது?

கேள்வியில் இரக்கத்தின் சாயலா? அல்லது கேலியின் பாச்சலா?

கிழவி வாய்மூடியபடி தனக்குள்ள புகைஞ்சதை வெளிக்காட்டாமல் சாய்ந்திருந்தாள். பக்கத்து நாற்காலியில் பெருத்த குண்டியை வைச்சவள் கிழவியக் கூர்ந்து நோக்கினாள். கிழவியும் வாய்திறந்து பேசுவதாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியவில்லை.

அக்கம்பக்கம் துருவித் துருவிப் பார்த்தபடியே கனகம் திரும்பவும் பேசினாள்.

''என்ன பொன்னுயாச்சி! இந்தப்பெரிய வீட்டில் இந்த வயசான காலத்தில தனியக் கிடந்து மாரடிக்கிறாய்? பேரனும் தனிய விட்டுட்டுப் போயிட்டான்? இப்படியிருக்கும் போது உன்ரமனசில என்னதான் பிடிப்பு இருக்கென்றாவது சொல்லணை?''

கிழவியின் உம்மென்று உரசிக்கொண்டிருந்த சொண்டுகள் திறந்தன. நச்சரித்து நடுங்கி சொற்கள் இடைவெளியின்றி வந்துவிழுந்தன.

''எடியே! என்ர பேரன் உழைச்சுக் காப்பாற்றவேண்டும், அவன் தயவில் என்ர சீவியம் ஆடவேண்டும் என்பதல்ல என்ர வைராக்கியம். ஆயுள் முழுவதும் சீவிக்கக்கூடிய சொத்தையும், காணிபூமியையும், என்ர மகராசன் வைச்சிட்டுதான்ரி போயிருக்கிறான். என்னட்ட இருக்கிற சொத்துக்குப் பேரன எங்கெல்லாம் அனுப்பிப் படிக்கவைச்சுக் காப்பாற்ற என்னால முடியுமடி. அதுவல்ல என்ர கனவு. அவன் இங்கிருந்து எங்கட சனத்திற்கு, ஊருக்கு உழைப்பதை என்ர கண்ணால கண்டு ஆறுதலடைய வேண்டும். அந்த நாளைத்தான் நான் காண ஏங்குறேன்.''

கிழவியின் ஒவ்வொரு சொல்லிலும் கனகம் நீந்தத் தெரியாதவள் ஆற்றில் மூழ்கித் தவிப்பது போல் தத்தளித்தாள். வெளிநாட்டிற்குத் தான் பெற்ற மூன்றுபுள்ளகளையும் அனுப்பிவைத்துவிட்டு அவர்கள் அனுப்பும் பணத்தை எதிர்பார்த்து வாழும் இழிவான வாழ்க்கை வாழும் தன்னையும் கணவனையும் சற்றுநேர மௌனத்தில் நினைத்து வெட்கித் தலை குனிஞ்சாள்.

இத்தனை வயசிலும், கிழவியின் மனத் தைரியத்தையும் ஊர்ச் சனத்தின் மேல் வைத்திருக்கும் பற்றும், பாசமும், நேயமும் அறிந்து கனகத்தின் இதயம் கலங்கியது. கண்கள் சிவப்பேற லாம்பின் ஒளியில் கிழவியின் பொக்குவாய் விழுந்த நிர்மலமான, நிர்த்தாட்சணியமான புன்னகை முகத்தைப் பார்த்து மேலும் மௌனியாக அமர்ந்திருந்தாள்.

கிழவியின் குரல் திரும்பவும் கரகரத்தது. ''எடியே கனகம்! கண்ணுக்குக் கண்ணாக வளர்த்த ஒரே மகளையும் மருமகனையும் பாழாப் போனவன்ர ஷெல்லடிக்கு இரையாகக் கொடுத்தபோது அந்த உடல்களைக்கூட ஒன்றாய்க் காணமுடியாமல் தவித்தேன். அங்கங்கள் ஆங்காங்கு சிதறுண்டு கிடந்ததைப் பார்த்தப்பவே என்ர உசிரும் போயிருக்கவேணும். இன்னும் ஏன் இழுத்துக் கொண்டிருக்குது? என்ர பேரனுக்காகத்தான். இந்த ஊர்ச் சனமெல்லாம் கூடி நிற்க நான் ஒப்பாரி வைத்துக் குளறி அழுதபோது என்னைக் கட்டிப்புடிச்சுச் சொன்னான்:

'பாட்டி நீ ஒன்றுக்கும் பயப்படாதே நானிருக்கேன்' என்று அவன் சொன்ன வார்த்தையில்தான் இன்னும் என்னுசிர் ஊசலாடிக் கொண்டிருக்குது.''

கிழவியின் கண்களிருந்து கண்ணீர் பெருகுவதை விளக்கொளியில் கண்ட கனகம் கிழவியின் நடுக்கத்திலும் உள்ள உறுதிகண்டு பிரமித்துப் போய்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைகுனிந்தபடி மெல்ல மெல்ல வெளியேறினாள்.

வாழ்க்கை முழுதும் யாருக்காக வாழ்வது என்பதைப் புரிந்துகொண்ட கிழவியின் கனவுதான் மிகவும் கெட்டியாக இருந்தது. துயரத்திலும் அழுந்திய நிகழ்ச்சிமட்டும் கிழவியை தினம் தினம் துன்பத்தின் துடிப்பில் வாட்டி வதங்கவைத்தது. கனவின் இலட்சியப் பிடியில் தீவிரமாக மூழ்கிவிட்டதால் கிழவியின் நடை, உடை, பாவனைகளில் சகிப்புத் தன்மை தென்பட்டது. அறுபத்தைந்து வயசிலும் தன் கணவனைப் பிரிந்தும் கேசத்தில் நரைப்புத் தன்மைகள் அதிகம் தென்படவில்லை.

கணவனைப் பிரிந்து இரண்டு வருடங்களின் பின்பு மகள், மருமகனின் கோர மரணம் கிழவியின் உடலையும், கேசத்தையும் முழுமையாக நரைக்கவும் நடுங்கவும் வைத்ததுடன் தோற்றமே மாறிய வாட்டமாக இருந்தது. இத்தனைக்குள்ளும் பேரன்மேல் வைத்த அளவுகடந்த அன்பும், தெம்பும் எந்நேரமும் கண்களில் நின்று உறுதிதளராது இருந்தன.

பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. காகங்கள் கரைந்து கொண்டிருந்தன. வீட்டு வளவிற்குள்ள நின்ற பசுக்களும் கிழவிக்கு முன்பாக எழுந்துவிட்டன. இருண்ட தேசத்தின் விடிவை நோக்கிய மண்ணில் முந்தின காலத்துப் பரபரப்புகளுக்கு மாறான நிலவரங்கள் மட்டும் தோன்றின. கிழவியின் காதுக்குள் புகுந்த சத்தத்தின் சந்தம், நீடித்த தாக்குதலுக்குப் போய்வரும் பாசறைப் போராளிகளின் சப்பாத்துச் சத்தம் என்பதைப் புரிந்து கொண்டாள். வாயில் படலையை இழுத்துத் திறந்து வெளிவந்ததும் கண்கள் நிலை குத்திப்போக போராளிகளின் நடையில் பதித்தாள். கிட்டப்போய் ஒவ்வொருத்தரையும் தொட்டுத் தொட்டுப் பார்த்தாள்.

பெயர்களையும் விசாரித்துக்கொண்டாள். முன் சென்றவர்களைக் கூப்பிட்டபடி முன்னோக்கி ஓடினாள். ''எடேய் தம்பிமாரே! என்ர பேரனைக் கண்டிகளா? மிக அழகானவன், ஒல்லியானவன், உங்களைப் போலத்தான் அவனும் இருப்பான். அவன்ர பெயர் சாந்தன். அவன்ர முகமும் சாந்தமடா. டேய் நீங்களும் என்ர பேரன்மார்தான். அவனக் கண்டால் ஒருக்கா என்னிட்டக் கூட்டிவந்து காட்டியிற்றுப் போங்கடா என்ரபேரன்மாரே.''

போராளிகள் ஒருவரை ஒருவன் பார்த்துக் கொண்டார்கள். கிழவிக்கு அரனை பேந்திட்டுப் போலிருக்கு என்றும் நினைத்துக்கொண்டார்கள்.

கிழவியின் தவிப்பேறிய பார்வையும், திடகாத்திரமான பேச்சும் போராளிகளை மேலும் வீரம் பொங்கச் செய்தன. போராளிகள் நடந்து கொண்டே இருந்தார்கள். கிழவி புலம்பிக் கொண்டு வாயில் படலையைச் சாத்திவிட்டு உள்சென்றாள்.

நாட்கள் வாரங்களாகி, மாதங்கள் பல உருண்டன. கிழவியின் உடல் நிலையில் கனத்த கவலைகள் சேர்ந்தன. படுக்கையில் படுக்கையாகி விட்டாள். துயரமும், புலம்பலும், பேரன் வருவான் என்ற நடுக்கமும் அறைமுழுவதும் கிடந்தாடின.

அயலவர்கள் எல்லோரும் கிழவியின் கட்டிலைச் சுற்றியிருந்தார்கள். ஒவ்வொருத்தரும் தங்களது மனதில் உள்ள அபிப்பிராயங்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையோடு கக்கிக்கொண்டிருந்தார்கள் கிழவி அசைந்து கொடுக்கவே இல்லை. கிழவியின் சொருகிய கண்களும், துவண்ட உடலும், வற்றிப் போன நரைச்ச தலையும், சூம்பிப்போன கால்களும், கைகளும், அசைவற்றுக் காணப்பட்டன. 'பேரனின் குரல் கேட்கும். என்ர பேரன் வருவான்.' பிடியில் சஞ்சலத்தோடு அனுங்கிய குரலும், கண்களும் தெம்பாகக் காணப்பட்டன. நேரம் ஆக ஆக பரபரப்பு அயலவர்களை ஆட்கொண்டு உலுக்கியது. பேரனின் காலடிச் சத்தம் வீட்டு வாசலில் கேட்கும் என்ற ஏக்கத்தோடு கிழவியைப் பார்ப்பதும், தங்களுக் குள்ளாகப் பேசிக்கொள்வதுமாக இருந்தார்கள்.

கிழவியின் கடைசி மூச்சும் கனவின் நனவிற்காகவே தள்ளிப் போட்டுக் கொண்டது போலிருந்தது.

''பேரன் வருவான் தன் கனவை நனவாக்குவான் அப்பத்தான் என்ர ஆன்மா சாந்தியடையும்.'' கிழவியின் அனுங்கல் அயலவர் காதுக்குள் கேட்டன.

கிழவியின் கடைசிக் கட்டம் இன்னும் சிறிது நேரம்தான்... !

அயலவர்கள் அதற்குள் கிழவியின் காத்திரமான முனங்கலின் முடிவை அறிந்துவிடத் தவித்தார்கள்? ஒன்று சேர்ந்த குரல்கள்.

பேரன் வந்தால் ''என்னத்தையண சொல்லுறது?''

கேள்விகள் பலவாறு பறந்துகொண்டிருந்தன.

கிழவியின் நிலமைய களத்தில் நின்ற பேரனுக்குத் தெரிவித்தார்கள். உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையும் நடுக்கம் பிடித்தது. தன் தலைய நிமிர்த்தி நேரான பார்வையை பாசறத் தலைவன் பார்த்திபன் மீது படர விட்டான்.

அவனும் அதற்குப் பதில் தொடுப்பதுபோல் சின்னப் புன்னகையோடு தலைய அசைத்தான். ''சாந்தன், நீ போய் உன்பாட்டியப் பார்த்துவிட்டு உடன் திரும்பி வா'' என்றார்.

எடுத்து வைத்த ஒவ்வொரு அடியிலும் சர்வாங்கம் அனைத்தும் நடுங்கின. போராட்ட ஆடையுடன் தோளில் தொங்கிய துப்பாக்கி சகிதம் கிழவியின் வீட்டு வாசல் படியில் காலடி எடுத்துவைத்தான். ''பாட்டி... பாட்டி என்ர பாட்டி'' அடிவயிற்றிலிருந்து அள்ளிப் போட்டான் வேதனையை. பேரனின் இரங்கல் தொனி லேசாக் கேட்டதும் கை கால்களை ஆட்டினாள்.

''பாட்டி என்ர பாட்டி! என்ன ஒருதரம் பார் பாட்டி...''

அறையில் இருந்தவர்கள் கண்களைக் குமுறச் செய்தன.

குறுகிக் குற்றுயிராய்க் கிடந்த கிழவி பேரனின் இரங்குதொனி கேட்டதும் புத்துயிர் பெற்ற அனுங்கலோடு குறுகிக்கிடந்த கண்களையும், ஒட்டிக் கிடந்த சொண்டுகளையும் அகல விரித்துக்கொண்டாள். இறுதிச் சாவின் இழுவைக்குக் கிடைத்த தைரியத்தோடு துடிதுடிக்கப் பேரனைப் பார்த்தாள். அவனது போராளியின் தோற்றமும், தோளில் தொங்கிய துப்பாக்கியும் கண்டதும் பொக்குவாய் பொங்கச் சிரித்தாள். கண்களிலிருந்து கடைசித் துளிக் கண்ணீர் ஆனந்தமாக அவன் கைகளில் விழுந்தது.

''என்ர பேரா! என்ர பேரா! என்னுடைய கடைசிக் கனவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனவாக்கிவிட்டாயடா.''

அவன் கிழவியின் பிடிய விட்டு நிமிர்ந்து நின்றான்.

''நாட்டிற்காக, நம்ம சனத்திற்காக நீ... நீ போட்டிருக்கும் அடையே என்ர நிம்மதியான சாவிற்குச் சந்நிதி. பேரா... என்ர பேரா, நீ வாழப்பு.''

அனுங்கிய குரல் அடங்கிவிட்டது...! கிழவியின் பரம்பரையின் கடைசி வாரிசு போராட்டக் களம் நோக்கி நடந்துகொண்டிருந்தான்.

●

ஈழநாடு
15-04-1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் ஆத்மாவின் அலறல்

மூலையில் தூக்கி எறியப்பட்டு விலக்கப்பட்டவன் மாதிரித்தான் எப்போதும் தூங்குவதுண்டு. யாகப்பர் ஆலயத்தின் விடிகாலை நேரத்துத் திருந்தாதி மணிச்சத்தம் கேட்கும்வரை தூங்குவான். பின்னர் திடுக்கிட்டெழுந்து வீதி நடமாட்டச் சத்தங்களைக் காதைத் தீட்டிக் கேட்டுவிட்டு கொஞ்சநேரம் சரத்தை இழுத்து சத்திமுத்துப் புலவர் கையது கொண்டு காலது பொத்திய வறுமை வாட்டத் தூக்கம் கொள்ளுவான்... உறுக்கல் குரல் கேட்டு துடித்துப் பதைத்தெழும்பி வாசல் வேலிப் படலையைத் திறந்து இருபக்கத் தெரு முனைகளையும் பார்ப்பான்... தொழில்களுக்கான ஆயத்தங்களோடு அவசரமாக நடந்துபோவர் பலர் கண்படுவார்கள். அதில் சுண்ணாகச் சந்தைக்குப் போகும் பெட்டிக்கடை வியாபாரிகளான திரேசு-எலிசம்-பாக்கியத்தக் கண்டதும் உசார் நிலை அடைவான். இந்தநேரத்தில் கலவரம் ஏதுமற்ற இரைச்சல்கள் அங்காங்கு வீடுகளிலிருந்தும் சங்கூதத் தொடங்கும் உம்... உம் நம்ம தொழிலுக்கும் நேரமாச்சு. நாரியில் சுற்றிக் கட்டியிருந்த வாழையும் புலவனின் குடைபோல் பொத்தல்கள் விழுந்த சீத்தச் சரத்தால் கண்ணில் தள்ளிய கூழையைத் துடைச்சு விட்டு... கடவாயில் வலிந்திருந்த வீணியைப் பிறங்கையால் இழுத்தபடி சரத்தை விரித்து இடுப்பில் இறுக்கமாக ஆண்முடிச்சுப் போட்ட சுறுக்கோடு விர்... விர் வில்லிருந்து புறப்பட்ட அம்பு குறிதப்பா குத்தல் நிற்றல் காட்சியின் நிலை நடையில் முதல் தேத்தண்ணிக்கடை ஜேக்கப்பர் கடைக்குப் போவான்.

வாரத்தில் ஏழுநாட்கள் ஊர்சனம் யாகப்பர் ஆலயமணிச் சத்தம் கேட்டு முழிக்கிறார்களோ, என்னமோ... உள்ளதோ... இல்லையோ! சூசைதாசன் எனும் பெயர் கொண்ட 'சப்பானி' தினமும் திருந்தாதி மணிச்சத்தத்தில் முழிச்சிடுவான்...

இவன் இந்தப் பூவுலகில் பிறக்கும் போதினில் இறைவன் ஒற்றைக் கண்ணை மூடி வரம் அளித்ததினால் உளநிலை பாதிக்கப்பட்டவனாகப் பிறந்தான். வளர வளர தேகத்தில் பலவானாக இருந்தவன் இடக்கால் சிறுசானதால் ஒருபக்கச் சரிவில் விலா எலும்பு ஏறிய நடையில் வேகமாக நடப்பான். ஒலிம்பிக் வீரனாட்டம் ஓடுவான் கறுத்த தேகத் தோற்றத்திலும் அடர்ந்த புருவங்களுக்குக் கீழ் இடக்கண் செருகல் உண்மையைச் சொன்னால் ஒண்டரைக்கண். மூக்கு முழியான முழுமையான மனிதர்களி லிருந்து சப்பானி கொஞ்சம் வித்தியாசமானவன்! வழியில் எவரிடமும் பேசமாட்டான். எனினும் யாரையோ இனம்காண முயல்வது போன்று ஒவ்வொருதரையும் கூனிக் கூர்ந்து முணுமுணுத்தபடி பார்ப்பான்...! கோபம் சாரைப்பாம்பாட்டம் பொத்தென்று வந்துவிடும். கள்ளம்-கபடம் இல்லாது மௌனயடைப்பில் தன்னைத் தானே நொந்து கொள்ளும் இரக்கத்தின் தவிப்பு தத்தளித்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரில் வாழ்கின்ற சிறுவர்களுக்கு சப்பானி என்றால் அலாதி ஆனந்தக் குதிப்பின் குதுகலம்... கூட்டம்போட்டு நின்றுவிடுவார்கள்...

டேய் சப்பானி எங்கடா போறாய்?

குளிச்சு முளுகிறயில்லையாடா?

ஊத்தை உலக்கி எத்தனை நாளடா?

இப்படி எப்படிப்பட்ட மோசமான வார்த்தைகளால் கத்திக்குளறிக் கண்டதுகளால எல்லாம் எறிந்து துரத்துவார்கள்! பதிலுக்கு சப்பானியும் 'நாய்ச்சாதி வேசை மக்களே... அம்மாமார் உங்கள என்னத்திற்கடா பெத்தாளுகள்?' வாயில் வந்த தூசணங்களால் எறிந்து அந்தச் சிறுவர்கள் ஓட ஓட தானும் தாண்டித் தாண்டி கலைப்பான். கீழ் மூச்சு மேல்மூச்சு வாங்கக் கண்ணீர் சிந்துவான். தன்னுள் தவிப்பின் கொதிப்பை ஆற்றும் மனிதம் இல்லாத ஆவேச விரக்தியின் விளிம்பில் தரையில் அரையும் சரத்தை இடக்கையால் தூக்கிப் பிடித்தபடி, அணைப்பற்ற ஆத்துமா அந்த உணர்ச்சியையும் அமுக்கடித்தபடி வேகமற்று சோர்ந்து போவான்...

இந்த மாதிரியான நேரத்தில் ஊரவர் சப்பானிக்குப் பைத்தியம் கூடிக் கொண்டு வருகுதென அப்பட்டமாகச் சொல்வார்கள். இப்படி வாய் கழிவியிற்றுச் சொல்லும் ஈட்டியின் வேதனை ரணத்தில் நின்று தன்னை இந்த நிலமையில் விட்டுவிட்டு இறந்துபோன தகப்பன் 'தீமோத்தின்' அவன் மனக்கண் முன்னால் தோன்றுவார். வீதியோரங்களில் புழுதிமணலில் அமர்ந்திருந்து வெறித்து நோக்குவது மனத்திரையில் தோன்றும். தகப்பனின் அன்பான புன்முறுவல் - ஆறுதலான தேறுதல் வார்த்தைகள் உயிர் உருகப் பண்ணும். அவனுள்ளிருக்கும் கனவு அவன் மூச்சிருக்கும் வரை நிலைத்திருக்கும். இந்தத் தகப்பன் அன்புக் கனவுதான் அவன் உயிர்! தகப்பன் உயிர் வாழ்ந்த கடைசிவரை அவனை நேசித்த அன்பு அவனைத் தினம் தினம் வாட்டும். அந்தப் பாசத் திருமுக தரிசனம் தோன்றும் காட்சியை மங்கிய உணர்ச்சியுடன் பெற்றதாயிடம் ஓடிவந்து முறையிடுவான். இவள் தாய்மைக் குரிய வாசல் திறந்து பெற்ற பிள்ளைகளை பேணிவளர்க்கும் ஊறணியல்லாத தாயவள்! தாய்மையின் பெருமைக்குக் களங்கத்தின் சின்னம் என்றாலும் பெறும் மாறாக தன்னை வளர்க்க வகைவகையான வஸ்கோப்பு பார்க்கும் நேரகால நினைப்பிலும், பெட்டிக்கடை தின்பண்டங்களை விழுங்கியதும்... கடவாய் பொங்கிய வெத்திலையக் குதப்பியபடி குடல் நீண்ட சுருட்டைப் பத்தியபடி தூணோடு சாய்ந்திருந்தாள். அவலத்தின் உபத்திரவப்படும் அந்த ஆத்மாவின் குரல் அத்தாயின் நெஞ்சினைத் தட்டவில்லை! அந்தமகனின் முறையீட்டை ஏனோ தானோ என்று கேட்டுவிட்டு ''டேய் மகனே! பின்நேரம் தண்ணி அள்ளி ஊற்றியிட்டு ஜேக்கப்பரட்ட கொஞ்சக் காசு கேட்டு வாங்கிவாடா. அம்மா 'எம் ஜி ஆற்ற' படம் வந்திருக்கு; பார்க்கப் போகணும், என்னடா நான் பறையிறது கேக்குதாடா?''

தலையத்தலைய ஆட்டியபடி திரும்பி வயசுக்கு வந்த தங்கையை சிலுவை சுமந்த யேசுநாதர் தேவமாதாவைப் பார்த்த வியாகுலமாய் நோக்கினான்.

''கடவுளே எனக்கு அருள் பாளித்தருளும்!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வதும் சிரமமாயிருக்கிறது - சாவதும சஙகடமாயிருக்கிறது? சப்பானியின் தண்ணிவாளி உழைப்பை உறிஞ்சும் தாய் - அந்த உழைப்பில் வளர்ந்து வயசுக்கு வந்த தங்கை. இப்போது சப்பனியின் எண்ணமும் - செயலும் எங்கு தள்ளப்பட்டுள்ளது?

அடங்கிப்போன அழுகையைப் பற்றிய சிந்திப்பு நெஞ்சு விம்ம விக்கி தீப்பிழம்பேறிய கண்களுடன் நினைப்பை நிறுத்தி நிற்கின்றது. ..

தன்னுடைய தகப்பனுடைய உழைப்பு முழுவதையும் உறிஞ்சிக் குடித்து சீரழிச்ச சினிமாச் சிங்காரிக்கு எப்படித்தான் தன் உழைப்புக் காணப்போகுது? கிழமையில இரண்டு-மூன்று தடவைகள் செக்கன்சோ படம் பார்த்தால் எங்கே போய்முடியும் சீவிக்கிற சிவியம்தான்? தாய்ப் பாசத்தைக் காட்டிலும் சப்பானிக்கு தகப்பன் மீதான ஒட்டுறவே அலாதியானதாக இருந்து வந்துள்ளது. இதைத் தாயும் அறிவாள்! தந்தைய இழந்தவன் தவிக்கும் தவிப்பையும் உடம்பு அலுப்பை தாங்கியபடி திரும்பவும் குந்தியிருந்து முனகுவதை அரைக்கண்ணில் கவனித்த தங்கை மரியாள் அரைக்குரலில் இரக்கத்தை இழையோட விட்டபடி பாசத்தின் அனுதாபத்தில் சாப்பானிய நெருங்கிக் கேட்டாள்...

'என்னண்ணே! தேகம் நோகுதா?'

கேட்டபடி எழுந்து அவனருகில் சென்று உச்சந்தலையில கை வைத்து நின்று நோக்கினாள். 'அண்ணே! உன்ர யோசினையும்-தவிப்பும் எனக்குத் தெரியும்! தெரிஞ்சு நான் என்ன செய்ய? ஐயா நம்மள விட்டுப் போனதோட உன்ர போக்கும் மாறிப்போச்சு. சரியா நொஞ்சும் போனாய் அம்மா உன்னை ஏன் நாய் என்று கேக்கிறதாகவும் இல்லை! ஞாயிற்றுக் கிழமையெண்டா உன்ர காசுக்குத்தான் காத்துக்கிடந்து பல்லிளிப்பா'

இப்படியே தாழ்ந்த குரலோடு நெற்றியத் தொட்டபடி ''காச்சல் காயுது! கடைகளுக்குப் போகவும் நேரமாச்சண்ணை...''

சப்பானி தங்கை மரியாளை புருவம் அடர்ந்த இமையெழுப்பிப் பார்த்தான். இன்னும் எத்தனை நாளுக்கு உவளும் தன்னை நம்பி வாழ்வாள்? இந்த அனுதாப அன்பு நீடிக்குமா? மனசின் ஆழத்திலிருந்து கவலைநேச அறிவு கவலையோடு சப்பானியத் தட்டிக் கேட்கும் தொனி மரியாளின் மனசில் கனத்தது. பதிலுக்குப் பார்த்த பார்வையில் பரிதாபம் படர்ந்ததை சப்பானி உணர்ந்தான் என்பதைக் காட்டும்முன்னம் தாயின் குரல் இடியேறென விழுந்த தோரணையில் பாசத்தின் கயிறு அறுந்து இருவரும் விடுபட்டனர்.

மரியாளுக்கு உள்ளூர வலி எடுத்தது-சப்பானிக்குக் கடைகளுக்குப் போய் வாளி தூக்கிற உபத்திர வாதை தொட்டது. ஓரிரு நிமிடத்தில் வெளிப் படலையைத் தள்ளிக்கொண்டு வெளிவந்தான்.

'டேய் சப்பானி! கவுமண்டு உத்தியோகத்திற்காடா போறாய்?'

'எல்சமக்கா நீயென்ன ஏரோபிளன் வேலைக்காண போறாய்?'

'எட தங்கம்! உவன்ர திமிறப் பாரடி!'

'சும்மா உன்ர வாயை வைச்சுக்க மாட்டியே. அவனோட இப்பயேன்ரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணகினாய்? இந்த வெள்ளனயில உவன்ர மூஞ்சில முழிச்சிருக்கிறோம்! எக்கணம் சுண்ணாகச் சந்தைக்கில என்ன சில்லெடுப்போ...? ஏன்ரா சப்பானி நாங்க உதில நிற்கிறது தெரிஞ்சாடா வந்தனி?'

'ஓமாக்கும்! நீங்க என்ன சரோஜாதேவி-தேவிகா ஆட்டம்தானே வீணி வடியப் பார்க்க'

'கேட்டியாடி தங்கம்! சப்பானியின்ர வாயை?'

'நீயேன்ரி எலிசம், சும்மா போனவனோட சொறிஞ்சனீ? வான் வருகுதடி அவனவிட்டுட்டு கடகங்களை எடுத்துக்கொண்டு ஏறுங்கடி:''

பெட்டிக்கடை வியாபாரிகளை ஏற்றிக்கொண்டு புகை தள்ளிய வான் போறபோக்கைப் பார்த்தபடி சப்பானியும் விரைவாக நடந்தான்...

அவனது மனசு இங்கும் அங்குமாகத் தாவிக் கொண்டிருந்தது. தங்கையின் வாழ்க்கையும் தாயின் போக்கும் ஒரே இடத்தில் இரு வேறுபாடுகளாகத் தென்பட்டது!

ஊருக்குச் சப்பானி அரைப் பைத்தியம்; வீட்டிற்கு அவன் நிழலில் வாழ்க்கை ஓட்டம்.

பாவம் சப்பானி தகப்பன் இல்லாத தூரதிர்சக்காரன்! தகப்பன் செத்தபிறகுதான் இவன்ர மூளைப் பிசகு அதிகமாகிவிட்டது.

மனவல்ர தேத்தண்ணிக் கடைக்குள் நுழைந்தான்.

கடற்றொழிலுக்குப் போகும் தொழிலாளர்கள்-களங்கட்டித் தொழில்-கரவலைத் தொழில் போறவர்கள் வாறவர்கள் கனபேர் இருந்து நிண்டு, தேத்தண்ணியுடன் அப்பம் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். தேத்தண்ணிய இழுத்துத் தூக்கிய வலக்கை மேல் நிற்க... மரமனவல் கேட்டார். கேள்வியில் கர்வமும் சந்தேகமும் நுழையோடும் புத்திக்காரனான மனவலின் கேள்வி யில் இன்று உற்சாகம் மிகுந்த ஆனந்தத் தொனி தென்பட்டது. கடைக்குக் கனக்கப்பேர் வந்து போயிருக்கினம்... அதனால்தான் மரமனவல் இப்படியாகியிருக்கிறான்.

''டேய் சப்பானி! நேத்தைக்கு மாதிரி இண்டைக்கும் வாளிய வாசலடியில் வைச்சுட்டுப் போகாமல் வைக்கிறயிடத்தில வைக்கனும்! என்ன சப்பானி நான் சொல்லுறது சரியா? தப்பா?'' இந்த உத்தரவு உறுக்கலிலும் அதர்மம் மறைவாக மறைஞ்சு நுழைஞ்சு தொனித்தது. சப்பானி முனங்கியபடி மினக்கடாமல் வாளிய இருகைத் தொங்களில் விட்டு தன் சரிவு நடையில் நகர்த்தினான்.

கோயில் வீதியின் நடுவே சற்றுத் தயங்கியவன் பொட்டிக்கடை வியாபாரி களை ஏற்றிப் போனவான் சந்தியில் நிற்பதைக் கண்டு கொண்டான்.

வியாபாரப் பெண்களின் குரல் உச்சஸ்தாதியில் உள்வீட்டு உறக்கத்தில் கிடந்தவர்களையும் தட்டி எழுப்பியது. ஒவ்வொரு விதவிதமான விமர்சனக் கற்களை ஆளுக்காள் எறிந்து கொண்டு நின்றனர்.

வான் றைவரும் சந்தியில் நின்ற திரேசும் தலைமறைவாகி விட்டனர். கள்ளத் தொடர்பு இப்போது காட்சிப் படமாகிவிட்டது. சப்பானிக்கு இந்தக் கிருசகேடு முன்னமே தெரியும்! சப்பானி இந்தப் புட்டுக்கேட்டைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னால் ஆரும் நம்பமாட்டினம். அவன மென்மேலும் பைத்தியமாக்கி வைத்தியம் பார்க்கச் சொல்லுவீனம்.

சப்பானிக்குத் தண்ணீர்ப்பைப்பில் தண்ணிவாளி நிறைஞ்சு வளிந்து கொண்டன... ''டேய் சப்பானி! உன்ர வாளிய எடடா; நான் தண்ணி எடுக்க'' என்று கிழவி ராசம்மா இரைஞ்சாள்.

''ராசமாச்சி இந்த வேசக்காரிகள நடுறோட்டில நிறுத்தி விறகப் போட்டு எரிக்கணும் ஆச்சி! நீ முதலில உன்ர தொழிலப் பாரடா... அவன் மரமனவல் சுடுதண்ணியால ஊத்துமுன்னம்... அப்பிடியான ஆளில்லை யாச்சி இப்ப என்னோட நேசமா இருக்கிறார். அவர் எனக்கு அடிக்க மாட்டார் ஆச்சி.''

''அடப் பாவிமகனே! அவனுக்கு வியாபாரம் நடக்குது... சித்திரை மாதத்து மீன்பாட்டுக் காலமடா தொழிலாளிகள் கண்முழிச்ச சாக்கில தேத்தண்ணிக் கடைகளத்தான்ரா மொய்ப்பினம்! மரமனவலும் ஆள் சுழியன் நேரத்திற்கு நேரம் நிறமாறுவான். ''கவனமடா சப்பானி! தண்ணிய ஒழுங்கா ஊத்தியிட்டு ஜேக்கபற்ற கடைக்குப் போறயில்லை யாடா? உந்தத் தேவடியாளுகளின்ர கிருச கெட்ட வேடிக்கையப் பார்க்கிறாய்?'' ராசம்மாக் கிழவி பெருமூச்சை விட்டாள்.

''என்ன விடிவு இது'' என்றபடி கிழவி கோயில் தெரு கேட்கிற மாதிரி திட்டிக் கொட்ட ஆரம்பித்தாள். சப்பானியின் இருகை தொங்கிய வாளி றோட்டில் உரசி கீறிச் செண்டதைச் சொல்ல எந்த நாதியுமில்லை. சப்பானிக் குள்ளும் வருத்தம் வான் றைவரோட ஓடிப்போன திரேசின் புருசனையும் பிள்ளைகளையும் நினைச்சு வருந்தினாலும் உவன் 'ஏனேசு' ஏன் உவள ஊர் சுத்த விட்டவன்? கல்யாணம் பண்ணிற வயசில புள்ளைகள் இருக்க உந்தத் தோறக்கி வந்ததென்ன உந்தக் கிருசகெட்ட புத்தி? தாம்பத்தியம் எப்படியிருக்க வேணும் என்பதை அயலட்டத்தில மற்றக் குடும்பங்களப் பார்க்கிறதில்லையா? ஏனிந்தக் குளறுபடியச் செய்தாள்?

சப்பானியின் மௌனத்திற்குள் புதைந்தன பலப் பல சங்கதிகள்... கடையில் பின்வாசலில் நின்ற மரமனவல் பிள்ளை சப்பானிய ஏறயிறங்கப் பார்த்து புன்முறுவல் பூத்தான். சப்பானியும் சங்கதிய அடுக்கினான். குரலைத் தாழ்த்திக் கொண்ட வேளை மனவல் 'அவள் திரேசு எங்கயடா போனாள்?'

இரகசியமாகச் சப்பானி சொன்னான்...

'திரேசும் வான் றைவரும் இப்ப ஆனைக்கோட்டை வீட்டில் படுத்துக்கொண்டிருப்பினம்!' சிடு மூஞ்சி மரமனவல் கெக்கலி கொட்டிச் சிரித்தார். சிரிப்பு அடக்க முடியாமல் வாடிக்கைக்காரர்கள் காதுக்குள்ளும் ரீங்காரமிட்டது. பதிலுக்கு அவர்களும் நக்கலாச் சிரித்தனர்... கடைக் காரருக்கு தண்ணீர் அள்ளி ஊத்திய சப்பானி வீட்டுப் பக்கம் வந்தான். தங்கைச்சி குடிக்கத் தின்னக் கேட்பாள். தாய்மீது காட்டிடும் வெறுப் பான தோரணையோடு தங்கைச்சி கிட்டப்போனான்! எதையாவது சொல்லுவாள் என்றா தங்கைச்சி அவன் வயிற்றில புளியைக் கரைச்சாள்.

''நீயண்ணா நேற்றுக் கொடுத்த காசில அம்மா செக்கன்சோ படத்திற்குப் போய்ச் செலவழிச்சிட்டாவாம்... சீனி-தேயிலை விடியச் சாப்பாட்டுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில்லையாம்!'' 'தங்கைச்சி நம்மமீது கவலையோ அக்கறையோ இருக்காயிந்த மனிசிக்கு?' தாய்மீதான வெறுப்பின் எச்சம் படிந்த முகத்தோடு தங்கை மரியாள் தாயைப் பார்த்தாள். பத்திக்கிட்டு வரும் கோபமும் எங்குபோய் அமுங்குது இந்தச் சப்பானிக்கு? றோட்டில் வாறவங்கள் போறவங்கள் சாடையாச் சேட்டைவிட்டால் வருகிற மூக்கு நுனிக் கோபம் சின்னளவு கூட தாயிடம் இவனுக்கு வந்ததில்லை!

தாயவள் தனிக்குரலில் சப்பானிய அழைத்தாள்...

கைப்புண் வருத்தத்தில் குந்தியிருந்தபடி

'ஊம்'

'டேய் உன்ர உடம்புக்கு என்னடா செய்யுது?'

'ஏனணை கேக்கிறாய்?'

'காலம்புறத் தண்ணி எடுத்தூற்றப் போகாமல் இருக்கிறாய்?'

'நான் போனனான் அவங்க கலைச்சு விட்டிட்டாங்க!'

'என்னத்திற்காகக் கலைச்சவங்க?'

'புண்ணக் கண்ட கோபத்தில்'

'அதுக்கென்னவாம் வந்தது அவனுகளுக்கு?'

'என்ர புண்ணப் பார்த்தா கடைக்கு வாரவங்க வரமாட்டாங்களாம்'

'அப்ப மரியாம்பிள்ளையின்ர கடைக்குப் போறதுதானே?'

'அங்கயும் போனனான்'

'அவன் என்னடா சொன்னவன்?'

''ஜேக்கப்பண்ணன் மருந்து கட்டப்போட என்று துரத்திவிட்டார்... அந்த அறுவான் மரமனவல் என்னை ஏறயிறங்கப் பார்த்திட்டு இரண்டு கன்னத்திலும். படார் படாரெண்டு அடிச்சு நெஞ்சில புடிச்சுத் தள்ளி விட்டாணை...?'' இரக்கத்தை விழுங்கிக் கொண்டு-பாசத்தைப் பக்கத்தில் வைத்துவிட்டு இன்றையப் பொழுதுச் சாப்பாடு தன் சோக்குகள் நினைச்சு விடியா மூஞ்சியோடு எரிஞ்சு தள்ளினாள்.

ஏன்ரா தள்ளிவிட்டான்? இந்தப் புண்களை எங்கயடா போய் வாங்கியிட்டு வந்தனி? இந்தக் கேள்விகளுக்கு பதில் சொன்னபடி எழுந்து குசினிக்குள் போனவன் செக்கனுக்குள் வெளிவந்தான். அவனுடைய உடுப்பில், குளிப்பில் அக்கறையிருந்திருந்தாலாவது அவன் மனசுக்குப் பாரமில்லாது இருந்திருக்கும். புண்பட்ட இதயத்தின் சுமை முழுவதும் பொங்கி வழிந்தது... கையில் உள்ள புண்களைப் பழஞ்சீலையைச் சுற்றிக் கட்டினான்... தாயின் உபத்திரவமான சொற்களையும் உதாசீனமாக கேள்விகளையும் உணர்ந்து கொண்டான். பையித்தியம் என்ற அடை மொழிச் சொல் அவன் நினைவில் தென்படவில்லை. அ... ஆ... எப்படியென்று தெரியாது வளர்ந்த சப்பானியாக ஊராரின் நல்லது கெட்டதில பங்கெடுத்துக்கொள்ளாது ஒதுக்கப்பட்டவனாக சனியன் விழுந்த ஊரில் வளர்ந்ததை மனசில் வரித்துக் கொண்டான். அதுதான் போகட்டும் அவனைக் குளிப்பாட்டி, நல்ல சறம் சேட்டுக் கொடுத்து உடுத்திப் பார்த்திருந்தாலாவது இந்தப் புண்ணென்ன... றோட்டால வழியில வாறப்போ இந்தச் சின்னப்பசங்கள் கல்லால எறிஞ்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேலி பண்ணுங்களா? அவனது அப்பன்ர அருமை இந்த நேரங்களில் நெருஞ்சி முள்ளாய் இதயத்தை ரணமாக்கும். உப்பின் அருமை உப்பில்லா உணவில் தெரியும்- அப்பன் அருமை அப்பனில்லா வீட்டில் தெரியும். இந்த மனிசி கிழமைக்கு மூன்று தடவை பார்க்கிற வஸ்கோப்பைப் பார்க்காமல் நிற்பாட்டி மிச்சம் பிடிச்சாலாவது... ஏக்கம்தான் தாயைத் தாக்க இயல வில்லை சோகத்தோடு தங்கைச்சிய நினைத்தான். அவள் வெகு நேரமாக தேத்தண்ணிகூடக் குடிக்காமல் இருக்கிறாள்... அம்மாவுக்கென்ன வெத்திலையும்-சுருட்டும் அங்ககுந்தி இங்ககுந்தி ஊர்ப்புதினம் பறைஞ் சாலே சாப்பிட்ட மாதிரி. இப்படியே வெகுநேரம் கழிஞ்சது. பின் நேரப்பாடு நேரம் வந்தது. ஜேக்கப்பரட தேத்தண்ணிக் கடைக்குத்தான் முதலில் போனான்.

'ஏன்ரா சப்பானி மருந்து கட்டினியாடா?'

'ஓமண்ணே'

'யாரட்டப் போயடா கட்டினாய்?'

'நம்மட தேவமருதத்தட்ட அண்ணே'

'அவர் உந்தப் பழஞ்சீலையாடா சுத்தினாரு?'

'என்குத் தெரியாதண்ணை, அவர்தான்!'

'பொய்தானே சப்பானி சொல்லுறாய்?'

மௌனத்தில் மரணிக்காத இரக்கம் நிறைந்த பாசம் அவனிடத்தில் நின்றது, ஜேக்கப்பரிடம் வேசமற்ற இனம்புரியாத நேசம் வீசிநின்றது.

'உந்தா இரண்டு வாளியையும் புடி. வாளிகள் துப்பரவாக இருக்குது. நீ இதற்குள்ள கை வைக்காமல் தண்ணியப் பிடிச்சுக் கொண்டுவா நான் வக்குக்கில ஊத்துறன் சரியா...? இப்படியே இரண்டு கடைகளை முடிச்சுக் கொண்டு மூன்றாவது கடை மரமனவல் கடைக்கும் வந்தான். அவருடைய கடையிலிருந்து இருநூறு யார் தூரத்தில் சந்துப் பாதையில்தான் தண்ணீர்ப் பைப் இருந்தது... இந்த ஆத்மாவின் பாடுகள் சிலுவைப் பாடுகளை மிஞ்சிவிட்டதென என் எழுத்துக்குப் பட்டது! இதனால் சகலருக்கும் இந்த மனிதப் பிறப்பு மனிதத்திற்கு நல்லதல்ல என்று எழுதுகிறேன்!

இரண்டு கடைகளுக்குத் தூக்கிய வலி, கலைப்பு கைப்புண்களின் நோவுடல்... ஆத்மாவுக்கு முத்திரை குத்தி இனிமேல் உன்னைத் திறக்க முடியாது! என்று சொல்வதுபோல் தோன்றியது. நடையின் தளர்வால் இரண்டு கைகளிலும் தொங்கிய தண்ணீர் வாளியின் பாரமும் கண்ணையும் - காதையும் மறைத்துவிட்டன! அவனையும் அறியாமல் கைகளில் சுற்றி யிருந்த 'பழஞ்சீலை' அவுண்டு ஒரு சுற்றுத்தலைப்பு இடப்புறத்து வாளித் தண்ணீருக்குள் விழுந்து கிடந்தன.

மனவல்பிள்ளையின் கண்களில் மின்பொறி கிளம்பிற்று. கடைக் குள்ளும் வெளியிலும் அந்நேரம் வாடிக்கையாளர்கள் குவிஞ்சு நின்றனர்.

மனவல்பிள்ளை நெருப்பில் மிதிகதியானவன், கண்கள் செவ்வானம் காட்ட சப்பானியிடத்திலிருந்து வாளியப் பறித்த வெப்பிசாரத்தோடு உறுமிய உறுமல் அந்தச் சுற்றாடலையே உலுப்பின! 'டேய்! வாடா பின்பக்கத்திற்கு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றான்! சப்பானி மௌனயடைப்பில் உயிர்வாதைப் பட்டான் பின் பக்கம் போன சப்பானியின் புண் கைகளை இறுகப் பிடிச்சு பற்களை நறும்பி மிருகவெறியில் அடிச்சுத் துன்புறுத்தினான். கணப் பொழுதில் பட்டறை லாச்சியத் திறந்து எடுத்து வந்த காசை சப்பானியின் கைக்குள் திணித்து விட்டு இறுதியின் உறுதி தளராமல் சொன்னான்: 'இனிமேல் கடைக்கு வராதேயடா!'

மனவலின் செயலால் வருத்தப்பட்டவன் அம்மா என்று அபயக்குரல் கொடுக்கவும் வெட்கப்பட்டான். மனவலின் கைவலித்திருக்கும், சப்பானி யின் உளம் உடைந்த சுக்கு நூறானது. அதை அறியாத மனவலின் வாயில் வராத தூசண வார்த்தைகள் பலவும் உதவிக்கு வந்தது... சப்பானியின் ரோசத்திற்கும் வீரத்திற்கும் சம்பந்தமில்லது போச்சு. ஒரு நிமிசம் கழிஞ்சு கேட்டான்? பாசத்தங்கையின் நினைவு ஏழைரோசத்தைக் கிள்ளிவிட்ட தால்...

'அண்ணே! நான் இப்ப என்னண்ணே செய்திட்டேன்?'

'டேய்! என்ர வாயில் என்னெல்லாம் வருகுது?'

''வந்தாலென்னண்ணை? நான் காலம்புற இங்குவந்து தண்ணி அள்ளி ஊத்திறேனண்ணை' ''டேய் சப்பானி முதலில் உந்தயிடத்தைவிட்டுப் போடா நாயே... இனிமேல் இஞ்சாலப் பக்கமே திரும்பிப் பார்க்கக் கூடாது வடுவா றாஸ்கல்!''

ஈரமும் இரக்கமும் நிறைந்த குறுகிய கண்களால் மனவலை வெறித்துப் பார்த்துவிட்டு, சரிஞ்ச நடையோடு கடைப்படிகளில் கால் வைத்து இறங்கினான்.

இந்த ஆத்மாவின் அலறல் இவ்வையகத்தையே அசைத்தது.

●

சிறப்பு மலர்
2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்மேல் ஆணையாக

## 1986 ஆனிமாதம் மண்டைத்தீவுக் கடலில் நடந்த உண்மைக் கதை

குறுக்கும் நெடுக்குமாக சந்துகள் நிறைந்த தெருக்கள். குருநகரின் எழிலுக்கு அழகு சேர்த்தன தெருக்கள், சந்துகள், திருப்பங்கள். முன்பின் தெரியாதவர்கள் இத்திருநகருக்குள் வந்தால் வலது பக்கமா இடதுபக்கமா எந்தப்பக்க்த்து சந்து வழியே திரும்புவது என்ற குழப்பம்! திறமையான சாமர்த்தியசாலிகளாலும் புரிந்துகொள்ள முடியாத குழப்பமுள்ள தெருக்கள். சந்துகளில் எல்லாம் பிணம் தின்னும் கழுகுகளின் (ராணுவம்) நடமாட்டம். கவச வாகனங்கள், ஜீப்பு வண்டிகளின் இரைச்சல் ஓசைகள் - இரவு முழுவதும் அங்குமிங்குமாக இரைந்து அமைதி கொண்டது.

விடிவெள்ளி விண்ணில் நின்று கண்சிமிட்டியது. வெள்ளாப்பு நேரமும் வெளுவெளுத்துக் கொண்டது. வேதனைக்குரிய உடல் ஒன்று சின்னப்பு வீட்டு வேலிப்படலையைப் பிடித்துக் கொண்ட உரத்த குரலோடு நாய்களின் குரைச்சலும் கோரஸ் பாடிக் கொண்டது. ''டேய் சின்னப்பு, டேய் கின்னப்பு, தொழிலுக்கு நேரமாச்சு. கெதியாய் எழும்பி வாடா ஆமிக்காரனெல்லாரும் போயிட்டாங்க. கெதியா வாடா'' இரண்டு மூன்று தடவைகள் உரத்து கத்திக்கொண்டான்.

''வர்ரேன்டா போடா'' என்ற குரல் வந்தது. பருத்த உடல் வலப்பக்கமாக ஆடி அசைந்து திரும்பி குச்சு ஒழுங்கைகள் வழியாக தெருக்கள் ஏறி நூறு யார் இருநூறு யார் என்ற அளவில் உள்ள வீட்டுப் படலைகள் முன் நின்று குரல் கொடுத்தபடிச் சென்று கொண்டே இருந்தான் முடியப்பு.

கரவலைத் தொழிலுக்கு வரும் தொழிலாளர்களை விடியல் இரண்டு-மூன்று மணியளவில் ஆள் எழுப்புவது வழக்கம். கரவலைத் தொழில் ஊரில் வாழ்ந்த மூதாதையர்களின் வீரம், விவேகம், விடாமுயற்சி தோள் வலிமை கொண்டு செய்யத் தொடங்கிய ஆதிபத்தியத் தொழில், விஞ்ஞானக் கருவிகள் தோன்றியிராத காலத்தில் காலம்-நேரம், கடல், காற்று, நீர், நிலமைகள் புரிந்து அனுபவத்தோடு செய்த தொழில்தான் கரவலைத் தொழில். படகில் இருந்து ''டேய்! பசங்கள் மன்றாடிமார் (மன்றாடிமார் என்பது தொழில் அனுபவசாலிகள்) எல்லாம் வந்து விட்டாங்களா?''

கரையிலிருந்து ''ஓமடா, எல்லாரும் வந்திட்டாங்க.'' கட்டுமடிக் காரனையும், தண்ணீர் (குடிதண்ணீர்) செலவுக் காரனையும்தான் இன்னும் காணயில்ல'' என்று குரல் கொடுத்தான் முடியப்பு.

''டேய்! அவங்க வெள்ளையன்ர கடைக்குகிட்ட வந்து கொண்டு இருக்கிறாங்க. நீங்கபோய் படகில ஏறுங்கடா'' இப்படியாகச் சின்னப்பு வரவு சொல்லிவிட்டு பக்கத்தில் திரும்பிப் பார்த்தான். தம்புதான் தென்பட்டார். ''டேய் தம்பு இண்டைக்கு எங்க ஓடி வலை வைப்போம்?'' என்று கேட்டுவிட்டு நகர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கடல் இருக்கிற நிலையில் இந்தப் பாழாப்போன நேவிக்காரன் விடவாப்போறான் அகல ஓடித் தொழில் செய்ய...?'' என்றவாறு ராகம் பாடின சின்னப்பு, ''மண்டைத் தீவு பக்கமாகப் போனால் எப்படி?'' என்றார். ''நீர்பாடு நல்லாத்தானிருக்குது. டேய் தம்பு வள்ளங்களும் தேவையேன்? கல்லுப்பாடு வள்ளங்கள் எடுப்பதும் இப்ப கஸ்டம் அப்ப என்னடா செய்வோம்?''

''என்னத்திற்கும் மன்றாடிமாரையும் கேட்போம்.'' சின்னப்பும் ஒரு மன்றாடிதான். இருந்தும் மற்றவர்களுடன் கலந்து பேசி முடிவு செய்வது நல்லதுயென்ற நல்லகுணம். படகு பாலத்தைவிட்டு அகன்றது. யக்கோவே!

''புதுமைமாதாவே! தொழில்பாட்டைத்தா...'' இயந்திர இரைச்சல் ஓசையுடன் கோரஸ் பாடியது 'படகு கடல் மாரிமேல் பயணம்.' மணல் பரப்பில் பனங்கூடலுக்கிடையே இருள்கிழித்த ஆதவன் வரவு நீலக்கடலின் நிறத்தை நிர்மலமாகக் காட்டியது. அலைகள் கிழித்து நுரைதள்ளி வந்த படகும் மண்டைத்தீவு 'முனை' கிட்டியதால் தன்மதிப்பிற்கு ஏற்ற அளவு ஆழத்தில் 'நங்கூரம்' இடப்பட்டு லாவி நின்றது... படகிலிருந்த தொழிலாளிகள் கட்டுமடி, கம்புகள், குடிதண்ணீர், மடுப்புப் பொட்டி, விடிசச்சோறு என்பனவற்றை எடுத்துக் கொண்டு இறங்குவதில் அமர்க்களப் பட்டுக் கொண்டனர். கடலில் கால் வைக்கும்போது ''இன்றைய உழைப்பின் வெகுமதியைப் பெறுமதியாகத் தந்துதவு கடல் அன்னையே!'' என்று மன்றாடிக் கொண்டார்கள்.

வலைகளைப் போடுவதற்கான முன் ஆயத்தங்கள் தடபுடலாக நடந்து கொண்டிருக்கின்றன. மன்றாடிமாரின் நிர்வாகம் நீர், காற்று நிலமைகளை ஆராய்ந்து படகைத் திருப்பக் கூவி நின்றார்கள்.

''டேய்...! மவுன் கல்லுப்பாடு கவனமாகப் பார்த்து அடி. அங்கு மிங்கும் பார்ப்பதுடன் கரையில் நிற்கும் எங்களையும் கவனி...'' இப்படியாகப் பலவிதமான அறிவான அலட்டல்கள் மன்றாடிமாரிடம் இருந்து பறக்கின்றன. இடுப்புக்கும் முழங்காலுக்கும் இடைப்பட்ட தண்ணீரில் முப்பதுக்குட்பட்டவர்கள்...

வலையைவிரித்து மடியை இறக்கிவிட்டதற்கான சைகை. படகின் அனியத்தில் நின்று கொண்டவனால் வெள்ளைச் சரத்தால் வீசிக் காட்டப்படுகின்றன. எல்லோருடைய நாரிகளிலும் பழங்கயிறு சுற்றிக் கட்டப்படுகிறது (வலையைக் கூட்டி இழுக்கப் பாவிக்கப் படுவது) ஒரு சில சிறுவர்களைத் தவிர. படகும் வலையை இழுக்கத் தொடங்கியது. முப்பது நிமிடங்களின் பின்பு படகும் கரை வந்து சேர்ந்தது. இருபக்க வலைகளையும் சரிசமமாகக் பிரிந்து நின்று இழுக்கத் தொடங்கினார்கள்.

அடிமேல் அடி வைத்து இழுக்கும் அழகையும் வீரத்தையும் என்னென்று எழுதுவது? கடலும்-காற்றும் இசை முழங்க கவிதைகள் பிறக்கின்றன. 'ஏலே... ஏலே' என்ற கீதத்தில் வீரம் விரைந்து செல்கின்றது. அலைமேல் அலையாக அவர்கள் உள்ளத்து உணர்ச்சிகள் வலை முடிவைத் தொட அம்பாவனின் ஆவேசம் அலையையும் மிஞ்சுகின்றது. மீன்மடி கிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிட்டதாலும் 'மேலாப்பாச்சி' இரண்டு பக்கத்தவர்களையும் பொது வாக லாவிவிட்ட பாங்கு மீன் கூடுதலாக மடிக்குள் பிடிபட்டு விட்டதையே காட்டுவதால் அவர்களின் வீரம் விரைகின்றது.

கண்ணிமைக்கும் நேரத்தில் அலையைக் கிழித்துக் கொண்டு உறுமல் ஓசையுடன் பீரங்கி பூட்டப்பட்ட மூன்று படகுகள் நாட்டின் முதுகெலும்புகள் முன் லாவி ஆடி நின்றன.

கவிதைபாடி கவலையை மறந்து வீரமாக விளையாடிய கைகளும் கால்களும் சோர்வுற்றன. இதயம் படார்... படார் நாடி நரம்புகளின் துடிப்பை...? ஒரு குவளைச் சோற்றுக்காக உழைக்க வந்த உதிரம் சிந்தும் உழைப்பாளிகள் உலகத்தில் உள்ள தெய்வங்களையெல்லாம் நினைக்கத் தொடங்கினர். மனித வாழ்க்கைக்கு அப்பால் ஒரு மிருக வாழ்க்கை வாழ்பவர்கள்தான் இந்தக் கறுப்புச் சட்டைக்காரர்கள் (சிறிலங்கா கடற்படையின்மறு ஆடைதான் முகம் மறைந்த கறுப்புச்சட்டை).

மூன்று படகிலும் துப்பாக்கிகளை நீட்டியபடி நின்று கொண்டார்கள். ஒருவன், "அடே இங்கால வாங்கடா..." என்றான்.

"ஐயா! எங்களை என்ன செய்யப் போறாய்?" என்று அறுபது வயது மதிக்கத்தக்க குரல் ஒன்று நாவலறக் கத்தியது. மிருகங்களுக்குத் தெரியுமா வயசும் மரியாதையும்? இக்குரல் தணிய, இன்னொருவன் வரிசையாக வந்து முழங்கால் அளவு தண்ணீரில நிற்கும்படி உறுமினான்.

வலைகளைப் பிடித்த கைகள் மார்போடு ஒட்டிக் கொண்டன. உழைப்பாலும் மரியாதையாலும் உயர்ந்து நின்றவர்கள் அன்னியனிடம் உயிர்ப்பிச்சை கேட்டு நின்றார்கள். படகில் நின்றவாறு இருவர் "அடோ கொட்டியா..." என்றார்கள்.

நிராயுதபாணிகளாக நின்ற தொழிலாளர்களால் அந்த நேரம் என்ன சொல்ல இயலும்... ?

"இல்லை ஐயா! நாங்கள் தொழிலுக்குத்தான் வந்தோம்." எல்லோரும் ஒருமித்துக் கத்தினார்கள்.

அவன் "நம்ம சுட்டத்தானடோ வந்தா?" தமிழின் தரம் கறுப்பு அங்கியணிந்தவன் நாவில் பிரண்டு தவித்தது.

தண்ணீரில் நின்ற ஆத்துமங்கள் குளறியழுதனர். "இந்தக் கடல் மாரிமேல் ஆணையாகச் சொல்கின்றோம். நாங்கள் தொழிலுக்குத்தான் வந்தோம்" என்றனர்.

உடல், உள்ளம், உயிர் மூன்றுமே அடைக்கலத்தைக் கேட்டன. அவர்கள் மனசு சினத்தால் சினத்தது. மிருகச் செயலுக்கு ஆயத்தமானார்கள்.

பற்கள் கெட்டிக் கொண்டன. கண்கள் குளிரில் விறைத்தன. "அம்மா.. அம்மா" என அன்னைமடி தேடியது பச்சிளம் பாலகர் இருவர்குரல். பன்னிரண்டு வயது நிரம்பாத ஜெயகாந்தன் யேசுராசா என்பவரின் அவலக்குரல் தேனாய் அவர்கள் காதுகளில் இனித்தது. "அடோ! பொடி கொட்டியா..." என்றவாறு மனிதத் தன்மையற்றவன் துப்பாக்கிய உயர்த்தினான் மூன்று படகில் நின்றவர்கள் துப்பாக்கிகளும் உயர்ந்தன...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரமாரியாகத் தோட்டாக்கள்... அந்தப் பிஞ்சு உடலையும் துளைத்தது. முப்பது உயிர்கள் அல்ல... நாட்டின் முதுகெலும்புகள் முறிக்கப்பட்டன. கடலையே நம்பிவாழ்ந்த உயர்ந்த தொழிலாளிகளின் உயிர்கள் கடல்மாரி அன்னையின் மடியில் சங்கமமாயின. இரத்த சாட்சியங்களாக ஒவ்வொரு நிகழ்வுகளும் பகிர்ந்து கொண்டிருக்கும் பாச பூமியின் நீலக்கடலே சிகப்பாச் சுடர்ந்தது.

இத்தனைக் கொடுமைகளுக்குள்ளும் ஓர் உடல் நீரில் மூழ்கியது. எங்கே போவது? மூச்சைவிட எப்ப எழும்புவது? என்ற பயத்தில் சுழியோடிக் கொண்டிருந்தான் முடியப்பு. ''அந்தக் கடவுளுக்கும் கண்ணில்லையா?'' கரையொதுங்கிய பன்டி பிரண்டு பிரண்டு அலையோடு அவதிப்பட்டது போன்ற பதகளிப்புடன் முடியப்பு கரையில். எப்படி கடற்படையினர் கண்ணுக்குத் தெரியவில்லை என்பது வியப்பாகவே உள்ளது துடித் தெழுந்தவன்.

மணல்பரப்பில் கால்வைத்த முடியப்பு நாக்குத் தெறிக்க, கால் பிடரியில் அடி விழுந்து எழுந்து ஓடினான். ஊருக்குள் எப்படி உள்ளிட்டான் என்பதை நினைக்கும்போது விழிகள் பிதுங்குகின்றன! மண்டைத்தீவு மக்கள் சிலரை அண்டி ஊருக்குச் செய்திகொண்டு செல்லத் துடித்தான். சனங்களும் பதறித் துடித்து அவனுக்கு வாகன உதவியும் கட்டிய கச்சையின் கோலத்தை, மாற்ற உடையும் வழங்கினார்கள். ஊர்ந்து சென்றதா... கார் அல்லது பறந்து சென்றதா? நிமிடங்களில் ஊருக்குள் முடியப்பு! அவனது பதகளிப்புப் பார்த்து நின்றபோது நெஞ்சே வெடித்துவிடும்! கோரக்காட்சியின் மாட்சி ஊரெங்கும் திரைப்படமாக ஓடிக்கொண்டிருந்தது. அவன் கண்ணால் கண்ட நிகழ்ச்சி அவனுள் நிலைத்து நின்றது. உடலின் நடுக்கம் ஊரவர்முன் வேகமெடுத்தது.

இந்நேரம் ''டேய் முடியப்பு, என்னடா நீ மட்டும் தப்பி வந்துள்ளாய்?'' கிழவியின் கேள்வி அவனைச் சுற்றி நின்றவர்கள் எல்லோரையும் திகைப்படையச் செய்தன. திரும்பவும் பேசினாள் ''கடவுள் உன்னைக் காப்பாற்றவில்லை! இனிமேல் நீ புலியாக மாறிவிடு.'' திரும்பவும் பேசினாள்! ''கடவுள் உன்னைக் காப்பாற்றவில்லை! இனிமேல் நீ புலியாக மாறி சிங்களவனை கிலிகொள்ளச் செய்யவே உன்னை உசிரோடு விட்டிருக்கிறான்.'' அறுபது வயதுக்கு மேல் இருக்கும் கிழவியின் நடுக்கத்தோடு வேகமாக வந்துவிழுந்த வார்த்தைகளைக் கேட்டவர்கள் கண்களும் சொண்டுகளும் செருகிக்கொண்டன. ''என்னடா, எல்லோரும் பேசாமல் பறையாமல் நிக்கிறீங்க? போங்கடா... போய் ஆக வேண்டியதைக் கவனியுங்கள். கொடும்பாவி நேவிக்காரன் அநியாயமாகக் கொன்டுட்டானே! வயித்துப் பிழைப்புக்காக தொழிலுக்குப் போன என்ர ஊர் ராசாக்கள நாயைச் சுறுகிறமாதி சுட்டுப்போட்டானே. இவன் நல்லா இருப்பானா? கடல் மாரித்தாய் அலைபோல் குமுறி எழுந்து விழுங்காமலா விடுவாள்? காலம் பதில் சொல்லும்... நிச்சயம் என்ர வீரர்கள் இதற்கு பதிலடி கொடுப்பாங்க புள்ளைகள். அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் என்பது பொய்! எங்கட புள்ளகள் உடனுக்குடன் அறுப்பாங்க பாருங்க.'' கிழவியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகத்திலும் ஒவ்வொரு சொல்லும் சுற்றி நின்றவர்களின் தேகத்தைப் புல்லரிக்கச் செய்தது. உணர்ச்சியில் உயிரைக் குடித்தவன் குரவளைய அறுக்கத் துடித்து நின்றது.

ஊர்ப்பெரியவர்கள், இளைஞர்கள் பரிதாபமான தோற்றத்துடன் உடல்களை மீட்கும் பணியில் தீவிர பங்குகொண்டார்கள். கொளுத்தும் வெய்யில் என்றும் பாராது மக்கள்வெள்ளம் பாலத்தில் நின்றவண்ணம் கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். உச்சச் சூரியன் சரிஞ்சு மேற்கால மேகங்கள் மழை வருவதற்கான மெல்லிய இருளை வீசிநின்றன. ஆங்காங்கு கூட்டம் கூட்டமாகப் பலவிதமான வீரம், சோகம், தவிப்பு, அழுகை நிறைந்த பல்லவிகள் பறந்துகொண்டிருந்தன. குளிர்க்காற்று வீசுகின்றது. மெல்லிய அலையின் ஓசையும் அலைமக்கள் இறப்பைத் தாங்கமுடியாது குமுறுகின்றது. படகுகளின் இரைச்சல் ஓசைகேட்டு அலைகள் பாலத்தோடு மோதி மோதி மடிந்து ஒப்பாரி பாடுகின்றது. அடுக்கடுக்காகப் படகுகள் வந்து கரைதட்டின! மக்கள் வெள்ளம் முட்டி மோதித் தள்ளாடி நின்றது. அழுகுரல்கள் வானை முட்டின.

படகுகளின் வங்கு இடைவெளி ஒன்வொன்றுக்கிடையிலும் உருக்குப் போன்ற உழைப்பின் உடல்கள் வளர்த்தப்பட்டுக் கிடந்தன. காடையரின் கோழைத்தன ஆயுதங்கள் விளைவித்த தழும்புகள் கண்ட சனங்களின் கண்கள் அகல விரிந்து பெருமூச்செறிந்தது. கோடரிக் கொத்து, கத்திக்குத்து, இரும்புப்பார், தலையடி, துவக்குச்சூடு ஓ! தமிழா, நீ பட்ட பாடுகளில் இப்படியொடு கோரணியவாதையும் உண்டா? வேதனையைத் தாங்க முடியாத மேகமும் கண்ணீர் சிந்தியது. மேலும் அலைகள் குமுறிக் கொந்தளித்தன.

செய்திகொண்டு வந்த நேரத்திலிருந்து குந்தியிருந்த இடத்தைவிட்டு அசைவற்று கண்களும் கண்ணீரின் பாலையாகிவிட்டன. பூவரசு மரத்தோடு உடல் ஆட்டமின்றி முடியப்பு சாய்ந்திருந்தான். இந்நேரம் மேரியம்மாக் கிழவி "தம்பி முடியப்பு எழும்பி வாடா! உன்ர சொந்தங்களக் கொண்டுவந்து வாசக சாலையில் வளர்த்தியிருக்கிறாங்களாம். போய்ப் பார்ப்போம்." இத்தனைக்கும் இறந்து கிடப்பவர்களின் இருவர் மேரியம்மாக் கிழவிபெற்ற இரு பெண்களின் கணவன்மார், உலகிற்குக் காட்ட அழவில்லை. அவள் உணர்வுகள் அழுதன. கண்கள் சிவந்து அகல விரிந்திருந்தன. அவள் அழவில்லை அழவும் பழகவில்லை.

"ஆச்சி என்னால் முடியாது. அந்தக் கண்றாவியப் பார்க்க என்னால் முடியாது." குளறி அழுதான்.

"டேய் மகனே! எது நடக்கக்கூடாது என்று நினைக்கிறோமோ அது நடந்துவிடுகின்றது. இது நம்ம ஊரில் மட்டுமல்ல, எல்லா இடமும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. இங்கு கூட்டமாக நடந்திட்டு. மற்ற இடங்களில் திக்குத் திக்காக நடக்குது. நாம் என்றும் அடிபடுபவனாக இருக்கமாட்டோம். அடிக்கு அடி கொடுப்பவனாக மாறிவிட்டகாலம் நடக்குது. எழும்பி வாடா." கிழவியின் ஆறுதல் வார்த்தையைக் கேட்டவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அணைப்போடு மெதுவாக நடந்து சென்றான்.

ஊரின் நடுநாயகமாக விளங்கும் குருநகர் சன சமூக நிலையத்தின் அடிச்சுவட்டைப் படிப்பித்த அறிவகத்தில் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட முப்பது ஆத்துமங்கள் வரிசையாக உறங்கிக் கொண்டிருந்தன. கடல் உறங்கினாலும் கண்ணுறங்காது உழைத்த உத்தமத் தொழிலாளிகள் வாய் பிளந்தபடி தூங்கிக் கொண்டாயிருக்கின்றார்கள்! போர் முடிந்த களக்காட்சி போல் காட்சியளித்தது. இறப்புச் செய்திகள் பலவாறு பறந்துகொண்டும் பதுங்கிக் கொண்டுமிருந்தன. முப்பது உயிர்களை இழந்து தவிப்பதைக் காட்டிலும் படுமோசமான செய்திகள் ஆட்சியாளர்களின் அடிவருடிகளால் மறைக்கப்பட்டு, மறுக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

இறந்த உடல்களுக்கு அஞ்சலி செலுத்த வருபவர்-போவோரோடு கதையளந்து பலவிதமான பழமொழிகளை அள்ளி வீசிக் கொண்டிருக்கின்றாள் கிழவி. இறந்த செய்திகேட்டு திடீரென பெரும்புயல் வீசி வேரோடு சாய்ந்த மரம்போல், கணவனை இழந்து, தந்தையை இழந்து, மகனை இழந்து, சகோதரனை இழந்தவர்கள் தலைமாட்டிலிருந்து கதறியழுகின்றனர். முப்பது உயிர்களை உறங்க வைக்க ஆறடிநிலம். ''எதிரிகள் கொடுத்த காயம் நாளை அவர்களுக்கு நிச்சயம் பாயும் நியாயம்.'' பிறந்த மனிதன் இன்றோ-நாளையோ நல்லதோர் இலட்சியத் திற்காக வாழ்ந்து இந்த மண்ணிற்கே சொந்தமாகிவிடுவது உண்மைகள்'' இவர்கள் இறப்பு...

நீண்ட கடற்கரைவீதி வெள்ளைப் பூக்களாக பூத்து நிற்கின்றது. நின்ற பூக்கள் முகாரி ராகம்பாடி நகர்கின்றன. நீளமான ஊர்வலம். மண்ணின் மைந்தர்களுக்கு 'நினைவுக்கல்'. அதுவே 'நிலையான நினைவுச் சின்னம்'.

●

நம்பிக்கை நாற்றுகள் - சிறுகதைத்தொகுப்பு
05-09-1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரோவியம்

சாந்தியின் அழகை நான் கண்டிராவிட்டால் என் கண்கள் அன்றும், இன்றும் குருடாகவே இருந்திருக்கக் கூடும். இதயம் அவளிடமும் கண்கள் 'பிரான்ஸ்' மண்ணிலுமாக உள்ளன. அவள்மீது காதல் கொண்டேன் என்று சொல்வதில் நெஞ்சுக்குப் பெருமையாகத்தான் இருக்கின்றது.

பௌர்ணமி நிலவின் அழகை இந்தப் பிரான்ஸ் மண் நீலவானில் காணும்போது வெறுப்பாகத்தான் தோன்றும், குதிரை முகம்போல் நீண்ட மஞ்சள் முக சணல்முடி மாதர்கள் என் சாந்தியின் நிழலில்கூட நிற்கமுடியாது என்றே வாதிடுவேன்.

தினமும் வகிடு பிரித்துவிட்ட கேசங்களால் அழகாகப் பின்னப்பட்டு, இரட்டைப் பின்னலோடு பார்க்கும்போது அலாதியான ஆனந்தத் துள்ளல் துள்ளும் உள்ளம். அவள் கறுத்திருந்தாலும் 'தேவதைதான்'. இங்கு நிறத்திருக்கும் பெண்களைப் பார்க்கின்றபோது இவளுகள் என்னென்று அலட்சியப்படுத்துவேன். பதினெட்டு வயதிலும் மிகப்பெரிய வாசகங் களையே வாய் முத்தாகச் சிந்துவாள். அவளைப் பலர் 'துடுக்குக்காரி' என்றே அழைப்பார்கள். நாட்டில் சிங்கள இராணுவம் யாழ்கோட்டையிலிருந்து 'செல்' வீசிய அனர்த்தங்களில் அங்காங்கு சிதறிக்கிடக்கும் தமிழரின் உயிரற்ற உடல்களை 'விடுப்புப்' பார்ப்பவர்களை வெப்பிசாரம் கொண்டு நெஞ்சில் ஊண்டித்தள்ளித் துரத்துவாள்! 'செஞ்சிலுவைச் சங்க'ச் சேவைப் பெண் களைப்போல் ஓடிக்களைத்து உதவிபுரிவாள். அடிக்கடி அவளது நடை, உடை, பாவனைகளைக் கவனித்து ஒரு கணிப்பும் போட்டிருந்தேன்... பொதுவாக உரையாடும் போதும் மெதுவாக ஏதோவொரு ஆத்மாத்தமான ஆதங்கம் அவளிடமிருந்து சதா தொனிக்கும்...

ஒரு நாள் நெடுநேரமாகிவிட்டது. அடைக்கலமாதா கோயில் விளக்கு களும் அணைக்கப்பட்டு விட்டது. திறந்திருந்த கதவுகளும் பூட்டப்பட்டது. செல்லடியால் சிதைந்துபோன பின்புறக் கோபுரத்தின் அருகில் நெடும் மரமாய் வளர்ந்து நின்ற 'மகோர்க்கனி' மரத்தோட முதுகை முட்ட வைத்து நின்றேன். சாந்தி 'தொண்டுக்கு' போயிற்று வரும்நேரம். என் புருவங்களை சற்று உயர்த்தினேன். இண்டைக்கு இவளிடம் நேரடியாகக் கேட்டுவிடவேணும் என்று முடிவுசெய்தேன். ''தாமதத்திற்கு மன்னிக்கவும்'' என்றவள் நெருங்கினாள். ''என்னவும் சாந்தி உம்மடபோக்கப் புரிஞ்சிக்கக் கஷ்டமாகக் கிடக்கு'' என்று கேட்டேன். கறுத்த முகத்தில் எழும்பிய இமைகளிடையே ஜொலித்த கருமணிகள் மிரட்சிகொண்டு பிதுங்கி உருண்டன. ''நீர் அக்கறை யோடுதான் கேக்கிறீயா? ''புன்சிரிப்போடு திருப்பிக் கேட்டாள்.

நான் மௌனமாகத் தலையாட்டினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாம பாஸ்கர் இப்ப அதிகமாகத் துன்பத்தைத்தானே அனுபவிக்கின்றோம்? வாழ்வு துன்பச் சுமைதான். இருந்தாலும் உயிர்கள் மடிவதில் ஏதேனும் அர்த்தம் இருக்கவேணும். அல்லவா?'' மேலும் ஆச்சரியத் தோடு புருவங்களை மேலெழுப்பினேன் சொருகிக் கொண்டன.

''என்னைப் பற்றியே சதா யோசனையாக்கும்? பாஸ்கர் நாம் பாவிகளாகிவிட்டோம். நம்ம வீதிகளைப் பாரும். எவ்வளவு பள்ளங்களாகக் கிடக்குதென்டு, கட்டிடங்களைப் பார் முழுவதும் இடிஞ்சு போய்க் கிடக்குதென்டு. பச்சப்பசலென நின்ற மரம், செடி, கொடிகளைப் பார் எப்படி கருகிப்போச்சுதென்டு, எவ்வளவு காக்கா, குருவிகள், புறாக்கள் பறக்கும் அவைகள் இப்போ எங்கே? இரவில் ஊளையிடும் நாயின் சத்தமாவது கேக்குதா? ஒரு சூனிய இருளுக்குள் அகப்பட்டுத் தத்தளிக்கின்றோம். நம்ம சனம் எத்தனை ஆயிரம்பேர் செத்தும் போச்சினம்; போகினம். நம்மூர் ஆச்சிமார், அம்மாமார் சதா தலையில் கைவைத்து ஒப்பாரியும், பயபீதியும், முணுமுணுப்போடும் தான் வாழ்க்கையை வலிந்துகட்டி இழுக்கினம். உமக்கும் கவலை இல்லையா?'' என்றாள் அவளது இடைவிடாப் பேச்சின் இடையே விடும் மூச்சில் நான் விறைச்சுப்போனேன். திரும்பவும் நான் திடுக்கிடும் வண்ணம் பேசத் தொடங்கினாள்.

''பலர் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள நாட்டைவிட்டு ஓடிப்போய்க் காலம் கடத்துவதாகவும் கேள்விப்பட்டேன். சிலர் மண்ணையும், மக்களையும் எண்ணி எண்ணி உதவி புரிவதையும் அறிவேன். நீயும் எந்த ரகத்தோடு சேர்ந்திருக்க நாளைக்கு இந்தப் புண்ணிய மண்ணை விட்டுப் போறீர்...? நான் உம்மை முழுமையாக நேசிக்கிறேன். இந்தநேரம் உங்க அப்பா, அம்மா எங்கட குடும்பம்மேல் இருக்கிற வெறுப்பைப் பயன்படுத்தி என்னை விட்டுப் பிரிக்க எத்தனிக்கின்றார்கள். அதன் வெளிப்பாடுதான் இந்தப் பயணமாக்கும்''. என்றவளது தணிந்த குரலில் என்முகம் கோரமாக நெளிந்து நொந்தது. என் ஆத்திரத்தை அடங்கிக் கொண்டேன். ஊரைவிட்டுக் கிளம்பும் ஆண்பிள்ளைகளை உசுப்பும் ஈட்டியின் ஊடறுப்பில் என் சதிரம் நடுங்கியது. திரும்பவும் பேசினாள்.

''பாஸ்கர்! என்ன நான் சொல்லுறது சரியா? தப்பா?''

''உன்னோடு விவாதிக்க விருப்பம்தான். இருந்தாலும் உன்னையும் கூட்டிப்போகத்தான் ஆசை... என்ர அப்பாவின் திடீர் ஏற்பாடும், பணமும், இந்த நிலமைக்குக் கொண்டுவந்து விட்டுட்டு, என்ர பிராணனே போயிடும் போலிருக்குச் சாந்தி.''

இப்படிச் சொன்னபோது அவள் என்னைப் பார்த்துச் சிரித்தாள். என்னுள் ஒரு வெட்கம் கலந்த பயபீதியையும் உண்டுபண்ணியது. திடீரென அவள் என் கைகளைப் பற்றிக்கொண்டாள். சற்று மௌனத்தோடு அக்கம்-பக்கம் பார்த்தேன். இரவின் நிசப்தம் நிம்மதியைத் தேடியது. பிறகு அவளது பிரகாசமான கண்களை என்னால் பார்க்க முடியவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் திக்பிரமை பிடித்தவன்போல் 'காதலின்' கனப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சினில் அமுக்கினேன். வெடித்துவிடும் விம்மலாகவே இருந்தது. அந்த நேரம் அவள் கேட்டாள்.

''பாஸ்கர் பிரான்சுக்கா போறாய்?''

இதுக்குப் பதில் சொல்லவில்லை.

''நாங்கள் சரியான ஏழைதான் என்னை மறந்திடுவியா பாஸ்கர்?''

என்னைச் சித்திரவதைப்படுத்தியது.

''நீ போனப்புறம் என்னை பிரான்சுக்குக் கூப்பிட்டால் நிச்சயம் வருவேன்!'' எங்கட காரியம் கைகூடி உயிரோடு இருந்தால்.'' அவள் கண்மணிகள் கலங்கிப் போயிருந்தன. என் கண்கள் செவ்வானமாகக் கிடந்தன. திரும்பி விம்மல் மேலிட மெதுவாகக் கேட்டேன்.

''இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறீயா?''

மௌனம் சற்றும் தளர்வு தோன்றா நிமிர்வு பிறந்தது. உறுதியோடு பேசாதிருந்தவளை சற்று உறுக்களோடு கேட்டேன்.

''அசடு பிடிவாதம் பிடிக்காதே சும்ம கிடவும். இதைப்பற்றி ஆரஅமர யோசிச்சியா?'' நான் இவ்வார்த்தையைச் சொன்னபோது அவள்பதில் கண்ணீட்டி கொண்டு பாய்ந்தன. என்னுள் நீள் துயர் ஏக்கம் எம்பிக் கெம்பியது. அவள் வாய் திறந்தாள்.

''நீரும் சண்டையைப் பற்றிப் பயப்பிடுறீரா?'' என்றாள். நான் தலையை அசைத்துவிட்டு

''எந்தச் சண்டையை?''

''இனத்திற்கிடையேயான சண்டையைத்தான்''

''பொத்து வாயை! உனக்கென்ன விசர் பிடிச்சிட்டா? பேசாமல் இருக்கமாட்டாய்?''

''இருந்து என்னத்தப் பண்றது?''

அவளது பதில்களால் எனக்கு அச்சம் பிடித்தாட்டியது. இதயத்தை வாட்டிக் கனக்கயோசிக்கப் பண்ணியது. 'மகோர்க்கனி' மரத்தைப் பிடித்த வலக்கை நடுங்கியது. அவளோ எள்ளவும் துக்கமின்றியே நின்றாள். நாளைக்கு நான் போவதையும் அவளின் நிலமையையும், துணிவையும் மாறி மாறி நினைத்து அணலிடைப் புழுவாகத் துடித்தேன். துடிப்போடு இரக்கம் மேலிடக் கேட்டேன்.

''என்னதான் முடிவு சொல்லுறாய் சாந்தி?''

''முடிவென்ன முடிவு. மடிவதும் முடிவுதானே. நாளைக்குக் பார்ப்போம்'' என்றாள். நான் கேட்டேன்,

''என்னைப் போகவிட்டு-நீ

யுத்தத்திற்குப் போய்விடுவாயா?''

இந்த நேரம் எதிர்பாராத நேரத்தில், எதிர்பார்த்திராத குரல் எங்களைத் திகைக்கவைத்தது! என் தகப்பனார் குரல்தான். இடிவிழுந்த அதிர்ச்சியில் திமிறிய சாந்தி என்னை விட்டுத்தள்ளிப் போயிற்றாள். நான் பதகளிப்போடு சொன்னேன். ''நாளைக்குக் காலம்புற ஆறுமணிக்கு புளிய மரத்தடிக்கு கட்டாயம் வரும்படி'' என்று அவளது வரண்ட குரலின் பதில் எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கவும் இல்லை. என் முட்டவந்த அப்பனைப் பார்த்ததும் மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. அவரது அடைச்ச குரல் பெலத்துத் தொனித்தது.

''இங்க என்னநின்று பண்ணுறாயடா?''

''....................''

கனத்த சரீரம் அசைந்து அசைந்து அதட்டியது. தடிச்ச மீசையின் துடிப்பு மிரட்சிக் கோபத்தைக் கூட்டியது. சாந்தி குடும்பம் மேலிருந்த உள்ளாந்தரக் கசப்பை ஒருமித்துக் கொட்டிவிட எத்தனிப்பது தெரிந்தது.

''உன்ர மரமண்டை யோசனைதான் என்னடா? இங்க இருக்கப் போறீயா? நாளைக்கு காலம்புற பயணம் வெளிக்கிடப் போறாய். அங்க உன்ர அம்மா, தங்கைச்சியைச் சுற்றி அயலவர்கள் இருக்கினம். பெரியப்பா, சின்னையா, மாமி, மச்சான்மாருக்குப் பயணம் சொல்லப் போறதைவிட்டுட்டு. இதிலவந்து நின்று அவள்தான் பெரிசெண்டு நிக்கிறாய்? போயும் போயும் ஒரு சதத்திற்கு வழியற்ற சனியன்தான் உனக்குப் பெரிசாப் போச்சு.'' என்றவர் ஓங்கி முதுகில் ஒரு போடு போட்டார். பின்னம் விழுந்த வலக்கையால் என் இடக்கையைப் பிடித்திழுத்துக் கொண்டு போய் வீட்டிற்குள் தள்ளினார்! ஒருபாட்டம் தன் குமுறலையும் சுவர்களில் எதிரொலிக்கக் கத்தினார்... பலரது குரல்கள் என்னை ஆட்படுத்தியது. ஆத்திரத்தோடு அடித்துப் போட்டமாதிரியே இருந்தேன். அன்றிரவு முழுவதும் நித்திரை வரவில்லை? கதவு திறக்கும் சத்தம் கேட்டது! யார் என்பதை அறியவும் பிடிப்பில்லை. ''கெதியாக வெளிக்கிடு'' ''பஸ் உன்னைப் பார்த்துக்கொண்டு காத்து நிக்கப்போகுது'' என்று அதட்டினார் அப்பா.

''மகனே இந்தாப்பனே 'முட்டைக்கோப்பி.' குடியப்பனே. அடம் பிடிக்காமல் வெளிக்கிடு அம்மாவும் வாரேன்.''

''அண்ணே நான் சொன்னதை மறக்காதே?'' என்றாள் தங்கைச்சி.

வானம் வெளுத்தது. புளியமரத்தடியில நின்ற 'மினி பஸ்சைச்' சுற்றி பலரது குரல்கள்.. பலவிதமாகத் தொனிக்கின்றது. என்னைச் சுற்றியும் பத்துப் பதினைந்து பேர்வரை நின்றனர். நொடிக்கொரு தடவை சாந்தி வரும் பக்கமே பார்த்துக் கொண்டு நின்றேன். எனக்கு யார் பேச்சும் காதில் ஏறவில்லை. இதை உணர்ந்த அப்பா இரக்கமாக மெல்லிதாகப் பேசினார்.

''மகனே நல்லபடியாப் போய்ச் சேரு. இப்ப முதலில் பஸ்சில ஏறுமகனே'' என்றார் இதன்பின் பல குரல்கள் கெஞ்சிக் கேட்டன. வற்புறுத்தலாகவும் இருந்தது. இருந்தும் சற்றுச் சாய்வுப் பார்வையில் வடக்கே திரும்பினேன்! கோலமயில் பறந்து வந்து கொண்டிருந்தாள். சுற்றி நின்றவர்களைப் பிளந்துகொண்டு அவள் கிட்டப்போனேன். பின்பு புளிய மரத்தடியின் கீழ் நின்றோம். சாந்தி கூறினாள்

''சந்தோஷமாகப் போய்வா பாஸ்கர்''. நான் திரும்பக் கேட்டேன்.

''என்னைப் போகவிட்டு-நீ யுத்தத்திற்கும் போய்விடுவாயா?''

அவள் பேச ஆரம்பிக்கும்போது ஏஜென்சி ஜெயத்தின் குரல் குறுக் கிட்டது. ''பஸ் புறப்படப் போகுது'' என்றான்.

''கொஞ்சம் பொறுங்க'' என்றேன். அவன் ஜெயம் வியாக்கியானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைத்தான்.

''என்ன பாஸ்கர் அடுத்த றிப்பில சாந்தியையும் கூட்டி வந்தாப்போச்சு'' என்றான். சாந்தி வெட்கத்துடன் நாணியபடி புளிய மரத்தோடு முதுமுட்ட பின் சாய்ந்தாள். அம்மா, அப்பாவின் கள்ள மனசும், வெறுப்பும் குறுக்கீடு பண்ணவில்லை. சனங்களின் வழியனுப்பும் குரலும், அழுகையும், வேண்டுதலும் பிரிவின் துயரமும், விம்மலும் இரைந்தன. மேலும் பஸ் யன்னல் வழியாக ஆமை மாதிரி தலையை நீட்டி குலறியடித்தான் ஜெயம். ''இனிமேல் ஒருவினாடியும் பொறுக்க முடியாது'' என்றான். பஸ் புறப்பட ஆயத்தமானது சாந்தி அமைதியாகவும் தீர்க்கமாகவும் சொன்னாள்.

''விம்மல்கள் தணியும்
விடிவும் எழுகவே
மானிடம் போற்றும்
நேயமும் பெருகவே''

உணர்ச்சி கொப்புளித்த வார்த்தைகளோடு என்னைப்பற்றிட அவள் கரங்கள் ஈடுபட்டன. கண்கள் பேசு பேசெனக் கெஞ்சியது. இரக்கமில்லா பஸ் புறப்பட்டது...

''சாந்தி... சாந்தி'' என்று குலறியடித்து திமிறி எழுந்து கட்டிலில் பதறியபடி திக்பிரமை பிடித்தவன் போலிருந்தேன். கட்டிலின் பக்கத்திலிருந்த சாந்தியின் சாயல் போட்டோவைப் பார்த்துவிட்டு என்ன இது கனவா? இல்லை இல்லை நிஜம்தான். நடுக்கம் தீர பல வினாடி பிடித்தது.

விடியக்காலமாகிவிட்டது. வெளிச்சம் யன்னல் கண்ணாடி ஊடாக அனுமதியின்றிப் பரவியது. போர்வையைத் தூக்கி வீசிவிட்டு எழும்பி யன்னல் வழியாகப் பார்த்தேன். எங்கு பார்த்தாலும் தெருவெங்கும் உறைந்த பனிக்கட்டி குளிர் வாட்டத்தான் போகுது. வேலைக்குப் போவதற்காக ஐந்துமாடிப் படிகள் இறங்கி வீதிக்கு வந்தேன். என்னோடு கூடவே வேலைக்கு வரும் ஆபிரிக்கன் இரக்கத்தோடு கேட்டான்.

''என்ன 'மிசு' பாஸ்கர்! வழமைக்கு மாறாக உன்ர முகம் வானம் கறுப்பதுபோல் கிடக்கு'' என்றான். நான் சின்னச் சிரிப்போடு தலை யாட்டியபடி வேலைத்தளம் வந்து சேர்ந்தேன். என்னையே தவிப்பேறிய வனாக நேர்குத்தப் பார்த்துநின்ற 'குமார்' என் நெஞ்சுமுட்ட ஓடிவந்து நின்றான்:

''டேய்! பாஸ்கர் 'களத்தில்' பேப்பர் பார்த்தியாடா?'' இல்லையென்றேன்.

''டேய்! உன்ர சாந்தி செத்திட்டாளடா. இங்க பாற்றா போட்டோவும் போட்டிருக்காங்க'' அவனது கண்களில் கண்ணீர் கசிந்தது. நெஞ்சில் குத்திய வார்த்தைகளால் நெஞ்சம் இரண்டாகப் பிளந்தது. ஆவேசமாகக் கத்தினேன்.

''டேய் குமார் உனக்குச் சாந்தி செத்திட்டாள். எனக்கில்லை என் இதயத்தின் 'உயிரோவியமாகவே' வாழ்கின்றாள். அவளது வார்த்தை களால் புனிதமாக்கப்பட்டவனாகவே வாழ்வேன்'' என்று திரும்பிய என் கண்கள் கொப்பளிப்பதைக் கண்டுகொண்டான். குமார் அவன் முதுகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டும்போது நான் புறங்கையால் கண்ணீரைத் துடைத்துவிட்டு வலுக் கட்டாயமாகச் சிரிச்சேன். அவன் என்னை இழுத்து அணைத்துக் கொண்டான். என் கண்ணீரால் அவன் முதுகு நனைவதை உணர்ந்தவன் கொஞ்ச நேரம் என்னை அப்படியே இறுகப்பிடித்தான்.

இன்றும் என்கண்களில் நீர் ததும்புகிறது. அவன் என்னை இரக்கமாகவே பார்ப்பான்

●

ஈழமுரசு
05-10-1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவன்

காலை எழுந்ததும் சுறுசுறுப்பாகப் பாடசாலைக்குப் போகவேண்டிய ஆயத்தங்களை மேற்கொள்ளும் 'செந்தமிழன்' தாயை உற்றுப் பார்த்தான்... அவனது முகத்தில் சுடரும் கனிவும் காந்தமிக்கப் புன்னகையில் மாற்றம் தென்பட்டது. ''என்னயிவன் அறிவானவன், அற்புதமானவன். அம்மா தேத்தண்ணி, அப்பம் தாங்க என்று கேட்பவன்... இன்றிவன் ஏன் இப்படியாகி விட்டான்?'' என்று தாய் மனது நொடிக்கொரு தடவை நொந்து கொண்டது .

.

இண்டைக்கேன் பள்ளிக்கூடம் போகமாட்டேன் என்று அடம் பிடிக்கிறான்? நேற்றுப் பின்நேரமும் ஒரு தடிய எடுத்துத் துவக்காகக் கொண்டு, கோழி, தாராக்களைப் பார்த்துக் குறிவைச்சுச் சுட்டுக்கொண்டு நின்றான். அப்போதே தாய் தன் கடவாய்க்குள்ளிட்ட சிரிப்போடு, யோசிப்பை... செந்தமிழன் செயல் பற்றிய யோசிப்பில் கருசனையற்றுப் போனாள்-

இவனைப்போன்ற படிக்கிற மாணவனுக்கு ஏன் நாட்டில் நடக்கும் போர் பற்றிய சிந்திப்பு? தேவையற்றது என்றிருந்துவிடவும் தாயவளால் முடியவில்லை... இல்லை... அண்ணன் புலியாகப் பாய்ந்து சிங்கள இராணுவத்தோடு போரிட்டு மடிந்ததைப் பற்றிச் சிந்திக்கிறானா?

ஆய்திறமிக்க கண்களால் நேர்குத்தப் பார்த்தவள் முகம் சுளிக்காமல் முறுவலித்தபடி கேட்டாள்.

''மகனே ஏன் இன்னும் பள்ளிக்கூடம் போகாமல் நிக்கிறாய்?''

''போறனம்மா.''

''நேரமாச்சல்லவா?''

''அம்மா இங்க எங்கயம்மா துவக்குச் சுட்டுப் பழகிறது?''

தாயின் மௌனத்தில் கொந்தளித்துப் பாய்ந்திடும் ஆத்திரமும், அழுகையும் முட்டி வெடித்திட இருந்தது. முகம்சுளிக்காது ஆழ்ந்த சோகக் குரல் நடுக்கத்தில் கேட்டாள்.

''ஏன்மகனே உனக்கிப்ப அந்தத் தொழில்? படிக்கிறதைப் பார். காலம் வரும்போது துவக்கென்ன பிளேயினே ஓடப் பழகலாம்.'' என்றவளைப் பார்த்து இறுமாப்போடு புன்னகை புரிந்தவண்ணம் ''அம்மா புலிகளட்டப் போனால் பழகலாம்தானே?''

தாயவள் குசினிச் சாமான்களைக் கழுவிக் கொண்டிருந்த இருக்கையை விட்டு எழுந்து நின்றாள்! கண்களில் கண்ணீர் பொளிய செந்தமிழனைத் தள்ளிக் கொண்டுபோய் பள்ளிக்கூடப் பையத் தூக்கிக் கொடுத்தாள்.

''வீண் வம்பு பிடிக்காதே? பள்ளிக்கூடம் முடிஞ்சு வா; பேந்து மிச்சம் கதைக்கலாம்'' என்று கூறியபடி கண்ணீரைப் புறங்கையால் இழுத்துத் துடைத்தாள். செந்தமிழன் எதையும் தாயின் செயலில் இருந்து உள்வாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. தாயும் இப்படியொரு காரியத்தைக் கற்பனையிலும், கனவிலும் எதிர்பார்க்கவில்லை. தாயிடமிருந்து இன்னமும் பயமும், நடுக்கமும், போர் நெருப்பும் அணைந்து போகவில்லை. அவளால் எந்தச் சமாதானமும், ஆறுதலும் காணமுடியாதவள். தாயின் மனதில் ஒன்றை ஒன்றுதான் இருக்கிறது... செந்தமிழன் மட்டும்தான் தனக்கு மிஞ்சிய பிள்ளை. உவனையும் இழக்கத் தயாராகவும் தற்கொடையாகக் கொடுக்கவும் அவளது தாய்மையின் காருண்யம் இரக்கவியாகுலம் ஈடுகொடுக்கப் போவதில்லை. தன் மூத்தமகனையும், கணவனையும், மகளையும் நினைக்கின்றபோது... அத்தாயின் தேகம் பதறும். இருக்கும் 14 வயது முடியாதவனும் இப்போது 'துவக்கு', 'புலி' என்கிறதை ஒருபோதும் எண்ணியதில்லாத நேரத்தில் இடிந்து போனாள். தோளில் தொங்கிய பையோடு போனவனை இமை இமைக்காது வெறித்துப் பார்த்தாள். விரைவாகத்தான் நடந்தான். இந்த வீதியிலிருந்து இவனது 'தடத்தைப்' பிரித்துவிடாதே இறைவா என்ற வேண்டுதலோடு நின்றாள்..

இவனை இப்பவே கூட்டிக்கொண்டு எங்காவது வெளிநாட்டிற்குப் போயிடுவோமா! என்று மூளைக்கும் மனதுக்கும் 'பளு' ஏற்றினாள். போருக்கு எத்தனை பேரைக் கொடையாகக் கொடுப்பது... என்பதை அதிகம் அழுகையோடு சிந்தித்தாள்.

பதினெட்டு வயதான என்னழகுச் செல்வம். குழிவிழுந்த கன்னத்தில் மிதந்து வரும் அழகே. நிலவே நீ என் மகளுக்கு ஈடா? அவளையும் இழந்து நிற்பவள் நான்! என்னையும் தாயென்றுதான் கூறுவர் என்பதைக் கண்கள் குறுகப் பனிந்தபடி கதறியழுதாள். பிறகு கணநேரச் சிந்தனைக்குப் பிறகு... ''இண்டைக்குப் பின்நேரம் சுவாமியட்டப் போய் ஆலோசனை கேட்பதாக முடிவு பண்ணிக் கொண்டாள்.

மத்தியானச் சாப்பாட்டுக்கு வரப்போறான். தாயவள் அவனுக்குப் பிடித்தமான உணவைச் சமைக்கத் தயாரானாள்.

போரைப் பற்றி பல்லாண்டுகளாக அறியாத தமிழினம் இன்று விமானக் குண்டுகளையும், செல்லடிகளையும் கண்டு கதிகலங்கிப் போனார்கள். வயல்வெளிகளும், கடல்வெளிகளும் அழிக்கப்பட்டு விட்டதையும், உறவினர்களையும், தாய்-தந்தை-பிள்ளைகளையும் போரினால் இழந்த தவிப்பில்... போரை வெறுத்திடும். சாரைசாரையான கண்ணீர்-கண்ணீர் காணிக்கையாகும் என்பதை எக்கணத்தில் நினைத்தார்கள்? தன் படிப்பும் வீட்டுப் பாடங்களும் மாணவர்களோடு மனம் மகிழ மாலை நேரச் சந்திப்பும், வீரதீர வேண்டிய விளையாட்டுக்களும், காதல் உரையாடலுமாக இருந்த பூமி தாயவளும் போருக்கு முந்தின காலங்களை நினைத்து நினைத்து அழுதாள். தன்னையே சுற்றிச் சுற்றி 'அம்மா... அம்மா...' என்றழைத்தபடி ஓடிக் குதூகலித்துத் திரிந்த தன் குழந்தைகள்... என்னழகான, அமைதியான கிராமம். குழந்தையைப் போல்தான் இருந்தது. அந்த நினைவுகளைத் திரும்பத் திரும்பக் கொணர்ந்தபோது நெஞ்சக் குமுறலைக் கட்டுப்படுத்தத் தாயவளால் முடியவில்லை. பள்ளி செல்லும் மாணவனும் போரின் கடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்குள் அகப்பட்டுப் போர் வீரனாக மடியும் காலம் ஏன் வந்தது?

மணித்தேரோன் உச்சிக்கு நேராக வந்திட்டான்!

''அம்மா இண்டைக்கு அந்தோனிப் பிள்ளை மாஸ்ரர் 'சமாதானத்தைப்' பற்றி அருமையாகப் படிப்பிச்சாரம்மா...''

தாயவள் கூனலை நிமிர்த்திச் சிரித்தாள்.

''போர் பற்றிச் சொல்லும்போது சோவியத் யூனியன் மீதான பாசிச ஜெர்மனியின் போர் மிகவும் கொடுமையானதாக இருந்தது. மனிதகுல வரலாற்றில் மிக அவலமானதாக இருந்தது என்று சுட்டிக்காட்டிச் சமாதானத்தில் வலிமையும், வாழ்வும் பற்றி அருமையான பாடம் நடத்தினாரம்மா. அம்மா நீங்கள் என்னம்மா இதற்குப் பதில் சொல்லு நீங்கம்மா?'' என்றவன் பாடத்தின் தோரணையக் கேட்டதும் தாயவள் அசந்து போனாள். அப்ப இனி இவன் போர் பற்றியும், துவக்குப் பற்றியும் யோசிக்க மாட்டான். அமைதியடைந்து விட்டான், என்றவள் அவனுக்காகச் சமைத்த வெகு ருசியான சாப்பாட்டைப் போட்டுத் தானே தீத்திவிடவேணும் என்று துடித்தாள். பொங்கி எழும்பிய பாசத்தால் செந்தமிழனை அணைத்தபடி சொன்னாள்... ''மகனே நாட்டில் போர் இல்லாதவரை சொர்க்கம்; போர் மூண்டால் நரகம். இப்போது அந்தோனிப் பிள்ளை மாஸ்ரர்தான் தெய்வம்.''

தான் எதை நினைத்தாளோ அது கடவுளால் அருளப்பட்டுள்ளது. செந்தமிழனுக்குக் குளைத்துக் குளைத்து குவளையாக அவன் கையில் வைத்தாள். செந்தமிழனும் தாயின் கையால் வாங்கும் தேவமிர்தத்தை ஓசையெழுப்பி உட்கொண்டான். தாயவள் எந்தவித வன்மமும் இம்மியும் கலக்காத வகையில் செந்தமிழனோடு பேசினாள்.

''மகனே நம்மட வளவில் ஏன் 'டாணா' 'பாணா' என்று பதுங்கு குழி வெட்டி வைச்சிருக்கிறோம் என்பது உனக்குத் தெரியும்தானப்பு?''

''அதுதான் நான் இப்போது ஏன் என்று கேக்கிறேன்?'' என்றவன் கையில் குவளையாக வைத்திருந்த சோற்றைத் தாயின் கையேந்திய கிண்ணிக்குள் எறிந்துவிட்டு திமிறியெழும்பி நின்றான். தாய்க்குக் கணநேரத்தில் பயமும், பதட்டமும் பற்றியது. உடம்பு பதறியது. செய்வதறியாது கல்லாய்ச் சமைந்தாள். மனம் கடலாய்க் குமுறியது.

மத்தியானச் சாப்பாடு முடிந்து பின்நேரப் பள்ளிக்கூடத்துக்குப் போய்வந்தான். தாயவளுக்கு அவனது வரவும் வார்த்தையும்தான் தன்னுணவாகவும் குடிநீராகவும் இருந்தாள். அவளது அடிவயிறும் சிலநேரங்களில் திடீர் திடீரெனச் சத்தமிட்டன. அப்போதெல்லாம் இந்த வயிற்றில் மூன்று பேரைச் சுமந்தேன். இரண்டு பேரையும் தன்னுயிரினும் மேலான கணவனையும் இழந்ததைச் சொல்லித் தட்டி அச்சுறுத்தும்.

படர்ந்த சோகம் விலகமுடியாதவேளையில் செந்தமிழன் பள்ளிக்கூடம் விட்டு வந்தான். 'பைய' மெதுவாக மேசைமீது வைத்தான். வழக்கத்துக்கு மாறாக தினமும் பையக் கழட்டி நிலத்தில் போடுவான். இன்று மேசையில் அச்சறுக்கையாக வைத்தான். தாயவளுக்கு சற்று மகிழ்ச்சி, மனசிலும் முகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிவிலும் தோன்றியது...

''அம்மா'' என்றான்

''என்ன மகனே'' என்றாள்

''அம்மா இண்டைக்கு விஞ்ஞான மாஸ்ரர் சுவாம்பிள்ளையார் சொன்னார். போராயுதங்களால் நாளைய மக்கள் பாதிக்கப்படப் போகின்றனர். அந்தக் கெந்தகக் கணப்பில் வெந்து அங்கவீனர்களாகவும் சுகாதாரமற்ற சமூகமாகவும் அமெரிக்கன் யப்பான் மீது கண்மூடித்தனமாப் போட்ட கிரேசிமாக் குண்டின் அனர்த்தங்கள் போல் நம்ம தமிழீழம் மாறியிருக்கிறது. இதற்கொரு முடிவு வேண்டும்... இதற்கொரு முடிவு வேண்டுமெனில் விரைவில் நாடு பிரியவேண்டும்... இல்லையே போர் முடியவேண்டும். இல்லையே நம் தமிழ்ச் சமூகம் செத்து மடிய வேண்டும் என்ராம்மா''.

அவரது விஞ்ஞான ரீதியான ஆய்வுக்குள்தான் அத்தனையும். விஞ்ஞானத்தின் வீம்புக்குள்தான் போரும் அரசியலும்... தாயவள் மேலும் தன்னறிவின் பலத்தையும் பாசத்தையும் விதைத்திட முனைந்தாள். முயன்றும் பார்த்தாள்... அதற்கிடையில் செந்தமிழனை யாரோ கூப்பிடும் குரல் கேட்டு அந்தத் திசை வந்த வழியே தேடிப் போனான். தாயவள் திசை தெரியாது தடுமாறினாள். 'சுவாமியும் வேண்டாம், சாமியும் வேண்டாம். இவனைக் கொண்டு எங்காவது போயிடுவோம்' என்று தீர்க்கமான முடிவெடுத்தாள்...

இந்த முடிவு முடிவுக்குவர மாதங்கள் ஓடியது. இப்போது செந்தமிழன் புலிகளின் பாசறையில். போர் முனைக்கான சகலத்தையும் அணிந்து கொள்ளத் தயாராகிவிட்டான். போர் முனைக்குரிய கத்தியும் எறி குண்டுகளையும் இடையில் மாட்டிக்கொண்டான். கழுத்தில் நஞ்சுக் குப்பி நாடாவைத் தொங்கவிடும் முன் முத்தமிட்டுக்கொண்டான். பின்னர் கழுத்தில் தொங்கவிட்டு நிமிர்ந்து நின்றான். தோட்டாக்கள் நிரப்பப்பட்ட கைத்துப்பாக்கியும் நாரிப்பட்டியில் சொருகிக் கொண்டான். காட்டு வழிப் பாதைக்கான திசைகாட்டும் கருவியையும் மேலுடையின் கைப்பகுதியில் வைத்தான். கையில் ஏந்திய பாரமான துவக்கையும் ஏந்தப் பழகிய வனாகிவிட்டான்...

இப்போது தாயை மறந்தான்! தாய் நாட்டைக் காக்கப் புறப்பட்டு விட்டான்... ஆனால் தாயவள் தன் மகன் திரும்பி வருவான்... பெரும் பாலான ஆவல் குடிகொண்டவளாக என்றுமே காணாத திக்பிரமையில் கல்லாய்ச் சமைந்திருந்தாள்.

●

12.10.2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியப்பாதை

குருவூர் பாடசாலை இன்று வழக்கத்திற்கு மாறாக மிகப்பெரும் அமைதியில் மூழ்கித்திருந்தன. மாணவர்கள் எல்லாரும் கிட்டத்தட்ட நானூறுக்கு மேற்பட்ட மாணவர்களும் பிரதான மண்டபத்தில் காலைச் செபங்களை முடித்துவிட்டு-பாடசாலைக் கீதம் பாடிய பின்னரும் அமைதியுடன் எதிர்பார்ப்போடு காத்து நிற்கின்றனர். ஆசிரியர்களும் வழமைக்கு மாறான அக்கறையான ஈடுபாட்டிலும் வரவை விரைந்து நோக்குகின்றனர். முதலில் யாகப்பர் ஆலயத்தின் அருட்தந்தை ஞானப் பிரகாசம் அடிகளார் மேடைக்கு வந்தார். ஓர் குட்டிப்பிரசங்கம் நிகழ்த்தினார். பிற்பாடு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் புதிதாக அதிபர் பொறுப்பேற்கும் நிர்வாகக் கடமையாளனை ஆசிர்வதித்து பொறுப்பை ஒப்படைத்தார். அதிபர் எதுவுமே பேசாமல் நின்றார். அவரது கம்பீரமான உருவம் மாணவர்கள் மத்தியில் புதிய தெம்பினைப் படைத்திருந்தன. ஆசிரியர்கள் உன்னிப்பாக கவனித்து நின்றனர். இன்னும் சிலர் காதுக்குக் காதுவைத்துக் கதைத்துப் பல்லிளித்து சிரித்தனர். ஒரு அதிபரின் கடமையும் இலட்சியமும் எதுவாக இருக்கவேண்டுமோ! அது இப்போது இந்தப் பாடசாலைக்கு அதிமுக்கியமாகத் தேவைப்படுகிறது. இன்றுதான் இந்தப் பாடசாலைக்கு பட்டதாரி அதிபர் கிடைத்திருக்கிறார். இதனால் இந்த ஊர்மக்கள் அளவற்ற மகிழ்ச்சியடைகின்றனர். இவர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் படிப்பித்த முதல்நிலை ஆசிரியர் இன்று அதிபர்

இறைக்க இறைக்க ஊறுவது கிணறு
கொடுக்கக் கொடுக்க வளரும் கல்வி
இதைப் பெற்றுவாழ்ந்தால் முன்னேற்றம்
பெறாமல் வளர்ந்தால் நிலைதடுமாற்றம்

இன்று புதன் கிழமை. அதிபர் சவிரிமுத்தர் பள்ளிகூடத்தின் பிரதான வாசலில் நிதானம் தப்பாத கூரிய பார்வையுடன் பின்னம் கைக்கட்டோடு நின்றார். அந்தக் கம்பீரத் தோற்றத்திற்குள் பலவிதமான நினைவலைகள். இப்பாடசாலையில் படிப்பித்த ஆசிரியர் கவலையாக அன்றொருநாள் சொன்னவைகள் மனப்பரப்பில் தெளிந்த நீரோடையாக ஓடியது... செயல்படுத்தத் தூண்டியது... நீங்கள் அதிபர் பொறுப்பெடுத்துத்தான் குருவூர் மக்கள் கல்வியைக் காப்பாற்ற வேண்டும். இப்படியாக பலவற்றைச் சாடியது நொடிக்கொரு தடவை நெருடலாக நெகிழ்ந்தது. சவிரிமுத்தர் அதிபர் பொறுப்பெடுத்து இரண்டு நாட்கள்தான் கழிந்திருக்கின்றன! மூன்றாம் நாள் இப்படி விறுமனாட்டம் வாசல் நடுவில் குத்துக் கல்லாட்டம் நிற்கிறார்.

''என்னவும் அந்தோனி! வந்து இரண்டு நாளுக்கு நாலுவருட சேவைத் தொண்டனாக விராப்புடன் பிதுக்கிக் கொண்டு நிக்கிறார்?''

ஆங்கில ஆசிரியர் கணக்கு ஆசிரியரைக் கூப்பிட்டுக் கேட்டார். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணநேரம் யோசனை பண்ணியவர்... மறுகணம் ஒருவித நக்கலாகப் பதில் சொல்லிச் சிரித்தார்.

''பட்டதாரியல்லவோ பள்ளிக்கூடத்தைத் திருப்பி வைச்சுத் தலை கீழாப் பாடம் நடத்தத் திமிர்கொண்டு நிக்கிறார் போலிருக்கும். எப்படியோ நம்ம வழிக்கு வந்திடுவார் நீங்க ஒண்டையும் யோசிக்கா தேயுங்க! போகப் போக போக்கிரி ஆரு! யோக்கிரி ஆரெண்டு தெரிந்திடும் மாஸ்ரர்.'' இருவரும் கோபமும் நக்கலாகவும் கைதட்டித் சிரித்தனர்.

இந்த ஊரில் உள்ளவர்கள் அதிகம்பேர் கற்காமைக்குக் காரணம் போதிப்புள்ள ஆசிரியரின் கவனக்குறைவும் வந்துபோன அதிபர்களின் நிர்வாகக் கடமையுணர்வும் ஒழுக்கக் கடைப்பிடிப்பும் அற்றதால்தான் என்ற பெரும் கவலை மேலும் மேலும் சவிரிமுத்தரை உள்ளூர வெதும்பப் பண்ணியதும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கடமை புரிந்தபோது எஸக்கியல் மாஸ்ரர் கவலையோடு கூறியவையும் ஞாபகக் கற்களாக வந்து விழுந்தன.

இந்த ஊர்மக்கள் நல்லவர்கள். இருந்தாலும் காலம்தள்ளுவது கத்திமேல் நடப்பதற்கு ஒப்பானது. அதுமட்டுமல்லாது ஐந்தாம்-ஆறாம் வகுப்பு வரை நன்றாகப் படிப்பார்கள் தொடர்ந்து படிப்பைத் தொடர முடியாத நிலை ஏன்? எதற்கு! என்று விசாரிக்கும் கடமையுணர்வுள்ள அதிபர்கள் இன்னமும் முயலவில்லை. இந்த மொக்குகளோடு எந்த முக்கியத்துவத்தை முன்னெடுத்துச் செல்லப் போறீங்கள்? இப்படியாகக் கவலைப்பட்ட தோடு வேண்டுதல் புரிந்தவண்ணம் சத்தியம்கேட்டு கையெடுத்துக் கும்பிட்டார். இதையெல்லாம் நினைத்துச் சலித்துக் கொள்ளாது உள்ளூரப் பக்குவப்படுத்திக் கொண்டவர். ''இந்தஊர் பிள்ளைகள் நாலு எழுத்துப் படிக்கவேணும், இந்தப் பள்ளிக்கூடம் கல்லூரி அளவுக்கு உயரவேணும். ஊர்வாசியான றோமான் மண்றாட்டாக் கேட்டதும் அதிபர் உங்கட புண்ணியத்தால எங்கட வாரிசுகளின் கல்வி முன்னேற வேணும் உங்கட உத்தியோகமாக எண்ணாமல் ஊருக்குப் புள்ளைகளுக்குச் செய்யுற பெரும்தொண்டாகத் தர்மமாக செய்ய வேணும்'' என்றவரையும் மனக்கண் முன் நிறுத்தினார். இந்த ஊரில் என்ன காரணத்திற்காக படிப்பைப் பாதியில் பாழடிக்கின்றார்கள்? வறுமையையும் சோம்பேறித்தனத்தையும் சாக்குச் சொல்லி வீணாக்குகிறார்கள். எதற்கும் முதல் பொறுப்பு வாய்ந்த பெறுமதி சமூகத்திற்குள் நுழைவதுதான். இதற்கடுத்தது பாடசாலை புனருத்தானம் செய்யப்படவேண்டியது. ஆசிரியர் பற்றாக்குறைகளையும் மேலிடத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும்; வகுப்பறைகள் போதியளவு இல்லாதிருப்பதைச் சுட்டிக் காட்டி புதிய கட்டிட நிர்மாணப் பணிக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ள வேண்டும்; சுற்றியுள்ள முட்கம்பி வேலியை அகற்றி கொங்கிறீட் மதில் எழுப்பவேண்டும் இவற்றையெல்லாம் நிறைவேற்றி முடிப்பதாகின் சமூகத்தோடு பரஸ்பரம் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும். இவையாவும் நிச்சயமாகச் செயல்வடிவம் பெறும் எனும் நம்பிக்கையில் நின்றவருக்கு மாணவனைக் கண்டதும் வியப்பு மேலிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பெடுக்காமல் உதில நின்றேன் மிரண்டு மிரண்டு ஒளிச்சுப் பிடிச்சு விளையாடுறான்? அந்தக் காலக் கை கடிகாரத்தைப் பார்த்தார். நேரம் பத்துமணி. வலதுகையை எழுப்பிக் கூப்பிட்டபடி மாணவன் கிட்டப் போனார். அவன் தயங்கித் தயங்கிப் பின்பக்கமாகப் போனான். பயம் தோன்ற ஆரம்பித்தது. கிட்டப்போனால் அடிப்பாரா? இல்லை எச்சரித்து வகுப்புக்குப் போகச் சொல்வாரா? சவிரிமுத்தரின் அதட்டல் தொனி ஏறித் தாழ்ந்ததும் மாணவன் அவர்கிட்டப் போய்த் தலை கவிழ்ந்து நின்றான்.

''வகுப்பில் பாடம் எடுக்காமல் இங்கென்ன நின்று பண்ணுறாய்?''

மாணவன் பயத்தால் உடைந்த சொற்களைக் கோர்வையற்றுக் கக்கினான்...

''ஆங்கிலமாஸ்ரர்! அவக வீட்டுக்கு தேத்தண்ணி-பலகாரம் வாங்கி வரும்படி. . . ஒவ்வொரு நாளும் அனுப்புவார்; நான்தான் போவேன். இப்ப நான் போகட்டுமா சேர்?''

மாணவன் கூறியதைக் கேட்டதும் சவரிமுத்தர் பதறிப்போனார். படிக்கவேண்டிய நாள்பாடம் தினமும் இந்த மாணவனுக்கு வீணாகிப் போய்விட்டது. இவன் தலைவிதிக்கு யார் காரணம்? நிர்வாக நிதானத் தோடு சிந்தித்தவர் அந்த மாணவனை திருப்பி அனுப்பி ஆசிரியரை அழைத்துவரும்படி பணித்தார். பின் திரும்பி அறிவுமிகுந்த ஆத்திரத் தோடு அதிபர் அலுவலகத்திற்குள் நுழைந்தார். அன்றுவந்த தபால் கட்டு மேசையில் கிடந்தன... காகிதங்களை உடைத்துப் பார்த்த வண்ணம் நெற்றியில் சுருக்கங்கள் விழயிருந்தார். ஆங்கில ஆசிரியர் வாசல் வழியாகத் தலைநீட்டி உளவு பார்ப்பதுபோல் ரகஸியமாக எட்டிப் பார்த்துவிட்டு நிமிர்ந்தவர் பக்கத்தில் நின்ற மாணவனைக் கோபமாகப் பார்த்து ''நீ வகுப்பில போயிரு!'' என்று சொன்னது பாதி சொல்லாதது...

மிகுதி தடுமாறத் திரும்பவும் உளவு பார்த்தார். ஆங்கில ஆசிரியரின் முகம் மாறியது! கண்கள் மிரட்சிகொண்டன. ''இவர் ஏன் இப்படி அதிபரை உளவு பார்க்கிறார்?'' தயக்கமற்ற கேள்வியோடு குரல் கொடுத்தபடி ஆங்கில ஆசிரியர் முதுகில் தட்டினார் தமிழ் ஆசான் கள்ளமில்லா வெள்ளை மனத்துடன். ஆங்கில ஆசிரியருக்கு இப்போது மேலும் தர்மசங்கடமாகிப் போனது. இந்தாளுக்குத் தெரிந்தா பள்ளிக் கூடத்தில் எல்லாருக்கும் வெளிச்சம் போட்டிடும்! இதயத்தில் விழுந்த லேசான அதிர்வை சற்று மறக்க முயற்சித்ததும் அப்பட்டமாக பொய்யைத் தமிழ் ஆசானிடம் சொன்னார்.

''மாஸ்ரர்! அதிபர் இருக்கிறாரா? இல்லையா? என்று பார்த்துப்போக வந்தேன். நீங்க உள்ள போங்க மாஸ்ரர்'' என்றவர் திரும்பி விரைவாகப் போனார். கதவைத் தள்ளிக்கொண்டு தமிழ் ஆசான் தன் வெண்கலக்குரல் தொனிக்கக் குரல் கொடுத்தார்.

''வணக்கம் அதிபர்''

''வணக்கம்... வணக்கம் என்னங்க மாஸ்ரர் நம்ம பள்ளிக்கூடம்?''

அதிபரின் கேள்வியில் அதிர்ந்தவர், தயங்கியபடி திரும்பக் கேட்டார்.

''நான் உங்களவிட வயசில் மூத்தவன். என்றாலும் நீங்க பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டத்தாலும் சிறந்தவர். உங்கட கடமையைச் செய்யுங்க! ஊர்ப் புள்ளைகள் இனியாவது நன்றாகப் படிக்கணும். சமூகம் கல்வியில் முன்னிற்க வேணும்.

எதிர்காலம் கல்வியில் ஆழவேருண்ட
நிகழ்காலம் கல்வியை ஊட்டவேண்டும்

ஆங்கில ஆசிரியர் போல்... அவற்ற புட்டுக்கேடு... தட்டிக் கேக்கனும்!'' இப்படிப் பேசியவர் மறுகணம் வாயைப் பொத்திக் கொண்டு தமிழ் ஆசான் வெளியேறினார். ஆங்கில மாஸ்ரர் தயக்கத்துடன் வந்தவர் வாய் திறந்து எதுவுமே பேசவில்லை. அதிபர் சவரிமுத்தரின் புன்முறுவல் அவர் இதயத்தில் ஈட்டிபோல் பாய்ந்தது!

''குருவூர் என்று பெயர் இந்த ஊருக்கு! கையெடுத்துக் கும்பிட வேண்டிய குரு ஸ்தானத்தை நீங்கள் இனிமேல் களங்கப்படுத்த மாட்டீர்கள். வகுப்பு நேரத்தில் மாணவர்களுக்குப் போதிக்கவேண்டிய கடமையைக் கண்ணாகக் காக்க வேண்டும்...

தாயை இழந்து வாழலாம்
கல்வியை இழந்து வாழமுடியாது!

இனிமேல் இத்தவறை விடமாட்டீங்க! என்மீது நீங்கள் வருத்தப்பட வேண்டிய தேவையுமில்லை என நான் நம்புகிறேன்.'' என்று நிறுத்தினார் அதிபர். குற்றயுணர்வு உள்ளூர உபத்திரவம் பண்ண ஆங்கில ஆசிரியர் தன் வகுப்புப் பாடத்திற்குப் போனார். அதிபர் அவருக்கு ஒரு வகுப்பே எடுத்த மனநிலையில் நிமிர்ந்தார்.

பெருமூச்சை விட்டபடி எதிர்கொள்ளும் நிகழ்வினைப் பற்றிச் சிந்தித்தார். சமூகத்தின் முன் செல்லவேண்டிய தேவை அதிகம் உள்ளது. கத்தோலிக்க மதப் பாடசாலை என்பதால் மாணவர்களை ஞாயிறு கடந்திருநாள் பூசைக்கு ஒழுங்காக வரப்பண்ணவேணும். அதற்காக மாணவர்கள் தலைவர்களிடம் ஒவ்வொரு வகுப்பிற்கான பதிவேடு வழங்கப்பட்டது. அந்தக் கிழமையே பூசைக்கு வருபவர்கள் வரவு பதியப்பட்டது. வராதவர்களை அதிபர் வரவுக் குறிப்பேட்டில் பார்த்த பின்னர் வராதவர்கள் காலைச் செபம் முடிந்ததும் மேடையில் முழங்காலில் இருத்தித் தண்டனை பெறுவார்கள். இவ்வொழுங்கு மாணவர்களின் சீர்திருத்தத்திற்கும் மனவொழுக்கத்திற்கும் உகந்த விடயமாகக் கருதப் பட்டது. சவரிமுத்தர் அதிபரான பின்னர் பாட சாலைக்கு வராமல் தெருவில் வீணாக நின்று விளையாடிய பிள்ளைகள் குறைந்து விட்டனர். அப்படி விளையாடும் பிள்ளைகளைக் கண்டால் அதிபர் அவர்களைப் பற்றி விசாரித்து உடனடி நடவடிக்கையாகப் பெற்றோர்களைச் சந்தித்துக் காரணகாரியங்களை அறிந்துகொள்வார். சையிக்கிளில் பலதூரம் இருந்து வந்தாலும் சோர்வடைவதில்லை... விடிகாலையில் மீன் வாடிக்கு வருவார். சிறுவர்கள் ஏன் படிப்பை நிறுத்திவிட்டுத் தொழிலுக்குப் போறானுகள்? என்பதைப் பலரிடம் துளாவித் துளாவிக் கேட்டுத் தெரிந்துகொண்டதும் மிகுந்த துக்கம் அவரை ஆட்கொள்ளும். பெற்றோர்-ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் இதைப்பற்றியே அதிகம் பிரலாபிப்பார். அண்மையில் மனதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நெருடல்! ஊரவர்கள் மதிப்பு-மரியாதை தந்தாலும் பிள்ளைகள் படிப்பைப் பற்றிய சிந்தனையைச் சீர்தூக்கிப் பார்க்கினம் இல்லையே என்பதாகும். சமுதாயக் கேடுகள் ஒழிய வேண்டுமானால் அக்கேடுகளை எடுத்துக்காட்டி அவற்றின் தகாத பண்புகளை விளக்கத்தான் வேண்டும். மானம் போய்விடும் என்று மூடிவைத்தால் உள்ளதும் நாறி நாற்றமெடுத்துத் தான் ஆகும். எனவே கேடுகளை எடுத்துக் காட்டுவோரைத் தடுப்பதும் சமூகத்திற்குக் கேடு விளைவிப்பதேயாகும். இதனை நன்குணர்ந்து உணர்த்தியும் உள்ளார்.

கல்வி பெறுவதே பேரின்பம்
பெறாமல் விட்டால் பெருந்துன்பம்

இதை உணராவிட்டால் இந்தக் குருவூர் எதிர்காலம் இருள் சூழ்ந்து விடும்! இப்படிப் பலப்பல யோசனையில் விரைவாக ஓடிவந்த றலி சையிக்கிள் முன்சில்லில் வீதியில் ஆணிகுத்திக் கிடந்த பலகைத் துண்டின் கறல்ஆணி ஏறி ஓட்டை விழுந்த நிலையில் சையிக்கிளை உருட்டிக் கொண்டு மிகவும் களைத்துப் போய்வருவதை றோமான் கண்டு துக்கப் பட்டார்... நெற்றியில் குண்டு குண்டாகக் கிடந்த நீரைச் சுட்டுவிரலால் வழித்து எறிந்ததும் றோமானின் இரக்கத்தையும் தடுமாறும் உடைந்த குரலையும் கேட்டார்.

''சையிக்கிள் காத்துப்போனா ராசதுரையட்டக் கொடுத்துக் காத்தடிக்கிற தானுங்க... ஓட்டை என்றாலும் அவன் ஒட்டித் தருவான்தானே! இப்ப என்னட்ட சையிக்கிளத் தாங்க நான் சரிபார்த்துக் கொண்டாரேன்!''

''றோமானின் கெஞ்சுதலைப் பார்த்த அதிபர் சவரிமுத்தர் கடமைப் படுவதற்கும் வரையறை உண்டு. புன்சிரிப்பு மாறாமல் இதுகிடக்கட்டும் றோமான். இந்த ஊர்ப்பெற்றோர் ஏன் கூட்டத்திற்கு அழைத்தாலும் வாறாங்கயில்லை? இத்தோடு இன்னுமொரு முக்கிய பிரச்சினை! பள்ளிக்கூட நேரத்தில தென்னையில வீட்டு முகட்டில ஸ்பீக்கர் கோணுகளைக் கட்டி சினிமாப் பாட்டுகளைப் போட்டு பாடமே நடத்த முடியாத தொந்தரவாக இருக்கு றோமான்! பாட்டுச்சத்தம் பள்ளிக்கூடத்து முகட்டைக் கிழிச்சுக்கொண்டு வந்து காதுச் சவ்வையே கிழிக்குது! இதை நிறுத்தணும் இல்லையே நாளையில இருந்து நானொரு போராட்டமே தொடங்கப் போறேன்... நிறுத்துவேன்!'' றோமான் மிகுந்த பணிவோடு மௌனமாக நின்று கேட்டுக்கொண்டார். ''எந்த வீட்டில இருந்து ஒலிபெருக்கிச் சத்தம் வந்தாலும் அந்த வீட்டின்முன் மாணவர்களைக் கூட்டிப்போய் அதை நிறுத்தும்வரை மௌனப் போராட்டம் நடத்துவதாக!'' அதன் பின்பாவது இந்தச் செயல் மாணவர்களின் கல்விக்கு இடையூறு விளைவிப்பது என்றுணர்ந்து கொள்வார்களாக. இதைக் கேட்டதும் றோமான் பெலத்துச் சிரித்தார்! சவரிமுத்தர் ஆத்திரத்தோடு பாதிச் சிரிப்போடு சையிக்கிளை உருட்டிக்கொண்ட விறுவிறுவெனப் போனார். பின்னர் நின்று பார்த்த றோமான் இருகை எடுத்துக் கும்பிட்ட படி இறைவனைத் துதித்தார். அவர்வேண்டிக் கொண்ட பிரார்த்தனையில் இந்த ஊருக்கு நல்லொளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவித்தருள் புரிந்த ஆண்டவர் இத்தெய்வத்தை நீண்டகாலம் கடமைபுரிய அனுக்கிரகம் பண்ணியருளும் தயாபரனே! சிறுவயதிலிருந்து வறுமையான குடும்பத்தில் மிகவும் கஷ்டப்பட்டுப் படிச்சு முன்னுக்கு வந்தவர்.

கடலோரக் கிராமமான தாளையடியிலிருந்து நாற்பது மைல் தாண்டி வந்து யாழ் புனித சம்பாத்திரிசியார் கல்லூரியில் கல்வி கற்றவர் வந்து போவதிலேயே வாழ்க்கை வெறுத்துவிடும். அன்று அக்கல்லூரியில் வெள்ளைக்காரப் பாதிரிமாரின் கட்டுப்பாட்டிலும் ஒழுக்கத்திலும் கற்ற கல்விதான் படிச்சு வந்த நிலமையை மறக்காது இந்தப் பள்ளிகூடத்தையும் மக்களையும் நல்ல நிலைக்குக் கொண்ட வரவேணும். ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஈரத்தோடு பொறுப்பேற்க வைத்தது. அந்த ஈரம் வற்றாமல்தான் இருந்தார். ஏனோ இப்ப கொஞ்ச நாளாய் ஊர்மக்களை நினைக்கின்ற போது கோபம் மெள்ள மெள்ளக் கூடிக்கொண்டே வந்தது. புதிய புதிய திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தும் கஷ்டங்களாலும் மனம் கனத்துக் கண்களில் ஓரத்தில் நீர் தேங்கி நின்றன.

முன்னேற்றத்திற்கு வழி ஒற்றுமை ஒன்றுதான்
இதைப் புரியாத வகையில் கீழ்மைதான்

றோமானுக்குக் கொடுத்த வாக்குப் பிரகாரம் லவ்ஸ்பீக்கர் சத்தம் ஓரளவு குறைந்துவிட்டது. காலப்போக்கில் அதுவும் இல்லாமல் போய்விடும். கட்டிட வேலைகள் பூர்த்தியாகி வகுப்பறைகள் மாணவருக்கு வசதியாக அமைந்துள்ளமை சந்தோசத்தைக் கொடுத்தது. ஆசிரியர்கள்தான் ஆளுக்கொரு போக்கில் நிக்கினம். பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டுவந்தால் இந்தப் பள்ளிக்கூடம் தரம் உயரும். இப்படியே கற்ற கல்வியின் மேல் செய்த சத்தியத்தை நன்றி எதிர்பார்க்காத தியாகச் சுமையாக ஏற்று நிறைவேற்றிவிட்டதை பட்டியல் போட்டுப் பார்த்தாலும் இந்த ஊர் மக்கள்மீது மேலும் மேலும் கோபம்தான் வருகின்றது.

இந்தநேரம்! திடீரெண்டு நாக்குத் தெறிக்க ஓடிவந்த மாணவன் போட்ட குண்டில் கதிகலங்கிப் போனார்! மாணவன் உடைந்த சொற்களில் கக்கிய தகவலில் ஆரம்பப் பதட்டம் மனத்தை உலுக்கிய நிலைமாறி நிதானத்தோடு சம்பவ இடத்திற்கு விரைந்தார். ஒன்பதாம் வகுப்பறையில் தமிழ் ஆசான் ஆசனத்தில் அசைவற்று அமர்ந்திருந்தார். ஆசானுக்கும் மாணவனுக்கும் இடையில் நடந்த சம்பவத்தை மாணவர் தலைவன் அதிபருக்கு விபரிக்க புத்தம் புது மலர்களாக இருக்கும் மாணவர்கள் வியப்புடன் நிற்பதும் தமிழ் அசைவற்று இருப்பதும் அதிபர் சவரிமுத்தருக்குச் செயலூக்கமே வறண்டுபோன ஆத்திரத்தை உண்டு பண்ணியது. தமிழ் ஆசான்மீது அனுதாபம் என்ற அளவில் அல்லாத உணர்ச்சி கொப்புளித்துப் பாய்ந்தது. இருந்தும் கடமைக்கேற்ற உணர்விலிருந்து தவறவில்லை. மாணவர் தலைவனைப் பார்த்தார்.

''பொல்லாச் சம்பவம் என்ன நடந்தது சொல்லு?''

மாணவர் தலைவன் மனசைக் கல்லாக்கிக் கொண்டு நடந்த பொல்லாச் சம்பவத்தைச் சொன்னான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தமிழ் ஆசான் எல்லாரிடத்திலும் பாடமாக்கிக் கொண்டு வரச்சொன்ன கம்பராமாயணத்தின் யுத்தகாண்டப் படலத்தின் 889வது படலப் பாடலைக் கேட்டார். எல்லாரும் சொன்னாங்கள்! உவன்தான் பாடமாக்கவில்லை என்று சொல்லாமல் விறுமனாட்டம் நின்றான்! ஆசான் செல்லமாகக் கைய ஓங்கினார்! உவன் அவற்ற கையைப் பிடிச்சு நெஞ்சிலடிச்சுத் தள்ளிவிட்டான் சேர்!'' பக்கத்து வகுப்பிலிருந்து வந்த பார்த்தவர் அனைவரும் ஸ்தம்பித்துப் போனார்கள். சவரிமுத்தர் கண்ணாடியைக் கழற்றிக் கண்களைத் துடைத்தபடி மாணவர் தலைவனையும் பிரச்சனைக்குரியவனையும் தன் அலுவலகத்திற்கு அழைத்துக் கொண்டு போனார்...

''தயவு செய்து மனதைத் தேற்றிக் கொள்ளுங்க மாஸ்ரர்''

இப்படியான ஆறுதல் வார்த்தைகள் பலப்பல சக ஆசிரியர்களிடமிருந்து வந்தது. தமிழ் ஆசான் உடைஞ்சுபோன நெஞ்சின் வலிநோக அமர்ந்திருந்தார். குருவூர் மாணவனின் செயலால் குருவுக்கு நேர்ந்ததை புத்தம் புது மலர்கள் சிந்தையில் நிறுத்தியே ஆசான்முன் பணிந்தனர். அதிபர் மேற்கொண்ட நடவடிக்கையை அறியமுடியவில்லை.

அடுத்தநாள் வகுப்புகள் அனைத்தும் தொடங்கிவிட்டன. அதிபர் அறையிலிருந்து வந்த தமிழ்ஆசான் முகத்தில் புன்முறுவல் இல்லை; நகைச்சுவை ததும்பும் துறுதுறுப்பில்லை. அந்தத் தமிழின் கலகலப்பே பொசுங்கிப்போச்சு! அதிபர் சவரிமுத்தரும் ஆடிப்போனார். வழமைபோல் வகுப்புகளைப் பார்வையிட்டபடி தன் கம்பீரத்தைத் தளர்வாகவே வெளிப்படுத்தினார். பலரையும் உலுக்கிய சம்பவ நிகழ்வு பள்ளிக்கூடத்திற்குள் போ... போவென்றாலும் போகுமாப்போல் இல்லை? ஆறுதல்-மன்னிப்பு என்றாலும் தீர்ந்து போவதாகவுமில்லை! இப்போது அதிபர் அறைக்குள்ளிருந்து முரட்டுக் குரல்கள் கெட்ட தொனியில் கேட்டது! பிரச்சனைக்குரிய மாணவனின் தந்தை-தந்தையின் தம்பிமார் இருவர், மாணவனின் தவறைப் புரிந்தவராக அவர்கள் இல்லை. மூர்க்கத்தனமான கேவலமாக நடந்துகொண்டனர். மகனைத் தண்டித்தது பற்றியதில்தான் கத்திக் குளறி அட்டகாசம் புரிந்தனர். அதிபரின் குரல் கம்மியது; கெம்பிய கோபத்திலும் நிதானம் மௌனத்திற்குள் புதைந்தது. மோடர்களோடு மேல்நிலையில் அதிபரால் பேச முடியவில்லை!

''மகனைத் திரும்பவும் பள்ளிக்கூடத்தில் சேர்க்காவிட்டால் நடக்கிறதே... நாறுவாய் கவனம்!'' அடாவடித்தனத்தின் மொத்த உருவங்கள் மூன்றும் சண்டியன் கட்டோடு வெளியேறினார்கள். ஆத்துப் பறந்து வந்த தமிழ் ஆசான் அதிபர் அறைக்கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே போனவர் மின்னல் தாக்குண்டவராய் அசைவற்று நின்றார்! அதிபர் சவரிமுத்தரின் அவையங்கள் எதுவும் இயக்கமற்றிருந்தன! விடை என்ன என்று சொல்வீர்?

●

வீரகேசரி வாரமலர்
20-10-1991



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுருட்டு

பங்குனி மாதத்துப் புழுக்கத்தோடு அலைகடல் நீரோட்ட நீந்தலில் மீன்துள்ளும். மீன்படும் இடம்தேடி படகுகள் ஓடும். வசந்தகாலத்தின் வார்ப்பில் ஊர்வீதிகள் குச்சொழுங்கைகள் எங்கிலும் சீறுவாணச் சிரிப்புகள் ஏழைக் குடிசைக்குள்ளும் துள்ளும். கல்யாணம், பணச் சடங்குக் காட்சிகளின் குதூகலத்தில் திருவிழாக் காலம்போல் மணம் வீசும். வாடைக் காற்றின் வரவோடு ஏழைமுகங்கள் முழுநிலவாய் முகிழ்த்திருக்கும். காலநிலை பற்றிய சிந்திப்பில் நீர்பாடறிந்து வலை வைக்கும் இடம் குறிப்புத் தப்பாது படகுகள் ஓடும். ஓட்டத்திலும் போட்டியிருக்கும்! ஓடும் படகுகளின் இயந்திர இரைச்சலையும் குதிரை வேகத்தையும் இக்காலங்களில் குருநகர் துறைமுகப் பாலத்துக் கட்டிலேறி நின்று பார்த்தால் நெடுமுரல் பாச்சலாய் மனசு துள்ளும். கண்கொள்ளாக் காட்சியது! பொழுது புலரும் வேளை யக்கோவின் கோயில் முன்கோபுரம் தெரியும்போது கல்முனை வெளிச்சக்கூடு திரிம்பிப் பாலத்தை நோக்கி ஓடிவரும் படகுகளின் கலர் குறிப்பில் அவரவர் படகுகளின் நிலவரத்தை ஊகித்து அறிந்து கொள்வார். பின் குதிக்கால் குத்திய துள்ளலில் குஷியாகி நிற்பினம். கட்டாமீன் பட்டிருக்கும் கனதியை படகுகளின் அமிழ்வில் கணித்துக்கொள்வார்கள் அன்றுவாடி யாகப்பரின் திருவிழாக் கொண்டாட்டக் காலம்போல் களைகட்டும்.

இந்நேரங்களில் தம்பரை அதிகமானோரின் கண்கள் வியப்பேறப் பார்ப்பினம்! நல்ல மனிசன் வாயிலிருந்து நல்லவார்த்தை நறுக்கென விழும் என்பதறியவே.

''யார் பாவியெண்டாலும் பிழைச்சுப்போற காலம்தானே. கடலம்மா அள்ளிக் கொடுக்கிறாள். கிடைக்கிறதில ஏழைச்சனம் என்றைக்குமில்லாத சந்தோஷத்தில் சீவிக்கினம்.''

தம்பரின் மனசு இளகிய வார்த்தையுடன் சுருட்டுப் புகையும் முகம்மூடப் புகைஞ்சு கொண்டிருந்தது. சுருட்டை உருட்டி உருட்டி அமர்த்தி திரும்பத் திரும்ப சொய்டில் வைச்சு இழுத்துவிடும் புகையின் நறுமணம் அங்காங்கு மறைஞ்சு நிற்பவர்கள் கவனத்தையும் ஈர்க்கும். ஓஹோ தம்பர் வந்து நிற்கிறார். அவரை பார்க்காமலே அனுமானித்துக் கொள்வார்கள். இவ்வேளை முதல் கரை தட்டிய படகு யோண்ர படகுதான். அணியத்தில் நின்று பாலத்துக்கு கயிறெறிஞ்ச யேக்கப்பன் சந்தோஷத்தில முகம் குப்புற விழுந்திடுவான் போலிருந்தது! தம்பரும் பாலத்துக் கட்டேறி எக்கி எக்கலில் டெக்கில் கிடந்த கட்டமீனைப் பார்த்தபின் பின்னாடி வந்துநின்றதும் ஒருகணம் தன் கணிப்பைப் போட்டார். ''எப்பிடியும் எழுபத்தையாயிரம் ரூபாவாயினும் தேறும்'' மறுகணம் மௌனமானார். வெல்லனயில வெளிக்கிடும்போது பெஞ்சாதி புஸ்பம் யேக்கப்பனப் பற்றிச் சொன்னது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசத் தட்டி மூளையில் மின்னலடித்தது...

''என்னங்க இண்டைக்கு எப்படியாகினும் அவன் யேக்கப்பனுக்குக் கொடுத்த காசைக் கேளுங்கோவேன்.''

''ஏன்ரி புஸ்பம் இருந்தாப்போல இந்தயோசனை வந்ததுயுனக்கு?''

''அவன்ர போட்டுக்குத்தான் நல்ல உழைப்பாம். இப்ப ஆளும் மாறியிற்றான்! மத்தபடி நெடுக முற்றத்தில வந்து நிற்பான். அண்ணை . . அண்ணை என்று குழைஞ்சு கொஞ்சுவான். இப்ப பார்த்தீங்களா! ஆளை இஞ்சால காணக் கிடைக்கல!'' புஸ்பத்தின் திட்டும் சொட்டுப் பறந்தது.

''புஸ்பம் இம்மட்டு நாளும் நம்மள அவன் மறக்கயில்லையடி! இனியும் மறக்கமாட்டான்! குமரைக் கரைசேர்க்க வாங்கிய கடனல்லோ! அவன்ர புள்ளை நல்லாயிருக்கும்வரையும் நம்மள மறக்கான். அவன் தாறநேரம் தரட்டும்! தராட்டி யக்கோவின்ர உண்டியலுக்குள்ள போட்டதாக நினைச்சுக்கோவேன்.''

தம்பர் அலட்சியமாகச் சொன்னதைக் கேட்ட புஸ்பத்திற்கு தலையில் உலக்கையால் அடிச்சதுபோன்று அதைத்தது.

''என்னயிந்த மனிசனுக்கு புத்தி பேதலிச்சிப் போயிட்டா? ஐந்து-பத்து ரூபாவா? முப்பதாயிரமல்லோ.'' புஸ்பத்தின் புறுபுறுப்பு ஓயாது என்பதை கிரகித்த கிள்ளளோடு.

''எல்லாம் கடவுளுக்குத்தான் வெளிச்சம். நமக்கேன்! இப்ப அவன்ர காசு? நமக்கென்ன கஷ்டம் வந்திட்டெங்கிறன்? போடி உள்ளபோய் ஆக வேண்டியதைக் கவனி! நான் வாடிக்குப் போயிற்றுவாரேன்.''

புஸ்பத்தின் குரலின் இடியில் திமிறிப் பதைச்ச தம்பர் அந்தவேகத்தில் முக்கியிழுத்துவிட்ட சுருட்டுப்புகை சீமேந்துப் பக்ரறிக் குழாயால் பறிஞ்ச புகை போலிருந்தது.

சூரியன் எழுந்து வருகின்றான். சின்னலைகள் சிரிக்கின்றது. பாலத்தில் நின்று படகுகளைப் பாத்தவர்களின் நகர்வில் நச்சரிப்புகளும், நல்ல வார்த்தைகளும் கூறியான் கிழவிகளின் காதுகளிலும் நுழைகின்றது. தம்பரின் பக்கத்தால் போன கஞ்சன் கார்த்திக்கேசுவின் எரிச்சல் பேச்சைக் கேட்ட எலிசம் வலதுகையில் எடுத்துவைத்திருந்த பாரைமீன் உடன் திரும்பிய வேகத்தில்.

''குறுக்கால போவானப் பாரேன்! யார் பாவியென்றாலும் பாக்காம கடல்மாரித்தாய் அள்ளிக் கொடுக்கிறா. இவனென்னவோ தன்ர சொத்தக் கொடுத்த மாதிரியல்லோ கதைக்கிறான். உறுமூஞ்சிக்காரன்ர எரிச்சலப் பாருங்கோடி! பரதேசி நாய்!இவனயென்னடி செய்வது?''

பக்கத்தில் நின்றதம்பர் புசுக்கென்று கெக்கலி கொட்டிச் சிரிச்சார். ''இருப்பினில் பெருமையும் தவிப்பினில் வறுமையும். உள்ள மக்கள்தானே கடலோரத்து மாந்தர்கள். யார் இரங்குவார்கள், யார் தயவு-தயவுடன் கிடைக்கும் என்று எதிர்பார்த்து வாழாத மக்கள். உழைப்பின் உயர்வையே பக்தியோடு மதிக்கும் தொழிலாளிகள். ஏன் தங்களுக்குள் பொறாமை, பொச்சரிப்பு...?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்வுச் சூரியன் அலகை எரித்துக் கொண்டிருந்தான். தம்பரின் சுருட்டு இழுப்பும், புகைமூடிய முகத்தையும் பலசோடிக்கண்கள் வியந்து நோக்கி நின்றன! தம்பரும் தன்பலமுள்ள சதிரத்தை ஒரே இடத்தில் நின்று நிறுத்திக்காமல் பாலத்துக் கட்டுவழியே சுங்க இலாக்கா காரியாலயம் முட்ட நடந்து அலுப்பாண்டி அடிவழியாக கடற்கரைவீதியேறி யாழ்ப்பாணக் கோட்டையைப் பிடித்திட நடந்தார். இவ்வேளை யக்கோவின் கோயில் மணி பலமுறை அடிச்சு ஓய்ந்தது. மத்தியானம் பன்னிரண்டு மணி உச்சச் சூரியன் நடு உச்சிக்கு வந்து உசிரை வாங்கு வாங்கென்று வாங்கியது. வாயில் வைத்த சுருட்டு எரிஞ்சு சொண்டைச் கட்டுவிட முட்டியது! காணிவளவு, கட்டிய மனைவி, மக்கள், பாசயுணர்வுகள் பற்றிய சிந்திப்புக்கூட கிஞ்சிற்றும் மனசில் கசியவில்லையே?

''இன்னும் ஏன் போட் வந்து கரைதட்டவில்லை?''

ஆத்துப்பறந்து ஓடிவந்த கட்டையேசு இளைச்சு இளைச்சு பெலத்துக் கத்தினான்!

''ஐயா. . . ஐயா கெதியா வாங்கய்யா! நம்மளின்ர போட்டு வந்துற்று.''

திரும்பிய வேகத்தில் சொண்டு சுட எரிஞ்ச சுருட்டை தம்மெடுத்துத் துப்பினார். புகைநடுவே வெளிச்சது முகமும்.

''என்னடா போட் வந்திட்டா?'' திமிறலோடு வெண்கலக் குரல் கணீரென்று ஒலித்து எதிலொலித்தது. ''ஓமுங்கய்யா! மீன்பாடும் போட்டு நிறைஞ்சு கிடக்குதிங்கய்யா. நான் நினைக்கிறேன் இதனால்தான் நம்மட போட்டாக்கள் மெனக்கட்டிருக்கினம் என்றுங்கய்யா.''

''யக்கோ ஏன்ரா யேசு நமக்கு பிழைவிடுறான்?''

அன்றையத் தொழில்பாட்டின் பாதிப்பங்கைத் தொழிலாளிகளுக்கே பிரிச்சுக் கொடுத்தார். விடிஞ்சு தன் தொழிலாளிகள் எப்ப கரைவந்து சேருவாங்கள் எனும் தவிப்பில் இருக்கும் நல்லமனிசன். தன் உசிர் உள்ளவரை அவங்க இவங்க என்னமா நாக்கு வளைச்சுக் கதைச்சாலும் பறவா பண்ண மாட்டார்! தனக்குச் சரியெனப்பட்டதை வெட்டொன்று துண்டு ரண்டாக வெடியெனப் போட்டுடுவார். குருநகரில் தம்பர் போன்ற ஆளைக் காண்பது அருமைதான்! அந்தக் கடற்கரையோரம் வெற்றைச் சாறத்தோடு வெறுமேனியில் கழுத்தைச் சுற்றிப் போட்ட துவாய்யும், சுருட்டும் வாயுமாகக் களாம்புளாமென்று சிரிச்சுத் திரிந்த தம்பர் இன்று ஏன் வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கிறார்? ஊரில் யக்கோவின் ஆடிப் பெருவிழாவின் போது தம்பரின் காசுபணம் தண்ணீராய் ஓடும்; தொழிலாளிகளுக்குப் பார்த்தும் பாராமலும் கூறியான் பங்கு, குத்தகைக்காரன் பங்கு, சம்மாட்டி பங்கு என்று பிரித்துக் கொடுத்து தொழிலாளிகளைக் குதூகலிக்க வைப்பார். அத்தகைய குஷியான தம்பர் இன்று ஏன் வீட்டுக்குள்ள ஏங்கிப்போயிருக்கிறார்?

வாசகர்சாலை, மன்றங்கள், தொண்டர்பணி, விழாக்கள் என்று கொடுத்துதவிய தர்மவான் ஏன் தயங்கிப்போய் மௌனித்திருக்குறார்? போர்... போர்... நாட்டிலே இடம்பெறும் போர். இந்தப் போர் தொடங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்முதல் ஊர்கூடித் தொழில் செய்த நீலக்கடலும் சோகம் பாடுது; கருமேகம் சூழ்கின்றபோதும், பூமி விடிகின்றபோதும் ஆண்கடல் ஓடிய படகுகள் எல்லாம் பெண்கடலில் தட்டி கரையோரம் நிரம்பிக் கிடக்குது. வெள்ளம் பொங்கிவரும் நேரமும் படகுகளின் அசைவிலும், இயந்திர இரைச்சல் காதுக்குள் ரீங்காரம் இடவில்லை! பாலத்துக் கட்டில் நின்று கடலையே வெறித்துப் பார்த்து விறைத்து நின்றார். கன்னங்களில் கண்ணீர், தயக்கம் சதிரத்தை சோளகக் காற்றில் தென்னை அசைந்தாடி நடுக்கத்தைக் கொடுத்தன. வழமையான தாவடி நந்தியாவட்டப் புகையிலைச் சுருட்டு அவர் வாயில் இல்லை.

''ஐயா! அங்க இங்கயென்று செல் விழுகுதையா! இங்க தனி ஆளா நிக்கிறீங்க, அம்மா அழுதுபுலம்புறா. வாங்கவீட்ட போவோம்'' என்றான் மகன் பட்டுராசா.

கொந்தளித்துச் சீறிய அலையின் மடக்கடியாக ஆவேசமாகத் திரும்பிய தம்பர் பாடினார்.

''ஆழக்கடல் பாயும் படகுகளே
நீலக்கடலில் ஆஸ்திதேடும் தொழுகலமே
ஏங்கிக் கிடப்பதென்ன செய்வினையோ?''

பாடலோடு மகனைப் பார்த்து பனிபோல் உருகினார். தகப்பனைக் கூர்ந்து நோக்கியவன் அவரது சொண்டுகள் காய்ந்து கருவாடாக் கிடப் பதையும், வாயில் சுருட்டு இல்லாக் கண்றாவியையும் கண்கொண்டு பார்க்க முடியாமல் தூண்டில்பட்ட மீன்போல் துடித்தான். குடும்பம் மனிசனுக்குப் பெரிசாகப் படவில்லை? யார் பாவிகளாவது உழைச்சுப் பிழைக்கணும். கடல்வெளியெங்கும் மீன் துள்ளி விளையாடுது; எங்கும் கண்ணை மூடிக்கொண்டு வலைவைச்சாலும் வலை நிறைய மீன்படும்.

''இந்தச் சண்டை எப்படா மகனே தீரும்? ஏன்ரா மகனே ஒருத்தனும் மீன் பிடிக்கப் போறாங்கயில்லை?'' இந்த நேரம் கட்டையேசு ஓடிவந்து பதறியபடி பக்கவாட்டில் ஒட்டிநின்று கதைக்கத் தொடங்கினான்.

''என்னஙகயா உங்க புத்தியெங்க போச்சு? பள்ளிகூடத்தடியில செல் விழுந்திட்டய்யா! வாங்கவீட்ட'' சற்றுநேரமௌனம். இரக்கத்தோடு திரும்பவும் கதைச்சான் ''சுருட்டுக்கு போயிலை தாவடி மணியத் தட்டப்போய் வாங்கி வரட்டாய்யா?''

''ஏன்ரா மணியம் சின்னக்கடையில கடையத் திறந்திற்றானாடா?''

முழிகள் பிதுங்க ஒருகணம் யோசிச்சவன். பொய் ஆபத்துக்குப் பாவமில்லை. ''ஓமுங்கய்யா ஓம்!''

மகிழ்ச்சித் திமிறலில் நெஞ்சின்மேடு எழும்பிய எழும்பலில், அவரது மேனியில் கிடந்த துவாய் சோள காற்றிலாடிய காத்தாடிபோலானது. தம்பரின் சிரிப்பைக் கண்ட பட்டுராசாவும், கட்டையேசுவும் விறுவிறென்று முன்னோக்கி நடந்தனர். அவங்கட நடையக் கவனித்தவர் திகிலோடு இழுப்புச் சிரிப்புடனான நடநடந்தார். நல்லது நடக்காத காலநேரமாக் கிடக்குது. இந்தச் சண்டைக்குள்ள தாவடி மணியம் இங்கவந்து புகையில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பானா? பிள்ளைகள் நமக்கு சங்கீதக் கதிரை விளையாட்டுக் காட்டினம். ஒரு கணம் மௌனித்தார்...

''சின்னக்கடை மணியம் எனக்கென்று தெரிஞ்செடுத்துத் தருவான். தாவடி நந்தியாவட்ட உசத்தியான புகையிலை. இனி எப்போதான் கிடைக்கப் போகுது? அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம்.''

பெத்தபுள்ளைகள், இன சனம், தன்னுடைய தொழிலாளிகள் என்று கனபேர் இரங்கிக் கேட்பினம்.

''ஐயா நாங்க தாவடிக்குப் போய் போயிலை மணியத்தட்ட போயிலை வாங்கிவாறோம்'' என்று

''எனக்கொரு நீதி உங்களுக்கொரு நீதியாடா?'' நீங்கபோறயிடத்தில என்னவாகிலும் நடந்துட்டா யார் பொறுப்பு? சும்மா கிடவுங்கடா. சுருட்டுப் புகைக்காட்டி என்னப்போ குடிமுழுகிப்போச்சு?''

''சண்டையில சாவது சாவடா! வீண் பொல்லாப்பில மாட்டிக்கிட்டுச் சாவது புழையடா. நான் இருக்கிறப்போ மூசி. மூசி இழுத்துவிட்டேன் இப்ப. மனிசனோ சோறு, கஞ்சிக்குத் தவிக்கிறான்! சும்மா போங்கடா! போங்க.''

தம்பரைப் பார்க்கிறப்போ பெஞ்சாதி புஸ்பத்திற்கு மரியாளின் நெஞ்சில் பாய்ந்த ஏழு ஈட்டிகளின் வியாகுலம் நிறைஞ்சிருந்தது. அறுபத்தைந்து வயதைக் கடந்த ஆத்துமா தன் வெண்கலக் குரலில் எப்படி எல்லாம் ஊரவரோடு கதைச்சுப் பழகியவர், யக்கோ மேல்வைத்த பக்தியால் இனசனத்திற்கு எதுவித தப்புத் தவறுகள் செய்தறியாத உறுதியால் உரமான நெஞ்சமும், திடமான தேகமும் நொஞ்சு போச்சு! புஸ்பமும் மூலையில் குந்தியிருந்தபடி அடிக்கடி புருஷன்ர மௌனத்தையும், சுருட்டு இல்லாத வாயையும் நெக்குருகப் பார்த்துக் கண்ணீருடன் அதிகமாகச் சிந்திக்கத் தொடங்கினாள். சின்னக்கடைப் புகையிலை மணியம் இன்றும் தாவடியில்தான் வசிக்கின்றார். ஒருசொல் கேள்விப்பட்டால் காணும் மனிசன் உசிரப் பறவா பண்ணாமல் கட்டுக்கட்டாக் கொண்டுவந்து இறக்கிடும். ஏன் இந்த மனிசன் இந்தத் தவிப்புத் தவிக்கிறார்? மக்களும், மருமக்களும், தொழிலாளிகளும் தங்களுக்குள் தாங்களே பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருந்தனர். .

தன் மனைவிகூட தனக்குப் பிச்சைபோடக் கூடாது, தன்னுடைய உசிர் இண்டைக்கோ நாளைக்கோ முடிஞ்சிடப்போகுது. இனி வாழப் போகின்ற என்ர பிஞ்சுகள், குஞ்சுகள், நெஞ்சுகள் நல்லா வாழணும். போரைக் கண்ணால காணும்காலம் இல்லாமல் போகணும். சொண்டு ஒன்றுதானே மனித உடம்பில் வியர்க்காத உறுப்பு! அதிகம் வியர்க்கும் மூக்கு நுனியும் காய்ந்து செதிலாய்க் கிடந்தது. தம்பர் மனசில் கனத்த கவலையால் நாட்டுக் கூத்துப்பாடல் சோகமாய்த் தொனித்தது. இந்தப் பாடலைக் கேக்கிறபோது புஸ்பத்தின் சர்வாங்கமும் நடுங்கத் தொடங்கியது.

''கட்டிவைத்தடித்தாரே யேசுவைக்
கட்டிவைத்தடித்தாரே - மக்களைக்
காக்கவந்த காருண்ய வள்ளலை-முள்முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டி கட்டிவைத்தடித்தாரே...
மாகொடும் பாவிகள் பாரோனைச்
சிலுவையில் தொங்கவிட்டுக் கொண்டாரே!''

அறுபத்தி நாலாம் ஆண்டுப் புயல்வீசி ஓய்ந்ததுபோலிருந்தது, தென்னங் கீற்றுகளும் அசைவை நிறுத்தியது. முற்றத்தில் நின்றவர்களின் நெஞ்சு பதறிக்கொண்டிருந்தன. புஸ்பத்தின் கண்கள் கடலாகின. வளவுகுள்ளிட்ட அயலவர்களும் உயிர் உருகிநோக்கும் யோசிப்போடு சிலையாகினர். ஒருக்காலும் இந்தப் பெலனாகப் பாடாத மனிசன்ர வெண்கலக்குரல் ஊரையே கூட்டிவிட்டது. சாய்வு நாற்காலிய விட்டெழுந்த தம்பர் ஏறிய தொனியில் சொன்னார்.

''எடியே! புஸ்பம் நான் என்ன பாடு பட்டேனும் நாளைக்கு விடிய முன்னம் தாவடிக்குப் போறதாக முடிவெடுத்திட்டேன்.'' இடிவிழுந்த கதையைக் கேட்டதும் பெஞ்சாதி புஸ்பம் புள்ளைகளையும், அவன் கட்டை யேசுவையும் பார்த்துத் தேம்பித் தேம்பி அழுது குலறத் தொடங்கினாள்.

''மனிசன் பசி சுள்ளிட்டாலும், சுருட்டு ருசி விடாரடா!'' கல்லு மாதிரி நிக்கிறீங்கடா நீங்க யாரெண்டாலும் தாவடிக்குப் போய் வாங்களேன்ரா! நெஞ்சிலடித்துத் திட்டினாள்.''

''எங்களத்தானே போகவிடுறாரில்ல! நாங்கதான் என்னை செய்ய?''

பட்டுராசாவும், கட்டையேசுவும் சேர்ந்தாப்போல சீறிவிழுந்தானுகள். யார் இந்தக் கட்டையேசு? தம்பரின் தொழிலைக் கவனிப்பதில் கருசனையுள்ள தொழிலாளி, மலைநாட்டிலிருந்து புழைக்கயென வந்து தம்பரின் குடும்பத்தில உள்ள புள்ளைகளோடு வாழும் வளப்புப்பிள்ளை. தம்பர் நெஞ்சு எழும்பிய முகவாட்டத்தோடு பெருமூச்சை விட்டபடி பெஞ்சாதி புஸ்பத்தை அச்சுறுத்தினார்.

''எடியே புஸ்பம் நீ பேசாமல் இரடி! இந்தநாடே சுடுகாடாக் கிடக்கு! இவங்கள அனுப்பிப் பயந்து நாமயிருக்கனும். அறுவான் போடுற குண்டுக்கும்! பாம்பப் பிடிச்சு விளையாடுற இவங்க தரவழியக் கண்டாளே குலைநடுங்கிறான் ஆமிக்காரன். எடுத்தவாக்கில சுட்டுப்போட்டு இவங்க தான் தங்களச் சுடவந்தாங்கென்று பொடியக் கொண்டுவந்து எங்காவது றோட்டருகில போட்டுட்டு போறானுகள். ஏன்ரி இந்தச்சோலிய. இவங்கள அனுப்பி வரும்வரைக்கு நெஞ்சிடியில மாயுறத விட நானே போயிற்றுப் பக்குவமாக வந்திடுவேன். உந்தக் கண்ணீரைத் துடைத்து விட்டு போய் வேலையைப் பாரடி.'' தவித்தகுரல் சின்னலைபோல் அடங்கியது. எல்லார் முகமும் ஊதிய பேத்தை உடைஞ்சு சுருங்கியது போலானது. விளல் கதை பேசவும், வீண் பிடிவாதத்தோடு சமரிடவும் யாருக்கும் துணிவுவரயில்லை.

மாலைப் பொழுது மங்கியதும், பொழுதுபட்டது. புஸ்பத்தின் கண்களில் நித்திரை பிச்சை கேட்டது. அடிக்கொருதடவை துடிச்சுப் பதைச்சு எழுந்து குந்தியிருந்தபடி தம்பரை நினைத்து, அறை மூலையில தொங்கும் சகாய மாதாவின் படத்தைப் பார்த்து வியாகுல காரணிக்கத்தோடு செபமாலையை உருட்டிக் கொண்டிருந்தாள். யாக்கோவின் திருந்தாதி மணி ஒலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டென்று விழித்தெழுந்தார் தம்பர்!

''மனிசன் இண்டைக்குப் போய்த்தான் தீருவேனண்டல்லே அடம் பிடிக்கிறார்.'' தாவடி போய்வருவதை நினைக்க நினைக்க புஸ்பத்தின் அடிவயிறு அனலாய்க் கொதித்தது.

கனநாளைக்கப்புறம் கரைவிழுந்த எட்டுமுழவேட்டியும் நேசினலும், மடிப்புச் சால்வையுடன் வெளிக்கிட்டு வந்தபோது புஸ்பத்தின் கண்களில் வழிந்தது ஆனந்தக்கண்ணீரா? ஆற்றாது அழுத கண்ணீரா? என்று புரிந்து கொள்ளமுடியவில்லை... தம்பர் ''போயிற்று வாறேன்'' என்று சொல்லிட்டு வெளிப்படலையைத் திறந்து வீதியேறியபோது புஸ்பம் கும்பிட்ட கை பிசகாது நின்றாள்.

''ஐயோ! காணிக்கை மாதாவே என்ர தாலியக் காப்பாற்றம்மா!''

ஊர்ப் பெண்களும் பருதவித்தனர். ''பாவிமனுசன் இவ்வளவு நாளும் இருந்திட்டு இந்தச் செல்லடிக்கிற வெள்ளிடி வேளையில வெளிக்கிட்டுப் போறார்? ஏதோ விஷயத்தோடதான் போறார் போலிருக்கு! யக்கோவே! உன்ர பக்தனைப் பார்த்துக்கோவேன்'' என்றனர். தம்பரின் பின்னால் போன கட்டையேசு பஸ் நிலையம்வரை சென்று தம்பர் தாவடி பஸ் ஏறியதும். தானும் பிடிவாதமாக ஏறிப் பின் சீற்றில் அமர்ந்துகொண்டான். தம்பர் அவனைப் பார்த்து மௌனமாகத் தலையாட்டிவிட்டுச் சாய்ந்திருந்தார். கண்றாவி ஆமிக்காரன்ர தொல்லையால் கரடுமுரடான பாதைகள் பள்ளம் பிட்டி ஏறி வெட்டித் தப்ப முடியாது ஓடிக்கொண்டிருந்தது பஸ். திடீரென்று றைவர் போட்ட சடின்பிறேக்கில் பிரயாணிகள் பதறித்துடித்து எழுந்து கண்ணாடி வழியாக அங்குமிங்கும் மிரண்டனர். மீண்டும் மௌனமாக அமர்ந்தனர். தம்பர் இருந்த இருப்பில் அசைவே தென்படவில்லை. மீண்டும் மௌனமாக அமர்ந்தனர். பஸ் தாவடிச் சந்தி வந்து நின்றது...

கட்டையேசு எழுந்து தம்பரை ''ஐயா! இடம்வந்திட்டுங்கோ; வாங்க இறங்குவோம்!'' சிறிது நேரத்தின்பின் ஏறிய தொனியில் ''ஐயா!, எழும்புங்க இடம் வந்திட்டு'' தோல் மூட்டைப்பிடித்து உலுப்பினான்.

பக்கத்தில் இருந்த வயோதிபர் நடுங்கிய குரலில் இரக்கமாகச் சிந்தினார் வார்த்தையை...

''அவற்ற மூச்சுப் போச்சடா தம்பி''

அலையின் குமுறல் அடங்குமா?

●

ஈழநாடு
14-10-1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டு

''அவங்களக் கூட்டிக்கிட்டு வரயில்லையாங்க?''

''எவங்களப் புள்ள கேக்கிறாய்?''

''எங்கட 'எமில்டா' டீச்சரத்தானுங்க''

''அவவுக்கு எங்கோட வாறத்திற்கு நேரம்மிருக்காதே!''

''அப்பயிப்ப எங்கேயுங்க இருக்கிறா?''

''வாறகிழமை 'முதச்சப்பிரசாதம்' எடுக்கிற புள்ளைகளுக்குச் 'சமயம்' படிப்பிக்கப்போயிற்றா''.

இந்தப் பதில் வந்த தாமத்தோடு மேரிறோசின் மகள் 'சிந்தியா' நின்ற இடத்தைவிட்டுச் சிட்டாகப் பறந்தாள். பறந்தவளைப் பார்த்த லூர்த்துவின் மனசுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. மேரி றோசுடன் பலதையும் பட்டதையும் ஆர அமரக் கதையளக்கலாம் என்றவள் நினைப்பின் இடையே எக்கி அடுத்த வீட்டு ராசாத்தியின்ற வளைவைப் பார்த்தாள். யாரையும் காணவில்லை. 'கண்விழுங்கி' இல்லாததும் கதைக்கும் காரியத்திற்கும் இடைஞ்சல் இல்லை. 'விடுப்பு' காவிப் பறயவும் ஆள் இல்லை, என்றதும் லூர்த்தின்ர மன்றாட்டு மாமரித் தாயிடம் செபமாலைக் குண்டுகளாக உருண்டது.

''என்ன றோஸ் என்ர புள்ளைய அங்கால இங்கால அசைய எங்கதான் விடுறாங்க?''

''ஏன் அவ்வளவு சோலியோ?''

''பின்ன! என்னண்டு சொல்வேன். நேற்றைக்குப் பாரு ஒரு பொக்கு வண்டில் சில் அளவு றோல் சீலையைக் கொண்டுவந்து 'பொடியங்க' (இயக்கம்) போட்டுட்டுப் போயிற்றாங்க. சிவப்பு-மஞ்சள் என்று! அநாதைப்பிள்ளைகளுக்கு 'யூனிபோம்' தைச்சுக் கொடுக்கட்டுமாம் என்று.''

''பாவம் லூர்த்து அவபுள்ளைக்கு கோபமே வராது. நீதான் அவள அச்சறிக்கை பண்ணி வைச்சிருக்கிறயில்லையா?''

''அவள்ர போக்கில எனக்கு நம்பிக்கையிருக்கு. எங்கினயும் போகாதே, இதுகளச் செய்யாதேயென்று வாய்குடுத்தாப்போதும், வெடுக்கெனப் பாயுறாள். 'நான் என்ன வீண் திரிச்சலா திரிஞ்சிட்டு வாரேன்' என்று முண்டிச் சீறுறாள். அந்த, இந்தச் சமூகத் தொண்டுகளப்பற்றிக் கதையளப்பாள். நானும் வாயை மூடிக்கொண்டு இருந்திடுவேன். இப்படியானவளுக்குக் 'கால்கட்டுப்' போட்டாத்தான் சரிப்பட்டு வருவாள். அவளுக்கென்று இருக்கிற காசில ராசாத்திபோல வாழவும் அவளுக்குப் புடிப்பில்லை. தன்ர சம்பளத்திலதான் தன்ர தேவையையும் கவனித்து கல்யாணம் கட்டினவளும் நாண்டுகொண்டு நிண்டு பறிச்சுக் கொண்டு போறாள். தையல் மிஷினில குந்தினால் சாமச்சேவல் கூவக்கையும் சத்தம் கேக்கும். நான் என்ன பாவம் செய்தேனோ என்ரபுள்ள சிலுவைப்பாடு படுகுது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொம்பிளதானே 'றாங்கி' கூடயிருக்கக் கூடாது. அவள் படிச்சபுள்ள பலதையும் பகுத்துப் பார்ப்பாள். அதுசரி லூர்த்து, நெடுநேரமாகக் கதைக்கிறோம். வந்த விஷயத்தைச் சொல்லக் காணோம். நானும் தண்ணீர் வெந்நீர் தராமல் இருந்து கதைக்கிறேன்! இருவாரேன் போட்டுக் கொண்டு...''

எதுவித பதிலும் சொல்லாமல் லூர்த்து தனக்குள்ள ஒரு 'பிளான்' போட்டபடி எந்த வளத்தால கதையைக் கொடுக்கலாம்? என்றவள் மூளை இயக்கத்தில் திடீரெண்டு மின்னல் கதிர் அடித்து நிதானம் கொள்ள வைத்தது. போன வருஷம் என்ர புருசனுக்கும், றோசின்ர புருஷனுக்கும் இடையில் நடந்த சின்னத் தகராறும், புடுங்கப்பாடும் தொழில் ரீதியாக நிகழ்ந்த சம்பவம் சங்கடத்தைக் கொடுத்தாலும் அதை றோஸ் பறவாபண்ணமாட்டாள். என்ர புள்ளையேன் மாதம் தப்பாது சுளையாகச் சம்பளம் எடுக்கிறாள்தானே. ஊரும் எவ்வளவு உசத்தியாக் கதைக்கினம் பேந்தேன் முழிப்பான்? துணிவாக் கேட்டாப் போச்சு!

''என்ன லூர்த்து பலமான யோசனை. வீட்டுப் பிரச்சனையா? நோட்டுப் பிரச்சனையா?

''இல்லை... இல்லை நம்ம புருஷன்மார் என்ன புழைவிட்டாலும் நம்ம வழிக்கு வருவாங்கதானே?''

''உனக்குத்தான் அவர் செத்துப் போனாரே?''

''உம்மட புருஷனத்தான் குறிப்பிடுறேன்! என்ர ஆசையையும் நீ நப்பாசையாக்க மாட்டாயெண்டு நம்புறன்! எமில்டாவை ஒத்தபெண்கள் கல்யாணம் கட்டி குழந்தைகளைத் தூக்கித் திரிகிறாளுகள். வெளிநாடு என்றும் போயிட்டாளுகள். என்ரபுள்ளை இங்கேயே இருந்து ஊருக்கும் 'பொடியன்களுக்கு' அநாதைகளுக்கு மெழுகுபோல் உருகுகிறாள். என்ர ஆசை, அவள் என்ர கண் பார்த்து மகிழ உன்ர மூத்தவனுக்குக் கட்டிவைச்சுப் பார்க்கவேணும் என்பதுதான்.''

''நான் என்ன வேணாம் என்றா சொன்னனான்? நீ கனநாளைக்கப்புறம் வளவுக்க வரையுக்கவே என்ர மண்டையைக் குடைஞ்சு. எமில்டா நல்லபுள்ளைதான். அவள்ர அடக்கம், அன்பு, பண்பு, அணைப்பு, 'மிதிச்சா புல்லும் சாகாது' அப்படியானவள் என்ரவீட்டு மருமகளாக வரக் கொடுத்து வைக்கணும். என்ர மூத்தவனுக்கு இடிச்சு இடிச்சுச் சொல்லியும் தகப்பன்ர பிடியிலையே தொங்கிக்கொண்டு நிக்கிறான். அந்த மனுசனும் இந்தப் பேச்செடுத்தாப் போதும் 'சில்லெடுப்புத்தான்'. லூர்த்து உன்ர மகள் இந்த வீட்டு மருமகளாவது இந்த ஜென்மத்திலயும் நடவாது என்றுதான் என்ர மனசுக்குப் படுகுது.''

றோசுவின் வாய் ஓய்வதைக் கவனித்து லூர்த்து பேந்தேன் இங்க மினக்கடுவான்? தண்ணீர் குடிப்பான்? தாய்ப்பாசம் உள்ளுக்குள் திட்டித் தீர்த்தபடி ''இவளுக்கு விருப்பமில்லை. தழுக்கு வைச்சு மற்றவனைச் சாட்டி ஓணான் வேசம் போடுறாள். அவளுக்கு இதனால்தானாக்கும் மூத்தவனக் காட்டிக் கொம்பு முளைச்சுட்டு'' நடையில் நடப்பின் தாக்கம் தடுமாற்றத்தைக் கொடுத்தது. தன்னுடைய வளவு வாசலை இழுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்தபோது நெஞ்சு விம்மித் தாழ்ந்தது. முகத்தை முந்தானையால் மறைச்ச படி முன் நடந்த தாயின் முகமுட்ட வந்த மகளைக் கண்டும் காணாதவளாக வீட்டுப்படியேறி அடுக்களைப் பக்கம் சென்றாள். எமில்டா அங்குமிங்கும் நோட்டம் விட்டவளாக கிளர்ச்சிக்கு உள்ளான உளைச்சலில் தாயை எண்ணி அழுகை வருமாப் போலிருந்தது. இவ்வளவு நேரமாகக் கதையளந்திட்டு வாறா . . எல்லாம் என்ர பிரச்சனையாகத்தான் இருக்கும். நொந்து பெத்தவள் முப்பைத்தைந்து வயதாசியும் கரையேறாமல் 'ஊருக்கு மாரடிக்குது'. அந்திமகாலத்துக்க பலதையும் எண்ணிக் கலங்குறா. தாயின் தவிப்பு, துயரம், உருக்கம், ஆதங்கம் அனைத்தும் அவளுள் அணல் மூண்டெரிந்த அகோரத்தைக் கொடுத்தது. இதயத்தைப் பிளந்திடும் நெக்குருகிய வார்த்தை களால் தாயின் அடிவயிற்று எரிமலையைத் தணித்தாள். வெடிகுண்டுகள் விழும் மண்ணின் தாயைக் கனிவான வார்த்தைகளால் அணைத்தாள்.

''அம்மா நீ ஏனணை மற்றவங்க வாசல் திறந்து போறாய்? இப்ப பொம்புளகள் முந்தினாப் போல இல்லையனணை. ஆம்பிளகளைவிட உசத்தியணை. நான்தானை நெடுக நெடுக சொல்லுறன் குருடனை, நொண்டிய, ஊமையக் கட்டெண்டாலும் கட்டுறேன். அதுவும் பெரும் தொண்டென்று. கல்யாணம் முடிச்சுப் புள்ளைகள் பெத்து வளர்க்கிறதும் தொண்டுதான். எல்லாம் ஒண்டுதானணை. எக்கணம் இருந்து பாரேன் எத்தனை குழந்தைகளை நான் வளர்க்கப் போறேன் என்றுதான்.''

இந்த வார்த்தையில் அவள்பெற்ற வயிற்று எரிமலை வெடித்துத் துடியாத் துடித்த நெஞ்சமெனும் பாசச் சுரங்கத்திலிருந்து கொந்தளித்தெழுந்த வார்த்தைகள் தழு தழுத்து தகித்தன.

''எடிமகளே! வயசான காலத்தில என்ர உசிரை ஏன்ரி கொஞ்சமா போக்கடிக்கிறாய்? என்ர 'சளனமெல்லாம்' நீ உன்ர தம்பிமாரோட வெளிநாட்டுக்குப் போய்ச் சேர்ந்திட்டால் நல்லது என்று என்ர கண்களில் கண்ணீரே இல்லை. பொடியங்க வாறாங்க அதையிதைத் தையெங்கிறாங்க. எங்கினையும் சண்டை நடந்தால் அங்கினயுள்ள சனத்திற்கு உதவக் கூட்டிப்போறாங்க. நீயோ தொண்டு என்கிறாய். எனக்கென்னமோ 'பிரளயம்' நேர்ந்திடும் பயமாக இருக்கு. அப்பானாட்டம் எல்லாம் ஓத்திருக்கு... கோபம் மூக்கு நுனியில், கர்வம் கண்ணுக்குள்ள, வாயடிப்பு கதைக்குக் கதை பறயிறதில, முறைப்பில் உன்னைப் பார்த்தால் அப்பனப் பார்க்கத் தேவையில்லை. அப்பனும் இப்படித்தான் தொண்டு, தொண்டெண்டு செல்லடியில ஒரேயடியாகப் பரலோகம் போயிற்றார்'' என்றவள் கண் களில் அலை குமுறியது. தாயைச் சமாதானப்படுத்த மாற்று மருந்தைக் கையாண்டாள் எமில்டா...

''அம்மா மனசப்போட்டு அடிச்சுக்காம போனஇடத்தில நடந்த கதையை விழுங்காமல் நடந்தவைய விளக்கமாகச் சொல்லனணை...''

''என்னத்தயடி சொல்ல? அவங்கள விடு. நீயென்ன தோளுக்கு மிஞ்சி வளர்ந்தாப்போல என்னை உறுக்கலாம் எண்டா நினைச்சிட்டா? தாயின் கோபம் கடுப்புக்கொண்டு கொண்டலும் கச்சானும் சேர்ந்து எழும்பியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் உறுமினாள். வெகுநாளுக்கப்புறம் தாயின் சீற்றத்தைக் கண்டவள் தணிந்த குரலில்

''எணேய் நீ அங்க எப்படி அழுதணி, என்ன கதைச்சனி என்று ஒப்பு விக்கட்டாணை?'' தாய் மௌனித்திருக்கும் போது 'சிந்தியா'கலகலவெனச் சிரிச்சபடி துள்ளிக்குதித்து வந்து நின்றாள்.

''அவளைக் கண்டதும் இருவரும் அங்கங்கள் குலுங்கச் சிரித்தனர்.

''அடே சிலுக்குச் சிங்காரி, துடுக்குக்காரி! பாரயவள என்ன அங்கயிருக்க விட்டு இங்கவந்து நிக்கிறதா?''

''என்னங்க நான் எங்கட அண்ணையோட கதைக்கட்டாங்க?''

''என்னத்தக் கதைக்கப்போறீங்க வாயடிச் சிறுக்கி?''

''எங்கட டீச்சர் எவ்வளவு நல்லவ, எங்கட பள்ளிக்கூடத்தில எல்லாப் புள்ளைகளுக்கும் மற்ற டீச்சர் மாரைவிட இவங்கோடதான் கொள்ளை விருப்பம். டீச்சர் எங்கண்ணையக் கல்யாணம் கட்டுறது எனக்கும் கனக்கச் சந்தோஷம். நீங்க ஒண்டுக்கும் யோசிக்காதீங்க. நான் எல்லாத்தையும் கச்சிதமாக முடிச்சு வைக்கிறன்'' என்றவன் திரும்பி ஒரு பாய்ச்சல் பாஞ்சதும் ''டீச்சர் நான் போயிற்று வாரேன்'' என்றவள் வாசல் திறந்து மான்போல் துள்ளி ஓடினாள்.

''கேட்டியாணை! பன்னிரண்டு வயசுக் குழந்தைகூட எனக்குப் பரிந்து பேசுது. உனக்கென்னணை அறணை பேந்துட்டாணை இனியொரு தடவை இந்தக் கல்யாணப் பேச்செடுத்தால் என்ர நிழலைக்கூட இந்த வீட்டில காணமாட்டாய்.''

''எல்லாப் பெட்டைகளும் இப்படிச் சொல்லித்தானே தாய்மாரை விறைக்கப் பண்ணுறாளுகள். எதிர்த்துக் கதைச்சால் அடுத்தநாள் களத்தில நிக்கிறாளுகள். தாய் மனசு பயந்தது.'' பின்னர் ஏன் இவள் இப்பிடி அடம்பிடிக்கிறாள்? வெடுக்கெனச் சீறிவிழுகிறாள்? இவளைக் கரை சேர்க்க நான்படுற அக்கப்பாடு ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். அவளுக்கு அவள் மேலேயே பிடிப்பில்லை. உடம்பு கறுப்பு, அழகில் குறைவு, தலைமயில் கட்டை, சாடையாகச் சப்பை மூக்கு, வெண்முத்துப் பற்கள் தெரியும் சிரிப்பில்மட்டும் கள்ளமில்லை. 'தொண்டுக்கு' அன்னை திரேசாவைக் காட்டலாம். கல்யாணம் கட்ட இளந்தாரிகள் முன்வந்தாலும் இவள் மனப்பட மாட்டாள்போலல்லோ கிடக்குது!'' தேகம் நடுங்கியவளாக நெஞ்சில் கை வைத்தபடி அடுக்கள நெருப்போடு தகித்துக் கொண்டிருந்த வளுக்கு மிஷின் சத்தம் கேட்டதும் மேலும் கூரையை அண்ணாந்து பார்த்து பெருமூச்சை விட்டாள். இந்தத் தையல் மிஷினோடும், சனத்தோடும் புடிச்ச சனியம் எப்பத்தான் தொலையுமோ. இந்தப் பெரியறோல் சீலையைத் தைத்து முடிக்கப்புள்ளை எத்தனை இரவுகள் கண்முழிக்கப் போறாள்? ஓய்வு நாளிலும், பள்ளிக்கூடம் முடிஞ்சு வந்ததும் மிஷினில குந்தினால் நடுநிசிக்கு அப்புறமும் மிஷன் சத்தம்... தாயும் வாசல் மறிப்போடு ஏங்கியபடி இருப்பாள்.

''வாசல் வழியை மறிச்சுக் கொண்டு ஏனணை இருக்கிறாய்? இந்தாணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பஞ்சு' காதையடைச்சுக்கோ''. தாயிடமிருந்து முணு முணுப்பு.

''அம்மா உன்ர காது செவிடாகிவிட்டது பேசாமல் தூங்கணை''. பின்னர் தையல்மிஷனில் குந்தினாள். தாய் வேதனையோடுவெறித்துப் பார்த்தாள். மிஷினின் சக்கரச் சுழற்சிபோல் மகள் சுழன்றுகொண்டிருந்தாள். மிஷினின் பாதப் பலகை மேலும் கீழுமாக அமுக்கும்போது அவள் கால் எலும்புகள் நொறுங்கிச் சிதறுவதுபோலிருந்தது. நூல் சுருள் சுழற்சியில் ஓடும்போது அவளது நரம்புகள் தெறிப்பது போலிருந்தது. மிஷினின் சத்தம் தாயைப் படுக்கவிடாது பதை பதைக்க வைத்தது. இதுமட்டுமா இந்த றோல் சீலை முடிந்ததும் மிகுதித் துண்டும் துணிகளும் அழுவதால் அதுகளையும் சேர்த்துத் தைத்து ஏழை எளியவர்களுக்கு உபயோகப்படுத்தக் கொடுக்கிறாள். தனக் கென்று என்னத்தையும் விரும்பித் தைத்ததை தாய் கண்ணால் கண்ட தில்லை... இத்தனை துயரையும் சொல்லியழுதாள் தாய் 'பொடியன்களும்' இரங்கி வழி விட்டாங்கள்... மேகம் பொழியாத கண்ணீரைத் தாயின் கண்கள் சொரிந்தன. பூமியும் பொறுக்காத பொறுமையை மகள் பொறுத்தாள்.

விடிகாலைப்பொழுது எமில்டா விரைந்து போய்க்கொண்டிருந்தாள் பள்ளிக்கு. தாய் விழிவாங்கிய காட்சியில் மொழிப் பேச்சின்றி சோகமே உருப்பெற நின்றாள். பன்னிரண்டு மத்தியானச் சாப்பாட்டு நேரம்! பாடசாலை ஓய்வறையிலிருந்து சாப்பிடுற எமில்டா சுவாமி அறையிலிருந்து வருவதை இமையெழுப்பி முழிகள் பிரள நரிப்பார்வையில் பார்த்த பார்வை பிசகாது பார்த்து நின்றான். ஏற்கனவே இயக்கரீதியான கொழுவல்வேற அவனுள் இறுக்கிக் கிடந்தது. எமில்டா அவனைக் கண்டு எந்தவித சலசலப் பின்றி ஒதுங்கிப் போய்விட்டாள். வானம் ஒருமுறை இடிமுழக்கம் இட்டது. வளவுக்குள் நின்ற மாமரங்களும், பிளாமரங்களும் அற்பனைச் சபித்தன. 'சடாரெண்டு பழி பளிச்சிட்டது சீத்தக்காதன் மூளைக்குள்?' தன்ர சகபாடி களுக்குக் காதும் காதும் வைச்சாப்போல 'வசவு' வைச்சுட்டான். வதந்தி வாந்தி எடுக்கிறமாதிரிப் பண்ணியிற்றான் 'சீத்தக்காதன் சீனித்தம்பி'.

'எமிட்டாவும் சுவாமியும்...'

சோடிசேர்த்து ஊத்தியசேறு ஊர்முழுதும் தெறிச்சு நாறியது. வீட்டுக்குள் எமில்டாவின் தாயின் வேதனைக்குரல் எதிரொலி அதிர்ந்து சுவர்களையே அசைத்தது... அன்ன ஆகாரமில்லாமல் மௌனவெட்கத்தாலும் முதுகு குனிய மூலைச்சுவரோடு சாய்ந்து நின்றவள் நெடிய நெடியதொரு புறு புறுப்பின்பின்னர் உச்சத்தொனியில் வீடு அதிரக் கத்தினாள்.

''அம்மா சும்மா எல்லாத்துக்கும் அவதிப்படுறா''.

''ஓயுமாடி இந்த 'வசவு'

''ஓயாவிட்டால் எனக்கென்ன? அம்மா எணேய் என்னை நீ நம்பளத் தானே?''

''என்ர செல்வமே நீ ஒருக்காலும் தப்பா நடக்கமாட்டாய். நீ தம்பி கூப்பிட்டபோது வெளிநாடு போயிருந்தா ஏன் இந்த உத்தரிப்பு? கண்டது களும் கடையதுகளும் நாக்கு வளைச்சுக் கதைக்க இடம் வைச்சிட்டியேயடி. இந்தக் கிருசகெட்ட சனம் என்ன தினுசாக் கதைக்குது பார்த்தியாடி. பாவம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி; அந்தப் புனிதமானவரோடு சேர்த்துக் கதைக்கிறாங்களே. அந்தச் சீத்தக்காரன்ர கண்களைக் கழுகு கொத்த. நாக்கில் நரம்பற்றும் பழி சொன்ன நாக்கு அழுகிப்போக...'' தலை தலையென்று அடித்தவள் நெஞ்சைப் பொத்தியபடி மூலைச்சுவரோடு சரிந்தாள். சதிரம் ஆடவில்லை. நழுவி விழுந்தாள். மூச்சடங்கிவிட்டது...

''அம்மா... அம்மா...''

காலையில் எமில்டா வீட்டு முன் 'லைற்கட்யைச்' சுற்றி சனத்தின் குரல் உச்சத்தொனியில் இரைந்தது. 'சீத்தக்காதன் சீனித்தம்பியின்' உயிரற்ற உடல் தலையற்ற முண்டமாய்த் தொங்கிக் கொண்டிருந்தது. அவனது வலது கால் பெருவிரலில் ஒரு சுலோக அட்டையும் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது.

''இவன் போன்றோருக்கு
அளிக்கப்பட்ட தண்டனை
இவனது பாவச்செயலுக்கு
வழங்கப்பட்ட நியாயத்தீர்ப்பு
சமூகத்தின்முன் இவன்போன்றோர்
சமூகக்கேடான புல்லுருவிகளே!''

லூர்த்துவின் ஆத்மா சாந்திக்கான திருப்பலிப் பூசையை ஒப்புக் கொடுத்த கையோடு குருவானவரும் கோயிலைவிட்டுப் போய்விட்டார். எமில்டா வீட்டைவிட்டு வெளியவந்து பலநாட்கள் கடந்தன. தொண்டுக்குக் கிடைத்த தண்டனையாகவே அவள் உருகி உருக்குலைந்து போனாள். ஒருநாள் அவளது வாசலில் கார் வந்த நின்றதைக் கண்ட சனம் கூடிநின்று விமர்சனக் கல்லெறிகளை எறிந்தபடி நின்றனர். ஒரு பையுடன் வெளியே வந்தாள். அவளிடம் படிச்ச புள்ளைகள் விம்மிவிம்மி அழுதார்கள் தொழுதிட வேண்டிய புனிதம்மாறாத புனிதவதியைத் தடுத்தார்கள்.

சிந்தியாவும், தமையனும் திறந்துகிடந்த கார்க் கதவை அடித்துப் பூட்டிவிட்டுத் தடுத்து நின்றனர்! ''எங்களைவிட்டுப் போகாதீங்க டீச்சர்... எங்களைவிட்டுப் போகாதீங்க டீச்சர்'' பிடிவாதம் பிடிச்சழுதாள் சிந்தியா. சனத்தின் முணுங்களும் இரங்கியே இரைந்தன.

''உங்களை விட்டுப் போகவில்லை... என்னைவிட்டுப்போன என் தாயைத் திருப்பித் தரமுடியுமா? என் மீது சுமத்திய வசவு ஆயுள் பரியந்தம் மறைக்க முடியுமா? போறேன் உயிரோடு இருந்தால் திரும்ப வருவேன் இந்தமண்ணில் புதையவே.''

ஊரே அழுதகண்ணீர் வெள்ளத்தில் கார் உறுமிக்கொண்டு புறப்பட்டது. விமானம் ஆகாயத்தில் கோடு கீறியது.

●

ஈழமுரசு
08-04-1999


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிமேகலை

மணிமேகலை என்கின்ற பெயரை அடிக்கடி உச்சரிப்பதில் எனக்கு அலாதிப் பிரியம். அந்தப் பெயர் என்னுள் மிக ஆழத்திலிருந்து வெளிவருவன. அவளோடு காதல் உலா வந்தகாலம்... அப்பெயரில் அமிழ்ந்து லயித்து விடுவேன். ஒரு முறைக்குப் பலமுறை கம்பராமாயணத்தைப் படித்து முடித்தது போன்று இனிதான உதயகாலம். அந்திப் பொழுதில் மதிமயங்கும் மனங்களை விடவும் அவள் அழகு எனக்கு இனிமையும், மகிழ்ச்சியும் அளித்தது. என்னுயிரே மாதவச் செல்வி மணிமேகலை தான்.'வரம்' வரத்தின் உரமும் அவளேதான்! அவள் அழகில் ஓர் உயிர்ப்பு இருந்தது. அவள் அணைப்பில் ஓர் சொர்க்கம் தெரிந்தது; அவள் உபசரிப்பில் ஓர் உருக்கம் நிறைந்தது; அவள் சிரிப்பில் ஓர் ஈர்ப்பு இருந்தது. பூமியும் பிரண்டெழுந்தது. மொத்தத்தில் அவள் உடல் கட்டு மாதவி வடிவாகவே புடம் போடப்பட்டிருந்தது.

இத்தனை சிறப்புள்ளவள். இன்று எங்கே? என்னுடன் இல்லை! துறவறம் நுழைந்துவிட்டாளா? இல்லை! சமாதி அடைந்துவிட்டாளா? இல்லை! எங்கே மணிமேகலை?

இன்று எனக்கு நாற்பத்தி எட்டு வயதாகிவிட்டது. விடை கிடைக்க வில்லை. தினமும் என்னை வெறி கொள்ளச் செய்கின்றது. ஏன் இந்த நிலை என்பதை எண்ணிப்பார்ப்போம்.

காலைக் கதிரவன் தன்னொளி பரப்பும் தீவிரம். இருளில் சிக்கிக்கிடந்த இயற்கை வளங்கள் எல்லாம் சிரித்துச் சிலிர்க்கின்றன. யாழ்ப்பாணம் பிரதான வீதியில் யக்கோவின் ஆலயத்தின் முன்னால் கிளை பரப்பி சடைத்து வளர்ந்திருக்கிறது ஓர் புளியமரம். அதில் காய்த்துப் பழுத்திருக்கும் பழங்களை ஒலிம்பிக் பாச்சல் வீரனாலும் பறித்துவிட முடியாது. அதன் அடியில்தான் நான் காலையும் மாலையும் மணிமேகலையைச் தரிசிப்பது. அந்நிலையில் அவள் வீட்டில் போயிருந்து அலம்புவது. டாக்டர் பிலிப்பற்ற மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள், பார்வையாளர்கள் எண்ணிக்கை அவன் கிளாக்கன் 'மூர்த்திக்குத்' தெரியாது. இன்றும் எனக்கு மனப்பாடம். அந்தளவுக்கு புளிய மரத்தடி எனக்குச் சொத்தாக உறுதி எழுதப்பட்டிருந்தது.

இன்றும் வழமைபோல் புளியமரத்தடியின் கீழ். மனதில் பசுமையாக நீந்தும் நினைவு. அனல் பறக்கும் வெயில் வேளையிலும் குளிர்ச்சியுடன் குஸ்தி அடிக்கின்றது. வழிச்சு இழுத்துவிட்ட தலைமயிர். நண்பன் ஒருவர் லண்டனிலிருந்து அன்பாக அனுப்பிய 'சென் மைக்கேல்' நீலநிற சேட்டும், அதன் கலருக்கு ஒத்தாப்போல் 'றவுசரும்'. பழைய ரலி சையிக்கிள் என்றாலும் எண்ணெய் போட்டுத் துடைத்ததால் மின்னிக் கொண்டது. ஏறிக்கொண்டு வரும் வெப்பத்திலும் அவள் வரும் பாதையை இமைக்காது நேர்குத்தப் பார்த்தபடி நின்றேன். என்னைத் தாண்டிப் போகின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களும் வழமைக்கு மாறான பகிடிகளுடன் செல்கின்றார்கள். என் தரிசனம் அவளுக்குத் தித்திப்பாகவே திளைத்தது. என்னை உயிராக நேசித்தவள். என்னைக் கண்டு பூஜித்தவள். அந்தத் தேவதை எழுந்து நடந்து வருகின்றாள். என் குதிக்கால் குத்திய உணர்ச்சி உயர்ந்து பறக்கின்றது. முருகனின் மயிலேறி வான மண்டலம் எங்கும் இதழ் விரித்து மணம் பரப்புகின்றது. பிரதான வீதியின் இருமருங்கும் நடந்துவரும் எல்லா மனிதர்களும் தோரணமாக நிற்கின்றனர். என் மணிமேகலை தவழ்ந்து வருகின்றாள். அவள் வேகமாக நடந்து கிட்டக் கிட்ட வரும்வேளை... என் புருவங்கள் மேலேழும்பிச் சொருகி நின்றது! அவையங்கள் ஆட்டம் இழந்தது. எண்ணங்கள் எண்ண முடியாத ஏக்கத்தைக் கொடுத்தது. வீதியின் இரு மருங்கு மனிதர்களும் ஒரு கணம் வியந்து நின்றனர். என் கண்களை என்னால் நம்பவே முடியவில்லை. மனசு இரண்டாகப் பிளந்துபோனது! அழவும் தொழவும் வெட்கமின்றித் துடித்தேன். .

என்றும் புன்னகை மாறாத பூரிப்போடு மான்போல் துள்ளிவரும் அழகின் நெஞ்சைக் கொள்ளை கொண்ட மாதரசி. இன்று முகம் கப்பிய கவலையோடு தலைகுனிந்துவருவதேன்? மிகப் பெரிய ஆய்வில் சிக்கித் தவித்து நின்றேன். தினமும் புளிய மரத்தடியில் நின்றதால் புளிச்சுப் போச்சோ? இக்கேள்விகளுக்கு இன்றுவரை எனக்குப் பதில் கிடைக்க வில்லை அவளிடமிருந்து...

என்னை ஏறெடுத்தும் பார்க்காமல் வேகமாகக் கடந்து போகின்றாள்! என் மூச்சு ஒரு துளிநேரம் ஸ்தம்பித்து நின்றது. மணிமேகலை என்று ஒன்றுக்கு, இரண்டு மூன்று தடவைகள் மெதுவாகவும், பெலத்தும், உறுக்கலுடனும் கூப்பிட்டுப் பார்த்தேன்.

அவள் திரும்பிப் பார்க்கவில்லை. இந்நேரம் என் உயிர் மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. அக்கம் பக்கம் மிரண்டு மிரண்டு பார்த்தேன். பலரது கண்கள் என்னை ஏளனமாக நோக்கின. கிரகித்துக் கொண்ட நான் மறுகணம் எழுந்த வேகத்துடனான நடுக்கத்துடன் புளியமரத்தடியை விட்டு நகர்ந்தேன். அவையங்களின் நடுக்கத்தைத் தக்கவைக்க என்னால் முடியா திருந்தது. சையிக்கிளில் ஏறியிருந்து உழக்க முடியவில்லை. இறுகப் பிடித்த 'கான்ரில்' பிடியுடன் விண் விண்ணென்று நாக்குத் தெறிக்க சையிக்கிள உருட்டினேன்.

சோளகக் காற்றின் வேகத்தோடு புளியமரக் கிளைகள் கோவெனக் கெம்பி அழுதன. என்னைவிட்டுப் போகாதே என்று புளியமரத்தான் அறுதியிட்டான். மணிமேகலை மக்கள் வங்கியைத் தாண்டி நடையை விரைவுபடுத்தினாள். இந்நேரம் மக்கள் வங்கியின் மூளையில் யோசித்தபடி இடதுகை பெரு விரலையும், ஆள்காட்டி விரலையும் சேர்த்துக் கூட்டி தாடி மயிரைப் புடுங்கி எறிந்துகொண்டு நின்ற 'சங்கர்' பெலத்துக் கத்தினான். என்னைக் கையைக் காட்டியும் கூப்பிட்டான். அவன் கூப்பாடு கேட்டும் கிட்டப் போகவில்லை. அக்குரல் என் பெரும் மண்டைக்குள்ளும் நுழையவில்லை! என் சையிக்கிள் உருட்டலில் வித்தியாசம் விளங்கியவன் என் பின்னால் குழந்தைபோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடோ ஓடி வந்தான். நான் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அவனும் துரத்தலை விடவில்லை. ''ராஜா... ராஜா'' என்று கூப்பிட்டபடி சின்னக் கோபத்துடன் கிட்ட வந்தான். என் முதுகைத் தட்டிவிட்டு ''என்னடா... எண்டு உறுக்கினான்.

நான் திரும்பி கடவாய்க்குள்ள சிரிப்பை வலுக்கட்டாயமாக இழுத்து விட்டுத் திமிறி நடந்தேன். ''டேய் ராஜா ஏன்ரா இப்படிச் செய்திட்டுப் போறாய்?''

அத்தொனி கேட்டதும் மேலும் எனக்கு அழுகை வருமாப் போலிருந்தது. விக்கலைத் தக்கவைத்துக் கொண்டேன். எடுத்தெறிந்து போகும் என் பின்னால் திரும்ப சங்கர் வரவில்லை. நான் 'மில்க்பார்' கடையின் முதலாம் குறுக்குப் பக்கப் படிக்கட்டில் சையிக்கிள் 'பெடில்' தாங்கலாய் நிறுத்திவிட்டு பிரதான வீதியின் முன்பக்கப் படிக்கட்டில் 'நட்டகல்லாக' நின்றேன்.

என் குறுகுறுத்த கண்கள் குறுகிக் கிடந்தது. சிரிக்கும்போது தக்காழிப் பழம்போல் சிவந்தெழும் கன்னங்கள் வற்றிக் கறுத்துப் போயிருந்தது. உருவம் அந்நேரம் பல எடை குறைந்து போனது. இந்நேரம் திரும்பவும் என் முதுகை ஒரு நண்பன் தட்டினான். நான் திடுக்கிட்டபடித் திரும்பினேன். என் முகத்தையும், கண்களால் வழியும் கண்ணீரையும் கண்டவன் விறைச்சுப்போய் சற்று விலத்தி நின்றான். என் நெஞ்சு விம்மல் மேலிட எதையும் எடுத்தியம்பவில்லை. இப்போது அவன் உரிமையோடு பேசினான். அவன் பேச்சைச் செவிமடுத்த நான் நடந்தவற்றைச் சொன்னேன்.

''டேய்! ராஜா இப்ப பெரிசா என்ன நடந்திட்டென்று இடிஞ்சு போய் நிற்கிறாய்? மணிமேகலை உன்னோட கதைக்காமல் போனதை நினைத்து அலட்டிக்காதே! இப்ப என்னோட இருந்து பார்! வேலை முடிந்து வரும்போது அவள் சிந்துகின்ற சிரிப்பில் நீ சொக்கிப் போய் நிற்கப் போறாய். இப்ப வா கூல் ஐஸ்கிறீம் சாப்பிடு''

சிவாவின் ஆறுதலான அணைப்போடு ஐஸ்கிறீம் சாப்பிடுவதில் மனமின்றி மூழ்கினேன். என் வேலைத்தளப் பிரச்சினை பற்றிய சிந்தனை சிறிதேனும் தோன்றவில்லை. காதல் வெறி, இரசனை, உணர்வுகள், ஆசைகள், மணிமேகலையுடன் வாழப் போகின்ற இல்லறத்தின் வரவிலக் கணங்கள் திரையில் நிரையாக ஓடிக்கொண்டிருந்தது. இன்நேரம் சிவா செய்த அலட்டலும், நக்கலும், நட்பின் சேட்டையும் என்னை உசுப்ப வில்லை.

நேரம் ஓடிக் கொண்டது.

யாழ்ப்பாணம் மாநகர ஊழியர்கள், உத்தியோகஸ்தர்கள். வழமைபோல் வீடு சென்று கொண்டிருந்தனர். வாகனங்களின் இரைச்சலும், மனிதர்களின் கதைத்தலும் கூடிக் குறைந்து கொண்டன. விரைந்துபோன ஒருவரைக் கூப்பிட்டுக் கேட்டேன்.

''மணிமேகலை வேலை முடிந்து வெளியில் வரவில்லையா?'' என்று. அவன் கையை விரித்தபடி ஓடிப்போய் சாராயக் கடைக்குள் புகுந்தான். எனக்குக் கனமான யோசனை தட்டியது... நேரம் போயிற்று...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் கொதித்துக் கொண்டிருந்தது. மஞ்சள் வெய்யில் நேரம். யக்கோவின் திருந்தாதி மணி அடித்து உலுப்பியது. என் இதயம் சுக்குநூறாய் உடைஞ்சு சிதறியது. நொடிக்குள் என்னில் பாய சிவாவின் குரல் எதிரொலித்தது.

''என்ன இன்னமும் உன்ர ஆள் வரவில்லையா?''

நான் மௌனமாகத் தலையாட்டினேன்.

சாராயக் கடைக்குள் நின்றவனிடம் விசாரித்துவிட்டு என்னில் பாய வந்தான். போகும்போது இருந்த உசார் வரும்போது அவனிடம் இல்லை.

''இப்பயென்ன வீட்டுக்குப் போய்ப் பாரேன். உனக்கு விருப்பமென்றால் நானும் கூடவே வாரேன்'' இனியும் பொறுப்பது என்பது ஆத்தாதவன் செயலாகிவிடும். யோசனை பலம் கொண்டது. என் பேச்சுக்கு மசியாத மூளை சிவாவின் பேச்சுக்கு இசைந்தது. மணிமேகலையைக் கண்டால் நாலு ஐந்து தரம் விளாச வேணும் போல் என் கையும் துருதுருத்தது. என்னால் சையிக்கிள் ஓட்ட முடியாததை கிரகித்துக் கொண்ட சிவா சையிக்கிள எடுத்த சுறுக்கோடு என்னையும் இழுத்து பாரில் ஏற்றி உழக்கினான். பிரதான வீதியில் விரைவான ஓட்டம் குறுக்கே வெட்டி ரெம்பிள் றோட்டில் மெதுவானது. வெறி, காதல் வெறி...

உயிராகிய காதலால் தெரு நாய்போல் அலைச்சலானது. வில்லெனப் பறந்த எண்ணங்களால் சொல்லொண்ணாத் துன்பத்தின் விளைவானது. கல்லாகியதேன் அவள் மனம்? விடை தெளிவாகிட மணிமேகலை வீட்டுப் படிகளேறி உள்ளே சென்றோம். திக்பிரமை பிடித்தவளாட்டம் இரு கைகளையும் தலையில் வைத்தபடி குந்தியிருந்த மணிமேகலையின் தாய் தங்கமணி, துடித்துப் பதைச்சு எழும்பி என் நெற்றிமுட்ட நின்றாள். மகள் வீடு வந்து சேரணும் என்ற மன்றாட்டுடன் இருந்ததால் வரவேற்பற்ற நேர்மாறான வார்த்தைகளைக் கொட்டினாள். கொட்டிய பின் அள்ள முடியுமா? திட்டிலும் அன்பெனும் புனிதமும் அலைமோதியது. தகப்பன் சதாசிவத்தின் குரலின் தொனியும் இறுக்கமாகவே இருந்தது.

''மணிமேகலை எங்கே? ஏன் இண்டைக்கென்று இன்னமும் வாசல் வந்து ஏறவில்லை?'' மூக்குச் சளியைச் சீறி எறிந்துவிட்டு சிலும்பிக் கிடந்த தலைமயிரைக் கோதிவிட்டபடி என்னை நேர்க்கோட்டில் பார்த்தாள். நான் வாயெடுக்கும் முன் தகப்பன் குறுக்கிட்டார். ''எங்கேதான் போனாள்? நீவேற தனியே வந்துநின்று எங்களைக் கொல்லுறாய்.'' சதாசிவத்தின் நெஞ்சு விம்மித் தாழ்ந்தது. கண்கள் 'கொவ்வம்' பழம்போல் காட்சி கொடுத்தது. நான் 'அணலிடைப் புழுவாய் நின்று துடித்தேன்.' சிவாவும் வாய் திறந்து பேசாமல் ஒதுங்கி நின்றான். எங்கே போனாள் மணிமேகலை?

அடுத்து என்ன என்ற தீர்மானத்திற்கு வழி தோன்றவில்லை. அன்றிரவு முழுவதும் நிலவிய நிசப்தத்தில், நிலைத்தபடி அவ்வீட்டிலேயே இருந்தேன். மூன்றாம் முறை சேவல் கூவியது; காகங்கள் கரைந்தன; யக்கோவின் ஆலயமணி திருந்தாதிப் பூசையின் ஆயத்தத்தை அறுதியிட்டது. நிர்ப்பந்தம் நீண்ட வீட்டு ஹோல் கதிரையில் தன்னுணர்வற்றவனாக நித்திரையற்று இருந்தேன். கோப்பி உடன்வந்த தங்கமணியின் கேரலான குரல் மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நெருப்பில் மிதிக்கும் நிலைக்குக் கொண்டுவந்து விட்டது. தாயின் முகத்தை என்னால் நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. இரவு முழுவதும் நித்திரையற்றதால் செவ்வானம் ஆனது கண்கள்! சதாசிவம் வெளிவாசலை விட்டு உள்ளே வரவில்லை அடிக்கொரு தடவை வீதியையே வெறித்துப் பார்த்தபடி வேதனையோடு நின்றார். அறிவோடும், அழகோடும், அடக்கத்தோடும் ஐந்தடி ஐந்தங்குலம்வரை வளர்த்த குமரைக் காணவில்லை... எந்தத் தாயுள்ளங்கள் தாங்கும்..?

விடிந்தும் மணிமேகலை வாசல் வந்து ஏறவில்லை. அவளை மாநகரசபை எங்கும் தேடினோம். ஒவ்வொருதராகப் பிடிச்சுப் பிடிச்சு விசாரித்தோம். அங்கு எங்கும் 'அவள் இல்லை... தெரியாது' என்ற தடுமாற்றமான பதிலே பகரப்பட்டது. முகப்புத்தோற்றத்தின் முன் வாசலால் வெளியில் வந்தோம். ஒருமுறை சுப்பிரமணியம் பூங்காவை எட்டிப்பார்த்துவிட என் மனம் தாவியது. பின் நேரம் காலம் பற்றிய சிந்தனையோடு அவ்வெண்ணம் விடுபட்டது. மெல்ல நகர்ந்த நாங்கள் மூவரும்...

காகங்களின் எச்சங்களால் ஆள் உருவமே மாறிப்போயிருந்த 'அல்பிரட். துரையப்பா'வின் வெண்கலச் சிலை முன்னால் நிலை தடுமாறி நின்றோம்.

நான் திடீரென நிமிர்ந்து பார்த்தேன். ஐம்பது வயதுக்குமேல் மதிக்கத்தக்க தோற்றம்... சருக வேட்டி, சால்வையுடன், நிமிர்ந்த 'கான்ரில்' பிடியுடன், நெற்றியில் சந்தனப் பொட்டும், பழப்பாக்கும், நாறப்பாக்கும், சுண்ணாம்பு தடவிய நீர் வெற்றிலை குதப்பிய சிவந்த வாயுடன், ஒரு கண் வாக்குடன் பார்க்கும் பார்வையும் யாரை என்று தெரியா அந்தர நிலையில் குதப்பிய வெற்றிலையை வலப்பக்கக் கடவாயில் ஒதுக்கியபடி சைக்கிளில் வந்து இறங்கினார்... எங்களை ஏற இறங்கப் பார்த்து காதுவரை றபர் போல் இழுபட்ட சிரிப்பை உதிர்த்தார். அந்த மனிசன்ர, பார்வையும், சிரிப்பும் எனக்கு வெப்பிசாரத்தை உண்டு பண்ணியது. ஒரு கிஞ்சிற்றும் இரக்கத் தொனிக்காத திக்குவாய்க் கேள்வி...

''நீங்கள்தான் மணிமேகலையின் தாயா? நீங்கப்பனா?''

என்னைப் பார்த்து ஒரு புலுட்டுச் சிரிப்புடன் மேலும் கதையளக்க வாயெடுத்தார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. தங்கமணியின் அழுகுரல் மாநகரச் சுவர் எங்கிலும் மோதி எதிரொலித்தன. உத்தியோகஸ்தர்களும் சுற்றி வளைத்து நின்றனர். சும்மா வேடிக்கை பார்க்கச் சும்மா தொத்திக்கொள்ளும் கூட்டங்களுடன் போஸ்ரல் பெரிச்சாலிகளுக்கும் குறைவேயில்லை. எனக்குக் கோபம் பத்திக் கொண்டு வந்தது. தாய் இரு கைகளையும் உயர்த்தித் தலை தலையாக அடித்துப் புலம்பினாள்.

''எங்கே என் மகள்... எங்கே என் மணிமேகலை?''

திக்குவாய் சிக்கலிருந்து விடுபட்ட மனிசன் ''மணிமேகலை எங்கும் போகவில்லை! இங்கு வீட்டு வரிப்பகுதியில் ஒன்றாய் வேலை பார்த்த என்ர மகன் சாந்தனுடன்தான் இருக்கிறாள்... என் வீட்டில்தான் குடி வந்து விட்டாள். அவளைத் தேடுவதாக இருந்தால் இவ்விலாசத்தில் வந்து பாருங்கள்.'' ஒரு துண்டை சதாசிவத்தாரின் உள்ளங்கைக்குள் திணித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு திமிரோடு சையிக்கிள் ஏறி உழக்கினார். நான் இமைவெட்டாது பார்த்து நின்ற அந்தநேர அதிர்ச்சி இன்றும் என்னைவிட்டு மறைய வில்லை... ஏன் இப்படியானாள்? என்ன மாயாஜாலம்? என்ன மருந்து மாயம்? இருபத்தைந்து வருடங்களுக்குப் பின்பும் அவளை மறந்து போவதற்கு இதுவரை விடை கிடைக்கவில்லை. ''என்னை மறந்து விட்டாளா? என்பதை என்னால் எண்டைக்கும் நம்ப முடியவில்லை. காதலின் புனிதம் கெட்டதுக்கு யார் காரணம்? என்பது எனக்குப் புரியவில்லை; தெரியவில்லை... இந்த பிரஞ்சு தேசத்தில் இன்றும் துறவறவாசியாகவே வாழ்கின்றேன். இந்த வயதிலும் சம்சாரியா நான்? அவள் பெயரை உச்சரிப்பதில்தான் என் உடல், உசிர், உணர்ச்சி நீர் ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடுகின்றது. மணிமேகலை... மணிமேகலை...

●

ஈழநாடு
10-09-2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி இழப்பும் வாழ்வின் நிலையும்

''அம்மா''

''என்னடி மகளே?''

''உந்தப் படத்தில் உள்ள பொடியனைத் தெரியுமாண?''

''நம்ம கணபதி கனகாம்பிகையின்ர நடுவன் தானே? உவங்க சைவக்காரர் ஆச்சே! வற்றாப்பளை அம்மன் கோவிலடிச் சேர்ந்தவங்க தானே? பாட்டனார் நம்ம பஸ்ராண் தியெட்டர் வீதியிலதான் இருந்த வங்க. அவர் செத்தப் புறம் உவங்களும் நிரந்தரமாக இங்க வந்திருந்திட்டாங்க. இப்ப என்ன வேண்டிக்கிடக் எங்கிறன்?

''ஒண்டுமில்லையண! உந்தப் பொடியனைத்தான் நம்ம ''புளோறா'' வுக்குக் கேட்டிருக்கண. பொடியன் பிரான்சிலதான் இருக்கிறான் சவுந்திர மண்ணன்ர மூத்தவன் லூக்காஸின்ர சிநேகிதன்; அவன்தான் உந்த ஒழுங்குகளைச் செய்தவன். உன்ர ஆசைப்பேத்திக்கும் பிடிச்சிருக்கண அவளும் பொடியனோட ரெலிபோனில் கதைக்கிறவள்.''

''அதுசரி மகளே! உங்கடகாலம் கிறுதிவரப்பண்ணி அசத்துற வேகமான காலமாச்சு எங்கட காலத்தில் சைவக்காராக்களக் கண்டாள் பிதாச்சுதன் போட்டு மன்றாட்டைப் புறு புறுத்துவிட்டுத்தான் கதைப்போம்!''

''ஏனம்மா நாமளும் சைவத்தில் இருந்துதானே வேதத்துக்கு வந்தநாங்க?''

''ஓமடி சிறுக்கி! அது என்னவோ அப்படித்தான் பதிஞ்சிருக்கினம்.... பழைய ஏட்டில. இப்ப நீவந்த புதிய பாட்டைப் பாடு?''

''புளோறாவை நத்தார் திருவிழாவுக்கு அடுத்தநாள் பிரான்சுக்கு அனுப்பப் போறதைச் சொல்லத்தான் வந்தநானண. பேத்திய விட்டுப் பிரியு இலேசில மசியமாட்டாய்! அந்தயிந்தச் சாக்குச் சொல்லாம அவளச் சந்தோசமாகப் போய்வரப் பண்ணனண.''

''நீ அங்க, இங்க நெழிஞ்சு சுழிச்சுக் கொண்டு திரிஞ்சப்பவே எனக்குச் சின்னச் சந்தேகம்தான்! உன்ர அப்பன் குருசுமுத்தர் உசிரோட இருந்தா உதுக்குச் சம்மதிக்கமாட்டார். உலகம் உருண்டைதான் ராசாத்தி. உருண்டுக்கொண்டு எப்படியும் இங்கதான் வந்தாகனும் எங்கு போனாலும், இந்த நத்தார் கொண்டாட்டத்தைக் கொண்டாடியிற்று புள்ளை போறவள் வாரநேரம் வரட்டும்.''

''அம்மா அப்பண உனக்கும் சம்மதம்?''

''நான் மறுத்தா கேக்கவா போறீங்க? இறாலப் போட்டுச் சுறாவைப் புடிக்கிற மாதிரி பேத்திமீது வைச்சிருக்கிற பாசத்தைக் காட்டிக் காரியத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிச்சிட்டாயடி என்னமோ எங்கு போனாலும் பாலன் கிருஸ்துவின் கிருபை என்ர பேத்தியக் காப்பாற்றும்''

எலிசம் பிதற்றியபடி அடுக்களையிலிருந்து எடுத்த பறியோடு கடற்கரைக்குப் போக வெளிப்படலையத் திறந்தா... கிறிச்செண்ட சத்தம் கேட்டதும் துள்ளி ஓடிவரும் புள்ளிமானாட்டம் ஓடிவந்தாள் பேத்தி புளோறா. அவளைக் கண்டதும் திறந்த படலையச் சாத்திவிட்டுப் பறியையும் வேலியிருகே சரிச்சுப்போட்டு இனிய புன்னகையோடு ''பாவம் என்ர பேத்தி பாலன் பிறப்புக்கு அடுத்தநாள் போறியண உந்தக் கிழவிய மறந்திடமாட்டியண?''

பேத்தியின் மனசில் கவலைப் பாரம் ஏறியது. முடிவெடுத்திட்டிணம் பாவம் பார்த்து என்னதான் நடக்கப் போகுது? நடக்கிறது தான் நடக்கும். பேத்தியாரின் கண்களிலிருந்து விழுந்த கண்ணீர் குண்டுகள் கன்னத்தின் குழிக்குள் தத்தளித்ததைக் கண்டு புளோறா தன் கையினால் துடைத்துவிட்டு அவள் கன்னத்தில், குழிவிழுந்த சிரிப்போடு ''அம்மம்மா நீங்கயேன் அழுகிறீங்க? நான் எங்கபோனாலும் உங்களக் காணக்கட்டாயம் வருவேன். இப்பத்தான் நினைச்சவுடன் நேரில் கதைப்பதுபோல் ரெலிபோனுகள் வந்திட்டண. நான் ஒவ்வொரு நாளும் உங்கோட கதைப்பேன். நீங்க கடற்கரைக்குப் போயிற்று கெதியா வாண''

புளோறாவின் புன்சிரிப்பில் ஆனந்தமாகச் சிரிச்சபடி பறிய ஆட்டிக் கொண்டு கடலம்மா எங்கள வாழவைக்கும் தாயம்மா, படியளக்கும் எங்க உயிரம்மா எங்க மகராசன்கள் மீன் அள்ளி வருவாங்க கடலாடி கரைவந்தேறும் கடல்மன்னர்கள் இவ்வாறு பெலத்துப் பாடியபடி போன எலிசம் மறு கணம் திரும்பி வந்து படலையால தலைநீட்டி குரலெடுத்துச் சொன்னாள்.

''பேத்தியம்மா உந்தப் பாலன் பிறப்பு பூசைக்கு ''அலம்பில் அந்தோனியார் '' கோவிலுக்குப் போவோம். உன்ர தாத்தாவின் பக்தி முத்திய அலம்பில் அந்தோனியார் உன்னையும், கல்யாணம் நல்லபடி நடக்க ஆசிர்வதிப்பார். கையில வைச்சிருக்கிற பாலனைத் தலையில் வைப்பார் என்னடி பேத்தி?'' முச்சடக்கி ஓடிவந்த புளோறா சந்தோசத்தில் தலையத் தலைய ஆட்டியபடி பின்னாடி திரும்பிப் படலையச் சாத்திவிட்டு கோழி கூட்டு வாசலையும், தாராக் கூட்டு வாசலையும் திறந்து விட்டு! கூட்டுக்குள் குனிந்து புகுந்து முட்டைகளை ஒரு சின்னப் பெட்டிக்குள் எடுத்து மெதுவாக வைத்தாள். கோழி முட்டைகள் ஒரு பெட்டியை அட்டாளையில் வைத்துவிட்டு... தாராக் கூட்டுக்குள் புகுந்தாள் பின் இரண்டு கைகளிலும் முட்டைப் பெட்டியின் பாரம் வழக்கத்திற்கு மாறாகக் கனத்தது கோழிமுட்டை அப்பத்திற்குப் போக... பாலன் பிறப்பு நாள் முட்டைக் கோப்பிக்கும் மிச்சமாகப் போதும் தாரா முட்டை விலை போகும். இந்தத் தாரா கோழி குடும்பத்திற்கு அத்தியாவசியப்படுகின்றது. புளோறா மகிழ்ச்சியோடும் உள்ளூரச் சிந்திப்போடும் முற்றத்தை நாளா புறமும் திசைகள் குறித்துச் சுற்றிச் சுற்றிப் பார்த்தாள்! புளோறாவின் பார்வையில் கண்ணிலே உணர்ச்சியன் உள்வாங்கள் விபரமாகத் தெறித்ததைத் தாயவள் ராசாத்தி கண்டிருக்க வேண்டும். விறாந்தையில் இருந்தோடி வந்து புளோறாவைக் கட்டியணைத்து அழுதாள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தாயின் அழுகையில் மேலும் அசந்துபோய் தாயைப் பார்த்த கண்களிலிருந்து பொல பொலவெனக் கண்ணீர்க் குண்டுகள் பட்டுமணலில் விழுந்து ஊறியது.

இந்த வளவும், வனப்பும், கடலோரக் காற்றும், அலை எழுப்பும் ஆர்ப்பரிப்பும், சங்கீத சப்தஸ்சுரங்களும் தன் காதுகளில் நாளை, நாளை மறுநாள் கேட்காது போய்விடும்! இந்தப் பட்டுமணல் பரப்பில் கால் புதைய நடந்த எழில் காணாமல் போய்விடும்! மணல் பரப்பில் முழுநிலாக் காலத்தில் காணும் காட்சி எல்லையற்ற நீலக்கடல் அந்த வான்வெளியை முத்தமிடும் நீலவான வெளி இவையனைத்தையும், நிலாவெளியை முத்தமிடும் முழுநிலாக் காட்சியை எங்குதான் காண்பேன்? கொக்கிளாயில் படும் இறால், நெத்தலி தொடங்கி சுறாபாரையும் சுவைத்த மீன்களின் சுவை... நொங்கு, இளநீர் பருகும் பாக்கியம் எங்குதான் கிடைக்கும்? தாய் தந்தையைப் பிரிவதைவிட மனவேதனையைக் கொடுத்தது. புளோறா தான் வாழ்ந்த சூழலையும், சூழ்நிலையையும், சுவாத்தியத்தையும், இனிதான காலை உதயக் காட்சியையும் காணாமல் போகும் பிரிவே மனவேதனையில் இருந்து... நெஞ்சத்தை வாள் கொண்டரித்தது! வேல் கொண்டு குத்தி சிலுவையின் பாடாக கோரணியத்தை உருவாக்கியது.

பிரான்சிலிருந்து எத்தனை ஆண்டுகள் கழித்து வருவேன்...

என்னுடைய ஊர் இப்படியே இருக்குமா? இல்லை. எப்படி எப்படி யெல்லாம் மாறிப்போய்விடும். இல்லை... இல்லை போரினால் அழிந்து போய்விடும்! இன்று தமிழனும், சிங்களவனும் இறுக்கிப் பிடித்திருக்கும் சமாதானம் நீடித்திருக்கும் போதே மனிதக் கொலைகள் மலிந்து கிடக்கிறது... போர் எப்போது வரும் என்று பயந்து செத்துக்கிடக்கிற நாடாகக் கிடக்குது. போர் வந்தால் எல்லாம் அழிந்து எரிந்து போய்விடும்? பனையும், தென்னையும், முல்லையும், பாலையும், முதிரையும், கருங்காலியும், யாவறையும், சவுண்டலையும், வேம்பும், பூவரசும் மேன்மை பேசும் வளங்கள் வைரமரங்கள் எல்லாம் நிரையாக நிலைத்து நிற்குமா? அதன் உயரங்களில் பாடும் இனிய பறவைக் கூட்டங்களின் சங்கீதம் கேட்குமா? வயல் வளம் கனிவளம் எல்லாம் எரிந்து போய்விடும். பக்தி வளமிக்க கோயில்கள் எல்லாம் மாறிவிடும். வானுயர்ந்த மரங்களில் கூடி நின்று பாடிப் பறந்து இரைதேடி மாலை வந்து தங்கள் உறவுகளோடு போடும் ஆரவாரம் கேக்குமா? அம்மம்மா வளக்கும் தாரா கோழிகள் செத்துப் போயிடும்! போர்ச் சூழலில் எரிந்து போயிடும். என்ர அம்மம்மா?... ஆயிரம் ஆயிரமாய் மனவேதனைப் பாரம் ஏறியது வீடு வளவுகள் மரம் செடி கொடிகள் வேலி தடிகள் எல்லாம் மாறிப் போய்விடும். தன்னைப் பெற்ற தாய் தந்தை சகோதரிகள் நிச்சயம் இருப்பினம். என்ர அம்மம்மா... கடலம்மா வாழ வைப்பாள். எந்தத் தீங்கும் நேராது. காத்து நிற்பாள்.

தன் நண்பிகளும் தன்னை வரவேற்க வருவார்கள். எங்கள் கள்ளப்பாட்டுச் சம்பேதுறுவார் மோட்சத்தின் திறவுகோலை கையில் வைத்திருக்கும் பக்தித் தளத்தின் கோயில் பூசையில் சந்திப்போம். மாதா கோயில் பூசை முடிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவுக்குள் நின்று கலகலப்பாகப் பேசி மகிழ்வோம். குதுகலமாய் கூடி நிற்போம். இந்த வருட நத்தார் எனக்குக் கடைசியல்ல! திரும்பி வரப்போற நத்தார் கொண்டாட்டம் தான் பெரிய கொண்டாட்டம். கல்யாணம் கட்டிய பிறகு பிரான்சிலிருந்து கணவன் குழந்தைகளோடு கலந்து குதுகலிக்கும் நத்தார், களிப்புறும் நிலை வெளிப்புறும்போது எலிசத்தின் கலகலத்த நடுக்கமில்லாச் சிரிப்புக் கேட்ட கணத்தில் தாய் ராசாத்தியும், புளோறாவும் தங்களது நினைவாடலிருந்து விடுபட்டு வாசல் படலைய நாடி நடந்தனர்...

''எலிசமக்கா! உன்ர வயசில நம்மட கடல் இப்படி அமைதியாக் கிடந்ததாண? மேட்டுமணல் வரை அலையடிக்கும் இப்பபாரன் பலதூரம் தாண்டியும் வற்றிப் போய்க்கிடக்கண''

''ஓமடி பாக்கியம். நானும் நம்மட ஒற்றைப் பனையோட சாய்ந்து பார்த்த படிதான் நின்றேன். என்ர வயசில நானறிய இப்படிக்கிடக்கயில்லைப் பாக்கியம். நம்மட வாடிகளச் சுற்றிச் சுற்றி சுருண்டு கிடக்கிற நாய்களையும் இங்கின சிலமணக்காணயில்லை. மிருக சாதியும் ஒரு மாதிரி திணுசாப் பார்க்கிணம் பாலன் பிறப்பு நாள்தானே என்ன புதுமையோ! அந்தக் கடவுளுக்குத்தான்ரி பாக்கியம் வெளிச்சம்.''

''ஏனாக்கும் எலிசமக்கா பேத்தி பிரான்சுக்குப் போறாளாம். கல்யாணம் சரிவந்ததால்தானா? என்ன வேதமோ, சைவத்தில் மாப்பிள்ளை பிடிச்சிட் டியண பேத்தியப் பிரிஞ்சுயிருப்பியாண?'' பக்கத்து வீட்டு மரியாம்பிள்ளை மனைவி பாக்கியத்தின் கேள்வியில் பொசுங்கி உருகிப்போன பாசக் குழைவுடன் எலிசம் வாயெடுக்கும் முன்னம் புளோறா தாயைப் பார்த்து வெட்கப்பட்டாள். ராசாத்தி உரத்த குரலில் சத்தமிட்டாள்!

''அதுகிடக்கட்டும் பாக்கியமக்கா! அம்மா நீ உள்ள வாண! பாக்கியமக்கா அதெல்லாம் புளோறா போனப்புறம் தான் தெரியும்.'' விரோதிக்குரிய சொல் எறியாய் விழுந்தது! உள்ளவந்த எலிசத்திடம் புளோறா அதட்டிக் கேட்டாள்...

''அம்மம்மா கடலையும் கரையையும் கரைச்சுக் குடிச்ச பூமிசாத்திரப் பேராசிரியரைப் போல புளுகுவாயண அவவின் கேள்விக்கு ஏணை பதில் சொல்லயில்லை?''

''அடியே பேத்தி! தாத்தா சொல்லுவார் கடல் வடுக்கண்டால் பிறகு காத்து மழையோட வெள்ளம் வருமெண்டு, இப்பகிடக்கிற ''வடு'' நான் என்ர சீவியத்தில காணயில்லை...'' எலிசம் கடலையே திரும்பி வெறித்துப் பார்த்தாள். புளோறாவிற்கு வேறுவிதமான கோபம் பத்திக்கொண்டதும், ஆத்திரத்தோடு ஒருபோடு போட்டாள்.

''அம்மம்மா அது கிடக்கட்டும் உந்தச் சிங்கள ஆமிக்காரன் ஏனண நம்மதேசத்தில நிக்கிறான்? ஆரைப் பிடிக்க? ஆரைக் காவல் புரிய? புளோறாவின் மனவெழிச்சியக் கண்ட கேள்வியில் ராசாத்திக்குத் தூக்கி வாரிப்போட்டது. திகைப்பில் அசந்து போனாள்! இயக்கத்திலபோய் பயிற்சி பெற்றுவரப் போறேன் எண்டு நாண்டுகொண்டு நின்றவள் பேத்தியார் எலிசத்திற்கும் நெடுமுரல் பாய்ந்து குத்தியவேதனையைக் கொடுத்தது.

''என்ர பேத்தியம்மா! அதையெல்லாம் பொடியங்க பார்த்துக்குவாங்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சிங்கள மொக்கனுகள் போறநேரம் போகட்டும் இல்லை தொலைஞ்சு போகட்டும் நீ நடவம்மா... உன்ர போற அலுவலப் பார்க்க'' என்ர பேத்திதானே புளோறாவின் கன்னங்களைக் கிள்ளி தன் கன்னத்தில் வைத்து அமர்த்தினாள்.

காலை பத்துமணிக்கு எல்லாரும் சின்னராசாவின்ர வானில் கொழும்புக்குப் போறோம்...

பிரான்சுக்கு எத்தனை தடவை பேத்தி ரெலிபோன் கதைச்சா? பொய் சொல்லாமல் சொல்லடி?

புளோறாவின் வெட்கத்தைக் கண்டு எல்லாரும் பகிடிபண்ணிச் சிரிச்சுக் கும்மாளமிட்டனர். முல்லைத்தீவுக் கடலம்மா மடியில் சீவியம் நடத்தும் ஜீவன்கள் புளோறாவின் வெளிநாட்டுப் பயணத்தில் மகிழ்வுற்றிருந்தனர். பாலன் திருநாள்... கிறிஸ்மஸ் கொண்டாட்டம் கூட அக்குடும்பத்தினர் மனதில் இருப்பதாகத் தெரியவில்லை குமரைக் கரை சேர்த்திடும் புண்ணியச் சொர்க்கத்தில் மின்னிக் கொண்டிருந்தனர். புளோறாவின் தாயும், தந்தையும் தங்களுக்குள் எதையோ கதைத்தபடி நின்றனர். சகோதரிகள் என்றுமில்லாத குதுகலமாய்த் துள்ளித் துள்ளிக் குதிக்கும் புள்ளிமான்களாய்த் திரிந்தனர். இளையவள் லீலா துள்ளலை நிறுத்தி கேள்வியில் கிள்ளல் விட்டாள்.

''அக்கா நீ பிரான்சுக்குப் போய்ச் சேர்ந்தவுடன் எனக்கு லேற்றசா கவுன், ஜீன்ஸ் பிளவுசுகள் அனுப்பிவிடு''

புளோறா புன்சிரிப்புடன் மெல்லத் தலையாட்டல்.

கடக்குட்டி கண்ணாடி முன்நின்றவள் காத்தாடி பறந்து வந்த வேகத்தில், ''அக்கா எனக்கு எலக்ரோனிக் கேம்பாய்கள், லேற்றஸ் கான்போன் எல்லாம் அனுப்பக்கா''

இதழ் முடிய இதய மகிழ்ச்சியில் திளைத்தவள் இனி! நான் சொல்லட்டுமா!

''இப்படியே இருந்திடலாம் போல் எனக்கிருக்கு! எல்லோருடைய முகமும் மாறிவிட்டது. புளோறாவின் கதையில் தாயும் தந்தையும் ஏதோ ஏதோ கதைத்துவிட்டு லீலாவையும் கலாவையும் அதட்டினர். எலிசம் துடிதுடிச்சடிச்சு இருவரையும் கூப்பிட்டணைத்தபடி கண்கலங்கிப் போய் நின்று கும்பிட்டாள். புளோறாவும் பாசத்தின் நெருக்கத்தில் இடைவெளி யின்றிப் பரிதவித்தாள். துடிதுடித்தாள் அடக்க முடியாத துக்கத்தில் விம்மி விம்மிக் கதறினாள்''

இரு பிள்ளைகளையும் அதட்டிக் களைச்சுவிட்ட ராசாத்தி புளோறாவை இறுக அணைத்துக் கொண்டாள்.

''கொஞ்சக் காலம் என்ர பேத்தி பிரான்சில் இருந்திட்டுத் திரும்பி வருவாள். நான் சாகியிருக்குமுன்னம் பூட்டன் பூட்டியக் காட்டிக்க வருவாள்தானே''

எலிசம் கண்ணீரில் மிதந்தபடி ஆறுதல் சொன்னா,

''அம்மம்மா நிச்சயம் நாங்க வந்து உந்தக் கடற்கரையில் நிற்போம்! இந்த முல்லைநகர் வெளிக் கடற்கரையில் என்ர புள்ளைகள் கட்டும் மணல் வீட்டையும் எழுப்பும் கோயில். கோபுரங்களையும் கண்டு ரசிப்போம். நம்மே குடும்பம் இந்தக் கடலோரத்தில் காலகாலமும் வாழ்வோம். நம்மட பரம்பரை நிலைத்து நிற்பதை எவராலும் எந்தச் சீற்றத்தாலும் அழித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழித்திட முடியாது. ''

இந்தவேளை எலிசத்தின் ஞாபகச் சிறகடித்தது...

''பேத்தியம்மா 1964ம் ஆண்டுப் புயலின் போதடி அலை பொங்கி யெழுந்து வந்து மாதா கோவில் சுவரில் மோதியது! அந்த வெள்ளத்தில் உன்ரம்மா, மாமா, ஊர்ச் சின்னதுகள் எல்லாம் தண்ணி அள்ளித் தெளிச்சு ஊரி கல்லு சிப்பி எறிஞ்சு விளையாடினவங்க ஊரெல்லாம் குதுகலித்தனர். பயந்து ஓடயில்லை. இதையெல்லாம் பார்த்தபடி நின்ற உன்ர தாத்தா அப்பவே குரலெடுத்துப் பாடிய பாட்டு இன்றும் என் காதுக்குள் ரீங்காரமிட்ட வண்ணம் இருக்கடி பேத்தி'' அதையும் தான் கேளடி...

கண்ணால் கண்ட அலைகள்
பனைஉயர எழுந்து மடிந்தது கரையில்!
வானம் இடிந்து வீழ்ந்திட்டாப் போல்
அதிர்ந்து அடங்கியது எங்கள் கரையில்
முல்லைவீரர்கள் நடுநடுங்காத் தடந்தோள்
வீரராய்ப் பார்த்து மகிழ்ந்தனர் கரையில்
எங்கள் சீவியத்தின் உயிரம்மா நீ
உன்னைவிட்டு நாங்கள் போவதெங்கே?
அண்டம் இடிந்து விழுந்தாலும்
அசைவோமா உன்மடி விட்டம்மா!

இப்படி உங்கள் தாத்தா பாடிநின்ற கரையடி பேத்தி உந்த அழகான முல்லைநகர் கடற்கரைய நீயென்னடி இங்கிருந்தவன் எந்தச் சீமைக்குப் போனாலும் இலேசில மறந்திட மாட்டானுகள். பேத்தியம்மா நீயும் போயிற்று வாறப்போ இந்தக் கடற்கரை இப்படியே இருக்கும். ''நானிருப்பேனா?'' எலிசத்தின் ஏறியதொனி அமுங்கிப்போய் விக்கலெடுத்துத் தளம்பிய குரலாய் மிதந்தது.

''எல்லோருடைய பார்வையிலும் இரக்கத்தின் சாயல், புளோறா தன்னுணர்வில் அம்மம்மாவின் கவலையப் போக்கும் திட்டத்தின் திடகாத்திரமான சான்றுகளுக்குள் சட்டெண்டுமாறினாள்.''

''அம்மம்மா நம்ம கடலில் கப்பல் தாண்டதாகவெல்லாம் கதைக்கினம் உண்மையாணை?''

''உண்மைதானம்மா நம்மவளவிற்க கடலப் பார்க்கச் சரிஞ்சு நிக்கிற இரட்டைத் தென்னம் புள்ளைகள் இடைவெளியால நேரபார்! அந்த வெளியில்தான், கப்பல் தாண்டது இங்கிலிசுக்காரன்ர கப்பல் திசைமாறி வந்து புட்டியில ஏறித்தாண்டது கள்ளப்பாட்டுக்கு நேர் அதுசரி நீ ஏண்டியம்மா உதுகளயெல்லாம் விளாவறையாகக் கேட்டுக்கொண்டு நிக்கிறாய்?''

''நான் பிரான்சுக்குப் போய்ச் சேர்ந்தப்புறம் ஆராவது எங்கட முல்லைநகர் பற்றிக் கேட்டாங்கள் எண்டால் தெரியாம முழுசக் கூடாதண, நீதானம்மா தாலாட்டுப் பாடலாகவும் பாடியிருக்கிறாயண.''

எலிசத்திற்குப் புன்னகை சிறிதாக முளைத்து பெரிசாக வெடிச்சுத் தூள்கிளப்பின. முல்லைக் கடல் வங்கக் கடலின் தாலாட்டிலும் சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்கள் (நந்திக்கடல்) சில்லிட்ட குளிர்ந்த காற்றின் கதகதப்பிலும் மிதந்து மிஞ்சியெழும் வீரமாய் தமிழரின் நான்கு நிலங்களின் சங்கமமாகத் துலங்கும். வன்னி மண்ணின் பெருமநகர், மருதநிலத்தின் மந்தமாருதம் தாலாட்டி தமிழரின் நிலப் பிரிவுகளை இணைத்தே பெருமை சேர்க்கும் வளங்களால் சிறந்த பிரதேசம். காலத்துக்குக் காலம் பெய்யும், மழையால் காடும் காடு சார்ந்த முல்லைப் பெரும்பரப்பு பலநூறு சிறந்த குளங்கள் நிறைந்த வளமிக்க நாடாகும். நம்மட ஊரின் சிறப்புச் சொல்லி மாளாதடி! இன்று மாவீரர்கள் கடற்கரும்புலிகள் குவிந்து பயிற்சியில் ஈடுபடும் வீரம்செறிந்த மண். கடல் இந்த கடற்கரையில் சாலை "நந்திக்கடல்" கொக்கிளாய் சிறு கடல் பகுதிகள். இவையெல்லாம், இறால் வளம் பெருகுவதற்கும் தாயகம் காப்பவர் விடுதலைப் போராட்ட மன்னவர் சாலை தொடங்கி கொக்குத் தொடுவான் வரைக்கும் கடற்புலிகளின் தளமாகவும் இருக்கின்றது. நம்மட மகராசன் பல முறை இந்தப் பட்டுமணல் கரையோரமாக நடந்து போனதை உன்ரம்மா கண்டு புளுகியடிச்சு உந்த ஊரெல்லாம் கத்தித் திரிந்தவள் இரண்டு நாள் சாப்பிட்ட தெம்பில், குதுகலித்திருந்தவள். எடியே! பேத்தி உவளவும் காணும்."

"நல்லகதைதான் சொல்லண சொல்லண"

"நான் சொல்லுவான் ஏனடி உன்ர தாத்தா உசிரோடுயிருந்தா பாட்டாலயே அசத்திப் போட்டுடுவார்."

முல்லைத்தீவுக் கடல் எங்கு முடியுது என்று தெரியாவிட்டாலும் கிழவியின் கணவர் குருசுமுத்து கடல் வெளியெங்கும் பாய்ந்து ஓடித் தொழில் புரிந்த பெருமைக்குரியவர் எனும் சத்தியகர்வம் உண்டு! இன்று இந்தக் கடலில் எங்கள் கரிகாலன் ஏறிநடக்கிறான்... அத்தலைவனின் படைகள் பயிற்சி பெறுவதும் எலிசத்திற்குப் பெரும் மகிழ்ச்சி. கடலை நம்பியவர் தாயாக, தெய்வமா, உயிர்வாழ்வின் நாடியாக, பக்தியோடு வாழ்பவர்கள்.

கடலில் வலை போட்டால் வீரமடி
கரையில் விதை போட்டால் உசத்தியடி

இனி கதைகாணும். நத்தார் பூசைக்குப் போற ஆயத்தங்களப் பாருங்கோ...

அலம்பில் அந்தோனியார் கோவில் பூசை முடிந்து வந்தனர். மிகவும் யோசனையில் இருந்த எலிசம் பேத்தி புளோறாவை வெளியில் கூட்டிவந்து தென்னஞ் சோலையின் நடுவே நிறுத்தி அன்பொழுகப் பார்த்தாள். அந்த இருட்டிலும் பின்னால திரும்பிக் கடலைப் பார்த்த எலிசத்தின் கண்கள் விரியும் விரிப்பைப் பார்த்துவிட்டு புளோறாவும் கடலையே நோக்கினாள்.

"பேத்தி சீமைக்குப் போறது உந்தக் கடலம்மாவிற்குப் பிடிக்கவில்லை! உப்பிடிவற்றிப்போய்க் கிடக்கு, மிருக சாதியின்ர சத்தமும், பறவைகளின் கீதமழையும் பேத்தி நம்ம தாரா கோழியின்ர அசுமாத்தம் ஒண்டையும் காணவும் காதில் கேக்கவும்மில்லை! பெரிய பெரிய அதிசயமாகக் கிடக்கெனக்கு. கடலையும், கரையையும், மக்களையும் பூஜித்த எலிசத்தின் கைகள் இரண்டும் கும்பிட்டபடி வியாகுலம் மிகுந்த காரணிக்கத்தை உச்சரித்தபடி கண்கள் பிரகாசமடைந்தது. வானத்தை, மேல்நோக்கிப் பார்த்தனர். மேற்கால ஓடும் மேகங்கள் எங்காவது மழையப் பொழியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்ந்துறங்கிக் கிடக்கிற கடலின் கரையத்தொடும் மடக்கடி அலை அடங்கி வடுக்கண்டு போகுது! எலிசம் மௌனத்தின் மோனத்தில் புதைந்து கிடக்கிறாள். இப்போது சதிரம் நடுநடுங்கிறது. கிறிஸ்மஸ் கொண்டாட்டத் தடபுடலோடு புளோறாவின் பிரஞ்சுப் பயணமும் நிகழ்ந்த நிலை கொள்ளாத மகிழ்ச்சித் திளைப்பில் வீடு அமர்க்களப்படுகின்றதைக் கண்டு எலிசம் மௌனடைப்பிலிருந்து விடுபடவில்லை! கடல் கிடக்கிற கிடப்பு எலிசத்திற்கு நோவா காலத்து ஜலப்பிரளய காலத்தை வேதாகமம் எழுதியிருப்பதை நினைக்க வைத்தது. பேத்தியாரின் மௌனம் புளோறாவிற்கு கவலையைக் கொடுத்தது. அலுவல்களை இருந்தபடி விட்டுப்போட்டு பேத்தியாரின் பக்கத்தில் நெருக்கமாக இருந்தவள். பேத்தியாரின் மடியில் படுத்தாள். உவள் இனி எப்பதான் தன் மடியில் படுக்கப் போறாள்? இடக்கையால் தலையத் தடவி வலக்கையால் நெஞ்சிலடித்துச் சோர்ந்துபோய்ப் பாடினாள். மகள் ராசாத்தியின் கண்களைக் கண்ணீர் நிறைத்தன. மருமகன் பார்வையில் சோகம் முகம் வீங்கியிருந்தது. மருமகனும் மகளும் இரண்டு குழந்தைகளும் எலிசத்தின் அருகில் நெருக்கமாகக் குந்தியிருந்தனர். உயர்ந்த குடும்பக் கோபுரமாகத் திகழ்ந்தனர்.

காலை பத்துமணிக்கு எல்லாரும் கள்ளப்பாட்டுச் சின்னராசாவின்ர வானில் கொழும்புக்குப் போறோம்.

வாழ்வின் நிலைப்பாடு இப்படியாக இருந்திட! சுனாமி எழுந்ததைப் பிரான்சில் கல்யாணம் கட்டக் காத்திருக்கும் புளோறாவின் மணமகனிடம் கேட்போம்.

இருபத்தியாறாம் திகதி காலை எழுந்ததும் செய்திக்காக பிரஞ்சுச் சனல் T.F.Aவைப் போட்டேன். தொலைபேசி மணிச் சத்தமும் விடாது அடிச்சுக் கொண்டிருந்தது CNN சணலுக்கு மாற்றினேன்.

கடல் குமுறுகின்றது பிணங்கள் மிதக்கின்றது

ரெலிபோன் றீசிவரை எடுத்துக் கன்னத்தில் ஒத்தினேன்...

முல்லைத்தீவில் முழுச்சனமும் செத்துத்தாமடா... TTN, TRT தீபம் வெக்ரன் தமிழ் தொலைக்காட்சிச் சணல்களைப் போட்டுப் போட்டுத் தொலைந்தேன் நெஞ்சும் இரண்டாகப் பிளந்திடத் துடித்தேன்.

கடலில் அலையே எழுந்து வீழ்ந்ததே

மலிவாய் உடல்கள் மிதந்ததே

என் புளோறா உயிருடன் இருப்பாள். புளோறா அந்த அற்புதக் குரல் இனிய சிரிப்போடு என்னிடம் வருவாள். பாலன் கிறிஸ்து மீது சத்தியம் அந்த இறைமகன் கைவிடமாட்டார். நான் சார்ந்த கடவுளர் மீதும் நம்பிக்கை புளோறா என்னிடம் வருவாள்... என்மனம் ஏன் நடுங்குகிறது? புளோறா இப்போது கொழும்புக்கு வந்து விமானம் ஏறியிருப்பாள். கொஞ்ச நேரத்தில் ரெலிபோன் வரும். ரெலிபோன் மணிச் சத்தம்.

''டேய்! மணிமாறா ஊருக்கு ரெலிபோன் எடுத்தியா? லைன் போகுதில்லையடா! BBC நியூஸப் பாரடா!''

இப்படிக் கூறிக்கொண்டு புளோறாவின் மாமன் மகன் என் நண்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுக்காஸ் அழுவது என் காதுக்குள்ளாக ஓடி இதயத்தில் கவலைப் பாரத்தை ஏற்றுகிறது. தொலைக்காட்சித் திரையில் இடிபாடுகளுக்கிடையில் மரக் குத்தியில் கிடந்த குழந்தையை உசிரோடு விடுதலைப் புலிகள் மீட்புப் பணியினர் ஏந்திவரும் காட்சி உலகத்து மக்களை கண்ணீரில் ஆழ்த்திய வியப்பெனச் சொல்கின்றார்கள். மறுபடியும் சுனாமி எழும் பயத்தில் மக்கள் செய்தியாகிறது. எது எப்படியோ என்ர புளோறா வருவாள். நான் அவளோடுதான் வாழ்வேன். மீட்புப் பணிகளின் போது சடலங்கள் கரையில் குவிக்கப்படுகிறது. படத்தில் அந்த வீடியோக் கசற்றில் பார்த்த அந்த அழகுத் தேவதை புளோறா தென்படுகிறாளா? உலகமே சுனாமியின் கோரத் தாண்டவத்தில் முழ்கித்துத் திணறிப் போய் உறைந்து விடைதேடி விபரம்தேடி உலகத்து தொலைக்காட்சித் திரைகள் அழுது வடிக்கிறது கண்ணீரை... உணர்ச்சிக் கொந்தளிப்பை... ரெலிபோன் மணி அடிக்கிறது. ஆத்திரத்தில் றீசிவரை எடுத்துக் கன்னத்தில் ஒத்தினேன்.

''டேய்! மணிமாறா இப்படி ஆகிப்போச்சே! நம்ம சனத்தட நிலமையும்? நிலையும்! பார்த்தாயாடா? புளோறாவும் அவள் குடும்பமும் சுனாமிக்குள் அகப்பட்டுவிட்டார்களா''

''பொத்தடா வாயை! வையடா ரெலிபோனை''

''என் புளோறா என்னிடம் வருவாள்.''

இப்போதுதான் என்நெஞ்சு பிளந்தது. வாய் எழுப்பிக் குளறியழ வேணும்போல் கிடந்தது. துடித்தேன் மரணவேதனையில் மரணித்த சடலமாய் செற்றியில் கிடந்தேன்.

இந்தக் கடலோரங்களில் எழுந்தருளிய தெய்வங்கள் எங்கே? வெக்ரோன் தீபம் தொலைக்காட்சிகளில் தமிழீழத்துக் கடல்கோள் அனர்த்தங்கள் காட்டப்படுகிறது. விபரத்தை விபரமாக அறியும் பொறுமையில்லை. கண்களைக் கண்ணீர் மறைத்துவிட்டது. கள்ளப்பாட்டு சம்பேதுறுவார் ஆலயம் சிதறுண்டு கிடக்கிறது. அதனுள் கிடந்த கல்லறையாண்டவர் காணாமல் போய்விட்டார். மாதா... குடியிருப்பு கண்ணீரை புறங்கையால் இழுத்துத் துடைச்சபடி கூர்ந்த கூர்ந்து பார்க்கிறேன். மிதந்துவரும் சடலங்கள் எடுத்துவரும் காயப்பட்ட உடல்கள் கரையில் குவித்துக் குவித்துக் கிடக்கக் காட்டுகிறார்கள். மரணித்த மனிதப் பிணமலைகள் எங்கினும்... என் புளோறா இல்லை.

மாதாகோவில் முற்றும் முழுதாக அழிந்துவிட்டது. மாதா மட்டும் எழுதருளிநிற்கிறா! ஆனால், எந்தவித புதுமையும், காட்சியும் நிகழவில்லை. நான் சைவக்காரன் கத்தோலிக்க தெய்வங்களைக் கும்பிட்டு வாழ்கிறேன். என்னுயிர் காதலி கல்யாணம் கட்டிவாழ நிச்சயம் புளோறா வருவாள். புளோறாவின் குரலை தொலைபேசியில் பலதடவை கேட்டிருக்கிறேன். வாழ்வின் உன்னத கீதத்தைக் கேட்ட உணர்ச்சியில் மிதந்தேன். என் ஆன்மா பறந்தது. நான் மகிழ்ந்திருந்தேன். உற்சாகம் அடைந்திருந்தேன். புளோறாவின் வரவு என் வாழ்வின் உயர்ந்த திருப்தியாகவும், இனிமையானதாகவும் இருந்தது எந்தன் சொந்த இயல்போடு ஒத்தாகிவிட்டாள். இந்த வாழ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையும் சுனாமியின் இழப்பும் எந்த வடிவிலும் ஈடுகட்ட முடியாது. சுனாமியின் நினைவு வரும்போதெல்லாம் என் வாழ்வு ஊற்றில்லாப் பாலையாகவே கிடக்கிறது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம் பெயர்ந்து வாழும்
மா.கி.கிறிஸ்ரியனின்
முப்பத்தோரு சிறுகதைகளின்
தொகுப்பு நூல் இது.
ஈழத்து மண்வாசனையுடன்
புகலிட நெருக்கடிகளை
பதிவு செய்யும் இவை
புதிய வாசிப்பு அனுபவத்தை
வழங்குகின்றன.

அடையாளம்

ISBN 817720057-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org